சிற்பக்கலை



செ. வைத்தியலிங்கன்

மெய்யப்பன் பதிப்பகம்

சிற்பக் கலை

பேராசிரியர்

செ. வைத்தியலிங்கன்

மெய்யப்பன் பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : டிசம்பர். 2003

திருவள்ளுவர் ஆண்டு : 2034

உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 115.00

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 113

பதிப்பாசிரியர்

முனைவர் **ச. மெய்யப்பன்**

ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் சிறப்பாசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம்:

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001. ✆:230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108. ✆:25361039

5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை - 600 017. ✆:24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001. ✆:2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001. ✆:2397155

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002. ✆:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 25954528

6-4



தமிழ்நாட்டுச் சிற்பவளம்

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்
நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

மெய்யப்பன் பதிப்பகம் தோன்றியநாள் தொடங்கி அரிய ஆய்வு நூல்களை வெளியிட்டு வருகிறது. மொழி, இனம், நாடு பற்றிய களஞ்சியங்கள் பல வெளியிட்டது இதன் சிறப்பான பணி.

தமிழ்நாட்டுப் பறவைகள்
தமிழ்நாட்டுத் தாவரங்கள்
தமிழ்நாட்டுச் சிற்பக்கலை

வரிசையில் அரிய இந்நூல் வெளிவருகிறது. ஒருதுறை பற்றிய நுண்ணாய்வு நெறியில் வந்தபெருநூல் இது. தமிழகம் கலைகளின் தாயகம். தமிழகக் கோயில்கள் ஆயகலைகள் அறுபத்து நான்கின் பிறப்பிடம். சிற்பக்கலையின் பரிணாம வளர்ச்சி பற்றிக் கூறும் வாயிலாக, உலகுக்கோர் புதுமையாக தமிழகக் கோயில்கள் கண்ட வளர்ச்சி பற்றிய வரலாறு வரைகோட்டோவியமாக்கப் பெற்றுள்ளது.

தமிழகக் கோயிற் சிற்பங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. அவற்றின் பெருமை பேசிமுடியாது. சிற்பிகளின் எண்ணங்கள் பெற்ற வண்ணங்களும், வடிவங்களும் சிலைகளாய், கலைவடிவங்களாய் கோயில்கள் தோறும் கொலுவிருக்கின்றன. கோயில் சிற்பங்கள் பேசும்

ஓவியங்கள், கவிதைபாடும் காவியங்கள். **கல்லும் சொல்லாதோ கவி** என்னும் சொல்வழக்கு தமிழகச் சிற்ப நேர்த்தியின் காட்சியை மாட்சிப்படுத்தும் வரிகள்.

சிற்பியின் மனோதர்மத்தின் விரிவுக்கு ஏற்ப சிலைகள் கொண்ட வடிவங்கள் நூறுநூறாக விரிகின்றன. சிற்பிகளின் சிந்தனைகளை அவர்தம் உளிகள் காலம் அழிக்க முடியாத காவியங்களாகப் படைத்துள்ளன. காலச் சூறாவளி அழிக்கமுடியாத கற்சிலைகள் தமிழகத்திற்குத் தனிப்பெருமை சேர்ப்பன.

இந்நூலாசிரியர் **பேராசிரியர் வைத்தியலிங்கன்** அண்ணாமலையில் எனக்குப் பேராசிரியர். **நுண்கலை நுண்ணாய்வாளர்.** 8 தலைப்புகளில் 350 பக்க அளவில் சிற்பக்கலையின் அதி நுட்பங்களை இங்கு செதுக்கியுள்ளார்.

சிற்பக்கலை பற்றித் தமிழில் **வரலாற்று முறையில் வெளிவரும் பெருநூலும் முதல்நூலும் இதுவே.** நூலாசிரியர் நுண்கலை வித்தகர் ஆதலால் மிகச்செவ்விய முறையில் திட்டமிட்டு நூலின் கட்டமைப்பை உருவாக்கியுள்ளார். கட்டுரைகளை, பகுத்த திறமும் தலைப்பிட்ட திறமும் ஆசிரியரின் தனித்திறம். முதற்கட்டுரையில் சிற்பக்கலையின் தோற்றம், தத்துவம், வகைகள், வளர்ச்சி பற்றி 40 பக்கங்களில் செறிவாக, தெளிவாகத் தோற்றுவாய் செய்கிறார். இது நூலுக்குத் தோரணவாயிலாக அமைகிறது. ஷண்மதம் என்னும் பகுப்பிற்கு ஏற்ப ஆறு சமயங்களின் தெய்வ மூர்த்தங்களை, மூர்த்தங்களின் வேறுபாடுகளை விரிக்கும் திறன் தமிழகச் சிற்ப வரலாற்றையே ஆதியோடு அந்தமாக எடுத்துக் கூறுகிறது. சிற்ப விகற்பங்கள், அவற்றின் வீறுகள், தனித்தன்மைகள், கலைநுட்பங்கள், அவை வழங்கும் காட்சியின் மாட்சிகள், கருத்தின் எழுச்சி முதலியவற்றை ஆசிரியர் பல வகைகளில் பல நிலைகளில் வண்ண ஓவியமாக்கி வாசகர்களை ஈர்த்துள்ளார். நூல்முழுவதும் குறிப்பிடப்படும் மூர்த்தி பேதங்களைப் பட்டியலிடுவது பதிப்பாசிரியர் கருத்தன்று. நூலின் பொது இயல்பு, சிறப்பியல்புகள் பற்றிச் சில சொல்லுதல் என் கடமையாகிறது.

கோபுரச் சிற்பங்கள்
தேர்ச் சிற்பங்கள்
செப்புப் படிவங்கள்
கற்சிலைகள்
அணிவகைகள்
சிற்றூர்க் கோயில்களின் மண்சிலைகள்

பற்றி ஆசிரியர், இதுவரை எவரும் கூறாத நிலையில், புதிய செய்திகள் பலவற்றை ஆராய்ந்து கூறியுள்ளார். தன் கருத்துக்களுக்குச் சைவத்

திருமுறைகள், வைணவ திவ்வியப் பிரபந்தங்கள் முதலியவற்றிலிருந்து ஏற்றிபெற்றி ஏதுக்களும் எடுத்துக்காட்டுகளும் தந்து நிறுவுகிறார்.

இந்நூலைச்

செவ்வியல் நூல்
சிற்பக்களஞ்சியம்
சிற்பக்கருவூலம்
சிற்ப அருங்காட்சியகம்

என்று சொல்லத்தக்க வகையில் நூலை உருவாக்கியுள்ளார். ஆராய்ச்சியாளர் வைத்தியலிங்கன் அடுக்கடுக்காய்த் தரும் செய்திகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன.

வாசகர்களைத் தலங்கள்தோறும் அழைத்துச் சென்று கோயில்களில் நிறுத்தி, சிற்பச் சிறப்புகளை விளக்கும் திறன் வானொலி நேர்முக வர்ணனை போலவும் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புபோலவும் நம்மைக் கண்டு கேட்டு உணரச்செய்கிறது.

சிற்பக்கலையின் வரலாறு, மூர்த்தி பேதங்களின் இயல்பு, விக்ரகங்களின் வேறுபாடுகள் பற்றிக் கூறும் வாயிலாக தமிழகத் தெய்வ வழிபாட்டின் வரலாற்றையே ஆசிரியர் பொன்னோவிய மாக்கியுள்ளார். ஒவ்வொரு கட்டுரையும் ஒரு தனி நூலுக்குரிய களங்களையும் தளங்களையும் கொண்டுள்ளது.

ஆசிரியரை, அரைநூற்றாண்டு காலமாக (1953-2003) நான் அறிவேன். படித்தல், சிந்தித்தல், எழுதுதல் என்னும் முத்தொழிலில் முனைப்போடு உழைத்து வருபவர். நுண்கலை ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் முதல் வரிசையர். இவர் பட்டமேல்படிப்புக்கு எடுத்துக்கொண்ட ஆய்வு "சங்க இலக்கியங்களில் தொழில்நுட்பம், கலை பற்றிய ஆய்வு".

பன்னூற் பயிற்சியும் கல்விமாட்சியும் உள்ள கலைஞர்களுக்கே இது சாலும். நூலாசிரியரின் ஒவ்வொரு செய்தியும் சிற்பக்கலையின் செய்நேர்த்தியையும் செழுமையையும் எடுத்துரைக்கிறது.

இறைவனின் அணிகலன்கள்பற்றி ஆசிரியர் கொடுத்த அணிவகுப்பு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. இறைவன் - இறைவி ஆயுதங்கள், வாகனங்கள் பற்றிய இவருடைய குறிப்புகள் ஆழ்ந்து எடுக்கப்பட்ட அரிய செய்திகள். சிறப்புக் குறிப்புகள், சிறப்புப்பார்வை என்னும் தலைப்புகளில் இவர் தரும் செய்திகள் நம்மைச் சிலிர்க்கவைக்கின்றன; சிந்திக்க வைக்கின்றன.

திருமாலின் அவதாரம் பத்து என்பது நாம் அறிந்த வழக்கு. 32 அவதாரங்களின் மூர்த்தி பேதங்களை முறையாக விளக்குகிறார். நரசிம்ம அவதாரத்தின் பல்வேறு ரூப பேதங்களை மிக நுட்பமாக ஆராய்ந்து (12+9=21) மூர்த்தி பேதங்களை வகைப்படுத்தியுள்ளார்.

சிற்பங்களை இனங்கண்டு பிரித்துக்காட்டுவதற்கும் அடையாளப் படுத்துவதற்கும் ஆசிரியரின் ஆழ்ந்த அறிவும், அனுபவமும் துணைநிற்கின்றன. நுண்ணிய வேறுபாடுகளை விளக்குவதன் மூலம் சிற்பங்களின் தனித்தன்மைகளையும், சிற்பக்கலை வளர்ந்த பரிணாமத்தையும், இவரது வலிமைமிக்க எழுதுகோல் வண்ண ஓவியமாக்கி நம்மை மகிழ்விக்கிறது.

இவர் எழுதிய தமிழகப் பண்பாட்டு வரலாற்றை, சற்றொப்ப 3000 பக்கங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 4 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. இது அரிய பெரிய செய்திக் கருவூலம். அறிஞர்களின் பாராட்டையும் பரிசையும் பெற்ற நூல் வரிசை.

பல்கலைக்கழகம் பெருமைப்படத்தக்க பேராசிரியப் பெருமக்களுள் என் பேராசிரியரின் இச்செவ்விய நூலைச் சிந்தை மகிழ நான் வெளியிடுகிறேன்.

இப்பெருநூல் இந்த வரிசையில் ஒரு திருநூலாக அமைகிறது.

இப்பெரு நூலை உருவாக்கிய பேராசிரியரை வணங்குகிறேன். வணங்குதல் அல்லது வாழ்த்துதல் என் நாவிற்கு அமையாது.

முன்னுரை

உலக அரங்கில் இந்தியாவில் இன்றளவும் பழைய பண்பாட்டுடன் கூடிய உயரிய நாகரிகம் வளர்ந்த வண்ணமிருப் பதற்குச் சிறந்த காரணம், அதன் கவின்கலைவளமே; அதிலும், சிறப்பாகச் சிற்பக் கலைமாட்சியே என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

உலகில் பல நாடுகளில் பொருளியல் சார்புடன் அமைந்த உலகியல் நோக்கில் சிற்பக்கலைகள் வளர்ந்து வருகையில், இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் அருளியல் சார்புடன் அமைந்த ஆன்மீக நோக்கில் சிற்பக்கலைகள் வளர்ந்து வந்துள்ளன.

இந்துமதம் விக்கிரக ஆராதனையை - சிலை வழிபாட்டை - வித்தாகக் கொண்டு, பல்வகைச் சிற்பக்கலைக் கருவூலத்தை ஆலமரமாக வளர்த்துள்ளது. இந்த உயரிய சமயப் பண்பாட்டிற்கு இதிகாசக் காட்சிகளும் புராணக் காட்சிகளும் துணைநின்றுள்ளன. எடுத்துக்காட்டாக, சைவசமயத்தில் மூர்த்திவகைகளும், வைணவ சமயத்தில் அவதார வகைகளும் உள்ளன என்பதை நினைவிற் கொள்ளலாம்.

'சிற்பக்கலை மாட்சி' எனும் இந்நூலில், சிற்பக்கலைப் படைப்பிற்குரிய மூலப்பொருள்கள், சிற்ப வகைகள், அழகியல் நோக்கில் சிற்பப் பரிமாணங்கள், உயிரோட்டமுள்ள சிற்பச் சிலைகள் விளைவித்த பயன்கள், சிற்பியரின் கற்பனைவளம் முதலிய பல நுணுக்கமான செய்திகளும் ஆராயப்பட்டுப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

பொருளியல் தேட்டத்துடன் மாமன்னர்கள் - பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் முதலியோர் - போர்க்களத்தில் கொண்ட

வெற்றியை மடைமாற்றஞ்செய்து, அருளியல் நோக்கில் கோயில் களைச் சிற்பக்கலைச் சிறப்புடன் கட்டியுள்ளனர்; அதனால், உலகிலுள்ள பல நாட்டினரும் கண்டு வியந்து, தமிழ்க் கோயிற் பண்பாட்டினையும் அதற்குக் காரணமான சிற்பக்கலைச் செல்வங்களையும் போற்றிப் பாராட்டி வருகின்றனர். இந்த நோக்கில், மாமல்லபுரம் சிற்பங்கள், காஞ்சிக் கயிலாசநாதர்கோயில், தஞ்சைப் பெரியகோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், கிருஷ்ணாபுரம் கோயில் முதலியவை சிந்திக்கத்தக்கவை. இவையெல்லாம் காலத்தை வென்று, கலைஞர்களையும் கலைப் புலவர்களையும் புகழாசனத்தில் அமரவைத்துச் சிரஞ்சீவிகளாக ஆக்கியுள்ளன. மேலும், அருளியல் நோக்கில் இவை பயன்படுவதுடன், உலகியல் 'சுற்றுலாத் துறை'க்கும் பொருளீட்டுதற்குப் பயன்படுகின்றன. இதனால், 'சிற்பக்கலை மாட்சி' எனும் இந்த நூல், சுற்றுலாப் பயணிகளுக்குப் பயண வழிகாட்டியாகப் பயன்படும் சிறப்பினைக் கொண்டதாகும்.

கலைச் சிறப்புடைய இந்த நூலை இயற்றுவதற்குத் தூண்டுகோலாக விளங்கியவர் பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்** ஆவர். தமிழ்நாட்டுச் சிற்பக் கருவூலத்தின் சிறப்பைப் பாரெங்கும் பரப்ப வேண்டுமென்ற வேட்கை கொண்டவர். அவர்கள் அளித்த ஊக்கத்தாலும் உற்சாகத்தாலும் இந்நூலை நான் எழுத முடிந்தது. அவர்கள் தம் பதிப்பகத்தின் மூலம் இந்நூலை வெளியிடுவதற்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்துகிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய பதிப்பகத்தின் மேலாளர் திரு. இரா. குருமூர்த்திக்கும் பதிப்பகத்தின் மற்ற ஊழியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. வைத்தியலிங்கன்

உள்ளுறை

பக்கம்

சிற்பக் கலை - விளக்கம்

'சில்' என்னும் வேர்ச் சொல்லடியாகச் 'சிலை' என்பது பிறந்தது. 'கல்' என்னும் பொருளைக் கொண்ட 'சிலை' என்பதன் தொடர்பாகச் 'சிற்பம்' எனும் சொல் உருவாயிற்று. இதன் பரிணாம வளர்ச்சியில், அழகுக் கலைகளுள் ஒன்றாகச் 'சிற்பம்' போற்றப் பட்டுச் சிற்பக் கலை மக்களிடையே பெரு வழக்கில் வந்துள்ளது.

அழகுக் கலைகளுள் கட்டடக் கலைக் கூறுகளுடன் மிகத் தொடர்பு கொண்டதாகச் சிற்பக் கலை போற்றப்படுகின்றது. பொது வாகக் கட்டடக் கலை உலகியல் பயன் மிகக் கொண்டுள்ளது. ஆனால், கோயிற் கட்டடக் கலை எனும் நோக்கில், அஃது உலகியல் பயனுடன் அருளியல் பயனும் கொண்டுள்ளதை வரலாற்றால் தெரிந்து கொள்ளலாம். எப்படியோ கோயிற் கட்டடக் கலையே சிற்பக் கலை மலர்ந்திடவும் வளர்ந்திடவும், உலக அரங்கில் இந்தியப் பெருநாட்டிற்கும், சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும் புகழுடன் பெருமை தேடித் தரவும் அடிப்படைக் காரணமாக விளங்கி வருகிறது. அதனால், தமிழ்நாட்டுப் பண்பாட்டைக் 'கோயிற் பண்பாடு' என்றே கூறுவது பொருத்தமாகிறது.

ஆலயம் எனும் உடம்புக்கு உயிராக விளங்கும் சிற்பக் கலையின் இயல்புகளை முதற்கண் ஆராய்ந்தால், சிற்பத்தின் மேன்மை இனிது புலப்படும்.

சிற்பத்தின் தோற்றம் எடுத்த எடுப்பிலே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவில்லை. மக்கள் தாம் பயன்படுத்தும் பொருள் களில் *(வாள், கோடரி முதலியவற்றில்)* அழகுணர்ச்சியுடன் வினைத் திறத்தைப் பயன்படுத்தினர்; அழகுணர்ச்சி பலவாகக் கிளைத்த நிலையில், தாம் கட்டிடும் இல்லங்களை அழகுபடுத்த முனைந் தனர். அவ்வாற்றான், சிற்பச் சிறப்புடன் கூடிய நுழைவாயில் *(அரு கால்)*, வாயிற் கதவுகள், படுத்துறங்கும் கட்டில் முதலியவையும் அமையலாயின. குடிமக்களுக்கு ஏற்பட்ட சிற்பக் கலை நாட்டம் இவ்வாறு ஒரு புறமிருக்க, நாடாளும் மன்னர்களின் கலை நாட்டம் படிப்படியே மிகச் சிறந்த சிற்பக் கலைப் படைப்புக்களை உருவாக் கியது. அந்நிலையில், அரண்மனை, கோட்டை வாயில், தோரண வாயில், அரசவை, அரசு கட்டில், படுத்துறங்கும் கட்டில் முதலிய பலவற்றிலும் சித்திரமும் சிற்பமும் குலவி இடங்கொள ன.

சி.உ.

இவ்வாறெல்லாம் உலகியல் நோக்கத்துடன் தோற்றங் கொண்ட சிற்பக் கலை, அருளியல் நோக்கத்துடன் அது செழுமை யும் பெருமையும் கொள்ள வேண்டிய சிறப்பு, இறைவன் வகுத்த காலத்தில் கட்டாயமாயிற்று; அஃது எப்படி?

மானுடன், விலங்கு பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, மரம், செடி, கொடி, மலை, அருவி, சுனை, ஆறு, பொய்கை, கடல் முதலிய இயற்கைக் கூறுகளைக் கண்டு மகிழ்ந்த கலைஞன், தன் சிந்தனை விரிவால் இயற்கை கடந்த ஆற்றல்களையும் (Super natural powers) உணர்ந்து, அழகனுபவம் (Aesthetic experience) கொள்ள லானான்: அடிக்கடி மாற்றம் கொள்ளும் இயற்கையழகை நிலை பெறச் செய்யவும், தான் அனுபவித்த அழகனுபவத்தைப் பிறரும் அனுபவிக்கும் வகையில் புறத் தோற்றத்தில் புலப்படச் செய்யவும் வழிவகை நாடினான்; அதன் விளைவே அழகுக் கலையாயிற்று; சிறப்பாகச் சிற்பக் கலை ஆயிற்று எனலாம்.

சிற்பக் கலை விளக்கமுறக் கலைஞனின் அழகுணர்வும், அவ்வுணர்வின் பிரதிபலிப்பும் ஒரு பக்கமிருப்பினும், அதனைத் தக்கவாறு செயற்படுத்தி மேன்மை கொண்டிட அவனது கலைக் கற்பனையும் தக்கவாறு கை கொடுத்து உதவியது. இதனால்தான் காப்பியத்திற்கு உயிரோட்டமளிக்கும் புலவரின் வளமான கற்பனையைப் போலச் சிறந்த சிற்பி உருவாக்கும் நேர்த்தியான சிற்பத்திற்கு உயிரோட்டமளிப்பது அவனது செழுமையான கற்பனையே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

1.1 சிற்பக் கலைக்கு அடிப்படைக் கூறுகள்

உலகில் பொதுவாகச் சிற்பக் கலையைப் பற்றிப் பல செய்தி கள் உள்ளன; சிறப்பாகச் சிந்திக்க வேண்டிய சில செய்திகளும் உள்ளன.

இடத்திற்கேற்பவும், காலத்திற்கேற்பவும், இனத்திற்கேற்ப வும், பிற சூழ்நிலைகளுக்கேற்பவும் சிற்பக் கலைப் படைப்பிற்குச் சிற்சில அடிப்படைகள் மாறலாம்; இது தவிர்க்க இயலாதது.

இயற்கை வடிவங்களையும் பிற தோற்றங்களையும் உள்ளதை உள்ளவாறே படியெடுப்பது என்பது சிற்பக் கலைக்கு ஒரு வகை இலக்கணமே. எனினும், இந்தியப் பெருநாட்டிற்கு, அதிலும் சிறப் பாகத் தென்னாட்டிற்கு ஏற்புடையதாகாது.

மேல் நாட்டினர் சிற்பம் உருவாக்குகையில் உள்ளதை உள்ள வாறே அமைத்துப் பெருமகிழ்ச்சி கொள்வர்; ஆனால், தென்னிந்தி யர்கள் உள்ளதைத் தம் கற்பனைக்கேற்ற வகையில் உணர்ந்தவாறே சிற்பம் அமைத்திடப் பெருநாட்டங்கள் கொள்வர். அத்தகைய படைப்புகளைக் கண்டு, மக்கள் பலரும் வியப்புடன் கண்டு அனுபவித்துப் போற்றிப் பாராட்டுவர். இத்தகைய மன நிலைக்குக் காரணம், சிற்பக் கலையானது சமயத் தொடர்புடன் - ஆன்மிகத் தொடர்புடன் - தம்மை இயைபுபடுத்திக் கொண்டு ஈடுபாட்டுடன் விளங்குவதே எனக் கூறலாம்.

உணர்வின் பிழம்பாகிய சிற்பி, தன் மனத் திரையில் காண லாகும் காட்சியைப் புறப் பொருள்களில் கற்பனையோடு கலைப் படைப்பாகப் - படிவமாக - ஆக்கி, இனம் புரியாத இன்பத்தில் நீந்தி நிற்பான்; அவனுடைய உள்ளத்துணர்வைப் புரிந்து கொண்டு, சிற்பக் கலையை வளர்த்திடும் நோக்கத்தில் அவனைப் போற்றவும் ஊக்க மளித்திடவும் கலையுள்ளம் கொண்ட புரவலர்கள் தேவை. எனவே, சிற்பக் கலை சிறந்தோங்கிக் காலந்தோறும் வளர்ந்திடவும், நாட்டுக்கு நலமும் பெருமையும் ஓங்கிடவும் கலைப் புரவலர்கள் இடையறவு படாமல் தமிழ் நாட்டில் இருந்து வந்துள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது.

கலைஞர்களின் தரத்திற்கேற்ப ஆதரவளிக்கும் புரவலர்க ளாலும், புரவலர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப வினைத்திறம் புலப் படுத்திடும் கலைஞர்களாலும், தமிழ்நாடு சிற்பக் கலைக்கெனத் தனி முத்திரை பதித்து ஒரு வகையில் ஈடும் எடுப்பும் இணையு மில்லாத சிறப்பினை எய்தியுள்ளது: இஃது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

இவ்வாறான சிறப்பிற்கெல்லாம் காரணம் என்ன என்று வினவிக் காரணத்தை ஆராய்கையில், சிற்ப வல்லுநர் ஒருவரின் அனுபவ வாய்மொழி நமக்குத் தெளிவை வழங்கும்.

சிற்பி கணபதி ஸ்தபதி, 'சிற்பக் கலையின் அடிப்படை' எனும் கட்டுரையில், ''இயற்கைக் காட்சிகளையும் இயற்கை வடிவங்களை யும் 'பிரதி' செய்வதை விடுத்து, முற்றிலும் உணர்வுமயமான மனக் காட்சிகளையும் கருத்துக்களையும் உண்மைகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் சித்திரித்துக் காட்டுவதிலேயே தொன்றுதொட்டுத் தமிழகச் சிற்பிகள் நாட்டங் கொள்வாராயினர். ஆனால், அதே

நேரத்தில், இயற்கையை அறவே புறக்கணித்து முற்றிலும் புதுமை யான வடிவங்களையும் காட்சிகளையும் அவர்கள் படைக்க வில்லை''[1] என்றும், ''கவிஞனின் உள்ளத்தில் தோன்றியது 'அருவம்', இதற்கு அவன் கொடுப்பது 'சொல் வடிவம்'. சிற்பியின் உள்ளத்தில் தோன்றியது 'அருவம்'. இதற்கு அவன் கொடுப்பது 'கல் வடிவம்'. இவ்விருவரும் தங்கள் உள்ளத்திலே கண்டு இன்புற்ற பெண் வடிவத்தின் முகத்தை முழு மதியிலும், நெற்றியைப் பிறையிலும், புருவத்தை - கண்களை - மலர்களிலும், கூந்தலை மயில் தோகையிலும், இடையைத் துடியிலும், தொடையை யானைத் துதிக்கையிலும், இங்ஙனம் ஒவ்வோர் உறுப்பையும் ஒவ் வோர் இயற்கை வடிவத்திலும் காணுகிறார்கள். இவற்றைச் சிற்ப வடிவத்தில் சிறப்பாக அமைத்துக் காட்டுவதே நம் நாட்டுச் சிற்பக் கலை மரபின் ஒப்பற்ற செயலாகும். இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான இயற்கைப் பொருள்களிலும் காணவும் கூடும். இதனால் வடிவங்களும் வெவ்வேறாக மாறும் தன்மை பெறுகின்றன. எனவே நமது கலைமரபிற்கு எல்லையென்பது இல்லை. கற்பனை விரியும் தன்மையுடையது. மேலும், தத்துவக் கருத்துக்களுக்கும் சமய உணர்வுகளுக்கும் வடிவம் காண்பதில் சிற்பக் கலை சிறந்த பணி செய்கிறது. இக்கருத்துக்கள் எல்லை யின்றி விரிந்து உயர்ந்து செல்லத் தக்கவை. இத்துறையைச் சிற்பக் கலை பற்றிக் கொண்டதால், இத்துறை விரிவும் உயர்வும் பெறுவ தாயிற்று. பல நூற்றாண்டுகளையும் கடந்து நமது சிற்பக் கலை வளர்ந்து ஓங்கியதன் இரகசியம் இஃதே''[2] என்றும் சிற்பக் கலை யின் தனிச் சிறப்பிற்குரிய நுண்கூறுகளை எழுதிச் சென்றுள்ளார்.

உலகியலிலும் அருளியலிலும் சொற்சித்திரம் தீட்டும் 'கவி'க்கு எத்தகைய பெருமையும் போற்றுதலும் உண்டோ, அவ்வாறே கலைக் கற்பனையால் 'கல் சித்திரம் வடிக்கும் சிற்பிக்கும் பெருமையும் போற்றுதலும் உண்டு. சிரஞ்சீவிக் கவிதைபோல் சிரஞ்சீவிச் சிற்பம் உண்டு: ஆதலின், சிற்பியைக் 'கற்கவி' என்றே அழைத்துத் தமிழர்கள் போற்றி வந்துள்ளனர்.

மேலும், சிற்பியர்க்கு 'ரேகா ஞானம் - மரங்களையும் கற்களை யும் கண்டு அவற்றிலே காணப்படும் ரேகைகளின் பலன்களை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் தகுதி - அமைந்திருத்தல் வேண்டும்.

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, பிப்ரவரி, 1974, பக். 226

2. மேலது, பக். 228

சிற்ப நூல் மரபுகளும் தியான சுலோகங்களும், பிற அருளாளர்களின் பாடல்களும், சிற்பங்களை நேர்த்தியாகப் படைத்திடத் துணை நிற்பது உண்மையே. எனினும், இவற்றுக்கும் மேலாகச் சிற்பியர்க்கு ஒருமுகப்பட்ட கலையீடுபாடும் கலைக் கற்பனையும் கை கொடுத்து உதவ வேண்டும்; அந்நிலையில் சிற்பியர்கள் உருவாக்கிடும் சிற்பப் படைப்புகளில் இக்காலப் பகுத்தறிவைப் பயன்படுத்திப் பார்ப்பது தேவையற்றது.

மனிதர்கள், விலங்குகள், பறவைகள் முதலியவற்றைச் சில காரணங்களுக்காகச் சிற்பியர் படைக்குங்கால், சிறியவை பெரியவையாகும்; பெரியவை சிறியவையாகும்; சில வேளைகளில் கண்களால் பார்க்கவியலாத அற்புத உறுப்புகள் கொண்டு இலங்கும்.

'காமதேனு' எனும் வியப்பிற்குரிய பசுவைச் சிற்பி உருவாக்கும் போது, பெண்ணின் திருமுகமும் மார்பும் கொண்டு, பசுவின் உடலோடும் பால் கறக்கும் மடியோடும் அமைத்திருப்பர். மானுடப் பெண்ணின் மார்பகத்தைப் படைத்துவிட்டுப் பசுவின் மடியும் தேவையா என வினவிப் பயனில்லை.

ஆறுமுகனுக்கு இயல்பாகவே ஆறு திருமுகங்கள் அமைந்திருக்கும்; ஆனால், திருமுகங்களுள் சிலவற்றை முற்பகுதியிலும், எஞ்சியவற்றைப் பிற்பகுதியிலும் சிற்பியர் அமைத்திருப்பதைச் சில திருவுருவங்களில் காணலாம். இவ்வாறே சரப மூர்த்தியின் திருவுருவத்தை அமைப்பதற்குத் தியான சுலோகங்கள் உண்டு. எனினும், தமிழ் நாட்டில் காணலாகும் சரப மூர்த்திகள் பல அமைப்புகளில் உள்ளன; காரணம், சிற்பியரின் கலைக் கற்பனையேயாகும்.

திருவள்ளூர் மாவட்டம் ஆண்டார்குப்பம் எனும் முருகன் திருத்தலத்தில் வியத்தகு சிற்ப வடிவங்கள் ப்ல உள்ளன; கலைக் கற்பனை நோக்கில் சிலவற்றைக் காண்போம்.

''கோயிலின் பதினாறு கால் மண்டபத்தில் மூலவருக்கு எதிரில் ஒன்றரையடி உயரத்தில் பழைய படைப்புச் சிற்பமொன்று உள்ளது. இது பற்றி டாக்டர் டி. செல்வராஜ் விளக்குகையில், ''புடைப்புச் சிற்பத்தை அருகில் நின்று உற்று நோக்கினால், அகல விரிந்த தாமரைப் பூவின் நடுவில் ஒரு வேல் இருப்பதைக் காணலாம்.

தூரத்தில் நின்று அதே சிற்பத்தை உற்று நோக்கினால் தாமரைப் பூவில் பிரமன் இருப்பதைக் காணலாம். இவ்வாறு ஒரே சிற்பத்தில்

இரட்டைக் காட்சிகள் இருப்பது அற்புதம்; வேறு திருத்தலங்களில் காண முடியாத அதிசயம்''[1] என்று வியந்து போற்றியுள்ளார்.

மேலும், மயில் மண்டபத்திலுள்ள மயிலும் சிங்கமும் பற்றி அவர் எழுதுகையில், ''முருகனுக்கு மயிலும் சிங்கமும் வாகனங்களாக இருப்பதால், இவை இரண்டும் இணைக்கப்பட்டு ஆண்டார் குப்ப முருகனின் திருமுன் ஒரு மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. வாயில் பாம்பைப் பற்றியபடி *(பெரிய வடிவில்)* நின்று கொண்டிருக்கிறது மயில்; அதன் கழுத்துப் பகுதியைத் தாங்கிக் கொண்டிருக்கிறது சிங்கம். மயிலும் சிங்கமும் மூலவரை இடையறாமல் தரிசிக்கின்றன''[2] என்றும் கூறியிருப்பதால் சிற்பியரின் கலைக் கற்பனையின் ஒரு வகை விசுவரூபத்தை உணரலாம்.

1.2 சிற்பக் கலை - படிநிலை வளர்ச்சிக் கூறுகள்

சிற்பக் கலைத் தொடர்பாக எழுந்த பல சிந்தனையோட்டங்களையும் திரட்டிச் சில தெளிவுகளைக் காணலாம்.

பாரதப் பெருநாட்டையும், சிறப்பாகத் தமிழ் நாட்டையும் பொறுத்த வரையில் ஒரு வகைக் கலவைப் பண்பாடே இருந்து வருகிறது. பேரறிஞர் டாக்டர் சுனித் குமார் சாட்டர்ஜி, ''இந்துக்களின் மதம் மற்றும் பண்பாட்டின் இன்றைய கலவையைப் பொறுத்த வரையில், அதனில் ஆரியமும் திராவிடமும் ஊடும் பாவுமாக உள்ளன என்றும், நம் பண்பாட்டில் முக்கால் பங்கு ஆரியமல்லாதது *(திராவிடம்)* என்றும் சொல்லலாம்'' என்பதையும், டாக்டர் கில்பார்ட் ஸ்லேட்டர், ''திராவிடர்களிடம் ஆரியர்கள் மொழியைப் பரப்பியிருக்கிறார்கள்; ஆரியர்களிடம் திராவிடர்கள் தங்கள் பண்பாட்டைப் பரப்பியிருக்கிறார்கள்'' என்பதையும் அவர்கள் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். வேத நெறியையும், புராண- ஆகம சாத்திரப் பின்னணியையும் ஆராய்ந்து நோக்கினால் சிற்பக் கலை எவ்வாறு புராண அடிப்படையில் வளரலாயிற்று என்பது புரிய வரும்.

பண்டைய சங்க காலத்தில் கடவுள் வழிபாடு இருந்ததேயெனினும், சிறிய அளவில் 'வேலை' வைத்து 'வேற்கோட்டம்' என்றும் 'வச்சிரப் படையை' வைத்து, 'வச்சிரக் கோட்டம்' என்றும் தொடங்கிப் படிநிலை வளர்ச்சியாக உருவ அமைப்பை ஓவியமாகத் தீட்டி வழிபட்டும், பிறகு காலப் போக்கில் மரத்தால் கோயில் கட்டியும்,

1,2 அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, நவம்பர் 2000, பக்.68-69.

குறிப்பிட்ட மரங்களையே தல மரங்களாக்கியும் வழிபட்டனர். தொடக்கக் காலத்தில், பெருந்தெய்வ வழிபாட்டைவிடச் சிறு தெய்வ வழிபாடே மிகுதியாக அமைந்திருந்தது; செங்கற் கோயில் களும் தோன்றின.

தமிழ் நாட்டவரேயல்லாத பல்லவ மன்னர்கள் ஆட்சியில் குடைவரைக் கோயில்களும் கட்டுமானக் கோயில்களாகிய கற்றளி களும் தோன்றின. வழிபாட்டிற்குரிய கற்சிலைகளும் செப்புத் திருமேனிகளும் வடிக்கப்பட்டன. சிவனுக்கும் திருமாலுக்கும் சக்திக்கும் முருகனுக்கும் எனப் பல வடிவங்களில் சிற்பக் கலைப் படைப்புகள் உருவாயின.

சாளுக்கியருடன் புரிந்த போர் வெற்றியைத் தொடர்ந்து, பரஞ் சோதி *(சிறுத் தொண்டர்)* வாயிலாக விநாயகர் வழிபாடு தமிழகத்தில் தோன்றலாயிற்று. மேலும், தமிழகத்தில் சாளுக்கிய மரபுச் சிற்பங் களும் இடம் பெறலாயின.

விசய நகர - நாயக்க மன்னர்களின் ஆட்சியில் கர்நாடகச் சிற்ப மரபுகள் *(ஹோய்சலர் சிற்பப் பாணி முதலியவை)* தமிழகத்தில் இடம் பெறலாயின.

ஆங்கிலேயர் வருகைக்குப் பின் மாதா கோயில் முதலிய கட்டடங்கள் கட்டப்பட்டன; அவற்றால், மேனாட்டார் சிற்ப மரபு களும், தமிழகத்தில் இடம் பெற்றன. அன்னை மேரியும் குழந்தை வடிவில் இயேசு பிரானும், இயற்கை யிகந்த ஆற்றல்களின் திருவுரு வங்களாக இறக்கைகளுடன் கூடிய தேவதைகளும் கண்டு போற்றத் தக்கவை.

இவ்வாறு, 'தமிழகமே பல வகைச் சிற்பக் கலை மரபுகளின் சங்கமம்' என்று கூறுமளவிற்குச் சிற்பக் கலை வளர்ந்துள்ளது.

1.3 சிற்பக் கலை மரபுகளும் தியான மந்திரங்களும்

சூரியன், சந்திரன் முதலிய கோள்கள், விண்மீன்கள் யாவும் சில நியதிகளுக்கு உட்பட்டே அமைந்துள்ளன. இவற்றைச் சார்ந்த உலக இயக்கமும் நியதிக்கு உட்பட்டதே. இயற்கையையொட்டி அமைந்திடும் செயற்கையாகிய கலையும், உள்ளுணர்வால் இயற்றப் படுகையில் குறிக்கோளுடன் கூடிய பொருத்தம் அமைதல் வேண்டு மென்று சிற்பி எதிர்பார்க்கிறான்; அந்நிலையில் அழகனுபவம் வாழையடி வாழையாக அமையும் சமுதாய மக்களுக்குக் கிட்ட

வேண்டுமென்றும் அவாவுகிறான். எனவே, கலைப் படைப்பில் தான் கையாண்ட வழிமுறைகளைத் தன் மரபினருக்கும் கற்பிக்கிறான்; அதன் விளைவே சிறந்த கலை மரபு ஆகின்றது; இஃது ஒரு வகையில் சிற்பியின் யோக அனுபவத்தின் விளைவு என்றும் கூறலாம்.

இத்தகைய கலை மரபிற்குத் துணையாகும் வண்ணம் அருளாளர்களாலும் சிற்பியராலும் ஆக்கப்பட்டவையே தியான மந்திரங்களாகும்; இவையும் அழகநுபவம் ஆன்மநல வளாகத்தில் விளைவித்த பயன்களே யாகும்.

சுருங்கக் கூறின், சிற்பக் கலை மரபுகளும் தியான மந்திரங்களும் சமயச் சார்பிலும் சமுதாயச் சார்பிலும் நலம் பயக்கும் வகையிலும், சிற்பப் பரம்பரையினருக்குப் பெருமை சேர்க்கும் வண்ணமும் உதவியாக அமைந்த வழிகாட்டிகள் எனலாம்.

சிற்ப நூல்களில் காணலாகும் தியான மந்திரங்களைப் பின்பற்றிக் கலை நியதியுடன் படைக்கப் பெறும் சிற்பக் கலைப் படைப்புக்கள் சக்திமிகு இறைமை *(மூர்த்திகரம்)* பெற்று விளங்கும். அவ்வாறான கலைப் படைப்புக்களை உருவாக்கிய சிற்பியர்கள், இந்நாட்டு மன்னர்களாலும் வள்ளல்களாலும் 'கலா விநோதர்கள்' எனப் பாராட்டப் பெற்றனர்.

சிற்பக் கலையுலகில் பரிணாம வளர்ச்சி யென்பதும் தவிர்க்க இயலாதது. அருளனுபவமும் அழகனுபவமும் துணைநிற்கச் சிறந்த சிற்பியர் தம் வினைத் திறமையால் சிறந்த சிற்பங்களை உருவாக்குகையில், அவர்தம் கற்பனைத் திறமும் அவற்றில் இழையோடி நிற்கும். தியான மந்திரங்கள் சிற்ப வண்டியின் ஒரு சக்கரமாக அமைந்திடினும், மற்றொரு சக்கரமாக வளமான கற்பனையும் அமையும்போதுதான், அந்த வண்டி சிறந்த இயக்கமெனும் போற்றுதலைத் தொடர்ந்து பெறும்.

மக்களின் போற்றுதற்கேற்ப நாட்டுக்கு நாடு கலை மரபுகள் மாறுபடுதலும் உண்டு. சிற்பியர் தேர்ந்தெடுக்கும் சிற்பத்திற்கேற்ற மூலப் பொருள்கள் காரணமாகவும் சிற்ப அமைப்புக்களில் வேறுபாடு ஏற்படும். இத்தகைய காரணங்களால்தான், சிற்பக் கலை மரபுகளில் பல்லவர் காலச் சிற்ப முறை, சோழர் காலச் சிற்ப முறை, பாண்டியர் காலச் சிற்ப முறை, வடநாட்டுச் சிற்ப முறை முதலிய பல கலைப் பாணிகள் தோன்றலாயின. இவற்றினூடே ஹோய்சலர் சிற்ப முறை *(பேலூர், ஹலபீடு)* உலகப் புகழ் பெற்றதற்குக்

காரணம், கலை மரபுகள் ஒரு புறமிருப்பினும் சிற்பியர்க்குக் கிடைத்த மூலப் பொருளாகிய கல்லும் அவர்களின் கற்பனைத் திறத்தைப் புலப்படுத்தப் பக்குவமாகப் பயன்பட்டதே எனலாம்.

உலகப் புகழ் பெற்ற ஹோய்சலர் (போசளர்) சிற்ப முறை, திருவரங்கக் கோயிலில் வேணுகோபாலன் சன்னிதி *(குழலூதும் பிள்ளைக் கோயில்)* முதலிய சில இடங்களில் கையாளப் பெற்றுள்ளதை அறிஞர்கள் எடுத்துக் காட்டுவர். ஆக, இவையனைத் துக்குமே தியான மந்திரங்களும், அருளாளர்கள் பாடல்களும் அடிப்படையாக வழிகாட்டியுள்ளன.

1.3.1 சிற்பக் கலை - புராணப் பின்னணியும் தியான சுலோகங்களும்

பல சமயங்களின் உயிர் நாடி புராண நம்பிக்கையைப் பொறுத்தே உள்ளது. கோயிற் பண்பாட்டைப் பண்டைக் காலத்திலிருந்து வளர்த்து வரும் தமிழ் நாட்டில், சமய தத்துவங்களை விளக்கும் வகையில் கடவுட் புராணங்களும் தல புராணங்களும் பலவாகத் தோன்றியுள்ளன; அவை மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியவற்றைக் குறிக்கொண்டு போற்றுகின்றன.

ஆலயத்தின் வளாகத்தில் புராண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் ஒரு புறமிருப்பினும், கருவறையில் மூலவரும் விழா நோக்கில் உற்சவருமாகிய சிலைகள் தலப் பெருமையை யொட்டியே அமைக்கப்பட்டு மக்களின் வழிபாட்டைப் பெற்று வருகின்றன. எனவே, சிற்பக் கலைப் படைப்பிற்கு ஆன்மநல உந்து சக்தியாகப் புராணப் பின்னணி அமைந்துள்ளது என்பது மனங்கொள்ளத் தக்கது.

புராணப் பின்னணி எனும் நோக்கில் சிந்தித்தால், சிவ பெருமானுக்குரிய பாடல் பெற்ற தலங்களாக நூற்றெட்டும், திருமாலுக்குரிய திவ்ய தேசங்களாக நூற்றெட்டும், சக்திக்குரிய சக்தி பீடங்கள் அறுபத்து நான்கும் அமைந்துள்ளன. மேலும், கணபதிக் குரிய சிறப்பான ஆலயங்களும், திருமுருகனுக்குரிய ஆறு படை வீடுகள் முதலிய ஆலயங்களும், சூரியனுக்குரிய சூரியனார் கோயிலும், நவக்கிரகங்களுக்குரிய சிறப்பான திருத்தலங்களும், பிற பரிவார தெய்வங்களுக்குரிய சிறப்பான திருத்தலங்களுமாகப் பல நோக்கில் ஆலயங்களும், அவற்றுக்கான சிற்பக் கலைப் படைப்புக் களுமாகப் பல தோன்றியுள்ளன. இந்தத் தலங்களிலெல்லாம் சிற்பக் கலை நேர்த்திக் கூறுகளையெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்தல் என்பது எளிதான செயலன்று; இந்நூலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில

சிற்பக் கலைப் படைப்புக்களை மட்டுமே காணவியலும் என்று அடக்கவுணர்வுடன் கூறிக் கொள்வது பொருத்தமாகும்.

அடுத்து, அழகிய சிற்பக் கலைப் படைப்பை உருவாக்கு வதற்குச் சிற்பியர் ஆர்வத்துடன் நாடிப் போற்றிய 'தியான மந்திரங்கள்' பற்றிச் சிறிது தெரிந்து கொள்வது நல்லது.

தெய்வச் சிலைகளை அமைக்குங்கால், அருவமான தெய்வத்தை உருவமான வடிவத்தில் கொணர்கின்ற கலைத் திறன் தானே வேண்டப் படுவது என்று எளிதாகக் கருதக் கூடாது. கற்பனையுணர்வால் அழகை மட்டும் மக்களிடம் முன் நிறுத்துவதே சிற்பியரின் வேலை என்று தவறாக நினைத்தல் கூடாது. கல்லால் அமைத்திடும் சிலைகளும், உலோகத்தால் ஆக்கப்பட்ட சிலைகளும் *(செப்புத் திருமேனிகளும்)* அழகுணர்வுடைய யாரையும் கவரும் சிறந்த கலைப் படைப்புகளே; சில வேளைகளில் பொன்னால் செய்த சிலைகளைவிடச் செப்புத் திருமேனிகள் *(பஞ்சலோகத் திரு மேனிகள்)* மிகவுயர்வாக மக்களால் போற்றப்படும். காரணம், இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் செப்புத் திருமேனிகள் கலைப் பொருள்களாக மட்டுமல்லாமல், சமயச் சீலங்களுடன் வழிபடுதற்குரிய தெய்வ வடிவங்களாகவே பெருமதிப்பிகுரிய மேன்மையைப் பெற்று வருகின்றன. ஆகவே, நூல் மரபிற்கேற்ப வடிக்கப்பட்ட தெய்வத் திருமேனிகளில் அழகியல் பெருமையுடன் அருளியல் ஈர்ப்பும் அமைந்துள்ளன என்பது தெளிவு. ''கண்ணுக் கினிய படிமங்களெல்லாம் அழகான படிமங்கள் ஆகா; சாத்திர முறைப்படி செய்யப் பெற்றவையே அழகானவையாகும்'' என்று சுக்கிர நீதி கூறுவதை ஈண்டு இயைபுடன் மனத்திற் கொண்டு சிந்திக்கலாம்.

முன்னொரு காலத்தில் தியான சுலோகங்களில்லாமலேயே சிலைகள் வடிக்கப்பட்டிருக்கலாம். பரிணாம வளர்ச்சியில் சிற்ப வல்லுநர்கள் தம் உள்ளொளியால் கண்ட சிந்தனைகளையும் கலையனுபவங்களையும், வழிவழி மரபுடன் பின்பற்றும் வகையில் தியான சுலோகங்களை உருவாக்கித் தந்துள்ளனர். அத்தகைய சுலோகங்களெல்லாம் சமஸ்கிருதமாகிய வடமொழியிலும் கிரந்தத் திலுமே காணப்படுகின்றன. அவற்றைச் சிற்பியர் தம் மரபினருக்கு வழிவழியே போதித்துச் சிற்பங்களை உருவாக்கத் தகுதியளித்தனர்.

தியான சுலோகங்கள் வாயிலாகத் தெய்வத் திருவுருவின் ஒவ்வோர் அங்க அமைப்பும், திருக்கைகளிலேந்திய படைக்கலமும்

பிறவும் தெரிந்து கொள்ளலாம். இஃது ஒரு புறமிருக்க, அருளாளர்கள் அருளிய பாடல்களும் சிற்பியர்க்குத் துணை புரிபவையாக உள்ளன.

தியான மந்திரப் பொருண்மைக்கு விளக்கந்தரும் வகையில் திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தேவாரத்தில்,

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே"
(திருமுறை, 6:21:1)

எனப் பாடியுள்ள பாடலை நோக்கலாம். உள்ளக் கிழியில் உருவெழுதித் தெய்வநலக் காட்சியைக் காணலுற்றால் சிற்பியர்க்குச் சிற்பக் கலைப்பு நேர்த்தியாக அமையும். பக்தி நெறியில் நின்று தியான அனுபவத்தில் பயிற்சி பெற்ற சிற்பியர், இறைமையை மந்திர வடிவில் முதற்கண் கண்டு, அந்நெறியே ஒன்றிய உணர்வால் சிற்பக் கலைப் படைப்பை உருவாக்கி உலகிற்கு வழங்குவர் என்பதே இதன் உள்ளுறை.

திருக்கடவூர் அருள்மிகு அபிராமியம்மையின் திருவருளைப் பெற்ற சிறந்த அனுபூதிமானாகிய அருளாளர், அபிராமியம்மைப் பதிகம் பாடுகையில் சிவசக்தி வடிவினையே முன்னிறுத்தியுள்ளார்; தியான சுலோகம் போல அமைந்துள்ள பதிகப் பாடலில் ஒன்று வருமாறு:

"கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்குங்
கலாமதியை நிகர் வதனமும்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங் கூந்தலும்
சங்கையில்லாது ஒளிரு மாங்கல்ய தாரணந்
தங்குமணி மிடறு மிக்க
சதுர்பெருகு துங்க பாசாங்குசம் இலங்குகர
தலமும் விரலணியும் அரவும்
புங்கவர்க்கு அமுதருளும் மந்தர குசங்களும்
பொலியு நவமணிநூ புரம்

பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றியென வாழ்த்த விடைமேல்
மங்கள மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே!" (1)

இப்பாடலில் வரும் கேசாதிபாத வருணனையைக் காண்கை யில் திருவருட் சக்தி அபிராமியை நேரில் காண்பது போன்ற அருளனுபவம் ஏற்படும்; இதுவும் ஒரு வகையில் தியான மந்திரம் எனப் போற்றி நிற்கலாம்.

அருள்மிகு காமாட்சியம்மை பதிகம் எனும் காமாட்சியம்மை ஆசிரிய விருத்தத்தைப் பாடியருளிய அருளாளர், அம்மை அணி கலன்கள் பூண்டு அருட்காட்சி நல்குவதைப் பட்டியலிட்டுக் காட்டு கிறார்.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகந் தண்டை கொலுசும்
பச்சை வைடூரிய மிச்சையா இழைத்திட்ட
பாதச் சிலம்பி னொலியும்,
முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலை யழகும்,
முழுதும் வைடூரியம் புஷ்பரா கத்தினால்
முடிந்திட்ட தாலி யழகும்
சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலும்
செங்கையில் பொன்கங்கணம்
செகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற
சிறுகாது கொப்பினழகும்
அத்திவரதன் தங்கை சத்தி சிவரூபத்தை
அடியனால் சொல்லத் திறமோ?
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே" (2)

காமாட்சியம்மையின் சிலையை வடிவமைக்கையில் அவள் அணிந்துள்ள அணிகலன்களை எப்படிப் பொருத்திக் காட்டலாம் என்று சிற்பியைச் சிந்திக்க வைக்கும் பாங்கினில் இஃது அமைந் துள்ளமையைப் போற்றி மகிழலாம்.

1.4 சிற்பியரின் கலையனுபவம்

சிற்பக் கலைப் படைப்பில் சிற்பியர் பெரும்பாலும் கலை மரபுகளைப் பின்பற்றுபவர்களே; எனினும், சமுதாயத்திற்குச் சிற்ப அலங்கார வேலைப்பாடுகளை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில் காலத்திற்கேற்பக் கற்பனை வளத்துடன் சில புதுமைகளைச் சேர்த்துக் கொண்டே வந்துள்ளனர்.

இயற்கையிலே காணலாகும் வாத்து, சிற்பக் கலைப் படைப்பில் அன்னப் பறவையாகவும் சிங்கம் யாளியாகவும் வடிவெடுக்கும். சிற்ப அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள பூ மரங்கள், பூஞ்செடிகள், பூங்கொடிகள் முதலியவற்றைக் காணுங்கால், அவை வியப்பை விளைவித்து 'உண்மையா' எனச் சிந்திக்கச் செய்யும். எப்படியோ இவ்வேலைப்பாடுகள் காண்பவரின் உள்ளத்தைச் சுண்டி யிழுத்து அவற்றில் அழகனுபவத்தைப் பதியச் செய்து விடும். இது பற்றிச் சிற்பி கணபதி ஸ்தபதி, ''இயற்கையில் காணப்படும் செடி கொடிகளைக்கூட உள்ளதை உள்ளபடியே நம் மரபில் காட்டுவதில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் நெளிவு சுளிவு, மடிப்பு, விரிப்பு, கோவை, அடுக்கு, மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் இயக்கங்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இத்துறையில் சிற்பியின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ்வடிவங்களைக் 'கருக்குகள்' என்றும், 'பாளை' என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள். தமிழகச் சிற்ப மரபின் போற்றுதற்குரிய சிறப்பியல்புகளில் இதுவும் ஒன்றாகும். இது மட்டுமன்று! இயற்கையில் காணும் பறவை இனங்களில் சிற்ப வடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித் தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன''[1] என்று தம் கலையனுபவத்துடன் புலப்படுத்துவது போற்றத் தக்க அருங்குறிப்பாகும்.

சமயச் சார்புடைய சிற்பங்களை உருவாக்குகையில், ஒன்றுதலுடன் சமயக் கற்பனைகளுக்குச் சிற்பியர் இடந்தந்துள்ளனர்; மேலான அழகனுபவத்துடன் தியானத்தின் பயனாகச் சிற்பியர் விளைவித்த படைப்புக்கள் உலகப் புகழ் பெறலாயின. உலகளாவிய கலைத் திறனாய்வாளர்கள், ''மரத்திலேனும் கல்லிலேனும் உலோகத்திலேனும் தந்தத்திலேனும் உருவாக்கப்படும் இந்திய நாட்டுச் சிற்பங்கள் வெகு நுண்ணிய வேலைப்பாடு கொண்டவையாக விளங்கின.

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, ஜூன். 1972

இந்தியச் சிற்பியை மற்றெந்த நாட்டுச் சிற்பியும் கலை நுட்பத்தில் வெல்லுதல் அரிது என்று தம் எண்ணத்தை வெளியிட்டனர்''[1] எனுங் குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

ஆர்.எஸ். உருக்குமணி சிற்பியின் கலையனுபவம் பற்றி ஆராய்ந்து எழுதுகையில், ''சிற்பியொருவன் முருகக் கடவுளின் திரு வுருவைச் செதுக்குமுன் அக்கடவுளின் உடலுறுப்பிலக்கணங்களை வர்ணிக்கின்ற பாடல்களை *(தியானச் சுலோகங்களை)*ச் சில ஆண்டு களாகத் தியானம் செய்வான். கண், புருவம், புருவத்தின் மயிர், இமை, இமையின் மயிர், நெற்றி, கன்னம், நாசி, இதழ் என் றிவ்வாறே முருகக் கடவுளின் உடலுறுப்புகளைத் தனித்தனி யாகவும், அவை யாவும் ஒன்றாய் இசைந்த திருக்கோலமாகவும் தியானிப்பான். அச்சிற்பி அம்முருகக் கடவுளாகவே தான் மாறுமள வும் அத்தியானத்திலே இருப்பான். அவனுடைய உள்ளம் முருகனது திருவழகிலே இரண்டறக் கலக்கும். இங்ஙனம் தியானத்தில் மூழ்கிய சிற்பி உளியைக் கையில் எடுப்பான்; அவனறியாமலே உளி செதுக்கிச் செல்லும். வெகு விரைவில் சிலையிலே முருகன் திருமேனி உருவாகி விடும்''[2] என விளக்கிச் செல்வது சிந்திக்கத் தக்க கலைக் குறிப்பாகும்.

ஒரு சிற்பி, தான் வடிக்கவிருக்கும் கலைப் படைப்பிற்காக ஒரு பாறாங்கல்லைத் தேர்ந்தெடுக்கின்றான் எனில், தன் இலட்சிய பிம்பத்தை மனத்துட் கொண்டு, வடிவ நேர்த்திக்கேற்பக் கல்லிலே வேண்டாத பகுதிகளைத் தன் உளிகளால் செதுக்கிக் கழித்துக் கொண்டே வருவான். அஃதாவது, கல்லைப் பார்க்கும்போதே அத னூடே தான் உருவாக்க நினைக்கும் சிற்ப வடிவத்தைக் கலைக் கற்பனையுடன் நோக்கும் சக்தியைச் சிற்பி முதற்கண் பெற்றிருத்தல் வேண்டும்; தான் கையில் கொண்ட உளியும், தன் குறிப்பிற்கேற் பவே பக்குவமாக நயமாகச் செயற்படுமாறு கையாள்வான்; சிறு குறையும் ஏற்படாமல் இறையுணர்வுடன் ஒன்றி அவன் செயற் படுகையில், அந்தக் கலையனுபவத்தை ஒரு யோகப் பயிற்சியாகவே கொள்ளுதல் பொருந்தும்.

ஒன்றிய உணர்வால் - யோகப் பயன்பாட்டினால் - சிற்பி உருவாக்கிடும் சிற்பப் படைப்புக்கள் எல்லோர்க்கும் பயன்படும்

2. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, பாகம் 2, பக். 500

2. இந்தியச் சிற்பங்கள், பக். 28

வகையில் அவை வியப்பிற்குரியனவாய்ப் பொருந்திய வடிவமும் ஒத்தளவு கொண்டு இலங்குகின்றன; அவற்றில் அழகு நுண்கூறுகள் தாமே கூத்தாடுகின்றன. இது பற்றிக் கலைத் திறனாய்வாளர் பி. கோதண்டராமன், ''இங்ஙனம் அமைந்த பொருள் அழகு உடைய தாகிறது. அழகே இறைவன்! இறைவனின் அழகே இயற்கை. இயற்கையின் அழகே ஆன்மா. ஆன்மாவின் அழகே சிற்பத்தின் வாயிலாக வெளிப்படுகின்றது. கலைகளின் அழகைக் காண்கிறவன் தன் ஆன்மாவின் அழகைக் காண்கிறான். அதில் மகிழ்கின்ற ஆன்மா இயற்கை வனப்பில் கலக்கின்றது. இயற்கை வனப்பில் கலக்கின்ற ஆன்மாவோடு இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கிறான். இந்த இரகசியமே சிற்பங்களில் மகிழ்கின்ற மனத்தின் அழகுணர்ச்சிக்கு மறைவிலே மறைந்து நிற்கின்றது. கலைஞர்கள் இங்ஙனம் இறைவ னுணர்வில் தோய்ந்தவர்கள்''[1] என எழுதிச் செல்வது மனங் கொண்டு போற்றத் தக்க அருங்குறிப்பாகும்.

காலத்திற்கேற்பக் கலையனுபவமும் மாறிக் கொண்டிருக்கும்; அதற்கேற்பச் சிற்பக் கலைப் படைப்புகளும் அமைந்திடுமென்பது இயல்பு விதி. ''சோழர் காலத்தைத் தொடர்ந்து வந்த பிற்காலப் பாண்டியர் காலத்தில், சோழர் காலத்திய கலைத் தன்மையைச் சிற்பங்களில் காண முடியவில்லை. விசய நகர நாயக்கர் காலங் களில், இசுலாமியர், வெளி நாட்டார் ஆகியோரின் கலாச்சாரத் தாக்குதல் ஏற்படவே சிற்ப அமைப்புகளிலும் பெரு மாற்றம் ஏற்பட்டு விட்டது. கடவுள் தன்மைக்கும் கலை அம்சத்துக்கும் தரப்பட்ட முக்கியத் துவம், விசய நகர - நாயக்கர் காலங்களில் மனிதத் தன்மைக்கும், உடற் கூறுகளுக்கும் தரப்படலாயின''[2] எனத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையினர் தரும் அருங்குறிப்பினை ஈண்டு இயை புடன் மனங் கொள்ளலாம்.

1.4 சிற்பக் கலையைத் தேர்ந்து சுவைக்கத் தேவயான சில குறிப்புகள்

அருளாளர்கள் வாய்மொழிகளையும், தியான மந்திரங்களை யும் துணையாகக் கொண்டு, யோக நிலையில் வனப்புமிகு சிற்பக் கலைப் படைப்புகளைச் சிற்பியர் உருவாக்கியுள்ளனர்; எனினும், சிற்பக் கலையில் ஆர்வமும் நம்பிக்கையும் சுவைத் திறமும் இருந்தாலொழிய மக்கள் சிற்ப நோக்கத்தை நிறைவேற்ற இயலாது.

1. இந்தியக் கலைகள் - ஓவியம் சிற்பம் இசை நாட்டியம், NCBH, பக். 95.
2. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை, பக். 367.

சிற்பியின் கலையனுபவமும் (Aesthetic experience of the sculptor) காண்போரின் கலையனுபவமும் ஒத்த நிலையில் சிற்பத்தில் சங்கம மாகும்போதுதான் கலைப் படைப்பின் நோக்கம் நிறைவேறும். அதுவே சிற்பியின் வெற்றி, அதுவே சுவைஞனின் வெற்றி, அதுவே சிற்பத்தின் வெற்றி. அந்த வெற்றியைக் காணச் சிற்பநூல்கள் வழி வகுத்துள்ளன.

சிற்பி கணபதி ஸ்தபதி எழுதிய 'சிற்பச் செந்நூல்', மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்', சமயத் திருமடங்கள் வெளியிட்டுள்ள கோயில் தொடர்பான நூல்கள், தமிழ்ப் பல்கலைக் கழகம் - சிற்பத் துறை வெளியிட்டுள்ள நூல்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள 'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு *(இரண்டாம் பாகம்)*', சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம் ளியிட்டுள்ள கோயில் நூல் வரிசை *(பல நூல்கள்)* முதலிய பலவற்றையும் படித்தால் சிற்பத் தொடர்பான பல செய்தி களை அறிந்து கொள்ளலாம். மேலும், இத்தொடர்பில் அனுபவப் பட்ட அறிஞர்கள் ஆனந்த குமாரசாமி, டாக்டர் கே.கே. பிள்ளை, க. நவரத்தினம், கி. ஸ்ரீதரன், தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன், டாக்டர் மா. இராசமாணிக்க னார், பாலூர் கண்ணப்ப முதலியார், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், டாக்டர் இரா. நாகசாமி, டாக்டர் மா. கலைக்கோவன், கே.சி. கமலையா, டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன், எம். இராசகோபாலன், குடவாயில் பாலசுப்பிரமணியன், எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை, V. கந்தசாமி முதலியோர் எழுதிய கட்டுரைகளும் நூல்களும் சிற்பச் செய்திகள் பலவற்றைக் கொண்டுள்ளன. அவற்றில் கிடைத்த சிலவற்றையேனும் படித்துக் கொண்டு, சிற்பக் கலையை அனுபவிக்கலாம்.

சுருக்கமாகச் சில சிற்பச் செய்திகளைப் புரிந்து கொள்ள, ஆலய வகைகளான மாடக் கோயில், கொகுடிக் கோயில், ஞாழற் கோயில், இளங்கோயில், கரக்கோயில், ஆலக் கோயில் முதலியவை பற்றியும், விமான அமைப்பில் நாகரம், வேசரம், திராவிடம் ஆகியவை பற்றி யும், வைணவக் கோயிற் சிற்ப நோக்கில் அஷ்டாங்க விமானம் முதலிய பலவகை விமானங்கள் பற்றியும் விவரம் தெரிந்து கொள்ளலாம். சிற்ப நூலடிப் படையில் மனித உடலுறுப்புகளைப் போல ஆலய உறுப்புக்களும் அமைகின்ற பாங்கினையும், அந்நிலையில், சிரம் எனும் கருவறையே ஓர் உருவமாகக் கொண்டு, அதன் உறுப்புக்

களாக அடி *(அதிட்டானம்)*, உடல் *(பாதம் அல்லது திருவுண் ணாழிகை)*, தோள் *(மஞ்சம்)*, கழுத்து *(கிரிவம்)*, தலை *(பண்டிகை)*, முடி *(ஸ்தூபி அல்லது கலசம்)* எனச் சிற்ப நூல் கூறும். திருவுண்ணாழிகை எனும் கருவறைச் சுவரின் வெளிப்புறத்திலும், அர்த்த மண்டபச் சுவரின் *(இடை நாழிகையின்)* வெளிப்புறத்திலும் அமைக்கலாகும் கோஷ்ட பஞ்சரம், கும்ப பஞ்சரம் ஆகிய உறுப்புக்கள் பற்றியும், எவ்வாறான சிற்ப அமைப்புகளை இங்கே அமைக்கலாம் என்பது பற்றியும், இவ்வாறான சிற்ப நுட்பங்கள் பற்றியும் அறிந்து கொள்வது சிற்பப் படைப்புகளை நன்கு அனுப விக்கத் துணை நிற்கும்.

1.5 சிற்பியரின் கைவினைத் திறம்

கருங்கல், மரம், தந்தம், உலோகம் போன்ற சடப் பொருள் களுக்குக் காண்போர் வியக்கும்வண்ணம் உயிரோட்டமளிக்கும் சிற்பங்களைப் படைத்திடும் சிற்பியர் தாம் தோன்றிய சமுதாயத்திற் கும் நாட்டிற்கும் உலகிற்கும் பெருமை சேர்ப்பவர்கள். அவர்கள் தம் இடைவிடாப் பயிற்சியாலும், கலைக் கற்பனையாலும், முன்னோர்கள் போதித்த கலை மரபைப் பின்பற்றும் வைராக்கியத்தாலும், தேவை யான நூற் பயிற்சியாலும் நாளும் தம்மை உயர்த்திக் கொண்டே வருபவர்கள்.

அருளியல் நோக்கில் ஆலயங்களையும் அவற்றுக்கான சிற்பங் களையும் உருவாக்கும் சிற்பியர், படைப்புக் கடவுளாகிய நான்முக னுடன் ஒப்பிடத் தக்க பெருமையுடையவர்கள்; ஒருமுகப்படுத்தி அவர்கள் சிற்பங்களை உருவாக்கும் காலத்தில் யோகியர்களாகவும் சித்தர்களாகவும் விளங்க வல்ல வித்தகமுடையவர்கள். ஆன்மாவின் பொலிவையே - தூய்மையையே - சிற்பத்தின் வாயிலாகப் புலப் படுத்திடும் வேளையில், சிற்பியர் சித்தராகவே மாறி, இறைமை யில் குடி கொண்டிருப்பர் என்றும் கூறலாம்.

'செய்யுந் தொழிலே தெய்வம்' என்ற குறிக்கோளுடன், தெய்வச் சிலைகளை நேர்த்தியாகப் பக்தியுணர்வின் உந்துதலால் சிற்பியர் உருவாக்குகின்றனர். அத்தகைய சிற்பியர் தம் ஊனுடம்பை விடுத் தாலும், தாம் படைத்த சிற்பக் கலை வாயிலாகப் புகழுடம்புடன் நிலைபேறு கொள்கின்றனர்.

இறைவனே வலிய வந்து, ஆலயங்களில் பிரதிட்டை செய்யப் பட்ட தெய்வச் சிலைகளில் வாழ்கிறான். இவ்வுண்மையை ஏற்றுக்

கொண்டு பல சமய ஞானியரும் தம் சாத்திரங்களிலும் தோத்திரங் களிலும் சரித்திரங்களிலும் புலப்படுத்தியுள்ளனர். எனினும், வைண வர்கள் மிகச் சிறப்புடன் புலப்படுத்தியுள்ளதைப் போல் பிறர் கூறியுள்ளனரா என்பது ஐயப்பாடே! இதனைச் சிறிது விளக்கமாகக் காண்பது ஈண்டு இயைபுடையதாகும்.

திருமாலின் இருப்பு நிலைகளாகப் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்தினைக் கூறுவர். இந்த ஐந்தனுள் 'அர்ச்சை' என்பது திருமால் சிலையாகிய 'திவ்ய மங்கள விக்கிரகம்' ஆகும். இறைவனே எளிவந்த நிலையில் அடியார் களுக்கு அர்ச்சாவதாரமாகத் - தெய்வச் சிலை வடிவில் - எழுந்தருளிப் பரமபதத்திற்கு வழிகோலுவான் என்பது வைணவ சித்தாந்த மாகும். இவ்வுண்மையில் நம்பிக்கை கொண்டு தம் வாழ்வியலில் வெற்றி கண்ட வைணவ அருளாளர்கள் பலர் உளர் என்பது வரலாற்று உண்மையுமாகும்.

இவ்வாறெல்லாம் விந்தைகளை விளைவிக்கும் வண்ணம் தெய்வச் சிலைகளை உருவாக்கியவர்களுக்குச் சமயவுலகமே நன்றிக் கடப்பாடுடையது. தம்மால் உருவாக்கப்பட்ட சிலைகளால் பெரும் புகழ் படைத்துள்ள சிற்பியரும், தமக்குக் கலைத் திறனுண்டாக்கிய பெரியவர்களுக்கும், முன்னையோர் உண்டாக்கித் தந்த தியான மந்திரங்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையவர்கள்.

எவ்வளவுதான் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும் தியான மந்திரங்களும் சிற்பியர்களுக்குத் துணை நின்றாலும், அவர்கள் சில தெய்வத் திருமேனிகளை வடித்தெடுக்கையில், தம்மை இறைநலத் துடன் ஒன்றுவித்துக் கொண்டு உயரிய கற்பனைத் திறத்தால் மிகச் சிறந்த சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.

என்கண் முருகன், எட்டுக்குடி வேலவன், சிக்கல் சிங்கார வேலன் ஆகிய தெய்வநலத் திருமேனிகள் மூன்றும் ஒரே சிற்பியால் உருவாக்கப்பட்டவை என்ற செவிவழிச் செய்தி உண்டு. மூன்று திருமேனிகளையும் உற்று நோக்கினால் சிற்சில நுண்ணிய வேறு பாடுகளைக் காணலாம்.

பாடல் பெற்ற சிவாலயங்களில் கருவறையிலுள்ள மூலவர் பெரும்பாலும் சிவலிங்கமாகவே அமைந்திருக்கும்; அவற்றுள் சுயம்பு மூர்த்திகள் எனச் சிலவற்றை அருளாளர்கள் கூறுவர். ஏனைய பல சிவலிங்கங்களைக் காண்கையில், சிற்பியரின் கைவினைத்

திறத்திற்கேற்ப மாறுபாடு சிற்சில நுண்கூறுகளாக அமைவது இயல்பே.

பெருங்கோயில்களில், நடராசர் சிலை, ஆலமர் செல்வன் சிலை, வடக்கு நோக்கிக் காட்சியருளும் துர்க்கையம்மன் சிலை, தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் சண்டேசுவரர் சிலை ஆகியவற்றை ஊன்றி நோக்கினால், சிற்பியரின் கைவினைத் திறத்திற்கேற்பச் சிற்சில மாறுபாட்டுக் கூறுகள் சிலையமைப்பில் இருக்கத்தான் செய்யும். மேலும், பரிவார தேவதைகளின் சிலையமைப்பிலும் சிற்பியரின் செய்வினைத் திறம் ஓரளவு மாறுபட்டிருப்பது இயல்பே. எனவே, இவற்றையெல்லாம் நுணுகி ஆராய்ந்தாலும் அவற்றை எஞ்சுதலின்றி, விளக்கிக் கூறுவதென்பது இயலாது. ஆதலின், இயன்ற அளவில் மனங்கொள்ளத் தக்க - மிக முக்கியமான - சில சிற்பப் படைப்புக்களை மட்டும் புலப்படுத்தும் முயற்சியே இந் நூலில் மேற்கொள்ளப்படும்.

மேலும், நாட்டில் நிலவும் இருவகை வழிபாடுகளை - குல தெய்வம், கிராம எல்லைத் தெய்வம் முதலியவற்றை வழிபடும் சிறு தெய்வ வழிபாடு (Little tradition of village deities), ஆகம விதிப்படி, கடவுள் மங்கலம் செய்யப் பெற்ற சிவன், திருமால், முருகன், காமாட்சி முதலிய பெருந் திருமேனிகளின் வழிபாடு (Great tradition of highly celebrated gods) ஆகியவற்றை - மனத்திற் கொண்டு பல நுண்குறிப்புகளைத் தரும் முயற்சியும் இந்நூலில் காணலாம்.

2. சிற்பம் உருவாக்கப் பயன்படும் பொருள்கள்

கல்லே சிற்பம் உருவாக்க அடிப்படைத் தேவையான பொருள்; எனினும், கல்லிலும் பல வகைகள் உண்டு. தென்னாட்டிலே பெரும்பாலும் கருங்கல்லே சிற்பக் கலைக்குத் தேவைப்படும். வட இந்தியாவில் ஒரு வகைச் சலவைக் கல்லே சிற்பத்திற்குத் தேவைப் படும்.

கருங்கல்லிலும் சில நிலப் பகுதிகளுக்கேற்ப நிறத்தாலும் திண்மை-மென்மைகளாலும் சில வகைகள் உள்ளன. கருநாடக நாட்டில் பேலூர், ஹளபீடு ஆகிய ஊர்களில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களிலும் சிலைகளிலும் பயன்படுத்தப்பட்ட கற்கள் நயத் தன்மை கொண்டவை; ஆதலால், உலோகங்களில் சிற்ப - சித்திர வேலைப்பாடுகளைச் செய்வது போலச் சிற்பியர் அவ்வாலயங் களில் செய்துள்ளனர். தமிழ் நாட்டில் ஓரளவு பச்சை நிறங் கலந்த

கற்களும், சிவந்த ரேகையுள்ள கற்களும் கிடைக்கின்றன; அவற்றையும் சிற்பக் கலைக்குத் தேவையான நிலையில் பயன்படுத்திக் கொள்கின்றனர். தெய்வச் சிலைகளைச் செதுக்க நினைக்குஞ் சிற்பியர், சில தேர்ந்த மலைகளுக்குச் சென்றே கல் கொண்டு வருவர் என்பது நடைமுறைச் செய்தியாகும்.

பொதுவாகச் சிற்பப் படிமப் பொருள்களாகத் தேர்வு செய்கையில், களிமண், சுடுமண் *(செங்கல்)*, மாக்கல், சுதை, கண்ட சருக்கரை *(ஒரு வகைச் சுக்கான் அல்லது கலவைப் பொருள்)*, மரம், உலோகம், தந்தம், மாட்டுக் கொம்பு, வண்ணம், படிகம், இரத்தினம், மெழுகு, நவபாஷாணம், கடல் நுரை, கட்டளைக்கல் முதலியவை இடம் பெறுகின்றன. இவற்றுள் பெரும்பாலான பொருள்களைச் சமணப் புலவர் திவாகர முனிவர்

''கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன''

எனக் கூறியுள்ளதையும் நினைவிற் கொள்ளலாம். அறிவியலுலகத்தில் சிற்பத் தொழிற்குரிய பொருள்களாக அரக்கு, கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், தக்கை முதலிய பலவும் பயன்படுகின்றன. அரிசி முதலிய தானியங்களிலும் சிற்பத் திறமையினைக் காட்டி வருகின்றனர்; எனினும், முற்கூறப்பட்ட பத்துப் பொருள்களுக்குள் மதிப்பும் சிறப்பும் உயர்ந்தவையாகும். வடநாட்டைப் பொறுத்த வரையில் ஒருகைச் சலவைக் கல்லில் சிற்பங்களை உருவாக்கி வருகின்றனர்.

மேலும், கண்டசருக்கரையைப் போன்று வேதியியற் கலவை முறையில் சித்தர்களால் உருவாக்கப்பட்ட நவ பாஷாணத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. நவ பாஷாணச் சிற்பம் பற்றிப் பின்னர்க் கூறப்படும்.

2.1 சிற்பப் பொருள் காரணமாகவும் உருவ அமைப்புக் காரணமாகவும் அமைந்துள்ள சிற்ப வகைகள்

கண்ணுக்குப் புலப்படும் உருவங்களையோ கற்பனையால் தம் மனத்தகத்தே தோன்றும் உருவங்களையோ சிற்பி, பலர்க்கும் புலப்படும்படி அழகிய சிலைகளாக வடிக்கிறான்; அவன் மனத் திரையில் இடங்கொண்ட உருவங்களைச் சிலைகளாக உருவாக்குகையில்

வகைப்படுத்திக் கொள்கிறான். இது குறித்து ஆராய்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார், *1.* உருவம் முழுமையும் தனியாகக் காட்டும் சிற்பம் ஒரு வகை. தனிப்பட்ட உருவங்கள் இவ்வகையைச் சேர்ந் தவை. தனிப்பட்ட தெய்வ உருவங்கள், மனித உருவங்கள், பிற உயிர்களின் உருவங்கள் முதலியன இவ்வகையில் அடங்கும். 2. உருவத்தில் ஒரு பக்கத் தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பம் புடைப்புச் சிற்பம் எனப்படும். இது மற்றொரு வகைச் சிற்பம். இவ்வகைச் சிற்பத்தில் உருவம் பின்னணியுடன் சேர்ந்திருக்கும். புடைப்புச் சிற்பங்கள் உயர்ந்தும் இருக்கும்; தாழ்ந்தும் இருக்கும். உயர்ந்து இருப்பது உயர் புடைப்புச் சிற்பம் எனவும், தாழ்ந்து இருப்பது தாழ் புடைப்புச் சிற்பம் எனவும் பெயர் பெறும். புடைப்புச் சிற்பத்தில் உருவம் மேற்பரப்பினும் உயரமாக வெளிப்பட்டு நிற்கும். *3.* மேற்பரப்பைக் குடைந்து அம்மேற்பரப்பினும் தாழ்ந்து இருக்கும்படி உருவத்தை அமைப்பது குடைவுச் சிற்பம் எனப்படும். நாணயங்கள், இலச்சினைகள், மணிகள், போன்றவை குடைவுச் சிற்பங்களாக அமைந்துள்ளதைக் காணலாம்''[1] என்று விளக்கிச் செல்வதைக் கொண்டு சிற்ப வகைகளைத் தேர்ந்து சிந்திக்கலாம்.

அமைப்பு நோக்கில் வகைமை இருத்தல் போலவே, சிற்பங் களின் பயன் நோக்கிலும் பாகுபாடு உண்டு. இதனையும் அவரே எழுதுகையில், *1.* ''ஒரு கட்டடத்தை அழகு செய்ய அதன் பகுதியாக அமைக்கப்படுவதை அலங்காரச் சிற்பம் எனலாம். கோவில் தூண் களிலும் அரண்மனைத் தூண்களிலும், சுவர்களிலும் அமைக்கப் பெறும் புடைப்புச் சிற்பங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. 2. தனித்து நிற்கக் கூடிய சிற்பம் மற்றொரு வகை. வீரர் பொருட்டு நடப்படும் வீரக் கற்கள், மன்னர், புலவர், கலைஞர், அரசியல் உயர் அலுவலர் போன்றவை நினைவுச் சின்னச் சிற்பங்கள். *3.* ஒருவரது உருவத்தை உள்ளவாறு காட்டுவது உருவச் சிற்பம் எனப் பெயர் பெறும்''[2] என்று விளக்கிச் செல்வது கொண்டு, சிற்பங்களைக் காண்கையில் இனம் பிரித்து உணர்ந்து கொள்ளத் துணை நிற்கும்.

இவ்வாறெல்லாம் வகைப்படுத்துவது ஒருபுறமிருக்க, வனப்பு மிகு சிற்பம் அமைக்க முதற்காரணமாக விளங்கும் கல், மரம், தந்தம் முதலிய பொருள்களின் பெயராலும் வகைப்படுத்திக் காணலாம்.

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, மார்ச்சு 1967. பக். 291

2. மேலது

2.1.1 சுதைச் சிற்பங்கள்

கருங்கல், சலவைக் கல், செம்பு முதலிய உலோகங்கள், தந்தம், மண், மரம், நவபாஷாணம், கண்டசர்க்கரை முதலிய சிற்பங்களை அமைப்பதற்கு மூலப் பொருள்களே; எனினும், சுதையாகிய சுண்ணாம்பும் மூலப் பொருளாக அமைந்து தமிழ் நாட்டில் பல சுதைச் சிற்பங்கள் உருவாகக் காரணமாயிருந்துள்ளது. மிகத் தொன்மையான காலத்திலேயே சுதைச் சிற்பங்கள் வழக்கில் இருந்துள்ளமை பற்றிச் சங்க இலக்கியங்களிலும் சான்றுகள் உண்டு.

மாட மதுரைப் பெருநகரத் தெரு ஒன்றிலே சில நிலைகளையுடைய அழகிய மாடம் இருந்தது. அந்த மாடத்திலே பல சுதையுருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் வேங்கைப் புலியுருவம் மிகச் சிறந்த கலைத் திறனுடன் அமைந்திருந்தது; அஃது உயிருள்ள உருவம் போலவே இருந்தமையால், அவ்வழி சென்ற ஒரு பெண் யானை அதனைக் கண்டு மெய்யான வேங்கையாகவே கொண்டு அச்சங் கொண்டது; பாகனுக்கு அடங்காமல் அஃது அலையத் தொடங்கியதாம். இதனைப் பரிபாடலில்,

"... ... ... மடப்பிடி
அன்ன மனையாரோ டாயா நடைக்கரிமேல்
சென்மன மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்
கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற்றுச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதர" (10:43-48)

என வரும் அடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

சங்க கால மக்கள் மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரிலும் தாம் கருதிய தெய்வங்களை அமைத்தனர் என்பதும், அந்த இடங்களை விட்டுத் தெய்வங்களும் நீங்காதிருந்தன என்பதும் மணிமேகலையால் அறியலாகும்; இதனை,

"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க"[1]

என வரும் அடிகளால் அறியலாம். ஈண்டுக் குறிப்பிடப்படுவது சுதைச் சிற்பம் என்பது கருதத் தக்கது. மேலும், மணிமேகலையில் பூம்புகார் பற்றிய வருணனை காணப்படுகிறது; அதுவும் சுதைச் சிற்ப நோக்கில் சிந்திக்கத் தக்கது.

1. மணிமேகலை, 21:125-128

பூம்புகார் நகரத் தெருக்களில் செங்கற்களால் கட்டப்பட்ட உயர்ந்த மாடங்கள் உள்ளன. அம்மாடங்களில் தேவர் முதலாகப் பல உயிர்களைச் சிற்பாசாரியர் சுதைவேலைப்பாட்டுடன் அமைத்துள்ளனர். பூம்புகாரைக் காண வந்த புதிய மக்கள், கண்கவர் நிலையிலுள்ள சுதைச் சிற்பங்களைக் கண்டு வியந்து களிப்புறுகின்றனராம்! இதனை,

''வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு பருவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநர்''[1]

என மணிமேகலை வருணித்துச் செல்கிறது.

பல்லவ மன்னர்கள் காலத்திலிருந்தே கற்கோயில்கள் கட்டப் பட்டு வந்துள்ளன என்பது வரலாற்றால் அறியலாகும் செய்தியாகும். சிலப்பதிகாரக் காலத்தே செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டே அரண்மனையும், கோயில்களும், தெய்வத் திருமேனிகளும் ஆக்கப் பட்டிருக்கலாம் என்பது பொதுவான கருத்து. இந்நோக்கில், சிலப் பதிகாரம் - இந்திர விழவூரெடுத்த காதையில்,

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்'' (169-173)

என வரும் அடிகள் ஆராய்தற்குரியவையாகும்.

பெரும்பாலும், ஆலயக் கோபுரங்களில் நுழைவாயில் மாடத்தைத் தவிரவுள்ள எல்லாக் கட்டமைப்புக்களும் சுதையினாலேயே அமைக்கப் பெற்றிருத்தல் கூடும். கருவறைக்கு மேலேயுள்ள விமானங்களும் சுதையினாலேயே அமைதலை இக்காலத்தும் கண்டு கொள்ளலாம். எனினும், புறனடைப் போலச் சோழ மன்னர்கள் காலத்திய தஞ்சைப் பெரிய கோயில் போன்ற மிகச் சில இடங்களில் விமானங்கள் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளன.

1. மணிமேகலை, 3:126-131

பொதுவாகக் கோபுரங்களும் விமானங்களும், புராண இதிகாச நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் வகையில் சுதைச் சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றன; அவற்றைக் கண்ணுறும் மக்கள் சமய ஈடுபாடு கொள்வதால், வழிபாடு சிறப்பதற்கு மேலும் ஊக்கம் உண்டாகிறது.

தமிழ் நாடெங்கும் பல கோயில்களிலும் விமானங்களிலும் சுதைச் சிற்பங்கள் பலவாக அணி செய்கின்றன. எனினும், பல்லவர் காலத்திய திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலும், சோழர் முதலிய மன்னர் பலரின் திருப்பணிகளைக் கொண்ட கும்பகோணம் சாரங்க பாணி சுவாமி கோயிலும் பாண்டிய மன்னர் நாயக்க மன்னர் முதலி யோர் பலரின் திருப்பணிகளைக் கொண்ட மதுரைக் கோயில் கோபுரங்களும் விமானங்களும், மன்னர் பலரால் அமைக்கப்பட்ட திருவரங்கம் கோபுரங்களும் விமானங்களும் சுதைச் சிற்ப நேர்த்திக்கு எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளலாம்.

பொதுவாக, ஆலயக் கோபுரங்களும் விமானங்களும் தெய்வ உருவங்களைத் தாங்கியிருப்பினும், அவற்றிற்கு அபிடேகமோ முறையான பூசை வழிபாடுகளோ நிகழ்த்துவதில்லை. ஆனால், கருவறையில் அமைந்துள்ள சுதைச் சிற்பத் திருமேனிகளுக்கு முறையான வழிபாடுகள் உண்டு; ஆனால், அபிடேகம் கிடையாது. அதற்குப் பதிலாகத் தைலக் காப்போ, புனுகுச் சட்டப் பூச்சோ புரிந்து வருகின்றனர் என்பது நினைவிற் கொள்ளத் தக்க குறிப்பாகும்.

புராண நிகழ்ச்சிகளைச் சுதைச் சிற்பமாக அமைத்திட்ட ஆலய மண்டபங்களும், உட்புறச் சுவர்களும் சில பெருங்கோயில்களில் உள்ளன. எடுத்துக்காட்டாக, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய மண்டபங்கள் பலவற்றிலும், திருவிடைமருதூர் மகாலிங்கேசுவரர் ஆலயத்தின் உட்புறத்திலும் புராணத் தொடர்புடைய சுதைச் சிற்பங் களைக் காணலாம். வரலாற்றில் இன்று காணக் கிடைக்கக் கூடிய பழைய சுதைச் சிற்பங்களாகப் பல்லவர் காலத்துத் திருவதிகைப் பெருங்கோயிலைச் சிறப்பாகச் சிந்திக்கலாம்.

இக்கோயிலின் அடிப்பகுதி கருங்கல்லாலும் கருவறையின் சுவர்கள் செங்கல்லாலும் அமைக்கப்பட்டு, இவற்றின் வெளிப்புறங்கள் அனைத்தும் புராணத் தொடர்புடன் கூடிய சுதைச் சிற்பங்கள் அணி செய்கின்றன. கல்வெட்டு ஆதாரத்தைக் கொண்டு, பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மன் காலத்தில் கலைமரபுடன் இக்கோயிற் கலைச் செல்வங்கள் புதுப்பிக்கப்பட்டமை தெரிய வருகின்றது.

எப்படியோ பல்லவர் காலத்துச் சுதைச் சிற்ப முறையை வளர்க்கும் நிலையில், பாண்டியர்களும் சோழர்களும் விசய நகரப் பேரரசர்களும் நாயக்க மன்னர்களும் மராட்டிய மன்னர்களும் பெருங்கோயில்களில் கோபுரம், விமானம், மண்டபம் முதலிய பகுதிகளிலே தம் கலைத் தொண்டு புரிந்துள்ளனர். இவ்வாறான மதுரை மீனாட்சியம்மன் கோபுரங்களும், பாடல் பெற்ற பிற பெருங்கோயிற் கோபுரங்களும் விமானங்களும் காணத் தக்கவை; அவற்றின் விவரங்கள் விரிக்கிற் பெருகும். எனினும், ஆராய்ச்சி நோக்கில் குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், ''மராட்டிய மன்னர்கள் கட்டுவித்த திருக்கோயில்கள், மண்டபங்கள், சத்திரங்கள் பெரும்பாலும் கருங்கற் கட்டுமானமாய் அமையாமல், செங்கல் சுண்ணாம்புக் கட்டுமானமாய் அமைந் துள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்க சிறப்புகளுடன் திகழ்வன தஞ்சை அரண்மனை தர்பார் மண்டபம், வெண்ணாற்றங்கரை சந்தியா மண்டபம், ஒரத்த நாடு ராஜா மடம், நீடாமங்கலம் போன்ற இடங் களில் உள்ள சத்திரங்கள், தஞ்சைப் பெரிய கோயில் அம்மன் மண்டப வேலைப்பாடுகள், சாளுவ நாயக்கன் பட்டினம் உப்பரிகை, மாயூரம் துலா மண்டபம், தஞ்சபுரீசுவரர் கோயில் பிரசன்ன வேங்கடப் பெருமாள் கோயில், தளிகேசுவரர் கோயில் போன்றவையாகும்.

தஞ்சை அரண்மனை தர்பார் மண்டபத்திலுள்ள சுதைச் சிற்பங் களில் திருமாலின் பத்து அவதாரக் காட்சிகள், சிவன், திருமால், முருகன் இவர்களுடைய திருமணக் காட்சிகள், நாட்டியப் பெண்கள் போன்றவை சிறப்புடையன''[1] எனத் தரும் குறிப்புகள் மிகவும் சிந்திக்கத் தக்கவை.

மிகச் சிறந்த சுதைச் சிற்பப் படைப்புகளுள் ஒன்றாகத் திருவிடந்தை *(சென்னைக்கு அருகிலுள்ள திருமால் தலம்)* மூலவர் சிலையைக் கூறலாம். சங்கு, சக்கரம் தரித்த வராக மூர்த்தி கீழே இடக்கரத்தில் நில மகளின் பாதத்தைத் தாங்கியும், வலக்கை தாயாரை அணைத்தும் காணப்படுகிறார். அவரது இடப் பக்கத் திருவடி ஆதிசேடன் தலைமீதும் உள்ளது. அருகில் ஆதிசேடனின் மனைவி வாசுகியும் காணப்படுகிறாள். வராக சுவாமியின் முகம் தேவியை நோக்கியுள்ளது. இவருக்குத் தைலக் காப்பு இட்டே பூசை புரிகின்றனர்.

---

1. கல்கி தீபாவளி மலர், 2000, பக். 74

2.1.2 உலோகத் திருமேனிகளும், படிமங்களும், கலை நோக்குக் கூறுகள்

பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் சிற்பப் படைப்புக்களை வார்த்தெடுக்கும் கலை, பண்டைக் காலத்தி லிருந்து தொடங்கியிருந்தாலும், பல்லவர் காலத்தில் பெரிதும் அறிமுகப்படுத்தப்பட்டுச் சோழ மன்னர் காலத்தில் வியத்தகு பொற் காலத்தைக் கண்டுள்ளது.

தூய பொன்னால் *(தங்கத்தால்)* சிலை வடிக்கப் பெறினும், அது போதிய அளவில் தமிழ் நாட்டில் பாதுகாப்பினைப் பெறுவ தில்லை. வரலாற்று நோக்கில், ஓர் எடுத்துக் காட்டினைக் காண்போம்.

காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில், தங்கத்தால் உருவாக்கப் பட்ட உற்சவர் 'பங்காரு காமாட்சி' எனும் பெயரில் இருந்து வந்தது. அந்தக் காமாட்சிச் சிலையை, மைசூரிலிருந்து அரசாண்ட ஹைதர் அலி கைப்பற்றிச் செல்ல முயன்றபோது, தஞ்சை நாயக்க மன்னர்கள் தந்திரமாகக் கொண்டு பத்திரப்படுத்தி வைத்திருந்தனர். அந்தச் சிலையைக் காஞ்சி காமாட்சி கோயிலுக்குத் திருப்பித் தரவில்லை. தஞ்சையிலே தங்கிய நிலையில் காமாட்சியை, இன்றும் 'பங்காரு காமாட்சியம்மன் கோயில்' என்று அழைக்கும் ஆலயத்தில் சேர்ப் பித்தனர் என்பர்; தங்கத்தாலான உற்சவர் இருக்குமிடம் சரியாகத் தெரியவில்லை.

வார்த்தெடுக்கும் தெய்வச் சிலைகள் *(உற்சவர்கள்)*, திருவிழாக் காலத்தில் வீதியுலா வருவதற்கு வசதியாக அமைந்தன. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் தமிழகத்தில் கோயில்கள் நிரம்ப அமைக்கப்பட்டமையால், அங்குள்ள மூலவருக்கேற்பச் செப்புத் திருமேனிகளை வார்த்தெடுக்க வேண்டிய - வடிக்க வேண்டிய - சூழ்நிலை; காலத்தின் கட்டாயமாயிற்று.

கோயில்களின் வழிபாட்டிற்குரிய திருவுருவங்களை உண்டாக்கத் தமிழர்கள் கல்லைக் காட்டிலும் பஞ்ச லோகத்தைப் பெரிதும் விரும்பினார்கள். தென்னிந்தியாவில் சிறப்பாகச் சோழப் பேரரசின் ஆட்சியின் போது உலோகத்தில் *(செம்பில்)* சிறந்த கலைப் படைப் புக்கள் எழுந்தன. உலகம் முழுவதிலும் செப்புத் திருமேனிகளை வடிப்பதில் இக்கலை வினைகளை விஞ்சியவர்களைக் காண்பது அரிது. தென்னிந்தியச் செப்புச் சிலைகள் பல அளவுகளில் பெரி யவைகளாயும் சிறியவைகளாயும் உள. மிகச் சிறந்த கலை வண்ணம் நிரம்பி வழியும் சிலைகள் பெரியவையாகவும் கனமாயும் இருக்

கின்றன. அவை நிற்கும் - அமர்ந்திருக்கும் - பீடங்களில் உலா வருவதற்கேற்ற வகையில் கயிற்றால் கட்டித் தூக்கிச் செல்ல எளிதாயிருக்கும்படி ஓட்டைகள் இடப்பட்டு இருக்கும்.

அறிஞர் ஏ.எல். பாஷம் சிற்பத் திருமேனிகள் பற்றி ஆராய்ந்து எழுதுகையில், ''அணிகள் பூண்டும் அழகுபடுத்தப்பட்டும் இருந்தாலும் தென்னிந்திய உலோகக் கலையின் சிறந்த படைப்புக்கள் அளக்க முடியா எழிலும் எளிமையும் கொண்டவை. தசைகளைக் கொண்ட பல பிரிவுகள் வெறும் உடம்பாய்க் காட்டப்பட்டிருப்பது இவைகளில் காணப்படும் சிறந்த அம்சமாகும். உடலுறுப்புத் தோற்றங்களும், முகம் பிற உறுப்புக்களில் காணப்படும் மேடு பள்ளங்களும் - ஒரு குறிக்கோளைக் கொண்டனவாய் - அளவு முறைகளில் நூலாசிரியர் வகுத்த விதிகளுக்குட்பட்டனவாய்த் - தொன்றுதொட்டு வழிவழி வந்து நிறைந்தனவாய் அமைந்தன. இத்தகைய விதிகளுக்குக் கட்டுப்பட்டும் தமிழகக் கலைஞர்கள் - வினைஞர்கள் - பேரெழில் வாய்ந்தனவாயும் குறிப்பிடத்தக்க தனித்துவம் (individuality) உள்ளனவாயும் ஆகிய கலைப் படைப்புக்களை அளித்துப் பெரும் வெற்றி பெற்றார்கள். ஆண், பெண் தெய்வங்களின் உருவங்கள் மட்டுமின்றித் தமிழ்க் கலைவினைஞர்கள் இறைவனடியார் திருவுருவங்கள் பலவற்றையும், தெய்விகத் திருவுடை மன்னர்களுடையவும், அரசியர்களுடையவும் உருவங்களையும் தம் கைவண்ணத்தால் உண்டாக்கினார்கள். இத்திருவுருவங்கள் முழுமுதற் கடவுளை யொட்டிச் சுற்றிலும் வைக்கப்பட்டன''[1] என்று கலை நுட்பத்துடன் குறிப்பிடுவதையும் போற்றிச் சிந்திக்கலாம்.

உலகியலில் மின்சாரம் ஊடுருவிப் பயனளிக்கச் செப்புக் கம்பிகள் பயன்படுவதேபோல, அருளியலில் இறைவனிடம் செலுத்தக் கூடிய பக்தி - ஞான மின்சாரம் சென்று சேர்வதற்குச் செப்புப் படிமங்கள் வாயிலாக அமைந்துள்ளன எனக் கொள்ளலாம்.

பஞ்சலோகச் சிலைகள் வடிப்பதில் ஸ்தபதிகள் *(சிற்பியர்)* நாட்டம் மிகுத்தனர். அவ்வாற்றான் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், பித்தளை அல்லது அலுமினியம் ஆகியவை பஞ்ச லோகக் கலவைக்குப் பயன்பட்டன. ஒவ்வொன்றிலும் அளவு கணக்கிட்டு உலோகங்களைச் சேர்ப்பினும் தங்கம் மிகுதியாகச் சேர்க்கும்போது,

1. The wonder that was India, Fontana Books, p. 377 and K.C. Kamaliah, *தமிழக நுண்கலைகள் பக். 95-96.*

சிலைகள், மிகப் பளபளப்பாய் அமையும் என்று கண்டனர். திருவேட்டக்குடி *(காரைக்கால் அருகிலுள்ளது)* இறைவன் திரு மேனியினை வார்த்தெடுக்க உலோகக் கலவையை உருக்குகையில், பக்தி நாட்டமுடைய நகரத்தாரினப் பெண்மணி, தன் கழுத்தில் அணிந்திருந்த பொற்காசு மாலையைக் கழற்றிக் கலவையில் சேர்த்துள்ளார்;[1] எனவே, வில்லேந்திய சிவன் திருமேனி பொன் மேனியுடன் பொலிவாக இருத்தலைக் காணலாம்.

சிவபெருமான், திருமால், விநாயகர், முருகன், சக்தி, சூரியன் ஆகிய தெய்வங்கள் தொடர்பாகவும், அடியார்கள், அருளாளர்கள், அரசியல் தலைவர்கள், சமுதாயச் சிற்பிகள் முதலியோர் தொடர்பாக வும் அமைந்துள்ள சிலைகள் உலோகத் திருமேனிகள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. எனினும், சிற்பியர் கை வண்ணத்திற்கேற்ப ஒரே உருவம் செய்வதிலும் சிற்சில நுணுக்க வேறுபாடுகள் இருக்கத் தான் செய்யும்.

எடுத்துக்காட்டாக, நடராசர் சிலைகள் பல சிவாலயங்களில் அமைந்திருப்பினும், அவற்றுக்குள்ளே அமைந்துள்ள சிற்சில மாற்றங்களையும் நுணுக்கங்களையும் நன்கு புலப்படுத்தியுள்ளார் மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய 'ஆடல் வல்லான்' எனும் நூலில். திருவாவடுதுறை ஆதீனம் 'ஆடல் வல்லானே' யல்லாமல் பல மூர்த்திகளைப் பற்றிய நூல்களை அறிஞர்களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டு வருவது சமயத்துக்கும் கலைக்கும் புரிந்திடும் தொண்டேயாகும்.

செப்புத் திருமேனிகளை வீதியுலா நோக்கில் அலங்கரித்து எடுத்துச் செல்லும் நோக்கில் வடித்தெடுப்பர்; அவற்றைச் 'சலம் அமைப்புச் சிலைகள்' என்பர். அத்தகைய செப்புத் திருமேனிகளை (bronzes) நால்வகைக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவர்; அவை யாவன: 1. அருச்சனை செய்ய - கந்துகபேரம். 2. திருவிழாவில் உலா நோக்கில் எடுத்துச் செல்ல - உற்சவ பேரம். 3. பரிவார தேவதை களுக்குப் பலியிட ஸ்ரீ பலி - பலி பேரம் 4. அபிடேகத்திற்கு *(திருமஞ் சனத்திற்கு)* எழுந்தருள - ஸ்நபனபேரம்

கால அடிப்படையில் 'செப்புத் திருமேனிகள்' பற்றிப் பலரும் ஆராய்ச்சி புரிந்திடினும், சில தெளிவான முடிவுகளைக் காண்பது சிரமமாகவே உள்ளது.

1. செவிவழிச் செய்தியாக நூலாசிரியர் நேரில் கேட்டது.

''பல்லவர்கள் கற்சிலைகளை அமைக்கலாயினர்; அவர்கள் காலத்திலேயே பஞ்ச லோகத்திலும் சிலைகள் தோன்றின என்பர். மயிலை சீனி. வேங்கடசாமி *(தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், 1969, பக். 47)* ஆயின், பஞ்சலோகத்தினால் செய்த படிமங்களைக் குறித்துக் காலத்தைக் கணக்கிடச் சிற்சில சமயங்களில் அவை இருக்கும் கோயில்களில் உள்ள கல்வெட்டுக் குறிப்புகளைக் கொண்டு ஒருவாறு உணர இயலுமேயன்றித் தென்னிந்தியச் செப்புப் படிமங் களின் காலத்தை வரையறுப்பது மனம் போன போக்காகவே உள்ளது என்று ஹேடவே கூறியுள்ளார்''[1] என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார் மே.ச. இராமசாமி.

அனைத்துலக நாட்டத்தைப் பெறும் வகையில் தமிழகத்தில் *(சுவாமிமலை போன்ற மிகச் சில ஊர்களில்)* ஸ்தபதிகள் வார்த்தெடுக்கும் செப்புத் திருமேனிகள் சிற்ப நூல் விதிப்படி அமைந்து நேர்த்தியாக உள்ளன. பல நூற்றாண்டுகளாகச் சோழன், இராசராசன் காலத்திலிருந்து சிற்பியர் குடும்பங்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றன. சீரிய எடுத்துக்காட்டுகளாகக் கூற வேண்டுமெனில், சிதம்பரம் பொற் சபையிலுள்ள நடராசர் சிலை, ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் மடியில் தலை வைத்துப் பள்ளிக் கொண் டிருக்கும் ரெங்க மன்னார் சிலை, தில்லை வளாகத்தில் *(திருவாரூர் மாவட்டம்)* கோதண்ட ராமசாமி கோயிலில் மூலவர்களாகவும் உற்சவர்களாகவும் விளங்கும் இராமன், இலக்குவன், சீதை ஆகிய பஞ்சலோகத் திருமேனிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறே கலைத் திறம் வாய்ந்த செப்புத் திருமேனிகள் எண் ணற்றவையாகப் பல ஆலயங்களில் உள்ளன.

சுருக்கமாகச், செப்புத் திருமேனிகளுள் காணலாகும் கலை நுணுக்கச் சிறப்பாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். பல்லவர் காலத்துக் கூரம் நடராசர், கொடுமுடி திரிபுராந்தகர், திரிபுர சுந்தரி முதலிய செப்புத் திருமேனிகள், கற்சிற்பங்களில் காணப் பெறும் அதே கலைப் பாணியுடன் அமைந்திருத்தலைக் காணலாம். சோழ மன்னர்கள் பலரும், அரசியருள் செம்பியன் மாதேவி போன்ற சிலரும் கோயில்களுக்குச் செய்தளித்த செப்புத் திருமேனிகள் *(சைவ மூர்த்தங்களும் வைணவ மூர்த்தங்களும்)*, ஆகம விதிகளுக்குட் பட்ட நிலையில் வடிக்கப்பட்டுக் கலையழகும் தெய்வ நலமும்,

1. தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, *1976, பக். 65-66*

கற்பனையிழையோடிய உயிரோட்டப் பொலிவும் கொண்டு விளங்குகின்றன. விசய நகர மன்னர் - நாயக்கர் காலச் செப்புத் திருமேனிகள், கற்சிற்பப் படைப்புகளில் காட்டப்பட்ட அளவிற்குச் சிறப்பினைக் கொண்டு அமைக்கப்படவில்லை. சென்ற நூற்றாண்டி லிருந்து சிற்பியர் உருவாக்கும் செப்புத் திருமேனிகள், சோழர்களின் பொற்காலப் படைப்புகளைப் போல எழில் மிகு தோற்றப் பொலி வுடன் படைக்கப்படுகின்றன எனக் கூறிப் பூரிப்படையலாம்.

இஃது ஒரு புறமிருக்க, மகாத்மா காந்தியடிகள், சுபாஷ் சந்திர போஸ், பண்டித சவகர்லால் நேரு, தியாகி முத்துராமலிங்கத் தேவர் போன்ற தேசத் தலைவர்கள், வள்ளல் பச்சையப்ப முதலியார், வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் போன்ற வள்ளல் பெருமக்கள், கர்ம வீரர் காமராசர், பேரறிஞர் அண்ணாதுரை, எம்.ஜி. இராமச்சந்திரன் முதலிய அரசியல் தலைவர்கள் மற்றும் பெரும் புகழ் பெற்ற நீதிபதிகள், புலவர் பெருமக்கள், மருத்துவச் சாதனையாளர்கள், பொதுநலத் தொண்டர்கள் சிலரின் செப்புச் சிலைகளும் பல ஊர்களில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய படிமங்கள் முழுவுருவத் துடனும் மார்பளவிலுமாக அமைந்துள்ளன; இவற்றையெல்லாம் வடிவமைத்து உருவாக்குகையில் நிழற் படங்கள் உதவியாக அமையும். ஆகம விதிகளைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்பதை நினைவில் கொள்ளலாம்.

2.1.3 மரச் சிற்பங்கள்

தமிழ்நாட்டில் பண்டைக் காலந்தொட்டே மரச் சிற்பக் கலை வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. உலகத்தில் மர வேலை செய்யும் தச்சுத் தொழிலர்ளர்கள் பலராக இருப்பினும், சிலரே மிகச் சிறந்த சிற்ப நேர்த்தியுடன் கலைப்பணி புரிபவர்களாக இருந்து வரு கின்றனர்.

சிற்றூர்ப் புறங்களிலே நாள் வழிபாட்டிலும் திருவிழாக்கால வழிபாட்டிலும், மரத்தாலான தெய்வச் சிலைகள் பல போற்றப்படு தலைக் காணலாம். வீதியுலா வருவதற்கேற்ற வாகனங்களும் பெரும் பாலும் மரத்தாலானவையாக இருத்தலை இன்றும் காணலாம்.

சிறந்த கலையுள்ளங்கொண்ட மரத் தச்சர்களால் சிறந்த தெய்வச் சிலைகளை அமைக்கலாம் என்பதைக் கண்டு கொண்ட மக்கள், ஆலயங்களில் அவற்றைச் செய்து வைத்துப் போற்றிக் கொண்டாட

முற்பட்டனர். கற்சிற்பக் களஞ்சியமென விளங்கும் கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி திருக்கோயில் அமைந்துள்ள இராசகோபுரமும் சிற்ப நேர்த்தி கொண்டது. கோபுரத்தின் வெளிப்புறம் புராண இதி காசத் தொடர்புடைய சுதைச் சிற்பங்கள் உள்ளன. ''கோபுரத்தின் முதல் தட்டின் உள்புறம் ஒரு மண்டபம் போல் அமைந்துள்ளது. மண்டபத்தைத் தாங்கி நிற்பவை வெறுந்தூண்கள் அல்ல; வீரன் நடனமாது ஆகிய உருவங்களே அமைக்கப்பட்டுள்ளன; எல்லாம் மரத்தால் ஆனவை. சுமார் மூன்றடி உயரம் இருக்கலாம். மிக மிக அழகான வடிவம். மண்டபத்தின் நாற்புறமும் மேலே வரிசை வரிசை யாக மரச் சிற்பங்கள். இவை சுமார் அரை அடி அல்லது முக்கால் அடி உயரமே ஆனாலும் மிக அற்புதமான கலை நுணுக்கம் உடை யவை''[1] என டாக்டர் பா. சௌந்தரா எழுதிச் செல்லும் குறிப்பினைக் காண்க.

சங்கரநயினார் கோயில் புலித் தேவர் அறையிலுள்ள மரச் சிற்பங்களும் மிகுந்த கலைச் சிறப்பினைக் கொண்டவையே. குமரி மாவட்டம் பத்மநாபபுரம் இராமசாமி கோயிலின் வெளிப் பிரகாரத்தில், 45 மரப் பலகைகளில் இராமாயணக் கதையை நாடக அமைப்பில் காண்பதுபோல மரச் சிற்ப வேலைப்பாட்டில் கண்டு போற்றி நிற்கலாம்.

திருக்கழுகுன்றம் தாழக் கோயிலில், அருமையான பல மரச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மலையடிவாரத்திற்கு அருகில் எட்டுத் திருக்கரங்களுடன் தலை மாலையை *(கபாலம்)* நெடு மாலையாக அணிந்த நெடிய வீரபத்திர சுவாமியின் சிற்பத்தைக் காணலாம். கொடுஞ்சீற்றத்துடன் அசுரனை வதைக்கும் காளியின் மரச் சிற்பத்தை நடராசர் சன்னதியில் காணலாம்.

இவ்வாறே உலகியலிலும் மரச் சிற்பங்கள் பலவாறாகப் பல நோக்கங்களில் படைக்கப்பட்டுள்ளன; பயன்பாட்டிலும் உள்ளன. அவை தொடர்பாகச் சிலவற்றைக் காண்போம்.

முற்காலத்தில் மன்னர்களும் வள்ளல்களும் இக்காலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தலைவர்களும் அமரக் கூடிய அரியாசனம் பெரும்பாலும் மரத்தாலான சிற்பப் படைப்பாகும்.

---

1. Heritage of the Tamils, Art and Architecture, கிருஷ்ணாபுரம் கோயில், International Institute of Tamil Studies and Research, Taramani, Chennai பக். 398.

2.1.3.1 மரத்தாலான சிலைகள்

அ) அத்திகிரிப் பெருமாள்

காஞ்சிபுரத்தில் அத்திகிரிப் பெருமாள் என்றும், வரதராசப் பெருமாள் என்றும் வழங்கப்படும் திருமால், வைணவர்கள் பெரிதும் போற்றக் கொண்டாடும் சிறப்பினைக் கொண்டவர்.

முன்னொரு காலத்தில் காஞ்சியிலே திக்கு யானைகள் *(அத்திகள்)* வந்து பெருமானை வழிபாடு செய்தமை காரணமாக, அந்தத் தெய்வ நலம் வாய்ந்த திருத்தலம் அத்திகிரி என வழங்கலாயிற்று. மேலும், இந்திரனது ஐராவதம் இங்கு வந்து, தானே மலை வடிவம் கொண்டு பெருமாளுக்குக் கைங்கரியம் புரிந்தமையால் இப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

இத்தகைய அத்திகிரிப் பெருமாளின் அளப்பரும் ஆற்றலைப் புலப்படுத்தும் வகையில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தப் பெருமாள் கோயில் திருக்குளத்தில் ஒரு மாடத்தில் வைக்கப்பட்டுள்ள அத்திமரத்தால் ஆன சிலையை எடுத்து, உரிய வழிபாடுகளுடன் திருவிழா நடத்துகின்றனர்; பிறகு, அதே திருக் குளத்தில் அந்தப் பெருமாள் சிலையை மீண்டும் நீர்ச் சூழலில் வைத்து நிறைவு காண்கின்றனர். பல்லாண்டுகளாக அந்த மரச் சிலை கெடாமலிருப்பது தெய்வத் திருவருட் பயனே என்று கொண்டாடி வருகின்றனர்.

ஆ. அத்தி மரத்தாலான ஆதி ராஜகாளியம்மன் சிலை

சிலப்பதிகாரத்தில் காணலாகும் கண்ணகியுடனும், பதினெண் சித்தர்களுள் ஒருவராகிய போகருடனும் அருள் தொடர்பு கொண்ட தெய்வமாக ஆதி ராஜகாளியம்மன் போற்றப்படுகிறாள்.

இதனைச் சிறிது விளக்கமாகக் காண்கையில், மதுரை மீதும் பாண்டிய நெடுஞ்செழியன் மீதும் கற்புடைத் தெய்வம் கண்ணகி சினந்து, மதுரையைத் தீப்பிடித்து எரியச் செய்கிறாள்; மதுராபதி தெய்வம் கண்ணகியின் முன் தோன்றி, முற்பிறப்பு வினையின் பயன் என்பதை உணர்த்துகிறது. நெருப்பு தணிந்ததும், மதுராபதி தெய்வமான மதுரைக் காளி மதுரைச் சொக்கநாதரது கட்டளைப்படி மதுரைக் கோயில் மேற்குக் கோபுர வாசலில் துயில் கொள்ளக் கூடிய வசதியைப் பெறலானாள் என்று ஒரு வகை புராணக் கூற்று உள்ளது.

சொக்கநாதரின் கட்டளைப்படி துயில் கொண்டிருந்த மதுரா பதியம்மன், சாப நிவர்த்தியாகச் சித்த புருடர் போகர் தவஞ் செய்த இடத்தில் அரூப சக்தியாக விளங்குகிறாள் என்றும் கூறுவர். அந்தப் புனித இடத்தில், 1976ஆம் ஆண்டு அத்தி மரத்தாலான ஆதி ராஜ காளியம்மன் பிரதிட்டை செய்யப்பட்டிருத்தலைக் காணலாம். இந்தச் சிலைக்கு மேலும் பெருஞ் சிறப்பை உண்டாக்கும் வகையில், செங்கோலுடன் ராஜகாளியம்மன் சிலை கருங்கல்லால் வடித் தெடுக்கப்பட்டுள்ளது. மிகச் சக்தி வாய்ந்த அம்மனாகப் பல திரு விழாக்கள் கொண்டாடி மக்கள் போற்றி வருகின்றனர்; கண்கண்ட தெய்வமாக அம்மனிடம் பல பயன்களும் பெற்று வருகின்றனர்.

இ. சந்தன மரத்தாலான மூலவர் சிலை

திருநெல்வேலியிருந்து திருச்செந்தூருக்குச் செல்லும் வழியி லுள்ள வைணவத் திருத்தலம் கருங்குளம்; இங்குள்ள ஆலயத்தில் மூலவர் சந்தன மரத்தால் மணக்குந் திருமேனியுடையவர்.

இஃது ஒருபுறமிருக்க, சென்ற நூற்றாண்டு வரையில், வள மனைகளில் அமைத்திடும் வாயில்களும் *(அருகால்களும்)* வாயிற் கதவுகளும் சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப் பட்டன. ஆலயங்களிலும் அரண்மனை முகப்பிலும் கஜலட்சுமி உருவம் அமைப்பதே போல, வளமனைகளிலும் மரத்தாலான கஜ லட்சுமி உருவம் அமைப்பதை மரபாகக் கொண்டிருந்தனர். நகரத்தார் பெருமக்கள் வாழும் வளமனைகளில் பலரும் இதனைப் பின்பற்றி வருகின்றனர்; இதனால், திருமகள் திருவருள் தம் மனைகளுக்குக் கிட்டுமென்பது நம்பிக்கை.

வளமனைகளில் பயன்படும் நிலைப் பேழைகளில் இக்காலத் திலும் சிற்ப வேலைப்பாடு கொண்டிருத்தலைக் காணலாம்; நிலைப் பேழைக் கதவுகளிலேனும் சிற்ப வேலைப்பாடு இருப்பது நல்லது எனச் சிலர் கருதுகின்றனர். படுத்துறங்கும் கட்டில்களிலும் சிற்ப வேலைப்பாடு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது என்பதையும் நினைவில் கொள்ளலாம்.

குழந்தைகள் விளையாடப் பயன்படுத்தும் பல்வகைப் பொம்மைகள், மரச் சிற்ப அமைப்பைக் கொண்டவையாக இருந்தன. அத்தகைய பொம்மைகள் நவராத்திரி விழாக் காலங்களில் கொலு வைக்கப் பயன்படுதலும் உண்டு. இதனால், தமிழ் நாட்டில் எங்கும் சிற்பக் கலை, எதிலும் சிற்பக் கலை என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தமை தெரிய வரும்.

மரச் சிற்பக் கலைக்குப் பயன்பட்ட தேக்கு மரம், நூக்க மரம், செம்மரம், ஆச்சா மரம், சந்தன மரம் ஆகியவற்றின் இடத்தை, அறிவியல் வளர்ச்சி காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட 'பிளாஸ்டிக்' (Plastic) பிடித்துக் கொண்டது.

2.1.3.2 தேர்ச் சிற்பக் கலை

ஆலயங்களில் நடைபெறும் தேர்த் திருவிழா என்பது தென்னகக் கோயிற் பண்பாட்டுடன் மிகுந்த தொடர்புடையது.

தமிழ் நாட்டிலே பாடல் பெற்ற சிறப்புத் தலங்களான திருவாரூர், சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆவுடையார் கோயில், கும்பகோணம், திருநெல்வேலி, இராமேசுவரம் முதலியவற்றில் கோயில் பெருந் திருவிழாத் தொடர்பாகத் தேரோட்டம் நடைபெற்று வருவதைப் பலரும் அறிவர்.

ஆழித் தேர்ச் சிறப்பினைக் கொண்ட திருவாரூர்த் தேர் பிற திருத்தலத் தேர்களைவிடச் சிறப்ப மாட்சி கொண்டது. தென்னகத்துத் திருவாரூர்த் தேர் விழாவைப் போல, வட நாட்டு ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பூரி நகரில் நடைபெறும் ஜகந்நாத சுவாமி கோயில் தேர்த் திருவிழாவும் மிகச் சிறப்புடையதாகும்.

வரலாற்று நோக்கில் சிந்திக்கையில், தொன்மைக் காலத்திலிருந்தே மக்களின் ஆர்வத்திற்கும் ஆன்மநல ஈடுபாட்டிற்கும் வசதிக்கும் ஏற்பக் கோயில் தேர்கள் பல்வேறு இலக்கண அமைப்பிற்கேற்பச் செய்யப்பட்டன. இரண்டு முதல் ஒன்பது சக்கரங்கள் வரை கொண்ட பல்வகைத் தேர்கள் கோயிலுக்கும் காலத்தின் தேவைக்குமேற்ப அமைந்தன. ''சக்கரங்கள் அதிகமாக ஆக அத் தேரின் பருமன், வேலைப்பாடு *(கலைத் திறன்)* முதலியவைகளும் வளர்ந்தன. இத்தனை சக்கரங்கள் கொண்ட தேர் இவ்வித வேலைக்கு இன்னவரால் செலுத்தப்பட வேண்டும் என்ற வரையறைகளும் வகுக்கப்பட்டன. மானசாரம் என்ற சிற்ப நூலில் தேரிலக்கணம் என்ற பகுதியுள்ளது''[1] என்ற குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

மாமன்னர்கள், வள்ளல்கள், வீரர்கள் முதலிய பலருக்கும் தேர் *(இரதம்)* எனும் பாண்டில் முதற்கண் தேவைப்பட்டது. ஆனால், ஆலய நோக்கில் எல்லோரையும் தானே வந்து நேரில் கண்டு அருள் சுரக்கும்

1. *கலைக் களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 468*

பாவனையில் இறைவன் வீதியுலாவாக வருகின்றான் என்று ஆலயத் தேர் அமைக்கப்பட்டது. எவ்வாறோ, சமயவுணர்வின் உந்துதலால் அருளியல் தெய்வத்திற்கு மிகச் சிறந்த சிற்ப நேர்த்தியுடன் தேர்கள் அமைக்கப்பட்டன என்பதே பொதுவாக உணர வேண்டிய செய்தியாகும். பிற்காலச் சோழர் காலத்தில் ஆலயங்களுக்கு எத்தகைய தேர்கள் செய்தளிக்கப்பட்டன என்பதைக் கண்டு கொள்வதற்கு, அக்காலத் தேர்கள் நம்மிடையே இல்லை. எனினும், விசய நகர மன்னர்களும், நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் பக்தியார்வத்தில் செய்து வைக்கப்பட்ட சில தேர்கள் கிடைக்கின்றன. அவற்றை நோக்குகையில் தேர்ச் சிற்பத் தொழிலாளர்கள் புரிந்திட்ட சிற்பத் திறன், பெரும்பாலும் புராணப் பின்னணி கொண்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பெரிய தேர்ச் சக்கரங்களுக்கேற்ப வயிரம் பாய்ந்த வலுவான மரத்தில் இருசு அமைந்திருக்கும். இருசின் மேல் பாகம் ஒன்றன் மேல் ஒன்றாகப் பல தட்டுக்கள் பொருத்தப்படும். ''ஒவ்வொரு தட்டும் சாதாரணமாக 8 முதல் 10 கோணங்கள் உள்ளதாகும். வட்டமான தட்டுள்ள தேர்கள் ஒரு சில ஊர்களில்தான் உண்டு *(உ-ம்: தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த பரகூர், சேலம் மாவட்டம் காரைமடை).* சக்கரங்களின் பருமன், எண்ணிக்கை இவைகளைப் பொறுத்து, தேரின் அளவை முழுத் தேர், முக்கால் தேர், அரைத் தேர் என்று தேர் செய்பவர்கள் வகுக்கிறார்கள்''[1] என வருங்குறிப்பு மிகவும் கலை நுணுக்கமுடையது. ஏனோ முழுத் தேரினை இலக்கணச் சிறப்புடன் செய்ய முனைவதில்லை!

தேர்த் தட்டுக்களாலான கன்மான பீடப் பரப்பின்மேல் கால்கள் நிறுத்தி, அவற்றின்மேல் கோயிலின் விமானத்தைப் போன்று சித்திரத் தையல் வேலைப்பாட்டுடன் கூடிய துணிக் கோப்பினைப் பெரும்பாலும் கூம்பமைப்பில் கட்டுகின்றனர். அடிப் பீடத்தின் கோணத்தையோ, வட்டத்தையோ பொறுத்தே விமானம் போன்ற திரைக்கோப்பும் அமைந்திருக்கும்; இதன் உச்சியில் கலசமும் கொடியும் அமைந்திருக்கும்.

தேரைப் பொறுத்தவரையில் அதன் தட்டுகளோடு கூடிய கீழ்ப் பாகமே சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த சிறப்பான பகுதியாகும். ''கடவுளின் கோயிலைப் போன்றே அமைக்கப்பட்ட தேரின் அடிப் பாகத்தில் பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க

1. கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 171

வாழ்க்கை என்னும் இவற்றைச் சித்திரிக்கும் அழகிய பல உருவங்களைக் காணலாம். பூலோக வாழ்க்கையில் அரசன் கொலுவிருத்தல் போன்ற காட்சிகளும், நடனம் செய்வது போன்ற பல துறைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் உண்டு; காமத்துப் பாலைச் சித்திரிக்கும் ஒரு சில பொம்மைகளும் இங்கு மூலை முடுக்குகளில் பொதிந்திருப்பது உண்டு *(அடுத்ததாக)* வான வாழ்க்கையைச் சித்திரிக்கும் பொம்மைகளில் கின்னரர் போன்றவை சேர்ந்தவை. *(அதற்கடுத்ததாக)* சுவர்க்க வாழ்க்கையைச் சித்திரிக்குமாறு நடராசர், விஷ்ணு, ஆறுமுகன், கணநாதன் முதலியவர்களின் உருவங்கள் இருக்கின்றன. சைவர்களின் கோயில் தேர்களில் வைணவக் கதைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் காணப்படும். இவ்வாறு நுண்கலைக்கு இருப்பிடம் போன்ற வேலைப்பாடுகள் உள்ள தேர் வேலையில் சமயப் பூசல்களின் அறிகுறிகள் இல்லாதிருப்பது கருதத் தக்கது'' என்று பி.ஆர். ஸ்ரீநிவாசன் ஆராய்ச்சி நோக்கில் எழுதிச் செல்வது சிற்பக் கலைப் பண்பாட்டு அடிப்படையில் மனங்கொள்ளத் தக்க குறிப்பாகும்.

கம்மாளரினத்தில் தேர்ச் சிற்பாசாரிகள் என்றே ஒரு பிரிவினர் உண்டு. இக்காலச் சூழலில் அவர்களுக்குப் போதிய போற்றுதல் இல்லை; எனவே, அவர்களுள் பலர் சாதாரண மரத் தச்சு வேலை செய்து பிழைப்பை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், அவர்களின் சிற்ப ஈடுபாட்டை மனத்துட் கொண்டு தமிழ்நாடு அரசு ஓரளவு நிதியொதுக்கிச் சிலருக்கேனும் ஆதரவு வழங்கி வருவது போற்றற்குரியதேயாகும்.

1.3.2.1 தேர்ச் சிற்பக் கலைமரபுகளும் நுணுக்கங்களும்

மன்னர்க்குரிய நாற்பெரும்படைகளுள் தேர்ப் படையும் ஒன்று; அனைத்துலகுக்கும் மன்னனாகிய இறைவனையும் தேரில் அமர்த்தி வலம் வரச் செய்வது விழாக்கால வழிபாடாகவே அமையலாயிற்று. ஒவ்வொரு திருத்தலத்திலுமுள்ள தேரின் அமைப்பையும் சிற்ப நுணுக்கங்களையும் விளங்க உரைப்பதென்பது எளிய செயலன்று. ஈண்டு, கோவை சிரவணபுரத் தேரமைப்பினைப் பற்றிச் சிறிது காண்போம்.

சிற்ப நூல் விதிப்படி, பொதுவாக எல்லாத் தேர்களிலும் ஐந்து பூதப்பார் தான் அமைந்திருக்கும் *(தேரின் அடிப் பாகத்தில் பாரத்தைத் தாங்கக் கூடிய குறுக்குக் கட்டை ஒவ்வொன்றும் 'பூதப் பார்' என*

அழைப்பர்). ஆனால், இத்தேரில் ஆறு பூதப்பார் பொருத்தப்பட்டிருக்கும். இதன் தனிச் சிறப்பாக 12 கோணத்தில் இதன் வடிவமைப்பு இருத்தலைக் காணலாம்.

தேரின் அடிப் பாகத்தைப் பூதங்களும், அதற்கு மேலாக ஆமையும் *(கூர்மமும்)* தாங்குவதாக அமைப்பர். அதற்கு மேலாக ஆதிசேடன் தாங்குவதாகக் கருதிப் பல சிற்பங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன; இப்பகுதிகளுக்கு மேலுள்ள பகுதியைச் சித்தூர் மட்டம் என்பர். தேரின் இப்பகுதியில் திருமுருகக் கடவுளின் குழந்தை யுருவச் சிற்பங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

வடிவங்கள்

திருமுருகன் அவதாரத்திலிருந்து பல காட்சிகளும் திருத்தேரில் அமைக்கும் நோக்கில் சிற்பியர் பணிபுரிந்துள்ளனர். சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட பொறிகளால் ஆறு குழந்தைகளைத் தோற்றுவிக்கும் காட்சியும், அம்மை ஆறு குழந்தைகளை ஒன்று சேர்க்கும் ஆறுமுகன் காட்சியும், சிவனும் பார்வதியும் இடப வாகனத்தில் எழுந்தருளிக் குழந்தையை எடுப்ப தற்காகச் செல்லும் காட்சியும், வீரபாகு, நாரதர், பிரமன் தொடர் புடைய முருகன் காட்சிகளும், மயிலூர்தியனாக முருகன் காட்சியும் சிற்பக் கலைப் படைப்பில் காணலாம்.

போர்க் கோலச் சிற்பங்கள்

சமயவுலகில் முருகன் போர்த் தெய்வமாதலின், சித்தூர் மட்டத் திற்கு மேலுள்ள பகுதியாகிய பேரூர் மட்டத்தில் கடவுளர்களின் போர்க் கோலக் காட்சிகள் பலவும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. கந்தபுராணத் தொடர்புடனமைந்த கந்தவேளின் போர்க் கோலக் காட்சிகளும், சிவன் கால சம்மார மூர்த்தியாக அமைந்து எமனை எட்டி உதைக்கும் காட்சியும், இராமாயணத் தொடர்பில் இராம-இராவணப் போர்க் காட்சியும், கண்ணன் மோகினியுருவில் வந்து பசுமாசுரனின் வஞ்சந் தொலைத்த காட்சியும், துர்க்கை மகிடா சுரனை வென்று நிற்கும் காட்சி முதலிய போர்க் காட்சிச் சிற்பங் களும் இடம் பெறும்.

இருதயப் பகுதி

தேரில் இருதயப் பகுதி மிகச் சிறப்புடையது. அதற்கு மேல் 'தூராசனம்' என்ற பகுதி அமைந்திருக்கும். இதனில் திருமுருகனைப்

போற்றிப் புகழ்ந்த அடியவர்களின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன; அஃதாவது அகத்தியர், நக்கீரர், அருணகிரிநாதர் முதலாகக் கௌமார, சைவ, வைணவ அடியார்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

தேவாசனம்

இப்பகுதிக்கு மேலுள்ள பாகம் முறையாகப் பூசை புரிவோர்க்குரியது; இதற்குத் 'தேவாசனம்' என்று பெயர். இந்த உயரிய பகுதியில் இந்திரன், யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலியோரின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

நடுநாயகமாகத் திருமுருகப் பெருமான் அமர்ந்திருக்கச் சந்தன மரத்தாலான நவரத்தின சிம்மாசனம் அமைக்கப்பட்டுள்ளது. அட்ட லட்சுமிகளின் திருவுருவங்களும் அழகுறச் செதுக்கப்பட்டிருக்கும்.

மகுடங்கள்

தேரின் சிம்மாசனப் பகுதிக்கு மேலே முழுவதும் மரத்தாலான மூன்று மகுடங்கள் அலங்கரிக்கும்.

இவ்வாறாக, இந்தத் தேரின் அமைப்பை ஓரளவு தெரிந்து கொள்வதால், சைவ வைணவ ஆலயங்களில் விழாவுக்கென அமைந்திடும் தேர்களின் அமைப்பும் தேர்ச் சிற்பங்களின் அலங்காரமும் எத்தகைய சிற்பக் கலைப் படைப்புக்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம் *(இக்கட்டுரை, ஆலயச் சார்பில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது).*

இஃது ஒரு புறமிருக்க மரத் தேர்களைச் சிறு அளவில் முழு வடிவினவாகவே சிற்ப வேலைப்பாட்டுடன் செய்து, அவற்றின் மீது வெள்ளித் தகடுகளை *(நகாசு வேலைப்பாட்டுடன்)* மிகப் பொருத்தமாகப் போர்த்தி, 'வெள்ளி இரதம்' என்று, முலாம் பூசிய பொன் தகடுகளைப் போர்த்தித் 'தங்க இரதம்' என்றும் சுவாமிக் கேற்ப அமைத்து, வலம்வரச் செய்கின்றனர்.

சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இவ்வகை இரதங்கள் மதுரை, சிதம்பரம், திருப்பாதிரிப் புலியூர், திருவரங்கம், பழநி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருப்பரங்குன்றம், சமயபுரம், காஞ்சிபுரம் முதலிய திருத்தலங்களில் திருவிழாக் கோலச் சிறப்புடன் வலம் வரக் காணலாம்.

2.2 தந்தச் சிற்பங்கள் - சிறப்பு நுண்கூறுகள்

மரத்தாலோ கல்லாலோ உலோகத்தாலோ சிற்பக் கலைப் படைப்பை உருவாக்குகையில், நம் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பப் பெரிய வடிவமைப்பை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால், யானைத் தந்தங்களைக் கொண்டு செதுக்கி உருவாக்கும் சிற்பங் களைத் தந்தங்களுக்கேற்றவாறுதான் அமைக்க இயலும்.

யானைத் தந்தத்தின் பயனைப் பண்டைய சங்க காலத் திலேயே தமிழ்ப் பெருமக்கள் உணர்ந்திருந்தனர் என்பதைப் பதிற்றுப் பத்தில் வரும் 'அணங்குடை மரபிற் கட்டில்', நெடுநல்வாடையில் வரும் பாண்டிமாதேவியின் கட்டில் போன்றவற்றால் தெரிந்து கொள்ளலாம்.

சேர நாடாகிய கேரள நாட்டில் யானைகள் மிகுதியாகக் காணப் படுவதால், தந்தங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன; தந்தச் சிற்ப வேலையில் ஈடுபடும் சிற்பியரும் நிரம்பவுள்ளனர்; தமிழ் நாட்டில் அந்த அளவிற்குத் தந்தச் சிற்பியரையோ, தந்தச் சிற்பப் படைப்புக் களையோ மிகுதியாகக் காணவியலாது. எனினும், அருங்காட்சி யகங்களில் தந்த வேலைப்பாடுடைய பெட்டிகள், தந்தச் சிலைகள் போன்றவற்றைக் கண்டுகளிக்கலாம்.

சில ஆலயங்களும் தந்தச் சிற்பங்களைப் போற்றும் வகையில் தம் வளாகத்தில் இடமளித்துள்ளன. எடுத்துக்காட்டாக, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலிலும், திருவரங்கம் அருள் மிகு அரங்கநாதர் கோவிலிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள வியத் தகு அருங்காட்சியகங்களில் தந்தச் சிலைகளையும் சிற்ப வேலைப் பாடுடைய பிற பொருள்களையும் கண்டுகளிக்கலாம்.

சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் சாலையில் 40 கி.மீ. தொலைவிலுள்ள வைணவ திவ்ய தேசமாகிய திருவிடந்தை *(திருவிடவெந்தை)* அருள்மிகு நித்திய கலியாணப் பெருமாள் கோயிலில் ஒரு தந்தப் பல்லக்கு உள்ளது; அதனில் திருமாலின் பத்து அவதாரங்களும் அழகுறச் செதுக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

தனிப்பட்ட சில பொருட் செல்வர்கள் இல்லங்களில் அழகுக் காட்சிக்கெனச் சில தந்தக் கலைப் பொருள்களையும், வழிபாட்டிற் கெனத் தந்தத்தாலான சிலைகளையும் பேணி வைத்திருத்தலைக் கண்டு மகிழலாம்.

2.3 கடுசர்க்கரை யோகச் சிற்பப் படைப்புகள்

சிற்பங்கள் ஆக்குவதற்குரிய மூலப் பொருள்களுள் கடு சர்க்கரை அல்லது கண்ட சர்க்கரைக் கலவையும் ஒன்றென்பது சிற்பியர் கண்ட அனுபவப் புலப்பாடு. நவபாஷாணக் கலவையைப் போலவே இதுவும் ஒருவகைக் கலவையாகும்.

கடுசர்க்கரைக் கலவை பற்றித் தி. செல்லப்பா எழுதுகையில் "காவி மண் *(செம்மண்)* ஒரு பாகம், கடுக்காய், நெல்லி, தாணிக்காய் ஆகியவை தலா ஒரு பாகம், கோழிப் பரல் *(கேரள மாநிலம் ஆலவாய், புனா, பாரத புனா பகுதிகளில் மட்டுமே உண்டு)* பத்துப் பாகம்; இவை எல்லாம் சேர்ந்து எவ்வளவு எடை உள்ளதோ அதே அளவு செஞ்சல்யம் *(சிவப்பு நிறப் பொருள்)* இவற்றை எடுத்து நன்றாகப் பொடி செய்ய வேண்டும். இந்தப் பொடியில் தேவையான அளவு நல்லெண்ணெய்யைச் சேர்த்துச் சூடாக்கினால் கிடைக்கும் கலவையே கடுசர்க்கரை எனப்படும்"[1] என விவரமாக எழுதியுள்ளார்.

இத்தகைய கலவையைக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத் திலுள்ள திருவட்டாறு எனும் திருத்தலத்தில் ஆதிகேசவப் பெருமாள் சிலை உருவாக்கப்பட்டுள்ளது; இந்தப் பெருமாள் சிலை 22 அடி உயரமுடையது. இதற்கு அடுத்த நியையில், "சுசீந்திரத்திலுள்ள திருவேங்கட விண்ணகர் எம்பெருமான் மகாவிஷ்ணு சிலையும் கடு சர்க்கரை யோகத்தால் செய்யப்பட்டது. திருவட்டாறில் சயன நிலை யிலும், சுசீந்திரத்தில் நின்ற நிலையிலும் சிலைகள் உருவாக்கப் பட்டுள்ளன"[2] என வருங் குறிப்பும் சிந்திக்கத் தக்கது.

திருவண்பரிசாரம் என்னும் தலத்திலும் கடுசர்க்கரை யோகத் தால் உருவாக்கப்பட்ட திருமால் திருமேனி அமர்ந்த கோலத்தில் உள்ளது; ஒன்பது அடி உயரமான இத்திருவுருவத்தில் நான்கு திருக் கைகள் உள்ளன; சங்கும் சக்கரமும் ஏந்தியும், அபய முத்திரை கொண்டும் பிரசன்ன மூர்த்தியாக விளங்கும் இப்பெருமானுக்கு அபிடேகம் கிடையாது என்பது சிந்திக்கத் தக்கது.

---

1. *தினமலர் - தீபாவளி மலர், 1992. பக். 446.*
2. *மேலது*

இத்தகைய கடுசர்க்கரை யோகத்தால் திருமால் திருவுருவங் களைச் செய்துள்ளனரே தவிரச் சைவத் தொடர்புடைய தெய்வங்களை உருவாக்கியதாகத் தெரியவில்லை.

2.4 மாக்கல் சிற்பங்கள் - உலகியலிலும் அருளியலிலும்

சிற்பக் கலைப் படைப்புக்களில் கருங்கல்லும் உலோகமும் *(செம்பு அல்லது ஐம்பொன்)* பயன்படும் சிறப்பினைப் போலப் பெருமளவிலும் பெருஞ்சிறப்பிலும் ஏனைய சிற்பப் பொருள்கள் பயன்படுமாறில்லை. மாக்கல்லில் உருவம் அமைக்கப்படினும் அது பொருளடர்த்தியுடன் நீண்ட காலம் நிலைக்கக் கூடியதன்று.

சலவைக்கல் வட இந்தியாவில் நிரம்பக் கிடைப்பதால் அதனையே உலகியல் தேவைக்கான பொருள்களையும், தெய்வச் சிலைகளையும் அமைத்துப் பயன் கொள்கின்றனர். ஆனால், மாக்கல் எளிய விலையில் கிடைப்பதால் அதனைத் தென்னாட்டில் பொருள்களாகச் செதுக்கி உருவாக்கிப் பயன்படுத்துகின்றனர்.

குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் முதலியவற்றை மாக்கல்லால் தயாரித்துப் பலர் பயன்படுத்தி வந்தனர்; பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்கள் (Plastic toys) தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ள நிலையில் மாக்கல் பொருள்களைப் படைப்பதில் நாட்ட மில்லாமற் போயிற்று.

எப்படியோ சிற்பக் கலைப் படைப்புக்கள் ஆலயங்களில் இடங்கொண்டன என்பதை வரலாறு கூறும்.

வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலில் காணலாகும் துவார பாலகர் சிலைகளைப் பற்றி எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை விளக்குகையில், ''வேலூர்க் கோயில் கர்ப்பக் கிரகத்தின் வெளி யிலே அதியற்புதமான துவார பாலக விக்கிரகங்கள் வாயிலின் இரண்டு புறமும் இருக்கின்றன; அவை மாக்கல்லால் ஆனவை. மிக நுட்பமாக வேலை செய்யப்பட்டுள்ளன. சிலைகள் சுமார் எட்டரை அடி உயரம் கொண்டவை. காவற் கோலம், கைகளில் சூலம் பாசங் களோடு அமைந்திருக்கிறது. ஒரு கையில் கதை ஏந்திக், காலை அதன் மேல் தூக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர். பற்கள் கோரப் பற்கள்''[1] என எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கது.

1. தென்னாட்டுக் கோயில்கள் *(முதல் பாகம்)*, பக். 104

இவ்வாறே தமிழகத்து ஆலயங்களை மிக விழிப்புடன் ஆராய்ந்து பார்த்தால், சில இடங்களிலேனும் மாக்கல் சிலைகள் கிடைக்கலாம்.

''மாமல்லபுரத்துச் சிற்பக் கல்லூரியில் பயிற்சி பெற்ற இளஞ் சிற்பி ஒருவர் மாக்கல்லினால் வியத்தகு தெய்வச் சிலைகளைச் செய்து தேசிய அளவில் 'இராஷ்டிரபதிப் பரிசு' குடியரசுத் தலைவ ரால் வழங்கப்பட்டமை கொண்டு, தமிழகச் சிற்பியின் திறம் நன்கு புலனாகும்'' என்ற குறிப்பும் மனங்கொள்ளத் தக்கது. எப்படியோ மாக்கல் சிற்பக் கலையும் தமிழகத்தின் பாரம்பரியக் கலை என்பதை நினைவிற் கொள்வது நல்லது.[1]

2.5 நவபாஷாணச் சிற்பங்கள்

பாஷாணம் எனின் நஞ்சு என்றும், கல் என்றும் பொருள்படும். நஞ்சே நாகப் பாம்பிடம் முதிர்ச்சி பெறின் மாணிக்கம் ஆகு மென்பர். அதுபோல நஞ்சாகிய விடமே தக்க முறைப்படி ஒரு கைக் கலவையாகும்போது மருத்துவப் பயன் நல்கும். இதனையே சித்த புருடர்கள் கையாண்டு உலகிற்கு நலம் தேடினர்.

வீரம், பூரம், பாதரசம், ரச கற்பூரம், இலிங்கம், மனோசிலை, கந்தகம், கார்முகில், தாழகம் ஆகிய ஒன்பதையும் ஆகம விதிப்படி சிற்பியர் விகிதக் கணக்கில் கலந்து கொண்டு, நவ பாஷாணத்தைச் சித்தப்படுத்திக் கொள்வர். பிறகு, தாம் அமைக்கவிருக்கும் தெய்வச் சிலையுருவத்தை மனத்திரையில் கண்டு கொண்டே ஒருமையுணர் வுடன் செயற்படுத்துவர். அப்படி அவர்கள் வடித்த சிலையானது ஆன்ம நலச் சிறப்பும் மருந்தாற்றலும் கொண்டு மூர்த்திகரத்துடன் விளங்கும்.

நவபாஷாணக் கலவை செய்வதென்பது உலகியலில் எளிய நிலையில் திறமை காட்டும் சிற்பியர்களால் இயலாது. பழநித் திருத்தலத்தில் போகர் எனப் பெயரிய சித்தரே தண்டாயுதபாணி - திருமேனியை நன்கு உருவாக்கினார் என்பது பலரும் அறிந்த செய்தி.

---

1. *தமிழ்ப் பண்பாட்டு வரலாறு (இரண்டாம் பாகம்).* அ.ப.க. பதிப்பு, பக். 524

திருச்செங்கோட்டில் வனப்புடன் திகழும் அர்த்த நாரீசுவரர் திருவுருவமும் சித்தர்களால் உருவாக்கிய நவபாஷாணக் கலவைச் சிற்பமே என்று தி.சு. தங்கவேலு, எஸ். லட்சுமி காந்தன், டி.சி. மணி *(திருச்செங்கோடு)* ஆகியோர் கூறுகின்றனர்.[1]

2.6 மதிப்பரிய இரத்தின *(மணி)*ச் சிற்பங்கள்

நவமணிகளுள் முத்து மட்டுமே பட்டை தீட்டாமலேயே ஒளி விடக் கூடியது. எஞ்சிய எட்டு மணிகளும், சிற்பம் அமைக்கப் பயன்படக் கூடியவை. மரகத (பச்சை) நடராசர் உத்தரகோச மங்கைத் திருத்தலத்தில் காணலாம். மரகதத்தால் ஆன சிவலிங்கத்தைத் திரு நள்ளாறில் மிகப் பாதுகாப்பாகப் போற்றி வருகின்றனர்.

மாணிக்கத்தால் - கெம்பு எனும் மணியால் ஆன சிவலிங்கம் திருவாரூர் தியாகராசப் பெருமான் ஆலயத்தில் உள்ளது.

நவமணியைப் போன்றே படிகமும் சிற்பம் உருவாக்கப் பயன்படுவதாகும். படிகலிங்கம் பல சிவாலயங்களில் பூசைக்குப் பயன்படுகின்றன. மாணிக்க வண்ணம் கலந்த படிகங்களும் உண்டு. அத்தகைய படிகத்தால் ஆன சிவலிங்கம் நாளும் பூசை செய்யத் தில்லைக் கனகசபையில் பயன்பட்டு வருதலைப் பலரும் அறிவர்.

1. ஞானபூமி *(திங்களிதழ்)*, ஆகஸ்டு 1982

இயற்கையிகந்த அமைப்பில் காணலாகும் சிற்பங்கள் (Super natural sculptures)

மண்ணகத்தும் விண்ணகத்தும் காணலாகும் - உணரலாகும் - வியத்தகும் கற்பனைப் பொருள்கள் ஏராளம்; அவற்றையும் சிற்பக் கலைஞர்கள் தாம் வடித்திடும் சிற்பங்களில் புலப்படுத்தும் முயற்சி உலகெங்கிலும் நடைபெற்றுள்ளது. எனினும், தமிழ்நாட்டுச் சிற்பியர் எந்நாட்டவர்க்கும் பிற்படாமல் இந்தக் கலைத் துறையில் பெருஞ் சாதனை புரிந்துள்ளனர் என்பது மனங் கொள்ள வேண்டிய சிறப்புக் குறிப்பாகும்.

புராணத் தொடரில் காணலாகும் தேவர்கள், பூதகணங்கள், கின்னரர், கிம்புருடர், நவக்கிரகங்கள், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர், சுகர் *(கிளி அலகுடையவர்)* முதலிய பலரும் ஒருபுறமிருக்க, உலகியலிலுள்ள அன்னப் பறவை, யாளி, ஐந்தலை நாகம் முதலிய பலவும் சிற்பக் கலையுலகில் இடம் பெறுதலைக் காணலாம். ஈண்டு உலகில் தொடர்புடைய சில பொருள்களைக் காண்போம்.

தாவரங்கள் என நம்பும் வகையில், கொடிக் கருக்கு வேலைகள் சிற்பியர்களால் அலங்கார நிமித்தம் கையாளப்படும். அவை இயற்கையிகந்த நிலையில் அமைந்திருப்பினும், காண்போர்க்கு மகிழ்ச்சியளிப்பவையாக அமைதலைக் காணலாம்.

அ. அன்னப் பறவை

நிலத்தில் நடந்தும் நீர்ப்பரப்பில் நீந்தியும் வாழ்ந்திடும் வாத்துக்களையொத்த பறவையினமாக அன்னம் கருதப்படும். அஃது உண்மையில் இருந்ததாகக் கற்பனை செய்து, பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரை ஒதுக்கி விட்டுப் பாலை மட்டும் பருகும் ஆற்றலுடையது என்றும் கவிஞர்கள் கூறுவர்; அன்னத்தைத் தூது விடுவதும் காதலர்களிடையே நிகழும் என்றும் கூறுவர். அத்தகைய பறவையைச் சிற்பியர் கற்பனையால் உருவகித்து, அதன் தோகையைக் கொடிக்கருக்கு வேலைப்பாட்டுடன் புலப்படுத்திக் காட்டுவர்.

ஆ. சிம்மம்

விலங்குகளின் அரசாகப் போற்றப்படும் சிங்கம் எனும் சிம்மம் ஆலய வளாகத்தில் தூண்களின் அடிப் பகுதியிலும் மேற் பகுதியிலுமாக அமைந்துள்ள சிற்பங்களில் கண்டு போற்றலாம். சிம்மாதனத்தைச் சிற்ப வடிவில் காட்டுகையில் கைப்பிடி முகப்பில் வைத்துக் காட்டுகையில் மானுட வலிமைக்குக் கட்டுப்பட்டதே சிம்மம் எனப் புலப்படுத்தும் உத்தியாகக் கொள்ளலாம்; அதனை வேறு வகையில் தெய்வத்திடம் வைத்துப் புலப்படுத்துகையில் சிம்மக் கால் கணபதியாகக் காட்டியுள்ளனர் *(பின்னர் இது பற்றிய விவரம் உள்ளது)*. புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாத முனிவர் சிற்பமும் இவ்வாறான நோக்கில் அமைந்ததே எனக் கொள்ளலாம்.

இ. யாளி

விசித்திரமான விலங்கின் தோற்றமாகச் சிற்பக் கலைஞர்கள் யாளியை உருவகப்படுத்தித் தம் கலைப் படைப்பில் காட்டுவர். முதலைப் பல் போன்ற பற்களுடன், சிங்க முகமும் முகத்திலிருந்து *(வாயிலிருந்து)* தொங்கும் துதிக்கை போன்ற அமைப்பும் கொண் டிருக்கும் யாளி, தன் முன்னிரண்டு கால் விரல்களின் கூரிய நகங்க ளால் பிடித்துக் கொண்டு, பின்னிரண்டு கால்களில் நிற்கும் தோற்ற முடையது. இந்த அமைப்பைக் கூர்ந்து நோக்கினால், நரசிம்ம மூர்த்தியின் கோபாக்கினியைத் தடுக்க எடுத்த ஈசனது சரப மூர்த்தி யின் திருவுருவம் ஓரளவு நினைவிற்கு வரும்.

பண்டைக் காலத்தில் எகிப்து, மெசபடோமியா, சீனா, ஜப்பான் முதலிய பல நாடுகளில் நிலவிய புராணக் கதைகளில் வரும் 'டிராகன்' (Dragon) எனும் விலங்கினையொத்ததாக யாளி அமைந் திருக்கும். வணிகர்கள் வெளிநாடு சென்று கண்ட கலையனுபவத் தின் தாக்கமாக யாளியைச் சிற்பியர் தென்னிந்தியாவில் அறிமுகப் படுத்தினரோ என்று நினைக்கத் தோன்றும்.

பல்லவர் காலத்தில், தூண்களின் அடிப் பாகத்தில் அமர்ந்த சிம்மத்தை அறிமுகப்படுத்தினர்; பிறகு, அதன் வளர்நிலைகளில் ஆலயத் தூண்களில் யாளியைச், சோழர்களும் பாண்டியர்களும் விசய நகர - நாயக்க மன்னர்களும் பிறரும் பொருத்தியமைத்திருப்பரோ என்றும் கருத இடம் உண்டு.

யாளியின் கோரப் பற்களையும் மருட்டும் விழிகளையும் காண்கையில் அஞ்சத் தக்க வடிவமோ எனச் சிலர் நினைக்கலாம்.

ஆனால், யாளி பற்றி ஆராய்ந்த ஜனார்த்தனம் எழுதுகையில், "சில புராணக் கதைகளில் யாளிக்கு நல்லதைச் செய்யும் சக்தி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆதி காலத்துக் கிரேக்கர்களும் ரோமானியர்களும் மனிதன் பேசும் பூவுலகைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து அவற்றை மனிதனுக்கே எடுத்துக் கூறும் சக்தி இருப்பதாக நம்பினார்கள். யாளியின் பயங்கர உருவத்தின் காரணமாக அவை இராணுவச் சின்னமாக ரோமானிய சேனைகளால் உபயோகப் படுத்தப்பட்டது"[1] எனக் குறிப்பிடுவதை நினைவில் கொள்ளாம். எந்தப் பொருளின் நன்மையும், தீமையும், சீர்தூக்கிக் காண்போரின் மனத்தைப் பொறுத்தே அமையும்; சிம்மம் அஞ்சத் தக்க விலங்கே; எனினும், வீரமும் வலிமையும் கொண்டது என்பது மக்களின் மனமல்லவா? அதைப் போன்றே யாளியும் தூண்களில் இடம் பிடித்து அழகனுபவம் தந்து வருகிறது.

சோழர் காலத்தில் யாளி உருவங்களைக் கோயில் கட்டடப் பகுதிகளில் பல வகைகளில் - பல நோக்கங்களில் பயன்படுத்தியுள்ளனர். மண்டபத்துக்குச் செல்லும் வாயிற்படிகளின் பக்கமாக 'யாளி வளைவு' என அமைத்து அழகுபடுத்தியுள்ளதைத் தஞ்சைப் பெரிய கோயில் போன்ற சில கோயில்களில் காணலாம்..

நடுவே விநாயகரை அமைத்து இரு பக்கங்களிலும் மகர யாளிகளை அமைத்துத் தோரண வாயில்களை அமைத்துள்ளனர்.

யாளிகளை மிகச் சிறப்பாக அமைத்து நிறுவிய சிற்பத் தூண்கள் பல கோயில்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சோழர் காலத்துத் தூண்களைத் தாராசுரத்திலும், நாயக்கர் காலத்துத் தூண்களைத் திருவரங்கத்திலும் காணலாம். ஆனால், தாராசுரத்து யாளித் தூண்களில் யாளி உட்கார்ந்த நிலையில் இருப்பதும், திருவரங்கத்தில் யாளித் தூண்களில் யாளி நின்ற நிலையிலும் இருப்பதும் நினைவில் கொள்ளத் தக்கவை.

மிக நேர்த்தியான சிற்பத் திறம் கொண்ட யாளித் தூண்கள் *(நின்ற நிலையில்)* ஸ்ரீ வைகுண்டம் - சந்நிதி மண்டபம், இராமேசுவரம் போன்ற சில கோயில்களில் அமைந்துள்ளன; அவற்றை வெளி நாட்டாரும் கண்டு வியந்து நிற்கின்றனர்.

யாளிச் சிற்பம் தொடர்பாக ஆராய்ந்துள்ள ஜனார்த்தனன், "தமிழகத்துக்கு இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயில்,

1. *அமுதசுரபி தீபாவளி மலர், 2001, பக். 52*

நெல்லை மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டம் திருவேங்கட முடையான் கோயில் முதலிய கோயில் பிராகாரங்களிலுள்ள பெரிய தூண்களில் யாளியின் உருவங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட் டிருப்பதைக் காணலாம். அது போன்று கர்நாடக மாநிலத்து சோம் நாத்பூர் ஆலயத்துக் கோயில் சிற்பங்களிலும் யாளி அழகு செய் கிறது''[1] என்று எழுதிச் செல்லும் குறிப்பு மனங் கொள்ளத் தக்கது.

சீனா, எகிப்து, மெசபடோமியா, ஜப்பான் முதலிய பல நாடுகளில் யாளியின் உருவம், ஆங்கிலத்தில் 'டிராகன்' (Dragon) என்பதுடன் தொடர்பு படுத்தப்பட்டப் பண்டைய சிறப்பினைப் பெற்றுள்ளது. ஆனால், மிகப் பழமையான நாகரிகம் படைத்த நம் இந்திய நாட்டுப் புராணங்களில் யாளியைப் பற்றிய பல விவரங்கள் கிடைக்காமலிருப்பது வியப்பிற்குரியது.

ஈ. கந்தர்வர்களும் பூதங்களும்

மண்ணுலகத்தே எடுக்கப் பெற்ற கோயில்களில் விண்ணுலகத் தவரும் தொடர்பு கொண்டு பெருமைப்படுத்தும் நோக்கில், தேவ கோட்டங்களிலும் பிற ஏற்புடைய இடங்களிலும் கந்தர்வர்கள், கின்னரர்கள் போன்ற வியத்தகு திருவுருவங்களைப் பின்னணி யமைப்பில் சிற்பமாக்கியுள்ளனர். இத்தகைய சிறப்பினைப் பல பெரிய கோயில்களில் கண்டு மகிழலாம்.

பூத நாயகன் சிவபெருமானாதலின், சிவமூர்த்தங்கள் சிலவற்றில் சிறப்பாக ஆடல்வல்லான் பிட்சாடனர் கோலங்களில் அருகே பூதங் களைச் சிற்ப வடிவங்களில் காட்டியுள்ளனர். ஆலய அதிட்டானப் பகுதியிலும் கருவறை வெளிப்புறத்து மேற்பகுதியிலும் பூத வரிசையை அழகுற அமைத்திருப்பதைக் காணலாம்.

கந்தர்வர்கள் அழகு நிறைந்தவர்களாகவும் இசை மாட்சி யுடையவர்களாகவும் விளங்கியவர்கள்; எனவே, இசை நோக்கில் அவர்களைச் சிற்பத்தில் கொண்டு வந்தது கலைச் சிறப்புடையதே. பூத வரிசையில் சில பூதங்களின் கைகளில் இசைக் கருவிகளைப் பொருத்தி வாசிப்பது போலவும் சிற்பத்தில் காட்டியுள்ளனர்.

உ. பிரம்மஹத்தி தோஷமும் சிலையமைப்பும்

தெய்வமாயினும் மானுடனாயினும் அந்தணனைக் கொன்றால் பிரம்மஹத்தி தோஷம் உண்டு என்பது புராண நம்பிக்கை. பிரமன்

1. அமுதசுரபி தீபாவளி மலர், 2001, பக். 50

வழி வந்தவனாதலின் இராவணனும் ஒரு வகையில் பிராம்மண னாகக் கருதப்பட்டு, அவனைக் கொன்ற பழியாகிய தோஷம் நீங்க இராமன் சிவலிங்கம் நிறுவிப் பூசனை புரிந்தான் என்பர். இதனை ஒத்த நிலையில், வரகுண பாண்டியன் வேட்டைக்குப் போய்த் திரும்பு கையில், அம்மன்னன் குதிரை ஓர் அந்தணனைக் கொன்று விட்டது; அதனால் வரகுண பாண்டியனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் - கொலைப் பாவம் - ஓர் உருவெடுத்துப் பிடிக்குஞ் சூழல் ஏற்பட்டது. அந்தப் பாவவுருவத்திடமிருந்து தப்பித்துக் கொள்ளத் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி கோயிலுக்கு அம்மன்னன் வந்து வழிபட லானான். அவன் எப்போது வெளியே வருவான் என்று பிரம்ம ஹத்தி, கோயிலின் நுழைவாயிலில் தென் பகுதியில் காத்துக் கொண் டிருந்தது. அந்தப் பிரம்மஹத்தியின் உருவத்தின் தலை விரிந்து கிடக்கவும், முழங்கால் மேல் முகத்தினை வைத்துக் கொண்டு ஏங்கிக் கிடக்கவுமான சிற்ப அமைப்பு உள்ளது. அதனை யாரும் பார்க்க விரும்பினால், தோரண வாயிலின் தென் புறமுள்ள சிறிய படிக்கட்டு வாயிலாக ஏறித், தென்புறச் சுவரிலுள்ள துளை வழியாக ஒரு தேவதை யாரையோ பார்த்தபடியுள்ள தோற்றத்தைக் காணலாம்.

ஊ. காட்டேறியும் சிலையமைப்பும்

சிற்றூர்ப் புறங்களில் பேய், பிசாசு, காட்டேறி என்றெல்லாம் பேசினால், அச்சுறுத்தும் ஆவிகளாகவே எண்ணி வெறுப்படைவர். ஆனால், புராண அணுகுமுறையில் பேய்க்குச் சிறப்பளிப்பதைச் சிவனே பேய்களுடன் ஆடும் பேயன் என்றும், காரைக்காலம்மை யார் பேயுருவத்தையே வரமாகக் கேட்டுப் பெற்றுக் காரைக்கால் பேய் என்றும் கூறுவதால் தெரிந்து கொள்ளலாம்.

'காட்டேறி' என்பது மாரியம்மனுக்குப் பரிவார தெய்வமாக விளங்கும் சிறப்புடையது. திருவாரூர் வட்டத்தில் பனங்குடிக்கு அருகே மாப்பிள்ளைக் குப்பத்திலுள்ள மாரியம்மன் கோயிலில் காட்டேறியின் சிலை சுதையால் அமைந்துள்ளதை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். கெட்ட ஆவிகளால் சங்கடங்கள் நேரா வண்ணம் காக்கும் தேவதையாகக் காட்டேறி அமர்ந்த கோலத்தில் இருப்பது காணத் தக்கது.

1.1 சிற்பப் படைப்பில் விலங்குகளும் பறவைகளும்

இறைவன் பெருமையை உணர்த்தும் வகையில் நந்திகள், மான், சிம்மம், ஆடு முதலியவற்றைச் சிலை வடிவில் காட்டுவதே

போலக் காமதேனுவைப் பல கோணங்களில் பல நோக்கங்களில் சிலையாக்கிக் காட்டியுள்ளனர். பெண்ணின் முகமும் மார்பகமும் கொண்டதோடன்றிப் பசுவின் உடலமைப்பும் *(பால் சுரக்கும் மடியமைப்புடன்)* காமதேனு பெற்றிருக்கும்; சில வடிவங்களில் இரு இறக்கைகளையும் பொருத்திச் சிற்பியர் காட்டியுள்ளனர்.

விரும்பியவற்றை வழங்கும் ஆற்றலுடைய 'கற்பகத் தரு' இந்திரவுலகப் பொருளே; எனினும், ஆலய வளாகத்தில் இறைவனுக்கு வாகனமாக்கியும், தில்லை போன்ற தலங்களில் பிராகாரத்தைச் சுற்றி வரும் மக்கள் காணுமாறு தனிச் சிலையாகப் புடைப்புச் சிற்பத்தில் காட்டியும் உள்ளனர். இஃது ஒரு புறமிருக்க, திருஞான சம்பந்தரின் திருவாக்கால் காய்க்காத ஆண் பனைகள் பனங்காய்களைத் தரும் பெண் பனைகளாகக் குரும்பைகளுடன் மாறின என்பது திருவோத்தூரில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சி. இந்தப் பெருமையை விளக்கும் வகையில், காஞ்சிக்குப் பதினெட்டுக் கல் தொலைவிலுள்ள திருவோத்தூர் வேதநாதேசுவரர் கோயிலில் கல்லினால் பனை மரம் செய்து வைக்கப்பட்டுள்ளது. ''கல்லால் அமைந்த இப்பனைக்குப் பூசையும் உண்டு; அப்பனையின் தோற்றம் பாதி ஆணும், பாதி பெண்ணுமாகக் காணப்படுகிறது''[1] என்று சைவப் பெரியவர் பாலூர் கண்ணப்ப முதலியார் கூறி மகிழ்வார்.

அன்னப் பறவையைச் சிற்பப் படைப்பில் கொண்டு வந்த நிலையில், அதனைக் கண்டு வியப்படைவர். அது போலவே கிரௌஞ்சப் பறவை முற்காலத்தில் சில பகுதிகளில் இருந்ததாகவும், அது மறைந்து விட்டதாகவும் கூறுவர். இப்பறவை சிற்பியரின் கற்பனைக்கேற்பச் சித்திர வேலைப்பாட்டுடன் அமைந்திருக்கும்.

ஐந்து தலை நாகங்கள், ஏழு தலை நாகங்கள் முதலியவை புராணத் தொடர்பில் படைக்கப்பட்டுத் தெய்வங்களுக்குக் குடையாகவும் அணையாகவும் சிற்பப் படைப்பில் அமைந்திருக்கும். இவையெல்லாம் தத்துவப் புலப்பாடாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. குடை விளக்கு - சிற்பச் சிறப்பு

இந்து மதத்திலும் புற மதங்களிலும் குடைகளுக்கெனத் தனிச் சிறப்பு உண்டு. மன்னர்களுக்கென அமைந்துள்ள சிம்மாசனத்திலும் பிற இடங்களுக்கு அவர்கள் செல்லும்போதும் பிடிக்கக் கூடிய

1. *தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத் தலங்கள், பாரி நிலையம், சென்னை. பக். 78*

நிலையிலும் வெண்கொற்றக் குடை அமைந்திருக்கும். அனைத்துல நாயகனாகிய இறைவனுக்கும் குடை அமைப்பதைக் குடை மங்கலம் எனக் கூறிச் சிறப்பிப்பர். இவற்றையெல்லாம் சிற்பப் படைப்பில் கொணர்ந்துள்ள நிலையைப் பல சிற்பங்களால் தெரிந்து கொள்ள லாம். அருகக் கடவுளை முக்குடைகளின் கீழ் அமைத்திருக்கும் சிற்பக் காட்சியைச் சமணக் கோயில்களில் சிறப்பாக, முக்குடைப் பகவன் கோயிலில் *(தஞ்சைக்கு அருகே உள்ளது)* காணலாம்.

இறைவனுக்குப் பூசனை நடைபெறுங்காலத்தில் சோடச உபசாரங்கள் புரிவது மரபு; அந்தப் பதினாறு உபசாரங்கள் குடை, கண்ணாடி, விசிறி, சாமரம் முதலியவற்றில் கைப்பிடி, கைம்மணி யில் நந்திக் கொண்டை போன்றவற்றிலெல்லாம் நுணுக்கமான சிற்பத் திறனைக் காணலாம். வைணவ ஆலயங்களில் பக்தர்களின் சிரசில் சார்த்தும் சடாரியிலும் சிற்பச் சிறப்பு உள்ளது.

சுவாமிக்கு ஆராதனை புரிகையில், தீபங்களைக் காட்டும் தீபக் கால்களும் பதினாறு வகைகளில் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்திருக்கும். அவையாவன: 1. தூபம், 2. தீபம், 3. அலங்கார தீபம், 4. நாக தீபம், 5. கமட *(ஆமை)* தீபம், 6. விருஷப தீபம், 7. புருஷாமிருக தீபம், 8. சூல தீபம், 9. கஜ *(யானை)* தீபம், 10. வியாக்கிர *(புலி வடிவ)* தீபம், 11. சிம்ம தீபம், 12. துவஜ *(கொடி)* தீபம், 13. மயூர *(மயில்)* தீபம், 14. பூரண கும்ப *(ஐந்து தட்டு)* தீபம், 15. நட்சத்திர தீபம், 16. மேரு தீபம்.

இவ்வாறு தீபம் காட்டும் கருவிப் பொருள்களிலும் சிற்ப நுணுக்கம் புகுத்திய சிற்பியர், பாவை விளக்குகள் செய்து இறைவன் திருமுன்னர் எப்போதும் ஒளி காட்டவும் வழிபுரிந்துள்ளனர். அழகிய கலைத் திறனுள்ள இள நங்கையருருவில் பாவை விளக்குகள் செய்து அவற்றிற்குப் பெயர்களிட்டும் வழங்கினர். டாக்டர் இரா. நாக சாமி, கல்வெட்டு அடிப்படையில் எழுதுகையில், இராசேந்திர சோழன் அவளுடன் *(நங்கை பரவையுடன்)* வந்து தியாகேசனை வணங்கிய இடத்திலேயே ஒரு குத்து விளக்கு வைத்தாள் என்று 'உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவரும் அணுக்கியர் பரவை நங்கையும் நிற்குமிடம் தெரிய எடுத்த குத்து விளக்கு' என்று கல் வெட்டு கூறுகிறது. அத்துடன் இரண்டு பாவை விளக்கை அங்கே செய்தளித்ததை அறிகிறோம். ஒன்றன் பெயர், 'பச்சைப் பாவை உமை நங்கை'. மற்றொன்றின் பெயர் 'பாவை சரியா முலை நங்கை' என்பது என்று ஒரு கட்டுரையில் குறிப்பிடுவது மனங் கொள்ளத் தக்கது.

3. சிற்ப நோக்கில் கோபுரங்களும் விமானங்களும்

சிற்ப நூலின்படி ஆலயங்களின் வகைகளைத் தெரிந்து கொள்ளத் துணை நிற்பவை உண்ணாழியாகிய கருவறையும், விமானமுமாகும். பெரும்பாலும் தமிழ் நாட்டில் கோயிற் கருவறைகள் சதுர அமைப்பில் உள்ளன; சில இடங்களில் எண் பட்டை வடிவமாகவும், வட்ட வடிவமாகவும் காணப்படுகின்றன. அத்தகைய கருவறைகளில் மூலவரையல்லாமல் உட்சுவர்களை ஒட்டிச் சிறிய அளவிலும், பெரிய அளவிலுமாகத் தெய்வச் சிலைகள் அமைப்பதும் உண்டு. எடுத்துக்காட்டாகக் கும்பகோணம் அருள்மிகு இராமசாமி கோயில் கருவறையில் செப்புத் திருமேனிகளாக இராமர், சீதை, இலக்குவர், பரதர், சத்துருக்கனர், அனுமார் உருவங்கள் அமைந்திருக்க, உட்சுவர்களிலும் பெரிய வடிவில் அவர்களின் கற்சிலைகள் காட்சி யருளுவதைக் காணலாம்.

கருவறைக்கு மேலே கட்டப் பெறும், கலசங்களுடன் கூடிய கட்டமைப்பை விமானம் என்பர். விமானத்திலும் சுதை வேலைப் பாட்டுடன் கூடிய பலவகைத் திருவுருவங்களை அமைத்து அழகு படுத்துவர். கோயிலமைப்பில் தூங்கானை மாடம் (கஜப் பிருஷ்டம்) விமான நோக்கிலே சிந்திக்கத் தக்க சிறப்பான கட்டட அமைப்பாகும்.

வைணவ ஆலயங்களான திவ்ய தேசங்களில் அவற்றின் சிறப்பிற்கு அறிகுறியாக விமானம் போற்றப்பட்டு, அவற்றுக்குச் சிறப்பான பெயர்களும் வழக்கத்தில் வந்துள்ளன. அவை சுகநாக்ருதி விமானம், புண்ணிய கோடி விமானம், உச்ச ச்ருங்க விமானம், ஆனந்த விமானம், கருட விமானம், தாரக விமானம், பிரணவ விமானம், அஷ்டாட்சர விமானம், கலியாண விமானம், வேத சக்கர விமானம், சார ஸ்ரீகர விமானம், விசய கோடி விமானம், மங்கள விமானம், உத்பல விமானம், உத்தியோக விமானம், வாமன விமானம், வைதிக விமானம், அட்டாங்க விமானம், சௌந்தரிய விமானம் முதலியவையாகும். சிற்பக் கலை நோக்கிலும் சமய நோக்கிலும் இவற்றின் சிறப்பினை விரிக்கிற் பெருகும். சமயச் சிறப்புடன் பிரணவ விமானம் பற்றிய ஒரு சிறு குறிப்பினைக் காண்கையில், பொதுவாக விமானங்களின் பெருமையை உய்த்துணர வாய்ப்பாகும்; ''பிரணவம் தன் பொருளாகிய இறைவனைக் கேட்போருக்கு அறுவுறுத்துகிறது. பிரணவ விமானமோ கேட்ட அப்பொருளை, நம்மெல்லோருக்கும் கண்ணெதிரே காட்டுகிறது. காட்டவே,

பிரணவத்திலும் விமானம் சீரிய செல்வமாகும்''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது. இந்தச் சிறப்பிற்குரிய விமானத்தைத் திருவரங்கத்தில் கண்டு களிக்கலாம்.

வரலாற்று நோக்கில், மாமல்லபுரத்து ரதக் கோயில் விமானங்கள் முன்னோடியாக அமையக் காஞ்சியிலுள்ள கயிலாச நாதர் கோயில் முதன் முதலில் சிற்ப எழிலுடன் பெரிதாக்க் கட்டப் பட்ட விமானம் என்பதை மனத்துட் கொள்ளலாம்.

இராசசிம்ம பல்லவன் கட்டிய காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலைக் கண்ட முதலாம் இராசராசன் தஞ்சாவூரில், இராசராசேச்சுரம் எனும் பெருங்கோயிலைக் கட்டினான். இக்கோயிலின் கருவறை மேலுள்ள விமானம் அடிநிலை *(அதிட்டானம்)* முதல் தூபி வரையில் யாவும் கருங்கற்களாலேயே அமைந்துள்ளமை பெருஞ்சிறப்பிற்குரியது.

கோயிலின் நுழைவாயிலில் உயரமாகக் கட்டப்பெறும் கோபுரத்தைவிடக் கருவறைமேல் கட்டப்படும் விமானம் மிக உயர மாகக் கட்டுவதைப் பெருஞ்சாதனையாக்கியவன் இராசராசன். இதனைக் கண்ட அவன் மகன் கங்கை கொண்ட சோழனாகிய முதலாம் இராசேந்திரன், கங்கை கொண்ட சோழபுரத்தை 160 அடி உயரத்தில் எட்டுத் தளத்துடன் அமைத்துள்ளான். தஞ்சைப் பெரிய கோயிலை யும் கங்கை கொண்ட சோழீச்சரத்தையும் பின்பற்றி இரண்டாம் இராசராச சோழன் தாராசுரம் *(இராசராசேச்சுரம்)* எடுப்பித்தான்; 83 அடி உயரமுள்ள இவ்விமானக் கிரீவத்தின் கீழே இருக்கும் கடைசி தளத்தில் நான்கு மூலைகளிலும் கர்ண கூடுகள் அமைந்துள்ளன. ஒப்பியல் நோக்கில், தஞ்சை விமானத்தின் உச்சியில் வட்டமான பிரமரந்திரக் கல்லும், அதைச் சுற்றி நந்திகளும் *(மூலைகளில்)* இருக்கும். ஆனால், தாராசுரம் விமானத்து மூலையில் நந்திகளுக்குப் பதிலாகக் கர்ண கூடுகளும், பிறகு நந்திகளும் *(மூலைகளில்)* இருக்கின்றன.

தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம், தாராசுரம் ஆகிய மூன்று கோயில் விமானங்களையொட்டியே திரு புவனம் கோயில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது: இவ்விமானம் ஏனைய விமானங்களைவிடச் சிற்பக் கலை மாட்சி நிரம்பியுள்ள தாகக் கருதவியலாது. எனினும், கோயிலினகத்தே மிகச் சீரிய சிற்பக் கலைப் படைப்புக்கள் உள்ளன.

1. திருக்கோயில் *(திங்களிதழ்)* ஜூன் 1969.

சைவ சமய நோக்கில் புராணச் சிறப்புடைய விமானங்கள் சில காணப்படினும், பெருஞ்சிறப்பிற்குரிய திருவீழிமிழலையிலுள்ள விண்ணிழி விமானமும், மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் எழுந் தருளியுள்ள இந்திர விமானமும் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வது விமானத்தின் தெய்வ நலத்தை உணரத் துணை புரியும்.

திருவீழிமிழலையிலுள்ள விண்ணிழி விமானம் வேதத்தை நினைவுறுத்தும் பாங்கினது; இறைவன் வீற்றிருந்தருளும் இவ் விமானத்தைத் திருமாலே கொணர்ந்தார் என்பது புராணக் குறிப் பாகும். சீர்காழித் தோணியப்பரே அம்மையப்பராகத் திருவீழி மிழலையில் எழுந்தருளியதை ஈண்டு நினைவிற் கொள்ளலாம்; அழகிய சிற்பச் சிறப்புடையது இவ்விமானம்.

மதுரைப் பெருங்கோயிலிலுள்ள இந்திர விமானம், இந்திரன் தன் நன்றிக் கடனாக அமைத்த விமானம் என்பது புராணக் குறிப்பு. எட்டு வெள்ளை யானைகளால், அஃதாவது ஆறு யானைகள் தாங்கி நிற்கவும் இரு யானைகள் பக்கத்தில் இருக்கவுமான அமைப்புடன் கூடிய இந்த விமானம் சிற்பக் கலை மாட்சியும் தத்துவச் சிறப்பும் கொண்டது என்பர்.

பொதுவாக, விமானம் என்பது ஆலய அதிட்டானம் முதல் தூபி வரையிலுள்ள பகுதியைக் குறிப்பினும், சிற்பக் கலை நோக்கில் அதிட்டானம் *(பீடம்)*, சுவர் *(கால்)*, பிரஸ்தரம் *(கூரை)*, கிரீவம் *(கழுத்து)*, சிகரம் *(தலை)*, தூபி *(குடம்)* ஆகிய உறுப்புக்களிலெல் லாம் மரபுடன் கூடிய கலைநேர்த்தியைச் சிற்பியர் அமைப்பர்; இதனால் தூலலிங்க வழிபாட்டிற்குரிய சிறப்பினைப் பெறுமென்பர்.

அடுத்ததாகக் கோபுரத்தில் காணலாகும் சிற்பக் கலைச் சிறப்பினைச் சிந்தித்தல் இயைபாகும்.

திருக்கோயிலின் பெருஞ்சிறப்பினை அருகிலுள்ள மக்க ளுக்கும், ஓரளவு தொலைவிலுள்ள மக்களுக்கும் புறத்தே புலப் படுத்தும் வகையில் கோபுரம் அமையும். சில கோயில்களில் ஒரே கோபுரமும் ஒரே விமானமும் அமைந்திருக்கும்; சில கோயில்களில் பலகோபுரங்களும் பல விமானங்களும் அமைந்திருக்கும். எடுத்துக் காட்டாக, மதுரை, திருவாரூர், திருவண்ணாமலை முதலிய திருத்தலங் களில் அமைந்துள்ள பல கோபுரங்களையும் பல விமானங்களையும் காணலாம்.

கோயிலின் சிறப்பிற்கேற்பக் கோபுரத்தில் பல்வேறு அடுக்கு நிலைகள் *(மாடங்கள் - tiers)* அமைத்து, அவற்றில் சிற்பக் கலை சிறப்பாகச் சுதைச் சிற்பக் கலைத் திறனை அமைப்பர்.

கோபுரங்கள் சிற்பக் கலையமைப்பிற்குப் போதிய இடமளிப் பதால், அருளியல் நோக்கிலும் உலகியல் நோக்கிலுமாகப் பல சிற்பங்கள் இடம் பெறும். புராண நோக்கில், இறைவனின் மூர்த்திச் சிறப்புக்களையும், திருமாலின் அவதாரச் சிறப்புக்களையும், அடியார்களின் அருளியல் மாட்சியையும் சிற்பக் கலை வடிவத்தில் கொணர்வர்; அந்நிலையில் கோபுரத்திலே பாலியலுணர்ச்சிக்குரிய காட்சிகளையும் சிற்பியர் அமைப்பது உண்டு; காரணம், சராசரப் பொருள்களின் உண்மைப் புலப்பாட்டிற்குக் கோயிலும் இடந்தர வேண்டுமென்பதேயாகும்.

'கோபுரத்தில் புராணச் சிற்பங்கள்' என்ற நோக்கில், சிவ னுடைய மூர்த்தி பேதங்கள் பலவும் இடம் பெறும். சிறப்பாக ஆலயம் அமைந்திடும் திருத்தலத் தொடர்புடைய நிகழ்ச்சிகள் சிற்பக் கலையாக மலர்ந்து இடம் பெறும்.

சிவன் கோயில் எனின், ஆடல்வல்லான் திருவுருவமும், கோபுரத்தின் தெற்குப் பகுதியில் ஆலமர் செல்வனாகிய தட்சிணா மூர்த்தியின் திருவுருவமும் இடம் பெறும். தேவைக்கேற்பச் சிவனடி யார்கள் திருவுருவங்களும் இடம் பெறும். சக்திச் சிறப்புடைய கோயில் எனில், சக்தி மாட்சிக்குரிய யோக, வேகத் திருவுருவ அமைப்புக்கள் இடம் பெறும்.

குமரன் திருத்தலம் எனில், ஆறு படை வீடுகளின் சிறப்பும், கந்த புராணக் காட்சிகளும் இடம் பெறும். முருகக் கடவுளின் பல் வேறு திருவுருவக் கோலங்களும் இடம் பெறும்.

கணபதிக்குச் சிறப்பளிக்கும் கோயிற் கோபுரமெனில், கணபதி யின் சிறப்பைப் புலப்படுத்தும் புராண நிகழ்ச்சிகளும், பல்வகைக் கணபதியின் திருவுருவங்களும் இடம் பெறும்.

சௌந்தரியத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள வைணவக் கடவுளின் திவ்ய தேசக் கோபுரம் எனில், அவதார மாட்சியையும் ஆழ்வார்கள் வரலாற்றையும் எவ்வளவுக்கு அறிமுகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் சிற்பியர் அறிமுகப்படுத்த முயல்வர்.

இவ்வாறெல்லாம் புராண நிகழ்ச்சிகள் தொடர்பாகச் சிற்ப மாட்சியைப் புலப்படுத்தும் வேளையில், சமயப் பொறையையும்

சமய ஒருமைப்பாட்டையும் மக்கள் உணர்ந்திடும் வகையில் உத்திகள் கையாளப் பெறும்.

கற்சிற்பமாகச் சில கோபுரங்கள் அமைகின்றபோது அவற்றின் கலை நேர்த்தியும் எழில் தோற்றமும் சிறந்து விளங்கும்; ஆனால், பெரும்பாலான கோபுரங்கள் சுதைச் சிற்பங்களால் அணி செய்யப் பெறுவதால் அவற்றின் பொலிவு, சுதை வேலை புரிந்திடும் கலைஞர்களைப் பொறுத்தே அமையும்.

கோபுரங்களின் முற்பகுதியும் பிற்பகுதியும் அகலப் பரப்புடன் அமைவதால், தெய்வங்கள் பல சேர்ந்து நிகழ்த்திடும் நிகழ்ச்சிகள் சிற்பக் கலையாக வடிவெடுக்கும். எடுத்துக்காட்டாகத் திருப்பாற் கடலைக் கடைகின்ற காட்சியைப் பல சிவாலயக் கோபுரங்களில் *(சிதம்பரம் தெற்குக் கோபுரம், வைத்தீசுவரன் கோயில் கிழக்குக் கோபுரம் முதலிய சில கோயிற் கோபுரங்களில்)* கண்டு களிக்கலாம்.

3.1 கோபுரச் சிற்பங்கள் - சிறப்புப் பார்வை

வரலாற்று நேக்கில், பிற்காலச் சோழர்களும் பிற்காலப் பாண்டியர்களும், ஹோய்சலர்களும், விசய நகர மன்னர்கள் சிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்றவர்களும், நாயக்க மன்னர்களுள் திருமலை நாயக்கர் போன்றோரும் கோபுரச் சிற்பங்களை அமைப்பதில் ஈடுபாடு கொண்ட பெருமக்களாவர்.

கோபுரச் சிற்பங்களுள் கற்சிற்பங்களையும் சுதைச் சிற்பங் களையும் எண்ணிக்கையிலும் புராணப் பின்னணியிலுமாக ஆராய்ந்து அளவிடுவதென்பது எளிய செயலன்று; ஆராய்ச்சியாளர்கள் சிலர் அத்தகைய பணியிலும் ஈடுபட்டுத் தம்மாலியன்ற பணிகளைப் புரிந்துள்ளனர்; அவர்கள் பாராட்டிற்குரியவர்களே.

கோபுரச் சிற்பங்களின் பெருஞ்சிறப்பினை உணர்ந்து கொள்வ தற்காகச் சில குறிப்புகளை மட்டும் ஈண்டுச் சிந்திப்பது இயை புடையதாகும்.

கோபுரச் சிற்பங்கள் தொடர்பாக எழுதுகையில் குடவாயில் பாலசுப்பிரமணியன் தஞ்சைப் பெரிய கோயிலில், ''இராஜராஜன் திருவாயிலாகத் திகழும் இரண்டாம் கோபுரத்தில் கற்சிற்பங்களும் சுதைச் சிற்பங்களும் நிறைந்து காணப் பெறுகின்றன. கற்சிற்பங் களில் லிங்கோத்பவர், சண்டீசர் சுதைக் காட்சிகள், ஈசனின் திருமணக் காட்சி, மார்க்கண்டேயர் கதை, வள்ளித் திருமணக் காட்சிகள்,

அர்ச்சுனன் தவம், கிராதார்சுனர் விற்போர், மன்மத தகனம், கண்ணப்பர் கதை, திரிபுர தகனம் ஆகிய காட்சிகளும், வேழம் உரித்த கோலம், கங்காள மூர்த்தி ஆகிய சிற்பங்களும் உள்ளன. திரிபுர தகனக் காட்சித் தொகுதியில், திருமால் புத்தராக மரத்தடியில் அமர்ந்து திரிபுர அசுரர்களுக்கு உபதேசிக்கும் காட்சி தஞ்சைக் கோபுரத்திலன்றி வேறு எங்கும் காண முடியாத ஒன்றாகும். மேல் நிலையில் எட்டுத் திசைக் காவலர் சிற்பங்கள் கோஷ்டங்களில் உள்ளன''[1] எனக் கூறிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது.

அடுத்து, அவரே தில்லைக் கோபுரச் சிற்பங்கள் பற்றி ஆராய்ச்சி நோக்குடன் எழுதுகையில், ''தில்லைக் கோபுரங்களில், சிற்பங்கள் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கோஷ்டத்திலும் அத்தெய்வத்தின் பெயர் தமிழ் கிரந்த எழுத்துக்களால் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றுள்ளது. தமிழகக் கோபுரச் சிற்ப வரலாற்றில் இஃது ஒரு புதுமையாகும். மேலும், நுழைவு வாயிலின் இரு புறமும் பரதக் கலையின் கரணங்களைச் சிற்பமாக்கி, ஒவ்வொரு சிற்பத்திற்குக் கீழும் பரத சாத்திர சுலோகங்கள் குறிக்கப் பெற்றிருப்பதும் நோக்கு தற்குரியதாம்.

இங்குள்ள நான்கு கோபுரங்களிலும் கீழ் வரிசையில் இடம் பெற்றுள்ள சிற்பங்களின் எண்ணிக்கை நாற்பத்தி ஆறு ஆகும். எண் திசைக் காவலர்கள், ஒன்பது கோள்கள், ரிஷிகள், கணபதி, சுப்பிர மணியர், மகிஷ வதம் செய்யும் தேவி, பிரமன், விசுவகர்மா, நாரதர், கங்கை, யமுனை, சேத்திரபாலர், சண்டீசர், தன்வந்திரி, நாகராஜர், அசுவினி தேவதை, பத்ரகாளி, ஞான சக்தி, திரிபுர சுந்தரி போன்ற திருவுருவங்கள் உள்ளன. மேல்நிலைக் கோஷ்டங்களில் உமை, திருமால் போன்ற தெய்வங்களின் பல்வேறு கோலங்கள் இடம் பெற்றுள்ளன.

தில்லைக் கோபுரச் சிற்பங்களைப் பொறுத்தவரை மிக அதிக அளவு *(48 கோஷ்டங்களில்)* பரிவாரத் தேவதைகளும் இடம் அளிப்பதோடு சோழர் கால வரலாற்றில் 12 இராசிகளுக்கும் கோஷ்டத்தில் இடம் அளித்துப் பெயரும் பொறிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்''[2] என்று குறிப்பிடுவதும் மிகச் சிந்திக்கத் தக்க அருங்குறிப்பாகும்.

---

1. தமிழகக் கோயிற்கலை மரபு. சரசுவதி மகால் நூலக வெளியீடு, பக். 42
2. தமிழகக் கோயிற் கலை மரபு, (மேலது) பக் 43-44

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காணலாகும் உயரமான கோபுரங்களில் அமைந்துள்ள சுதைச் சிற்பங்களும் புராணச் சிறப் புடையவை. திருமலை நாயக்கர் மதுரையில் புரிந்துள்ள அற்புதத் திருப்பணிகளைச் - சிறப்பாகச் சிற்பக் கலைச் சிறப்புக் கூறுகளை - நன்கு தெரிந்து கொள்ளத் 'திருப்பணி மாலை' எனும் நூலையும், மதுரைக் கும்பாபிடேக மலரையும் காணலாம்.

கோயிற் கோபுரப் பெருமையை உலகினர் உணர்ந்து கொள்ளப் பல உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்கோயில் மண்டபத் தூண்களுள் ஒன்றிலே கோபுரத் தோற்றம் தரும் வகையில் - கோபுர வடிவிலான - அமைப்பினைக் காணலாம். இந்த அமைப்பானது தமிழகத்தில் எங்கும் காண இயலாத கலைப் படைப்பாகும்.

சில கோயிற் கோபுரங்களில் சிற்பியர் உருவங்களும் காணக் கிடைக்கின்றன. ''சிதம்பரம் *(நடராசர்)* கோயிலில் கிழக்குக் கோபுர நுழைவு வாயிலில் இடது புறப் பக்கச் சுவரிலுள்ள மாடத்தில் இரு சிற்பிகள் வணங்கிக் கொண்டிருக்கும் நிலையில் காணப்படு கின்றனர். அவர்கள் அருகில் ஓர் அளவுகோலும் உள்ளது. இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய அளவுகோலாக இருக்கலாம். மேலும், இந்தக் கோயிலில் வடக்குக் கோபுரப் பக்கச் சுவரில் கோபுரத்தைக் கட்டிய சிற்பிகளின் உருவங்களும், அவர்களின் பெயர்களும் காணப்படுகின்றன''[1] என்று ஸ்தபதி வே. இராமன் எழுதிக் காட்டுவது மனங்கொண்டு சிந்திக்கத் தக்கது.

கோபுரங்கள், எகிப்தியப் பிரமிடுகளின் தாக்கம் பெற்றிருப்ப தால் சில அபூர்வ சக்திகள் ஆலய வளாகத்திற்கும், சிறப்பாக மூலவ ருக்கும் கிட்டுமென்று ஆராய்ச்சி வல்லுநர்கள் கருதுகின்றனர்; அதற் கேற்பக் கோபுர அதிட்டானத்திலும் அதன் மேற்புறத்திலுமாகச் சில தெய்வ வடிவங்களைச் சிற்பியர் அமைத்துள்ளனர். மேலும், கோபுரத்தில் அமைந்துள்ள சுதைச் சிற்பங்களும் சில சக்திகளைக் கொண்டு இலங்குகின்றன. இவ்வாறு தெய்வ நலச் சக்திகள் புலப் படுவதற்கேற்பக் கோபுரக் கலசங்களில் திருக்குட முழுக்கின்போது அபிடேகமும் ஆராதனையும் செய்யப்படுகின்றன என்று ஆகம நூல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

1. கோபுர தரிசனம் தீபாவளிமலர், 1996, பக். 83

4. ஆடற்கலைச் சிற்பங்கள் - கலைநுட்பக் கூறுகள்

பொதுவாகவே ஆடற் கலைக்கும் சிற்பக் கலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எந்த உருவத்தைச் சிற்பப் படைப்பில் கொணர்ந்தாலும் அதனில் நடனக் கலைத் தாக்கத்தால் நளினத்தை - அழகின் மலர்ச்சியைப் - புலப்படுத்திக் காட்டச் சிற்பியர் முனைவர். புராணக் குறிப்பின்படி, தெய்வங்கள் ஆடுகின்றனவோ என்னவோ, சிற்பக் கலைஞனின் அகக் கண்ணுக்கு அவை ஆடுங்கோலத்தில் காட்சியளிக்கும். இவ்வுண்மையை, நர்த்தன விநாயகர், நடன முருகன், நடன மோகினி, ஆடற்கோலப் பூதங்கள், நடனக் கின்னரர்கள், நடன நந்தியம்பெருமான் முதலிய பல தெய்வநலச் சிற்பங்களால் தெரிந்து கொள்ளலாம். சிவ மூர்த்தங்களுள் ஆடல்வல்லான், கஜசம்மாரர் முதலிய சிலவற்றிலும், வைணவ மூர்த்தங்களுள் கோபி யர்களுடன் ஆடும் கண்ணன், காளிங்கன் மீது ஆடும் கண்ணன், நடன கோபாலன் முதலிய சிற்பங்களிலும் ஆடற்கலைக் கூறுகள் அமைவது இயல்பே; சக்தி பல நோக்கங்களில் ஆடல் நிகழ்த்து வதும் சிற்பக் கலையில் பெரிதும் புலப்படுத்தப்படும். எப்படியோ பரத நாட்டியத்திலும் பிறவகை நாட்டியங்களிலும் கரணங்கள் எனும் நோக்கிலும், நவரசப் புலப்பாடு எனும் அடிப்படையிலும் தெய்வ ஆடற் சிற்பங்கள் நிலைத்த வழிகாட்டிகளாக அமைந்துள்ளன என்பது போற்றத் தகும்.

பரத முனிவர் 'பரத நூல்' எனும் நாட்டிய சாத்திரத்தை எழுதி யிருப்பினும், அதன்கண் காணலாகும் ஆடற் கூறுகளை மக்க ளிடையே ஆடல் வழியாக நடைமுறைப்படுத்தினால்தான் பயன் உண்டாகும். அதற்குப் பெரிதும் பயன்படும் வகையில், ஆடற் கரணங்களும் ஒப்பனையமைப்புகளும் நடனச் சிறப்ங்கள் வாயிலாகக் கோயில் வளாகத்தில் நிலைபெறச் செய்யப் பட்டுள்ளன: இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

அ) நடனச் சிற்பங்களில் 108 கரணங்கள்

தில்லைச் சிதம்பரம் கோபுர வாயில்களிலும் நடராசர் ஆலயம் சுற்றுச் சுவர்களிலும், தில்லைச் சிவகாமியம்மன் கோயில் சுற்றுச் சுவர்களிலும் 108 கரணங்களைக் காணும் நோக்கில், நடனக் கலை வல்லுநர் பத்மா சுப்பிரமணியம், தம் முனைவர் பட்ட ஆராய்ச்சிக் காக ஆராய்ந்து சில அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "இவ் வாலயத்தில் பல நூற்றாண்டுக் காலங்களில் பல்வேறு அரசர்கள்

மண்டபங்களும், திருமாளிகைகளும், திருச்சுற்றுகளும், கோபுரங் களும் எழுப்பி வந்த வண்ணம் இருந்துள்ளனர். இவ்வாலயத்தின் பல பகுதிகளில், நோக்கும் திசைகளிலெல்லாம் நடனச் சிற்பங்கள் சிற்பக் கலை வளர்ச்சியில் உச்சக் கட்டத்தைப் பறைசாற்றி வரு கின்றன. அநேகமாக இன்று நிலைத்துள்ள நடனச் சிற்பங்கள் யாவுமே ஏறத்தாழ 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 13ஆம் நூற் றாண்டு வரை அமைக்கப்பட்டன என்றே சொல்லலாம். இச் சிற்பங்கள் பிற்காலச் சோழர் காலத்தில் நடனச் செய்முறையைச் சித்திரிப்பதாக விளங்குகின்றன''[1] என்று குறிப்பிட்டு விட்டு நடனச் சிற்பங்கள் நிறைந்து காணப்படும் இடங்களைச் சுட்டிக் காட்டு கிறார் டாக்டர் பத்மா சுப்பிரமணியம்; அந்நிலையில், ''தேர் வடிவில் அமைந்துள்ள நிருத்த சபை, நடராசப் பெருமானின் மூன்றாவது திருச்சுற்றான 'ராஜாக்கள் தம்பிரான் திருமாளிகை' ஞானாம்பிகையான சிவகாமி சந்நிதியின் திருச்சுற்று, பாண்டிய நாயகம் என்று வழங்கப் படும் முருகப் பெருமானின் ஆலயத் திருச்சுற்று, இராஜ சபை என்ற பெயருடன் கம்பீரமாக நிலைத்து வந்துள்ள ஆயிரங்கால் மண்டபத் தின் வெளிப்புறச் சிற்ப வரிசை, மற்றும் நான்கு திசைகளிலும் வானளாவி ஆகாயத்தோடு உறவாடும் கோபுர வாயில்களில் உட் சுவர்களில் விளங்கும் கரணச் சிற்பங்கள் ஆகியவைகளாகும். இவை தவிர, நான்கு கோபுரங்களையும் இணைக்கும் மதில் சுவரின் உட் பகுதியில் மூன்றாவது பிராகாரத் திருச்சுற்றாக விளங்கும் பகுதி முழுவதும் 'ராஜாக்கள் தம்பிரான் திருமாளிகை' என்ற பெயரில் திருச்சுற்று மாளிகையாக இருந்திருக்கிறது. இதன் அடிப் புறத்தில் பல்லாயிரக்கணக்கான நடனச் சிற்பங்கள் தாராசுர ஆலயத்தில் காணப்படும் திருச்சுற்றைப் போலச் சுமார் முக்கால் அடி உயரத்தில், இரண்டு, மூன்று அல்லது நான்கு பெண்கள் இணைந்தாடும் காட்சி களாக விளங்குகின்றன''[2] என விளக்கிச் செல்வதும் நினைவில் கொள்ளத் தகும்.

சிவகாமியம்மன் கருவறையைச் சுற்றி விளங்கும் திருச்சுற்று மாளிகையில் காணலாகும் நடனச் சிற்பங்களெல்லாம் அழகு நங்கையரின் பரதக் கலை அசைவுகளைப் புலப்படுத்துகின்றன; தலையலங்காரத்தால் அவர்கள் மானுடப் பெண்கள் என்பது தெரிய வரும். ஆனால், கோபுர வாயிலில் காணலாகும் நடனச் சிற்பங்கள்

1. சிதம்பரம் சபாநாயகர் கோயில் கும்பாபிஷேக மலர், 1987, பக். 197-198

2. மேலது, பக். 198

108 கரணங்களைப் புலப்படுத்திடும் உமையம்மையின் திருக் கோலங்களென டாக்டர் பத்மா சுப்பிரமணியம் கருதுகிறார். மொத்த மாக ஆராய்கையில், மானுடப் பெண்களும் சிவகாமியம்மையுமே ஆடிய நடனக் கோலங்களாகவே தெரிகின்றன; நடராசப் பெரு மான் ஆடிய கோலம் இவ்வாறு பிற பகுதிகளில் சிற்பத்தில் காட்டப் படவில்லை. நிருத்த சபையில் கருவறையிலுள்ள மூலவரே ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியல்லாமல் கற்சிற்பத்தில் அவரைக் காண இயல வில்லை; கோபுரச் சுதைச் சிற்பத்தில் இறைவனை நடனக் கோலத் தில் காட்டுவதைச் சிறப்பாகக் கொள்ள வேண்டுவதில்லை.

ஆனால், தஞ்சைப் பெரிய கோயில் விமான முதல் தளத்தில் காணப்படும் 81 கரணச் சிற்பங்களும், கும்பகோணம் சாரங்கபாணி கோயிற் கோபுர வாயிலுக்கருகே அமைந்துள்ள கரணச் சிற்பங்களும் ஆடல் வல்லானே - நடராசப் பெருமானே - ஆடுவதாகக் கொண்டு, அமைத்த நடனச் சிற்பங்கள் எனக் கொள்ளலாம்.

விருத்தாச்சலம் பழமலைநாதர் கோயிலிலும் நடனச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மேலும், சில பெருங் கோயில்களிலும், சிறு கோயில்களிலும் நடனச் சிற்பங்கள் உள்ளன. எடுத்துகாட்டாக, தில்லையில் தில்லைக் காளியம்மன் கோயிலிலும் சில நடனச் சிற்பங்கள் உள்ளன. எனவே, இதனை விரிக்கிற் பெருகும். டாக்டர் பத்மாசுப்பிரமணியம் போன்றவர்கள் பல ஆலயங்களுக்கும் சென்று, தொடர்ந்து கள ஆய்வு செய்தால் நடனக் கலைத தொடர்பில் பல தெளிவுகள் ஏற்படலாம்.

மதுரைச் சொக்கநாதர் *(மீனாட்சியம்மன்)* கோயிலில் நடனச் சிற்பங்கள் தொடர்பில் ஆராய்தல் பயன் மிக விளைவிக்கலாம்.

செப்புத் திருமேனிகள் தொடர்பில் சிவமூர்த்தங்கள் பல, நடனக் கோலத்திலும், சிறப்பாகத் தாண்டவக் கோலத்திலும் கிடைக்கின்றன. அம்மன் திருமேனிகளுள் சில நடனக் கோலத்தில் கிடைக்கின்றன. பரத முனிவர் எழுதிய நாட்டிய சாத்திரத்தைப் பின்பற்றும் ‘மார்கி’ எனப்படும் சாத்திரிய நடன உத்திகளையும், அவர் காலத்திற்குப் பின்னர் *(பிற்காலத்தில்)* எழுந்த ‘தேசி’ எனப் படும் நடன உத்திகளையும் மனத்துட் கொண்டு, நடனச் சிற்பங் களை இனங்கண்டு கொள்ள வாய்ப்பு உள்ளது. இந்த ஆராய்ச்சியைத் தில்லைக் கோயிலைப் பொறுத்த வரையில் டாக்டர் பத்மா சுப்பிர மணியம் செய்துள்ளார். பரதக் கலை அறிஞர்கள் ஆர்வத்துடன் அவரைப் பின்பற்றுவது நடனக் கலைக்கும் சிற்பக் கலைக்கும்

புரியும் சீரிய தொண்டாகவே அமைந்து பல நுண்கூறுகள் காண வாய்ப்பேற்படும்.

நடனச் சிற்பங்கள் காணுதற்குரிய சில களங்கள் பல ஆலய வளாகங்களில் உண்டென்பது ஒரு புறமிருக்க, அந்தத் தொடர்பில் நாட்டிய நூல்களையும் தாண்டவச் சிற்பங்களையும் ஆராய்ந்து, 'நனி புகழ் நகரத்தார்' எனும் நூலில் அறிஞர் இனியவன், 'விழி களுக்கு விருந்தாகும் கூத்திறையின் கோலமிகு தாண்டவங்கள்' என்ற தலைப்பில் எல்லாத் தாண்டவ வடிவங்களையும் ஓவியக் கலை வாயிலாக வழங்கியுள்ளார்;[1] ஒவ்வொரு தாண்டவத்துக்கும் உரிய பெயரையும் புலப்படுத்தியுள்ளார். இந்தச் சீரிய முயற்சிக்கு அடிப் படையாக விளங்கியவை நடனச் சிற்பங்கள் என்பதையுணர்ந்து போற்றலாம்.

5. இசைத் தூண்கள்

கவின் கலைகளுள் மிக நுட்பமாகிய இசைக் கலையைச் சிற்பக் கலையுடன் இணைத்து வெற்றி பெற்றுள்ளனர் சிற்பியர். தமிழகக் கோயில்களுள் மதுரை, திருநெல்வேலி, ஆழ்வார் திரு நகரி, கிருஷ்ணாபுரம், செண்பகராம நல்லூர், திருப்பெருந்துறை, தென்காசி, திருக்குற்றாலம், சுசீந்திரம், திருவானைக்கா, பிரசன்ன வேங்கடாசலபதி திருக்கோயில், தாடிக் கொம்பு, தாராசுரம் முதலிய இடங்களில் காணலாகும் இசைத் தூண்கள் பல அமைப்புக்களில் உள்ளன. அஃதாவது, பல்வேறு அழகமைப்புடன் பல வடிவங் களில் பெரியனவாகவும் சிறியனவாகவும், பல வரிகளையும் உருட்டுத் திரணைகளையும் உடையனவாகவும் இசைத்தூண்கள் ஆலயங்களில் உள்ளன. இவை ஒரே கல்லில் - இவற்றுக்கெனவே தேர்ந்தெடுத்த கருங்கல்லில் - செதுக்கப்பட்டுள்ளன. எனினும், இவை யாவும் தரமான இசை நுண்கூறுகளை ஒன்று போலவே ஒலிக்கும் தன்மை யுடையவையல்ல. சில தூண்களின் ஒலி மந்தமானதாகவும், சில தூண்களின் ஒலிக்ள் மூன்று அல்லது நான்கு சுரங்கள் மட்டும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன: இத்தூண்களே சிறந்த இசையொலியெழுப்புந் தன்மையுடையவை என்பர்.

''இந்தக் கல்லிசைத் தூண்களின் நிறம் கருப்பாகவோ வெள்ளையாகவோ, சாம்பல் நிறமாகவோ இருக்கின்றன. இவை

1. நனிபுகழ் நகரத்தார், 'ஔவை மன்றம்' நூல் வெளியீட்டகம், சேலையூர், சென்னை 600 073. பக். 225 முதல்

அனைத்தும் வடிவில் சதுரமாகவும், புரிகள் உள்ளனவாகவும், வட்டமானவையாகவும், அறுகோணம் எண்கோணம் போன்றன வாகவும் காணப்படுகின்றன. பொதுவாகத் தூண்கள் மூன்றடிக்கு மேல் ஆறு அடி வரை உள்ளனவாய் இருக்கின்றன''[1] என்று வருங் குறிப்பு மனங்கொண்டு சிந்திக்கத் தக்கதாகும். சில தூண்கள் ஒன்ப தடி உயரமுள்ளவையாக மண்டபத்தின் தேவைக்கேற்ப அமைக்கப் பட்டுள்ளன என்பதும் நினைவிற் கொள்ளத் தகும்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மொட்டைக் கோபுரத் திற்கு அருகிலுள்ள ஐந்து அருமையான இசைத் தூண்களும் கலை நுட்பம் வாய்ந்துள்ளவையாகும். இவற்றிலெழும் சுரத்தின் கிளைச் சுரங்கள் பக்கத்திலுள்ள இசைத் தூண்களிலிருந்தும் அதிர்வுகளால் (vibrations) தாமாகவே ஒலித்தலைக் கேட்கலாம். மேனாட்டு இசை வல்லுநர்கள் இவற்றைக் கண்டு, 'பியானோ கம்பங்கள்' என்றும், வடநாட்டு இசை வல்லுநர்கள் இவற்றை 'ஜலதரங்கத் தம்பங்கள்' என்றும் பாராட்டுகின்றனர். ஒலி நோக்கில் இவை 'வில்லோ யாழோ' என வியந்து தமிழிசைக் கலைஞர்கள் கூறுகின்றனர்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலே மாபெரும் மண்டபத்திலுள்ள இசைத் தூண்கள் மக்களைக் கவர்பவையாக உள்ளன. ''இந்த இசைத் தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே பெருங் கல்லால் செய்யப்பட்டதாகும். நடுவில் பெரிதாக ஒரு தூணும் அதைச் சுற்றிலும் 48 சின்னஞ் சிறு தூண்களான உருட்டுக் கம்பி களும் இணைக்கப்பட்டாற் போன்று செதுக்கப்பட்டுள்ளன. மண்ட பத்தின் முன் பக்கம் இவ்விதமான பண்ணிசைக்கும் இரு தூண்கள் பாரிய மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. இந்த அற்புதமான அழகிய இசைத் தூண்களில் காணப்படும் ஒவ்வொரு சிறிய உருட்டிலும் ஒரு சிறிய குச்சியைக் கொண்டு தட்டினால் ஒவ்வொரு சுரம் எழுமாறு இத்தூண்களை அமைத்திருப்பது வியப்பையும் மகிழ்ச்சியையும் எழுப்புகிறது. இம்மண்டபத்தை அமைத்தவன் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் செங்கோலோச்சிய கூன் பாண்டியன் என்று இவ்வூர்த் தல புராணம் கூறுகிறது''[2] என்று சாத்தான்குளம் அ. இராகவன் விளக்கிக் கூறுவது மனங்கொள்ளத் தக்கது.

1. மதுரைக் கும்பாபிடேக மலர், 1963, பக். 124
2. மதுரைக் கும்பாபிடேக மலர், 1963, பக். 127

நெல்லையப்பர் கோயில் மணிமண்டபத்தில் இரண்டும், அம்பாள் சன்னிதியில் இரண்டுமாக, நான்கு இசைத் தூண்கள் வியத் தகு நாதச் சிறப்பைக் கொண்டவை. ''தூணில் உள்ள சிறு உருட்டுக் கம்பிகளில் வெவ்வேறு சுரம் எழுவதற்கு நமது சிற்பிகள் இங்கு கையாண்டிருக்கும் முறை எவரும் காண முடியாத ஓர் அலாதியான அரிய முறையாகும். உருட்டுக் கம்பிகள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய அணில் ஏறிப் பாய்வதுபோல் செதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தூணிலிருக்கும் அணிலை அடுத்தத் தூணிலிருக்கும் அணில் எட்டிப் பிடிக்க முயல்வதுபோல் இருக்கும். இது சுரங்களின் தொடர்பைக் காட்டச் சிற்பிகள் கையாண்டிருக்கும் அரும்பெரும் சூழூஉக் குறியாகும்''[1] என்று சிந்திக்க வைக்கும் குறிப்பு உள்ளது. மேலும், இங்குள்ள இசைத் தூண்கள் அலங்காரச் சிற்பப் படைப்புக்கள் என்றும் கருதுவர். ''தூண்களின் உச்சியில் காணப்படும் பதும பந்தம், கவசம், தாடி, குடம், இதழ் முனை, பலகை, கண்டம், பொதிகை, அதிலுள்ள மதளை, பூமுனை, நாணுதல் போன்ற உறுப்புகளும், உச்சி அலங்காரங்களும், பல்வேறு பூக்களும், யாளிகளும் பிறவும் சிற்பச் சிறப்பை மேலும் உயர்த்துகின்றன''[2] என்று வருங்குறிப்பும் காணத் தக்கது.

இவ்வாறே இசைத் தூண்கள் அமைந்துள்ள ஆலயங்கள் தொடர்பாகப் பல செய்திகளையும் விரிக்கிற் பெருகும். எனினும், களக்காடு *(திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியிலிருந்து 10 கி.மீ. மேற்கேயுள்ளது)* எனும் வைணவத் தலத்திலுள்ள இசைத் தூண்கள் மிகவும் கலை நேர்த்தி கொண்டவையாகும். இவை பற்றி சி.எஸ். குப்புராஜ் எழுதுகையில், ''எல்லாவற்றிற்கும் மேலாகச் சிற்பக் கலையின் சிகரமாக விளங்குவது கோயிலின் முன் மண்டப மாகும். இதில் பதினாறு இசைத் தூண்கள் உள்ளன; ஒவ்வொரு தூணிலும் 32 சிறு தூண்கள் உள்ளன. இவற்றை ஒரு குறிப்பிட்ட முறையில் தட்டினால் தென்னாட்டு இசையின் ஏழு ஸ்வரங்களும் மூன்று ஸ்தாயிகளிலும் ஒலிப்பதைக் கேட்கலாம்.

இத்தகைய இசைத் தூண்கள் மதுரை, திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, சுசீந்திரம் ஆகிய தலங்களில் காணப்பட்டாலும், அவை யாவற்றிலும் களக்காட்டில் அமைந்துள்ள இத்தூண்களே சாலச் சிறந்தவை என்று சிற்ப சாஸ்திர வல்லுநர்களால் கருதப்படுகிறது''[2]

1. மதுரைக் கும்பாபிடேக மலர், 1963, பக். 127
2. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, ஜூன் 2000, பக். 66

என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது. சிற்பக் கலை நுட்ப அடிப்படையில், திருச்சி மாவட்டம் துறையூரில் வீற்றிருந்தருளும் பிரசன்ன வேங்கடாசலபதி திருக்கோயிலிலுள்ள இசைத் தூண்கள் மிகச் சிறப்புடையவை.

இவ்வாலயக் கருவறையின் முன்னால் காணலாகும் தசாவதார மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் 59 கற்றூண்கள் மிகச் சிறந்த வேலைப்பாடு உள்ளவை. இவற்றின் நடுவில் தச சப்தத் தூண்கள் நான்கு உள்ளன. இந்தத் தச சப்தத் தூண்கள் ஒரே கல்லால் வடிக்கப் பட்டவை. ஒரே கல்லை எட்டுச் சிறு தூண்களாகவும், இவற்றின் நடுவில் ஆறு பட்டைகளுடன் கூடிய பெரிய தூணும் ஒரே கல்லில் செதுக்கியிருப்பது வியப்பிற்குரியது. இத்தூண்களைத் தக்கவாறு தட்டினால் ஏழு சுவரங்களும் ஒலிக்கக் கேட்கலாம். ஒவ்வொரு தூணிலும் எழும்பும் இசையொலி காரணமாக நவரங்கத் தூண் என்றும் அழைக்கின்றனர். இவற்றின் மேற்புறம் அகலமாகவும் சிங்கத் தலையுடனும் பொருந்திய சிற்ப வேலைப்பாட்டைக் காண்கை யில், சோழ மன்னர்களின் சிற்பக் கலையார்வமும் இசைக் கலை யார்வமும் தெள்ளிதின் விளங்கும்.

எப்படியோ முற்காலச் சிற்பியர்கள், மக்கள் தெய்வநல ஈடுபாட்டுடன் திருக்கோயிலுக்கு வருகை புரிகையில் இறைவனே கலை மயமானவன் என்ற ஞானவுணர்வினைப் பெறுமாறு பணி புரிந்துள்ளனர். திறனாய்வு நோக்கில் சிந்திக்கையில், அக்காலச் சிற்பியர் படைப்புக் கற்பனை (*Creative imagination*), பொருள் நுவற்சிக் கற்பனை (*Interpretative imagination*) என்ற அளவிலே தம் கலைத் திறமையைக் - கலை நேர்த்தியை - நிறுத்திக் கொள்ளாமல், இசைத் தூண்கள் வாயிலாக இயைபுக் கற்பனையையும் (*Associative imagination*) புலப்படுத்திக் காட்டப் பெரிதும் முயன்றுள்ளனர் என்பது தெரிய வரும்.

6. சிலைகளைப் பொருத்தும் தேவ கோட்டங்களின் (Niches) தேவை

ஆலயத்தின் கருவறையில் மூலமூர்த்தியை வழிபடுவதற்கு முன், இறைவனின் பல்வகைச் சிறப்புக்களையும் மக்கள் உணர்ந்து போற்றுவதற்கேற்பப் பல சிறப்புமிகு சிலைகளைக் கருவறைக்கு வெளிப்புறத்திலும், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய வற்றின் வெளிப் புறத்திலும் காணும்வகையில் தேவ கோட்டங் களை *(மாடங்களை)* அமைக்க முற்பட்டனர். இத்தகைய

அமைப்பிற்கு முன்னோடிகளாக விளங்கியவர்கள் பல்லவர்களே. ''மாமல்லபுரம் கடற்கரையில் அமைந்துள்ள பஞ்சபாண்டவர் இரதங்கள் என அழைக்கப்படும் ஐந்து ஒற்றைக் கல் கோயில்களை, கோயில்களின் பல்வேறு வடிவமைப்பு வகைகளைக் காட்டும் திறந்த வெளி அருங்காட்சியகம் என்று கூறுவதுண்டு. அவற்றுள் அர்ச்சுனன் இரதம் என்று அழைக்கப்படுவது நமக்கு முக்கியமான தாகும். கோயில் கருவறையின் வெளிப் பக்கச் சுவர்களில் மாடங் களையும் சிற்பங்களையும் அமைத்து அழகு படுத்தும் முயற்சியை அர்ச்சுனன் இரதத்தில் முதன்முறையாகக் காண்கிறோம். இங்கே கருவறை வெளிப் பக்கச் சுவரின் நடுப் பகுதியில் மாடம் அமைத்து அதனுள் சிவ வடிவம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாடத்தின் இரு புறங்களிலும் மாடத்துச் சிற்பத்தை நோக்கியவாறு அரச தம்பதி யரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வராக மண்டபத்திலும் அரச தம்பதியரின் உருவங்கள் உள்ளன; என்றாலும் இங்கே அவை அமைந்துள்ள இட விசேடம் குறிப்பிடத் தக்கது. இந்த வகைச் சிற்பங்கள் சித்திரிப்பின் வளர்ச்சியாகக் கருவறைச் சுவரின் வெளிப் புறத்தில் மாடங்கள் அமைத்து, அவற்றில் பரிவார தேவதைகளின் உருவங்களை அமைக்கும் முறை பல்லவர் காலத்தில் உருவாகி முற்காலச் சோழர்கள் காலத்தில் வலுப் பெற்றது. இவை தேவக் கோட்டங்கள் எனக் குறிக்கப்பட்டன''[1] என்று க. இலக்குமி நாராயணன் ஆர்ராய்ந்து எழுதியுள்ள குறிப்பு மனங்கொள்ளத் தக்கது.

மேலும், பல்லவர் காலத்தே தேவக்கோட்டங்களின் உச்சி வளைவு மகரத் தோரண வடிவில் அமைந்த திருவாசி போன்று அமைக்கும் போக்கும், சோழர் காலத் தேவக் கோட்டங்களில் சற்று மாறுகிறது. முதலைகளின் வாயிலிருந்து கிளைத்தெழும் கொடி யாகப் படர்ந்து பின்னலிட்ட திருவாசியாகிறது. பிற்காலச் சோழர் களின் தேவக் கோட்டங்களில் இந்த வகைச் சித்திரிப்பு உச்சி வளைவு மாட *(பஞ்சரம்)* வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தூப்ரேயில் *(Doubriel)* 'கோஷ்ட பஞ்சரம்' என்று குறிப்பிடுவர். இத்தகைய கோஷ்ட பஞ்சரங்களுக்கு இடையில் குட மாடம் *(கும்ப பஞ்சரம்)* அமைத்துக் கோயில் சுவர்களில் வெறுமையைப் போக்கி அழகுபடுத்தும் பாங்கு விசய நகர காலக் கோயில்களில் மிளிர் கிறது''[2] என்று அவர் தருங்குறிப்பால் தேவக் கோட்ட வளர்ச்சி நிலையை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

1, 2 விருது நகர் மாவட்ட நாயக்கர் சிற்பங்கள், 2001, பக். 9-10

இத்தகைய வளர்நிலைகள், வட இந்தியச் சிற்பக் கலைப் படைப்புக்களின் தாக்கமா என்பது ஆய்தற்குரியது.

கலைக் கருவூலங்கள்

7. பல்லவர் காலச் சிற்பக் கலைச் செல்வங்கள்

கி.பி ஏழாம் நூற்றாண்டில் பல்லவன் மகேந்திர வர்மன் பாறைகளைக் குடைவித்துக் கோயில்கள் அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவன். முதற்கண் குடைவரைக் கோயிலை மண்டகப்பட்டில் அமைத்தபோது, ''செங்கல் மரம் சுண்ணாம்பு உலோகம் முதலிய பொருள்களில்லாமல் பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் விசித்திரசித்தன் இக்கோயிலை அமைத்தான்'' என்று அக்கோயிலில் பொறித்து வைத்துள்ளான். அவனுக்குள்ள விருதுப் பெயர்களுள் 'விசித்திர சித்தன்' என்பதும் ஒன்று; இதனால் அவனுக்கிருந்த கலையீடுபாடு இனிது புலனாகும்.

பொதுவாக, மலைப் பாறைகளையே மூலப் பொருளாகக் கொண்டு சிற்பங்களையும் கோயில்களையும் பல்லவர்கள் அமைத்தனர். அவ்வாறு கட்டிய கோயில்கள் மூவகைப்படும். அவை, 1. குடைவரைக் கோயில்கள், 2. ஒற்றைக் கற்கோயில்கள், 3. கற்களை அடுக்கிக் கட்டும் கட்டுமானக் கோயில்கள் ஆகும்.

பல்லவர்கள் பலரும் மாமல்லபுரமேயல்லாமல், பிற ஊர்களிலும் சிற்பச் சிறப்புடன் கோயில்களை உருவாக்கியுள்ளனர். மகேந்திர வர்மன் அமைத்த கோயில்களுள், மண்டகப்பட்டில் மும்மூர்த்திகளுக்கும் அமைத்த குடைவரையும், திருச்சி மலையின் கீழ்ப் பகுதியில் ஒரு குடைவரையும், மலைக் கோயில் உட்பகுதியில் கங்காதரர் உள்ளிட்ட ஒரு சன்னிதியும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

அவனுக்கு அடுத்து வந்தவன் முதலாம் நரசிம்மவர்மன் எனும் மாமல்லன். மாமல்லபுரத்தில் காணலாகும் குடைவரைக் கோயில்களும் ஒற்றைக் கற்கோயில்களும், அவனால் கட்டப்பட்டவை என்பது பலர் கருத்து. ஆனால், ''இக்கருத்து தவறு என இப்போது கண்டு, இவற்றைத் தோற்றுவித்தவன் இரண்டாம் நரசிம்மனாகிய இராசசிம்மன் என்று காட்டப்பட்டுள்ளது''[1] எனக் கூறுகிறார்

1. தமிழகக் கோயிற் கலைகள், தொல்பொருள் ஆய்வுத் துறை (தமிழ்நாடு) 1973, பக். 50-51

டாக்டர் இரா. நாகசாமி. இஃது ஒரு·புறமிருக்க, மாமல்லபுரச் சிற்பக் கலைப் படைப்புக்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

மாமல்லபுரம் என்றதுமே இங்குள்ள கல் இரதங்கள் - கல் தேர்கள் நினைவிற்கு வரலாம். 'பஞ்ச பாண்டவர் இரதங்கள்' என அவை கூறப்படினும், பாண்டவர்களுடன் தொடர்புடையவை யாகத் தெரியவில்லை. எனினும், உலக நாட்டத்தைப் பெற்று அவை விளங்குகின்றன.

இரதக் கோயில்களுள் தருமராசன் இரதம் பெரியது; 20 அடி உயரமுள்ள இக்கோயில் சில புடைப்புச் சிற்பங்களுடன் உள்ளது. நடுவிலுள்ள மாடப்புரையில் சோமாஸ்கந்தர் உருவம் செதுக்கப் பட்டுள்ளது.

பீம ரதம் நீண்ட சாலையமைப்பில் *(நீளம் 45 அடி, அகலம் 25 அடி, உயரம் 26 அடி)* உள்ளது; திருமாலுக்கு உரியதாக இருக்கலாம் என்பர்.

அருச்சுன ரதம் என்று அழைக்கப்படும் கோயில் இரு நிலைகளை உடையது. எட்டுப் பட்டைச் சிகரமுடைய இது சிவபிரானுக்குரிய தென்பர்.

திரௌபதி ரதம் புல், வைக்கோல் ஆகியவற்றால் வேயப்பட்ட குடிசை வடிவில் காணப்படுகிறது; கொற்றவைக்கு அமைக்கப் பட்டதாகத் தெரிகிறது. இவை நான்கும் ஒரே குன்றிலிருந்து செதுக்கப்பட்டவையாகும்.

மாமல்லபுரத்தில் தருமராசன் இரதமும், சகதேவன் இரதமும் உண்டெனினும், சிற்ப வேலைப்பாடு முற்றுப் பெறாத நிலையில் உள்ளன. சிற்பக் கலை நோக்கில் சகதேவன் இரதம் தூங்கானை மாட வடிவில் அமைந்துள்ளதாகும். மகிடாசுர மண்டபத்தில் மகிடா சுர மர்த்தனியின் போர்க்கோலக் காட்சி சிற்ப மாட்சியுடையது.

மாமல்லபுரத்தில் இவையல்லாமல் கணேச ரதம் என்ற ஒற்றைக் கற்கோயிலும், பிடாரி இரதங்களும் *(இரு கோயில்கள்)* வலையன்குட்டை ரதம் என்னும் ஒரு கோயிலும் குன்றைச் செதுக்கியமைத்த கோயில்களாகும்.

மாமல்லபுரத்தில் 'கடற்கரைக் கோயில்' எனும் கட்டுமானக் கோயிலில் விமானம் உயர்ந்து பல அடுக்குகளுடன் கூடியது. இதனையொட்டிய வளர்ச்சியே காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலும் காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலும் ஆகும்.

இராசசிம்மனால் கட்டப்பட்ட திருக்கற்றளியாகிய கயிலாச நாதர் கோயில் திருக்கயிலையை நினைவூட்டக்கூடிய கலை வண்ண மாகும்; பெரிய விமானமும் சிறு சிறு ஆலயங்களையும் திருச் சுற்றினையும் கொண்டு, அதன் சுவர் முழுவதும் சிவன், உமை யம்மை, திருமுருகன், திருமால் முதலிய தெய்வத் திருவுருச் சிற்பங் களைக் கொண்டது.

சிற்பப் படைப்புக்களின் அமைப்பு முறையிலும் கயிலாசநாதர் கோயிலுக்குத் தனித் தன்மையுண்டு. எனினும், அனைத்திற்கும் தொன்மைச் சிறப்புடையதாகக் காஞ்சிக்கு அருகிலுள்ள 'கூரம்' என்ற இடத்திலுள்ள கட்டிடக் கோயில் என்பது டாக்டர் இரா. நாகசாமியின் கருத்தாகும். கூரம் கோயில் முதலாம் பரமேசுவரன் காலத்தில் எடுக்கப்பட்டதாகும்.

காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலின் உட்புறத் திருச் சுற்றுச் சுவர்களை அணி செய்யும் சிற்பங்கள் பல்லவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை வரிசையாகக் காட்டி நிற்கின்றன. காஞ்சியில் கயிலாச நாதர் கோயிலும் வைகுண்டப் பெருமாள் கோயிலும் பல்லவர் காலத்தில் அமைந்தமையால், சைவ-வைணவ ஒருமைப்பாட்டிற்கு அடையாளங்களாக விளங்குகின்றன. இனி மீண்டும் மாமல்லபுரத் திற்கு வந்து பாறைச் சிற்பங்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

மாமல்லபுரத்துப் பாறைச் சிற்பங்கள், அக்காலத்தில் சிற்பப் பணிபுரிந்த சிற்பியரின் இயைபுக் கற்பனையையும், படைப்புக் கற்பனையையும், செயல் திறனையும் புலப்படுத்தும் அரிய கலைக் கருவூலங்களாகும்.

இதிகாச-புராண நிகழ்ச்சிகளைக் கலை வண்ணத்துடன் மக்களின் பார்வைக்குக் கொணரச் சிற்பியர் தம் திறமை முழுவதை யும் பயன்படுத்தியுள்ளனர். நாகர், நாக கன்னியர், தேவர், கந்தருவர், முனிவர், விலங்குகள் முதலிய தொடர்பிலான உருவங்கள் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பாறைகள் வாயிலாகச் சிற்ப எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளன.

பாறைச் சிற்பங்களைப் பார்க்க முற்படுகையில், அருகேயுள்ள பசு மண்டபம் எனும் கிருஷ்ண மண்டபம் தன்னைக் காணுமாறு அழைக்கும்; அம்மண்டபத்தில், கிருஷ்ணன் பசுக் கூட்டங்களை யும் ஆயர்களையும் கல் மழை பொழியாதவாறு காக்கும் நோக்கத்தில், கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடிக்கும் காட்சியைக் காணலாம். கன்றை நக்கிக் கொண்டிருக்கும் பசுவையும்

அந்தப் பசுவிலிருந்து பால் கறக்கும் ஆயனையும் சிற்பமாக வடித் திருத்தலைக் காணலாம்; அந்த மண்டபத்தின் அருகில் 96 அடி நீளமும் 43 அடி உயரமும் கொண்ட செங்குத்தான பாறை அழகிய சிற்பக் கோலங்களுடன் காணப்படும்.

வானத்திலிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வரப் பகீரதன் ஒற்றைக் காலில் நின்று தவமிருப்பது, கங்கையைக் கொண்டு வருவதுமாகிய நிகழ்ச்சிகள் சிற்பப் படைப்பாகக் காட்டி யிருப்பது, இவற்றைக் கண்ணுற்று அருள்புரியும் நோக்கில், பகீரத னுக்கு மேலுள்ள உருவம் சிவனாக அமைவதும் சிந்திக்கத் தக்க எழிற்கோலப் படைப்புகளாகும். பகீரதன் புரியும் தவக்கோலக் காட்சியைச் சிலர், தவறாக அருச்சுனன் தவம் என்பர்.

பகீரதன் தவ முயற்சியால் புனித கங்கை வானிலிருந்து இறங்கி வந்ததும், கங்கையின் இரு புறங்களிலும் தெய்வங்கள், தேவர்கள், கந்தருவர்கள், மக்களுருவங்கள், பாயும் சிங்கங்கள், துள்ளும் மானினங்கள் முதலிய பல உயிரின உருவங்களும் சிற்பக் கலையில் காட்டப்பட்டிருப்பது, ‘நீரால்தான் அனைத்துயிர்களும் வாழ்கின்றன’ என்ற உண்மையைப் புலப்படுத்துவதாக உள்ளது.

சுருங்கக் கூறின், வராக மண்டபத்தில் பூமித் தாயைத் தன் கொம்பினால் வெளிக் கொணரும் வராக மூர்த்தி, மகிடாசுர மண்ட பத்தில் மகிடாசுர மர்த்தனி, பகீரதன் தவம், அதனையொட்டிய கங்கைக் கரைக் காட்சி, கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைக் குடை யாய்ப் பிடிக்கும் காட்சி, பாறைச் சிற்பத்தில் யானைகள் காட்சி, தனித்தனியே யானையும் சிங்கமும் நிற்கும் காட்சி, பிரமன் முதலிய தேவர் காட்சி, மான்கள், குரங்குகள் முதலியவற்றைச் சித்திரித்திருக் கும் சிற்பக் காட்சி முதலிய பலவும் பல கோணங்களில் மாமல்ல புரத்தைச் சிற்பக் கலைக் கூடமாக ஆக்கியுள்ளன. இவையே யல்லாமல், தலசயனப் பெருமாள் கோயில் மங்களாசாசனம் பெற்ற திவ்ய தேசம் - மாமல்லபுரத்திற்குச் சிற்பக்கலைப் பெருமையையும் சமயச் சிறப்பையும் மிகுதிப்படுத்துவதாக உள்ளது.

இஃது ஒரு புறமிருக்கக் காஞ்சிபுரம் வந்தவாசிச் சாலையில், 10 கி.மீ. தொலைவிலுள்ள குரங்கணில் முட்டம் குடைவரையில் ஏழு கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அளவிற்குக் கருவறைகளுடன் கூடிய ஒரே பல்லவர் குடைவரைக் கோயில் இதுதான். ஏழு கருவறைகளுள் மூன்று உள் மண்டபப் பின் சுவரி

லும், இரண்டு அதன் பக்கச் சுவர்களிலும் அமைந்துள்ளன. எஞ்சிய இரு கருவறைகள் மகா மண்டபச் சுவர்களில் குடையப்பட்டுள்ளன.

உள் மண்டபச் சுவரில் குடையப்பட்டுள்ள தென்மேற்குக் கருவறையில் முருகன் சிற்பமொன்று சிதைந்துள்ளது: முருகனின் பின் கைகளில் அக்க மாலையும் குண்டிகையும் உள்ளன; முன் கைகளில் காக்கும் முத்திரையும் கடி முத்திரையும் அமைந்துள்ளன. கிழக்கு முகமாயுள்ள நடுவேயுள்ள கருவறையில் சிதைந்துள்ள சண்டேசுவரர் சிற்பம் காணப்படுகிறது.

ஏழு கருவறைகளுள் மூன்றுக்கு மட்டும் கருவறைக்கு இரண்டென ஆறு வாயிற்காப்போர் சிலைகள் பல்லவர் சிற்பப் பாணியைப் புலப்படுத்தும் வகையில் உள்ளன.

சிற்ப நுணுக்க நோக்கில் பல்லவர் காலச் சிற்பங்களுக்கிடையேயும், பாண்டியர் காலச் சிற்பங்களுக்கிடையேயும், சோழ மன்னர் சிற்பங்களுக்கிடையேயும், விசயநகர நாயக்க மன்னர் சிற்பங்களுக்கிடையேயும், மராட்டிய மன்னர் சிற்பங்களுக்கிடையேயும் மாறுபாடுகளும் வளர்ச்சிக் கூறுகளும் உள்ளன என்று ஆராய்ச்சி அறிஞர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர்; அத்தகைய செய்திகளை விரிக்கிற் பெருகும். எடுத்துக்காட்டாகப் பல்லவர் சிற்பப் பாணியில் ஒரு குறிப்பினைக் காண்போம்.

பேராசிரியர் தங்கவேலு எழுதுகையில், ''சாளுவன் குப்பத்திலுள்ள கொற்றையின் உருவத்திற்கும் மாமல்லபுரத்திலுள்ள மகிஷாசுர மர்த்தனி குடைவரையில் காணப்படும் கொற்றவையின் உருவத்திற்கும் நிறைந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. அங்குள்ள மகிஷாசுரன் கையில் கதாயுதம் ஏந்தித் தன் பரிவாரங்களுடன் கொற்றவையை எதிர்க்கிறான். கொற்றவைக்கு எட்டு கைகள் உள்ளன. பூதக் கணங்களோடு பெண் பணியாட்களும் காணப்படுகிறார்கள். இருவருக்கும் குடை பிடிக்கப்படுகிறது. சாளுவன் குப்பத்து மகிஷாசுரன் கைகளில் எத்தகைய ஆயுதமுமின்றி ஓடுகிறான். அவனைத் தொடர்ந்து மற்றோர் அசுரனும் ஓடுகிறான். ஆனால், மாமல்லபுரத்திலுள்ள மகிஷாசுரன் தன் பரிவாரங்களுடன் கதாயுதம் ஏந்திக் கொற்றவையை எதிர்க்கிறான். இது மாமல்லன் பாணியிலும் சாளுவன் குப்பத்துச் சிற்பம் இராசசிம்மன் பாணியிலும் செதுக்கப்பட்டவை'' *(இந்தியக் கலை வரலாறு II பக். 196)* என்று விளக்குவதை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

பல்லவர் காலக் கோயில்களைப் பொறுத்த வரையில் ஒரு சிறப்புக் குறிப்பும் நினைவிற் கொள்ளத் தக்கதே. சமய அருளாளர் அப்பரடிகளால், மனம் மாறிச் சமணத்திலிருந்து சைவம் தழுவிய மகேந்திரவர்மன் சமணப் பாழிகளை இடித்துக் கொணர்ந்த கற்களைக் கொண்டு திருவதிகைக்கு அருகே ஒரு கோயில் கட்டினான்; சிவன் கோயிலாகிய அதற்குக் குணபரேச்சுரம் என்று பெயர் வைக்கப்பட்டது. பல்லவர் காலச் சிற்ப நோக்கில் அது காணத் தக்கது.

8. அதியமான் காலத்துச் சிற்பங்கள்

கொங்கு நாட்டு வட பகுதியினை அதியமான் என்னும் சிற்றரசப் பரம்பரையினர், தகடூரை *(இக்காலத் தருமபுரியை)*த் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அதியமான் நெடுமானஞ்சி, தன் காலத்தில் கோயிற் கலையில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்பது திருக்கோவலூர் வட்டம் ஜம்பை என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டால் தெரிய வரும்; சிறப்பாகச் சமணப் பள்ளி ஒன்றைக் கட்டியதாகத் தெரிய வருகிறது.

அதியமான் வழி வந்த அரசர்கள் 8ஆம் நூற்றாண்டில் மீண்டும் கொங்கு நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெற்றதும், நாமக்கல்லில் இரு குடைவரைக் கோயில்களை உண்டாக்கினர். அவர்கள் வைணவ சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பது அவர்கள் உண்டாக்கிய கோயில்களில் காணலாகும். அரவணைப் பள்ளி கொண்ட பெருமாள், நரசிம்மர் ஆகியோரின் சிற்பங்களால் தெரிய வரும்.

நரசிம்மர் குடைவரைக் கோயில் கருவறை, மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. கருவறையில் நரசிம்மர் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். "இவருக்கு இரு மருங்கிலும் மேற்பகுதியில் கதிரவன், திங்கள் ஆகியோர் சாமரங்களை ஏந்திய வண்ணம் நிற்கின்றனர். இவர்களுக்குக் கீழ்ப் பகுதியில் நான்முகனும் சிவனும் காணப்படுகின்றனர். இவர்களேயல்லாமல் முனிவர் இருவர் சிற்பங்களும் இத்தொகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. இவை சனகன், சனாதனன் ஆகிய இரு முனிவர்களின் சிற்பங்களாக இருத்தல் வேண்டும்"[1] என்று கருதுகிறார் வித்யா தேசிஜியா.

1. Vidya Dehejia, The Namakkal Caves, p. 16

கருவறைக்கு அடுத்த மண்டபத்தின் உட்சுவர்களிலும் பெரிய அளவில் சிற்பங்கள் உள்ளன. இது பற்றி விளக்குகையில், டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன், "ஒரு புறத்தில் ஆதிசேடன் என்னும் அரவணை யின்மீது அமர்ந்த கோலத்திலிருக்கும் வைகுண்டநாதனின் வனப்பு மிக்க சிற்பத்தைக் காணலாம். இவருடைய வலக்கால் அரவணை யின் மேற்பகுதியில் மடக்கி ஊன்றப் பெற்றிருப்பதாலும், கீழுள்ள இடக்கை தொடையின்மீது ஊன்றப்பட்டிருப்பதாலும், இவருடைய உடலும் தலையும் சற்று வலப்புறம் சாய்ந்தவாறு இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு இரு புறங்களிலும் சிவனும் நான்முகனும் நின்ற கோலத்திலுள்ளனர். மேற்பகுதியின் வலப் புறத்தில் கதிரவனும் இடப் பக்கத்தில் திங்களும் வைகுண்ட நாராயணனை வாழ்த்தி வணங்கிய வண்ணம் காட்சியளிக்கின்றனர். கீழ்ப் புறத்தில் வழிபடுவோர் இருவர் சிற்பங்களும், அமர்ந்த நிலை யிலுள்ள பால நரசிம்மர் சிற்பம் ஒன்றும் காணப்படுகின்றன"[1] என்று விவரிப்பது மிகவும் சிந்திக்கத் தக்கது. இத்தகைய சிற்பங்களைக் கொண்டு, முதன்மைச் சிறப்புநிலை திருமாலுக்கும், கீழ்ப்படிந்த நிலை சிவனுக்கும் பிரமனுக்கும் தரப்பட்டிருப்பதை உய்த்துணரலாம்.

கருவறையின் இடப் பக்க முன் சுவரில் பூமிதேவியைத் தன் இரு கைகளால் தாங்கி நிற்கும் வராகப் பெருமாளின் சிற்பம் காணப் படுகிறது; பெருமாளுக்கு நன்றி செலுத்தும் வகையில் பூமி தேவி கூப்பிய கைகளுடன் காணப்படுகிறாள். அடுத்துள்ள பகுதியில் வாமன உருவமும் திரிவிக்கிரமனாக நீண்டுயர்ந்த வடிவமும் சிற்ப வடிவில் காணலாம். இந்த அவதாரத் தொடர்பில், மாவலிச் சக்கர வர்த்தி திருமாலுக்கு மூன்றடி நிலம் தாரை வார்த்துக் கொடுக்குங் காட்சியும் சிற்பத்தில் காணலாம். மேலும், வாமனர் திரிவிக்கிரமராக ஓங்கி உலகளந்த செய்தியினை ஜாம்பவான் வாசித்த வண்ணமும், மற்றொருவர் திருவிக்கிரமனின் வெற்றியைக் குறிக்கும் வகையில் கேடயத்துடன் தலைகுப்புற வீழ்ந்த வண்ணமும் சிற்பத்தில் வடிக்கச் செய்துள்ளதைக் காணலாம்.

அடுத்து அறிதுயில் கொண்ட திருமாலின் குடைவரைக் கோயிலில் கருவறை, மண்டபம் ஆகிய இரு பகுதிகளிலும் சிற்பச் சிறப்பைக் கண்டு மகிழலாம். "கருவறையுள் ஐந்து தலைகளையுடைய அரவணையில் துயிலும் அண்ணலது எழிலார்ந்த சிற்பம் இடம் பெற்றிருக்கிறது. இவரது காலின் அருகில் மது, கைடபர் என்னும்

1. *தமிழகச் சிற்ப, ஓவியக் கலைகள்; கழகப் பதிப்பு, பக். 34-35*

அரக்கர்கள் அறிதுயில் பெருமானைத் தாக்குவதற்கு விரைந்து வருவதாகக் காணப்படுகின்றனர். திருமாலின் உந்திக் கமலத்து உதித்த நான்முகனும், தும்புரு, நாரதர் ஆகியோரும் மேற்பகுதியிலுள்ளனர். இவர்களன்றி ஒரு புறத்தில் சூரியன், சந்திரன் ஆகியோரும், பாம்பணையின் கீழ்ப் பகுதியில் மார்க்கண்டர், வருணன், திருமகள் முதலியோரும், சங்கு, சக்கரம், கதை முதலிய ஆயுத புருடர்களும் அழகுற வீற்றிருக்கின்றனர்''[1] என விளக்கிச் செல்கிறார் டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன்.

மண்டபச் சிற்பங்களைப் பொறுத்தவரையில் நரசிம்மர் குடைவரைக் கோயிலிலுள்ள சிற்பங்களைப் போன்றே பெரும்பாலும் காணப்படுகின்றன. இங்குள்ள நரசிம்மரிடம் மிகுந்த சீற்றத்தினைக் காண முடியவில்லை; இச்சிற்பத்தின் மேற்பகுதியில் கந்தருவர் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. சங்கர நாராயண மூர்த்தி சிற்ப வடிவில் காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது. இத்திருமேனியில் மேலுள்ள வலக் கையில் மானையும், இடக்கையில் சங்கினையும், கீழுள்ள வலக்கை பாம்பினைப் பிடித்தவாறும், இடக்கை இடுப்பினுள் ஊன்றியவாறும் அமைந்துள்ளமை காணத் தக்கது. தெய்வநலச் சூழலை அமைப்பதற்காக நந்தி, கருடன், பார்வதி, திருமகள் முதலிய உருவங்களைச் சிற்பப் படைப்பில் காட்டியுள்ளமை போற்றத் தக்கது.

9. பாண்டியர் காலச் சிற்பங்கள் - சில குறிப்புகள்

பல்லவர் காலக் குடைவரை கோயில்களும் பாறைச் சிற்பங்களும் கோயிற் கட்டடச் சிற்பங்களுமாக வளர்ந்த சிற்பக் கலை வரலாறு கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் ஒரு வகைத் தனித் தன்மையுடன் வளர்ச்சியுற்றது; அந்நிலையில் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் அதிபர்களுக்குமாகப் பெரும் பங்கு உண்டு.

பல்லவர்களின் கலைப் பாணியைப் பின்பற்றிப் பாண்டிய நாட்டில் வெட்டுவான்கோயில் சிற்பச் சிறப்புடன் கட்டப்பட்டுள்ளது. அங்கு முதன்மைச் சிறப்புடன் குறிப்பிடத் தக்கது முருகன் கோயில்; குடவரையில் ஆறு திருக்கைகளுடன் கூடிய திருமுருகனை ஒரே கல்லில் கண்டு மகிழலாம். குடவரையையொட்டி அர்த்த

1. தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள், பக். 36

மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றையும், சம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி திருவுருவங்களையும் காணலாம்.

முருகன் கோயிலுக்குப் பின்னால் மலையின் ஒரு பகுதியை வேறுபடுத்திக் கோயிலாக வெட்டுவான் கோயில் அமைந்துள்ளது. கீழே கபோதத்தில் கந்தர்வர்கள் தலையுடன் கூடிய கூடுகள் உள்ளன; அவற்றின்கீழ் பூதகண வரிசை உள்ளது. தேவ கன்னியர்களின் கண்கவர் எழில் தோற்றம் சிற்பியரின் திறமையைப் புலப்படுத்தும்.

கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் முக மண்டபம் ஏனோ முடிவு பெறாமல் உள்ளது; எனினும், மண்டபத்தின் இரு புறமும் உள்ள நீண்ட பக்கங்களில் பலவகைப்பட்ட நளின முக பாவங் களுடன் கூடிய தலைமுடி அமைப்புகளுடன் கணங்கள் உள்ளன; சில கணங்கள் இசைக் கருவிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேல் திசையில் நரசிம்மரும், வடதிசையில் பிரமனும் அமைந்துள்ளனர். விமானத்தின் நான்கு மூலைகளிலும் நந்திகள் அமர்ந்துள்ளன. பல சிற்பக் கூறுகளுடன் கூடிய விமானம், பாண்டியர் காலச் சிற்பத் திறனைப் புலப்படுத்தும். அந்தச் சிற்பத் திறனில் உமையம்மையின் முக அமைப்பும், மான்மழு ஏந்திய கைகளுடனும், தன் தொடையில் படிந்த இடக் கையுடனும் உடைந்த வலக் கையுடனும் *(நான்கு கைகளுடன்)* காட்சியளிக்கும் சிவனது புன்னகை முகமும் சிற்பியின் கை வண்ணத்தைப் புலப்படுத்தும்.

விமானத்தின் நடுப் பாகத்தில் திருமால் கம்பீரமாக வலக் காலை மடித்து வைத்து, இடக் காலைத் தாமரை மீது பொருத்தியும் அமர்ந்துள்ள எழிற் கோலம் காணத் தக்கது.

இக்கோயிலில் சூரியன், சந்திரன், சூரியனின் தேவி, கந்தன், தேவயானை முதலிய பலரின் திருவுருவங்களும், பாண்டியர்கள் பல்லவரையும் சாளுக்கியரையும் இராஷ்டிரகூடரையும் கலைப் பாணியில் பல கோணங்களில் பின்பற்றி அமைத்திருக்கக் கூடும் எனக் கலைத் திறனாய்வாளர்கள் கருதுவர்.

கழுகுமலையில் சமணப் பள்ளி ஒன்றும் உள்ளது. இங்கே நூற்றுக்கணக்கான சமண தீர்த்தங்கரர் உருவங்கள் காணப்படு கின்றன. மாமல்லபுரத்துக்கு அடுத்த நிலையில், குடை நீழலில் தீர்த்தங்கரர்களை அழகுறச் சிற்பங்களாக அமைத்திருப்பது கண்டு போற்றத் தக்கது. ''இக்குகைத் தளத்தின் மறு பகுதி இன்று சாந்து பூசப் பெற்றுச் சுவர்களுடன் கூடிய அறையாக மாற்றப் பெற் றுள்ளது. மேலும், இதன் ஒரு பகுதியில் பிற்காலத்தில் அய்யனார்

கோயில் ஒன்று, தீர்த்தங்கரர் உருவங்களையும் அவற்றின் கீழே பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளையும் மறைத்து நிற்கிறது''[1] என்று ரா. கலைமான் குறிப்பிடுவது காலத்தின் திருவிளையாடலைப் புலப்படுத்தும்.

பாண்டியர் காலச் சிற்ப மாட்சியும் மிகப் பரந்த சிறப்புடையது; தென்காசிப் பாண்டியர்களும் தம்மளவில் பங்களிப்பைப் புரிந்துள்ளனர். விரிக்கிற் பெருகுமாதலின் சில சிறப்புக் குறிப்புகள் தேவையான இடங்களில் கூறப்பட்டுள்ளன.

10. தேவிகாபுரம் சிற்பங்கள்

மதுரை, திருநெல்வேலி, திருவரங்கம் போன்ற பெருங் கோயிற் சிற்பங்கள் ஒரு புறமிருக்கக் கிருஷ்ணாபுரம் தாடிக்கொம்பு தாரமங்கலம் ஆகிய சிற்பக் களஞ்சியங்கள் வரிசையில் சேர்த்துக் காணத் தக்கது தேவிகாபுரத்துச் சிற்பக் களஞ்சியமாகும்.

திருவண்ணாமலை மாவட்டம் போளூரிலிருந்து 14 கி.மீ. தொலைவிலுள்ளது தேவிகாபுரம். பராசக்தியின் 64 சக்தி பீடங்களுள் ஒன்றாகக் கருதப் பெறும் இத்தலத்தின் மையப் பகுதியில் பிருகன் னாயகி *(பெரிய நாச்சியார்)* ஆலயம் உள்ளது: அருகிலுள்ள குன்றின் மீது கனக கிரீசுவரர் *(பொன்மலை நாதர்)* ஆலயமும் உள்ளது.

கனக கிரீசுவரர் ஆலயத்து இரண்டாம் பிராகாரத்தில் அழகுடன் வடிவமைக்கப்பட்டுள்ள விநாயகர், தேவியர் உடனாய சுப்பிர மணியர், பால சுப்பிரமணியர், ஆலமர் செல்வர், சப்த மாதர்கள், சண்டேசுவரர் திருவுருவங்களைக் காணலாம்.

இந்தக் கோயிலில் சில தூண்களிலே அரிய தெய்வ நலச் சிற்பங்கள் - வேணுகோபாலன், திருமால், நர்த்தன கணபதி, கோவர்த்தன கிரிதாரி, மயில்வாகனன், சிவகாமி உடனாய நடராசர், கஜசம்மாரர், கண்ணப்ப நாயனார் ஆகிய சிற்பத் திருவுருவங்கள் உள்ளன. மேலும், ஈசனை வழிபடும் உமையம்மை, யானை, வியாக்கிரபாதர் ஆகியவர் திருவுருவங்களுடன், இரணிய சம்மாரம் புரியும் நரசிம்மர், அவரருகில் பிரகலாதன், தாருகவன ரிஷி பத்தினியரை மயக்கும் பிட்சாடனர், ரிஷிகளைக் கவர்ந்த மோகினி ஆகியோர் சிற்பத் திருவுருவங்களும் எழில் படைப்புக்களாகும்.

---

1. தினமலர் - தீபாவளி மலர், 1990, பக். 245.

இஃது ஒருபுறமிருக்கப் பிருகன்னாயகியம்மன் கோயிலிலும் சிற்பச் சிறப்பு மக்களைக் கவரும் வண்ணம் உள்ளது.

பிரம்ம தேவனே உருவாக்கியதாக் கூறப்படும் பிருகன்னாயகியின் எழிற் கோலத்தில், மேற்கரங்களில் அங்குசமும் பாசமும் விளங்கக் கீழிரு கரங்களும் வரத அபய முத்திரைகளுடன் அருள் பாலிக்கின்றன; அம்மனின் கருவறையைக் காவல் புரியும் அரபத்ரா, சுபத்ரா ஆகிய துவார பாலகிகளும் நேர்த்தியாக அமைந்துள்ளனர்.

அம்மன் கோயிலில் ஈசனைத் தொழும் அம்மன், நரசிம்மர், பூம்பாவையை எலும்பினின்றும் உயிர்ப்பிக்கும் சம்பந்தர், முதலையுண்ட பாலனை மீட்டும் உயிர்ப்பிக்கும் சுந்தரர், காலசம்மார மூர்த்தி, காளியை நடனத்தில் வெற்றி கொள்ளும் தாண்டவர், கஜ சம்மாரர், அன்னவூர்தியில் தேவியுடன் அமர்ந்துள்ள பிரமன், தவக் கோலத்தில் ஈசனுடன் போரிடும் அருச்சுனன், மகிடாசுரனை அடக்கும் ஈசுவரி, பிட்சாடனர், மோகினி ஆகியோருடன் ரிஷிகளும், ரிஷி பத்தினியரும் ஆகிய திருவுருவங்கள் அற்புதமாகத் தூண்களை அலங்கரிக்கக் காணலாம்.

சிற்பியர் தம் கற்பனைத் திறத்தை மிகச் சிறப்புடன் சிற்பப் படைப்புக்களாக உருவாக்கியுள்ளதை நின்று நிதானித்துக் கண்டாலொழிய சிற்ப அழகனுபவத்தை உணர்ந்து கொள்ள முடியாது.

அம்மன் கோயிலில் இடப வாகனர், கருடாழ்வார், ஆடல் வல்லான், சிறுத்தொண்டர், விநாயகர், சுப்பிரமணியர், அம்மன் ஆகிய திருவுருவங்களும் தூணில் இடம் கொண்டுள்ளன. நரசிம்ம மூர்த்தி, நந்தி தேவர் போன்ற உருவங்கள் இராசகோபுரத்தின் கீழ்ப் பகுதியில் காணப்படுகின்றன. அவையும், கல்யாண மண்டபத்தில் காணலாகும் மனுநீதிச் சோழனின் வரலாற்றை விளக்கும் சிற்பத் தொகுதியும், ஆலய மதிற் சுவரில் காணலாகும் பல விலங்குகளின் உருவங்களும் சிற்பியரின் கலைத் திறனைப் புலப்படுத்தும் வகையில் உள்ளன. தேவிகாபுரச் சிற்பச் சிறப்பில் நரசிம்மரை வீழ்த்தும் சரபேசுவரர் திருக்கோலம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இத்தகைய சிற்ப அமைப்பு வேறெங்கும் காண இயலாது.

சுருக்கமாகக் கூறினால், சிற்பக் களஞ்சியமாக விளங்கும் தேவிகாபுரத்தில் சைவ-வைணவச் சமயக் கூறுகள் கலைவண்ணம் கொண்டுள்ளன எனலாம்; சக்திக்குச் சிறப்பிடமளிக்கும் தேவிகா புரத்தில், பன்னிரு கைப் பெருமாளாகிய ஆறுமுகனின் திருவுருவம்

- சக்திதரனாகிய மயில்வாகனன் திருவுருவம் - மலைக் கோயிலில் காணப்படுகிறது. ''காமக்கூர் என்ற தலத்திலுள்ள ஆறுமுகனின் திருவுருவமும் தேவிகாபுரம் மலைக் கோயிலிலுள்ள ஆறுமுகனின் படிமமும் ஒரே சிற்பியால் உருவாக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்''[1] என்று எம். ராஜகோபாலன் எழுதிச் செல்வதும் சிற்ப நோக்கில் சிந்திக்கத் தக்கது.

11. தாடிக் கொம்பு சௌந்திரராசப் பெருமாள் கோயில் சிற்பங்கள்

திண்டுக்கல்லிலிருந்து 5 கல் தொலைவிலுள்ள தாடிக் கொம்பு சௌந்திரராசப் பெருமாள் கோயில், நாயக்கர் காலச் சிறப்புடன் கூடிய சிற்பக் கலைக் களஞ்சியம் ஆகும். அக்காலச் சிற்பியரின் கலைத் திறமையைப் போற்றும் வகையில் பேரூர் பட்டீசுவரர் கோயில், தாரமங்கலம் கயிலாச நாதர் கோயில் ஆகியவற்றுடன் இந்தக் கோயிலையும் சேர்த்தே குறிப்பிடுவர்.

தாடிக்கொம்பு எனும் தெலுங்குச் சொல்லுக்குப் பனை மரம் என்பது பொருள். தாடிக் கொம்புக் கோயிலில் மூல மூர்த்தி சௌந்திரராசப் பெருமாள் வனப்புடன் காணப்படுகிறார். இவ் வாலயத்தில் இலட்சுமி, விசுவக்சேனர், சுதர்சனமாகிய சக்கரத் தாழ்வார், பைரவர், ஆஞ்சநேயர், இலட்சுமிநரசிம்மர் ஆகியோருக்குத் தனிச் சன்னிதிகள் அமைந்துள்ளன.

ஆலயத்தின் வெளித் திருச்சுற்றில் சுதர்சன சக்கரத்தின் அழகு மிகு சிற்பம் உள்ளது: இச்சிற்பத்தின் சக்கரப் பீடம் சுழலும் வகையில் சிற்பக் கலைத் திறன் கொண்டு விளங்குகிறது.

இலட்சுமி சன்னிதியின் முன் மண்டபத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நிலையில் ஒவ்வொன்றும் 12 அடி உயரத்தில் அமைந்துள்ள கண்கவர் சிற்பங்கள் தெய்வநலப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு வரிசைக்கும் ஆறு சிற்பங்களாக இரு வரிசைகளில் பன்னிரண்டு அழகிய சிற்பங்களை அமைத் துள்ளனர். இவ்வாறே அர்த்த மண்டபத்துக்கும் மகா மண்டபத்துக்கும் இடையே வலப் புறத் தூணில் வேலைப்பாடுடைய விநாயகர் நின்ற கோலத்துடன் காணப்படுகிறார். வைணவ ஆலயமாக இஃது அமைந்திருப்பினும் சைவ-வைணவ ஒற்றுமையைப் புலப்படுத்தும்

1. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, பிப்ரவரி 2000, பக். 30

வண்ணம் கருடன், அனுமன் திருமாலைத் தாங்கும் சிற்பப் படைப்புகளும், ஊர்த்துவ தாண்டவர், இரதி, மன்மதன், இரணிய வதம் புரியும் நரசிம்மர், உலகளந்த பெருமாளாகிய திரிவிக்கிரமர் ஆகிய சிற்பங்களும் நேர்த்தியாகக் காட்சியளிக்கின்றன.

மண்டபத்தின் இரு மருங்கிலும் ஏழு சுரங்களை எழுப்பும் இசைத் தூண்களும் உள்ளன. நாட்டியக் கலையை நினைவூட்டும் வகையில் முத்திரைகள் அபிநயங்கள் ஆகியவற்றைப் புலப்படுத்திடும் நடனச் சிற்பங்களும் காணப்படுகின்றன. சிறப்பாக, இராஜ கோபுரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் மண்டபத்துக் கற்றூண்களில் நடன மாதர் உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. எனவே, 108 கரணங்கள் தொடர்பாக ஆராய்ச்சி புரிவதற்கு இங்கும் இடமுள்ளது.

கற்களுக்கு உயிரோட்டத்தை உண்டு பண்ணச் செய்து, சௌந்தரியம் எனும் கலியாண குணமுடைய சௌந்திரராசப் பெருமாளையே அங்கு நிலைபெறச் செய்த பெருமை விசய நகர மன்னர் அச்சுத தேவராயருக்குக் கி.பி. 1538ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

12. கிருஷ்ணாபுரம் வேங்கடநாதர் கோயில் - சிற்பச் சிறப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டைக்கு 6 கல் தொலைவிலுள்ள கிருஷ்ணாபுரம் கோயில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணப்ப நாயக்கர் பெயரால் அவருடைய தளபதியால் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் வீரப்ப நாயக்கர் மண்டபமும், அரங்க மண்டபமும் சிற்ப நுணுக்கம் வாய்ந்த அற்புதக் கலைப் படைப்புகளாக உலகப் புகழ் பெற்றவை. இக்கோயிலில் மூன்று தட்டுகளுடைய இராஜகோபுரம் புராண இதிகாசக் கதைகளைப் புலப் படுத்தும் வகையில் சிறந்த சிற்பங்களைக் கொண்டு விளங்கு கின்றது. அஃதாவது, கோபுரத்தின் முதல் தட்டின் உட்புறம் மண்டபம் போல் அமைந்திருக்க, அதனைத் தாங்கி நிற்பவை வீரன் - நடன மாதர் உருவங்களே; அவை மர வேலைப்பாடு எனக் காணும் போது வியப்பு விஞ்சும். கோயிலின் உள் மண்டபத்து மேற்புறத்தில் இராமன், கண்ணன், நடன மங்கை, குறவன், குறத்தி, ஆழ்வார்கள், ஸ்ரீதேவி பூதேவி உடனாய திருமால் திருவுருவங்கள் சிற்ப எழிலுடன் காட்சியளிக்கின்றன. இவ்வாறான எழிற் சிற்பங்கள் கீழேயுள்ள மண்டபங்களிலும் காணலாம். திருமாலின் மோகினியவதாரத்தில் தாருக முனிவர்கள் மயங்கி நிற்பதும், நாயக்க மன்னன் உலா

வருங்கோலமும் இங்கு மட்டுமே காணப்படுகின்றன. பல்லக்கில் நாயக்க மன்னர், படைகள் சூழ்ந்துவர, ஒரு காலைக் குத்திட்டு அதன் மீது கையை நீட்டி வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் பெருமிதத் தோற்றம் சிற்பத்தில் வடிக்கப்பட்டுள்ளது. நான்கு அங்குல உருவத் தினுள் மன்னரின் உடையும் தலைப்பாகையும் மிகத் துல்லியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்த ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே வரின், அடுத்த கலைக் கருவூலமாகிய முன் மண்டபம் வனப்புறு சிற்பங்களைக் கொண்டுள்ளது.

மண்டபத்தின் முன்புறத்திலேயே ஆறு தூண்கள் உள்ளன; அவற்றில் ஆறு பெரிய சிலைகள் - நடன மாது ஒருத்தி, அரச குமாரனைக் குறத்தி தூக்கிச் செல்லுதல், அருச்சுனன், கர்ணன், வீரனொருவன் அரச குமரியைத் தூக்கிச் செல்லுதல், நடன மாது ஒருத்தி ஆகிய சிற்பப் படைப்புக்கள் காணப்படுகின்றன. நடன மாதின் உருவத்தில் அவளது அலங்காரமும் அமைப்பும் அக்காலக் கலையொப்பனையைப் பிரதிபலிக்கின்றன. குறத்தியின் பாசி மணி மாலைகளும் வடிந்துள்ள காதுகளும் இயற்கையாக உள்ளன. அரச குமரிக்கேற்ற ஆடைத் தோற்றம், உழைப்பால் முரடு தட்டிய உருவத்தில் கருஞ்சட்டையுடன் வீரன் காட்சியளிக்கிறான். வீரனின் விலாவில் ஈட்டி பாய்ந்துள்ளமையால், அங்கிருந்து இரத்தம் கொப் புளித்துக் கிளம்புவதைச் சிற்பி, செந்நிறப் பகுதியாகக் காட்டியிருக் கிறான்.

இத்தகைய சிற்பங்களைக் கண்டு வியந்து முனைவர் பா. சௌந்தரா எழுதுகையில், ''இந்தத் தூண்களின் நான்கு பக்கங்களிலும் சிற்பங்கள் உள்ளன. எல்லாவற்றையும் ஒருசேரப் பார்க்கும் போது ஒவ்வொரு தூணிலும் ஒரு கதை அடங்கியிருப்பதைக் காணலாம். குறத்தி அரச குமாரனைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள். தூணின் கீழ்ப்புறம் அரசி அன்னத்தின்மீது அமர்ந்து கிலுகிலுப்பையைக் காட்டி அரச குமாரன் கவனத்தை ஈர்க்கப் பார்க்கிறாள்; தோழியர் கவலையோடு தொடர் கின்றனர்; குறத்தி குமாரனுடன் ஓடியே போய் விடுகிறாள். அரசி குறி கேட்கிறாள். 'உன் தலைவிதி; உன் மகன் இனி வாரான்' என்கிறாள் கட்டுவிச்சி. மன்னன் படையுடன் மகனைத் தேடி வரு கிறான்; வழிமறித்த வீரனைக் குதிரை மிதித்துக் கொண்டு பாய்ந்து செல்கிறது. இப்படி ஒரு முழு நாடகமே நம்முன் அரங்கேறுகிறது''1

1. Heritage of the Tamil Arts and Architecture, International Institute of Tamil Studies, Chennai, p. 400

என்று விளக்கிச் செல்வது இங்குள்ள சிற்பக் கலைப் படைப்பின் நேர்த்தியைக் குறிக்கும். இங்குள்ள தூண் ஒன்றில், பாரத நிகழ்ச்சி களான பாசுபதாஸ்திரம் பெற அருச்சுனன் தவம் புரிதல், விராட நகரில் பேடியாக அருச்சுனன் தோன்றுதல், கீசக வதம் முதலிய வற்றைச் சிற்பமாகக் காணலாம்.

உள்ளே அரங்க மண்டபத்தில், எதிர் எதிரான தூண்களில் வீர பத்திரர் அவருக்கமைந்த ஏவலர், மன்மதன், இரதி, தருமபுத்திரன், சிங்கள அரசகுமரி எனப் பெரிய சிற்பங்கள் உள்ளன. அதே அரங்க மண்டபத்தில் மேற்கட்டு முழுவதும் பாம்பணையில் பள்ளி கொள்ளும் பெருமாளும், அருகில் நாச்சியாருடன் நின்றிலங்கும் திருமாலும், படைப்புச் சிற்பங்களாக அணி செய்வதையும் காணலாம். ஓரிடத்தில் நம்மாழ்வார், நாத முனிகள், மதுரகவி ஆகிய அருளாளர் கள் திருவுருவங்கள் உள்ளன.

மேலும், தூண்களில் இராமாநுசர், வேதாந்த தேசிகர் திரு வுருவங்களும், நவநீதக் கண்ணன், மருத மரங்களைச் சாய்த்த கண்ணன் ஆகிய கிருஷ்ணாவதாரக் காட்சிச் சிற்பங்களும் உள்ளன.

இவை ஒருபுறமிருக்கச் சிற்ப நுணுக்கத்துடன் கூடிய யானையும் காளையும் சேர்ந்தமைந்த சிற்பம் *(உடல் தனித் தனியாகவும் தலைகள் இணைந்தும் அமைந்தது)* உள்ளது; ஒன்றை மறைத்துக் கொண்டு மற்றொன்றைப் பார்த்தால் முழுமை தெரியும்படி உள்ளது சிற்பத் திறன். புருஷா மிருகமும் *(பாரதத்தில் குறிப்பிடப்படுவது)* சிற்ப வரிசையில் இடம் கொண்டுள்ளது.

கருவறையில் ஸ்ரீதேவி பூதேவியுடன் வேங்கடநாதர் சேவை சாதிக்கிறார். உற்சவ மூர்த்தியாகப் பெருமாள் அலர்மேலுமங்கை பத்மாவதி உள்ளிட்ட தேவியர் நால்வருடன் எழுந்தருளியுள்ளார். எல்லாம் சிற்பக் கலை மயமே![1]

சிற்பத் தூண்களைப் பொறுத்த வரையில் தாடிக் கொம்பு, கிருஷ்ணாபுரம், குடந்தை இராமசாமி கோயில், தாரமங்கலம் ஆகிய இடங்களில் காணலாகும் சிற்ப மாட்சி அளவிடற்கரியது என்பர்.


13. தென்காசி விசுவநாதர் கோயில் - சிற்பக் கலைக் கூடம்

மேலப் புலியூர் என இக்காலத்தில் வழங்கும் தென்காசிப் பகுதியை 500 ஆண்டுகளுக்கு முன், சமயப் பற்றுடன் ஆண்டு வந்த

1 இக்கட்டுரை பல நூலாதாரங்களைக் கொண்டும் நேரில் கண்டும் எழுதப் பெற்றது.




































பெருமையுடையவன் அரிகேசரி பராக்கிரம பாண்டியன்; அவனது பெருமுயற்சியால் சிற்பக் கலைக் கருவூலமாக உருவாகியதே தென் காசிக் கோயிலாகும்.

மாமல்லபுரம், கிருஷ்ணாபுரம், தாடிக் கொம்பு, பேரூர் முதலிய தலங்களில் காணலாகும் சிற்ப வளங்களைக் கண்டு வருகையில், தென்காசிச் சிற்பங்களைக் காணாமல் போனால் பொருத்தமாகாது. பராக்கிரம பாண்டியனின் உயிரோட்டமே தென்காசிக் கோயிலாக உருவெடுத்து அவனை என்றும் சிரஞ்சீவியாக வாழச் செய்கிறது எனலாம்.

கோபுரத்துக்கும் சுவாமிகோயிலுக்கும் இடையே ஒரு வியத் தகு கொடி மண்டபம் அமைந்துள்ளது; அந்த மண்டபத்தில் அழகிய சிற்பங்களைத் தாங்கிய பத்துத் தூண்கள் உள்ளன. மண்டபத்தில் இரண்டு முகப்புத் தூண்களிலும் அழகிய இளநங்கையரின் உருவங்கள், காண வருப்வ்ரை வரவேற்பவை போல வனப்புடன் அமைந் துள்ளன. ஒரு பெண் தன் அன்பு நாயகனை எதிர்பார்த்துத் தன்னை அலங்கரித்து நிற்கும் கோலம்; அவள் தன் இடக்கையில் கண்ணாடி யினை ஏந்திய வண்ணம், வலக்கையைத் தலைக்கு மேல் பின்புற மாகத் தூக்கிய வண்ணம் நெற்றியில் திலகமிடுகிற காட்சி. இவ்வாறு புன்னகையுடன் தோற்றமளிக்கும் பெண்- திலகமிடுங் கோலத்தில் காணலாகும் நங்கை - திருவரங்கத்தில் ஒரு தூணில் தோன்றும் திலகமிடும் பெண்ணுருவத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. மற்றொரு பெண்ணின் உருவமும் சிற்பியின் கற்பனையில் வளர்ந்த காரிகை; பூங்கொடி போன்ற பொலிவு கொண்டது.

மண்டபத்தில் பக்க வரிசையிலுள்ள எட்டுத் தூண்களிலும் சமயத் தொடர்பான தெய்வநலத் திருவுருவங்கள் அலங்கரிக்கக் காணலாம்.

மூன்றாவது தூணில் நடராசப் பெருமானின் ஆடல் திருக் கோலம். வானமுகடு வரை அவனது திருக்கூத்து நடப்பதான உள்ளுறை கொண்டது; இறைவனது ஊர்த்துவ தாண்டவப் பொலிவை இதனுள் காணலாம்.

நான்காவது தூணில் ஆடல் வல்லானின் ஆனந்த மயமான தாண்டவம் மெய்ப் பொருளியலை உணர்த்தும் பாங்கினது.

ஐந்தாவது தூணில் இரதியின் வனப்புறு தோற்றம் உள்ளது; இந்த இரதியும், எட்டாவது தூணிலுள்ள மன்மதனும் பெருமகிழ்ச்சி

யுடன் எதிரெதிராக நின்று மலர்களைக் கொண்டு காதலை வளர்க்கும் நோக்கிலே போர் புரிகின்ற காட்சி காண்கின்ற எவரை யும் கவர்கின்ற நிலையிலுள்ளது.

14. கங்கை கொண்ட சோழபுரம் - சிற்ப வளம்

சோழ மன்னர்கள் தாம் பகைப்புலத்தே பெற்ற வெற்றியைக் கொண்டாட, அங்குப் பெற்ற பொருட் குவையை ஆலயம் கட்டு வதில் செலவழித்துள்ளனர். முதலாம் இராசராசன் தஞ்சையில் இராசராசேச்சுரம் *(பெரிய கோயில்)* எடுப்பித்தது போன்று, அவன் மகன் முதலாம் இராசேந்திரன், கங்கையும் கடாரமும் கொண்ட வீர மன்னனாய்க் கங்கை கொண்ட சோழேச்சுரம் எடுப்பித்தான். சிற்பக் கலையமைப்பில் தஞ்சைப் பெரிய கோயிலில், கருவறைக்கு மேல் அமைந்த விமானம் 'ஆண் சிறப்பு' எனின், கங்கை கொண்ட சோழ புரத்தில் எடுப்பித்த விமானம் 'பெண் சிறப்பு' எனக் கூறுவர்.

இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகத் தோற்றுவித்த காலம் (கி.பி. 1025 முதல்) மிகச் சிறப்பான காலம் என்பர். அக்காலத்தே அவன் திறமைக்கும் கலையீடுபாட்டுக்கும் அடையாளமாகக் கங்கை கொண்ட சோழீச்சுரம் அமையலாயிற்று.

தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அடுத்த சிறப்பினதாய், உயரத்தி லும் தோற்றத்திலுமுள்ள கங்கை கொண்ட சோழீச்சுவரர் விமானம் கீழே சதுரமாகவும், அதற்கு மேலே எண் பட்டை, வடிவிலும், மேலே உச்சியில் வட்ட அமைப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் காணலாகும் சிவலிங்க அமைப்பில் கீழே சதுரமாக வும், இடையில் எட்டுப் பட்டை வடிவிலும், மேலே வட்ட வடிவிலும உள்ளதுபோலவே அதன் புறத் தோற்றமான விமானமும் அமைந்துள்ளது. இது சிற்பியரின் தொழில் திறமையைப் புலப் படுத்துவதாக உள்ளது. இக்கோயிற் சுவரின் புறத்தே கீழ்ப் பகுதியில் பல தேவ கோட்டங்கள் உள்ளன. அவற்றில் சிவபெருமானுடைய அருளையும் ஆற்றலையும் புலப்படுத்தும் வகையில் அமைந்த பல திருவுருவங்கள் சிற்பக் கலைச் செல்வங்களாக அமைந்துள்ளன.

கங்கை கொண்ட சோழபுரத் திருக்கோயிலைப் பற்றி டாக்டர் இரா. நாகசாமி எழுதுகையில், ''தஞ்சைக் கோயிலைத் தோற்று வித்துச் சிற்பங்களையும் படைத்து அதன் வாயிலாக அனுபவம் முதிர்ந்த சிற்பிகள் செய்து வைத்துள்ளதால், மிகப் பொலிவுடைய தாகக் காணப்படுகின்றது. இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் சிறந்த

படைப்பு எனில், அது மிகையாகாது. ஒவ்வொரு சிற்பத்தின் அங்க அமைப்பும், முகப் பொலிவும் கண்டு கண்டு இன்புறத் தக்கன. தென்புறத்திலிருந்து வலப்புறமாக வந்தோமானால் வரிசையாகக் கீழ்க்கண்ட சிற்பங்கள் உள்ளன.

தெற்கே நடமாடுகின்ற நர்த்தனமாடும் கணபதியின் உருவம் உள்ளது. அதற்கடுத்து உமையொரு பாகனின் உருவம் - அர்த்தநாரி யின் சிலை. அடுத்துக் காணப்படுவது தக்ஷிணாமூர்த்தியின் சிலை; ஆனால் இப்போதுள்ள தக்ஷிணாமூர்த்தியின் சிற்பம் காலத்தால் பிற்பட்டது. அதன் அருகிலுள்ள முனிவர்களின் சிலைகளோ கோயிலின் சம காலத்தவை. அதனை அடுத்து உள்ளது அரி-அரன் *(சங்கர நாராயணன்)* சிற்பம்; இது கண்டு களிக்கத் தக்கதொன்றாம். அடுத்து, தென் சுவரின் மேலைக் கோடியில் உள்ளது ஆடல் வல்லானின் அற்புதச் சிற்பம். முகத்தில் புன்முறுவல் தவழக் கையிலே அனல் ஏந்தி ஆனந்தத் தாண்டவம் ஆடும் அண்ணலின் உருவம், தெய்வத்தின் தன்மையை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் தன்மை வாய்ந்ததாகும். ஆனந்தக் கூத்தனின் அருகில் உமையன்னை நந்தியின் அருகில் நின்று கொண்டு, தாண்டவத்தைக் கண்டு லயித்து நிற்கிறாள். மறுபால் குடமுழா வாசிக்கும் நந்திகேசு வரனையும் காணலாம். ஆடுகின்ற பெருமானின் காலடியில் கணங்கள் ஆடுகின்றன; இங்கு ஓர் அற்புத உருவைக் காணலாம். எலும்பும் தோலுமாய், ஆனால் பக்தியே உருவாகக் காரைக் காலம்மை தாளம் போடுகின்ற காட்சி: இது மிகவும் அரிய காட்சி. தஞ்சாவூர்க் கோயிலிலும் இதே இடத்தில் நடராஜப் பெருமானின் உருவம் இருக்கிறது. ஆனால், அதன் கீழ் காரைக்காலம்மையாரின் உருவம் இல்லை. இங்குக் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆடுகின்ற அண்ணலின் தூக்கிய திருவடியின் கீழ் அம்மை அமர்ந் துள்ளது குறிப்பிடத் தக்கது''[1] என்று ஆர்ராய்ச்சி நோக்கில் குறிப் பிட்டுச் செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கது. இதனால் சிற்பக் கலையில் அனுபவம் தருகின்ற படிநிலைவளர்ச்சியைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், இக்கோயிலின் மேற்குப் புறச் சுவரில் தேவ கோட்டத்தில் கங்காதரர், இலிங்கோத்பவர், திருமால், சுப்பிரமணியர், திருமாலுக்கருளும் மூர்த்தி ஆகிய சிலைகள் உள்ளன. வடப்புறச் சுவரில் காலசம்மாரர், துர்க்கை, பிரம்மன், பைரவர், காம தகன மூர்த்தி

1. *கங்கை கொண்ட சோழபுரம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, பக். 16-17*

ஆகியோர் திருவுருவங்களைக் காணலாம். ''பிரும்மாவின் உருவம் தாடியுடனும் மூன்று தலைகள் தெரியும் வகையிலும் உள்ளது. அவரது மேல் கரங்களில் யாகத்துக்குப் பயன்படும் ச்ருக், ச்ரவம் என்னும் மரத்தாலான கலங்கள் உள்ளன. அவருக்குத் தேவியர் இருவர் காணப்படுகின்றனர். ஒரு தேவி சரசுவதியாகும்; மற்றவர் சாவித்திரி தேவியாகும்; இது ஒரு அரிய காட்சி. இச்சுவரின் கிழக்குக் கோடியில் உள்ள காமாந்தகர் *(காமதகனர்)* சிலை மிகவும் பெருமித மான அமைப்புடையது. சிவபெருமானும் அவர் சுட்டிக் காட்டும் கையும் போற்றத் தகும் வனப்புடையவை''[1] என்று கலையனுபவத் துடன் டாக்டர் இரா. நாகசாமி வழங்கும் குறிப்பு நோக்கத் தக்கது.

இக்கோயிலின் வடப்புறப் பக்கவாட்டில், அர்த்த மண்டபத் துக்குச் செல்லும் படிகள் உள்ளன. அங்கு இருமருங்கும் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் இரு சிற்பங்கள் உள்ளன. மேற்குப் புறம் பார்த்த நிலையில் சரசுவதியின் சிற்பம், கைகளில் உருத்திராக்க மாலை, ஓலைச் சுவடி ஆகியவற்றை ஏந்தி, திருமுகத்தில் ஞானமும் புன்னகையும் தவழும் வண்ணம் கவின்கலையின் இருப்பிடமாகக் காட்சியளிக்கிறது.

மற்றொரு சிற்பம் சண்டேச அனுக்கிரக மூர்த்தி, கிழக்கு நோக்கியுள்ளது. சிவபிரான் உமாதேவியுடன் அமர்ந்திருக்கும் நிலையில் அவரது காலடியில் கை கூப்பி வணங்கியவாறு சண்டேசுவர நாயனார் அமர்ந்துள்ளார்; அவரது அடியில் மலர் மாலையைச் சூட்டி யருள்கின்றார் சிவபிரான். சிவன், உமை, சண்டேசுவரர் ஆகியோர் திருமுகங்களில் தெய்வ நலப் பொலிவு குடிகொண்டிருப்பதைக் காண்கையில், கருங்கல்லுக்கு ஆன்மநல ஒளியூட்டிய சிற்பியரின் கலை வண்ணத்தை மெய்சிலிர்க்கப் போற்றிக் கொண்டாடலாம்.

இக்கோயிலின் தொடர்புடன் அமைந்துள்ள வட கயிலாயம், தென் கயிலாயம் ஆகிய இருகோயில்களிலும் நேர்த்தியான பல சிற்பங்கள் உள்ளன. வட கயிலாயத்தின் அதிட்டானப் பகுதியில் நாட்டியமாடுவோர் சிற்பங்களும் காணத் தக்கவை.

''உடையார் ஸ்ரீ விஜய ராஜேந்திர சோழதேவர் கலியாண புர மெரித்துக் கொண்டு வந்த துவாரபாலர்'' என்று கல்வெட்டு உடைய சிற்பம், இக்காலத்தில் தஞ்சைக் கலைக் கூடத்துக் கொணரப்பட்டுக் காட்சியளிக்கிறது.

---

1 மேலது (கங்கை கொண்ட சோழபுரம்), பக். 18

சாளுக்கிய நாட்டிலிருந்து கங்கை கொண்ட சோழீச்சுவரத் துக்குக் கொண்டு வரப்பட்ட சிற்பங்களுள் மிகச் சிறந்தவை இரண்டு உள்ளன. ஒன்று, சிம்மக் கேணிக்கு அருகிலுள்ள சிறு கோயிலிலே வழிபாட்டில் உள்ள துர்க்கை சிலை. பல திருக்கரங்களுடன் கூடிய துர்க்கை, ஒரு எருமையின் தலையைத் துண்டிக்க, அதன் கழுத்தி லிருந்து மனித உருவில் ஓர் அசுரன் வெளிப்படுவதையும், இறைவி யின் சிம்மம் மகிடாசுரனைக் கடிப்பதையும் காணலாம். தமிழகத் தில் மகிஷன் மனித உருவமும் எருமைத் தலையும் கொண்டிருப்பது சிறப்பு இயல்பு. ஆனால், இங்கு எருமையுடலும், அதிலிருந்து தோன்றும் மனித உருவமுமாக மகிஷன் சிற்ப வடிவில் காட்டி யிருப்பது சாளுக்கியச் சிற்ப மரபு எனத் தெரிய வரும்.

அடுத்ததாக, நவக்கிரகம் என வணங்கப்படும் சூரிய பீடமாகும். இந்தச் சாளுக்கிய சிற்பத்தில், அலர்ந்த தாமரை மலரும், அதன் கீழே ஒற்றைச் சக்கரமுள்ள தேரும், அதனை இழுக்கும் குதிரை களும், அதனைச் செலுத்தி வரும் அருணனும், எட்டுத் திக்கு களிலும் காணலாகும் உருவங்களும் வியத்தகு சிற்பப் புதுமையும் எழிலும் கொண்டவை. கிரகப் பெயர்ச்சியின் போது இந்தச் சூரிய பீடத்திற்குச் சிறப்பான விழா வழிபாடு உண்டு. ஆகவே, கங்கை கொண்ட சோழீச்சுவரமும் சிற்பக் கருவூலம் எனப் போற்றிக் கொண்டாடலாம்.

15. தானங்களைக் குறித்திடும் சிற்பப் படைப்புகள்

"தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்" (குறள் 19)

என்பது வள்ளுவர் வாய்மொழி. மழை பொழியாவிடின் இல்லறத் தார் தானம் செய்ய முடியாது; துறவறத்தார் சிறப்பாகத் தவமும் செய்திட இயலாது. நாட்டு நலம் குறித்தும், தோஷம் சாபம் முதலிய வற்றைக் கழிப்பது குறித்தும் தானம் புரிதல் வேண்டுமென்பது மக்களின் நம்பிக்கை.

மன்னர்கள் தம் பழிகளைப் போக்கிக் கொள்வதற்குத் துலாபார மும் இரணிய கருப்பமும் செய்துள்ளனர் என்பதை நாட்டு வரலாறு கூறும். இந்தியப் பெருநாடு முழுவதும் இந்த வழக்கம் இருந்து வந்துள்ளது. இராவணனைப் போரில் இராமன் கொன்றதன் காரண மாக, பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டமையால், தோஷ நிவர்த்திக் காக யாகம் புரிந்து தங்கத்தால் பசு செய்து, அதனுள் 5 நாள்கள்

கருப்ப வாசம் செய்து தானம் புரிந்தான் என்று ஸ்ரீ பாத்ம புராணம் *(உத்ர பாகம், அத். 10; ஹேமரங்கஸ்தல வைபவம்)* குறிப்பிடும். தமிழ்நாட்டு மன்னர்களும் இவ்வாறு இரணிய கருப்பம் செய்துள்ளனர்.

இப்படிப் பொன்னாலான பசுவைச் செய்வதென்பது ஒரு வகைச் சிறப்பக் கலைப் படைப்பு. இரணிய கருப்பம் என்பதை வடமொழியாளர்கள் தமிழர்களுக்குக் கற்றுத் தந்த தான வகை யாகும். புராண - ஆகமத் தாக்கத்தால் தமிழ் நாட்டில் வழங்கிய தானங்கள் பற்றி நிர்ணய சிந்து எனும் வடமொழி நூலால் தெரிந்து கொள்ளலாம்; பதினாறு வகை தானங்களாகக் கூறுகையில், ''கோதானம், பூமி தானம், படுக்கை தானம் *(படுக்கை விளக்கு, மலர்கள், பழம் ஆகியவற்றோடு)* இரணிய தானம் *(தங்கம்)*, வெள்ளி தானம், தேர் தானம், கஜ தானம் *(யானை)*, அசுவதானம் *(குதிரை)*, வஸ்திர தானம் *(ஆடை)*, தானிய தானம், இரத்தி தானம், வீடு தானம், கம்பளி தானம், கன்னியா தானம், அன்ன தானம் *(அறுசுவை உண்டியளித்தல்)* குடை தானம் என்பவை என விவரிக்கின்றது''[1] என வருங்குறிப்பினைக் காணலாம்.

மன்னர்களும் மக்களும் இத்தகைய தானங்களைப் புரிதல் வேண்டுமென்பதற்காகக் கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தை அலங்கரிக்கும் வண்ணம் சோடச மண்டபங்களைத் தஞ்சை நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கர் கட்டுவித்தார். அந்த மண்டபத்து விதானங்களில் பதினாறு வகைத் தான நிகழ்ச்சிகளையும் சிறப்பக் காட்சிகளாக அமைத்துத் தந்துள்ளார்; அவரே மகாமகத் தீர்த்தமாடி இவ்வாறு அமைத்துத் தர முற்பட்டார் என்பது வரலாறு.

15.1 மராட்டிய மன்னர் காலத்துத் தானங்கள் பற்றிய குறிப்புகள்

தஞ்சை மராட்டிய மன்னனர்கள் நாடாண்ட காலத்தில் இசை, ஓவியம், சிற்பம், கட்டடம் முதலிய கவின்கலைகள் வளர்ச்சிக் காகப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர்; அவை விரிக்கிற் பெருகும். சில குறிப்புகளை மட்டும் காண்போம்.

தஞ்சாவூரிலுள்ள அருள்மிகு கோதண்டராமன் திருக்கோயில், மராட்டிய மன்னர் பிரதாப் சிங் என்பவரால் *(கி.பி. 1739-1763)* கட்டப்பட்டது. மராட்டிய அரசி எமுனாம்பாள் பாஹி சாகெப்

1. கும்பகோணம் மகாமகம் (விழாக் குழுவினர்) சிறப்பு மலர், 1992.

இவ்வாலயப் பூசை வழிபாடுகள் நன்கு நடப்பதற்காக, மூவேந்தர் காலத்தில் பெருங்கொடைகள் நல்கியதைப் போல, ஒட்டக் குடி, ரிஷியூர், கொட்டையூர், மகிமாலை ஆகிய சிற்றூர்களில் சுமார் 130 ஏக்கர் நன்செய் நிலங்களைத் தானமளித்துள்ளார்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசமான தஞ்சை மாமணிக் கோயில், மராட்டிய மன்னர் காலத்துப் பெருந்திருப்பணிகளால் சிறந்த கலைக் கூடமாக ஆக்கப்பட் டுள்ளது.

செப்புத் தகட்டினால் போர்த்தப்பட்ட கொடிக் கம்பத்தின் அடிப் பகுதியில் மராட்டிய மன்னர் சிவாஜியின் பட்டத்தரசியான காமாட்சியம்பா பாயிசாகெப் கி.பி. 1892ஆம் ஆண்டில் பல திருப்பணிகள் புரிந்துள்ள விவரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும், அழகிய வட்டக் கல்லின் மேல் கட்டப்பட்ட கொடிக் கம்பத்தின் அடிப் பகுதியில் கிழக்குப் பக்கம் சீதை இலக்குவன் ஆகியோருடன் இராமனும், தென் பக்கத்தில் சங்கும், மேற்குப் பக்கத்தில் நாமமும், வடக்குப் பக்கம் சக்கராயுதமும் சிறந்த வேலைப்பாடுடைய சிற்பங்களாகும்.

சக்தி வாய்ந்த கருடாழ்வார் சன்னிதி கொடிக் கம்பத்திற்கு அருகிலே முற்பகுதியில் அமைந்துள்ளது.

எவ்வளவோ சிற்பக் கலைப் படைப்புகளுள் மிகவும் கண்டு வழிபடத் தக்க திருவுருவங்களுள் மூன்று படைப்புக்கள் மிகவும் சிறப்புடையவை. 1. சங்கு சக்கரத்துடன் கூடிய தும்பிக்கையாழ்வார் *(சன்னிதி கொண்டுள்ளார்)* 2. மகா சுதர்சன மூர்த்தி பதினாறு திருக்கைகளுடன் அறுகோணச் சக்கரத்தில் பிரத்தியட்ச மூர்த்தி யாய்ப் பதினாறு கைகளிலும் படைக் கருவிகள் தாங்கிய திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார்; பின்புறம் முக்கோணத்தில் அருள் மிகு யோக நரசிம்மர் திருவுருவம் அமைந்துள்ளது. 3. ஆலய வாயிற் புறத்து வனப்புமிகு இரத மண்டபத்தில் காணலாகும் அருள்மிகு ஹயக்ரீவப் பெருமானின் திருவுருவம்.

இக்கோயிலின் அழகற்புதச் சிற்பங்களைப் பாராட்டும் வகையில் நேபாள மன்னர் தஞ்சை மராட்டிய மன்னருக்கு அன்பளிப்பாகச் சாளக்கிராமத்தால் ஆன இராமர், இலக்குவர், சீதை, சுக்கிரீவன் ஆகியோர் திருவுருவங்கள் அளிக்கப்பட்டன; அந்த அரிய கலைப் படைப்புகளும் மூலவராகவே பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன.

16. மும்மூர்த்திகளுக்கிடையே ஒருமையும் ஒற்றுமையும் புலப்படுத்தும் சிற்பக் கலைப் படைப்புகள்

படைப்புக் கடவுளாகிய பிரமனும், பாதுகாப்புக் கடவுளாகிய திருமாலும் மகன் தந்தை உறவுடையவர்கள்; திருமாலின் திருவுந்தியில் தோன்றிய தாமரை மீது பிரமன் எழுந்தருளியிருப்பதைத் திருமாலின் சயனக் கோலங்கள் பலவற்றில் காணலாம்.

சிவனும் திருமாலும் ஒருமையுடையவர்கள் என்பதைப் புலப்படுத்தும் வகையில் 'அரிஅரன்' *(சங்கர நாராயணன்)* திருமேனி அமைந்துள்ளது; சங்கர நாராயணன் கோயில் *(சங்கரன் கோயில் என்பது மரூஉ)* இத்தகைய சிறப்பினைக் கொண்ட திருத்தலமாகும்.

இஃது ஒரு புறமிருக்க மும்மூர்த்திகளும் பல்வேறு சிற்பக் கலையமைப்பிலும், ஆலயங்களில் இடங்கொண்டுள்ள அமைப்பிலும் ஒருமைச் சிறப்பினை உணர்ந்து கொள்ளும் வகையில் அமர்ந்துள்ளனர்.

திருக்கண்டியூர் திருத்தலத்தில் மும்மூர்த்திகளுக்கும் தனித் தனியே கோயில்கள் இருக்கின்றன; இங்குச் சிவபெருமான் வீரட்டானேசுவரராகவும், திருமால் ஹரசாப விமோசனப் பெருமாளாகவும் காட்சியளிக்கின்றனர். அருகேயுள்ள பிரமன் கோயில் மூடப் பட்டிருப்பதால் அங்கிருந்த பிரமன், கலைமகள் சிலைகள் சிவன் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

திருச்சி அருகிலுள்ள உத்தமர் கோயிலில் புருஷோத்தமன் ஆலயத்தில் திருமால் பள்ளி கொண்ட பெருமாளாக - மூலவராகக் காட்சியளிக்கச் சிவபெருமான் பிச்சையுகக்கும் பெருமானாக்க் குடும்பத்தினருடனும் பிரமன் கலைமகளுடனும் காட்சியளிப் பதைக் காணலாம். பாண்டிக்கொடுமுடி என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் சிவலிங்க வடிவத்தில் மூலவராக எழுந்தருளி யிருக்கத் திருமால் அரங்கநாதராகவும், பிரமன் வன்னி மரத்து அடியிலுமாகக் காட்சியளித்தலைக் காணலாம்.

திரிமூர்த்தி மலையில் அருள்மிகு அமணலிங்கேசுவரர் கோயிலில் சிவன் திருமால் பிரமன் ஆகியோர் இணைந்து ஒரே சிவலிங்கத்தில் அருள் பாலிக்கின்றனர்.

சுசீந்திரம் தாணுமாலயனாக மும்மூர்த்தியின் ஒருமைப் பாட்டை உணர்த்துவதுடன், கொன்றை மரத்தடியில் மூன்று சிவ லிங்கங்களாக மும்மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர்.

இவ்வாறாகச் சிந்திக்கையில் டாக்டர் டி. செல்வராஜ் "பழைய சிவாலயங்கள் பன்னிரண்டில் திருமால், சன்னிதிகள் இருக்கும் திருத்தலங்களாக, 1. கச்சியே கம்பம், 2. கொடிமாடச் செங்குன்றூர், 3. செய்யாறு *(திருவோத்தூர்)*, 4. சிதம்பரம், 5. சிக்கல், 6. திரு நாவலூர், 7. திருநெல்வேலி, 8. பவானி *(திருநணா)*, 9. திருப் பழனம், 10. திருப்பத்தூர், 11. பாண்டிக் கொடுமுடி, 12. திரு வக்கரை"[1] எனக் குறிப்பிடுதலையும் மனங் கொண்டு சிந்திக்கலாம்.

மேற்காணும் செய்திகளுடன் சைவ-வைணவ ஒற்றுமையைப் புலப்படுத்தும் வகையில் நாயக்க மன்னர் காலத்தில் அமைந்த திருத்தலமாகக் கருதப்படும் அம்மைய நாயக்கனூர் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

திண்டுக்கல் - மதுரைத் தேசிய நெடுஞ்சாலையிலுள்ளது அம்மைய நாயக்கனூர்; இந்தத் தலத்தில் அருளாட்சி புரிந்து வருபவர் கதலி நரசிங்கப் பெருமாள். இக்கோயிலிலுள்ள ஒரே கருவறையில் சிவனும் பெருமாளும் எழிற் கோலத்துடன் காட்சி யளிப்பதை மக்கள் போற்றிக் கொண்டாடி வருகின்றனர். ஸ்ரீதேவி, பூதேவி உடனாய கதலி நரசிங்கப் பெருமாளின் திவ்ய மங்கள விக்கிரகமும், அருகிலிருக்கும் சிவலிங்கமும் சிற்ப நேர்த்தியும் அருள்வல்லபமும் கொண்டவை என்பது சமய நம்பிக்கை.

17. பௌத்த சமணச் சிற்பங்கள்

இந்து மதக் கிளைகளாகிய சைவம், வைணவம், சாக்தம், கௌ மாரம், காணாபத்யம், சௌரம் ஆகியவற்றில், அவ்வச் சமய மக்கள் ஆத்திக நிலையில் தெய்வத் திருவுருவங்களை அமைத்து வழிபட லாயினர்; அதே காலத்தில், இந்து மதத்தை வெறுத்தவர்களாய் - நாத்திகக் கோட்பாடுடையவர்களாய் - வாழ்ந்தவர்கள் பௌத் தர்கள், சமணர்கள், சாருவாகர்கள்; தம் கொள்கைகளில் ஊன்றி நின்றனர். அவர்களும் தத்தம் கொள்கைகளுக்கேற்பக் கோட்பாட்டின் (Concepts) நாயகர்களை வழிபட முற்பட்டனர்; அதற்கேற்பத் திருவுருவங்களை உருவாக்கியுள்ளனர்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலக் கட்டத்தில் தமிழ் நாட்டிலே பௌத்த மதம் செழிப்புடன் இருந்தது. அக்காலத்தில் பௌத்தர்களாக விளங்கிய

1. ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் *(திங்களிதழ்)*, ஜூலை, 2000, பக். 37

தமிழர்கள் கௌதம புத்தர் திருவுருவங்களையும் பௌத்தத் தெய்வ வுருவங்களையும் வழிபட்டு வந்தனர். இத்தகைய வழிபாட்டிற்கு முன்னோடியாகப் புத்தரின் பாத பீடிகை, தரும சக்கரம் ஆகியவற்றை அடையாளச் சின்னங்களாகக் கொண்டு மலரிட்டு வணங்கி வந்துள்ளனர். இவை தொடர்பான குறிப்புக்களை மணிமேகலை சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்களால் அறிந்து கொள்ளலாம். காலப் போக்கில் புத்தருடைய திருவுருவம் கற்பிக்கப்பட்டு, அவ்வுருவத்தை நின்ற கோலமாகவும், இருந்த கோலமாகவும் கிடந்த *(சயனித்த)* கோலமாகவும், அமைக்கப்பட்டதை வரலாற்றால் அறியலாம். பௌத்தர்கள் தம் வழிபாட்டிற்கெனப் புத்தர் சிலை களை வடிக்கச் செய்கையில், சீரிய தியானமும் அமைதியும் கொண்ட தவக் கோலத்திலேயே ஞான நாட்டம் மிகுக்குமாறு செய்துள்ளனர்.

திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகப் புத்தரவதாரத்தையும் கொள்வோர் உளர்; அந்தக் கோணத்தில் நோக்குகையில், திருமாலின் நின்ற இருந்த கிடந்த கோலங்களைப் புத்தருக்கும் பொருத்தியமைத்து அந்தக் கோலங்களில் சிற்பங்களை வடித் திருப்பது சிந்தித்தற்குரியது.

பௌத்தக் கோட்பாட்டைப் போலவே சமணக் கோட்பாடும் பண்டைக் காலத்திலே தமிழகத்தில் செல்வாக்கினைப் பெற் றிருந்தது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன், பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் போன்றவர்களும் குடிமக்கள் பலரும் சமண மதத்தைப் பின்பற்றக் கூடிய காலச் சூழல் நிலவியது. அந்நிலையில் அருகக் கடவுளின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களை யும் வணங்கலாயினர்; எனவே அவ்வுருவங்களை அமைக்கச் சிற்பக் கலை பயன்பட்டதில் வியப்பில்லை.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் பற்றி நன்கு ஆராய்ந்த தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஒப்பியல் நோக்கில் ஆராய்ச்சி யுடன் எழுதுகையில், ''பௌத்த ஜைன மதத்துக்கும் சைவ வைணவ சமயத்துக்கும் சிற்ப உருவ அமைப்பில் உள்ள ஒரு நுட்பமான செய்தியைக் கூற விரும்புகிறேன். அது என்னவென்றால், பௌத் தரின் புத்த உருவத்துக்கும் ஜைனரின் தீர்த்தங்கரர் (அருகர்) உருவங் களுக்கும் இரண்டு கைகள் மட்டுமே உண்டு. ஆனால், அவர்களின் சிறு தெய்வங்களுக்கு நான்கு அல்லது எட்டு கைகள் உள்ளன. இதற்கு நேர்மாறான அமைப்பு சைவவைணவ உருவங்களில் காணப் படுகின்றன. சிவன் அல்லது திருமால் உருவங்களுக்கு நான்கு

அல்லது எட்டுக் கைகள் இருக்கின்றன. ஆனால், சைவ வைணவச் சிறு தெய்வங்களுக்கு இரண்டு கைகள் மட்டுமே இருக்கின்றன.

உதாரணமாக, பௌத்தர்களின் சிறு தெய்வமாகிய அவலோகிதர், புத்த பதவியடையும் நிலையை அடைந்திருந்தாலும், அப்பதவியை இன்னும் அடையாதபடியால், சிறு தெய்வமாகக் கருதப்படுகிறார். ஆகையினாலே, அவருக்கு நான்கு கைகளைக் கற்பித்திருக் கிறார்கள். அதுபோலவே தாரை முதலிய சிறு தெய்வங்களுக்கு நான்கு கைகளைக் கற்பித்திருக்கிறார்கள். பௌத்தரின் உயர்ந்த தெய்வமாகிய புத்தருக்கு இரண்டு கைகள் மட்டும் உள்ளன.

சமணரும் தமது உயர்ந்த தெய்வமாக அருகர் அல்லது தீர்த்தங் கரர் உருவங்களுக்கு இரண்டு கைகளை மட்டும் கற்பித்திருக் கிறார்கள். ஆனால், அவர்கள் வணங்கும் இந்திரன், யக்ஷி, ஜீவாலா மாலினி முதலிய சிறு தெய்வங்களுக்கு நான்கு கைகளைக் கற்பித்துச் சிற்ப உருவங்களை அமைத்திருக்கிறார்கள்.

பௌத்த, சமணர்களுக்கு மாறாக, சைவரும் வைணவரும் தமது பரம்பொருளான உயர்ந்த கடவுளுக்கு நான்கு அல்லது எட்டுக் கைகளைக் கற்பித்துத் தம் சிறு தெய்வங்களுக்கு இரண்டு கைகளை மட்டும் கற்பித்துச் சிற்ப உருவங்களை அமைத்திருக்கிறார்கள். இந்த நுட்பம் இந்தச் சமயங்களின் சிற்ப உருவங்களைக் கூர்ந்து பார்த்தால் நன்கு விளங்கும்''[1] என விளக்கிச் செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கது.

சைவ வைணவத் திருவுருவங்களைக் காண்கையில் மேலும் சில நுட்பங்கள் காணக் கிடைக்கின்றன. சிவனுக்கோ, திரு மாலுக்கோ முதன்மை கொடுக்கையில், அவர்களுக்கு நான்கு அல்லது எட்டு கைகளை அமைத்து விட்டு, அவர்களின் அருகே இருக்கும் பார்வதிக்கோ திருமகளுக்கோ இரண்டு கைகளை மட்டுமே அமைப் பர். அதே சக்தி தேவியர் தனிப்பட்ட நிலையில் காட்சியளிக்கையில் நான்கோ எட்டோ அதற்கு மேற்பட்டோ கைகளை அமைத்துச் சிற்பத் திருவுருவங்களை அமைத்து வருகின்றனர். இவற்றுக் கெல்லாம் அடிப்படைக் காரணம், சிற்பியரும் அடியவர்களும் கொள்ளும் தெய்வநல ஈடுபாட்டுக் கற்பனையேயாகும். இந்து மதக் கடவுள்களான சிவன், திருமால், சக்தி, விநாயகர், முருகன் ஆகியோரைப் பல்வேறு கோலங்களில் காண்கையில் கூத்தாடுங்

1. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மணிவாசகர் பதிப்பகம், பக். 55-56.

கோலத்திலும் காணலாம். ஆனால், புத்தர், அருகர் திருவுருவங்களை மோனந்தவழும் சாந்தத் திருவுருவத்தில் காணலாமேயொழிய கூத்தாடும் கோலத்தில் காண இயலாது. காரணம், அம்மதத்தவர்கள் மோன ஞானத் தவ நிலையிலேயே புத்தரையும் தீர்த்தங்கரர்கள் உள்ளிட்ட அருக தேவனையும் அமைப்பதை வைராக்கியக் கலை மரபாகக் கொண்டவர்கள்.

அ) பௌத்தச் சிலைகள்

பௌத்தத்தையும் சமணத்தையும் எதிர்த்து நடைபெற்ற இந்து மதப் புரட்சி காரணமாகப் பௌத்தமும், சமணமும் தமிழ் நாட்டில் வேரூன்ற முடியவில்லை. எனவே, அம்மதச் சார்புடைய ஆலயங் களும் திருவுருவச் சிலைகளும் காலப் போக்கில் மறையலாயின. எனினும், பௌத்த மதத்தைப் பொறுத்த வரையில், நேபாளம், பர்மா, சீனா, ஜப்பான், இலங்கை முதலிய பல நாடுகளில் அது வளமாகப் பரவுதலைக் கொண்டது.

தமிழ் நாட்டில் சில இடங்களில் புத்தர் சிலைகள் காணப் படினும், அவை எங்குள்ள ஆலயங்களிலிருந்து *(விகாரங்களி லிருந்து)* பெயர்த்தெடுக்கப்பட்டன என்பதை அத்துறை அறிஞர் களாலும் புரிந்து கொள்ள இயலவில்லை.

தஞ்சைக் கலைக் கூடத்தில் பலரும் காணக் கூடிய புத்தர் பிரான் சிலை சிறந்த தெய்வநலப் பொலிவுடன் தியானத்தாலும் சாந்தத்தா லும் விளைந்த ஞானத்தின் திருவுருவமாகவுள்ளது. முன்னொரு காலத்தில் மகாபோதி மரத்து அடியில் சித்தார்த்தர் எந்நிலையில் தியான மோனத்தில் அமர்ந்திருந்தாரோ, அந்நிலையைக் கற்பனை யால் உணருமாறு அச்சிலை அபராஜித ஆசனத்தில் அமைந்துள்ளது. அபராஜித ஆசனம் என்பது, அந்த ஆசனத்தில் அமர்ந்துள்ளவரது வைராக்கியத்தை, மனவுறுதிப்பாட்டினை, எவராலும் தோற்கடிக்க முடியாத வகையில் அமைந்ததாகும். சிலையில் அமைந்த திருமுகப் பொலிவிற்காகச் சிற்பியும், ஒரு வகையில் கலை ஞான தியானத்தில் அமர்ந்து மனத்தை ஒருமுகப்படுத்தி, இந்தக் கலைப் படைப்பினை உருவாக்கியிருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஸ்ரீலங்காவிலுள்ள அனுராதபுரம் பௌத்தச் சிறப்பினைக் கொண்டது. அங்குச் சில சிலைகள் இருப்பினும், சயனக் கோலத்தில் காணலாகும் சலவைக் கல் போன்ற பீங்கான் சிலை பெரிய அளவில் காட்சியளிக்கிறது: அதனிலும் தியான மோனம் கொலுவிருக்கிறது.

நின்ற கோலத்தில் அமைந்துள்ள பெரிய சிலை என்றதும், அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவியின் சிலையை *(46 மீட்டர் உயரம்)* நினைவிற் கொண்டு கூறுவர். ஆனால், ''பீகாரில் புத்த கயா என்ற இடத்தில் மைத்ரேய புத்தரின் சிலை *(இதுவரையில் புத்தர் நால்வர் தோன்றியுள்ளனர்)* உயரம் 152.4 மீட்டர், எழுப்பப்பட இருக்கிறது. வெண்கலத்தால் அமையும் இந்தப் புத்தர் சிலை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பழுதுபடாமல் இருக்கும்...

2004இல் அமைய இருக்கும் இந்த மைத்ரேய புத்தர் சிலைதான் உலகிலேயே பெரிய சிலையாக இருக்கப் போகிறது''[1] என்று லட்சுமி கூறுவது கொண்டு, பௌத்த மதக் கலை தன் போக்கில் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

மதக் காழ்ப்பினால் ஆப்கனிஸ்தானத்தில் பெரிய மலையில் *(போமியன்)* எடுக்கப்பட்ட நின்ற கோலப் புத்தர் சிலைகள், தாலிபான்களால் சிதைக்கப்படினும் அதே தோற்றமுடைய பெரிய சிலைகள் தோற்றுவிக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

சீன, ஜப்பான், பர்மா முதலிய நாடுகளிலுள்ள அழகிய புத்தர் சிலைகளைப் பற்றி விரிக்கிற் பெருக்கும்.

இஃது ஒரு புறமிருக்க, மத்திய, மாநிலத் தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்துள்ள புத்தர் சிலைகளும் விகாரங்களும் பல உள்ளன. நாகைக்கு அருகில் வெளிப் பாளையத்தில் தொல் பொருள் இலாக்காவினர் தோண்டியபோது பௌத்த வெண்கலச் சிற்பங்கள் 300 கிடைத்துள்ளன''[2] என வருங்குறிப்பும், ''இங்கு 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலத் தூபிகளும் கிடைத்துள்ளன''[3] என வருங்குறிப்பும் மனங்கொள்ளத் தக்கவை.

ஆ) சமணச் சிலைகள்

தமிழ்நாட்டில் சமண மதம், நாடாண்ட மன்னர்களின் ஆதரவுடன் வளர்ந்தமை குறித்துப் பெரிய புராணம் போன்ற இலக்கியங்களாலும், கல்வெட்டுகளாலும், கலைச் சின்னங்களாலும் அறிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் சமணம் சிறப்புற்று விளங்கியமை குறித்து அறிஞர் எஸ். ஸ்ரீபால், பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தர

1. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, ஜூன், 2000, பக். 35
2,3 கலைக் களஞ்சியம் தொகுதி ஆறு, பக் 325-326

னார், மயிலை சீனி. வேங்கடசாமி, முனைவர் க.பா. அறவாணன் முதலியோர் விளக்கமாகக் கட்டுரைகள் பல எழுதியுள்ளனர்.

அஃது ஒருபுறமிருக்கச் சிற்பக் கலை நோக்கில் சில செய்தி களை ஈண்டுக் காண்போம்.

தென்னிந்தியவைப் பொறுத்த வரையில், கர்நாடக மாநிலத் தில் சிரவண பெலகொலா எனும் ஊரின்கண், மலை முகட்டில் கோமக்தீசுவரர் சிலை நின்ற கோலத்தில் சிற்பியர் வடித்துள்ளதைக் காணலாம்; மலைக் கோயிலில் தீர்த்தங்கரர் பலர் சிலைகளும் உள்ளன.

தமிழகத்திலும் ஆங்காங்கு, காடு மேடுகளிலும், சில குடை வரைக் கோயில்களிலும் சமணர் பள்ளிகளிலும் சமணப் பெரியார் களாகிய தீர்த்தங்கரர் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

இக்காலத்தில் நாகர் கோயில் எனப் பெயரிய கோட்டாறு முன்னொரு காலத்தில் சமணர்களின் சிறந்த கொள்கைப் பரப்புக் கேந்திரமாக விளங்கியுள்ளது. அக்காலத்திலே சமணப் புலவர்கள் கூடித் தமிழ் வளர்த்த 'புலவர் சேரி' என்பதே இக்காலப் புரவச்சேரி யாக மாறியுள்ளது. நாகர்கோயில் நாகராசர் ஆலய அர்த்த முண்டபத் தூணில் மகாவீரர் திருவுருவச் சிலை மோனத் தவ ஞான அமைதி யுடன் காட்சியளிக்கிறது. மேலும், பார்சுவநாதர், பத்மாவதி ஆகியோரின் திருவுருவங்கள் காணக் கிடைக்கின்றன. அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகையில், அவ்வளாகத்தில் மேலும் சில சிலைகள் கிடைக்கலாம்.

தஞ்சாவூருக்கு அருகில் கரந்தையில் முக்குடைப் பகவர் கோயிலில் முக்குடைப் பகவர் திருவுருவம் காணக் கிடைக்கிறது. குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம் சிதரால் எனும் திருச் சாரணத்து மலையின் உச்சியில் ஒரு தொங்கு பாறையின் அடியில் சமணக் குகைக் கோயில் ஒன்று உள்ளது. அந்த ஆலயத்தின் வடக்கே யுள்ள பாறையில் இரு வரிசைகளாகச் சமணத் துறவியரின் திருவுரு வங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிறப்பாக முக்குடைக் கீழ் மகாவீரர் பத்மாசனத்தில் தவயோக நிலையில் அமர்ந்திருக்கும் திருக்கோலம் உள்ளது.

பழனித் தலத்துக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவிலே ஐவர் மலை முன்பொரு காலத்தில் சமணர்கள் இருப்பிடமாக இருந்தது.

இங்கேயுள்ள தொங்கு பாறைக்கண் சமணத் தீர்த்தங்கரர் பதினாறு பேருடைய சிற்பங்கள் அமைந்துள்ளன.

முன்பொரு காலத்தில் மயிலாப்பூர் சாந்தோம் சர்ச்சு இருந்த இடத்தில் சமணர்களின் நேமிநாதர் கோயில் கட்டப்பட்டிருந்தது. பிறகு கடல் நீரலைகளால் ஆலயம் அழிந்து விடுமோ என்ற அச்சத்தில் அங்கிருந்த அருகக் கடவுட் சிலைகளைச் சித்தாமூர் என்ற ஊருக்குக் கொண்டு சென்று வைத்துள்ளனர் என்பர்.

செங்கற்பட்டு மாவட்டம் உத்தரமேரூரில் சுந்தர வரதப் பெருமாள் கோயிலில் ஆதிநாதர் *(இருஷப தேவர்)* திருவுருவம் இருத்தலைக் காணலாம்; முற்காலத்தில் இங்கே சமண ஆலயம் இருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இதே மாவட்டம் ஒலக்கூர் ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் அனந்த மங்கலம் என்னும் ஊர் உள்ளது. அங்குள்ள கற்பாறையில் ஆனந்தத் தீர்த்தங்கரரை நடுநாயகமாகக் கொண்டு சமணத் திருவுருவங்கள் உள்ளன. இங்கே ஆனந்த தீர்த்தங்கரருக்கு ஒரு யக்ஷி *(இயக்கி)* குடை பிடிப்பது போன்றும், மற்றொரு யக்ஷி சாமரை வீசுவது போன்றும் உள்ள காட்சியை அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி கூறி மகிழ்வார்.

அய்யர் மலை என அழைக்கப்படும் வாட்போக்கி *(குளித்தலை அருகேயுள்ளது)* மலையின் அருகே சமண தீர்த்தங்கரர் சிற்பம் பொறிக்கப்பட்ட 'குண்டாங்கல்லு' என்ற பாறை காணப்படுகிறது. இதனால், முற்காலத்தில் சமண சமயம் இப்பகுதிகளில் திகழ்ந் திருக்க வேண்டுமென்பர்.

பௌத்த சமணக் கோட்பாடுகளுக்கிடையே பொதுவாகச் சில ஒற்றுமைக் கூறுகள் - ஆசையை வெறுத்தல், கடுந்தவம், துறவில் அழுத்தம், சீலம் முதலிய சிறப்புக் கூறுகள் உண்டு. புறத் தோற்ற மாகச் சிற்பப் படைப்பை அமைக்கையில் புத்தருக்கோ, சமணத் தீர்த்தங்கரருக்கோ திருமுகப் பொலிவிற்காகத் தியானச் சிந்தனை யுடன் கூடிய மௌன அழகைப் புலப்படுத்திக் காட்டுவர். அந்நிலை யில் முகத்திலே மீசை அமைக்கத் தேவைப்படுவதில்லை. எனினும், இதற்கும் விதிவிலக்கு உள்ளதெனச் சிற்பம் கூறுகிறது.

திருச்சி மாவட்டம் முசிறி அருகே 'மங்கலம்' எனும் கிராமத்தில் அரவாண்டியம்மன் கோவிலில் வேறெங்கும் எந்தப் புத்தர் சிலையிலும் காணப்படாத அழகிய மீசையுடன் கூடிய தியானக் கோலத்தில் இருக்கும் புத்தர் சிலையை 'ரெட்டியார் சிலை' என

அழைத்து வழிபடுகிறார்கள்''[1] என கோவி. இராஜேந்திரன் கூறுதலைக் காணலாம்.

இந்து மதத் தெய்வங்களாகிய விநாயகர், சரசுவதி போன்ற திருவுருவங்கள் பௌத்தர் ஆலயங்களில் காட்சியளிப்பதைக் காணலாம். ஸ்ரீலங்காவில் அனுராதபுரம் புத்தராலயத்தில் இத்தகைய உருவங்களிடையே சரசுவதி உருவம் நன்கு அமைந்துள்ளது.

விநாயகர் உருவம் சில பௌத்த விகாரங்களில் காணப்படுவ தாகச் சிலர் கூறுகின்றனர்; எப்படியான சிலையமைப்பு என்பதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இது தொடர்பாகச் சிந்திக்கத் தக்க ஒரு குறிப்பு இப்படி உள்ளது. ''கௌதம புத்தர் திருமாலின் அவதாரம் என்றும், அவர் விநாயகப் பெருமானைத் தொழுதே காரியங்கள் செய்தார் என்றும், அந்தப் புத்தரே ராஜ கிருகத்தில் தங்கியிருந்தபோது இறுதிக் காலத்தில் தம் சீடரான ஆனந்தருக்குக் 'கணபதி ஹிருதயம்' என்ற மந்திரத்தை உப தேசித்தார் என்று மஹாயானம் என்ற பௌத்த நூல் கூறுகிறது''[2] என்று ஆறு பாதி புகழேந்தி எழுதியுள்ளார். இதனுள், திருமாலின் அவதாரத்தைக் குறிப்பிடுவது கொண்டு, இந்த விநாயகர் 'விசுவக் சேனர்' வடிவில் இருந்திருப்பாரோ என நினைக்கத் தோன்றலாம்; இது குறித்துத் தெளிவான ஆராய்ச்சி தேவை.

18. சிலை வடிவங்களில் நாடும் மொழியும் ஆறும் - சில சிறப்புக் கூறுகள்

மக்கள் தாம் பிறந்து வாழும் நாட்டைத் தாய் நாடு என்பர்; அதற்கேற்பப் பெருநாட்டைப் பாரதத் தாய் எனவும், மாநிலத்தைத் தாய் நாடு என்றும் போற்றுவர். அதற்கேற்பப் பாரதத் தாயைச் சிலை வடிவில் கண்டு மகிழ்வர். தாய்நாடாகிய தமிழ் நாட்டைத் தமிழ் மொழியுடன் சார்த்தித் தமிழன்னை எனக் கொண்டு, சிலை வடிவில் கொண்டாடி மிகப் போற்றி நிற்கின்றனர்.

தமிழ்த் தாயைப் பொறுத்தவரையில் காரைக்குடியில் கம்பன் கழகத் தொடர்புடன் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் அமைத்துள்ள தமிழன்னையின் உருவத்தைப் பலரும் அறிவர். தமிழ்த் தாய் உருவத்தை ஓவியத்திலும் சிலையிலுமாக உருவாக்கச்

1. ஆலயங்களும் அபூர்வத் தகவல்களும், J.J. பப்ளிகேஷன்ஸ், மதுரை 20. பக். 37
2. அம்மன் தரிசனம், செப்டம்பர் 2000. பக். 36

செய்து மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலை மாமணி முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் அறிமுகப்படுத்தியதையும் பலர் அறிவர். இவ்வாறு அமைப்பதற்கு யோகி சுத்தானந்த பாரதியார் தமிழ்த் தாயைக்

''காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும், கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும், மெல்லிடையில்
மேகலையும், சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும், பொன்முடி
சூடாமணியும், பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க''

என்று போற்றிப் பாடியமையும் காரணமாகும்.

உலகமே நீரின்றி அமையாது. ஆதலின், ஆறுகள் தெய்வத் தன்மையுடன் போற்றப் பெறும். சிவபெருமானே கங்கையாற்றைத் தன் திருமுடியில் சூடிக் கொண்டு அருள் புரிவதால் ஆற்றின் பெருமையை இனிதுணரலாம். இதனால், நாடெங்கும் கங்கையம்மன் திருவுருவச் சிலைகள் வடிக்கப்பட்டு ஆலயங்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளமை பலரும் அறிந்த செய்தி. வட இந்தியாவில், பார்வதியுடன் கங்கையம்மனை இணைத்துப் போற்றும் நிலையில் 'அன்னபூரணி' *(அன்னபூர்ணா)* என்ற திருப்பெயருடன் தெய்வச் சிலையமைத்துக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழ் நாட்டில் காவிரித் தாயைச் சிலை வடிவில் அமைத்துக் கொண்டாடும் வழக்கம், சில நூற்றாண்டுகளாகவே இருந்து வருகிறது.

கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வரும் மகாமகத் திருவிழாவில் அனைத்துப் புண்ணிய நதிகளும் மகாமகத் திருக்குளத்தில் சங்கமமாகின்றன என்பது அழுத்தமான சமய நம்பிக்கை. இதனை வலியுறுத்தி அரண்கோலும்வகையில், மகாமகக் குளத்து வட கரையில் அமைந்துள்ள, மேற்குப் பார்த்த காசி விசுவநாதர் கோயிலில் தெற்கே பார்த்த வண்ணம், கங்கை, யமுனை, நர்மதை, சரசுவதி, காவிரி, கோதாவரி, துங்கபத்திரா, கிருஷ்ணா, சரயு ஆகிய ஒன்பது ஆறுகளும் சிலை வடிவில் சுமார் ஏழு சாண் உயரத்தில் நின்று கொண்டிருப்பதைக் காணலாம். ஆற்றுத்

தெய்வங்கள் நிறுவப்பட்டிருக்கும் மண்டபம் நாயக்கர் காலத்தது என்பர். எனவே, சமயத் தொண்டுக்குத் துணைநின்று பெருந் தொண்டு புரிந்தவர்கள் நாயக்க மன்னர்கள் என்பதை இதனாலும் தெரிந்து கொள்ளலாம்.

19. பெரிய சிலைகள் அமைப்பதில் மக்கள் காட்டும் பேரார்வம்

உலகில் தம் நாட்டுப் பெருமையையும் மதப் பெருமையையும் பலரும் வியந்து பாராட்டும் வகையில், தெய்வத்துக்கும் அறநெறிச் சான்றோர்களுக்கும் பெரிய சிலைகளை நிறுவுவதில் நாட்டங் காட்டி வந்துள்ளனர்.

உலகமே வியந்து போற்றும் வண்ணம் சுதந்திர தேவியின் சிலையை 46 மீட்டர் உயரத்தில் அமெரிக்கா நிறுவியுள்ளது. ஆப்கானிஸ்தானம் பொமியா மலையைக் குடைந்து பாறைச் சிற்பமாக நின்ற கோலத்தில் புத்த பிரானைப் பௌத்தர்கள் வடி வமைத்தனர். மதக் காழ்ப்பினால் தாலிபான் ஆட்சியாளர்கள் அந்த நெடிய புத்தர் திருவுருவத்தைச் சிதைத்து விட்டனர்.

இந்தியப் பெருநாட்டைப் பொறுத்தவரையில், கருநாடக மாநிலத்தில் சிரவண பெலகொளா *(வெள்ளைக் குளம்)* எனு மிடத்தில், மலை உச்சியில் நெடிய திருவுருவமாகக் கோமட்டேசு வரர் சிலையை, மலையையே செதுக்கி அமைத்துள்ளனர். நிர்வாண கோலத்தில் நிற்கும் அச்சிலையின் உயரம் 57 அடி; தோளுக்குத் தோள் 26 அடி அகலமுடையது. சமணர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நிறுவிய பெரிய சிலை இதுவேயாகும்; இது நிறுவிய ஆண்டு கி.பி. 983. இது பற்றி அறிஞர் பெர்குசன், ''இதைப் போன்ற கம்பீரமான சிலை எகிப்தைத் தவிர வேறிடங்களில் இல்லை. எகிப்திலும் இதைவிடச் சிறப்புச் சிறப்பு மிக்க சிலை இல்லை''[1] என்று கூறிப் போற்றியுள்ளார்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நல்லறம் நவின்ற திருவள்ளுவர் சிலை, முக்கூடல் கூடும் குமரி முனையிலே சுவாமி விவேகானந்தர் சிலைக்கு அருகே 133 அடி உயரமுள்ளதாகத் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டுள்ளது; இதற்கு வடிவமைத்த சிற்பி, சிற்ப வல்லுநர் கணபதி ஸ்தபதியாவார்.

---

1. கலைக் களஞ்சியம் தொகுதி நான்கு. பக். 683

பௌத்த மதம் உலகெங்கும் பரவிய பெருஞ்சிறப்புடையது: எனவே, பீகார் மாநிலத்தில் புத்த கயா எனும் புனிதத் தலத்தில் மைத்ரேய புத்தரின் சிலை 152.4 மீட்டர் உயரமுள்ளதாக வெண்கலச் சிலை நிறுவப்படவுள்ளது *(இதுவரையில் புத்தர்கள் நால்வர் தோன்றியுள்ளனரென்றும், ஐந்தாமவராக 'மைத்ரேய புத்தர்' உலக ளாவிய கருணை/அன்பு உடையவர் தோன்றுவார் என்பதும் பௌத்தர்களின் நம்பிக்கை)*. 2004ஆம் ஆண்டில் அமையவிருக்கும் இந்த மைத்ரேய புத்தர் சிலைதான் உலகிலேயே பெரிய சிலையாக இருக்கப் போகிறது என்ற குறிப்பு[1], மனங்கொள்ளத் தக்கது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கத் தமிழகப் பெருங்கோயில் களில் தமிழக மாமன்னர்களும் பிறருமாகக் கோயில் வளாகத்திலும் வெளியிலுமாக அனுமன் சிலைகளையும், கோபுர வாயிலில் துவார பாலகர் சிலைகளையும் நிறுவியுள்ளனர். அவை பற்றிய சில குறிப்பு களை அவை தொடர்பான இயல்களில் கண்டு கொள்ளலாம்: எனினும், உலகிலேயே பெரிய விநாயகர் சிலை 12 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்ட விநாயகர் சிலை - விருதுநகர் மாவட்டம் திருவண்ணாமலை என்ற தலத்தில் ஸ்ரீநிவாசப் பெருமாள் என்கிற வேங்கடாசலபதி கோயிலில் அமைந்துள்ளதை நினைவிற் கொள்ளலாம்.[2]

நவக்கரை நந்தி கோயில் சிலைகள்

கோயமுத்தூரிலிருந்து பாலக்காடு செல்லும் முதன்மைச் சாலையில் 'நவக்கரை' எனும் சிற்றூரில் *(கோவையிலிருந்து 25 கி.மீ)* மலையாள தேவி துர்கா பகவதி பிராட்டியம்மன் ஆலயம் உள்ளது; அங்கே ஆசியாவிலேயே மிகப் பெரிய நந்திக் கோயிலாகத் திகழ்கிறது.

31 அடி உயரமும் 41 அடி நீளமும் 21 அடி அகலமும் கொண்ட நந்தியைக் காணலாம். மேலும், இங்கே ஐயப்பனின் திருவுருவம் 11 அடி உயரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இவ்வளவு உயரமான ஐயப்பன் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது இங்கு மட்டுமே என்பர்.

---

1. ஓம் சக்தி *(திங்களிதழ்)* ஜூன் 2000, பக். 35
2. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், செப்டம்பர் 2000, பக். 40

20. கலைப் புரவலர்கள் சிலைகள்

திருக்கோயில்களை அமைக்கவும், புதுப்பிக்கவும் பல வகைகளில் பணிபுரிந்தவர்களை உலகம் மறவாமலிருக்க, ஆலய வளாகங்களிலேயே அவர்களின் திருவுருவச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

மாமல்லபுரம் ஆதிவராகர் குகைக் கோயிலில் வடப்புறச் சுவரில் சிம்ம விஷ்ணுவும், தேவியரும், தென்புறச் சுவரில் முதலாம் மகேந்திரவர்மனும் அவன் தேவியரும் சிற்ப உருவங்களில் காணப்படுகின்றனர்.

சோழன் முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலை நினைவிற் கொண்டு இராசராசன் சிலையைக் கோயிலின் முற்புறப் பூங்காவிற்கு அருகே தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது.

மதுரை நாயக்க மன்னர்களுள் கோயில் திருப்பணிகளை நிரம்பச் செய்தவர் திருமலை நாயக்கர்; நின்ற கோலத்தில் அவரது உருவச் சிலையையும் அவருடைய தேவியர் உருவச் சிலைகளையும் புது மண்டபத்தில் காணலாம்; சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில் அவருடைய பணிகள் உண்டு; அவருடைய நேர்த்தியான சிலையும் உண்டு. அது பற்றி டாக்டர் எஸ். பத்மநாபன் 'குமரியில் சிற்பக் கலை' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுகையில், ''சுசீந்திரம் கருட மண்டபத் தூணிலுள்ள திருமலை நாயக்கரின் திருவுருவச் சிலை சிற்பக் கலை நுணுக்கத்தின் சிகரமாகத் திகழ்கின்றது. அவர் அணிந்துள்ள அணிகலன்கள் மிகவும் நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அச்சிலையிலுள்ள மூக்குத் துளைகள் காது வரை செல்லுகின்றன. இடது மூக்குத் துளை வழியாகச் செலுத்தும் மெல்லிய குச்சி இடக் காது வழியாகவும், இப்படி ஒரு காது வழியே செலுத்தும் குச்சி மறு காது வழியாக வரும்படி மிக நுண்ணிய வேலைப்பாடு மிளிர இச் சிலை செதுக்கப்பட்டுள்ளது வியப்பினை ஊட்டுகின்றது''[1] என்று விளக்குவது கொண்டு அக்காலச் சிற்பியரின் கலை நுட்பத் திறன் புலப்படும்.

சிதம்பரம் நடராசர் திருக் கோயிலில் வடக்குக் கோபுரத்தைப் புதுப்பித்த கிருஷ்ண தேவராயர் உருவச் சிலையையும் பச்சையப்ப முதலியார் உருவச் சிலையையும் வடக்குக் கோபுர வாயிலில் நிறுவியுள்ளனர்.

1. அமுதசுரபி தீபாவளி மலர், 1994, பக். 139.

வில்லியனூர் திருக்காமீசுவரர் ஆலயத்தை நிறுவிய அரசன் தர்மபாலனின் உருவச் சிலையையும் அவனது மாதேவியின் உருவச் சிலையையும், அரச பரம்பரையினரின் உருவச் சிலைகளையும் கோயில் தூண்களில் காணலாம்.

21. சிற்ப வளாகத்தில் நிகழ்த்தப்பட்ட சில செயற்கருஞ் சாதனைகள்

எத்தனையோ சிற்பக் கலைச் செல்வங்களின் செய்நேர்த்திகளைக் கண்டு வருகிறோம். அவற்றுள் மிகச் சிறப்பான சிலவற்றையும் மனத்துள் கொண்டு சிந்திக்கும் வகையில் சில செய்திகள் வருமாறு:

1. பொன்னை உரைத்துத் தரம் பார்க்கும் 'கட்டளைக்கல்' (Touch Stone) கொண்டும் சிலை வடிக்கலாம் என்பது தமிழகத்துக்கு அரிய செய்தியாகும்.

கட்டளைக் கல்லினால் கண்ணன் திருவுருவச் சிலையை ராஜஸ்தானில் செய்து, கல்கத்தாவில் முறைப்படி பூசை செய்து, சென்னைக்குக் கொணர்ந்து, மைலாப்பூரில் ரங்கா சாலையில் கோயிலில் நந்தலாலா சமிதியினரால் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது; இஃது அபூர்வ சிலையாகும். *(ஆதாரம்: அம்மன் தரிசனம், ஆகஸ்டு 1994)*

2. சிற்பக் கலைச் சாதனைகளாகத் திருவலஞ்சுழிப் பலகணி, திருப்பெருந்துறை *(ஆவுடையார் கோயில்)* ஆலயம் கொடுங்கை போன்ற சிலவற்றைக் கூறி நிற்பர். திருப்பெருந்துறைக் கொடுங்கை பற்றிச் சிற்ப வல்லுநர் கணபதி ஸ்தபதி மிகச் சிறப்பித்துக் கலை நேர்த்தியை வியந்து நிற்பார்; எனவே, அது பற்றிச் சில செய்திகள் கூறப்படும்.

"கோயிலின் மண்டப முகப்புகளில் சிற்ப வேலைப்பாடு நிறைந்த, கல்லையே வளைத்துத் தகடுகளாக்கிப் போட்டிருக்கும் கற்களுக்குத்தான் கொடுங்கை என்று வழங்குகிறார்கள். கொடுங்கையைப் பார்க்கும்போது சற்று நிமிர்ந்து பார்த்தால் நடுவில் ஒரு குரங்கு ஓடி வருவது போன்றும், உடும்பு ஒன்று உள்நோக்கிப் பற்றிச் செல்வது போன்றும் உள்ள சிற்பத்தைக் கண்டு திகைக்கிறோம். சிற்பி அவ்விரு உருவத்தையும் தத்துவப் பொருளாக அமைத்திருக்கிறார்.

மேற்படி கொடுங்கையின் அடியில் வந்து அதனைக் கீழிருந்து உற்று நோக்கினால் மேற்படி ஒவ்வொரு கொடுங்கைக் கல்லும் 13 அடி நீளம் 4 அடி கனமுள்ள கல்லைச் சிற்பி வளைத்து, அந்த ஒரே கல்லில் உருட்டுக் கம்பி, நாற்கோணப் பட்டை, அறுகோணப் பட்டை, முறுக்கு, முக்கோணப் பட்டை, சதுரம் ஆகிய ஆறு பட்டைகளால் இணைத்தது போலவும், ஒவ்வொரு கட்டத்திலும் குமிழ் ஆணி பொருத்தியது போலவும், முன் வளைவு கீழ்த் தகட்டில் எண்ணற்ற அளவுகளும் *(தற்போது நாம் கலையிடாஸ் கோப்பில் ஏற்படுத்தும் உருவப் பூக்கள் போல்)* பல டிசைன்களில் போடப்பட்டுள்ளன. இதனைத் தற்போது காஞ்சிபுரம், திரிபுவனம், ஜலகண்டாபுரம் போன்ற பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் புடவைகளில் கரைகளை அமைக்க அனுமதி பெற்று பிளாக் **(block)** எடுத்துச் செல்கின்றனர்''[1] என்று சக்தி சுகன் எழுதிச் செல்வதைக் காணலாம்.

3. திருவண்ணாமலை மாவட்டத்தில் நெடுங்குன்றம் இராமச் சந்திர பெருமாள் கோயில், *1200* ஆண்டுப் பழமையான கோயில் உள்ளது. இதன் பெருமையை உணர்ந்த கிருஷ்ண தேவராயர் கோயிலை விரிவாக்கிப் பெரிய கோயிலாக ஆக்கியுள்ளார். கோயில் மூலவராக இராமன், சீதை, இலக்குவன் ஆகியோர் அருள் பாலிக் கின்றனர். அமர்ந்திருக்கும் திருக்கோலத்திலுள்ள இராமன் சிலையைப் பரனூர் கிருஷ்ண பிரேமி எனும் மகரிஷி பிரதிட்டை செய்துள்ளார்.

கருவறையில் இராமபிரான் வலக் கையினால் மார்பில் முத்திரை ப்தித்து அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். சீதா பிராட்டி வலக்கையில் தாமரை மலரையும் இடக்கையைத் திருவடிச் சரணத்தை உணர்த்தும் அபயக் கையுமாக இராமனின் இடப்புறம் அமர்ந்திருக்க, இலக்குவன் வலப்புறம் நின்ற கோலத்தில் வில்லுடன் காட்சியளிக்கிறான். போர் முடிந்து திரும்பிய கோலமாதலின் இராமனிடம் வில்லும் அம்பும் காணப்படவில்லை என்பர். இது தொன்மைச் சிறப்பும் அழகுப் பொருத்தமும் கொண்ட அற்புதச் சிலைப் படைப்பு என்பர்.

4. சோழ நாட்டில் 11, 12ஆம் நூற்றாண்டுகளில் சக்தி வழிபாடு மிகச் சிறந்திருந்தது. மும்மூர்த்திகளையும் சுசீந்திரத்தில் தாணு

1. திருக்கோயில் *(திங்களிதழ்)* மார்ச், 1991. பக். 15

மாலயன் என்ற திருமேனியாகக் கண்டது போலவே, மும்மூர்த்தி களையும் முப்பெருந்தேவியரையும் ஒரே சிலை வடிவில் காட்டச் சிற்பி உருவாக்கியதே தாராசுரங் கோயிலிலுள்ள மாயா சக்தியாகும்.

டாக்டர் இரா. நாகசாமி 'கல்லும் சொல்லும்' எனும் நூலில், ''பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூவரும் இணைந்த சக்தியாகத் தேவி திகழ்கிறாள். இவளே பைரவி என்றும் சிறப்பிக்கப்படு கிறாள். இவ்வாறு விளங்கும் தேவியை மார்க்கண்டேய புராணம் மகாலக்ஷ்மி, மகா சரசுவதி, மாகேச்வரி என்று முப்பெருந்தெய்வங் களும் இணைந்த வடிவாகக் கூறும்.

இச்சிற்பத்தின் கரத்திலுள்ள அக்க மாலை, தாமரை, கட்வாங்கம், கபாலம், பாசம் முதலியன சாக்த தந்திரத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ள பரமேச்வரியாக இவளைக் காட்டுகின்றன. தக்க யாக பரணியிலுள்ள ஒரு செய்யுள் கணவரை ஒரு பாதியில் கொண்டு மகிழ்கின்ற தேவி என இவளை,

''வழியு நீறு வேறார மகிழும் ஓரோர் கூறும்
அறமறாத வானாள மடமறாத மானாள
ஒழியுமோ ரோர்கூறும் ஒருவராகி நேராகி
உடையகேள்வ ரோர்பாதி உருகுகாதல் கூர்வாளே''

எனப் பாடுகிறது. இங்கு தேவிக்குச் சிறப்பு அவளின் அங்கமாகச் சிவன் விளங்குகிறார் என்பதே. ஆதலின், இச்சிற்பம் யோக யாமளையான பராசக்தியைக் குறிக்கிறது எனில் தவறாகாது. தமிழகத்தில் வேறெங்கும் இது போன்ற சிற்பமே இல்லை எனலாம்'' (பக். 54) என விளக்கியுள்ளார்.

5. கூளப்ப நாயக்கன் பட்டியில் மும்மூர்த்திகள்

கோவை மாவட்டம் கூளப்ப நாயக்கன் பட்டியில் மலை யாண்டிச் சாமி கோயில் உள்ளது; அங்குக் கருவறைப் புடைப்புச் சிற்பமாக மும்மூர்த்திகளும் மூலவர்களாக உள்ளனர்.

சிவபெருமான் பதுமாசனத்தில் நடுவே அமர்ந்திருக்கச் சிவனுக்கு இடப்புறம் திருமாலும், வலப்புறம் பிரமனும் நின்ற நிலையிலும் காட்சியளிக்கின்றனர். ''ஒரு தலை கொண்ட பிரமன் தன் நான்கு கைகளில் வலக்கையில் அபய முத்திரை, தொங்கிய இடக்கையில் கமண்டலம், பின் வலக்கையில் தர்ப்பைப் புல், பின்

இடக்கையில் வேள்விக் கரண்டி கொண்டிருக்கும் கோலத்தில் காட்சி தருகிறார். இவரது கைகளில் தர்ப்பைப் புல் கட்டும், வேள்விக் கரண்டியும் இருப்பது பிரமன் வேள்விக்கு அதிபதி என்பதை உணர்த்துகிறது''[1] எனும் குறிப்புடன் ஒரே கருவறையில் இவ்வாறான கோலத்திலிருப்பது அதிசயிக்கத் தக்கது.

6. விழுப்புரம் மாவட்டம் ஆலம்பாடி கிராமத்தில் சாளக்ரம சொரூபத்தில் பெருமாள் எழுந்தருளியுள்ளார். 3 துவாரங்கள் கொண்ட பெரிய சாளக்ரமம் இது. இதன் வழியாகப் பார்த்தால் சங்கும் சக்கரமும் தெரியும். அற்புதமான இந்தப் பெருமாளின் திருநாமம் குண்டு சட்டிப் பெருமாள்.[2]

7. தமிழ் நாட்டுச் சிற்பிகளின் கற்பனைத் திறம் இமயத்தையும் எட்டிடும் அத்தனை அழகு! 9 பெண்கள் வடிவத்தாலான ஒரு யானையின் சிற்பம் அதற்குச் சான்று; யானையின் துதிக்கை, மத்தம், கால்கள், அம்பாரி அனைத்துமே அரம்பையரின் உடல் வடிவி னாலேயே உருவாக்கியுள்ளான் சிற்பி'' *(குமுதம் ஸ்பெஷல், டிசம்பர், 1999 பக். 32)* என வருங்குறிப்பு மிகச் சிந்திக்கத் தக்கது.

1. *ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், ஆகஸ்டு 2000. பக். 4*
2. *ஓம் சரவணபவ, ஜூன் 5-20, பக். 48*

சிவமும் சக்தியும் விளைவித்த சிற்பக் கலைப் படைப்பு

சிவமும் சக்தியும் ஒன்றே என்பது உண்மை; எனினும், சில புராண நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஆன்ம நல உணர்வும், அதன் அடிப்படையில் சிற்பக் கலைப் படைப்பும் மக்களுக்குத் தேவை யாயின.

சிவனையல்லாமல் சக்தியை வலம் வரவோ, வணங்கவோ மாட்டேன் என்ற பிருங்கி முனிவரின் வைராக்கியம் மாற்றப்படு கிறது; சிவமும் சக்தியும் இணைந்த நிலையில் அர்த்த நாரீசுவரர் திருவுருவம் அமையலாயிற்று என்பதும், அத்தகைய உருவமும் சிற்பக் கலைப் படைப்பில் இடங்கொள்ளலாயிற்று என்பதும் சிந்திக்கத் தக்கவை.

தாண்டவமாடும் ஆடல் வல்லானுக்குப் போட்டியாக இறைவி தானும் போட்டியாக ஆட முனைந்து, இறைவன் ஊர்த்துவ தாண்டவமாகத் தன் வலக்காலைச் செங்குத்தாக வானை நோக்கி ஆட முற்பட்டான்; சக்தி தன் பெண்மைச் சிறப்பைப் போற்றும் நினைப்பில் அவ்வாறு ஆடக் கருதாமல் பின்வாங்கினாள். அந்த நிகழ்ச்சியைப் போற்றும் வகையில், தில்லையம்பதிக்கு வடபால் தில்லைக் காளி ஆலயத்தில் தில்லையம்மனும் தில்லைக் காளியும் கற்சிலை வடிவிலும் உற்சவராகிய உலோகச் சிலை வடிவிலும் காட்சி நல்குகின்றனர்.

காஞ்சிபுரத்தில் கம்பா நதிக் கரையில் மணலால் இலிங்கம் அமைத்துப் பூசித்து வருகிறாள் உமையம்மை; அவளைச் சோதிக்கும் வகையில், சிவன் தன் முடியில் உறையும் மூன்றரை கோடி தீர்த்தங்களை இணைத்துக் கொண்டுள்ள கங்கைக்குக் கட்டளையிடு கிறான்; அக்கட்டளையை ஏற்றுக் காஞ்சியில் பாய்ந்தோடிப் பெரு வெள்ளமாக வரவே, அன்னை அதனை அடக்குவதற்காகத் தன் தோழியை ஏவுகின்றாள்; தோழி விச்வ பட்சணம் எனும் கபாலத் தினுள் வெள்ளத்தை அடக்குகின்றாள்; அவளே இன்று காஞ்சியில் காணலாகும் பிரளய கால பத்தினி; ஏகாம்பர நாதர் கோயிலில் அவளது சிலையைக் காணலாம்.

சக்தி தன் ஆற்றலைக் காட்ட முனைந்து இவ்வாறு செயற் படுவதை அறிந்த சிவன், அவ்வெள்ளத்தை ஆயிரம் முகத்துடன் பெரும் பிரளயமாகக் கபாலத்திலிருந்து வெளிவரச் செய்கிறான்; தான் மணலால் செய்தமைத்த சிவலிங்கத்தை அணைத்த வண்ணம் காக்க முற்படுகிறாள் காமாட்சி; அந்தத் தேவி தவ உக்கிரத்தால் தான் பெற்றிருந்த காளியுருவம் நீங்கப் பெற்று, அன்னை கௌரியாக மாறிக் கம்பா நதிக் கரையில் மாமரத்து அருகே திருமணம் புரிந்து கொண்டு உவகைக் காத்து வருகிறாள் என்பது புராணம். இறைவனும் இறைவியும் திருமணக் கோலங்காட்டும் சில தலங்களுள், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலும் ஒன்றெனக் கொள்ளுதல் வேண்டும். எல்லாம் சிற்பக் கலையால் மக்களுக்குப் புலப்படுத்தப்பட்ட உத்தியை நினைவிற் கொள்ளலாம்.

சிற்பக் கலை வளர்ச்சிக்கு வழிகோலும் 108 சிவாலயங்கள் காஞ்சியில் தோன்றலாயின; இவ்வாறே புராணப் பின்னணியுடன் 10 திருமால் கோயில்களும் அமையலாயின; எனவே, 'நகரேசு காஞ்சி' எனும் வாக்கு மிகப் பொருத்தமுள்ளதாயிற்று.

இவ்வாறான செய்திகள் ஒருபுறமிருக்கச் சிவனையும் சக்தியை யும் பொறுத்த வரையில், தாண்டவக் கோலங்கள் சிற்பக் கலைப் படைப்புகளாக வடிவமெடுக்கையில் நாட்டின் பல பகுதிகளுக் கேற்ப மாறுபடுகின்றன.

தாண்டவ மூர்த்தியாகிய நடராசப் பெருமானின் சிலைகள் தென்னகத்தே, அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டில்தான் சிவாலயங் களில் இடம் பெறுகின்றன. ஆனால், வட இந்தியாவில், சிறப்பாக வங்காள மாநிலத்தில் சக்தியைச் சார்ந்ததாகவே தாண்டவக்கோலம் உள்ளது. மேலும், அங்குள்ள ஆலயங்கள் சிலவற்றில் சிவன் கிடந்த கோலமாக இருக்க, அவன்மீது தாண்டவமாடுங்கோலத்தில் அம்பிகை அமைந்திருக்கும் சிலைகளையும் காணலாம்.

சிவமும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவ நோக்கில், அவை தென்னாட்டில் வழிபடப் பெறினும், சிலை வடிவமாக அமைக்கும் போது *(அர்த்த நாரீசுவரரைத் தவிர)* உருவத் திருமேனிகள் தனித் தனிச் சன்னிதிகளில் இடம் பெறுவதே பெரு வழக்கு; ஆனால் வட இந்தியாவில், சிவாலயந்தோறும் சிவன் சிலையும் அம்மையின் சிலையும் சேர்ந்தே ஒரு சன்னிதியில் இடங்கொள்கின்றன. உலகத்தில் மக்களுள் பெரும்பாலானவரின் மனப் போக்கைப் பொறுத்தே சிவமும் சக்தியும் கொண்டாடப்படும் என்பதே நடைமுறையாகும்.

மேலும், ஒரு சிறப்புக் குறிப்பை ஈண்டு இயைபுடன், 'சிவமும் சக்தியும்' என்ற நோக்கில் சிந்திக்கலாம்.

இந்திய நாட்டு வரலாற்றிலும், தமிழக வரலாற்றிலும் புராணச் சார்புடன் அகத்திய மாமுனிவருக்கெனப் பெருஞ்சிறப்பு உண்டு. அவரையும் அவருடைய பத்தினியாகிய உலோபாமுத்திரையையும் சிவமும் சக்தியுமாகவே ஆலயத்தினில் நிலைபெறச் செய்துள்ளனர். இவ்வாற்றான் டாக்டர் பருத்தியூர் சந்தானராமன் "அகத்தியரும் அவர் மனைவி உலோபா முத்திரையும் சிவசக்தி அம்சமாகவே கருதப்படு கின்றனர். திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்தில் இறைவன் பெயர் அகஸ்தீசுவரர், அம்பிகை பெயர் உலோபாமுத்திராம்பிகா"[1] என்று எழுதிச் செல்லும் குறிப்பினை நினைவிற் கொள்ளலாம்.

பாவநாசம் பாவநாசர் கோயிலிலுள்ள 'உலோபாமுத்திரை யுடன் அகத்தியர் திருமேனி' வழிபாட்டில் உள்ளதனையும் இயை புடன் சிந்திக்கலாம்; சிற்பக் கலைப் படைப்பும் காணத் தக்கது.

சிவனையும் சக்தியையும் தனித்தும் இணைத்தும் வேறு தெய் வங்களுடன் பிணைத்தும் அமைந்த சிற்பப் படைப்புக்களையும் அவற்றின் சிறப்புக்களையும் இனி நோக்குவோம்.

சைவ சித்தாந்த நோக்கில், பதியை அடைய ஆன்மாக்களுக் குள்ள நெறிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை கூறப்படும். ஒவ்வொரு நிலையிலிருந்து வைராக்கியத்துடன் இறை வனை வழிபடின், முறையே சாலோப, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளை அடையலாம். இந்த நோக்கில் சில தலங்களில் சிவலிங்கங்கள் ஆகம அடிப்படையில் அமைத்துள்ளனர்.

சாலோப லிங்கம்: ஆவுடையார் சதுர வடிவமாகவும் பாணம் வட்ட வடிவமாகவும் அமைந்திருக்கும்.

சாமீப லிங்கம்: ஆவுடையாரும் பாணமும் வட்ட வடிவாகவே இருக்கும்; பெரும்பாலும் இஃது எங்கும் காணப்படுவதாகும்.

சாரூப லிங்கம்: ஆவுடையார் வட்ட வடிவமாக இருக்கும். பாணம் *(வட்ட)* வடிவில் சிவனது திருமுக அமைப்புடன் முக லிங்கமாக இருக்கும். முகலிங்கங்களில் பல வகைகள் உள்ளன.

சாயுச்சிய லிங்கம்: ஆவுடையார் வட்ட வடிவமாக அமைந் திருக்கப் பாணம் 4, 8, 16, 32, 64 பட்டை வடிவங்களில் சில

1. காமகோடி *(திங்களிதழ்)* பிப்ரவரி 1991, பக். 12

இடங்களில் காணப்படும். இவ்வகைப் பட்டை லிங்கத் தோற்றம் தாராலிங்கம் எனப்படும்.[1] கள்ளக்குறிச்சி வட்டம் தச்சூரில் பல்லவர் கால தாராலிங்கம் கண்டறியப்பட்டுள்ளது.[2]

சிவலிங்கங்களுள் எத்தனையோ உருவ வேறுபாடுகள் உள்ளன. 'பரம்பொருள்' ஒன்றேயெனினும், அடியவர்களின் அணுகு முறையைப் பொறுத்துப் பல வேறுபட்ட வடிவமைப்புகள் தேவை யாகின்றன.

சிவலிங்க அமைப்பில் அளவு மிக முக்கியம்; அடுத்து சிவ லிங்கத்தில் பாணத்தைப் பொறுத்து நின்ற, இருந்த, கிடந்த கோலத்துச் சிவலிங்கங்கள் உள்ளன: அவற்றை இனங்கண்டு கொண்டு, சிவலிங்க உச்சி அமைவு (சிரோவர்த்தனம்) அஃதாவது 1. தாழங் குடை வடிவு, 2. கோழிமுட்டை வடிவு, 3. வெள்ளரிப் பழ வடிவு, 4. பாதி மதி வடிவம் ஆகியவற்றையும், அவை ஒவ்வொன்றிலும் உள்ள வகைமைகளையும் காணுதல் வேண்டும்.

பிறகு, பல்வகையான சிவலிங்கத் தோற்றங்கள் *(சாலோப லிங்கம், சாமீப லிங்கம், சாரூப லிங்கம், சாயுச்சிய லிங்கம்)* அமையும் சிறப்புக் கூறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறே வேறு கோணங்களில் பல வகைமைகள் உண்டு.

சிலர், சிவாலயங்களுக்குச் சென்று பார்வையிடுகையில், "சிவலிங்கங்கள் மிகப் பலவாக ஏன் வைக்க வேண்டும்?" என்று வினவுவர். சிற்பியர் ஆகம விதிப்படி ஒவ்வொரு சிவலிங்கத்துக்கும் பெயர் வைத்துள்ளனர். இவ்வாறெல்லாம் அடையாளங்கள் காண்பத தால் என்ன பயன் என வினவலாம்; நம்பிக்கையிருப்பின் ஒவ் வொன்றுக்கும் பயன் உண்டு. எடுத்துக்காட்டாகச் சைவத் தமிழ் மணி மா. சிவகுருநாதப் பிள்ளை, சிவலிங்க முக அமைவு பற்றி எழுதுகையில், தாழங்குடை, கோழி முட்டை, அரை வட்டம், வெள்ளரிப் பழம் ஆகிய நான்கைக் குறிப்பிட்ட பிறகு, ''வாழைப்பூ, தாமரை, இலிங்கம், கூப்பிய கை, நெல், யவம், அரசிலை, முக்கோணம், நீண்ட வட்டம், இரண்டு கத்திகள், சூலம், குறியற்றது ஆகிய அடையாளங்களும் அமைக்கலாம்.

வழிபடுவோருக்கு எண் வகைச் சித்திகளை அளிக்கும் ஒன்பது வகை இலிங்கங்களில் முறையே தாமரை, வச்சிராயுதம், சத்தி,

1. சிவ வடிவங்கள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, பக். 23,24-
2. சிதம்பரம், தொல்லியல் அலுவலர் திரு. கிருஷ்ணமூர்த்தி அண்மையில் கண்டுபிடித்துள்ளார்.

தண்டம், கத்தி, பாசம், கொடி, கதாயுதம், சூலம் இவை முகத்தில் அடையாளமாக இருக்கும்''[1] என நுண்குறிப்புகளை வழங்குவது மிகவும் போற்றற்குரியது; அவர் எழுதிய 'சிவ வடிவங்கள்' எனும் நூலைப் பயின்றால் சிற்ப நுணுக்கங்களையும் அவற்றால் புலப் படுத்தப்படும் சமயச் செய்திகளையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

2. சிவலிங்கம் - சிறப்பும் இலிங்க வகைகளும்

உலகமும் உலகில் தோன்றியுள்ள அனைத்துப் பொருள்களும் சிவ வடிவக் கூறுகளே என அருளாளர்கள் கருதுவர். 'அண்டத்தி லுள்ளது பிண்டத்திலே' எனும் கொள்கைப்படி, பஞ்ச பூதங்களைத் தன்னுருவாகக் கொண்ட 'சகுண பரசிவத்தை' ஒரு வகையில் உலக நன்மைக்காக இலிங்க வடிவில் கண்டு காட்ட முற்பட்டனர்.

இந்தியப் பெருநாட்டில் இமய மலையில் அமர்நாத் என்னு மிடத்தில் பனிக்கட்டியால் இலிங்க வடிவம் சுயம்புவாகத் தோன்றிக் காட்சியளிக்கும். அதன் பிரதிபிம்பங்களாகவே உலகெங்கும் வழி படப் பெறும் சிவலிங்கங்களைக் கொள்ளலாம்; அவற்றுள், சுயம்பு லிங்கங்களும் உண்டு. சிற்பக் கலைப் படைப்பாலான லிங்கங் களும் உண்டு. சில இடங்களில் தூணமைப்பில் *(கன்றாப்பூர் நடுதறி யமைப்பில்)* வடிவம் கொண்டிருக்கும். பல இடங்களில் லிங்கத்திலே அடி நடு மேல் பாகங்கள் அமைந்திருக்கும். அவ்வாறு அமையுங்கால், அடிப் பகுதி பிரம பாகமாகவும், நடுப்பகுதி விட்டுணு பாகமாகவும், மேற்பகுதி உருத்திர பாகமாகவும் கொள்வர்; இவற்றை முறையே இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி எனவும் விளக்குவர்.

இலிங்கத் திருமேனியில் உருத்திர, விட்டுணு, பிரமக் கூறுகளை மக்கள் உணர்ந்துய்யும் நோக்கத்தில், சிவ பரம்பொருள் சுசீந்திரம் எனும் திருத்தலத்தில் தாணு மாலயப் பெருமான் *(தாணு - சிவன்; மால் - விட்டுணு; அயன் - பிரமன்)* கற்சிலையில் எழுந் தருளியுள்ளதை நினைவிற் கொள்ளலாம். இது சமய ஒருமைப் பாட்டுணர்வுக்கு ஒரு சான்றாகும்.

மேலும், இலிங்கத் திருவுருவால் உய்திக்குரிய நவ நிலைகளைக் காணலாம்; இதற்கேற்பச் ''சிவம் உலகுக்கு உரிய ஏகநாதர்[2]

1. சிவ வடிவங்கள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், பக். 23-24
2. கல்லிடைக் குறிச்சிக் கலைக் கோயில்கள் உண்ணாமலைப் பதிப்பகம், சிதம்பரம், 1996 *(பல்லவர் காலத்து மும்மூர்த்தி இணைந்த சிற்பத்தையே ஏகபாத மூர்த்தியாகக் கல்லிடைக் குறிச்சியில் பல கோயில்களில் காணலாம்)*

என்பதை அறிந்து அவனைத் தொழ நான் ஐம்புலன்களையும் வென்று ஏக உருவில் கலந்து இன்புற்று என்னை மறந்து நின்ற போது அவன் எனக்கு அருள் வழங்கினான். அப்போது, பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், சத்தி, சிவம் என்ற ஒன்பது நிலைகளும் ஒன்றாகத் தூணாகாரச் சோதி யாக *(சோதி லிங்கமாக)* நிலைபெற்றது"[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்தித்தற்குரியதாகும்.

இலிங்கத் திருமேனியின் பல்வேறு சிறப்புக் கூறுகளைத் திரு மூலர் போன்ற அருளாளர்கள் உணர்ந்து புலப்படுத்திய தத்துவ நுட்பங்களையும், அவற்றைச் சிற்பியர் தம் கலைப் படைப்பில் கொணர முயன்றுள்ளனர் என்பதையும் விளக்கிற் பெருகும். எனினும், மிக முக்கியமான தத்துவக் குறிப்பு ஒன்றனைக் கூறுவது இயை புடையதாகும்.

அருவுக்கும் உருவுக்கும் காரணமாக விளங்கும் சிவலிங்கம் சோதி வடிவமாக ஆன்மாவின் உயிருக்குயிராய் ஒளிர்வதாகும். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் தத்துவம் ஒளிர் கின்றது. ஆன்ம சோதி, அருட்சோதி, சிவசோதி என்ற இம்மூன்றும் ஒன்று கூடியதே சிவலிங்கம். சிவலிங்கத்தின் அடி வட்டம் ஆன்ம சோதி. சிவலிங்கத்தினைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் அருட் சோதி. மேல் நோக்கியிருக்கின்ற சிவலிங்கம் சிவசோதி; இந்த மூன்றும் சேர்ந்தே மக்களுக்குச் சிவலிங்கமாகக் காட்சியளிக்கிறது என அருளாளர்கள் கருதுவது சிந்தித்து மனங்கொள்ளத் தக்கது. இந்த அடிப்படையில் சிவபரம்பொருளை அருட் பெருஞ்சோதியாகக் கண்டு வழிபட்ட உத்தமரே வடலூர் வள்ளற் பெருமான்.

சிற்பக் கலையில் சிவலிங்கங்களைப் பல நோக்கங்களுடன் வடித்துள்ளனர். தென்னாட்டிலே பாடல் பெற்ற சிவத் தலங்களி லும், புதியனவாகத் தோன்றிய சிவத் தலங்களிலும் சிவ லிங்கத்தைக் கருவறையில் நிலைநிறுத்தியுள்ளனர். எனினும், திருவிடைமருதூர் இறைவனை மட்டும் மகாலிங்கம் எனச் சிறப்பாகக் குறிப்பிடுவர். வடிவ அமைப்பில் திருவிடைமருதூர் மகாலிங்கத்தைவிடப் பெரியன வாகச் சில திருத்தலங்களில் உள்ளன. எனினும், சிறந்த சில திருத்தலங் களிலுள்ள மூர்த்திகளை இவ்விறைவனுக்குப் பரிவாரத் தெய்வங்க ளாகவே போற்றிக் கொண்டாடுவர். அஃதாவது, திருவிடை மருதூர்,

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, நவம்பர் 1972.

மகாலிங்கத்திற்குத் தில்லை ஆடல்வல்லான், திருக்கடவூர் அபிராமி, ஆலங்குடி தட்சணா மூர்த்தி, சுவாமிமலை சுவாமிநாதன், திருவலஞ் சுழி வெள்ளை வாரணர், சீர்காழி சட்டையப்பர் *(வைரவர்)* ஆகியோர் பரிவாரத் தெய்வங்கள் எனக் கொண்டாடுவதும் ஒரு சமய மரபு.

மதுரையிலுள்ள சொக்கலிங்கத்தையும் இவ்வாறே பெருமைப் படுத்திக் கூறுவதும் உண்டு. ''மதுரையைத் தவிர ஏனைய திருத் தலங்களில் காணலாகும் இலிங்கங்களெல்லாம் தனித் தனி ஒன்றான அமைப்புடைய வியட்டி லிங்கம். இத்தலத்திலுள்ள இலிங்கமோ எல்லாம் ஒருங்கு திரண்டு தொகுதியான அமைப்பும் ஆற்றலு முடைய சமட்டி லிங்கம் எனக் கருதுவர்''[1] எனப் புலவர் செந்துறை முத்து கூறிச் செல்வது சிந்திக்கத் தக்கக் குறிப்பாகும்.

2.1 வியத்தகு சிவலிங்கங்கள் சில

சிற்பக் கலை நோக்கில் வடிவத்தாலும் பல வகை அமைப்புக் கூறுகளாலும் பல்வேறுபட்ட சிவலிங்கங்கள் சில ஆலயங்களில் காணப்படுகின்றன; அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

அ) திருப்புனவாயில் - சிவலிங்கம்

பாண்டி நாட்டுப் பழம்பெருஞ் சிவாலயங்களுள் ஒன்றாகிய திருப்புனவாயில், திருவாடானைக்கு 19 கி.மீ. தொலைவிலுள்ளது: இங்கு நந்தியும், மூல லிங்கமும், ஆவுடையாரும் மிகப் பெரியவை யாகும்.

''சுவாமிக்கு 3 முழ உடை வேண்டும்; ஆவுடையாருக்கு 30 முழ உடை வேண்டும். 'மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று' என்று பழமொழியாகச் சொல்வது இத்தலத்துச் சுவாமியைப் பற்றித்தான்...பாண்டி 14 தலமும் திருப்புவன வாயிலிலேயே இருப்பதாக ஐதீகம். பதினான்கு இலிங்கங்களும் உள்ளன''[2] என்று வ.த. சுப்பிரமணியப் பிள்ளை குறிப்பிட்டுச் செல்வது மனங் கொள்ளத் தக்கது.

---

1. பாண்டி நாட்டுக் கோவில்கள், மணிவாசகப் பதிப்பகம், பக். 15
2. சிவஸ்தல மஞ்சரி, பக். 231

ஆ) தஞ்சைப் பெரிய கோயில் - சிவலிங்கம்

தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயிலாகிய பெரிய கோயிலில் நந்தியும் பெரியது. சிவலிங்கமும் பெரியது. அதன் உயரம் 13 அடி. கருவூர்ச் சித்தரால் மூர்த்திகர நோக்கில் பிரதிட்டை செய்யப்பட்ட சிறப்பினையுடையது இந்தச் சிவலிங்கம்.

(தஞ்சைப் பெரிய கோயில் இலிங்கத்திற்கு அடுத்த நிலையில் மிகப் பெரிய இலிங்கமாக, விருத்தகிரீசுவரர் கோயிலில் - அறந் தாங்கி, புதுக்கோட்டை ஆகிய ஊர்களுக்கு நடுவேயுள்ள சிவால யத்தில் - அருள் பாலித்து வருவதைக் கூறுவர்).

இ) காஞ்சிபுரம் - சிவலிங்கங்கள்

காஞ்சி ஏகாம்பரநாதர் *(சிவலிங்கம்)* பழம் பெருமை கொண்டது. எனினும், அவ்வாலயத்தில் மாவடியைச் சுற்றியுள்ள பிராகாரத்திலே புராண அடிப்படையிலே 136 சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. பொதுவாகச் சில சிவாலயங்களில் *(சிதம்பரம் முதலிய சில ஸ்தலங்களில்)* காணலாகும் 108 சிவலிங்கங்கள் கொண்ட ஒரே சிவலிங்கமும் உள்ளது.

இஃது ஒரு புறமிருக்க, காஞ்சியிலுள்ள ஆதிபீட பரமேசுவரி ஆலயத்திலுள்ள இலிங்கம் 40 செ.மீ. உயரமுடையது. இதன் உருத்திர பாகத்தில் சக்தியின் வடிவம் அமர்ந்த நிலையில் காணப்படு கிறது. இறைவியின் வடிவம் லிங்கத்தில் காணப்படுவதால் இது சக்தி லிங்கம் என அழைக்கப்படுகிறது. அமர்ந்த நிலையிலுள்ள அன்னை நாற்கரமுடையவளாக மேற்புற வலக்கையில் அங்குச மும், இடக்கையில் சூலமும், கீழ்ப்புற வலக்கையில் வாளினை யும், இடக்கையில் கபாலத்தினையும் கொண்டுள்ளாள். இறைவி யின் வலக்கால் தொங்கிய நிலையிலும், இடக்கால் மடங்கிய நிலையிலும் கூடிய அர்த்த பரியங்க நிலையிலுள்ளது. தலையில் மகுடமும், காதுகளில் குண்டலங்களும் காணப்படுகின்றன''[1] என்று ஏ.ஏ். ஏகாம்பரநாதன் விளக்கிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது.

பொதுவாக அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தில் தலை, கை முதலிய உறுப்புக்களை அமைத்து வழிபடும் வழக்கம்

1. கோயிலும் இறைவழிபாடும், கழகப் பதிப்பு, பக். 71-72

மிகுதியாக இல்லை. அப்படியிருக்க, இவ்வாறு சக்தி லிங்கம் அமைந்துள்ளமை சிந்திக்கத் தக்கது.

ஈ) திருப்பூவணம் - வியத்தகு சிவலிங்கம்

மதுரைக்கு அருகிலுள்ள திருப்பூவணம் எனும் திருத்தலம் உள்ளது; அங்குள்ள திருப்பூவண நாதராகிய சிவலிங்கத்தில் திரிசூலமும் சடைமுடியும் வடிவங் கொண்டுள்ளதைக் காணலாம். வேறு சிவாலயங்களில் இத்தகைய அமைப்பில் சிவலிங்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

உ) தஞ்சாவூர் அருகே கோயில் வெண்ணி

தஞ்சாவூர் அருகே கோயில் வெண்ணி என்னும் தலத்தில் கரும்பேசுவரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருப்பங் கழிகளை ஒன்று சேர்த்துத் தொகுத்து வைத்திருப்பது போல அதிசயக் காட்சியளிக்கிறது அந்தச் சிவலிங்கத் திருமேனி.[1]

ஊ) திருவண்ணாமலை அருணாசலேசுவரர்

சூரியன், சந்திரன், பிரமன், திருமால் முதலிய தெய்வங்களாலும், சைவ சமயாசாரியர் நால்வராலும், அருணகிரிநாதர் முதலிய அருளாளர்களாலும் வழிபடப்பட்ட சிறப்பு வாய்ந்தது 'அருணாசலேசுவரர்' எனப் பெயரிய சிவலிங்கம் ஆகும். திருமால் வராக உருக் கொண்டு சிவனது திருவடியையும், பிரமன் அன்னவுருக் கொண்டு சிவனது திருமுடியையும் காண முற்பட்ட நிலையில் சிவன் விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தீபத்தம்பமாக விளங்கியருளினான். இந்நிகழ்ச்சியின் அடிப்படையிலே சிவலிங்கத் திருமேனி அருளாளர்களால் உணரப்பட்டது. எனவே, இங்குள்ள சிவலிங்கம் மிகச் சிறப்புடையது.

எ) திருப்பனந்தாளில் சாய்ந்து நிற்கும் நிமிர்ந்த லிங்கம்

தாடகேசுவரமாகிய திருப்பனந்தாளில் சடையப்பர் கோயில் உள்ளது. சிவ பக்தி மிகுந்த அடியவளாகிய தாடகை பூசை புரிகையில், ஆடை நெகிழவே அவள் கையிலுள்ள மாலையை ஏற்கும் நோக்கத்தில் இறைவன் சிரந்தாழ்த்தினான்; ஆதலின் சிரந்தாழ்த்திய

1. அம்மன் தரிசனம், ஜூலை 2000, பக். 15

சிவலிங்கம் அங்கு உள்ளதாயிற்று. இந்தச் சிவலிங்கத்தின் உச்சியில் சடை முடியமைப்பு உள்ளது. தாடகைக்காகச் சாய்ந்த சிவலிங்கத் திருமேனி, குங்கிலியக் கலய நாயனரால் நிமிர்த்தப்பட்டது. இந்தச் சிவலிங்கம் மிகத் தொன்மையானது.

திருவாவடுதுறை ஆதீன ஒடுக்கத்தில் மரச் சிற்பங்களில் மேலே குறிப்பிடப்பட்ட சிவலிங்கக் காட்சி உள்ளது.[1] இதனைச் சிதம்பரம் தொல்லியல் அலுவலர் ச. கிருஷ்ணமூர்த்தி கண்டறிந் துள்ளார்.

ஏ) திருவதிகையில் ஐந்துமுகச் சிவலிங்கம்

பல்லவர் காலத் திருப்பணிகளை மிகுதியாகக் கொண்டது திருவதிகை வீரட்டானேசுவரர் திருக்கோயில்; கோயிலில் தென் மேற்கு மூலையில் சதுரமான, ஆவுடையாருடன் கூடிய நான்குமுகச் சிவலிங்கம் காணப்படுகிறது. ''இலிங்கத்தின் மேல் பகுதியில் முகம் இல்லை. இருப்பினும் மேல் பகுதியில் முகம் இருப்பதாகக் கொண்டு பஞ்சமுக லிங்கம் என்று அழைக்கப் பெறுகிறது. இலிங்கத்தின் நான்கு புறங்களிலும் உள்ள முகங்கள் கழுத்து வரை அமைக்கப்பட்டுள்ளன'' என்று கோயிற் கலைச் செல்வர் தி. இராச மாணிக்கம் கருதுவது சிந்திக்கத் தக்கது.

ஐ) கொடுமுடியில் அகத்தியர் கைரேகை பதிந்த சிவலிங்கம்

பாண்டிய நாட்டுக் கொடுமுடியில் கொடுமுடி நாதர் திருக் கோயில் உள்ளது. சிவலிங்கத்தின் மீது கைவிரல் பதிந்த தடம் உள்ளது. சிவலிங்கத்தை அகத்தியர் கட்டித் தழுவியதால் உண்டான தழும்பு எனும் புராணக் குறிப்பிற்கேற்பச் சிவலிங்கம் இருப்பது காணத் தக்கது.

ஒ) திருக்கருகாவூர் - அதிசயச் சுயம்பு லிங்கம்

திருக்கருகாவூரில் எழுந்தருளியுள்ள முல்லை வன நாதராகிய ஈசன் - சிவலிங்கத் திருமேனியுடன் - அருளாட்சி புரிகிறார். முல்லைக் காடாக இருந்த இந்நிலப் பகுதியில் நீர், காற்று, தீ, மண், விண் ஆகிய ஐம்பூதக் கலவையோடு அமுதும் சேர்த்து உண்டாகிய சிவலிங்கத் திருமேனியைக் காணலாகும்; அந்தத் திருமேனியின்மீது முல்லைக்

1. மெய்கண்டார் *(திங்களிதழ்)*, திருவாவடுதுறை ஆதீனம்.

கொடிகள் தழுவிப் படர்ந்ததன் அடையாளமாகத் தழும்பை இலிங்கத்தின்மீது இன்றும் காணலாம். இந்தச் சுயம்பு லிங்க மூர்த்திக்குப் புனுகுச் சட்டம் சார்த்துதலே அபிடேகமாக இருந்து வருகிறது.

இந்த அற்புத மூர்த்திக்கு மிகப் பெரும் அருட் சிறப்பு, அங்கு எழுந்தருளியுள்ள இறைவி கர்ப்பரட்சாம்பிகையின் பெருமையால் தான் என்பது மக்கள் நம்பிக்கை. தாயின் கருப்பத்திலுள்ள குழந்தைக்குப் பெரும் பாதுகாப்பளிக்கும் இந்த இறைவியின் சிறப்பை வெளி நாட்டவர்களும் போற்றிக் கொண்டாடி வருகின்றனர் என்பதற்குப் பல நிகழ்ச்சிகள் உள்ளன.

ஓ) திருமாணிக்குழி - அகத்திய முனிவர் நிறுவிய லிங்கம்

கடலூர் திருமாணிக் குழியில் அகத்தியர் நிறுவிய சிவலிங்கம் உள்ளது. முன்னொரு காலத்தில் திருமாணிக்குழி வாமனபுரீசுவரர் ஆலயத்தில் ஈசுவரனைக் காண முடியாதபடி, கருவறையிலே திரை யிடப்பட்டிருந்தமையால் அகத்திய முனிவர் கவலையுடன் நின்றா ராம்! அவருக்கு இங்கிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ள ஐந்து மலைகளுக்கு நடுவே இறைவன் சோதி வடிவமாகக் காட்சியளித் துள்ளார். கவலை நீங்கிய அகத்திய முனிவர் அந்த இடத்தில் இலிங்கம் ஒன்றினை நிறுவியுள்ளார். மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கும் அந்த இலிங்கம் மிகப் பழங்காலத்திலிருந்து திறந்த வெளியிலேயே உள்ளது.

இஃது ஒரு புறமிருக்கத் திருமாணிக் குழி ஆலயத்தில் முதல் பிராகாரத்தின் மேற்கே துவாபர, திரேதா, கலியுக இலிங்கங்களோடு விஷ்ணு லிங்கம், துர்வாச லிங்கம் ஆகிய இலிங்கங்களும் இத்திருத் தலத்தின் மிகத் தொன்மைச் சிறப்பிற்கு அடையாளங்களாக விளங்குகின்றன.

ஔ) சோடச தாரா லிங்கம்

சிதம்பரம், காஞ்சிக் கயிலாசநாதர் கோயில், பழையாறை ஆகிய தலங்களில் சோடச தாராலிங்கத்தைக் காணலாம். 16 பட்டை களையுடைய லிங்கத்தைச் சோடச தாரா லிங்கம் என்பர். இது சந்திர னின் 16 கலைகளையும் 16 பட்டைகளாகக் கொண்டு விளங்குவ தாகும். வளர்பிறையின் நிறைவைக் குறிக்கும் இந்த அடையாளத் தால் மக்கள் பதினாறு பேறுகளும் பெற்று பெருவாழ்வு பெற, இதனை வழிபடுவர்

ஃ) சத்திமுற்றம் திருக்கோயில்

குடந்தைக்கு மேற்கே (8 கி.மீ) சத்திமுற்றம் திருக்கோயிலில், இறைவி தன் ஒற்றைக் காலைத் தரையில் ஊன்றியும் மற்றொரு காலை ஆவுடையாரின் மீது மடக்கி வைத்தும் தன் இரு கைகளால் சிவலிங்கத்தைத் தழுவி நிற்கும் திருக்கோலம் அமைந்துள்ளது. சக்தி தழுவிய இலிங்கத் திருமேனியும், அதற்குப் பின்புறம் ஒற்றைக் காலில் நின்று தவம் புரியும் அம்மையின் திருமேனியும் ஐதீகச் சிறப் புடையவை.

க) வில்லியனூர் திருக்காமீச்சரர் - சிவலிங்கம்

வில்லியனூர்ச் சிவன் கோயில் சிவலிங்கம் ஒருவகைக் கலவை யால் உருவாக்கப்பட்டது. அதன் உயரம் இரண்டரை அடி. ''மலை யுச்சியிலிருந்து அல்லது ஆற்றங்கரையிலிருந்து எடுக்கப்பட்ட வெண்மையான தூய்மையான களிமண்ணுடன் பால், தயிர், நெய், பால் மரப்பட்டைகள், சந்தனக் குழம்பு, பாதரசம் முதலான இன்ன பிற பொருள்களையும் வேண்டிய அளவு சேர்த்து, நன்கு பிசைந்து இரண்டு வாரங்கள் அல்லது ஒரு திங்கள் சென்ற பின்னர், ஆகமத்தில் விதிக்கப்பட்ட வடிவில், இலிங்கமாக உருவாக்கப் படும் 'மின்மய லிங்கம் என்று காமிகாகமம் கூறுகிறது''.[1]

வில்லியனூர்ச் சிவன் கோயிலில் மூலவராக நிறுவப்பட்டுள்ள களிமண்ணால் உருவாக்கப்பட்ட இலிங்கத்தின்மீது புனுகு எண்ணெய் பூசுவது வழக்கம். ஆனால், இக்கோயிலின் வழக்கத்துக்கு மாறாகச் சாம்பிராணித் தைலம் பூசுகின்ற வழக்கம் இன்றும் உண்டு. பன்னூறு ஆண்டுகளாக இவ்வாறு புனுகு எண்ணெயும் தைலமும் பூசி வந்தமையால், அப்பூச்சு சிவலிங்கத்தின்மீது தேனடைபோல ஒட்டியும் உரிந்தும் உதிர்ந்தும் காணப்படுகிறது.[2]

கா) விழுப்புரம் (தென்னார்க்காடு) மாவட்டம் ரிஷிவந்தியத்தில் அர்த்தநாரி லிங்கம்

ரிஷிவந்தியம் சிவாலயத்தின் கருப்பக்கிருகத்தில் சுயம்புவாகச் சிவபெருமானும் பார்வதி தேவியும் சிவலிங்கத்திலே ஒன்றியவாராக - அர்த்தநாரீசுவரராக அடியவர்களுக்குக் காட்சியளிப்பது சமயவுலகில்

1. Elements of Hindu Iconography, Vol II, Part I, p.76
2. இ.ப.க.த. மன்றம், 18ஆவது ஆய்வுக் கோவை, தொகுதி 3, 1986, பக். 213

காணப்படும் அற்புதமாகும். தென்னிந்தியாவில் இங்கு மட்டுமே இத்தகைய சிறப்புத் திருமேனி உள்ளதென்பர். *(தேனாபிடேகம் செய்யுங்கால் இலிங்கத்தின் பாணப் பகுதியில் அம்பிகையின் நிழலுருவம் காணலாம்).*

கி) பிள்ளையார்ப்பட்டி சிவலிங்கம்

முற்காலப் பாண்டியர் காலத்தில் குன்றைக் குடைந்து கோயிலை அமைத்ததும், சிறந்த சக்தி மிக்க கற்பக விநாயகரையும் அவருக்கேற்ப அருள் நலம் வழங்கும் திருவீசர் எனும் சிவலிங்கத்தையும் வடிவமைத்ததும் சிற்பக் கலை வரலாற்றில் குறிப்பிடத் தக்கவை.

கீ. சகசிர லிங்கம் *(ஆயிரம் லிங்கங்கள் பொருந்திய ஒரே வடிவம்)*

ஆயிரம் திருப்பெயர்களால் அருச்சனை வழிபாட்டினை ஏற்கும் நிலையிலுள்ள சிவபெருமானை ஆயிரம் லிங்கங்களில் புலப்படுத்த நினைத்த அருளாளர்கள் சகசிர லிங்கம் கண்டனர்; சிற்பியரும் ஒரே சிவலிங்கத்தின் நடுதறியாகிய பரணப் பகுதியில் ஆயிரம் லிங்கங்களைப் பொறித்துள்ளனர். சிறப்புமிகு சகசிர லிங்கம் தென்காசி விசுவநாதர் ஆலயத்திலும், மயிலாடுதுறை மயூரநாதர் கோயிலிலும் சிறப்பாகக் கண்டு வழிபடலாம்.

கு) அன்னூர் ஆலயத்தில் இறக்கைகளுடன் சிவலிங்கம்

கோவை அவிநாசி வட்டத்திலுள்ள அன்னூர் அருள்மிகு மன்னீசுவரர் ஆலயத்தில் இறக்கைகளுடன் கூடிய சிவலிங்கம் உள்ளது; வேறு எந்தத் தலத்திலும் இத்தகைய சிற்பத்தைக் காண முடியாது.

கூ) சிவலிங்கத்தின் மேல் திருமால்

சிவனுக்கும் திருமாலுக்கும் வேறுபாடு காட்டாமல் ஒருமை உணர்வுடன் மக்கள் வழிபாடியற்ற வேண்டுமென்று சமயவுலகில் சில உத்திகள் கையாளப்பட்டுள்ளன; அவற்றுள் ஒன்று இது.

வட ஆர்க்காடு மாவட்டம், காஞ்சிபுரம்-வேலூர்ச் சாலையிலுள்ள திருத்தலம் திருப்பாற்கடல். அவ்வூர்க் கோயிலில் சிவலிங்கத்துக்கான ஆவுடையாரின்மேல் இலிங்கமிருக்கும் தானத்தில் திருமால் நின்று கொண்டிருக்கும் நிலையில் கலைப் படைப்பினைக் காணலாம்.

கெ) திருவாமாத்தூர் திரிமூர்த்தி

திருவாமாத்தூர் அபிராமி ஈசுவரர் கோயிலின் வெளித் திருச்சுற்றில் ஒரு பலகைக் கல்லிலே திரிமூர்த்தியின் புடைப்புச் சிற்பம் உள்ளது; அதனில் நடுவே இலிங்க உருவமும் இரு புறமும் பிரம்மாவும் விஷ்ணுவும் உள்ளனர். சிவனுக்குச் சிறப்பினைத் தரும் இச்சிற்ப்ப் படைப்பினை அறிஞர்கள் நடன காசிநாதன், ச. கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர். சிற்பத்தின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டென ஆய்வு அடிப்படையில் ச. கிருஷ்ணமூர்த்தி கருதுகிறார்.

கே) திருவக்கரையில் மூன்றுமுகச் சிவலிங்கம்

தென்னார்க்காடு மாவட்டம் திருவக்கரையில் மூன்று திரு முகங்கள் கொண்ட இலிங்கத் திருவுருவம் நன்கு அமைந்துள்ளது.

சிவலிங்கங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஆலய வளாகங்களிலும் பிற அருளாளர்கள் அடக்கமான இடங்ளிலும் எண்ணற்றவையாகக் காணப்படுகின்றன. வரலாற்று நோக்கில் சிந்திக்கையில் விசய நகர - நாயக்க மன்னர்கள் காலத்தில், அவர்கள் பொதுவாக வைணவத்தை ஆதரித்தாலும், சிவ வழிபாட்டிற்கும் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்; சிவனின் ஒரு வகைக் கோலமாகிய விருபாட்சர், அவர்களின் குலதெய்வமாக விளங்கி யமையால், சைவ வழி மேம்படும் வகையில் இலிங்க வழிபாடு பரவத் துணை நின்றதில் வியப்பில்லை. இலிங்கங்களைப் பல நோக்கங்களில் போற்றும் வீர சைவர்களும் ஆதரவு பெற்றன்மயால் விசய நகர நாயக்கர் காலத்தில் வீர சைவ மடங்களும் தென்னக மெங்கும் பரவலாகத் தோன்றலாயின.

"குடிமல்லத்தில் தொடங்கும் தென்னிந்திய இலிங்கப் படிமங்கள் **(Chandrakumar, 1990)** எண்ணிக்கையிலும், வகைகளிலும் பெருகிக் கோயில் திருச்சுற்றுக்களில் *108, 1008* இலிங்கங்களாகவும், காசி லிங்கம், விச்வ லிங்கம், சகசர லிங்கம், துவாதச லிங்கம், பஞ்சபூத லிங்கம், ஏகாதசருத்ர லிங்கம் என முழுமை எய்துவது இக்காலத்தில் *(நாயக்கர் காலம்)*தான்"[1] என்றும், 'கல்லில் மட்டுமல்லாது நவ ரத்தினங்களிலும் இலிங்கங்களைச் செய்துள்ளனர். அன்றாடத் திரு

1. *சிந்தைக்கினிய சிற்பக் கலை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, பக். 135-136*

நீராடலுக்கும் வழிபாட்டிற்கும் பயன்படத் தக்க வகையில் அவை உருப் பெற்றன. பிற்கால நாயக்கர் காலத்தில் படிக லிங்கங்கள் உருவாக்கப்பட்டன. சிவலிங்க வழிபாட்டைப் பல்வேறுபட்ட உயிரினங்கள் மேற்கொண்டு வழிபாடு செய்வது போன்று செதுக்கப் பட்டது. *(உ-ம்)* திருவானைக் கோயில். நாகதேவர் சிவனை வழி படும் காட்சி உருப் பெற்றது.... காமாட்சியம்மன் சிவலிங்கத்தை ஆலிங்கனம் செய்யும் படிமங்கள் காஞ்சி முதல் வடக்கேயுள்ள பணவாசி வரை பரவி இருப்பதைக் காணலாம். புலிக்கால் முனிவரும் பாம்புடல் கொண்ட பதஞ்சலி முனிவரும் சிவலிங்கத்தை வழி படும் காட்சிகளைத் தென்னகமெங்கும் காணலாம் ... திருமால், நாகதேவன், யானை போன்றவர்கள் சிவலிங்கத்திற்கு வழிபாடு செய்யும் சிற்பங்களைக் காணலாம்''[1] என்றும் த. சந்திரகுமார் ஆய்வு நோக்கில் எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கது.

2.2 இலிங்கோற்பவ மூர்த்தி - சிற்பக் கூறுகள்

சிவபரம்பொருளாகிய இறைவனுடைய திருவடியைக் காணத் திருமால் பன்றியுருவமெடுத்தும், திருமுடியைக் காணப் பிரமன் அன்னப் பறவை உருவமெடுத்தும் முயன்ற நிலையில், இறைவன் அண்ட சராசரங்களைக் கடந்த ஒளிப் பிழம்பாக நின்றான். அடியும் முடியும் காணவியலாத நிலையில் இப்படி இறைவன் அழலுருவ மாக நின்ற நேரமே இலிங்கோற்பவ நேரம் என்பதும், இந்த நேரத்தில் இலிங்கோற்பவராகத் தோன்றி அருளினார் என்பதும் புராணக் குறிப்பு.

இந்த இலிங்கோற்பவச் சிலைகளைப் பெரிய சிவாலயங் களில், கருவறைக்குப் பின்னாலுள்ள தேவக் கோட்டத்தில் காணலாம். இலிங்கத் திருமேனியில் நின்ற நிலையில் சிவபெருமானையும், மேலே அன்ன உருவத்தில் பிரமனையும், கீழே பன்றி உருவத்தில் திருமாலையும் சிற்பக் கலைப் படைப்பாக உருவாக்கியுள்ளனர்.

சோதி வடிவினனாகச் சிவன் தோன்றியதை அடுத்தே, இந்தியப் பெருநாட்டில் பன்னிரண்டு தலங்களில் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள் அமைந்து வழிபாட்டில் உள்ளன என்பது சமய வரலாறு.

இலிங்கோற்பவத் திருவுருவத்தை அமைக்கையில், தம் கற்பனைக்கேற்பச் சில தலங்களில், சில மாறுதல்களையும் சிற்பியர் புரிந்துள்ளனர்.

1. சிந்தைக்கினிய சிற்பக் கலை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, பக். 135-136

மதுரை முத்தீசுவரர் ஆலயத்தில் மிக அபூர்வமான லிங்கோத்பவர் சிலை காணப்படுகிறது. ''பொதுவாக லிங்கோத்பவருக்கு மேற்புறம் அன்னமும் கீழ்ப்புறம் பன்றியும் காட்சியளிக்கும். ஆனால், இங்கு அன்னம் பன்றியோடு அடிமுடி தேடுவதில் தோற்ற பிரம்மனும் விஷ்ணுவும் தத்தம் சுய உருவில் வணங்கிய நிலையில் காட்சியளிக்கின்றனர்''[1] என வருங்குறிப்பு நோக்கத் தக்கது.

உலக உய்திக்காகச் சிவ பரம்பொருள் அருவ நிலையிலிருந்து அருவுருவமும், அதன் அடுத்த நிலையாக உருவத் திருமேனியும் கொள்வதைக் கண்டு வருகிறோம்; அதேபோலக் குணங்களைக் கடந்த அதே பரம்பொருள் மூர்த்தி பேதங்களுடன் அருளும்போது குணங்களின் குறியீடுகளாகச் சிற்ப அமைப்பில் சிலவற்றைப் பெறுகின்றன. இதற்கு அடிப்படையாக இலிங்கத்திலிருந்து இலிங்கோற்பவ மூர்த்தி படிநிலையாக அமையும்.

தொடர்ந்து காணவிருக்கும் மூர்த்தி பேதங்களுக்குப் பூர்வாங்கமாகச் சிவன் குணங்களை உணர்த்தும் பொருள்கள் பற்றிக் காண்போம்.

சூலம்	-	முக்குணம்
பரசு	-	சத்தியம் *(உண்மை)*
கட்கம் *(வாள்)*	-	பேராண்மை
வச்சிரம்	-	*(முழுமை)* பிரிக்கவொண்ணாதது
அபயம்	-	பேரருளுடைமை
நாகம்	-	பாசங்களினின்று நீங்கிய தன்மை
பாசம்	-	மாயை வடிவம்
அங்குசம்	-	நிறமின்மை
மணி	-	நாதமயம்
அக்கினி	-	ஒடுக்கம்[2]

என்று சிற்பி கணபதி ஸ்தபதியார் எழுதிச் செல்லும் அருங்குறிப்பு மிகச் சிந்திக்கத் தக்கது.

2.3 அர்த்தநாரீசுவரர் கோலத்தில் சிற்ப நுண் கூறுகள்

சிவபெருமான் திருக்கோயில்களில் பலவகைச் சிவமூர்த்தங்கள் காணப்படினும், உமையொரு பாகராகிய அர்த்தநாரீசுவரர்

1. ஆலயங்களும் அபூர்வத் தகவல்களும் *(கோ.வி. இராஜேந்திரன்)* பக். 12
2. சிற்பச் செந்நூல், பக். 122

திருக்கோலத்தைக் காண்பது அரிது. இத்திருக்கோலத்தில் வலப் பக்கம் சிவன் சிறப்புக் கூறுகளையும், இடப்பக்கம் உமையம்மை யின் சிறப்புக் கூறுகளையும் கொண்டிருக்கும்.

விளக்கமாகக் காண்கையில், வலப் பக்கத்துச் சிவன் பாகத்தில் சடை முடியும், பிறைச் சந்திரனும், வலச் செவியில் சர்ப்பக் குண்டலம் அல்லது மகரக் குழையும் அமைந்திருக்கும்; வலப் பக்கத்தில் நெற்றிக் கண்ணில் பாதியும், ஆண் மார்பும், திருநீறும், வலப் பக்கத் திருமேனியில் புலித் தோலாடையும் பாம்புப் பூணூலும் பொருந்தியிருக்கும்; வலக் காலைச் சிறிது வளைத்துக் கொண்டு நிற்பதும் தெரியும்.

ஆனால், இடப் பக்கமோ உமையன்னையின் பெண்மைக் குரிய பொலிவினையும், இடப் பக்கத்துத் தலையில் கரண்ட மகுடமும், இடப் பக்கச் செவியில் 'வாளகா' எனப் பெயரிய குண்டலமும், இடப் பக்க நெற்றியில் திலகமும், இடக் கண்ணில் மைப் பூச்சும், இடப் பக்கக் கைகளில் வளையல்களும், பெண்மைப் பூரிப்பிற் கேற்ற இடப் பக்கக் கொங்கையும், இடப் பக்கக் கழுத்தில் மகளிர்க் கேற்ற அணிகலன்களும், இடப் பக்கக் காலில் சிலம்பும் பொருந்த இடப் பக்கத் திருமேனி கருமை அல்லது கிளிப் பச்சை வண்ணங் கொண்டு பொலிவுறும்.

சிற்பக் கலை நோக்கில், ''அர்த்தநாரீசுவரரின் சிற்பங்கள் நான்கு, மூன்று அல்லது இரண்டு கைகளைப் பெற்றுக் காணப்படுகின்றன. நான்கு கைகள் உள்ள அர்த்த நாரீசுவரரின் வலக் கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றொன்று வரத முத்திரை அல்லது அபய முத்திரையையும் கொண்டிருக்கும்.

இடப் பக்கக் கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்தியின் தலையினைத் தொட்டுக் கொண்டிருக்கும். மற்றொரு கை கடக முத்திரையுடன் நீலோற்பலம் என்னும் மலரினைப் பெற்றிருக் கும். நான்கு கைகளுடைய அர்த்தநாரீசுவரரின் சிற்பம் பாதாமியில் உள்ள குடைவரைக் கோயிலிலும், மாமல்லபுரத்திலுள்ள தருமராசா இரதக் கோயிலிலும் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்படும் அர்த்தநாரீசுவரரின் வெண்கலச் சிலை, நான்கு கைகளைக் கொண்டது.

மூன்று கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் இரண்டு கைகள் வலப் பக்கமும், ஒரு கை இடப் பக்கமும் காணப்படும். வலப் பக்கக் கைகளில் சூலமும் அட்ச மாலையும், இடப் பக்கக் கையில்

மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளியும் இருக்கும். கும்பகோணத் திலுள்ள நாகேசுவர சுவாமி கோயிலில் அர்த்தநாரீசுவரரின் சிற்பமும் மூன்று கைகளுடைய சிற்பங்களாகும்''[1] என வரும் அருங்குறிப்பு மிகப் போற்றத் தக்கது.

சிவனது தொன்மைக் கோலமாகப் போற்றப்படும் அர்த்த நாரீசுவரர் திருவுருவம் இரு கைகளை மட்டும் கொண்ட நிலையில், சில தலங்களில் காணலாம்; இதுவும் சிற்பியரின் கலை வண்ணமே. அத்தகைய உருவத்தில் வலக்கை வரத முத்திரை அல்லது கபாலம் *(மண்டையோடு)* கொண்டும், இடக்கை கீழ் நோக்கி வளைந்து நந்திகேசுவரரின் தலையைத் தொடுவது போன்றும் காணப்படும். பொதுவாகவே, அர்த்தநாரீசுவரருக்கு அருகில் நந்திகேசுவரரை அமைத்துப் போக மூர்த்திக்குச் சிறப்பளிப்பது உண்டு.

பொதுவாக, உமையைவிடச் சிவனுக்கு முதன்மை அளிக்கும் கோலமாக அர்த்தநாரீசுவரர் இருப்பினும், உமைக்கு முதன்மை யளித்து அடுத்த நிலையில் சிவன் அமையுமாறு சிந்திக்க வைக்கும் திருவுருவங்களும் உண்டு. எடுத்துக்காட்டாகத் தாராசுரத்திலுள்ள அர்த்தநாரீசுவரர் திருமேனியில், ''சிலையில் இடப்புறம் கரண்ட மகுடமிருப்பதற்குப் பதிலாகத் தலை முழுவதும் கரண்ட மகுட மாகவே இருத்தலைக் காணலாம். எனவே, தேவியின் அங்க மாகவே சிவன் அமைந்துள்ளான் எனக் கருதுமாறு இது காட்டப் பட்டிருக்கிறது''[2] என வருங்குறிப்பினை இயைபுடன் சிந்திக்கலாம்.

தொன்மையான சிவாலயங்களில் கருவறையில் மூலவர் சிவலிங்கமாகவே அமைவது மரபு; ஆனால், திருச்செங்கோட்டில் அத்தநாரீசுவரரே வலப் பக்கம் நீண்ட தண்டு ஏந்தியவராய் அழகுச் சிலை வடிவில் மூலவராக அமைந்திருத்தல், எங்கும் காணவியலாத சிறப்புடையது. மேலும், நாகாபரணனாகிய சிவனுக்கு 60 அடி நீளமுள்ள நாகச் சிலையும் சிறப்பினை மிகுதிப்படுத்துகிறது.

(திருவண்ணாமலைத் திருத்தலத்தில், கார்த்திகைப் பெரு விழாத் தொடர்பில் தீபத் திருநாளன்று மட்டுமே அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிக் காட்சி கொடுப்பது மரபாக இருந்து வருகிறது).

திருவானைக்கா எனும் சைவத் திருத்தலம், சோழன் செங்கணான் தொடங்கிப் பராந்தகன் உள்ளிட்ட சோழர்கள் பலரின்

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஒன்று, பக். 571
2. ஞானவழி *(திங்களிதழ்)* டிசம்பர் 1989.

திருப்பணிகளைக் கொண்டது. இக்கோயிலின் திருச்சுற்றில் வட புறக் கோட்டத்தை அலங்கரிக்கும் சிற்பங்களுள் அர்த்தநாரீசுவரர் திருவுருவமும் ஒன்று. இதனை விளக்குகையில் டாக்டர் இரா. நாகசாமி "இடப்புறம் அன்னையின் உருவம் கொண்டது; வலப் புறம் மழு, தொடை மீதமர்ந்து விளங்கும் இரு கரங்கள், இடப்புறம் வளை பூண்டு, தாமரை மலர் தாங்கி நிற்கும் அன்னையின் ஒரு கரம், வலப்புறம் மகரக் குழை, இடப் புறம் தோடு, வலப் புறம் ஆடை, இடப்புறம் துகில் புடவை. எழிலே உருவான அற்புதத் திருமேனி. இவ்வுருவம் மூலத்தான விமானத்தில் பின்புறக் கோட்டத்தை அலங்கரித்திருக்க வேண்டும். உமையொரு பாகன் அக்கோட்டத்தை அலங்கரிப்பதைக் கி.பி. 9,10ஆம் நூற்றாண்டுகளில் கட்டப் பெற்ற சில கோயில்களில் காணலாம்"[1] என்று எழுதிச் செல்வது மனங் கொள்ளத் தக்கது.

சிவாலயங்கள் சிலவற்றில் அர்த்தநாரீசுவரரைச் செப்புத் திருமேனியாகக் கண்டுகளிக்கலாம். கலைத் திறனாய்வாளர் கே.சி. கமலையா எழுதுகையில், "மேலைக் கடம்பூரிலுள்ள கி.பி. 12ஆம் நூற்றாண்டு - காளையுடன் நிற்கும் அர்த்தநாரீசுவரர் செப்புத் திருமேனி 120 சென்டிமீட்டர் உயரமுள்ளது. இறைவனுடைய வலப் பாகத்தில் மேலேயுள்ள கை மழுவைத் தாங்கியுள்ளது. கீழ்க் கை அபயமளிக் கிறது. இடப் பக்கம் தேவியினுடையது. அம்மைக்கு இத்திருமேனி யில் இரண்டு கைகளிருக்கின்றன. ஒரு கை காளையைத் தொட்டுக் கொண்டும் மற்றொன்று உயர்ந்தும் இருக்கின்றன"[2] எனக் கூறுகிறார். அவரே திருவெண்காட்டில் கிடைத்த மாதொரு பாகனைப் பற்றிய கல்வெட்டின் வாயிலாகச் சென்னை அருங்காட்சியகத்தி லுள்ள அர்த்தநாரீசுவரர் செப்புத் திருமேனி பற்றிக் குறிப்பிட் டுள்ளார்; "இச் செப்புத் திருமேனியில் வலது பக்கமுள்ள இரண்டு கைகளில் மேலேயுள்ள கை மழுவைப் பிடித்திருக்கிறது. மற்றொரு கை நந்தியிமேல் சாய்ந்திருப்பது போன்ற நிலையிலுள்ளது. இடப் பக்கம் தேவியின் ஒரு கை கண்ணாடி வைத்திருப்பது போன்றிருக் கிறது. வலப் புறம் இறைவன் துடையை ஒட்டிய உடையும், இடப் பக்கம் இறைவியின் கால்வரை மடிப்புடன் கூடிய சேலையையும் காணலாம். இடப் பக்கம் பெண்ணாகவும் வலப் பக்கம் ஆணாகவு முள்ள இச்செப்புத் திருமேனியில் உறுப்புக்களும் ஆண் பெண்

1. கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், சென்னை 83, பக். 63-64

2. தமிழக நுண்கலைகள், The Academy of Tamil Culture, Chennai - 34. பக். 110

வலிமை மென்மையும் அணிகளும் அவ்வப் பகுதியில் முழுமையுற அமைந்திருக்கின்றன. முன்னும் பின்னும் உவகையுறக் கூடிய செப்புத் திருமேனியாகும்''[1] எனக் கூறுவது மனங்கொள்ளத் தக்கது. அவரது குறிப்பிலிருந்து இச்சிலை 100 சென்டி மீட்டர் உயரம் என்பதும், இஃது இராசராசன் காலத்தது *(11ஆம் நூற்றாண்டு)* என்பதும் தெரிய வரும்.

2.4 ஆடல்வல்லான் - தத்துவமும் சிற்பக் கலை நுட்பமும்

சிற்பக் கலைப் படைப்பில் உலகமே வியந்து பாராட்டிப் போற்றும் வகையில் அமைந்துள்ளது ஆடல்வல்லானாகிய நடராசர் திருவுருவமாகும்.

நடராசப் பெருமானின் ஒவ்வொரு அங்க அமைப்பும் தத்துவப் புலப்பாடு உடையது. எந்தச் சிவாலயத்திலும், தென்புறம் நோக்கி ஆடல் கொண்டருளும் நடராசர் திருமேனியைக் காணலாம்.

அண்ட சராசரங்களின் இயக்கத்திலும், அணுவிலும் தாண்டவம் புரிந்திடும் சிவனை மக்களின் புறக் கண்களுக்கும் புல்பபடுமாறு சிற்பியர் செய்தமைத்த திருவடிவமே ஆடல் வல்லான். அத்திருவுரு வத்தின் பரந்த திருமுக மண்டலம், பனித்த செஞ்சடை, திருமுடியில் கங்கை, கொன்றை மலர், இளம்பிறை, குனித்த புருவம், நெற்றிக் கண், கொவ்வைக் கனி போன்ற செவ்வாயில் குமிண் சிரிப்பு, நீல கண்டம், திருமேனியில் பூசியுள்ள வெண்ணீறு, வலமேற்கையில் உடுக்கை, இடமேற்கையில் அனல், வலமுன் கையில் அபய முத்திரை, இட முன் கை வீசிய நிலையில் எடுத்த இடப் பொற்பாதத்தைச் சுட்டி நிற்கும் நிலை, புலித் தோலாடை, நாகப் ப்ம்புகளாகிய அணிகள், முயலகன் மீது ஊன்றிய திருவடி, நடராச உருவத்தை வளைத்து நிற்கும் ஓங்காரத் திருவாசி ஆகிய பலவும் மெய்ப் பொருட் சிறப்பினைக் கொண்டவை.

தில்லை நடராசர் கோயிலில் மூலவராக அருளும் ஐம்பொன்னா லான ஆடல்வல்லான் திருமேனியும், அதன் எதிரே கொடி மரத் தருகே உள்ள நிருத்த சபையிலுள்ள கருவறைக்கண் கல்லாலான ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் மிகச் சிறந்தவை; பேராற்றல் மிக்கவை.

திருவெண்காட்டிலுள்ள நடராசர் செப்புத் திருமேனியும், கேனேரிராசபுரத்திலுள்ள நடராசர் செப்புத் திருமேனியும், திருக்

1. *தமிழக நுண்கலைகள்,* The Academy of Tamil Culture, Chennai - 34. பக். *110*

குற்றாலம் நடராசர் செப்புத் திருமேனியும், சிவபுரம் நடராசர் செப்புத் திருமேனியும், திருப்பாச்சிலாச்சிராமம் நடராசர் செப்புத் திருமேனியும், சீர்காழி, திருமறைக்காடு, திருவாலங்காடு ஆகிய தலங்களில் வழிபடப் பெறும் நடராசர் செப்புத் திருமேனிகளும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

இராமநாதபுரம் மாவட்டம் உத்தரகோசமங்கை - ஆதி சிதம்பரேசுவரர் ஆலயத்தில், தனிச் சன்னிதியில் எழுந்தருளியுள்ள மரகத நடராசர் *(மூலவர்)* தனிச் சிறப்பு மிக்கவர்; அவரைச் சந்தனக் காப்பால் மூடியிருப்பர். மரகதத்தின் ஒளி கண்ணைப் பறிக்கும்; எனவே, திருவாதிரை நாளில் அர்ச்சகர் தம் கண்களை மெல்லிய ஆடையால் மூடிக் கொண்டு சந்தனத்தைக் களைந்து புதிய காப்பிடுவது வழக்கம். நாள்தோறும் ஸ்படிக லிங்கத்திற்கே அபிடேகம் நடைபெறும். அங்குள்ள உற்சவ நடராசரும் மிகுந்த வனப்புடையவர். சிவகாமியம்மையின் சிலையும் மரகதத்தாலான சிற்பக் கலைப் படைப்பு.

2.4.1 வியத்தகு ஆடல் திருமேனிகள்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஆடல்வல்லான் தன் இடப் பக்கக் காலுக்குப் பதிலாக வலக் காலை எடுத்த பொற் பாதமாகக் காட்டியருள்கின்றான்; 'கால் மாறியாடிய படலம்' என்றே பாண்டியன் இராச சேகரனுக்காக ஆடியருளினான் என்பதைத் திருவிளையாடற்புராணம் கூறிக் காட்டும். அதனைச் சிற்பக் கலைப் படைப்பாக - ஐம்பொன் சிலையமைப்பாகக் கண்டு போற்றி வழிபடலாம்.

திருவாலங்காடு எனும் திருத்தலத்திலும் ஊர்த்துவ தாண்டவத் திருமேனி மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. கோவைக்கு அருகில் பேரூரில் *(ஆதி சிதம்பரத்தில்)* இறைவன் சன்னிதிக்கு முன்னர், அமைந்துள்ள பெரிய மண்டபத் தூண்களுள் ஒன்றில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைக் கற்சிற்ப வடிவில் கண்டு மகிழலாம். சில சிவாலயங்களில் ஊர்த்துவ தாண்டவத் திருமேனிகளைக் காணலாமெனினும், ஊர்த்துவஜானு எனும் அமைப்பிலுள்ள சிவனது ஆடற் கோலத்தைத் திருப்பட்டூர் *(திருப்பிடவூர்)* எனும் திருத்தலத்தில் மட்டுமே மிகச் சிறப்புடன் அமைந்துள்ளது.

திருச்சிக்கு 25 கி.மீ. தொலைவிலுள்ள திருப்பிடவூரில் கைலாச நாதர் கோயில் மிகவும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. பல்லவர்

காலத்துக் கோயிலாகிய இதன் பெருஞ்சாலைக் கோட்டங்களில் தென்புறம் தட்சிணா மூர்த்தியும், மேற்கில் இலிங்கோத்பவரும், வடக்கில் ஊர்த்துவஜானு கரணத் திருக்கோலமும் *(சிவனது திருக் கோலமும்)* இடம் பெற்றிருப்பதைக் காணலாம். தமிழகத்தில் வேறு எந்தப் பல்லவர் கோயிலிலும் ஊர்த்துவஜானு கரணத்தில் சிவபெருமான் திருக்கோலம் இடம் பெறவில்லை என்பது சிற்பத் திறனாய்வாளர்களின் கருத்து.[1]

தஞ்சை மாவட்டம் மன்னார்குடிக்குத் தெற்கே 15 கி.மீ. தொலைவிலுள்ள திருக்களர் தலத்தில், நடராசர் பிரம தாண்டவம் ஆடித் துருவாசருக்குக் காட்சி கொடுத்தருளியதாகப் புராணக் குறிப் புளது. தாண்டவக் கோலத்தில் சிதம்பரம் நடராசருக்கு அடுத்த சிறப் புடைய நடராசர் திருவுருவம் திருக்களரில் இருப்பதாகக் கூறுவர்.

அருள் வல்லபம் பெற்ற சோழ நாட்டுச் சிற்பி *(ஸ்தபதி)*யால் சௌந்தர பாண்டியன் காலத்தில் வடிக்கப்பட்ட நடராசர் திரு மேனிகள், ஐந்துத் திருத்தலங்களில் சிதம்பரம், செப்பறை, கரி சூழ்ந்த மங்கலம், கட்டாரி மங்கலம், கருவேலங்குளம் ஆகிய தலங்களில் கண்டுகளித்து வழிபடலாம்.[2]

சிவனுடைய ஆடற்கோலத்தில் 'லதா விரிசிக நடனம்' வியக்கத் தக்க சிறப்புடையது. இடக் காலை முன்புறம் மடித்தூன்றியும் வலக் காலைப் பின்புறம் மடித்தூன்றியும், இடப் பக்கத்திலுள்ள ஒரு கையைத் தலைக்கு மேலே உயர்த்தி நடனம் புரிந்து கொண்டே, அந்த இடக்கையில் பந்தை எறிந்து பிடிக்கும் வியத்தகு நடனத்திற்கு லதாவிரிசை நடனமென்பது பெயர்; இந்த நடனத்தைக் காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலின் உள்ளறையை அடுத்த வெளிமண்ட பத்தின் வலப்புற, இடப்புறச் சுவர்களில் காணலாம்.[3]

சமயவூற்றத்துடன் ஆடற்கோலத்தில், சிவதாண்டவக் கோலங் களை நூல் வாயிலாக உணர்ந்தும், ஆலயங்களில் நேரில் கண்டும் வகைப்படுத்தியுள்ளனர். சந்தியா தாண்டவம், சிருங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முனி தாண்டவம், பிரளய தாண்டவம், புஜங்க தாண்டவம், சுதா தாண்டவம் ஆகிய பன்னிரு தாண்டவங்கள் பற்றி ஆகமங்களில்

1. அமுதசுரபி, தீபாவளி மலர், 1997, பக். 304.
2. ஆதாரம்: 'கருவேலங்குளம்' எனும் கட்டுரை, இதய தீபம், அக்டோபர், 1999.
3. பேராசிரியர் கோ. தங்கவேலு எழுதிய 'இந்தியக் கலை வரலாறு-II' எனும் நூலிலுள்ள குறிப்பு.

விளக்கங்களுடன் கூறப்பட்டுள்ளன. சமய அணுகுமுறையுடன் கூடிய சிற்பக் கலை விளக்கங்களை மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் தாம் எழுதியுள்ள 'ஆடல் வல்லான்' *(திருவாவடுதுறை ஆதீன வெளியீடு)* எனும் அரிய நூலில் கண்டு கொள்ளலாம். எனினும், தாண்டவப் பெருமான் திருக்கோலங்களில் சிலவற்றை ஓரளவு ஈண்டுக் காண்போம்.

''தஞ்சை மாவட்டம் நல்லூரில் காளிகா தாண்டவமாடும் *(சிவன்)* சிலை உள்ளது. எட்டுக் கைகளுடன் முயலகன் தலைமீது தாண்டவமாடுகிறார் பெருமான்,''[1] என வருங்குறிப்பினைக் காணலாம்.

ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் காமாட்சியம்மன் உடனுறை சோம நாதர் ஆலயம் அமைந்துள்ளது. சதுர தாண்டவத் தலமாகிய அத்திருத் தலத்தில் நடராசப் பெருமான் தன் இரு கால்களையும் மண்ணில் ஊன்றிய வண்ணம் *(கால்களுக்கிடையே ஒருவகைச் சதுர அமைப் புடன்)* ஆடற் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

காட்டு மன்னார்குடியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் மேலைக் கடம்பூர் எனும் திருத்தலம் திருக்கரக் கோயிற் சிறப்புடையது. அங்குள்ள சிவாலயத்தில் நந்தியின் மேல் சிவபெருமான் தாண்டவ மாடும் கோலத்தில் செப்புத் திருமேனி உள்ளது; ஆறு திருக்கைக ளுடன் காணப்படும் திருவுருவத்தில் மேல் வலக்கையில் உடுக்கை யும், மேல் இடக்கையில் அனலும் பொருந்தியிருக்கிற தோற்றம் கண்டாரைக் கவரும் வகையில் சிற்பி அமைத்திருக்கிறான். இந்தத் தாண்டவ மூர்த்தியைப் பற்றி வரலாற்று அறிஞர் எஸ்.ஆர். பால சுப்பிரமணியம் எழுதுகையில், ''இது பண்டைக் காலத்தில் வங்காளப் பகுதியில் ஆண்ட பாலர் வமிசத்தாரின் கலைப் பாணியை ஒத்திருக்கிறது. இதனைத் தன் வடநாட்டு வெற்றிச் சின்னமாக முதல் இராஜேந்திரன் கொணர்ந்து இக்கோயிலுக்கு வழங்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இத்திருமேனியின் ஊன்றிய பாதம் மற்ற தாண்டவ மூர்த்திகளைப் போல முயலகன் மேல் வைக்கப் பெறாமல் நந்திதேவர் முதுகில் வைக்கப்பட்டுள்ளது,''[2] எனக் கூறிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது. இதனால், வட இந்தியாவிலும் பாலர் வமிசத்தினரும் கலையீடுபாடு கொண்டு தாண்டவத் திருமேனியை வடிக்கத் துணை நின்றனர் என்பது தெரியவரும். கஜஹஸ்த

1. *இதய தீபம் (திங்களிதழ்), அக்டோபர், 1999, பக். 70.*
2. *சோழர் கலைப் பாணி, பாரி நிலையம், 1966, பக். 155.*

அமைப்பைப் பொறுத்த வரையில் தென்னிந்தியச் சிற்பக் கலை மரபிற்கு மாறுபட்டு அமைந்துள்ளது என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். மேலும், ஊழிக்காலத்தில் சிவன் நந்தி மேல் நடனமாடுவார் என்றும் கூறுகின்றனர்.

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள திருவரங்குளத்தில் 'சதுரம்' என்ற நான்கு திருக்கைகளுடன் அமைந்துள்ள சிவதாண்டவச் சிலை கலை நேர்த்தியுடன் கூடிய அழகிய அற்புதக் கலைப் படைப்பு என்பர்.

சென்னை அருங்காட்சியகத்தில், ''ஒரு சிலையில் சிவன் நாட்டியமாடக் காலடியில் முயலகன் கொம்பு போலுள்ள சங்கு ஊதுகிறான்,''[1] என வரும் அருங்குறிப்பு மிகச் சிந்திக்கத்தக்கது.

பொதுவாகத் தமிழகத்துச் சிவாலயங்களில் நடராசர் சிலைகள் உலோகத் திருமேனிகளாகக் காணப்படும்; கோபுரங்களிலே சுதைத் திருமேனிகளாகவும் காணப்படும். காணற்கரிய காட்சிகளாகச் சில ஆலயங்களில் தான் நடராஜமூர்த்தி கல்மூர்த்தங்களாக அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாகக் கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் வழியில் கணபதி அக்கிரகாரத்திற்கு அருகிலுள்ள வட குரங்காடு துறை தயாநிதிசுவரர் ஆலயத்தில் கல்மூர்த்தமாக நடராசர் அமைந்துள்ளதைக் காணலாம்.

திருப்பரங்குன்றத்தில் ஆடற் கோலத்திலுள்ள சிவபெருமான் சிற்பம் வியத்தகு நிலையில் அமைந்துள்ளது. இது பற்றிக் குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதுகையில், ''கி.பி. எட்டாம் நூற்றாண்டில் மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில், பாண்டியன் பராந்தக நெடுஞ்செழியனின் சாமந்தன், சாத்தன் கணபதி என்பவன் ஒரு குடைவரைக் கோயிலைத் தோற்றுவித்தான். அதன் சுவரில் சிவபெருமான் இடபக் கொடியை ஏந்தி ஆடும் அரிய சிற்பம் ஒன்றினையும் உருவாக்கியுள்ளான். அச்சிற்பத்தில் நீண்ட கோலின் உச்சியில் இடப உருவமும், அதற்குக் கீழாக நீண்ட துணிக் கொடியும் காணப்படுகின்றன,''[2] என்று குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. இந்தச் சுவர்ச் சிற்பம், நான்கு திருக்கைகளுடன் கூடிய சதுர தாண்டவம் போலவே இருப்பினும் இடக்கையில் அனலுக்குப் பதிலாக, அந்தக் கை இடபக் கொடியை ஏந்துவதற்கேற்பத் தொங்கவிட்ட நிலையில்

1. இதய தீபம் (திங்களிதழ்), பக். 70.
2. கல்கி தீபாவளி மலர், 1999, பக். 80.

உள்ளது. இனி இறைவனின் தாண்டவங்கள் எத்தனையெனக் காண் போம்.

சிவன் ஆடிய நூற்றெட்டுத் தாண்டவங்களாக, *1.* சிவன் தானாகவே ஆடிய தாண்டவங்கள் *18; 2.* சிவன் தேவியுடன் இணைந்து ஆடியவை *36; 3.* சிவன் திருமாலுடன் ஆடியவை *9; 4.* சிவன் திருமுருகனுக்காக ஆடியவை *3; 5.* சிவன் பிற தெய்வங் களுக்காக ஆடியவை *42;* ஆக, *108* தாண்டவங்கள் உள்ளன. அவற் றுக்கும் *108* ஆடற்கரணங்களுக்கும் எத்தகைய தொடர்பு உண்டு என்பது பற்றியெல்லாம் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் போன்ற வர்கள் ஆராய்ந்து தெளிவு கண்டு வருகின்றனர்.

ஆடல் வல்லானின் *108* தாண்டவ நிருத்யங்கள் ஒவ்வொன் றுக்கும் மிகச் சிறந்த பொருள் நுட்பம் உண்டு; அத்தகைய நுட்பத்தையுணர்ந்து சிற்பியர் சிலைகளில் வடித்துக் காட்டியுள்ளனர் அவற்றுள் 'கங்காவாஹரனா' என்பது மிக அரிய ஆடற்கோலம் என்பது சிற்பியர்களின் கருத்து.

இந்த அரிய நாட்டியத்தில் இறைவன் தன் வலக்கையைத் தரையில் ஊன்றி, இரண்டு கால்களையும் செங்குத்தாய் உயரத் தூக்கி ஆடுங் காட்சியைக் காணலாம். இது பற்றி எழுதுகையில், ''காணுதற்கு அரிதான இந்த நாட்டியக் கோலத்தை ஐந்தரைஅடி உயரத்தில் கலை நுணுக்கத்தோடு வடித்து வைத்திருக்கிறது ஸ்ருதி கலைக் கூடம்; சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள இந்தத் தஞ்சைக் கலைக் கூடத்தைச் சிற்பி எஸ். ராதாகிருஷ்ணன் நடத்தி வருகிறார். நடராஜர் சிலையைப் போலவே பல அரிய ஐம்பொன் சிலைகளின் அணி வகுப்பின் கலைச் சோலையாக ஜொலிக்கிறது ஸ்ருதி,''[1] என்று குறிப்பிட்டுள்ளது மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறெல்லாம் தாண்டவ நிருத்யங்களைக் - கரணங்களைப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையாகப் பரத நூலில் குறிப்பிடப் படும். உடலுக்கான நிலை, கைகளுக்கான நடன அசைவு, கால்களுக் கான நளின அசைவு - இம்மூன்றின் சேர்க்கையே 'ஆடற்கரணம்' எனும் கலை நுட்பத்தினை நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆடல் வல்லானின் ஆடற்சிறப்புக் கூறுகளனைத்தையும் ஊன்றி நோக்கினால், உலக இயக்கத்துக்குத் தேவையான அத்தனை அசைவு களும் கலை வடிவங் கொள்ளுதல் புலப்படும். பல்லவர்களும்

1. ஓம் சரணவபவ *(திங்களிதழ்)*, ஜுன், *21* - ஜுலை *4, 2001*, பக். *55.*

இதனை நன்குணர்ந்தமையால் சில இடங்களிலேயும் சிற்பங்களில் புலப்படுத்த முயன்றுள்ளனர்.

சீயமங்கலக் குகையில் முன்னிரு தூண்களிலும் நடராசரின் ஆனந்தத் தாண்டவம் மற்றும் கலியாண சுந்தரமூர்த்தி சிற்றுரு வடிவங்கள் காணப்படும். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதென்பது போல் குஞ்சிதபாதமாக நடனம் புரியும் இச்சிற்பமே பிற்காலச் சோழர் பாணிக்கு முன்னோடியாகும். இதைப் புசங்கத்திராசிதம் எனப்படும் நடனமென்பர் (Zvelebil, 1985) பட்டமெடுக்கும் நாகம் காலைக் கொத்தவரும் தருணம் ஆடப்படும் இஃது ஒரு தனிப்பாணியைச் சாரும் அரிய படைப்பு,''[1] என்று இராசு. காளிதாசு எழுதியுள்ளது சிந்திக்கத்தகும்.

இவ்வாறெல்லாம் நடராசத் திருமேனிகள் தமிழ் நாட்டுச் சிற்பியரால் உருவாக்கப்பட்டவை பல உண்டு; எனினும் "நெய் வேலியில் பத்து அடி உயரமும் எட்டேகால் அடி அகலமும் 2420 கிலோ கிராம் எடையும் கொண்ட ஒரே வார்ப்பால் ஆன சிலை உள்ளது. பொதுவாக நடராசர் சிலையைச் சுற்றியிருக்கும் திருவாசி யில் 45 சுடர்கள் இருக்கும். ஆனால் நெய்வேலி நடராசர் திருவாசி யில் தமிழ் எழுத்துக்களைக் கணக்கில் கொண்டு 57 திருவாசிச் சுடர்கள் இருக்கின்றன,'[2] என்று குறிப்பிடும் மிகப் பெரிய நடராசர் சிலை தமிழகத்துக்குப் பெருமை கூட்டுவதாகும்.

2.5. சோமாஸ் கந்த மூர்த்தி – சிற்ப அமைப்பிலும், ஆலய அமைப்பிலும்

சிவனது மூர்த்தி பேத நோக்கில் சோமாஸ் கந்தமூர்த்தி பற்றியும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ச-உமா-ஸ்கந்தர் என்னும் வட மொழிச் சொற்கள் மூன்றின் இணைப்பே 'சோமாஸ் கந்தர்' ஆகும். கந்தப் பெருமானைத் தமக்கும் உமையம்மைக்கும் நடுவே அமைத்துச் சிவன் காட்சியளிக்கும் திருவுருவமே இது.

பொதுவாக எல்லாச் சிவாலயங்களிலும் சோமாஸ் கந்தரை எழுந்தருளச் செய்வதும், அவரையே உற்சவ மூர்த்தியாகக் கொண் டாடுவதும் பெருவழக்கில் காணலாம். பல்லவ மன்னர்களின் காலத்தில் இம்மூர்த்திக்குச் சிறப்பான பெருமை வழங்கப்பட்டது.

1. *சிந்தைக்கினிய சிற்பக்கலை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1995, பக். 44.*
2. *நுண்கலைகள் முனைவர், ஆ. வேலு சுவாமி சுதந்திரன், பக். 15.*

மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் - காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலில், கருவறைச் சுவரின் பின்புறம் சோமாஸ் கந்தர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. ''திருமறைக்காடு, வைத்தீசுவரன் கோயில் முதலிய திருத்தலங்களில் அமைந்துள்ள சிவாலயங்களில் சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில் சோமாஸ் கந்த மூர்த்தி திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன''[1] என்பதை அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர்.

உலகியலில் பெற்றோர்கள் பொறுப்பில் ஒருவர் இருக்கையில் பல நலங்களும் சிறப்பும் உண்டாகும் என்பதையொட்டி அருளியலில் - தெய்வ நல நோக்கில் - சிவனாகிய தந்தைக்கும் உமையாகிய அம்மைக்கும் நடுவே கந்தவேள் இருப்பது பெரு மாட்சியுடையது என நம்பியதன் விளைவே சோமாஸ் கந்தர் என்றும் கருதுவர். ''சமண பௌத்த சமயங்களின் விளைவாகத் துறவறமே சால்புடைத்து என்னும் கொள்கை பெரிதும் பரவி வந்த காலையில், மக்கட் சமுதாயம் வளர்ந்தோங்கி நிலைபெறுதற் பொருட்டுக் குடும்ப வாழ்வின் நலங்களையும் இல்லறமே நல்லறமாதலையும் வலியுறுத்தித் தெளிவுறுத்தல்..... அவ்வகையில் குடும்ப வாழ்வின் அளப்பரு நலங்களையும் அரும்பெருஞ் சிறப்பினையும் விளக்குவதாகப் போற்றிப் பரப்பப் பெற்ற திருவுருவமே சோமாஸ் கந்த மூர்த்தம் எனலாம். மாபெரும் யோகியாக விளங்கும் சிவபெருமானே மிகப்பெரிய போகி *(குடும்பி)*யாகவும் திகழ்வது வியப்பிற்குரிய தொன்றன்றோ?[2] என வருங்குறிப்பும் இத்தொடரில் சிந்திக்கத்தக்கது.

சோமாஸ்கந்தர் திருவுருவத்தில் கந்தன் ஆடற்கோலத்தில் சில இடங்களில் காணப்படுவதும் மனங்கொள்ளத்தக்கது. சிவனும் உமையும் நெருங்கி அமர்ந்திருக்கப் பீடத்தின் நடுப்பகுதியில் கந்தன் உருவம் செதுக்கப்பட்டிருப்பதைத் தஞ்சைப் பெரிய கோயிலில் காணலாம். தஞ்சைக் கலைக் கூடத்தில் இடக்காலை மடித்துப் பீடத்தில் வைத்தும் வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டும் வலக்காலைக் குத்திட்டுக் கொண்டும் உமையம்மையும் அமர்ந் திருக்க, முருகன் அவர்களுக்கிடையே நின்று கொண்டிருக்கும் அமைப்பிலுள்ள செப்புத் திருமேனி நேர்த்தியான கலை வடிவமாகும்.

1. Gods and Man, (Prof. G.S. Ghurya), pp. 47-49.
2. திருக்கோயில் *(திங்களிதழ்)*, ஜனவரி, 1967.

வளாக அமைப்பு நோக்கில், காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயிலுக்கும், ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் இடைப்பட்ட வீதியில் கந்தகோட்டம் அமைந்துள்ளமை சோமாஸ்கந்த மூர்த்தியை நினைவுபடுத்தும்; வைத்தீசுவரன் கோயில் ஆலய வளாகத்தில் வைத்தீசுவரன் சன்னிதிக்கும் தையல் நாயகி சன்னிதிக்கும் இடையே கந்தப் பெருமான் சன்னிதி அமைந்துள்ளதும் சோமாஸ்கந்த மூர்த்தியை நினைவுபடுத்துவதாகவும் உள்ளது. இவையெல்லாம் சிற்பியர் கற்பனையின் விளைவாகிய உத்தியாகும்.

2.6. சந்திர சேகர மூர்த்தி - சிற்பக் கலை நோக்கு

தக்கன் கொடுத்த சாபத்தால் சந்திரனுடைய கலைகள் ஒவ் வொன்றாகக் குறையத் தொடங்கியதும், சந்திரன் சிவனைச் சரணடைந்து காத்தருள வேண்டிக் கொள்கிறான்; அனுக்கிரக மூர்த்தியாக இறைவன் அமைந்து, அவனைத் தன் செஞ்சடையில் சூடிக்கொண்டு காத்தருள்கிறான் என்பது புராணக் குறிப்பு.

சிவாலயங்களில் சந்திர சேகர மூர்த்தங்கள் நிற்குந் திருக் கோலத்தில், அமைதி தவழச் சந்திரனைத் திருமுடியில் தாங்கிய வாறு காணப்படும்; அவை, கேவல சந்திர சேகரரும், உமா சகித சந்திர சேகரரும், ஆலிங்கன சந்திரசேகரரும் என மூவகையமைப் பில் ஆலயங்களில் காணலாம்.

கேவல சந்திர சேகர மூர்த்தத்தில், இறைவன் பக்கத்தில் சக்தியிர் திருவுருவத்தை அமைப்பதில்லை. தனித்திருக்கும் இத்திரு மேனிக்கு நான்கு கைகள் உண்டு; மேலிரு கைகளில் மான் மழு ஏந்தியும் கீழிரு கைகளில் அபயம் வரதம் ஆகிய முத்திரைகள் கொண்டும் நின்ற திருக்கோலமாக இருக்கும்.

உமாசகித சந்திர சேகர மூர்த்தத்தில், இறைவன் அருகே சக்தியின் திருவுருவம் அமைந்திருக்கும். உமாதேவியின் வடிவம் பங்க அமைப்பிலும், கடக அத்தமும் லோல அத்தமும் பொருந்திய வண்ணத்திலும், சிவமும் சக்தியும் சாந்தம் தவழும் பொலிவுடனும் காணப்படும்; தஞ்சைக் கலைக் கூடத்தில் இந்தத் திருமேனியைக் கண்டு களிக்கலாம்.

ஆலிங்கன சந்திர சேகர மூர்த்தத்தில், இறைவன் உமாதேவியை அணைத்திருக்கும் திருக்கோலம் காணப்படும். அஃதாவது, சிவபிரான் தன் திருக்கைகளால் உமாதேவியின் தோளையோ இடையையோ அணைத்த வண்ணம், சிவசக்தி உருவங்கள் ஒரே பீடத்தில்

அமைந்திருக்கும். இத்தகைய ஆலிங்கன சந்திர சேகர மூர்த்தம் சிறப்பாகக் கருதப்பட்டுப் பிரதோச மூர்த்தியாகவும் வழிபடப்படு தலைக் காணலாம். அஃதாவது, சில சிவாலயங்களில் பிரதோச வழி பாட்டுக் காலத்தில் இத்திருமேனியை வீதியுலாவாக எழுந்தருளச் செய்தல் உண்டு; கோவிற் பிராகாரத்தில் வலமாக எழுந்தருளச் செய்வதும் உண்டு.

திருவாவடுதுறை கோமுக்தீசுவரர் கோயிலில் 'அணைந் தெழுந்த நாயகர்' எனும் ஆலிங்கன சந்திர சேகர மூர்த்தியைக் காணலாம். இந்தச் சிலை சோழர் காலச் சிலையாகும்[1] என்பார் தொல்லியல் துறை அலுவலர் ச. கிருஷ்ணமூர்த்தி.

2.7. உமா மகேசர் - சிலையமைப்பும் பெருமையும்

அர்த்த நாரீசுவரராகிய அம்மையப்பன் சிலையமைப்பில் சிவன் பாதியும் சக்தி பாதியுமாகிய வடிவத்திலே ஒரே திருவுருவம் காணப்படும். உமா மகேசர் உருவத்தில் சிவபிரான் தம் இடப் பாகத்தில் உமாதேவியாரைத் திருவருட் பொலிவுடன் அருகிருக்க எழுந்தருளும் நிலையைக் கொண்டு காட்சியளிப்பார். அந்நிலை யில் தம் திருமுன்னர் ஐந்தொழில்களில் - முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் - ஆகியவற்றில் தத்தமக் குரிய கடமைகளைப் பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐவரும் புரிந்து நிற்பதைக் கடைக் கணித்துக் கொண்டு அமர்ந்து அசைவற்று நிற்பார் என்பது சைவ சித்தாந்த மரபு. அனைத்தும் சரிவர இயங்கவே, இறைவன் அருகில் சக்திப் பொலிவுடன் எழுந்தருளுவதாகும்.

''கல்யாண சுந்தரர் நின்ற கோலத்திலும், உமாமகேசர் அமர்ந்த கோலத்திலும் 'சிவசக்தி' நினைப்பை அடியார்களுக்கு ஊட்டும் வகையில் அமைவர் என்பது சிற்பக் கலை நோக்காகும். மகேச னாகிய சிவபிரான் அமர்ந்த கோலத்தில் வலக்காலைத் தொங்க விட்டுக் கொண்டும், அருகே உமையம்மையை அமர்த்திக் கொண்டும் அமையும் தோற்றமே உமாமகேசுவர மூர்த்தமாகும். ஒப்பியல் நோக்கில் காண வேண்டுமெனில், சிவபெருமான் வடிவமான உமா மகேசுவர மூர்த்தியைப் போல வைணவத்தில் இலட்சுமிநாராயண மூர்த்தங்களை அமைப்பது உண்டு. இலட்சுமிநாராயணர் வலக் காலைத் தொங்க விட்டு இடக்காலை மடித்து ஆசனத்தின் மேல்

1. மெய்கண்டார் *(திங்களிதழ்)*, டிசம்பர், 2002 ஜனவரி, 2003.

வைத்துக் கொண்டு, அந்தத் திருவடியில் இலக்குமியை உட்கார வைத்திருக்கும் வகையில் இருக்கும், அல்லது இலக்குமி இல்லாமலும் மேலே குறித்தபடிக்கு வடிவம் இருக்கும், என்பது வைணவ அறிஞர் என்.எஸ். தாத்தாச்சாரியார் கருத்தாகும்.

2.8. சிற்பக் கலையில் இடப வாகன மூர்த்தி

திரிபுரங்களை அழித்த விரிசடைக் கடவுளாகிய திரிபுராந்தக மூர்த்திக்கு அடுத்து வந்த சிறப்பினையுடையதாக இடப வாகன மூர்த்தியைப் போற்றி நிற்பர். சிவன் கொள்ளும் போக, யோக, வேக மூர்த்தங்களுள் இத்திருவுருவம் போக மூர்த்தமாகும்.

சிவபிரான் அடியவர்களுக்கு அருள்புரியும் நோக்கத்தில் காட்சியளிக்கையிலே தன் சக்தி உமாதேவியுடன் இடப வாகனத்தில் எழுந்தருளுவது பெரும்பாலும் மரபாகும். சைவத் திருத்தலங்கள் பலவற்றிலும் காணலாகும் இடப வாகன மூர்த்திகளை ஆராய்ந்தால், பெரும்பாலும் சிற்பியர் ஒரே வகையான அமைப்பிலேயே இம்மூர்த்தங்களை அமைத்துள்ளனர்; எனினும், மிகச்சில இடங்களில் சிவனது தோற்றத்திலும் இடப அமைப்பிலும் சிற்சில மாற்றங்களை ஓரளவு செய்துள்ளனர் என்பது தெரியவரும்.

திருவெண்காட்டிலுள்ள இடபாரூடர் சிலையில் சிவனது தோற்றம் ஒருவகைத் தனிச்சிறப்புடன் அமைந்திருத்தலைக் காணலாம். தலையணியைப் பொறுத்தவரையில் சிவன் அணிந்துள்ள தலைப் பாகை நோக்கத்தக்கது. செஞ்சடைக் கடவுளாகிய அவர் தம் உழைப்பின் அடையாளமாக இவ்வாறு தோற்றமளிக்கிறாரோ என நினைக்கத் தோன்றும். இது பற்றி அறிஞர் வேலுசாமி சுதந்திரன், ''ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் இத்தகு தலையணி விவரிக்கப்படவில்லை. இறைவனை வயோதிக வடிவில் பல இடங்களில் பார்த்து மகிழ்ந்த சிற்பி, இங்கு ஒரு விவசாயியாகப் பார்க்க விரும்பி, இத்தகு தலைப்பாகையைக் கொடுத்திருக்கிறான். இது தமிழ் நாட்டுப் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது. தலைப்பாகை அணிந்த கோலத்தில் ஓர் உருவத்தைப் பல்லவர் காலக் கிருட்டின மண்டபத்தில் *(மாமல்லபுரத்தில்)* பார்க்க முடியும். தலைப்பாகை அணிந்து பால் கறக்கிற காட்சி சமுதாயச் சூழலை எடுத்துக் காட்டும். இரிடப வாகனர் அணிந்திருக்கும் பாகையோ சோழர்களின் தனிக்கலை வண்ணம் எனலாம்''[1] என எழுதிச் செல்வது மனங்கொண்டு சிந்திக்கத்தக்கது.

1. இ.ப.த.க. மன்றம், 22-ஆவனது கருத்தரங்க ஆய்வுக் கோவை, 1991, பக். 745-746.

2.9. திரிபுராந்தக மூர்த்தி - பெருமையும் சிற்பங்களும்

சிவபெருமானின் அட்ட வீரட்டானங்களுள், திரிபுரமெரித்த வீரட்டானமாகிய திருவதிகையும் ஒன்று. சிவனேயல்லாமல், சோழ மன்னர்களும் தம் முன்னோனாகிய தூங்கெயிலெறிந்த தொடித் தோட்செம்பியன் பெருமையைத் தம்மொடு சார்த்திய நிலையில், அவர்களும் திரிபுரமெரித்த பெருமைக்குரியவர்களாகக் கூறப்பட் டுள்ளனர்.

திரிபுர அசுரர்களாகிய தாரகாட்சன் கமலாட்சன் வித்யுன்மாலி ஆகியோர் தாம் பிரசாபதியிடமிருந்து பெற்ற வரபலத்தால், இரும்பு வெள்ளி பொன் ஆகிய மூன்று கோட்டைகளை முப்புரம் என அமைத்துக் கொண்டு பலரையும் துன்புறுத்தினர். தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கச் சிவன் திரிபுரங்களை அழித்துத் திரிபுராந்தகன் எனப் போற்றப்பட்டான் என்பது ஒரு புராணக் குறிப்பு.

''சதபதப் பிராமணத்தில் முப்புரத்தினை இந்திரன் அழித்ததாக வும், தைத்திரிய சம்கிதையில் உருத்திரன் அழித்ததாகவும், மகா பாரதத்தில் மகாதேவன் பொடிபடச் செய்ததாகவும் கூறப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது''[1] என டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன் கூறுவதும் சிந்திக்கத்தக்கது. ஆனால், சிவபிரானே திரிபுராந்தகன் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும், சைவத் திருமுறைகளிலும் நிரம்பச் சான்றுகள் உள்ளன. எனவே, திரிபுராந்தகராகிய சிவன் திருக்கோலத்தினைச் சிற்பக் கலைப் படைப்பின் வாயிலாகச் சிறிது காண்போம்.

மாமல்லபுரத்தில் பல்லவர் காலச் சிற்பப் படைப்பில் திரிபுராந் தகர் இரு வகைகளில் புலப்படுத்தப்பட்டுள்ளார். கடற்கரைக் கோயில் வடபாற் சுவரில், திரிபுரமெரிக்க முனைந்து தேர் மீதேறி வில்லைக் கையில் தாங்கியவாறு திரிபுராந்தகர் போர் புரியுங் கோலத்தில் காட்சியளிக்கிறார். அடுத்ததாகப் பலிபீடத்தின் அருகி லுள்ள கொடித் தூண் பகுதியில் ஒருபுறமுள்ள திருவுருவத்தில் நான்கு திருக்கைகளுடன் அவர் காட்சியளிக்கிறார்; அவரின் திருக் கைகளுள், கீழ்க்கை நீண்ட காம்புடைய மழு ஏந்தி நிற்க மற்றொரு ஒரு வில்லைப் பிடித்திருக்கும் தோற்றத்திலே உள்ளது; மேலும், மேற்கைகளுள் ஒன்று சூலத்தையும் மற்றொன்று அம்பையும் பிடித்திருக்கும் அமைப்புள்ளது.

1. கோயிலும் இறை வழிபாடும், கழகப் பதிப்பு, 1986, பக். 39.

காஞ்சியில் இராசசிம்மனால் கட்டப்பட்ட கயிலாசநாதர் கோயிலில் சிறிய கருவறையொன்றில் எட்டுக் கைகளுடன் கூடிய திரிபுராந்தகர் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத் தொகுதியில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் தேரின் மீது தம் இடக்காலினை முன்னோக்கி மடக்கி ஊன்றியும், வலக்காலினை முழங்காலிட்டும் வீறு பெற நின்று போர் புரியும் நிலையில் காணப்படுகின்றார்; மேலும், குதிரைகள் தேரினை இழுத்துச் செல்வதாகவும், அந்தத் தேரின் முன்பகுதியில் நான்முகன் சாரதி போல வீற்றிருப்பதாகவும் கலைத் திறமையுடன் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தொண்டை நாட்டில், பாடல் பெற்ற திருவிற்கோலம் *(கூவம்)* எனும் தலத்தில், வில்லேந்திய தோற்றத்துடன் ஏனைய சிற்ப இலக்கண அமைதியுடன் திரிபுராந்தகர் திருமேனியைக் கண்டு வழிபடலாம்; திருவதிகை வீரட்டானத்தையொத்த சிறப்புடையது இத்திருத்தலம்; திருவிற் கோலத்துடன் திருவதிகை நோக்கிப் புறப்பட இறைவன் சித்தங் கொண்ட தலம் இதுவென்பர்.

போர்க் களத்தில் வெற்றி தேடித் தரும் கடவுளாகத் திரிபுராந் தகரைச் சோழ மன்னர்கள் வழிபட்டு வந்துள்ளனர்; எனவே, அவர்கள் கட்டிய பல கோயில்களில் தேவகோட்டத்தில் திரிபுராந்தகரை வைத்துப் பெருமை கொண்டனர்; அன்றியும், திரிபுராந்தகர் திருவுரு வத்தைச் செப்புத் திருமேனியாக வடிப்பதிலும் ஆர்வங் காட்டி யுள்ளனர். கோயிலில் மகர தோரணங்களிலும் சிறு வடிவத்தில் திரி புராந்தக மூர்த்தியை அமைத்துக் காண்பதிலும் ஆர்வங் காட்டி யுள்ளனர்.

''கொடும்பாளூரிலிருந்து சென்னைக் கலைக் கூடத்திற்குக் கொண்டு வரப்பட்ட திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி ஆகியோர் சிற்பங்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட கவின்மிகு படைப்புகளாகும். பொதுவான வழக்கத்திற்கு மாறாக இத்திரிபுராந்தகரது வலக்கை அபய முத்திரையைக் குறித்தும், இடக்கை இடுப்பினில் ஊன்றப்பட்டும் உள்ளன. போர்க் கோலம் பூண்டு நிற்பவரெனக் கருதப்படினும் இத்திருவுருவத்தின் முகத்தில் புன்னகை தவழ்வதைக் காணலாம்''[1] என்று டாக்டர் ஏ. ஏகாம்பர நாதன் விளக்கிக் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும்.

''வேக மூர்த்தியாகச் சிவன், அசுரர்களை வதைக்கப் புறப் படுகையில் பெருஞ்சக்தி வாய்ந்த அகிலாண்ட நாயகியான

1. கோயிலும் இறை வழிபாடும், பக். 47-48.

உமையம்மை உயிர்த் தொகுதி மேல் வைத்துள்ள தாயன்பு காரணமாகத் தன் நாயகனின் அருகிலிருப்பதில்லை என்பது சமய மரபாகும். எனினும், சிவபிரானுக்கு வெற்றியை வகுக்கும் துர்க்கை *(வேக வடிவச் சக்தி)* கொற்றவை என்பாளும், திரிபுரங்களுடன் தொடர்புடைய திரிபுர பைரவியும் பராசக்தியின் அமிசங்களாக அமையலாம் என்பது புராண அணுகுமுறையும் பண்பாட்டு அமைதியுமாகும்''[1] என வருங்குறிப்பும் மிகச் சிந்திக்கத்தக்கது.

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களே திரிபுரங்களாக உருவகிக்கப்பட்டுள்ளன என்பது, அவற்றை அழித்து ஆன்மாக்களைச் சாயுச்சியப் பெரும்பதமளிப்பதே திரிபுராந்தகரின் வடிவத் தத்துவம் என்பர்.

2.10. கலியாண சுந்தரர் - பெருமையும் சிற்பப் படைப்பும்

சமணமும் பௌத்தமும் நிலையாமைக் கோட்பாட்டையும் துறவறத்தையும் நாடெங்கும் பரப்பிய நிலையில், சிவன் உமையுடன் கூடிய திருவுருவமாகிய கலியாண சுந்தரர் கோலத்தையும், திருக்கயிலைக் காட்சியையும் சைவ சமயம் எடுத்துக் காட்டி இல்லறத்தைத் தெய்வ நலமாக்கியது; வைணவ சமயமும் நாராயணனுடன் இலட்சுமியைச் சார்த்தி இலட்சுமிநாராயணத் திருக்கோலத்தை முன்னிறுத்தி வழிபாடு புரியலாயிற்று. எனவே, திருமணக் கோலம் காலத்தின் கட்டாயமாகிறது.

சிவனுடைய மகேசுவர மூர்த்தங்களுள் ஒன்றான கலியாண சுந்தரர் திருக்கோலம், பல சிவாலயங்களில் பெரிதும் போற்றப்பட வேண்டிய நிலையில், திருவிழாக்களில் ஒன்றாகத் திருமண விழா *(திருக்கலியாண மகோற்சவம்)* நடைபெற்று வருகிறது. கலியாண சுந்தரர் மூர்த்தம் உலகவளத்துக்கும் மங்கலத்துக்கும் அடையாளமாகவே கருதப்படுகின்றது.

கலியாண சுந்தரர் திருவுருவ அமைப்பு

நெடிதுயர்ந்த ஆண்மைப் பொலிவுடன் சிவபிரான் காணப்படுவார்; அவருக்கு உயர்ந்த சடா மகுடம், பொங்கு வெண் சங்கக்

1. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - இரண்டாம் பாகம், அ.ப.க. பதிப்பு, *1997*, பக். *645-646.*

குழைகள் இரு காதுகளையும் அலங்கரிக்கும் நிலை, கழுத்து நிறைய மணியாரங்கள், பூணூல் புரளும் எடுப்பான மார்பு, வயிற்றில் உதர பந்தம், தோள்களில் கேயூரம் வாகுவளையம் பொலிவுற, நாகப் பாம்புகள் மாலையாகவும் அரையில் வடமாகவும் தவழும் தோற்றம், இடப் பக்கத்தே கையில் மருண்டு நோக்கும் மான், வலப்பக்கக் கையில் மழு ஆகியவற்றுடன் காட்சியருளும் கோலமிது; அதுவும் திருமணம் முடிந்தவுடன் முனிபுங்கவர்களுக்குத் தாண்டவக் காட்சியை அருளப் புறப்படச் சித்தமாயிருப்பது போன்று சிற்பத்தில் காட்சி யமைந்திருக்கும்.

கலியாண சுந்தரர் எனும் திருப்பெயருக்கேற்ப, அவர் தம் மணப்பெண் அம்பிகையின் வலக்கையைத் தம் கையால் பற்ற முற் படுதலும், திருமுகத்தில் புன்னகையைத் தவழ விடுதலும், வலப் பக்கத்திலிருந்து சக்தி தேவியைப் பொறுத்தே அமையும் என்பது சிற்பநூல் குறிப்பிடும் நுட்பம்.

இத்தகைய கலியாண சுந்தரர் திருமேனிகள் திருநெல்வேலி, திருவாரூர், திருமணஞ்சேரி, கும்பகோணம், திருமறைக்காடு, காஞ்சி, திருவேற்காடு, திருத்தவத்துறை, திருவெண்காடு முதலிய பல திருத் தலங்களில் காணப்படினும், சிற்பியரின் கற்பனைக்கும் கை வண்ணத்துக்கும் ஏற்பச் சிற்சில கலைநுட்ப மாற்றங்கள் ஏற்படுவது இயல்பே.

இத்தகைய சிற்பப் படைப்புகளின் நோக்கம் என்னவெனில், சமணம் பௌத்தம் போன்ற புறக் கோட்பாடுகள் பல நிலையாமைத் தத்துவங்களை வலியுறுத்திய காலத்தே, திருமணம் புரிந்து இல்லறத்தே 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்ற பேருண்மையைப் புலப்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டது; அதற்கேற்பக் கல்யாண சுந்தரர் திருக்கோலமும் அமைய லாயிற்று.

ஆலய தேவக் கோட்டங்களில் காணலாகும் கலியாண சுந்தரர் மூர்த்தங்களும், விழாவிற்கென அமைந்துள்ள செப்புத் திருமேனி களும் ஒருபுறமிருக்க, மதுரை மீனாட்சி கலியாண நிகழ்ச்சியைத் தொகுப்புச் சிற்பக் கலைப் படைப்பாகச் சிற்பியர் கலை வண்ண மாக்கிய காட்சி மிக நேர்த்தியாக அமைந்திருக்கக் காணலாம்.

அஃதாவது, அருள்மிகு அங்கயற் கண்ணியே திருமணப் பெண் ணாகவும் எல்லாம் வல்ல சொக்கநாதரே மாப்பிள்ளையாகவும்

அமைய, நான்முகனே புரோகிதராகவும் திருமாலே மணப் பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்கும் மைத்துனராகவும், தேவர்கள் முன்னிலையில் நடைபெறும் திருமணக் காட்சியைச் சிற்பக் கலைப் படைப்பாகக் காட்டியிருப்பது ஒரு வகைத் தெய்வ நலப்பொலிவான காட்சியாக அமைந்துள்ளது; இது மங்கல அறி குறியாகும்.

சிற்ப நோக்கில், பல திருத்தலங்களில், நடுவில் மீனாட்சி யம்மை இரு கைகளுடன் நின்று கொண்டிருக்க, அவள் வலப் புறத்தில் சங்கு சக்கரதாரியாகத் திருமால் நான்கு கைகளுடன் நின்ற திருக்கோலத்தில் அவளைச் சிவனிடம் திருமணஞ் செய்து கொடுக் கின்ற நிலையும், மீனாட்சியைத் திருமணங்கொள்ளும் சிவனாம் சொக்கலிங்கப் பெருமான் மான் மழு ஏந்திய கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிப்பதையும் காணலாம். சிறப்பாக இம்முப் பெருந் தெய்வங்களையும் சிற்பக் கலைப் படைப்பாகக் காட்டு வதில் சிற்பியர்க்கும், இவ்வாறு காண்பதில் அடியவர்க்கும் ஈடுபாடு மிகுதியாக இருந்துள்ளது.

இத்தகைய கலியாணத் திருக்கோலத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாகப் பல திருமண மண்டபங்களின் முகப்பிலோ, திருமண மேடைப் பின்னணியிலோ சுதைச் சிற்பத்தில் இதனை அமைத்து மனநிறைவு கண்டு வருகின்றனர். எப்படியோ சிற்பக்கலை, பல நோக்கங்களில் வளர்ந்து வருவது வரவேற்கத்தக்கதே.

2.11. பிட்சாடனர் - சிற்பக் கலை உள்ளிட்ட சிறப்புக் கூறுகள்

பிச்சையுகக்கும் பெருமாள் எனவும் போற்றப்படும் இந்தச் சிவ மூர்த்தம், தத்துவ நோக்கில் மிகச் சிறப்புடையது. உயிர்களின் உய்திக்காகவே, தம் பால் பக்தி பூண்டிருக்கும் அடியவர்களின் வினைப் பயனாகிய தீமைகளையே - பாதகங்களையே - தமக்கு உண்ணுஞ் சோறாக வாங்கிக் கொண்டு அலைகிறார்; இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் மணிவாசகர், திருவாசகம் - திருத் தோணோக்கத்தில்,

''பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்''

எனப் பாடிச் செல்லுங் குறிப்பால் தெரிந்து கொள்ளலாம். பிச்சை யுகக்கும் பெருமானது திருக்கோலத்தைத் திருஞான சம்பந்தர்,

"நச்சரவு கச்செனஅ சைச்சுமதி
யுச்சியின்மி லைச்சொரு கையான்
மெய்ச்சிர மணைச்சுலகி னிச்சமிடு
பிச்சையமர் பிச்ச னிடமாம்"[1]

எனப்பாடிச் சென்றுள்ளார்.

சமணத் தாக்கத்தாலோ என்னவோ சிவன், தான் கொள்ளும் திருமேனிகளுள் பைரவரும் பிச்சையுகக்கும் பெருமானுமாக அமைவன நிருவாண கோலமாகக் காட்டப்படுகின்றன; அதற் கேற்பவே புராணப் பின்னணியும் அமைதல் நோக்கத்தக்கது. எடுத்துக் காட்டாகத், தாருகவன இருடியர்களின் ஆணவத்தையடக்கச் சிவ பெருமான், இருடிபத்தினியர் காணும் வண்ணம் திகம்பரராக எழுந் தருள முற்பட்டார் என்பதை நினைவிற் கொள்ளலாம். ஆனால், அதே வேளையில் தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருக்கச்சூரில் வீடுதோறும் பிச்சையெடுத்து உண்பித்த நிலையில், எளிவந்த அந்தணர் கோலத்தில் தோன்றியுள்ளார்; அத்தோற்றத்தை யும் தாருக வனத்தில் தோன்றிய தோற்றத்தையும் இணைத்துப் பார்ப்பது பொருந்தாது. ஈண்டு, நிருவாண கோலத்தில் தோன்றிய பிட்சாடணரையே சிவமூர்த்தமாகக் கொள்ளுதல் தகும்.

மேலப் பெரும்பள்ளம் என்று இக்காலத்தில் வழங்கும் திரு வலம்புரம் எனும் திருத்தலத்தில் வட்டணைபட நடந்த திருக் கோலத்தில் - பிச்சையுகக்கும் பெருமான் திருக்கோலத்தில் - அமைந் துள்ள செப்புத் திருமேனி சிறபக் கலைப் படைப்பின் பேரெல்லைச் சாதனையாக விளங்கி வருகிறது.

தஞ்சாவூர்க் கலைக் கூடத்தில், இருடிபத்தினியர் சூழ்ந்திருக்கக் காபாலியராகத் தோன்றும் பிச்சையுகக்கும் பெருமானின் கோலத் தினைக் காணலாம்; அந்தக் கற்சிற்பத் தொகுப்பிடையே சிவமூர்த் தத்தை, இடப்புறமிருந்தோ வலப்புறமிருந்தோ நோக்கினால் திருமுகக் குறிப்பில் வேறுபாடு தோன்றும்; இது சிற்பியின் செய் நேர்த்தியைக் குறிக்கும்.

சிவாலயங்களில் சிலவற்றில் பிட்சாடனர் திருமேனி, விழாச் சிறப்புடன் வீதியுலா வரும். சிறப்பாகத் தில்லைச் சிதம்பரத்தில் நடைபெறும் தரிசனப் பெருவிழாக் காலத்தில் எட்டாந் திரு

1. திருமுறை 3:67,11.

விழாவில் தங்கரதத்தில் பிட்சாடனர் செப்புத் திருமேனியின் சிற்ப நேர்த்தியைக் கண்டுகளிக்கலாம்.

2.12. காமாரி (காமதகன மூர்த்தி) - சிற்பங்களும் பெருமையும்

உலகத்தில் பிறப்பெடுத்த மக்கள் நெடிய ஆயுளால் தள்ளிப் போடுவது இறப்பினை; இதற்குத் துணைபுரிந்தருளுவது கால சம்மார மூர்த்தம்; காமத்துக்குரிய தெய்வமாகிய காமதேவனையே - மன்மதனையே - நுதற்கண்ணால் எரித்த பெருமை கொண்டவர் காமாரி.

காமம் முகிழ்த்து நிற்கும் பருவம் இளமை; இளமை நிலை யாமையை வலியுறுத்தித் துறவுக்கு வழிகோலுவது சமணக் கோட்பாடு; ஆனால், சைவமோ இல்லறத்திலிருந்து கொணடே காமத்தை எல்லைக்குட்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடையது. இதனை நடைமுறைப்படுத்திக் காட்டச் சிவபெருமான், பார்வதியைத் தனிக்கச் செய்து ஆலமர் செல்வனாக - இளம் பருவப் பொலிவுடன் - முதிய சனகாதி முனிவர்களுக்கு யோக முத்திரையால் ஞானம் உணர்த்துகிறான். உலக உய்திக்காகத் தவக்கோலத்திலிருந்து கலைக்க வேண்டிய சூழல் காமனுக்கு ஏற்படுகிறது. இறைவன் மீது மலரம் பினைத் தொடுத்ததும் காமன், இறைவனது நுதற்கண்ணால் எரிந்து வீழ்கிறான். இந்தப் புராண நிகழ்ச்சியை நிகழ்த்திய இடம் திருக் குறுக்கை வீரட்டானம் *(மயிலாடுதுறைக்கு அருகில்)* ஆகும்.

காமதகன மூர்த்தியைக் கல்லிலும், உலோகத்திலும், சுதைச் சிற்பத்திலும் சிற்பியர் வடித்துள்ளனர். சிவாலயங்கள் பலவற்றில் இம்மூர்த்தியைக் காணலாம்; எனினும், திருக்குறுக்கைத் தலத்தில் தனிச்சிறப்புடைய மூர்த்தியாகக் காணலாம்; இவரைக் காமாந்தக மூர்த்தி எனவும் கூறுவர்.

காமதகன மூர்த்தியின் வீரட்டான நிகழ்ச்சியைத் தட்சணா மூர்த்தியின் கோலத்துடன் தொடர்புபடுத்திக் கூறுவர். ''தட்சணா மூர்த்தி கோலத்தை விளக்கும் அறிஞர்கள், இது தந்திர அடிப்படையி லமைந்த கோலம்,'' என்பது Monier Williams - Sanskrit - English Dictionary கூறும் குறிப்பு. ஆலமர் செல்வன் எனும் தட்சணாமூர்த்தி, சனகாதி முனிவர்களுக்குக் கல்லால மரத்தின் கீழமர்ந்து அற முரைத்த சிறப்பினையுடையது. அந்தச் சூழலிலும் தாந்திரிக அடிப் படையிலும் காமதகன மூர்த்தியாகச் செயற்பட்டுள்ளார் என்பது தொடர்ந்து சிந்திக்க வேண்டிய குறிப்பாகும்.

காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயத்தில் ஆயிரக்கால் மண்படத்தே காமதகன மூர்த்தியின் சிலை கண்டு வணங்கத்தக்கது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் வடச் சுவரிலுள்ள தேவ கோட்டத்தில் காணப்படும் காமாந்தக மூர்த்தி, வலக்காலைத் தொங்க விட்டும் மற்றொரு காலை மடக்கிப் பீடத்தில் வைத்தும், நான்கு திருக்கைகளுள் இடக்கை ஒன்றினை இடத் துடையில் வைத்துக் கொண்டும், மகுடம் ஆரம் முதலியவற்றைத் தரித்த நிலையில் அழகுறக் காட்சியளிப்பது சிந்திக்கத்தக்கது.

2.13. ஆலமர் செல்வன் - சிலை வகைகள்

சிவபெருமான் போக, யோக, வேகத் திருவுருவங்களை எடுத்து உலக உயிர்களை இயக்கி வருகிறான்; அந்நிலையில் ஞான யோக நெறியைச் சனகாதி முனிவர்களுக்குக் கற்பிக்கும் பாங்குடன், உலக மக்களுக்கும் கற்பித்தருளுகின்றான் என்பது சைவ சமய நம்பிக்கை. முனிவர்கள் மட்டுமல்லாமல் கின்னரர்கள், விலங்குகளாகிய புலி சிங்கம் நச்சரவம் முதலியவையும், கல்லால மரத்தின் கீழிருந்து அறமுரைக்கும் தட்சணாமூர்த்தியின் அருட்செய்தியினைச் செவி மடுப்பதாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"காது பொத்தரைக் கின்னரர் உழுவை கடிக்கும்
பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
போதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற்கீழ் அறம்பகர" (திருமுறை 7:65,66)

எனப் பாடிச் செல்கின்றார். ஆலய வளாகத்தில் தென்முகக் கடவுளாகிய தட்சணாமூர்த்தி வடிவங்கள் சிற்பத்தில் நான்கு வகைகளில் காணலாம்.

அ) யோக தட்சணாமூர்த்தி

தவக் கோலத் தென்முகக் கடவுள் வடிவங்களிலும் மூன்று வகைகள் உள்ளன. 1. இரு கால்களும் பதுமாசனத்தில் இருப்பது போன்று அமைந்திருத்தல், 2. வலக்கால் தொங்கிய நிலையில் இருக்க, இடக்கால் குத்திட்டுப் பீடமாகிய இருக்கையின் மீது அமர்ந்திருத்தல், 3. இரு கால்களும் குத்திட்டவாறு இருக்கையின் மீது இருக்கக் கால்களைச் சுற்றி யோக பட்டை காணப்படும் அமைப்பில் காணப்படுதல்.

ஆ) வியாக்கியான தட்சணாமூர்த்தி

ஆள் காட்டி விரலும் பெருவிரலும் *(நுனிகள்)* ஒன்று சேர்ந் திருக்க உள்ளங்கை எதிரிலிருப்பவரை நோக்கி அமைந்திருக்கும் சின்முத்திரையுடன் கூடியவர் தட்சணாமூர்த்தி; இது பொதுப்படக் கூறப்படினும் வியாக்கியான தட்சணாமூர்த்திக்கெனச் சின்முத்திரை சிறப்பிடம் பெறும். இந்த மூர்த்தத்தில் வலக்கால் தொங்கிய நிலையிலிருக்க, இடக்கால் மடங்கி வலத் தொடையின் மீது பொருந்தியிருக்கும்; இதனை 'வீராசனம்' என்பர்.

இ) ஞான தட்சணாமூர்த்தி

இந்தத் திருமேனியில் முன் வலக்கை ஞானமுத்திரையில் *(நடுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் ஒன்று சேர்ந்து உள்ளங்கை மார்பைப் பொருந்தி அதனருகே இருத்தல்)* அமைந்திருக்கும்.

யோகத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் கற்பிப்பதால் இந்தத் திருவுருவத்தை ஞான தட்சணாமூர்த்தி என்பர்; அதற்கேற்பச் சனகாதி முனிவர்கள் முதியவர்களாய் ஞானம் கேட்கும் நிலையில் அருகே அமர்ந்திருப்பர். இந்த மூர்த்தத்தில் பின் இரு கைகளில், ஞானத்தையும் தத்துவத்தையும் குறிக்கும் வகையில், புத்தகமும் உருத்திராக்க மாலையும் காணப்படும்.

ஈ) வீணாதர தட்சணாமூர்த்தி

இந்தத் திருமேனி தன் முன் இரு கைகளில் வீணை ஏந்தி வாசிக்கும் பாங்கினில் தோற்றமளிக்கும். இசையை - நாதத்தின் பெருமையை - உணர்த்திப் பயிற்றுவிக்கும் ஆசான் வடிவில் வீணா தர தட்சணாமூர்த்தி அமைந்திருக்கும். *(மோன ஞான நிலையில் வீணை வாசிப்பது சாத்தியமா என வினவலாம்; மனவொருமை யுணர்வுக்கு வீணையின் தேவையை மக்களுக்கு உணர்த்துவதற்காக இறைவனே கையில் வீணை வைத்திருப்பதாகக் கற்பனை புரிந் துள்ளனர் பெரியோர்கள்.)*

இவ்வாறாகப் பலவகை ஆலமர் செல்வன் வடிவங்கள் அமைந்திருப்பினும், சிவாலயங்களில் தவறாமல் தெற்குப் பகுதியில் தென்முகக் கடவுள் நிலை கொண்டிருப்பார்; வடிவ அமைப்பில் சிற்சில மாற்றங்கள் அமைந்திருப்பது இயல்பே.

ஆடல்வல்லானைக் காண்கையில், அனைத்து இயக்கங் களுக்கும் காரண நிலையில் - அணுவிலும் தாண்டவ நிலையில் - மகிழ்ச்சியூட்டும்; ஆலமர் செல்வன் வடிவத்தில் ஞான மோனக் குறிப்பாகச் சாந்தத்துடன் கூடிய மகிழ்ச்சியுண்டாகும்; அதே வேளையில் சிந்தனையைத் தூண்டும்.

உ) மிருதங்க தட்சணாமூர்த்தி

இசைக் கருவிகளுள் சிவமூர்த்தமாகிய தெட்சணாமூர்த்தி வடிவத்தில் 'வீணை'யைப் பொருத்தி வீணாதர தட்சணா மூர்த்தியைக் காண்பது ஒரு புறமிருக்கப், பாண்டிய மன்னர்களின் மிகச்சிறந்த கலைப் படைப்பான வெட்டுவான் கோயிலில், முன் னிரு கைகளில் வீணைக்குப் பதிலாக மிருதங்கத்தைப் பொருத்தி 'மிருதங்க தட்சணாமூர்த்தி'யைச் சிலையமைப்பில் கொண்டு வந்துள்ளனர்.

சிறப்புமிகு பிற தட்சணாமூர்த்தி உருவங்கள்

1. சிற்சில திருத்தலங்களில் தட்சணாமூர்த்திக்குப் பெருஞ் சிறப்பும் வழிபாடு உண்டு; தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆலங்குடியில் அமைந்துள்ள தெட்சணா மூர்த்தி பெருஞ்சிறப் புடையது; அந்த மூர்த்தியால் அது குருவின் திருத்தலமாகப் போற்றப் படுகிறது.

2. திருச்சி மலைக் கோட்டையில், மாத்ருபூதேசுவரர் சந்நிதி தெற்குத் தேவ கோட்டத்தில், முயலகன் மீது வலக்காலை ஊன்றியும் இடப்பக்கக் காலை மடித்து வலத்தொடை மீது பொருத்தியும், அரவம், சக்தி, வரதம், புத்தகம் ஆகியவற்றை நான்கு திருக் கைகளில் ஏந்தியும், மகுடம் பொருந்திய திருக்கோலத்தில் தட்சணா மூர்த்தி காட்சியளிக்கிறார். தேவ கோட்டத்தையொட்டி, ஜனகாதி முனிவர்கள் காட்சியளிப்பதும் சிற்பக் கலைப் படைப்பில் காணலாம்.

3. வட ஆற்காடு - அரக்கோணம் வட்டத்திலுள்ள தக்கோலம் திருவூறலுடையார் கோயிலில், கருவறையின் தெற்குக் கோட்டத்தி லுள்ள தட்சணாமூர்த்தியின் திருவுருவம் பலரால் பாராட்டப்பட்ட பெருஞ்சிறப்புடையது. யோக வடிவில் அமர்ந்துள்ள இந்த மூர்த்தி தன் வலக்காலைக் கீழே ஊன்றி இடக்காலை மடித்து இருக்கை மீது வைத்துள்ளார். தலையை இடப் புறம் சாய்த்துப் புன்முறுவல் பூத்த வண்ணம் காணப்படுவது சிறப்புடையது. அவருக்குள்ள நான்கு

கைகளுள் மேல் வலக்கையில் உருத்திராக்க மாலையும், மேல் இடக்கையில் மழுவும், கீழ் வலக்கையில் வரத முத்திரையும், கீழ் இடக்கை இடத்தொடையில் பொருந்தியுள்ளமையும் காணலாம்.

4. திருவொற்றியூர் தியாகராசர் கோவிலுக்கு அருகிலுள்ள தெட்சணாமூர்த்தி கோயிலில் அவர் வழக்கத்திற்கு மாறாக வடக்கு நோக்கி அருள்பாலித்தலைக் காணலாம். தெற்கு நோக்கியுள்ள ஞான சக்தியாகிய வடிவுடையம்மனுக்கு ஞானோபதேசம் புரியும் நோக்கில் தென்முகக் கடவுள் வடக்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ளமை அரிய காட்சியாகும்.

5. சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் வட்டம் மணிமுத்தாறு நதிக்கரையில் பட்டமங்கலம் எனும் திருத்தலம் உள்ளது; இங்கு ஆலமரத்தடியில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் அருள்மிகு தட்சணா மூர்த்திக்குப் புராணப் பெருமை உள்ளது. ''கற்சிலை வடிவத்தில் சுமார் ஏழு அடி உயரத்தில் சிற்பியினால் வடிக்கப்பட்ட தட்சணா மூர்த்தியின் அழகினைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.....

இவ்வாலயத்தில் தட்சிணா மூர்த்தியைக் கிழக்கு நோக்கி அமைத்தோடு அவருக்குக் கீழ் சனகாதி முனிவர்களோடு அடிமுடி காண முயன்ற திருமாலையும் பிரம்மாவையும் சேர்த்து வடிவமைத் துள்ளது தனிச்சிறப்பாகும்''[1] என மு. அருணகிரி எழுதியுள்ள குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

6. நாகை மாவட்டம் மயிலாடு துறையையொட்டிய வள்ளலார் கோயிலில் மேதா தட்சணாமூர்த்தி நந்தியின் மீது அமர்ந்த கோலத் தில் காட்சியளிக்கிறார். நவக்கிரகங்களில் சுபகிரகமும் மங்கலப் பேறு வழங்குபவருமான குருபகவானின் அதிதேவதை தட்சணாமூர்த்தி; தனிச் சன்னிதியில் நந்தியின் மீது அமர்ந்த கோலத்தில் தட்சணா மூர்த்தி அமைந்திருப்பதை வேறெங்கும் காணவியலாது; எனவே, குருப்பெயர்ச்சி மிகச் சிறப்பாக இங்குக் கொண்டாடப் படுகிறது.

7. திருவானைக்கா - கோயிலினுள் திருச்சுற்றில் கோட்டத்தில் காணலாகும் அழகிய சிற்பங்களுள் ஒன்று தெட்சணா மூர்த்தியின் திருவுருவம். இது பற்றி டாக்டர் இரா. நாகசாமி எழுதுகையில், ''சிவ பிரானின் உருவம், கேசம், சுழல்முடி, நான்கு கரங்கள், வலக் கரங்கள் சூலமும், அபய முத்திரையும் கொண்டுள்ளன. கீழ் இடக் கரம் குரக்கம் சேர்ந்துள்ளது. மேற்கரத்தில் உள்ளது தெளிவாக

1. குமுதம் பக்தி ஸ்பெஷல், டிசம்பர், 2001, பக். 27.

சி.11.

இல்லாவிடினும் தீ போலத் தெரிகிறது. இது நிலையில் மெய்ஞானம் புகட்டும் தட்சிணாமூர்த்தி. ஆம், நின்ற நிலையில் ஞானம் புகட்டும் வள்ளலைப் படைப்பது ஒரு மரபுதான்''[1] எனக் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

8. திருநாவலூரில் நின்ற கோலத்தில் தட்சணாமூர்த்தியைக் காணலாம். ''கருவறையில் மூலவரான பக்த ஜனேசுவரர் லிங்க வடிவில் அருள்புரிகிறார்..... தேவ கோஷ்டங்களில் தட்சணாமூர்த்தி நின்ற கோலத்துடன் *(தன் வலக்கையை ரிஷபத்தின் மீது வைத்த நிலையில்)* காட்சியளிப்பது காணத்தக்கது; புதுமையானதாகும்''[2] என வருங்குறிப்பு நோக்கத்தக்கது.

9. திருவெண்ணெய் நல்லூருக்கு அருகிலுள்ள கிராமத்தில் *(திருமுண்டீசுவரத்தில்)* சிவலோக நாதர் கோயிலிலே தட்சணா மூர்த்தி சன்னிதியிலே குரு பகவான் கல்லால மரமின்றி மலை மீது நந்தியை வாகனமாகக் கொண்டு காட்சி தருதலைக் காணலாம். தட்சணாமூர்த்தியின் சிற்பத் திருவுருவம் இவ்வாறு அமைந்துள்ளது அற்புதமாகும்.[3]

இவ்வாறெல்லாம் தட்சணாமூர்த்தி வடிவங்கள் யோக நிலையில் அமைந்திருக்கவும், சுருட்டப்பள்ளி எனும் தலத்தில் அமர்ந்த கோலத்தில் நான்கு திருக்கைகளுடன் அனைத்து இலக் கணங்களுடன் *(தேவி தம்மை இடப்பக்கம் தழுவியபடி)* ஸ்ரீ தாம்பத்திய தட்சணாமூர்த்தியாகக் காட்சியளிப்பது வியத்தற்குரியது.

2.14. கால சம்மார மூர்த்தி - சிற்பக் கலைப் படைப்பு

சிவனுக்குரிய மகேச்சுர மூர்த்தங்களுள் 'காலசம்மாரர்' திருக் கோலமும் ஒன்று. காலாரி, காலகால மூர்த்தி என்றெல்லாம் அழைக்கப்படும் காலசம்மாரர் சிலைகள் பல சிவாலயங்களில் காணப்படினும், திருக்கடவூர் கால சம்மாரரே மக்களால் பெரிதும் போற்றக்கூடிய வழிபாடுகளைப் பெற்று வருகிறார்.

மிருகண்டு முனிவரின் மகன் மார்க்கண்டேயன், பெற்றோரின் இசைவிற்கிணங்கத் தலப்பயணம் புரிந்து வருகையில், திருக்கடவூர் இறைவனைப் பூசித்துக் கொண்டிருந்தான்; அக்காலத்தே அவனுக்கு

1. கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், சென்னை, பக். 64.
2. கோபுர தரிசனம், ஜுலை, 2000, பக். 23.
3. அம்மன் தரிசனம், டிசம்பர், 2002, பக். 29.

விதிக்கப்பட்ட பதினாறு வயது நிரம்பிய காரணத்தால், காலன் தன் பாசக் கயிற்றை அவன்மீது வீசினான்; அந்தக் கயிறு சிவலிங்கத்தினை அணத்துக் கொண்டிருந்த மார்க்கண்டேயனையும் இலிங்கத்தையும் சேர்த்து இழுத்தது. அடியார்க்கு எளியராகிய ஈசன் தம்மைப் பொருட்படுத்தாத காலனை, லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அவனைக் காலால் உதைத்துச் சூலத்தால் குத்தி, மார்க்கண்டேயனைக் காத்தருளினார்; எனவே, கால கால மூர்த்தியாக அழைக்கப் படலானார்.

இத்தகைய காலசம்மார மூர்த்தியின் பேரருளை நினைவுகூர்ந்து அருளாளர்கள் பலரும் பாடி மகிழ்ந்துள்ளனர்; தாயுமானவரும்,

> ''மார்க்கணடர்க் காகஅன்று மறலிபட்ட பாட்டையுன்னிப்
> பார்க்கின் அன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே''[1]

என்று பாடிச் சென்றுள்ளதைச் சிந்திக்கலாம்.

சிற்பக் கலை நோக்கில், காலசம்மாரர் திருக்கோலத்தைப் பெரும்பாலும் இரு திருவடிவங்களில் அமைக்கின்றனர்; 1. உமையன்னையுடன் கூடிய கால சம்மாரர், 2. அந்தகனை மாய்க்க இலிங்கத்தினின்றும் வெளிப்பட்ட காலசம்மாரர்; இவ்விரு மூர்த்தங்களும் சிவாலயங்கள் சிலவற்றில் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளன.

''காலாரி மூர்த்தி தாமரைப் பீடத்தில் வலக்காலை ஊன்றிக் கொண்டு, இடக்காலைத் தூக்கி எமனின் மார்பில் உதைப்பது போல் சிற்பங்களில் காட்டப்படுவார். சிவனுக்கு மூன்று கண்களும் கோரப் பற்களும் அனல் மகுடமும், நான்கு அல்லது எட்டுக் கைகளும் காட்டப்பட்டிருக்கும். நான்கு கைகள் பெற்றிருக்கும் திருவுருவில் இரு வலக்கைகளில் சூலமும் பரசும் ஆயுதங்களாகவும் இரு இடக்கைகளில் வியப்பு, சுட்டு முத்திரைகளாகவும் காட்டப் படும். எட்டுக் கைகள் இருப்பின் வலக்கைகள் நான்கிலும் சூலம், அங்குசம், வச்சிரம், நண்டு முத்திரை ஆகியவையும், இடக்கைகள் நான்கிலும் கேடயம், பாசம் *(கயிறு)*, வியப்பு, சுட்டு முத்திரையும் இடம் பெற்றிருக்கும். இத்திருவுருவில் இறைவன் செவ்வண்ணம் கொண்டவராய் இருப்பார்''[2] என்று சொ. சாந்தலிங்கம் போன்ற அறிஞர்கள் விளக்கியிருப்பது மனங்கொண்டு சிந்திக்கத்தகும்.

1. தாயுமானவர் பாடல்கள், பராபரக்கண்ணி, 128.
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு, பக். 241.

தமிழகத்தில் பட்டீசுவரம், திருச்செங்காட்டங்குடி முதலிய சில தலங்களில் இத்தகைய எழிற்காட்சிச் சிற்பங்கள் காணப்படு கின்றன. திருக்கடவூரில் நின்ற கோலத்தில் சூலம், மழு, பாசம், தர்சனி தாங்கிய திருக்கோலத்தில், காலன் தன் திருவடிக் கீழ் உருண்டு கிடக்கவும், மார்க்கண்டேயர் கைகூப்பி நிற்கவுமான அமைப்பிலே செப்புத் திருமேனி உள்ளது. இஃது ஒரு புறமிருக்கத் தமிழகத்தில் பல சிவாலயக் கோபுரங்களில் சுதைச் சிற்பமாக அமைந்துள்ளதும் காணத்தக்கதே.

திருக்கடவூரில் காலசம்மாரரின் எதிர்ப்புறத்தில், ஒரு தனிச் சன்னிதியில் காலன் திருவுருவம் அமைந்துள்ளது.

வேக மூர்த்தியாகக் காலசம்மாரர் அமையப் பெறினும், மக்கள் தம் ஆயுள் நீட்டிப்பிற்காகப் பக்தியார்வத்துடன் இந்தத் தெய்வத் திடம் வந்து வேண்டி நிற்கின்றனர். அட்ட வீரட்டானங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் திருக்கடவூர், காலசம்மார மூர்த்தியால் சிறப்பிடம் கொண்டுள்ளது.

ஆலயத் தூண்களில் கூடக் கால சம்மாரர் திருக்கோலம் அணி செய்கின்றது. எடுத்துக் காட்டாகத் தில்லைப் பொன்னம்பலத்திலே நடராசர் சன்னிதிக்கு எதிரே கொடிக் கம்பத்திற்கு அருகே நிருத்த சபைக்குச் செல்லும் படிக்கட்டின் பக்கத்தில், மேற்குப் பார்த்த தூணில் காலசம்மார மூர்த்தியின் கற்சிற்பப் படைப்பு மிகச் சிறந்த கலைப் படைப்பாக உள்ளது. பெரிய திருவுருவமாக இஃது அமைந்திருக்க வும், இதே நடராசர் கோயிலில் பொன்னம்பலத்திலே ஆடல் வல்லான் சன்னிதிக்குச் செல்லும் கிழக்குப் புறப் படிக்கட்டின் அருகே தூண்களுக்கு மேலே போதிகைகளில் - விட்டத்தின் இரு கோடிகளிலும் - இலிங்கத்துக்குக் கண்ணிடந்து அப்பும் கண்ணப்பர் சிலையையும், மார்க்கண்டேயருக்காகக் காலனை ஈசன் உதைத் திடும் கால சம்மாரர் சிலையையும் அழகிய சின்ன வடிவங்களில் கண்டு வியப்பெய்தலாம். இப்படியமைத்த சிற்பியை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

கங்கைகொண்ட சோழபுரம் வடச் சுவரில் தேவகோட்டங்களில் காலாந்தகர் துர்க்கை பிரமன் பைரவர் காமதகனர் ஆகிய சிற்பத் திரு வுருவங்கள் உள்ளன. அவற்றில் காலாந்தகர் உருவம் வியப்பிற்குரிய அமைப்பில், அஃதாவது, காலனைக் கீழே தள்ளி அவன் மீது இரு காலாலும் மிதித்தவண்ணம், நான்கு கைகளுள் மான் மழு சூலம் சுட்டிக் காட்டும் முத்திரை கொண்டு காட்சி தரும் நிலையில் உள்ளது.

2.15. கஜசம்மாரர் - சிற்பப் பெருமை

சிவபிரானின் வேகத் திருக்கோலங்களுள் ஒன்றாகிய கஜ சம்மாரரை வேழம் உரித்த பிரான், ஆனை உரித்த பெருமான் முதலிய திருப்பெயர்களால் அழைப்பர்.

சிவபெருமானின் பெரும் புகழை உணராத தாருகவன முனிவர்கள் அபிசார வேள்வி வாயிலாகத் தோற்றுவித்த கொடிய யானையைச் சிவன் கொன்று, அதன் தோலைத் தன்மீது போர்த்திய வண்ணம் ஆடல் நிகழ்த்தினான்; அந்தக் கோலமே 'கஜசம்மாரர்'. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற திருத்தலம் வழுவூர் வீரட்டானம் ஆகும்.

''ஆகமப் பிரியனாகிய பல்லவன் இராச சிம்மன் காலத்துக் கயிலாசநாதர் கோயிலில் சிற்பத் திருவுருவில், கஜசம்மாரரின் ஒரு கை ஆச்சரிய முத்திரை காட்டுகிறது. மிக நீண்ட திரிசூலத்தினால் யானையைக் குத்தி, வலக்காலால் உடலை அழுத்தி, இடக்காலை உத்குதிகாசன முத்திரையில் யானைத் தலையை மிதிக்கும் கோலத்துடன் அது காணப்படுகிறது. அருகில் உமையம்மை சிவனின் சினங் கண்டு அஞ்சிப் பதை பதைத்து, ஒடுங்கி நிற்கும் பாவம் பல்லவச் சிற்பத் திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

வழுவூர்த் திருத்தலத்தில் காணலாகும் செப்புத் திருமேனியில் கஜசம்மார மூர்த்தியின் சிற்ப நேர்த்தி, சோழர் காலச் சிற்பியரின் கலைச் சிறப்பைப் புலப்படுத்தும்.

திருச்செங்காட்டங்குடி, விருத்தாசலம், திருத்துறைப் பூண்டி, கோவை - பேரூர், காஞ்சிக் கோயில்களிலும், தஞ்சைக் கலைக் கூடத்தி லுள்ள தாராசுரச் சிற்பத்திலும் கஜசம்மார மூர்த்தியைக் காணலாம்.

பல சிவாலயக் கோபுரங்களில் சுதைச் சிற்ப வடிவில் ஆனை உரித்த பெருமான் காட்சியளிக்கின்றார்; அதே திருக்கோலத்தில், திருக்கைகளில் உடுக்கை சூலம் கபாலம் பாசம் ஆகியவற்றை ஏந்தி நடனக் கோலத்திலிருப்பதையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

மெய்ப் பொருளியல் உட்கிடை இந்தத் திருக்கோலத்தில் அமைந்திருப்பதால் கூர்ம புராணம், வராக புராணம், சுப்ரபேத ஆகமம் முதலியவற்றில் இது பற்றிய விளக்கம் குறிப்பிடப்படு

1. தமிழ்ப் பண்பாடு வரலாறு - இரண்டாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பக். 651-652.

கிறது; சைவ சமய அருளாளர்களும் தக்கவாறு 'யானை உரித்த பெருமான்' பெருமையினை உயர்த்திப் பாடியுள்ளனர்.

2.16 கங்காதரரும் கங்கா விசர்ஜன மூர்த்தியும்

கங்காதரர் திருவுருவத்தில் சிவன் தன் இடக்காலை வளைத்து வலக்காலை நேராகத் தரையில் ஊன்றி நிற்கும் நிலையில் காட்சி யளிப்பார். தம் தேவி பார்வதியை முன் இடக் கையால் அணைத்த படி முன்வலக்கையால் அவளது கன்னத்தைத் தொட்டுக் கொண் டிருப்பதாகத் திருவுருவம் அமைந்திருக்கும். மேலும், தன் பின் வலக்கை மழுப்படை தாங்கியிருக்கவும், அம்மழுப்படை கங்கை பொருந்தியுள்ள தன் சடையைத் தொட்டுக் கொண்டிருக்கவுமான அமைப்பிலும், தன் இடக்கை மானை ஏந்திக் கொண்டிருக்கும் அமைப்பிலும் காணப்படும்.

உமையம்மையின் வலக்கால் நளினமாக ஓரளவு வளைந்தும், இடப்புறக் கால் நிமிர்ந்தும், இடக்கை மலரேந்தியும் வலக்கை தன் பக்கத்தே தொங்கித் தாழ்ந்தவாறும் காணப்படும்.

பல்லவ மன்னர் காலத்தில் சிவமூர்த்தங்கள் பலவும் சிறப்பக் கலைப் படைப்பினைப் பெறுகையில், கங்காதர மூர்த்தத்துக்கும் சிறப்புச் சிறப்பு உண்டாயிற்று. மகேந்திரவர்ம பல்லவன் அப்பரடி களால் சைவ சமயப் பெருமையை உணரத் தலைப்பட்டதும், பக்தி வைராக்கியத்துடன் சைவக் கோயில்களையும் சிவமூர்த்தங்களை யும் அமைக்க முற்பட்டான்; அந்நிலையில் திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிலில் கங்கையைத் தன் திருச்சடையில் கொண்டு விளங்கும் கங்காதரரை வியக்கத்தக்க முறையில் அமைக்கச் செய்தான்.

கங்காதர மூர்த்திக்குப் புராணப் பின்னணியாக இரு வகையில் கூறுவர். பகீரதனால் தவப்பயனாகக் கொணரப்பட்ட ஆகாச கங்கை யின் வேகம் தடுத்தாட் கொள்ளச் சிவன் தன் செஞ்சடையில் தாங்கிக் கங்காதரன் ஆனான் என்பர்; ''பார்வதி பிராட்டி சிவமூர்த்தியின் கண்களை விளையாட்டாக மூடிய காலத்தில் அவளது நகத்திற் பிறந்த கங்கையைத் தரித்த சிவன் திருவுரு''[1] என்று கங்காதரரைத் தொடர்புபடுத்தியும் கூறுவர்.

திருக்கோகர்ணம் *(கோகர்ணேசுவரர் கோயில்)*, புதுக் கோட்டை நகரின் ஒரு பகுதியாக உள்ளது. மலைகளைக் குடைந்து

1. *அபிதான சிந்தாமணி, பக். 314.*

கட்டப்பட்ட அந்தக் குகைக் கோயிலில், வடப்புறத்தே தன் சடையில், பகீரதன் கொணர்ந்த ஆகாச கங்கையைத் தாங்கி நிற்கும் பெருமிதத்துடன் நின்ற கோலத்தில் கங்காதரன் காணப்படுகிறான்; ஏழடி உயரத்திலுள்ள இந்தச் சிவத்திருமேனி மலைப் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது சிற்பக் கலைப் படைப்பின் சாதனையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

சிவபிரானுக்குக் கங்கா தேவியும், உமாதேவிக்கு அடுத்த சிறப் பினைக் கொண்ட தேவியாகவே கொள்வது சைவ சமயத்தில் புராண நம்பிக்கை. எனவே, சிவாலயங்கள் பலவற்றிலும் தேவ கோட்டங் களில் கங்காதர மூர்த்தம் இடம் பெற்றிருத்தலைக் காணலாம்.

அருந்தவமியற்றிக் கொணர்ந்த ஆகாச கங்கை, சிவபெரு மானது செஞ்சடையிலே தங்கி விட்டமையின், அதனை விடுவிக்க மீண்டும் பகீரதன் தவமியற்றி, இறைவன் சடையிலிருந்து விடு விக்கச் செய்தான். அவ்வாறு விடுவிக்கப்பட்ட கங்கை ஏழு அருவி களாகப் பிரிக்கப்பட்டு தரையில் வந்து சேர்ந்தது என்பது புராணம்; அஃதாவது, கங்கையின் செருக்கையடக்க இறைவன் இவ்வாறு செய்தருளினான் என்பது உணர்ந்து கொள்ள வேண்டிய செய்தி.

சிற்பக் கலைப் படைப்பில் கங்காதரருக்கும், கங்காவிசர்சன மூர்த்திக்கும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. கங்கை விசர்சன மூர்த்தி யின் இடப்புறச் சடைகளிலிருந்து கங்கையாறு இறங்குவதைச் சிற்பத்திலும் ஓவியத்திலும் காட்டுவர். ஆகவே, சிவன் தன் தலையி லிருந்து கங்கையை விடுவிக்கும் திருக்கோலமே கங்கா விசர்ச்சனர் எனப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

வைத்தீசுவரன் கோயிலில் உற்சவர்கள் இருக்குமிடத்தில் கங்கா விசர்ச்சன மூர்த்தியைக் கண்டு களிக்கலாம்.

தஞ்சைக் கலைக் கூடத்தில் காணலாகும் கங்காதரர், தம்முடி யருகே தேவி கங்கையைச் சூடியிருக்கும் அமைப்பிலே, அவள் காரணமாக ஊடல் கொண்டு நின்றிருக்கும் உமாதேவியைச் சமாதானப் படுத்தத் தம் வலக்கையால் அவள் தாடையை வருடிக் கெஞ்சுவது போலவும் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்; நான்கு கைக ளுடன் கங்காதரரும் இரு கைகளுடன் உமையம்மையும் தேர்ந்த ஆடை அணிகலன்களுடன் காட்சிக்கேற்ற முகபாவத்துடன் விளங்கு வது அக்காலச் சிற்பியின் கலைத்திறப் புலப்பாடாகும்.

2.17. கங்காளமூர்த்தி - பெருமையும் சிற்பச் சிறப்பும்

மும்மூர்த்திகளுள் சிவபெருமான் 'அழித்தல்' தொழிலைப் புரிபவராக மயானத்தில் ஆடி நிற்பவர் என்று புராணங்கள் கூறும். ஊழி முதல்வன் என்பதால் இறைவன் ஒரு காலத்தில் அனைத்துயிர் களையும் இளைப்பாறும் நோக்கில் அழித்த நிலையில், தானொருவ னாகவே நிற்கும் ஆற்றலுடையவனாய் விளங்குவான். எனவே, அழிப்பின் பேரெல்லையைக் குறிக்கும் வகையில் பிரம விட்டுணுக் களின் எலும்புகளை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு, அதனை ஒரு கழியில் கோத்துத் தன் தோளில் அணிந்த வண்ணம், கைகளில் உடுக்கையைப் பிடித்துக்கொண்டு அதனைத் தட்டிய வண்ணம் உலவமுற்படுவான்; அந்த நிலையில் காணலாகும் திருக்கோலமே கங்காள மூர்த்தம் ஆகும். இந்தத் தத்துவ உட்கிடையை உணருமாறு மணிவாசகர்,

"நங்காய் இதென்ன தவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடி
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ"[1]

எனப் பாடிச் செல்வதால் தெரிந்து கொள்ளலாம்.

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், கங்காளர் திருமேனி பற்றி எழுதுகையில், "இறைவன் காலாதீதன் என்பதும், பிரமன் திருமால் முதலாயினோர் வினைக் கீடாக வடிவு கொண்டு வினைக் கழிவில் இறப்பர்; அங்ஙனம் இறந்தவர்களின் எலும்புகளை நரம்பில் கோத்துக் கட்டி மாலையாக அணிந்தும் முழு எலும்பு களைத் தண்டமாக ஏந்தியும் 'ஈறிலாதவன் யான் ஒருவனே' என்பதை உணர்த்தியருளுகின்றார்'[2] என்று விளக்கிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

சைவவுலகம் போற்றி நிற்கும் கங்காளர் திருவுருவத்தைப் பல சிவாலயக் கோபுரங்களில் சுதைச் சிற்ப வடிவில் காணலாம். சிறப்பாகக் கங்காள மூர்த்தியின் சிற்ப வடிவத்தின் தேர்ந்த கலைப் படைப்பினைத் தாராசுரம் கோயிலில் அமைத்திருந்தனர்; அந்தச் சிற்பம் இப்போது தஞ்சைக் கலைக் கூடத்தில் காணலாம். மேலும், சுசீந்திரம் தாணுமாலயப் பெருமான் கோயில், திருச்செங்காட்டங்

1. திருவாசகம், திருச்சாழல், 11.
2. மேலது, ச.த. உரை.

குடி ஈசுவரன் கோயில், குடந்தை நாகேசுவர சுவாமி கோயில், சிதம்பரம் கோபுரச் சிற்பங்கள் ஆகியவற்றிலும் கங்காளரின் நேர்த்தியான சிற்பங்களைக் காணலாம்.

முற்காலச் சோழர் கோயில்களில் கருவறைச் சுவரின் தேவ கோட்டங்களில் கங்காளர் திருவுருவம் அமைந்திருக்கக் காணலாம். இந்த மூர்த்தி மக்களின் வழிபாட்டைப் பெறும்வகையில், ஆலயங்களில் செப்புத் திருமேனிகளாகவும் சோழர்கள் வார்த்தெடுத்து வைத்துள்ளனர் என்பதும் தெரிய வருகின்றது.

கங்காளரும் பிட்சாடனரும் தோற்றத்தில் ஒன்று போல் தெரியலாம். ஆனால் பிட்சாடனர் திருவுருவத்தில் சிவன் ஆடையின்றிக் கபாலம் ஏந்திக் காணப்படுவான்; கங்காளரோ உடையணிந்து அணிகள் பூண்டு நடக்கும் கோலத்தில் இருப்பார். நான்கு கைகளுள் மேலிரு கைகளுள் இடக்கையில் விசுவக்சேனரின் எலும்பைக் கோத்துக் கையில் பிடித்துத் தோளில் சார்த்தியும், மேல் வலக்கை அருகேயுள்ள மானுக்கு அறுகம்புல் கொடுப்பது போலவும் இருக்கும்.

2.18. நீலகண்ட மூர்த்தி - பெருமையும் சிற்பச் சிறப்பும்

சைவப் பெரு மக்களிடையே பெரிதும் போற்றப்படும் திருநீலகண்ட மூர்த்தி, திருப்பாற்கடல் கடைந்த புராண நிகழ்ச்சியுடன் தொடர்பு கொண்ட திருவுருவம். அகோர மூர்த்தியாகிய சிவபிரானிடம் கிளைத்த மூர்த்தியாகக் கருதி வழிபடுவர்.

திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்த காலத்தில் காமதேனு முதலிய அற்புதப் பொருள்கள் தோன்றிய நிலையில் ஆலாலம் என்ற கொடிய நஞ்சும் தோன்றியது. உலகமே அழிந்து விடுமோ என்று எல்லோரும் அஞ்சி ஓடிய நிலையில், யாருக்கும் தீங்கு நேராதபடி, அந்த நஞ்சினை எடுத்துச் சிவபெருமான் உண்டு, கண்டம் கறுத்தவராயினார்; திருநீலகண்ட மூர்த்தி எனத் திருப் பெயரும் பெற்றார். எல்லாச் சிவாலயங்களிலும் பிரதோச வழிபாடு நிகழும் வேளையில் நீலகண்ட மூர்த்தியின் திருவுருவ அருட் சிறப்பை நினைவிற் கொள்வர்.

உத்தமப் பெருங்குணமாகிய தியாகத்தை முன்னிறுத்தி, ஆபத் சகாயராக விளங்கும் சிவமூர்த்தியுடன் நீலகண்ட மூர்த்தியை ஒப்பிட்டுப் போற்றிக் கொண்டாடுவர்.

2.19 சங்கர நாராயணர் திருக்கோலம்

தமிழ் நாட்டில் காலந்தோறும் தெய்வங்களும் தெய்வங்களை முன்நிறுத்திப் 'பரம்பொருள்' எனும் நோக்கில் சமயங்களும் பல்க லாயின. இந்நிலையினைக் கண்டு தவமுனிவர் ஆதிசங்கரர், சண்மதக் கோட்பாட்டினைச் - சைவம் வைணவம் சாக்தம் காணாபத்யம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றின் தொகுப்பு நோக்கினைப் - பரப்பி யருளினார். அத்தகைய சண்மதங்களுள் முதன்மைச் சிறப்புடைய சைவத்தையும் வைணவத்தையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் சிவனாகிய சங்கரனையும் திருமாலாகிய நாராயணனையும் ஒருங்கே காணவும் வழிபடவும் அமைந்த திருமேனியே சங்கர நாராயணர் ஆகும்.

முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையாழ்வாரும், திருவரங்கத் திருமாலும் தில்லைச் சிவனும் வேறல்லர் என்பதைத் திவ்யப் பிரபந்தத்தில்,

"பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்"

(இயற்பா - முதல் திருவந்தாதி, 98)

எனப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

சிற்பக் கலை நோக்கில், அரிஹரன் திருமேனியில் திருமால் ஒரு பகுதியிலும் சிவன் ஒரு பகுதியிலுமாக, அந்த அந்த இறைக் கூறுகளுடன் சிற்பியர் அமைத்துக் காட்டியுள்ளனர். கருங்கற் சிற்ப மாகவும், செப்புத் திருமேனியாகவும் சுதைச் சிற்பமாகவும் சங்கர நாராயணர் திருவுருவங்கள் பல ஆலயங்களில் காணப்படுகின்றன. எனினும் சங்கர நாராயணர் *(சங்கரநயினார்)* கோயிலில் காணப்படும் திருமேனி மிகவும் எழில் நலத்துடன் சமயக் கலைச் சிறப்பினையும் கொண்டது. ஒப்புமை நோக்கில் அர்த்த நாரீசுவரர் திருவுருவம் போன்று, இணைப்புச் சிறப்பினையுடையது இத்திருவுருவம்.

2.20 கிராத மூர்த்தி - பெருமையும் சிலையுருவங்களும்

கிராத மூர்த்தியாகிய சிவனது வேட்டுவத் திருவுருவம் சில புராணப் பின்னணிகளுடன் சிலையமைப்பினைக் கொண்டது.

மக்கள் தம் வாழ்வியல் பரிணாமத்தில், முதற் கால கட்டத்தில் வேட்டையாடியே தம் வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொண்டனர்.

அதனையுணர்த்தும் வகையில், இராமன் உள்ளிட்ட இதிகாச மாந்தர்கள் வேட்டைக்கறிகுறியாக வில்லும் அம்பும் கொண்டு விளங்கினர்; அருச்சுனன் கர்ணன் முதலிய சில காப்பிய மாந்தர்கள் வில்லும் அம்பும் கொண்டு விளங்கினர்.

பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனும், வில்லும் அம்பும் கொண்ட திருக்கோலத்தினனே எனக் கூறும் வகையில், சில சூழல்கள் புராணங்களில் அமைக்கப்பட்டன.

பேரூழிக் காலத்தில் சிவபிரான் ஒரு வேட வடிவங் கொண்டு கிராத மூர்த்தியாகப் போற்றும் வகையில், ஊழிப்பெரு வெள்ளத்தில் மிதந்து வந்த அமுதக் குடத்தினைத் தன் அம்பால் உடைத்தருளி னான் என்றும், அதன் பயனாகத் திருக்குடமூக்கு, குடவாயில் முதலிய திருத்தலங்கள் உண்டாயின என்றும் கூறுவர். இத்தகைய பெருமை கொண்ட கிராத மூர்த்தியின் திருவடிவத்தைச் சிற்பமாகக் கும்பேசுவரர் ஆலயத்தில், அருள்மிகு மங்களாம்பிகை சன்னிதியில் அமைத்துள்ளனர்.

மகாபாரதத்தில் அருச்சுனன், சிவபெருமானிடமிருந்து பாசுபத அத்திரம் பெற வேண்டிய சூழலில், இறைவனே வேட்டுவத் திருவுருவத்தில் வந்தருளியதை விவரித்துக் கூறுவர். அஃதார்வது, சிவன் வேடுவனாக வருகையில் உமையம்மை வேடுவச்சியாகவும் வருகிறாள்; வேதங்களையே நாய்களாக மாற்றிக் கொண்டு பன்றி வேட்டையாடுங் குறிப்பில் வந்ததாகக் கூறுவர். அருச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளும் கிராத மூர்த்தியின் திருவுருவம் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள திருவேட்களம் பாசுபதேசுவரர் கோயிலிலும் உள்ளது; காரைக்காலுக்கு அருகேயுள்ள திருவேட்டக் குடியிலும் மிக அமைப் பாக உள்ளது; இங்குள்ள செப்புத் திருமேனி சிற்ப எழில் வாய்ந்தது.

திருவேட்களம் பாசுபதேசுவரர் கோயிலில் எழில்மிகுந்த பாசுபதேசுவரர் செப்புச் சிலை உள்ளது. இச்சிற்பத்தின் நுண் கூறுகளை உணர்ந்த தமிழ்நாடு தொல்லியல் துறை, 'தொல்லியல் நோக்கில் 2000' என்ற தொகுப்பு நூலை வெளியிடுகையில் அதன் மேலட்டையில் இந்தச் சிற்பத்தையே காட்டியுள்ளமை போற்றத் தக்கது. களத்தூர் சுகநாதீசுவரர் கோயில் கல்வெட்டில் பாசுபத மூர்த்தி வழிபாடு நடந்துள்ளது[1] பற்றிய குறிப்பு உள்ளது.

1. தகவல் தந்தவர்: தொல்லியல் துறை அலுவலர் ச. கிருஷ்ணமூர்த்தி.

2.21 சுகாசன மூர்த்தி - சிற்பக் கலை தாக்கம்

ஒருவன் தன் உடலை எப்பக்கமும் சாய்க்காமல் நேராக நிமிர்த்திய வண்ணம், கைகளைச் சமச் சீருடையனவாகக் கோலித்து, ஒரு காலைத் தொங்க விட்டும் மற்றொரு காலை மடக்கியும் அமர்ந் துள்ள ஆசனமே சுகாசனம் எனப்படும். சிவபெருமான் தான் அமர்ந்த கோலத்தில் திருக்கயிலையில் பல சூழல்களில் பல காலங்களில் காணப்படினும், சிறப்பாக மகேசுவர மூர்த்த நிலையில் *(சிற்பியர் சிலைகளை வடிக்கும் போது)* உமாசகித சுகாசன மூர்த்தம், உமா மகேசுவர சுகாசன மூர்த்தம், சோமாஸ்கந்த சுகாசன மூர்த்தம் என மூன்று வகைத் திருவடிவங்களில் வகைப்படுத்திக் கொள்கின்றனர். சிற்பக் கலைத் திறனாய்வாளர் க. நவரத்தினம் தம் 'தென் இந்தியச் சிற்ப வடிவங்கள்' எனும் நூலில், ''சுகாசன மூர்த்தம் என்பது உமை யவள் தன் பக்கத்திலில்லாது தனித்துச் சுகாசனமிட்டிருப்பது, உமா சகித சுகாசன மூர்த்தம் என்பது உமையவளுடன் சகாசனமிட் டிருப்பது; சோமாஸ்கந்த சுகாசன மூர்த்தம் என்பது சுப்பிரமணியரை மத்தியில் உடையதாய்த் தேவியோடும் இருப்பது''[1] என விளக்கிச் செல்வதால் அவை திருவருள் புரியத் தோற்றங் கொள்ளும் அனுக் கிரக மூர்த்தங்கள் என்பர்.

சுகாசன மூர்த்தமாகச் சிவன் திருக்கயிலையில் இரத்தின சிம்மாசனத்தில் பலர் புடைசூழ அமர்ந்திருத்தலைக் கூறுவர். இதற் கேற்பச், ''சிவபிரானுக்கும் உமைக்கும் அருகில் திருமால் பிரமன் முதலிய தேவர்களும், இந்திரன் முதலிய தேவர்களும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களும், அஷ்ட வசுக்களும், தேவர்கள், முனிவர்கள், கருட கந்தர்வர், சித்தர்களும் துதித்து வணங்கு கின்றனர். தும்புரு, நாரதர் இன்னிசை பாடுகின்றனர். வேதங்கள் தோத்திரம் செய்கின்றன. அரம்பையர் ஆடுகின்றனர். 'இறைவன் எல்லோருக்கும் வேண்டும் வரங்கள் அளிக்கின்றனர். அம்பிகை வேத சிவாகமங்களின் உண்மையை உணர்த்தி அருளுமாறு வேண்ட, இறைவன் சுகாசனமாக எழுந்தருளி அன்னைக்கு அவற்றின் உண்மைப் பொருளை உபதேசித்தருளுகின்றார்''[2] என வரும் விளக்கம் மனங் கொள்ளத்தக்கது.

---

1. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - இரண்டாம் பக்கம், பக். 668 *(மேற்கோளாக உளது).*
2. கலை மகள் தீபாவளி மலர், *1991,* பக். *172.*

உயிர்களுக்கு ஆன்ம நலம் பயக்கும் வகையில் சிவபெருமான் கொள்ளும் உயரிய திருவருட் கோலமே சுகாசன மூர்த்தமாகும். இதற்கு அரண் கோலும் வகையில் சமயப் புலவர் ந.ரா. முருகவேள், ''சிவபெருமான் அம்மையாரைத் தமது அருகில் இருத்தி வலக் காலைத் தொங்க விட்டுக் கொண்டும், இடக்காலை அரியாசனத்தின் மீது மடக்கிக்கொண்டும் அமர்ந்திருப்பது ஒரு திருமுகமும், ஆறு திருக்கைகளும் உடையவராய் வலத்திருக்கை ஒன்றில் சின் முத்திரையைக் காட்டிக் கொண்டு வேத சிவாகமத் தத்துவப் பொருள்களை உபதேசிக்கும் நிலையே சுகாசன வடிவம் எனப் படும். சுகாசனமாவது சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முக்தம், மயூரம், சுகம் என்னும் ஒன்பது வகை ஆசனங்களுள் ஒன்று. எவ்வாறு அமர்ந்தால் சுகமும் திடனும் உண்டாகுமோ, அவ்வாறு அமர்வது சுகாசனம் எனப்படும்''[1] என்று சமயப் புலவர் ந.ரா. முருகவேள் எழுதிச் சென்றுள்ளார்.

மேற்காணும் இலக்கணங்களோடு அமைந்த சுகாசன மூர்த்தி திருவுருவங்கள் திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் திருக் கோயிலில் சிறப்புற அமைந்திருத்தலைக் காணலாம். மதுரை சிதம்பரம் போன்ற பெரிய கோயில்களிலும் சுகாசன மூர்த்தத்தைக் கண்டு வழிபடலாம்.

2.22. விக்கினப் பிரசாதர் - சிலையமைப்பும் பெருமையும்

சோமாஸ்கந்த மூர்த்தத்தை யொத்த அமைப்பில், சிவனுக்கும் உமையம்மைக்கும் நடுவே கந்தனுக்குப் பதிலாக விக்கினேசுவரர் அமர்ந்த திருக்கோலம் இது. அஃதாவது, விநாயகர் நடுவே அமர்ந் திருக்கும் நிலையில் அவருக்கு வலப்புறம் சிவபெருமானும் இடப் புறம் உமையம்மையும் அமர்ந்திருப்பதை 'விக்கினப் பிரசாதர்' என்பர்.

பராசக்தியாகிய உமையன்னை இரு திருக்கைகளுடனும், விநாயகர் வழக்கமான நான்கு திருக்கைகளுடனும், சிவபெருமான் தம் நான்கு திருக்கைகளுடனும் ஒன்றியமர்ந்திருப்பதால் தெய்வநல ஆற்றல் பன்மடங்கு உயர்ந்த நிலையில் திருவருள் பாலிப்பு மிகுதியாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இத்திருமேனியமைப்பில், சிவ பிரானது மேல் வலத்திருக்கையில் மழுப்படையும், மேல் இடத்திருக் கையில் மானும், கீழ் வலத்திருக்கையில் வரத முத்திரையும், கீழ் இடத்திருக்கையில் அபய முத்திரையும் பொருந்திய வண்ணம்

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, ஜனவரி, 1972.

திருக்காட்சியளிக்கும். தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு வந்த பிறகே இத்தகைய சிற்பக் கலைப் படைப்பு ஏற்பட்டிருக்க வேண்டு மென்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. சோமாஸ்கந்த மூர்த்தம் சிவாலயங்களில் இடம்பெற்ற அளவுக்கு, விக்கினப் பிரசாதர் மூர்த்தம் ஏனோ மிகுதியாக இடம் பெறவில்லை.

2.23 ஆபற்சகாயர் (ஆபத்து சகாயர்) - சிற்பப் படைப்பு

மக்கள் நேர்ந்த, நேரவிருக்கிற தீங்குகளினின்றும் நீங்கி, என்றும் மன நலத்துடன் வாழவே எண்ணுவர்; அதற்கேற்ப இறைவனை நாடி அருள் வேண்டி நிற்பர். இதற்கேற்பத் தீயோரைத் தண்டித்து நல்லோரைக் காக்கும் நோக்கத்தில் இறைவன் ஆபற்சகாய மூர்த்தி யாக எழுந்தருள்வார். இம்மூர்த்தியைப் பற்றி ந.ரா. முருகவேள், "இறைவன் தன்னைத் தொழுபவர்களின் துயரங்களைப் போக்கிக் காத்தலையே தனக்குரிய தொழிலாகக் கொண்டவன். தன்னுடைய அடியவர்களுக்கு இடுக்கண் *(ஆபத்து)* நேருங் காலங்களிலெல்லாம் துணை புரிபவர் *(சகாயர்)* ஆக எழுந்தருளி, இடர் களைந்து அருள் புரியும் கடப்பாடு மேற்கொண்டு திகழ்பவர் ஆபற்சகாயர் எனப் படுவர். விநாயகர், முருகர், திருமால், பிரமன், மகேசுவரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வாராகி என்னும் ஏழு மாதர்கள், ஒன்பது கோள்கள், முனிவர்கள் ஆகியோர் அருகே சூழ்ந்து நிற்க, அழகிய பொற்றவிசின் மீது வீற்றிருந்து அருள்பவர் ஆபற்சகாயர் என நூல்கள் நுவலும்"[1] என விளக்கிச் செல்வது சிந்திக்கத்தக்கது. எப்படியோ தமிழகத்தில் இந்தச் சிற்பத் தொகுப்பிற்கு அடியார்களால் நல்ல போற்றுதல் ஏற்பட்டுள்ளது; பெருந்திருக் கோயில்களில் தான் இத்தகைய சிற்பப் படைப்பைக் காணலாம். *(நீலகண்ட மூர்த்தி ஆபற்சகாயரே; எனினும், சிறப்பாகப் பல தெய்வங்களின் சூழல் அமையும் போதே ஆபற்சகாயர் எனப்படுகிறார்.)*

2.24 சலந்தராரி (சலந்தரவத மூர்த்தி) - புராணக் குறிப்பும் சிற்பமும்

முற்காலத்தில் திருக்கயிலையிலே ஓர் உக்கிர மூர்த்தியாகச் சிவன் உருக்கொண்ட நிலையில், இந்திரன் வெகுண்டு தன் வச்சிரப் படையால் தாக்கினான்; இந்தப் படை பொடி பொடியாகியது. சிவன் சினத்துடன் நின்றமையால் அவன் திருமேனியில் தோன்றிய

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, ஜனவரி, 1972.

வியர்வையை வழித்தெறிந்ததும் கடலில் வீழ்ந்து அஃது ஓர் ஆண் குழந்தையாக உருவெடுத்தது. அந்தக் குழந்தையே அசுரனாக வடிவெடுத்துச் சலந்தரன் எனப்பெயர் கொண்டதாகப் புராணம் கூறும்.

சலந்தரன் தேவர்களுக்குக் கொடுமை விளைவித்த நிலையில், சிவனுடன் போர் புரியப் படையுடன் கயிலை நோக்கி வந்தான். அங்குச் சிவனை அடைக்கலமாகக் கொண்ட முனிவர்கள் அஞ்சி நடுங்கினர். அந்தச் சூழலில் இறைவன் ஒரு முதிய வேதியருருவில் வந்து சலந்தரனுடன் உரையாடி, ''நீ சிவனை எதிர்த்து வெல்ல நினைப்பின் இவ்வுருளைப் படையை எடுப்பாயாக'' என்று கூறிக் கொண்டே நிலத்தில் கீறி ஓர் உருளைப் படையை உண்டாக்கினான். அதனைச் சலந்தரன் எடுத்துத் தோளிலும் தலையிலும் வைத்துக் கொண்டான்; அந்தச் சக்திப் படை அவனை இரு கூறாக்கிக் கொன்று விட்டுச் சிவனை வந்தடைந்தது.

இவ்வாறு சலந்தரனைக் கொன்றதால், சிவன் தன்னிடமே தோன்றினாலும் அசுர சக்தி அழிக்கப்பட வேண்டுவதே எனப் பிறர்க்கு உணர்த்தினான் என்பர்.

சலந்தரவதம் தொடர்பான சிற்பப் படைப்புகளை மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில், கண்ணப்ப நாயனார் சிற்பத்தின் எதிரேயுள்ள தூணில் கண்டு கொள்ளலாம். மேலும் பாண்டிய நாட்டில் திருமெய்யம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களிலும் சலந்தரவதச் சிற்பம் இடம் பெற்றுள்ளது; அதனில் சலந்தரன் தன் இடத்தோளில் சிறு வில்லுடன் தன் மீசையைத் தடவியவாறும், வலக்கையில் உருவிய வாளுடனும் காணப்படுகிறான். சிற்சில மாற்றங்களுடன் வேறு சில கோயில்களிலும் சலந்தரனையும் அவனை வதைத்த மூர்த்தியையும் காணலாம்.

2.25 மகா சதாசிவமூர்த்தி - சிற்பச் சிறப்பு

சிவபெருமானுடைய அளவிலாற்றலைப் - பராக்கிரமத்தை - மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில், சைவ ஆகம அடிப்படையில் தத்துவப் புலப்பாடாக மகா சதாசிவமூர்த்தியை ஆலயத்தில் நிலைநிறுத்த முயன்றுள்ளனர்.

அடியவர்க்குத் தனித்தனியே திருவருள் புரியும் சிவமூர்த்தங்கள் பலவாக இருப்பினும், இரு தொகுப்புத் திருவடிவமாக விளங்கும் வகையில் மகா சதாசிவமூர்த்தியைக் கலையுலகில் கண்டுள்ளனர். இம்மூர்த்தி பற்றி விளக்குகையில், ''பகவான் பரமேசுவரனுடைய

மூர்த்திகள் 25 என ஆகமங்கள் *(ஸ்கந்த புராணம்)* கூறும். அப்படிக் கூறப்பட்ட 25 மூர்த்திகளுக்கான 25 தலைகளுடன் *(திருமுகங்களுடனும்)*, 50 திருக்கைகளுடனும் உள்ள,போக அதிகார மடங்கிய மூர்த்திதான் ஸ்ரீ மகா சதாசிவர் விக்கிரகம். புதுக்கோட்டையில் உள்ள ஸ்ரீ புவனேசுவரி ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது''[1] என வருங்குறிப்பு மிகவும் மனங்கொள்ளத்தக்கது.

சுதைச் சிற்ப வடிவில் தான் மகா சதாசிவமூர்த்தியை அமைப்பது சிற்பக் கலைஞர்க்கு எளிதே யொழியக் கற்சிலையிலோ உலோகச் சிலையிலோ அமைப்பது மிகக் கடினமாகும்.

சுதைச் சிற்ப வடிவில் இங்குக் காண விரும்புவோர்கள், சிதம்பரம் தெற்குக் கோபுரம் - தென்பகுதி மேற்புறத்திலும் *(25 முகம்)* விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் ஆலயக் கீழைக் கோபுரத்திலும் மகா சதாசிவமூர்த்தியைக் காணலாம். திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் மண்டபத் தூண் ஒன்றில் ஐந்து முகங்கள் கொண்ட ஈசுவரன் கல்திருமேனி ஒப்பு நோக்கில் சிந்திக்கத் தக்கது.

2.26 சயனக் கோலத்தில் சிவபெருமானின் சிற்பப் படைப்பு

திருப்பாற்கடலில், தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த நிலையில், தோன்றிய ஆலகால நஞ்சினை உண்ட காரணத்தால் சிவன் நீலகண்ட மூர்த்தி ஆயினார் என்பது அறிந்ததே. எதனையும் தாங்கும் சிவபெருமான், ஆலமுண்டதால் ஒருவகைத் தளர்ச்சி ஏற்பட்டது போன்று தள்ளாடிய நிலையில் சுருட்டுப் பள்ளி எனும் தலத்தை அடைந்தாராம்! சிறிது ஓய்வெடுக்கப் பள்ளி கொண்டாராம்! இதுவே இறைவனது சயனக் கோலச் சிற்பப் படைப்பிற்குக் காரண மாகும்.

கோயிலின் உள்ளே கருவறையைத் திறந்தால், பூரணமாகக் கருவறையைப் பெருமளவில் அடைத்துக் கொண்டு பள்ளி கொண்ட பரமேசுவரன் 'காலகூடேசுவரர்' எனும் திருப்பெயருடன் காட்சியளித்தலைக் காணலாம். அவரது தலைமாட்டில் சர்வ மங்களாம்பிகையாகிய பார்வதி தன் மடியைத் தலைக்கு உயரமாகக் கொடுத்த நிலையில் கண்காணித்துக் கொண்டிருக்கிறாள். விட முண்ட வாயனாகிய பரமன் என்ன ஆனாரோ என்ற கவலையுடன் சூரியன், சந்திரன், மற்ற தேவர்களெல்லாம் குழுமியிருப்பதையும்

1. *தினமலர் - தீபாவளி மலர், 1993, பக். 5-32*

சிற்பக் கலைப் படைப்பில் கண்டு கொள்ளலாம். பள்ளி கொள்ளும் போதும் சிவன் மழுவும் மானும் இரு கைகளில் ஏந்தியும், மற்ற இரு கைகளுள் மேல் வலக்கையைத் தலைக்கருகே வைத்துக் கொண்டும், மற்றொரு இடக்கையைப் பின்புறத்துக் கொண்டும் காட்சியருள்வது நோக்கத்தக்கது.

2.27. பஞ்சதேக மூர்த்தி - சிற்பச் சிறப்பு

சோழ மன்னர்கள் காலத்தில் சிவமூர்த்தங்கள் பலவற்றையும் சிற்பத் திருவுருவத்தில் கொண்டுவர முயன்றுள்ளனர்; எனினும், அருவுருவத் திருமேனியாகிய 'இலிங்கமே', வேறொரு தத்துவ நோக்கில் சதாசிவ மூர்த்தியாக உருவத் திருமேனியில் புலப்படுத்தவும் இடம் தந்துள்ளனர். அதனால், சிவபெருமானை ஐந்து திருமுக முடையவராகவும் நான்கு திருமுகமுடையவராகவும் கோபுரச் சிற்பங்களில் காட்டச் சிற்பியர்க்கு ஊக்கமளித்தனர். பிற்காலத்தில் சதாசிவ மூர்த்திக்கு இருபத்தைந்து தலைகள் என்றும், முப்பத் திரண்டு தலைகள் என்றும் சிற்பியர் சமயக் கலைக் கற்பனைக்கு இடங்கொடுத்துச் செயற்பட்டனர். எடுத்துக்காட்டாக 18-ஆம் நூற்றாண்டில் சதாசிவ மூர்த்திக்கு முப்பத்திரண்டு தலைகள் அமைத்த சுதைத் திருவுருவத்தை வைத்தீசுவரன் கோயிற் கோபுரத்தில் கண்டு கொள்ளலாம்.

பொதுவாக நான்கு முகங்களுடன் கூடிய இறைத் திருவுருவம் தாமரையிருக்கையில் காணப்படும் போது 'பிரமன்' என்றே இனங் கண்டு கொள்வர். ஆனால், குடவாயில் பாலசுப்பிரமணியன் இந்தத் திருவுருவம் தொடர்பாகத் தம் கருத்தை வெளியிட்டுள்ளார்; அது வருமாறு: ''தஞ்சை, கண்டியூர், செந்தலை போன்ற பகுதிகளில் மிகுதியாகத் திகழும் இத்தகைய நான்கு முகங்களுடைய சிற்பங் களையும் *(பல்லவர் காலம்)* தஞ்சைக் கோபுரத்து நான்குமுகச் சிற்பங்களையும் கூர்ந்து நோக்குவோமாயின் எல்லா முகங்களிலும் நெற்றிக்கண், ஒரு காதில் மட்டும் குழை, தலைகளில் பிறைச் சந்திரன் போன்ற சிவனார்க்குரிய பல அம்சங்களைக் காணலாம். இக்கோலம் வாகீச சிவனார் வடிவமாகும்..... இக்கோல நிலையை ஞானசம்பந்தப் பெருமான், 'பவமலி தொழிலது நினைவொடு பதும நன்மலரது மருவிய சிவனது சிவபுரம்' என்று பாடுகின்றார்.

சிவனாரை நான்முகனாக, ஐம்முகனாகக் காட்டும் பல கோலங்களை இராஜராஜன் தான் எடுத்த கோபுரத்தில் இடம் பெறச்

செய்ததோடு அல்லாமல் 'பஞ்சதேக மூர்த்தி' எனப் பெயரிட்டு ஒரு செப்புத் திருமேனியையும் தஞ்சைக் கோயிலில் இடம் பெறச் செய்ததைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது, தமிழகக் கலை வரலாற்றில் எவருமே செய்யாத புதுமைப் படைப்பாகும். இது சதுரமான பீடத்தின் மேல் பத்துக் கரங்களுடன் நின்ற கோலத்தில் சிவபெருமான் திகழ, அவரது உடலில் இடுப்பளவில் நான்கு திசைகளிலும் நான்கு திருவுருவங்கள் இணைந்து ஐந்துடல் மூர்த்தியாக *(பஞ்ச தேக மூர்த்தியாக)*ப் படைத்து வழிபட்டான் என்பதை அறிகிறோம்.''[1]

இவ்வாறு, தமிழகத்திலுள்ள கோயில் வளாகங்களில் நுணுகிய ஆய்வு மேற்கொண்டால் சிற்பவுலகில் பல புதுமைகளும் தெளிவுகளும் காண வாய்ப்பேற்படும்.

2.28 சிற்பப் படைப்பில் சரபேசுவரரும், பெருமையும்

சிவமூர்த்தங்கள் இருபத்தைந்தாகவும் அறுபத்து நான்காகவும் அருளாளர்கள் உள்ளொளிப் புலப்பாடாகக் கணக்கிட்டுக் கூறுவர்; எனினும், பெருந் திருவிழா நோக்கிலும், மக்களுக்குக் கண்கண்ட தெய்வமென வழிபடும் நோக்கிலும் சில மகேசுவர மூர்த்தங்களே பெருஞ்சிறப்புடையனவாகப் போற்றப்படுகின்றன; அவற்றுள் ஒன்றே சரப மூர்த்தியாகும். பேராற்றல் படைத்த சரபரின் வலிமை வாயு பகவானை ஒத்தது என்பது ஆகமக் குறிப்பு.

இரணிய க்சிபுவைக் கொன்றபின், அவ்வசுரனின் செங்குருதி பட்ட/உறிஞ்சிய காரணத்தால் நரசிம்மர், அசுர வெறி கொண்டு, பல்லுயிர்களுக்கும் துன்பம் விளைவிக்கத் தொடங்கினார். அக் கொடுமையினின்றும் உயிர்களைக் காத்தருளச் சிவபெருமான் சரப மூர்த்தியாகத் தோன்றலானார். நரசிம்மரின் அசுரத்தனத்தை அடக்கிய பின், நேராகத் திருமறைக் காட்டிற்குச் சரபர் எழுந்தருளினார் என்பதும், அந்தச் சிவபெருமானைத் திருமால் வழிபடலானார் என்பதும் புராண வழிச் செய்திகளாகும்.

சரப மூர்த்தியின் பெருவலிமையை உணர்ந்த மக்கள், திருவுருவ அமைப்பைச் சிற்பத்தில் வடிக்கச் செய்தனர். சிற்பியரும் சமயக் கற்பனையுடன் நேர்த்தியாக அத்திருவுருவத்தைக் கல்லிலும் உலோகத்திலும் அமைத்தனர்; அவர்களுக்கேற்பக் காமிகாகமும்

1. தமிழகக் கோயிற் கலைமரபு, தஞ்சைச் சரசுவதி மகால் நூலக வெளியீடு, பக். 41.

வழிகோலியது. சிம்மக்ன மூர்த்தியெனவும் வழங்கப்படும் சரபேச மூர்த்தியைக் காமிகாகமம் விளக்குகையில், அதன் திருமேனி பொன்னிற முடையதாய்ப் பறவை போன்றது; சரபமூர்த்தி மேல்நோக்கிய இரு இறக்கைகளையும், சிவந்த இரு கண்களையும், எட்டுக் கால்களை யும், விலங்கினுடைய வாலையும், மனித உடலையும், சிம்மத்தின் தலையையும் மகுடத்தையும், பக்கத் தந்தங்களையும் உடையவராக வும், தம் இரு கால்களால் மனித உடலுடன் கூடிய நரசிம்மத்தினைத் தூக்கிக் கொண்டிருக்கும் நிலையிலும், காண்போர்க்கு அச்சம் விளைவிக்கும் தோற்றமுடையவராகவும் காட்சியளிப்பார் என்று கூறுகிறது.

இதே மூர்த்தியைச் சிற்ப நூல்கள் வேறு வகையாகவும் விளக்கு கின்றன; அவற்றுக்கேற்பச் சிற்ப வடிவங்களும் பல வகைகளாகித் தமிழகத்தில் வழிபாட்டில் உள்ளன.

''கிரீத்துவ நிதி என்னும் நூல், சரப மூர்த்தி முப்பத்திரண்டு கைகளுடன் விளங்குவதாகக் குறிப்பிடுவதுடன் வலக்கைகளில் வச்சிரம், முகதி, அபயம், சக்கரம், சக்தி, தண்டம், அங்குசம், கட்கம் (குத்துவாள்), கதவான்யம் (கதையாயுதம்), பரசு, அக்கமாலை, எலும்பு, தனு (வில்), முசலம் (உலக்கை), அக்கினி ஆகியவைகளை யும், இடக்கைகளில் பாசம், வரதம், கதை, பாணம், துவசம் (கொடி), வாள், பாம்பு, தாமரை மலர், கபாலம், புத்தகம், ஆலம் (வட்ட வடிவக் கருவி), முத்கரம் (அழிக்கும் கருவி) ஆகியவைகளையும் உடைய தாய், ஒரு கை துர்க்கையை அணைத்துக் கொண்டுள்ளதாகவும் விளங்கியது என்று குறிப்பிடுகிறது''[1] என வரும் சிறப்புமிகு குறிப்பு ஒப்பீட்டு நோக்கில் சிந்திக்கத்தக்கது. இந்த இலக்கணங்களைச் சிற்பப் படைப்பில் காட்டுவதென்பது எளிய செயலன்று.

சிலையமைக்க வசதியாகக் கலைத் திறனாய்வாளர் கௌதம நீலாம்பரன் சரபேசரைக் குறித்து எழுதுகையில், ''பாதி பயங்கர மிருக சரீரம், பாதி பயங்கரமான பறவைக் கோலம், எட்டுக் கால்கள், நான்கு கரங்கள், இரு இறக்கைகள், கூர்மையான நகங்கள், கோரைப் பற்கள், யாளியின் முகம் கொண்ட உருவம்தான் சரபமூர்த்தி; சிவபெருமான் இப்படியொரு பயங்கர வடிவம் காட்டி, உக்கிர நரசிம்மரைச் சாந்தப்படுத்தினார். கோலத்தில் தான் கோபமே தவிர, உள்ளத்தில் சாந்தம்''[2] எனச் சுருக்கமாகக் குறிப்பிட்டுச்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு, பக். 674.
2. தெய்வம் பேசுகிறது *(திங்களிதழ்)*, நவம்பர், 2002, பக். 9-10.

சென்றுள்ளார். பெரும்பாலும், ஒருவகைக் கலவை நிலையில் அமையும் இந்த அற்புத மூர்த்தியைச் சிற்பிகள் சிற்சில மாற்றங் களுடன் சிலவகைக் கோலங்களில் உருவாக்கியுள்ளனர்.

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருபுவனம் எனும் திருத் தலத்தில் சரபேசுவரருக்கெனத் தனிச்சன்னிதியுண்டு; அந்தச் சன்னிதியின் நுழைவாயிலருகேயுள்ள பூதேவி, ஸ்ரீதேவி ஆகிய இரு தேவியரின் வனப்புமிகு சிலைகளைப் போல வேறெங்கும் காண முடியாது. இவ்வாறு கலைச் சுவைஞரும் திறனாய்வாளருமாகிய தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் போன்ற அறிஞர்கள் கருதுவர். சரபேசர் சன்னிதியருகே, மக்களைக் கவினுருவத்தால் ஈர்க்கும் தேவியர் சிலைகளும், கருவறையிலே, மக்களின் துயர்களைக் களைந்திடப் பெருங்கருணையால் ஈர்க்கும் - அச்சத் தோற்றமுடைய - சரப மூர்த்தியின் சிலையும், முரண்பாடுகளுக்கிடையே காண வேண்டிய 'தெய்வநலப் புதிர்' எனலாம்.

தாம்பரத்தின் தென்கிழக்கிலுள்ள மாடம்பாக்கம் தேனுபுரீசுவரர் ஆலயத்தில் காணலாகும் சரபேசுவரர் திருமேனியும், திருபுவனத்துச் சரபேசுவரர் திருமேனியும் சிற்பக் கலைச் சிறப்புடையன; இரு மூர்த்தங்களுமே பெரிய வரப்பிரசாத மூர்த்தங்களாகும். சிதம்பரம் நடராசர் கோயிலில் நிருத்த சபையிலுள்ள சரபேச மூர்த்தியும் வரப் பிரசாதியே.

சரபேசர் பற்றிய பெருமைகளை விரிவாகக் கூறும் பல நூல்கள் உள்ளன; அவற்றுள் 'சரப புராணம்' சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சரபேசரை வீரபத்திரருடைய ஆற்றலுக்கும் கருணைக்கும் ஒப்பிட்டுக் கூறுவர். தாராசுரத்திலும் சரபமூர்த்தி காட்சி தருகிறார்.

சென்னைக்கு மேற்கே பூந்தமல்லி எனும் ஊர் உள்ளது. அவ்வூரின் நடுவில் பழமை மிகுந்த வைத்தியநாத சுவாமி கோயில் உள்ளது. அங்குச் சிற்ப எழில் வாய்ந்த பல சிலைகள் காணக் கிடைக் கின்றன. கருவறையைச் சுற்றியுள்ள தூண்களிலெல்லாம் தெய்வத் திருக்கோலங்கள் அற்புதமாகக் காடசியளிக்கின்றன. அவற்றுள் சரபேசுவரர் திருமேனியும் ஒன்று. சரபப் பறவை முகங்கள் இரண்டு புறமும் தனித்தனியே இருக்க, நரசிம்மரைத் தூக்கிக் கொண் டிருக்கும் திருக்கோலம் வேறெங்கும் காணக் கிடைக்காதது எனப் பலரும் கூறுகின்றனர்.

காரைக்குடி நகரச் சிவன் கோயிலில் எழுந்தருளப் பெற்ற சரபேச மூர்த்தி *(திருவாசியுடன் கூடிய)* செப்புத்திருமேனி சிற்ப நேர்த்தி கொண்டது.

2.29 பைரவர்

சிவபெருமானின் வேகமூர்த்தமாகக் கருதப்படும் பைரவர், சிவாம்சம் என்றும், சிவனுக்குப் பாதுகாவலர் என்றும், திருத்தலங் களைப் பாதுகாப்பவர் என்றும் பலபடப் போற்றுகின்றனர். சிவனது நெற்றிக் கண்ணில் தோன்றியவர் எனக் கொண்டு அவரைச் சிவ குமாரர் எனவும் கருதுவர்.

காசியிலிருந்து கன்னியாகுமரி வரையிலுமுள்ள சிவன் கோயில்களில் பைரவர் எனும் காவல் தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். சிற்பக் கலை நோக்கில் பைரவர் திருக்கோலங்கள் பலவாறாக உள்ளன. எனினும், பைரவருக்கான தியான சுலோகப் படி, அவர் செஞ்சடையும், மிகத் தூயவுடம்பும், சிவந்த மேனி யொளியும் கூடிய நிலையில் சூலம் கபாலம் உடுக்கை முதலிய வற்றைத் தரித்தவராய் உலகத்தைக் காப்பாற்றுபவராகவும், நிர்வாணத் துடன் நாய்வாகனமாகக் கொண்டவராகவும், முக்கண்ணுடையவராக வும் ஆனந்த வடிவினராகவும் வழிபடத்தக்கவர்; இந்தப் பொருளில் தியான சுலோக பைரவரஷ்டோத்திரத்தில் குறிப்புள்ளது.

ஆகம அடிப்படையில் பைரவத் திருவுருவங்கள் அறுபத்து நான்கு வகையினவாக அமைந்துள்ளமையும் பைரவக் கோலத்தில் பெருமையையுணர்த்தும். அவ்வாறான மூர்த்தங்களுள் மிகச் சிறப்பினவாக எட்டுத் திருவுருவங்கள் - மகா பைரவர், உக்கிர பைவர், சண்டாள பைரவர், குரோத பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர், சாகா பைரவர் - சிவலோகத்தில் சோதி மயமான கோட்டையில் எட்டு வாயில்களிலும் காவல் புரிந்து வருவதாக அபிதான சிந்தாமணியில் குறிப்பு உள்ளது. இத்திருவுரு வங்களின் அமைப்பினைக் காணும் வகையில், திருவாய்மூரில் பிரதிட்டை செய்யப்பட்டன; எனினும், இக்காலத்தே ஏழு வைரவ மூர்த்திகளே வழிபடும் வண்ணம் அருள்புரிகின்றன.

இஃது ஒரு புறமிருக்க, அஷ்ட பைரவர்களுள் சில மாற்றங் களுடன் தியான சுலோகங்கள் சிறப்பாகக் குறிப்பிடும் க்ஷேத்திர பாலகர், அசிதாங்க பைரவர், குரு பைரவர், குரோத பைரவர், உன்மத்த பைரவர், பீஷண பைரவர், சண்ட பைரவர், சம்மார பைரவர் ஆகியோரையும் மனத்தில் கொண்டு சிந்திக்கலாம்.

பெரும்பாலும் வைரவர் திருமேனிகளைச் சிறப்பாகக் கொண்டு வழிபாடு புரியும் சமய வழக்கம் வட இந்தியாவில் தான் நிரம்ப உள்ளது. தென்னிந்தியப் பெருங்கோயில்களில் பைரவத் திருமேனிகள் காணப்படினும், சிறப்பு வழிபாடு சிவலிங்கத் திருமேனிக்கும், ஆடல் வல்லான் போன்ற திருமேனிகளுக்குமே இருந்து வருகிறது.

யோகத்திற்கும் ஞானத்திற்குமான 'காவற் பொருளாளர்' என்ற உயர் நிலையில் வைரவர் கருதப்படினும், சிற்சில தலங்களில்தான் மிகுந்த சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது.

வட நாட்டைப் பொறுத்த வரையில், வாரணாசி எனும் காசித் திருத்தலத்தில் பாவங்களுக்குத் தண்டனை வழங்கும் கால பைரவர் மிகவும் போற்றப்படுகிறார். ஸ்ரீவாஞ்சியம் *(குடந்தை - நன்னிலம் சாலையிலுளது)* திருத்தலத்தில் யோக பைரவராகத் தண்டத்தைக் கீழே வைத்து விட்டு அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார்; காண்டற்கரிய சிற்பப் படைப்பு இது.

காவல் தெய்வமாக விளங்கும், ''கால பைரவ மூர்த்திக்கு நாய் தான் வாகனம், சூலமும் உடுக்கையும் மழுவும் பாசக் கயிறும் ஏந்திய ஈசனின் திருவடிவமாகவே கால பைர்ரவரைக் கருதுகிறார் கள். அவர் உள்ள இடத்தில் யமபயம் இல்லை என்பது ஐதீகம். நாம் செய்த பாவங்களை அவரிடம் முறையிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் போக்கடித்து விடுவார்''[1] என்ற குறிப்பு மிகவும் மக்களிடையே நம்பிக்கையுடன் பதிந்துள்ளது.

சீர்காழியில் குருலிங்க சங்கம வழிபாட்டுக்கு உகந்த நிலையில் அருள் புரியும் சிவபெருமான், சங்கம நோக்கில் சட்டை நாதராக விளங்குகின்றார்; அவரைப் பைரவத் திருமேனியராகவே போற்றி வருகின்றனர்.

தில்லை நடராசர் ஆலயத்திலும், காசியைப் போலவே கால பைரவர் காவல் தெய்வமாகச் சிறப்புடன் போற்றப்படுகிறார். இஃது ஒருவகையில் சிற்பக் கலை நோக்கில் அமைந்த சமயக் கலை ஒருமைப்பாட்டின் திருவருட் குறிப்பாகவே கொள்ளலாம்.

சிவமூர்த்தங்களுள் பிச்சையுகக்கும் பெருமானாகிய பிட்சாடனரும் பைரவரும் நிர்வாண கோலத்தில் அமைந்திருப்பதைச் சமணக் கோட்பாட்டின் தாக்கம் எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். பைர வரையே சமண தீர்த்தங்கரருடன் இணைத்துக் கூறி வருகின்றனர்.

---

1. ஞானபூமி *(திங்களிதழ்)*, நவம்பர், 1992.

''சமண தீர்த்தங்கரர்கள் இருபத்து நால்வர் சிறப்பாய்ப் போற்றப் படுபவர்கள். இவர்களுள் 23-ஆவது தீர்த்தங்கரராகப் 'பார்சுவநாத்' காசித் தலத்தில் பிறந்தவர். இவருடன் சேர்த்துப் பைரவரையும் ஜைன சமயத்தவர் வழிபடுகிறார்கள்''[1] என வருங்குறிப்பு, ஆத்திக - நாத்திக தரிசனங்களுக்கிடையே ஒருவகைப் பாலமிடுவதிலும் சிற்பக் கலை பயன்பட்டுள்ளதைப் புலப்படுத்தும்.

திருவெண்காடு எனும் சைவத் திருத்தலத்தில் நடராசர் கலியாண சுந்தரர் முதலிய பல சிவமூர்த்தங்கள் *(உற்சவர் நிலையிலும்)* உள்ளன. அவற்றுள் பைரவ மூர்த்தம் தாமரைப் பீடத்தில் எட்டுத் திருக்கைகளுடன் புன்சிரிப்புடன் காட்சியளிப்பது, சிற்பக் கலை நேர்த்திக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கடந்த சில நூற்றாண்டு களாகக் கோயில் திருப்பணிகளை மிகுதியாகச் செய்தவர்கள் நகரத்தார் பெருமக்கள் என்பது பலரும் அறிந்த செய்தி. அவர் களுக்குப் பொதுவாகச் சிவமூர்த்தங்களில் ஈடுபாடு இருப்பினும், பைரவராகிய காவல் தெய்வத்திடம் தனிச் சிறப்பான ஈடுபாடு உண்டு. பிற கோயில்களில் திருப்பணி புரியுமிடத்துச் சிற்பச் சிறப்பினில் நாட்டம் கொள்வது ஒருபுறமிருக்க, நகரத்தார் கோயில்களில் சிறப்புமிகு நாட்டஞ் செலுத்திச் சிற்பக் களஞ்சியங்களாகவே ஆக்கி யுள்ளனர். அவர்கள் கோயில்களில் சிவமூர்த்தங்களுக்கிடையே பைரவ மூர்த்தங்களைப் புதுப்பித்தும் மிக நேர்த்தியாக அமைத்து அழகு வழிபாடு செய்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக, இலுப்பைக்குடிக் கோயிலில் 12-ஆம் நூற் றாண்டைச் சார்ந்த வடுக பைரவரை இரட்டை வாகன பைரவராகக் காணலாம். மேலும், பைரவ சன்னிதி கபோதப் பகுதியின் கூடு களில் பதினைந்து வகையான பைரவ மூர்த்தியின் திருக்கோலங்கள் காட்டப்பட்டுள்ளதைக் கண்டு மகிழலாம்; இது பைரவ சன்னிதி யின் சிறப்புக் கூறாகும். சிற்ப நுணுக்க நோக்கில், கோயிற் கருவறை யினை வலம் வருகையில் சில பைரவ மூர்த்தங்கள் உள்ளன; அவற்றுள் ''பைரவர் ஒருவரின் கையிலுள்ள கபாலத்தில் வெளிப் படும் குருதியை நாவால் நக்கும் பைரவ வாகனம், கால பைரவர்''[2]

---

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் *(திங்களிதழ்)*, ஜனவரி, 1989
2. இலுப்பைக்குடி கோயில், மணிவாசகர் பதிப்பகம், 1988, பக்.

என மா. சந்திர மூர்த்தி எழுதிச் செல்லுங் குறிப்பினை இயைபுடன் சிந்திக்கலாம்.

பாண்டி நாட்டிலுள்ள மாத்தூர், ஆமூர், கொத்தப்புள்ளி ஆகிய திருத்தலங்களிலும் இரட்டை வாகனமுடைய நேர்த்தியான பைரவத் திருவுருவங்களைக் காணலாம்.

2.30. வீரபத்திரர் - சிற்பக் கலைக் கூறுகள்

சிவபெருமானையும், தன் திருமகள் தாட்சாயணியையும் மதியாமல் தக்கன் பெருவேள்வி நடத்துகையில், அதனை அழித்துத் தக்கனையும் அழிக்கும் நோக்கத்தில் சிவபெருமானால் படைக்கப் பட்டவரே வீரபத்திரர்.

பேரூர்ச் சிவாலய முன் மண்டபம், சிதம்பரம் வீரபத்திர சுவாமி கோயில் முதலிய இடங்களிலுள்ள வீரபத்திரர் திருவுருவம் சிற்பச் சிறப்புடன் கூடிய அருள் திருமேனிகளாகும். இந்த மூர்த்தத் தொடர்பில் சில சிறப்புக் குறிப்புகள் வருமாறு:

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் பல இடங்களில் வீரபத்திர சுவாமி கோயில்கள் அமைந்து, இறை வழிபாடு நன்கு நடைபெற்று வருகிறது. வீரபத்திரர் பற்றி ஆராய்ந்து எழுதுகையில் சிவசுந்தரி, ''மயிலாப்பூரில் மாதவப் பெருமாள் கோயிலுக்கு அருகில் வீரபத்திரர் ஆலயம் உள்ளது. இங்கு அபயாம்பிகை என்ற காளி தேவியுடன் வீரபத்திரருக்குரிய பரிவாரங்கள் சூழ வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் சிவபெருமான், துர்க்கை, அனுமன், விநாயகர், ஆதிசங்கர பகவத் பாதர், நவக்கிரகங்கள் ஆகி யோருக்கான சந்நிதிகள் உள்ளன.

தனி ஆலயங்களைத் தவிர மயிலை கபாலீசுவரர், கோவூர் திருமேனீச்சுவரர், ராயபுரம் அங்காளம்மன் மற்றும் மாகாளியம்மன் முதலிய ஆலயங்களில் அவர் பரிவார தெய்வமாக எழுந்தருளி யுள்ளார். மயிலை கபாலீசுவரத்திலுள்ள வீரபத்திரர் எட்டுக் கரங்கள் கொண்டு, அவற்றில் வில், அம்பு, மான், மழு, கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்கள் தரித்துப் பத்திரகாளி அருகில் நிற்கத் தனிச் சந்நிதியில் காட்சியளிக்கின்றார். மயானக் கொள்ளை விழாவில் அங்காள பரமேசுவரியுடன் பத்ரகாளியும் வீரபத்திரரும் வீதியுலா காண்கின்றனர். இந்தக் கோயிலை ஒட்டி அமைந்துள்ள மாகாளியம்மன் ஆலயத்தில் ஏறத்தாழ ஆறடி உயரமும் கொண்ட பெரிய வடிவில் வீரபத்திரர் சிலை உள்ளது; இவருக்கு வெண்ணெய்க் காப்பு வெற்றிலைப் படல்

முதலியன சிறப்பாகச் சாத்தப்படுகின்றன''[1] என்று விளக்கமாக எழுதியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

மேல் மருவத்தூருக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள முருகத்தலம் பெரும் பேர்க் கண்டிகையிலும் வீரபத்திரருக்குத் தனிச் சன்னிதியுள்ளது. சக்தி வாய்ந்த வீரபத்திரருக்கு வடமேற்கு மூலையில் தனிச் சன்னிதியில் பத்திரகாளியும் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். இதனால், வீரபத்திரரும் பத்திர காளியும் தீமைகளை அழித்து நல்லோரைக் காப்பதில் தீவிர நாட்டமுடைய தெய்வங்கள் என்பது தெளிவு.

தாராசுரத்தில் வீரபத்திர சுவாமிக்குக் கோயில் உள்ளது. சப்த மாதர் சிற்பங்களுடன் வீரபத்திரர் சிலையும் வைத்துள்ளதைப் பேரங்கியூர் போன்ற ஊர்களில் காணலாம்.[2]

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தின் கிளி கோபுரத்தின் உட்புறம் பிரம்ம தீர்த்தத்தின் கரையில் மேற்கு நோக்கியவாறு காலாக்கினி உருத்திரருக்கு ஒரு கோயில் உள்ளது; இக்காலத்தில் பைரவர் கோயில் என்பர். பைரவருக்குரிய தோற்றத்தில் காணப்படாமல் திருவெண்காட்டில் அற்புதமாக எழுந்தருளிய அகோர வீரபத்திரரை நினைவூட்டும் வகையில் கையில் சூலாயுதத்துடன், எட்டுத் திருக்கைகள் கொண்டு காட்சியளிப்பதைக் காணலாம்.

அருணாசலேச்சுவரர் ஒப்பரிய நெருப்பு மலையாக - அக்கினி ருத்திரராக - நின்றதை நினைவூட்டும் வகையில் இச்சன்னிதி அமைக்கப் பட்டுள்ளது என்பார்; மேலும், இத்திருமேனி அக்கினி மூலையில் அமைந்திருப்பது சமய மரபுடன் சிந்திக்கத்தக்கது.

கிளிக் கோபுரத்தை நினைவூட்டும் வகையில் வீரபத்திரரின் ஒரு கையில் ஒரு கிளி திகழ்கிறது. கிளிகள் பசுஞ்சோலைக் குறியீடென்றும், உருத்திரர்கள் சோலையில் வசிப்பவர்கள் என்ற தத்துவமென்றும், அஃது இவ்வாறு புலப்படுத்தப்படுகிறதென்றும் சான்றோர் கருதுவர்.

2.31 ஏகபாத மூர்த்தியும் திரிபாத மூர்த்தியும்

உலகத்தைப் படைக்குங்காலம் தொடங்கிச் சர்வ சங்கார காலத்துக்குப் பின்னும் தனித்து நிற்பது சிவபரம்பொருளே; படைத்தலுக்கான நான்முகனையும், காத்தலுக்கான திருமாலையும் தன்னுள் அடக்கி நிற்கும் சிவபெருமானின் ஒருவகைத் தோற்றமே ஏகபாத மூர்த்தி என்பர்.

1. கலைமகள் தீபாவளி மலர், 2002, பக். 53.
2. நேரில் தகவல் தந்தவர் ச. கிருஷ்ணமூர்த்தி தொல்லியல்அலுவலர், சிதம்பரம்.

ஏகபாத மூர்த்தியைச் சிற்பத்தில் வடிக்கக் கொண்டுள்ள தியான சுலோகத்தின் பொருள் வருமாறு: ''கோடி சூரியப் பிரகாசமுடைய வரும், சந்திரனையும் கங்கையையும் தாங்கியவரும், மழு மான் வரதம் அபயம் ஆகியவற்றைத் திருக்கரத்தில் கொண்டவரும், எங்கும் வியாபித்தவரும், வலப்பாகத்தில் கைகூப்பிப் படைக் கருவி களுடன் நிற்கின்ற பிரமனையுடையவரும், இடப்பாகத்தில் திரு மாலையுடையவரும் ஒரே கால் உள்ளவருமான அருள்மிகு ஏகபாத மூர்த்தியைத் தியானிக்கிறேன்.''

சிற்பியர் ஒருமையுணர்வுடன் இந்த மூர்த்தியை வடிக்கையில் மிகவும் விழிப்புடனிருப்பர். சித்தாந்த அடிப்படையில் பேராசிரியர் வி.சா. குருசாமி தேசிகர் சிந்தித்தவராய்ச், ''சிவபெருமான் பிரம விட்டுணுக்களை முன்னே தந்து, அவர்களைப் படைத்தல், காத்தல் தொழில்களைச் செய்வித்து, அவ்வுயிர்களின் இருவினையொப்பு, மலபரிபாகம் வரப்பெற்ற ஆன்மாக்களை வீடுபேறடையச் செய்து, ஏனைய உயிர்களையும் உலகங்களையும் யுகமுடிவில் சங்கரித்து, அதன் பின்னர்ச் சில காலம் சென்றும் மீண்டும் முன்போல் உலகத் தோற்றத்தைப் புரிந்தருளுவார். இதன் ஒடுக்கக் காலத்தில் பிரமன் திருமால் ஆகியோரின் எலும்புகளைத் தரித்தும் அவர்தம் மண்டை யோடுகளை மாலையாகத் தொடுத்தணிந்தும், அவர்தம் சிகைகளைப் பூணூலாகத் தரித்தும் விளங்குவார். அவர்களைத் தம் முத்தலைச் சூலத்தில் ஏந்தி நிற்றலும், அவர்களை நெற்றிக் கண்ணால் சாம்ப லாக்கி அச்சாம்பலைத் திருமேனியில் பூசுதலும் புரிவார். இவ்வாறு செய்தல் அத்தேவர்களிடம் இறைவன் கொண்ட கருணையினாலே யாகும். இவ்வாறு இறைவன் மும்மூர்த்திகளையும் தம்முள் ஒடுக்கி ஏகராய் நின்ற நிலையைக் குறிப்பதே ஏகபாதர் திருவுருவமாகும்''[1] என்று கூறி விளக்குவது அருளாளர் சிலர் எழுதியுள்ள நூல்களின் சாராம்சமாகும். இதனால், கங்காள வேடத்துடன் தொடர்புடைய தாகவும் ஏகபாத மூர்த்தி அமைந்திருப்பது தெரியவரும். இந்த மூர்த்தியின் தோற்ற அடிப்படையிலேயே முத்தலைச் சூலம் அமைந் துள்ளதெனவும் சிந்தித்து மகிழலாம்.

இஃது இவ்வாறிருக்கச் சிவபெருமான், பிரமனையும் திரு மாலையும் தன்னுள் அடக்கித் தோற்றமளிக்கையில் மூன்று கால் களுடன் விளங்குவார்; அந்நிலையில் அவர் திரிபாத மூர்த்தி எனப் பெயர் பெறுவார் என்பர்.

1. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - முதல் பாகத்தில் எடுத்தாளப்பட்ட குறிப்பு *(பக். 667).*

''பிரம்மனும் விஷ்ணுவும் சிவனிடத்தே அடக்கம் எனும் சிவப் பரத்துவத்தை விளக்க எழுந்த திருவுருவம் 'திரிபாத மூர்த்தி'. மான் மழுவேந்தி நிற்கும் சிவனுக்கு ஒரு பாதம், அவர் உருவி லிருந்து முளைத்தெழும் பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் முறையே ஒவ்வொரு திருப்பாதம். இந்தத் திரிபாத மூர்த்தி வடிவம் தமிழ் நாட்டில் இரண்டே இரண்டு இடத்தில் தான் கோயில் கொண் டுள்ளது. ஒன்று திருச்சி திருவானைக் கோயில், மற்றொன்று சென்னையிலிருக்கும் திருவொற்றியூர் கோயில் என்பர்''[1] என வருங் குறிப்பு மேலும் சிந்திக்கத்தக்கது. ஆனால், அறிஞர் பி.வி. ஜெகதீச அய்யர், ''சிற்பக் கலை நோக்கில் மும்மூர்த்திகளும் ஏகபாத மூர்த்தி வாயிலாக ஒரே மூர்த்தியமைப்பில் அமைந்துள்ளனர் என்பது கூறப்படுகிறது. திருவானைக்காவிலுள்ள திருக்கோயிலில் உள்ள ஏகபாதத் திருமூர்த்தி சிற்பக் கலை நோக்கில் மிகச் சிறந்தது''[2] எனக் கூறுவதும் மனங்கொண்டு சிந்திக்கத்தக்கது.

சமயச் சிறப்புடன் அருவப் பரம்பொருளை எடுத்துக் காட்டி உண்மையை மக்களுக்குப் புரிய வைத்தல் கடினமென்பதால்தான், ஏகபாத மூர்த்தியாக உருவத்தில் புலப்படுத்திக் காட்ட முயன் றுள்ளனர்.

யான் கண்ட அளவில், சுதைச் சிற்பப் படைப்பாகச் சில இடங் களில் ஏகபாத மூர்த்தி காணப்படினும், சுருட்டுப் பள்ளியில் காணப் படும் ஏகபாத மூர்த்தி, திருவானைக்கா திருவொற்றியூர் ஆகிய தலங் களில் காணப்படுவதைப் போன்றே எழிற்சிறப்பும் ஒன்றெனவே அருளாளர்கள் போற்றியுள்ளனர் என்பதும் சிந்திக்கத்தக்கது.

ஏகபாத மூர்த்தியின் சிற்பப் படைப்புகள் பலவற்றைக் காண்கையில், திருவானைக்காவிலும் திருவொற்றியூரிலும் காணலாகும் ஏகபாத மூர்த்தி சிற்பங்கள் ஒப்புமைச் சிறப்புடையவை. எம். ராஜகோபாலன், ''திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் காணலாம். மும்மூர்த்திகள் தவிர அவர்களது வாகனங்களான அன்னம், நந்தி, கருடன் ஆகியனவும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. தலையில் ஜடபந்தத்துடன் வலப்புறத்தில் ஒரு யோகி காட்சி தருகிறார். இடது கரத்தில் தண்டமும் உள்ளது. வலது கரத்தைத் திரி மூர்த்திகளைப் போற்றுவது போலவும் வைத்துள்ளார். இது போன்ற மற்றொரு சிற்பத்தைத் திருவானைக் காவல் ஜம்புகேசுவரர் திருக் கோயிலில் அகிலாண்டேசுவரியம்மன் சன்னிதி வெளி மண்டபத்

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, செப்டம்பர், 2002, பக். 20.
2. South Indian Shrine (1920). p. 112.

தூணில் காணலாம்''[1] என்று கூறிக்காட்டுவது மனங்கொள்ளத்தக்க தாகும். நெல்லை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான சிவன் கோயில்களில் ஏகபாத மூர்த்த சிற்பமிருப்பதாகச் சரித்திரச் செம்மல் தமது ''கல்லிடைக் குறிச்சிக் கலைக் கோயில்கள்'' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

2.32. தத்தாத்திரேயர் - புராணப் பின்னணியும் சிற்ப அமைப்பும்

தெய்வத் திருமேனிகளின் தொகுப்புருவங்களுள் ஒன்று தத்தாத்திரேயரின் திருவுருவமாகும். வடநாட்டிலும் தென்னாட்டி லும் வணங்குதற்குரிய திருமேனியாகத் 'திரிமூர்த்தி' வடிவம் இருந்து வருவது பலரும் அறிந்ததே. இதன் வளர்நிலை நோக்கில் திருமால் பெருமையை உணர்த்தும் வகையில், நடுவே திருமாலும், வலப்பக்கம் பிரமனும் இடப்பக்கம் சிவபிரானுமாகத் திருமுகங்கள் கொண்டும், ஆறு திருக்கைகளில் தாமரை, சங்கு, செபமாலை, சக்கரம், உடுக்கை, கமண்டலம், சூலம் ஆகியவற்றை, மும்மூர்த்தி களுக்குரிய சிறப்பான படைக் கலங்களாகக் கொண்டும் விளங்கும் திருமேனியைக் கொண்டவர் தத்தாத்திரேயர். மேலும், தம்மைச் சுற்றிலும் நான்கு மறைகள் இருப்பதைக் குறிக்கும் நோக்கில் நான்கு நாய்கள் சூழ்ந்து இருக்கும் அமைப்பினைக் கொண்டுள்ளது இந்தத் திருவுருவம்; இதனால் அவரே பரப்பிரம்மம் என்பதைப் புலப் படுத்துவதாகச் சமய அறிஞர்கள் கூறுவர்.

தத்தாத்திரேயரின் புராணப் பின்னணி மிக விரிவானது. சுருங்கக் காணின், அத்ரி முனிவருக்கும் பெருங்கற்பரசி அனுசூயைக் கும் திருமகனாக அவதரித்தும், கார்த்த வீரியார்ச்சுனனுக்குப் பயன் படாத இருகைகளுக்குப் பதிலாகத் தம் வல்லமையால் ஆயிரம் கைகள் உண்டாகுமாறு செய்தும், அவனைப் பேராற்றலுடையவ னாக மாற்றியும் பெருஞ்சிறப்பினைக் கொண்டவர்.

தத்தாத்திரேயரின் சுதைச் சிற்பங்கள் சில ஆலயங்களில் காணப்படுகின்றன. இவரைப் பற்றி ஆராய்ந்த குச்சனூர் கோவிந்த ராசன், ''தமிழகத்தில் தத்தாத்ரேயர் வழிபாடு சுசீந்திரத்தில் மிக்ச் சிறப்பாகச் செய்யப்படுகிறது. அங்குச் சுவாமியின் பெயர் 'ஸ்தாணு மாலயன்' ஆகும். மும்மூர்த்திகளின் பெயரும் ஒருங்கே அமையப் பெற்றவராக இவர் திகழ்கிறார். தமிழகத்தில் திருவானைக் காவலிலும், திருவொற்றியூரிலும் தத்தாத்ரேயரின் சிற்பங்கள் காணப்படுகின் றன''[2] என எழுதியிருப்பது மனங்கொண்டு சிந்திக்கத்தக்கது.

1. ஞானமணி *(திங்களிதழ்)*, நவம்பர், 2000, பக். 71.
2. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, பிப்ரவரி, 2002, பக். 40.

சிற்பக்கலை நோக்கில் திருமாலின் திருவுருவங்கள்

திருமால் பரம்பொருளென்பதை நன்குணர்ந்த வைணவ அருளாளர்கள், அவரது பல்வகை உருவ மாட்சியைப் பலரும் நன்கு உணரும் வகையில் சிற்பக் கலையை நாடியுள்ளனர். அந்நிலையில் அர்ச்சை *(சிலை வடிவம்)* பெரிதும் பயன்படலாயிற்று. சிலை வடிவில் வடிப்பதற்காகத் தியான சுலோகம் *('ஸசங்க சக்ரம் ஸகிரீட குண்டலம்' எனத் தொடங்குவது)* உண்டு; அதன் தமிழ் விளக்கம் வருமாறு: 'நீலமேகச் சியாமளனும், சங்கு சக்கரம் தரித்தவனும், கிரீடம் சூடியவனும், காதுகளில் குண்டலங்களை அணிந்தவனும், பீதாம்பரத்தை இடையில் தரித்தவனும், தாமரை மலர் போன்றவையும் நீண்டவையுமான கண்களையுடையவனும், மார்பில் ஆரங்களையும் கவுத்துப மணியையும் தரித்தவனும், சாந்தமுடையவனும், பாம்பைப் படுக்கையாகவுடையவனும், தேவர்களுக்கு அதிபதியும், உலகமளவு வியாபித்திருப்பவனும், ஆகாயத்தையொத்தவனும், நல்ல அங்கங்களையுடையவனும், மகாலட்சுமியின் கணவனும், பிறவியாகிய அச்சத்தைப் போக்குபவனும், ஸ்ரீவத்சத்தையுடையவனும், பரிசுத்தமானவனும், யோகியரின் மனத்தின் பூசிக்கப்படுவதற்காகவே நிறைந்திருப்பவனும் எல்லாவுலகங்களுக்கும் ஒரே நாதனாக, ஒரே காப்பாளனாக விளங்குபவனுமான விஷ்ணுவை வணங்குகின்றேன்.'

இந்தத் தியான சுலோகத்தின் வழி அமைந்திருக்கும் அர்ச்சனையானது மிகவும் தமிழ் வழிபாட்டுக்கு உகந்தது என்பதை அருளாளர்கள் பலர் உணர்த்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ''வேதத்துக்குப் பரத்துவத்தில் நோக்கு; பாஞ்சராத்திரத்திற்கு வியூகத்தில் நோக்கு; இதிகாச புராணங்களுக்கு விபவத்தில் *(அவதாரத்தில்)* நோக்கு; திவ்வியப் பிரபந்தங்களுக்கு அர்ச்சையில் நோக்கு''[1] என வருங் குறிப்பினைச் சிந்தித்துப் போற்றலாம்.

வைணவத் திருத்தலங்களில்-கோயில்களில், தனிப்பட்டோர் மனைகளில் வழிபாடு புரிவதற்கென வைணவ சமயச் சிலைகளை

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, மார்ச்சு, 1973.

வடிக்க முற்பட்ட நிலையில், சாத்திர நூல்களும் புராண - இதிகாசங் களும் பாசுரங்களும் துணை நின்றன; சிறப்பாகத் திருமாலின் பல் வேறு அவதார நிகழ்ச்சிகள் பெரிதும் பயன்பட்டன.

'திருமாலின் அவதாரம்' எனும் நோக்கில் சிந்திக்கையில், அவதாரங்கள் எண்ணிலவாக அமைந்துள்ளன. எனவே, பரிணாம அடிப்படையில் பத்து அவதாரங்கள் *(தசாவதாரம்)* என ஒரு வகை யாக வரையறுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தக் கருத்தை வைணவ ஆழ்வார்கள் தாம் அருளிச் செயலாகிய திவ்யப் பிரபந்தத்தில் நன்கினிது போற்றியுள்ளனர்.

அவதாரம் எனும் போது, மானுட இயற்கையினும் தாழ்ந்த விலங்குத் தன்மை நிலை, மீன் *(மச்சம்)*, ஆமை *(கூர்மம்)*, பன்றி *(வராகம்)* என்னும் அவதாரங்களிலே அமைந்துள்ளது. பிறகு, விலங்குலகு மானுடவுலகுக்கு மாறுபடுந்திறத்தை நரசிம்மாவதாரம் காண்பிக்கிறது. மானுட இயற்கை முழுவளர்ச்சியை பெறாத குட்டை நிலையை வாமனாவதாரம் சுட்டுகிறது. மனிதனது முதல் நிலை, கொடிய விலங்குத் தன்மையான பழிவாங்கும் *(ஆவேச)* நிலை என்பதைப் பரசுராம அவதாரம் அறிவிக்கிறது. தூய நற்பண்புகள் நிரம்பிய மக்கட் பண்பை விளக்கும் வகையில் இராமாவதாரம் அமைந்துள்ளது. இச்சையொன்றும் கொள்ளாமல் உலகிலுள்ள தீய சக்திகளுடன் போராடி வெற்றி பெற்றுக் கீதாசாரியனாக விளங்கு வதைக் கிருஷ்ணாவதாரம் குறிக்கும். எல்லா உயிர்களிடமும் இரக்கம் வேண்டுமென்பதைப் புத்தாவதாரம் புலப்படுத்தும். தீமையை யும் ஒழுங்கின்மையையும் வெட்டி வீழ்த்தும் நோக்கத்துடன் வாளைக் கையிலேந்திக் குதிரை மேலமர்ந்த நிலையில் தோற்றங் கொள்ளவிருப்பது கல்கியவதாரம் என்று அருளாளர்கள் விளக்குவர்.

மேற்காணும் அவதாரங்களுள் புத்த அவதாரத்திற்குப் பதிலாகப் பலராம அவதாரத்தைத் திருமாலின் அவதாரமாகவே கொள்வர். ஒரே காலத்தில் இரட்டை அவதாரங்கள் எடுப்பதும் திருமாலுக்கு உண்டு என்னும் கொள்கைப்படி, திரேதாயுகத்தில் 'இராமனும் பரசுராமனும்' என்றும், துவாபர யுகத்தில் 'கிருஷ்ணனும் பலராமனும்' என்றும் கூறிக் காட்டுவர். நல்லறங்களை அவற்றின் பழைய நிலைக்குக் கொணரவே திருமால் இவ்வாறெல்லாம் அவதரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதே அவதார நோக்கமாகும்.

சிற்பவுலகில் மக்களின் உருவ வழிபாட்டிற் கேற்பப் புராணங் களும் இதிகாசங்களும் தோன்றியமையால், அவற்றின் அடிப்படையில்

பல திருவுருவங்கள் சமயவுலகில் தேவையாயின. அந்நிலையில், சிற்சில வரையறைகளுடன், திருமாலின் அவதாரங்கள் 22 என்றும், 36 என்றும் அருளாளர்கள் கூறுவராயினர்.

யதீந்திர மயதீபிகை என்னும் நூலில், அதனை இயற்றிய ஸ்ரீநிவாசதாசர், திருமாலின் அவதாரங்கள் 36 என்று கூறி பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்; அவை முறையே, "1. பத்மநாபர், 2. துருவன், 3. அநந்தன், 4. சாக்தயாத்மா, 5. மதுசூதனன், 6. கபிலன், 7. விசுவரூபன், 8. விஹாங்கமன், 9. பாதவைக்தரன், 10. தர்மன், 11. வாகீஸ்வரன், 12. ஏகாம்போநிதிசாயி, 13. கமடேஸ்வரர், 14. வராகர், 15. நரசிம்மர், 16. பியூஷஹரணர், 17. ஸ்ரீபதி, 18. காண்டாத்மா, 19. ராகுஜித், 20. காலநேமிக்கா, 21. பாரிஜாத ஹரா, 22. லோகநாபா, 23. சாந்தாத்மா, 24. தத்தாத்ரேயர், 25. நியக்ரோத சாயி, 26. ஏகருங்க தாணு, 27. திரிவிக்கிரமன், 28. நரன், 29. நாராயணன், 30. ஹரி, 31. கிருஷ்ணன், 32. பரசுராமன், 33. இராமன், 34. வேதவித், 35. கல்கி, 36. பாதாள சாயிதர்."[1]

இந்த அவதாரங்களைக் காண்கையில், தசாவதாரங்களே யல்லாமல் பல அவதாரங்களையும் உள்ளுணர்வால் உணர்ந்து அவற்றைச் சிற்பக் கலை வடிவத்தில் அருளாளர்கள் கொண்டு வந்திருப்பர்; ஆனால், அவற்றை இனங்கண்டு விளக்குவதென்பது எளிய செயலன்று.

திருமால் எடுத்த அவதாரங்களுள் பூரணாவதாரங்களான இராமன், கிருஷ்ணன் ஆகியோரும், வேக *(உக்கிர)* அவதாரமான நரசிம்மருமே, பற்பல சிலைகளில் வடிவமைக்கப்பட்டு அவர்கள் வழிபாட்டில் உள்ளனர். வராக அவதாரமும், வாமனருடன் தொடர்புள்ள திரிவிக்கிரம அவதாரமும் முறையே ஸ்ரீமுஷ்ணத்திலும் திருக்கோயிலூரிலும் சிறப்புடன் வழிபடப்படுகின்றன. எனினும், தசாவதாரங்களையும் சிலையுருவில் காணும் முயற்சியாக ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற சில திருத்தலங்களில் அவற்றைக் கண்டு மகிழலாம்.

திருமால் ஒரே பரம்பொருளே என்றாலும், அடியவர்கள் தம்மைத் தத்தம் நிலைக்கேற்ப வழிபாடு - கைங்கரியம் - புரிந்து உய்வதற்காகப் பல திருவுருவங்கள் கொள்கின்றார்; இதனைத்,

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, ஜனவரி, 1966 *(ந.ரா. முருகவேள் எழுதிய கட்டுரை)*.

"தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர் - தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னாம்"

என வரும் அருளிச் செயல் பாடலால் உணர்ந்து கொள்ளலாம்.

விஷ்ணு வழிபாடு சீனா, ஜப்பான், சயாம், சுமத்ரா, ஜாவா போன்ற அயல்நாடுகளிலும், வட இந்தியாவிலும் பலபடியாக உண்டு; ஈண்டுத் தமிழ் நாட்டிலுள்ள திருமாலவதார வடிவங்கள் சிலவற்றை மட்டும் காண்பது இயைபாகும். இது குறித்து என்.எஸ். தாத்தாச்சாரியார் எழுதுகையில், "தமிழ்நாட்டில் இன்று உள்ள திருமால் உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை களே. பிருகத் சம்ஹிதை *(கி.பி. 400)* உருவ இலக்கணங்கள் ஐந்து செய்யுள்களிலே கூறப்பட்டுள்ளன. அவைகளாவன: திருமாலின் திருமேனியில் கைகள் எட்டு அல்லது நான்கு அல்லது இரண்டு இருக்கலாம். எட்டுக் கைகளானால், வலக்கைகளில் கத்தி கதை அம்பும், இடக்கையில் வில் கேடயம் சங்கு சக்கரமும், ஒரு வலக்கை அபயமுத்திரையுடனும் இருக்கும். நான்கு கைகளானால், வலக்கை அபயமுத்திரையுடனும் கதையுடனும், இடக்கை கைகளில் சங்கு சக்கரமும் இருக்கும். இந்த வடிவங்கள் மார்பில் ஸ்ரீவத்சம் என்ற மருவுடனும், கௌஸ்துபம் என்ற ஆபரணத்துடனும் காதுகளில் கடுக்கன்களும், தலையில் முடியும் *(கிரீடமும்)* துலங்க இருக்க வேண்டும். திருமுக மண்டலம் கம்பீரமாகவும் புன்சிரிப்புடனும் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

பழைய விஷ்ணு சிற்பங்களுக்குச் சீதேவி, பூதேவி என்ற இரு பிராட்டியர்கள் மருங்கே ரஇருப்பதில்லை. ஆயசீர்ஷம் என்ற என்னும் பாஞ்சராத்திர நூலில் நான்கு கைகளுடன் கூடிய விஷ்ணு வடிவம் கீழ்வருமாறு அமைக்கப்பட வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது.

வலப்பக்கத்து மேல் கையில் சக்கரம், கீழ்க்கையில் தாமரைப் பூ, இடப்பக்கத்து மேல் கையில் கதை, கீழ்க்கையில் சங்கு, இரு பக்கமும் ஸ்ரீயும் புஷ்டியும், கையில் தாமரைப் பூவும் வீணையும் பிடித்து விஷ்ணுவின் தொடை அளவிற்குச் சற்றுச் சாய்ந்திருக்கும் என்பதாகும். மற்றும் இதைப் பற்றிய சிறப்புகளும் இயல்புகளும் மந்தனாவின் 'ரூபமந்தனம்', ஹேமாக்ரியின் விரத காண்டம் போன்ற நூல்களில் காணப்படும். சில இடங்களில் நிற்கும் விஷ்ணு மூர்த்திகள் நான்கு முகங்களுடனும் காணப்படும். முக்கியமாக இந்தியாவின்

வடகோடிப் பகுதிகளிலும், கீழ் மத்தியப் பகுதிகளிலும் ஓரளவிற்கு அவைகள் காணப்படும். அவைகளில், சில நான்கு, எட்டு, பன்னிரண்டு கைகள் கொண்டவை... ... விஷ்ணு தர்மோத்திரம் என்ற நூலின் கருத்துப்படிக்கு விஷ்ணு கருடன் மேல் நான்கு முகங்களுடனும், எட்டுக் கைகளுடனும் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அமையலாம். கிழக்கு முகம் சாந்தம் உள்ளதாகவும், தெற்கு முகம் நரசிங்க முகமாகவும், வடக்கு முகம் வராக முகமாகவும் *(பன்றி அல்லது காண்டாமிருக வடிவம் என்றும் சிலர் கூறுவதுண்டு.)* காணப்படுகின்றன. அடுத்தபடியாக, உட்கார்ந்திருந்த விஷ்ணு சிற்பங்கள் நிற்கும் கோலங்களைவிடக் குறைவாக உள்ளன. அவைகள் ஆதிசேஷன் மீதோ, கருடன் மேலோ, பத்மாசனத்திலோ, தனித்தோ அல்லது தேவிமார்களுடனோ காணப்படும்''[1] என்று விளக்கி எழுதுவது சிற்பக்கலை நோக்கிலும் சமய நோக்கிலும் கொள்ளத்தக்க அருங்குறிப்பாகும்.

திருமாலுக்குக் கிடந்த, அமர்ந்த, நின்ற, நடந்த திருக்கோலங்கள் உண்டெனினும், பெரும்பாலும் அமர்ந்த அழகிய வடிவங்களே மிகுதியாகும்; சயனத் திருக்கோலங்கள் அவ்வளவிற்குக் காண இயலாது. சயனத் திருக்கோலங்கள் அரியவையேயெனினும் அவை எட்டு வகைப்படும். அவை உத்தியோகம், தருப்பசயனம், புஜங்க சயனம், போகசயனம், மாணிக்க சயனம், வடபத்திரசயனம், வீர சயனம், தலசயனம் என்பவையாகும். இவற்றின் தோற்றங்களில் சிற்பக் கலை நுணுக்க வேறுபாடுகள் உண்டு.

''பள்ளி கொண்ட அரங்கநாதர் வடிவம் சில உண்டு. அந்த மூர்த்திகள் பிரளய காலத்தில் உண்டாகும் சக்திகள் யாவும் பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணனை அடைந்து, மறுபடியும் அவன் சங்கற்பத்தால் இந்தச் சக்திகள் யாவும் தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும்''[2] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

1.1 சிற்பக் கலையில் மச்சாவதாரம்

திருமால் உலக உய்திக்காக எடுத்த பல அவதாரங்களுள், முதற்கண் தோன்றிய அவதாரமாக மச்ச அவதாரம் போற்றப்படுகின்றது.

---

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, மார்ச்சு, 1972, பக். 290-291.
2. மேலது, பக். 291.

வைவசுத மனுவின் காலத்தில் நிகழ்ந்ததாகப் போற்றப்படும் மச்ச அவதாரம், உலகுயிர்களின் மாசுகளை நீக்கி மேம்படுத்தும் நோக்கில் அருள் புரிவதாகும். முன்னொரு காலத்தில், திருமறைகளை நான்முகன் ஓதிக்கொண்டிருந்த போது அயக்ரீவன் என்ற கொடிய அசுரன் அவற்றைத் திருடிக் கொண்டு சென்று கடலின் அடியில் ஒளிந்து கொண்டான்; திருமால் மச்ச அவதாரம் எடுத்து மறைகளை மீட்டருளினார் என்பது புராணப் பின்னணி. இக்கருத்தினைத் திரு மங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில்,

''முந்நீரை முன்னாள் கடைந்தானை மூழ்த்தநாள்
அந்நீரை மீனாய் அமைத்த பெருமானை'' *(6:8:2)*

எனக்குறிப்பாகப் பாடிச் சென்றுள்ளார்.

''திருமாலின் மச்ச அவதாரம் சிற்பங்களில் வழங்கப்படும் பொழுது, மீன் போன்றோ அல்லது தலைப்பகுதி ஆண் வடிவையும் அடிப்பகுதி மீன் வடிவையும் கொண்டோ அமைக்கப்படும். நான்கு கைகளைக் கொண்டு விளங்கும் இவருடைய இரு கைகளில் சங்கும் சக்கரமும், மற்றிரண்டு கைகளில் அபயமுத்திரையும் வரத முத்திரை யும் காணப்படும். தலையில் கிரீட மகுடத்தையும் இவர் அணிந் திருப்பார்''[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

திருமால் திருத்தலங்களில் கோயிலின் கருவறையில் மச்ச அவதாரத்தினை அமைப்பது அபூர்வமாகும். திருவள்ளூர் மாவட்டம் நாகலாபுரத்தில் அமைந்துள்ளது வேத நாராயணப் பெருமாள் திருக் கோயில். ''இந்தக் கோயிலின் கருவறையில்மச்சாவதார மூர்த்தியாக, ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கும் சிறப்புமிகு சிலையைக் காணலாம். இந்தப் பெருமாளுக்கு மேல் திருக்கைகள் சங்கும் சக்கரமும் ஏந்திக், கீழ்த் திருக்கைகளில் அபய கடிமுத்திரை தாங்கியும் அமைந்துள்ளன. ஐந்து அடி உயரமுள்ள இத்திருவுருவத்தின் இடைக்குக் கீழேயுள்ள பகுதி மச்சாவதாரத்திற் கேற்ப மீன் வடிவமாகவுள்ளது. கோயிற் கருவறையில் இது போன்ற திருமேனிகள் தமிழகத்தில் காண்பது அரிது''[2] எனவருங் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

1.2. சிற்பக் கலையில் கூர்மாவதாரம்

முன்னொரு காலத்தில் திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர் களும் கடைந்த காலத்தில், மந்தர மலை மத்தாகவும் வாசுகி எனும்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக். 856.
2. தினபூமி - ஆன்மீக பூமி, 1.1.2000.

நாகப்பாம்பு கயிறாகவும் பயன்பட்டன; பேருருவாக இருந்த மந்தர மலையைத் தாங்கும் வலிமைக்குத் திருமாலே கூர்மமாக - ஆமையாக - அவதாரங் கொண்டு தாங்கினார் என்பது புராணம். அந்தப் பின்னணியை மனத்துட் கொண்டு, ஆழ்வார்களும் பிற அருளாளர்களும் கூர்ம அவதாரத்தைப் போற்றிக் கொண்டாடலாயினர். எடுத்துக்காட்டாகத் திருமங்கையாழ்வார்,

"செருமிக வாளெயிற்று அரவொன்று சுற்றித்
திசைமண்ணும் விண்ணு முடனே
வெருவர வெள்ளை வெள்ளமுழுதுங் குழம்ப
இமையோர்கள் நின்று கடையப்
பருவரை யொன்று நின்று முதுகிற்
பரந்து சுழலக் கிடந்து துயிலும்
அருவரை யன்ன தன்மை யடல்
ஆமையான திருமால் தமக்கோ ரரணே"[1]

எனப் பாடியருளியமையைச் சிந்திக்கலாம்.

பரிணாம வளர்ச்சியில் கூர்மாவதாரமும் கூர்ந்து நோக்கத் தக்கது; ஆதலின், சிற்பக் கலைப் படைப்பிலும் இஃது இடங் கொண்டது.

மச்சாவதாரம் போன்றே கூர்ம அவதாரத்திலும் தலைப்பகுதி திருமாலின் சிறப்பையுணர்த்தும் வகையில் ஆடவர்முகங் கொண்டது. ஆனால், கீழ்ப்பகுதி ஆமை வடிவத்துடன் காணப்படும். இந்த அவதாரத்திலும் திருமாலுக்கு நான்கு திருக்கைகள் உண்டு; சங்கு சக்கரப் படைக்கலன்கள் உண்டு.

ஆமையைப் போன்று பாதுகாப்பாகப் புறத்தீங்குகள் தம்மைப் பற்றாமலிருக்க ஐம்புலனடக்கத்தை மக்கள் கொள்ள முற்படின் வலிமை பெருகிப் பெருஞ்சாதனையை அடக்கமுடன் புரிந்திடலாம் என்பது தத்துவப் பயனாகக் கொள்வர்.

1.3. வராக அவதாரம் - சிற்பக் கலைப் படைப்பும் பெருமையும்

வைணவ சமயத்தில் திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்றாகப் போற்றப்படுவது வராக அவதாரமாகும். உலகியலில் தாழ்ந்த விலங்காகிய பன்றி, அருளியலில் மிக உயர்த்திப் போற்றப் படும் நிலையில் கடவுளின் அவதாரமாகவே வணங்கப்படும்

1. பெரிய திருமொழி, 11-ஆம் பத்து, 4-2.

சிறப்பினை அடைகிறது; ஆனால், தெய்வ நலவுருவமாக வராகம் அமையுங்கால், அதற்குரிய அங்க அமைப்புகள் வேறாகி உயர்ந்திடும்.

பரிணாம நோக்கில் மீன் ஆமை பன்றி ஆகிய திருமாலவதாரங்கள், மானுட வடிவம் பெறுதற்காக அமைந்த படிநிலைகள் எனக் கூறுவர். சிற்பக் கலைப் படைப்பிற்கு அடிப்படையாகவுள்ள புராணப் பின்னணி, வராக அவதாரத்தின் மிக உயர்ந்த உயிர்க்குயிரான கோட்பாட்டைக் கொண்டுள்ளது.

இரணிய கசிபு என்பவன் நரசிம்மாவதாரத்துக்குக் காரணமாகியதே போல, அவன் உடன் பிறந்தானாகிய இரணியாட்சன் திருமால் வராக அவதாரமெடுக்கக் காரணமாகின்றான்.

இரணியாட்சன் பூமியைக் கவர்ந்து கொண்டு கடலினுட் சென்று மறைந்து விடவே தேவர் முனிவர் முதலியோர் வேண்டுகோளினை ஏற்றுத் திருமால் வராகவுருவில், பூமியை மீட்கக் கடலுக்குள் சென்று தம் கோட்டினால் எடுத்துக் காப்பாற்றுகிறார். இஃது ஒருபுறமிருக்க, டாக்டர் ந. சுப்புரெட்டியார், வராகவதாரத்திற்கான வேறொரு புராண நிகழ்ச்சியைக் கூறியுள்ளார்; அவர், "இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பது சுவேத வராக கல்பம். இதற்கு முந்தியது பாத்மகல்பம்; அக்காலத்தில் எழுந்த பிரளயத்தின் இறுதியில் பரம்பொருளாகிய திருமால் ஏகார்ணவமான பிரளய நீரில் முழுகியிருந்த பூமியை மேலே எடுக்க நினைத்து வராகவதாரத்தைச் செய்தருளிக் கோட்டு நுனியில் பூமியை எடுத்து வந்தனர் என்ற வரலாறு அறியத் தக்கது"[1] என எழுதிச் செல்வதும் சிந்திக்கத்தக்கது.

வைணவ ஆழ்வார்கள் பலரும் வராகவதாரப் பெருமையைப் பெரிதும் போற்றிப் பாடியுள்ளனர். அந்த அருளாளர்கள் வாய்மொழியையும் ஆகமக் குறிப்புகளையும் மனத்துட் கொண்டு, சிற்பியர் மிக நேர்த்தியாகப் பல திவ்ய தேசங்களில் வராகவதாரச் சிலைகளைப் படைத்துள்ளனர். ஸ்ரீமுஷ்ணம் போன்ற சில திருத்தலங்களில் பூவராக மூர்த்தியைச் சுயம்பு *(தான் தோன்றி)* மூர்த்தியென்றும் கூறி வருகின்றனர்.

வராக மூர்த்திகளுள், பூவராகன், ஆதிவராகன் (யக்ஞ வராகன்), பிரளய வராகன் என வகைமைத் திருப்பெயர்கள் உண்டு. பொதுவாக, ஆலயங்களில் காணலாகும் தசாவதார மண்டபத் தூண்களில், வராக அவதார எழிற்கோலத்தைக் கண்டு களிக்கலாம். வரர்கவதாரச்

1. சப்தகிரி *(திங்களிதழ்)*, ஜுன், 1990.

சிற்பங்கள் மாமல்லபுரம், ஸ்ரீமுஷ்ணம், நாகணபுரம் ஆகிய தலங்களில் சிறப்புற அமைந்துள்ளன. மேலும், சிறப்புக் குறிப்பாகத் திருவிடந்தை அருள்மிகு இலட்சுமி வராக மூர்த்தியை மனங் கொள்ளலாம். நித்திய கலியாணக் கோலம் பூண்டு, வராக மூர்த்தி மகாலட்சுமியை எடுத்து வருங்கோலம் வியத்தகு சிற்பக் கலைப் படைப்பு என்று வைணவப் பெரியோர்கள் போற்றி நிற்பர்.

1.3.1. ஸ்ரீமுஷ்ணம் பூவராக மூர்த்தி கோயில் - சிற்பவளக் கூறுகள்

ஸ்ரீமுஷ்ணத் தலப்பெருமையைப் பூவராகப் பெருமானுடன் சார்த்திப் பிரம்ம புராணம் வராக புராணம் முதலிய பல நூல்கள் கூறுகின்றன. பூமாதேவியின் விருப்பத்திற்கிணங்கப் பூவராக மூர்த்தியாக எழுந்தருளியுள்ள சிறப்புடைய திருத்தலம் இஃது என்பர்.

வராகப் பெருமான் *(மூலவர்)* மேற்கு நோக்கியவாறு நின்ற நிலையில் அவரது திருமுக மண்டலம் தெற்கு நோக்கியுள்ளது. இடுப்பில் ஊன்றியுள்ள திருக் கைகளில் சங்கும் சக்கரமும் மறைந்துள்ளன. அவரின் திருவடியருகே நின்ற கோலத்தில் ஸ்ரீதேவியாக அமைந்திருப்பது மிகச் சிறப்புடையது. இவரே அர்த்த மண்டபத்தில் யக்ஞ வராக மூர்த்தியாக இரு தேவியருடன் காட்சியளிக்கிறார். அம்புஜவல்லித் தாயாரின் விருப்பப்படி இவ்வாறு யக்ஞ வராகப் பெருமானாகக் கோலங் கொண்டதைத் தலபுராணம் கூறும்.

''ஆதிவராகர், கண்ணன், யோக நாராயணர் *(தேவியருடன்)*, அம்புஜவல்லித் தாயார், ஆண்டாள், வேணுகோபாலன், விஷ்வக் சேனர், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள், திருக்கச்சி நம்பிகள், நம்மாழ்வார் ஆகிய அனைவரையும் ஆலயத்தின் உட்பகுதிகளில் தரிசிக்கலாம். பெருமானின் திருக்கலியாணத்திற்குப் பின்னர் அம்புஜவல்லித் தாயாரின் தோழிகளாகத் திகழ்ந்த சப்த கன்னியர்களுக்கும் 'குழந்தையம்மன் ஆலயம்' என்ற தனிச்சந்நிதி உள்ளது. பிள்ளைப் பேறு வேண்டுவோர் இச்சந்நிதியில் சகுனம் கேட்பார்கள்''[1] என்று எம். இராஜகோபாலன் எழுதிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது. எப்படியோ இவ்வாறான தெய்வ நலச் சிற்பங்கள் பெரிய மூர்த்திகரம் கொண்டு மக்களுக்கு நலம் பயக்கின்றன என்பது தெளிவு.

---

1. ஆன்மீகம் தழைக்கும் அரும்பெரும் ஆலயங்கள், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக். 122.

இக்கோயிலிலுள்ள 'புருஷ சூக்த மண்டபம்' ரதம் போன்ற அமைப்புடன் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டது.

விசயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், உடையார் பாளையம் ஜமீன்தார்கள் ஆகியோரின் திருப்பணிகளைப் பெற்ற சிறப்புடையது இவ்வாலயம். வராகத் திருத்தலங்களுள் முதன்மைச் சிறப்புடையதாக ஸ்ரீமுஷ்ணம் போற்றப்படினும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடியில் வராக மூர்த்தி தன் பிராட்டியாரோடு சிறிய வடிவில் வீற்றிருப்பதால் அதுவும் மிகச் சிறப்புடையது. திருமால் தானே ஒரு பிரம்மச்சாரியாக வந்து காலவ மகரிஷியின் பெண் மக்கள் முந்நூற்று அறுபதின்மரையும், நாளும் ஒரு மகளைத் திருமணம் புரிந்து கொண்டார். கடைசியாகப் பெண் மக்கள் முந்நூற்று அறுபதின்மரையும் மணந்தபின், அனைவருக்கும் வியப்பூட்டும் வண்ணம் ஒரே கன்னிகையாக்கி இடப்பக்கத்தில் வைத்துக் கொண்டு வராகத் திருவுருவத்துடன் காட்சியளிக்கிறார் என்பது புராணக் குறிப்பு. கௌசிக புராண வரலாற்றைப் பிராட்டிக்கு உரைத்தருளியதாகவும் கூறுவர். இத்தகைய சிறப்பு ஸ்ரீவில்லிபுத்தூராருக்கு உண்டென்பர் வைணவப் பெருமக்கள்.

1.4. நரசிம்மாவதாரம்

வராக அவதாரத்தால் திருமால் இரணியாட்சனைக் கொன்ற நிலையில், அவன் தம்பி இரணியகசிபை நரசிம்மாவதாரம் எடுத்துக் கொல்ல வேண்டியவராகிறார். இரணியகசிபுக்கு மகனாகத் தோன்றிப் பிரகலாதன் திருமாலடியவனாகக் குழந்தைப் பருவத்திலிருந்தே காணப்பட்டான். அவனைத் தன் மகனென்றும் பாராமல் இரணிய கசிபு பலவகைகளிலும் அச்சுறுத்திப் பார்த்தும் அவனது பக்தியை மாற்ற முடியவில்லை. எங்கும் நிறைந்தவர் திருமால் என்பதை நம்பாமல், இரணியகசிபு ஒரு தூணைக் காட்டிப் பிரகலாதனிடம், ''உன் திருமால் இத்தூணில் இருக்கிறானா?'' என வினவியதும், ''அவன் தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான்'' எனப் பதிலளிக்கிறான். இதனை மெய்ப்பிக்கத் திருமால் நரசிம்மராக வடிவெடுத்து இரணியகசிபைக் கொன்று, பிரகலாதனைக் காக்கிறார் என்பது வரலாறு.

பிரகலாதனுக்கு மிக எளியனாக இறைவன் தோன்றிய 'சௌலப்யத்தை'ப் போற்றி ஆழ்வார்களும் பிற அருளாளர்களும் கொண்டாடுவாராயினர். இதனைச் சிற்பக் கலை வாயிலாகவும் சிற்பியர் புலப்படுத்துவாராயினர்.

நரசிம்ம அவதாரம் நடைபெற்ற திருவிடமாகத் திருக்கோட்டியூர் எனும் திவ்ய தேசம் போற்றப்படுகிறது; அதற்கேற்பப் புராண நிகழ்ச்சிச் சிற்பங்களும் அங்கு உள்ளன.

அடியவர்கள் தம்மை உற்றிழிக் காத்தருளும் நரசிம்ம மூர்த்தியைப் பல்வேறு கோணங்களில் பல்வேறு திருநாமங்களுடன் போற்றத் தலைப்பட்டனர். சமயக் கலைஞர்கள், சிற்பத்தில் வியத்தகு வண்ணம் உருவாக்க முனைந்துள்ளனர். சிங்கப் பெருமாளின் திரு வுருவங்களை,

1. இலட்சுமி நரசிம்மர் - அகோபிலம்
2. யோக நரசிம்மர் - சோளிங்கர், சிந்தலபூடி
3. சந்திராந்த நரசிம்மர் - நாமக்கல்
4. உக்கிர நரசிம்மர் *(அல்லது)* இரணிய சம்மார உக்கிர நரசிம்மர் - திருவரங்கம்
5. வராக நரசிம்மர் - சிம்மாசலம்
6. பிரகலாத நரசிம்மர் *(அல்லது)* பிரகலாத வரத நரசிம்மர் - கீழ் அகோபிலம்
7. பர்முலிதி நரசிம்மர் - சிங்கவேள் குன்றம்
8. பார்க்கவ நரசிம்மர் - அகோபிலம்
9. காரங்கி நரசிம்மர் - அகோபிலம்

என வகைப்படுத்தி அடியவர்கள் வழிபாடு புரிகின்றனர். சிங்கவேள் குன்றம் எனும் திவ்விய தேசத்தில் நவநரசிம்ம மூர்த்தங்களைக் கண்டு களிக்கலாம்.

வைணவ அடியவர்கள் வேறொரு நோக்கிலும் நரசிம்மரை துவாதச மூர்த்திகளாக வழிபாடு புரிந்து வருகின்றனர். அத்தகைய மூர்த்திகளும் திருமால் திருத்தலங்களில் போற்றத்தக்கவர்களாகக் கொண்டாடப் படுகின்றனர்.

1. யோக நரசிம்மர் - சோளிங்கர்
2. தெள்ளிய சிங்கர் *(யோக நரசிம்ம திருக்கோலம்)* - திருவல்லிக் கேணி
3. சாந்த நரசிம்மர் - திருநீர்மலை
4. படலாத்ரீ நரசிம்மர் - சிங்கப் பெருமாள் கோயில்
5. ஸ்தாரக நரசிம்மர் - யானை மலைக் குகைக்கோயில் *(மதுரை யருகில்)*

6. பானக நரசிம்மர் - மங்களகிரி

7. இரணிய சம்மார உக்கிர நரசிம்மர் - திருவரங்கம்

8. ஸ்ரீதேவி பூதேவி சமேத நரசிம்மர் - மங்களகிரி

9. இலட்சுமி நரசிம்மர் - அகோபிலம்

10. யோக நரசிம்மர் - சிந்திலபூடி

11. சுதர்சன நரசிம்மர் - தாடிக் கொம்பு

12. பிரகலாத வரத நரசிம்மர் - கீழ் அகோபிலம்

இவ்வாறெல்லாம் நரசிம்மத் திருமேனிகள் பலவாக அமைவதற்கு அடிப்படையாகப் பெரியாழ்வார் அருளிய பெரியாழ்வார் திருமொழி, நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி, கம்பராமாயணம் - இரணியன் வதைப் படலம், திருவரங்கத்து மாலை முதலியவற்றிலுள்ள குறிப்புக்கள் தியான சுலோகங்கள் போலத் துணை புரிந்துள்ளன.

நரசிம்மாவதாரத்துப் பல எழில் தோற்றங்கள், அடிப்படையில் வேக மூர்த்தங்களே; எனினும், அருளாளர்களுக்கும் அடியவர்களுக்கும் திருவருள் புரிந்து காப்பாற்றிய நிலையில் 'சௌலப்யச் சிறப்பு' உடையவை; இவ்வுண்மையையும், இராமர், கிருஷ்ணர் ஆகியவர்களுடன் நரசிம்மரையும் பூரண அவதாரம் என்ற தெளிவையும் அருளாளர்கள் பலரும் உணர்ந்து, பலருக்கும் உணர்த்தியுள்ளனர்.

சில திருத்தலங்களில் மட்டும், காணலாகும் நரசிம்மத் திருவுருவங்களின் சிற்ப எழில் பற்றிய சில குறிப்புக்களைக் காண்போம்.

அ) நாமக்கல் குடைவரைக் கோயில்

நாமக்கல் குடைவரைக் கோயிலைச் சிற்பக் களஞ்சியம் எனக் கொண்டு ஒரு நூலே எழுதலாம்; அந்த அளவுக்குச் சிற்பங்கள் நிறைந்து வைணவ சமயத்தின் மேம்பாட்டைப் புலப்படுத்திக் காட்டுகின்றன.

குடைவரைக் கோயில் 1500 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப் பட்டதெனக் கருதுவர். அத்தகைய கோயிலில் கருவறையிலே வீற்றிருப்பவர் சந்திராந்த நரசிம்மர் என்றும், இலட்சுமி நரசிம்மர் என்றும் கூறுவர்.

நரசிம்மரின் கம்பீரமான சிம்மத் திருமுகம் அற்புதக் கலைப் படைப்பு. வீராசனத்தில் சிங்கப்பிரான் வீற்றிருக்க, இருபுறமும் சூரிய சந்திரர்களும், இடப்புறம் சிவனும், வலப்புறம் பிரமனும், சனக சனந்தன முனிவர்களும், இரணிய சம்மாரம் நடந்துவிட்டது என்பதை அறிவிப்பவர்கள் போன்று காட்சியளிக்கின்றனர்.

இந்த நரசிம்மர் கருவறையிலேயே ஆதிசேடன், சிங்கப் பிரானுக்குக் குடையும் ஆசனமுமாக அமைந்திருக்க, அந்தப் பிரான் அதன் மீது கால் வைத்து அமர்ந்து கொண்டு, இருடியரின் குறையைச் செவிமடுப்பது போலக் காட்சியளிக்கிறார்; கீழே பூமிதேவியும் மார்க்கண்டேயரும் திருவடியை துதிக்கும் நிலையில் காட்சியளிக் கின்றனர்.

அந்தச் சிற்பத் தொகுதிக்கு அருகே இரணியவதமே நடைபெறு வதைக் காட்சியாக்கிக் காட்டியுள்ளனர் சிற்பியர். ஆவேசமாகக் காட்சியளிக்கும் நரசிம்ம மூர்த்தியின் கோபுரக் காட்சிக்கு ஈடே கூற முடியாத வகையில், அவருடைய எட்டுத் திருக்கைகளிலும் படைக் கருவிகள்; ஆனாலும், அவருடைய கூரிய கை நகங்களே இரணி யனின் குடலைக் கிழிக்கின்றன. இரணிய வதம் நடக்குங்கால், பிரகலாதன் தன் கூப்பிய கரங்களுடன் இந்தத் 'துஷ்ட நிக்கிர கத்தைக்' கண்டு கொண்டிருப்பதாகக் காட்சியில் அமைத்துள்ளனர் சிற்பியர்.

நரசிம்மருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், கருவறையின் மேல் சுவரில் மூலவருக்கு வலப்பக்கம் திருமாலின் வராக அவதாரக் காட்சியும், அடுத்து மற்றுமொரு கோட்டத்தில் வாமன அவதாரக் காட்சியும் சிற்ப நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

ஆ) திருவாலி

சீர்காழிக்குத் தென்கிழக்கே 14 கி.மீ. தொலைவிலுள்ள 'திருவாலி' எனும் திவ்யதேசத்தில், இலட்சுமி நரசிம்மன் திருக்கோலம் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் நிலையில் உள்ளது. திருமகளை அணைத்துக் கொண்டு நரசிம்மர் காட்சி யளிக்கையில், அந்தப் பிராட்டி அபய முத்திரையுடன் அவரது ஒரு பக்கமாக அமர்ந்திருப்பது வேறு எந்தத் திவ்ய தேசத்திலும் காணக் கிடைக்காத காட்சியாகும், அந்தத் தாயாரின் திருப்பெயர் அமிருத கடவல்லி. மேலும், திருவாலியைச் சுற்றி நான்கு நரசிம்மத் திருத் தலங்கள் உள்ளன; அவை வருமாறு:

உக்கிர நரசிம்மர் - திருக்கிறையலூர்

வீர நரசிம்மர் - மங்கைமடம்

யோக நரசிம்மரும் இரணிய நரசிம்மரும் - திருநகரி

இவ்வாறெல்லாம் நரசிம்ம மூர்த்தியை மிகவும் கொண்டாடுவ தற்குக் காரணம், பெருமாளின் சௌலப்பியம் *(அடியார்க்கு எளியனாந் தன்மை)* என்பர்.

தமிழகத்தில் திவ்ய தேசங்கள் பலவற்றுள் நரசிம்மர் திரு மேனிகள் (கல்லாலும் பஞ்ச லோகத்தாலும் வடிவமைக்கப்பட்டவை) பல்வேறு திருக்கோலங்களில் காணக் கிடைக்கின்றன. எனினும், கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலின் கருவறை யினைச் சுற்றியுள்ள தேவ கோட்டங்களில் காணலாகும் சில நரசிம்மத் திருவுருவங்கள் மிக நேர்த்தியான சிற்பக் கலைத்திறன் வாய்ந்தவை. தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் காணப்படும் நரசிம்ம மூர்த்திகளைக் கண்டு, சமய ஈடுபாட்டுடன் கலைக் கூறுகளைக் காண முற்படின், அச்சம் விளைவிக்கும் தோற்றங்களிலும் 'சௌந்தரியம்' விஞ்சி நிற்பதை உணர்ந்து போற்றிக் கொண்டே இருக்கலாம்.

1.5. வாமன அவதாரமும் திரிவிக்கிரம அவதாரமும் - சிற்பச் சிறப்பு

மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு வந்த வாமனனாக வந்த திருமால், மண்ணுலகை அளந்ததுடன் விண் ணுலகையும் திரிவிக்கிரமனாக அளந்தார் என்பதும், மூன்றாவது அடியாக மாவலியின் தலையில் வைத்துப் பாதளத்துக்கு அனுப்பி னார் என்பதும் புராணக் குறிப்பு.

திரிவிக்கிரம அவதாரச் சிற்பக் கலைப் படைப்பைக் காஞ்சி புரம் உலகளந்தப் பெருமாள் கோயிலிலும், திருக்கோயிலூர் திருமால் கோயிலிலும் சிறப்பாகக் கண்டு களிக்கலாம். இவையேயல்லாமல் சில திவ்ய தேசங்களிலும் திரிவிக்கிரம அவதாரத்துக்குச் சிலைகள் உள்ளன. ஆனால், குட்டை வடிவமாக வந்த வாமனத் திரு மாலுக்குத் தனிச்சிறப்பாகப் புரிந்திடும் சிலையமைப்பு அரிது.

மாவலிச் சக்கரவர்த்திக்கும் வாமன மூர்த்திக்கும் போற்றுதல் சேர நாட்டில் - இக்காலக் கேரள நாட்டில் - உண்டு. ''திரிவிக்கிரம அவதாரத்தைப் போற்றும் வகையில் பல சிலைகளும் ஆலயங் களும் உண்டு; ஆனால், வாமனாவதாரத்துக்கு அவ்வாறு இல்லை.

வாமன மூர்த்திக்கு என்று கோயில்கள் மிகக் குறைவு. *(கேரளத்தில்)* கொச்சிக்கு ஆறுமைல் தொலைவிலுள்ள திரிக்காக் கரைக் கோயில் வாமன மூர்த்திக்கு உரியது; இங்குச் சேவிப்பது முக்கியம்''[1] என வருங்குறிப்பு இத்தொடர்பில் சிந்திக்கத்தக்கது.

ஒரு காலை ஊன்றிய நிலையில், மற்றொரு காலால் *(வலக் கால்லாய்)* மேலுலகை நோக்கித் தாவவிடுகின்ற திருக்கோலம் சிற்பக் கலைப் படைப்பில் காண்கையில், திருமாலின் அளப்பரும் பெருமையை வியந்து நிற்பர் அடியவர்கள்.

சிற்பக் கலை ஒப்பியல் நோக்கில் சிந்திக்க முனைகையில், சிவனது ஊர்த்துவ தாண்டவக் கோலமும், திரிவிக்கிரமனாக வந்த உலகளந்த பெருமாள் தோற்றமும் ஏறக்குறைய ஒத்து விளங்குவதை உணரலாம்.

1.6. இராமாவதாரம் - சிற்ப நுட்பக் கூறுகள்

பாரத நாடேயன்றி, இலங்கை இந்தோனேசியா முதலிய பல நாடுகளிலும் அறிந்துணர்ந்த இதிகாசம் இராமாயணமாகும். அதனில் வரும் காப்பிய மாந்தர்களைப் பல கோணங்களில் சிற்பியர் தம் கலைப் படைப்பாகக் கொண்டு வந்துள்ளனர்; எனினும், சிறப்பாக, இராமன் சீதை இலக்குவன் பரதன் சத்துருக்கனன் அனுமன் இராவணன் ஆகியோரே சிற்பக் கலையில் பெரிதும் இடங்கொண் டுள்ளனர்.

உலகில் இராமன் நல்லறத்தை நிலைநிறுத்தப் பேரழகினனாக - வில்லையும் அம்பையும் கையில் ஏந்தியவனாகக் - கலைகளில் தோற்றங் கொள்கிறான். உலக மக்களை நலிவுறுத்தும் ஞான ஐம் பொறிகளையும், கன்ம ஐம்பொறிகளையும் இணைத்த உருவ நிலை யில் பத்துத் தலைகளையுடைய இராவணனை, நல்லற நாயகனாகிய இராமன் வெல்வதைக் காட்டுவதே காவிய உட்பொருளாகும்; இதனையுணர்ந்து பலவகை நிகழ்ச்சிப் புலப்பாடுகளாகச் சிற்பியர் தம் கலைத் திறனைக் காட்டியுள்ளனர்.

இராமனுக்குத் தேவியாக அமைந்த சீதாபிராட்டியைக் கவர்ந்த தன் காரணமாகப் பெரும் பகை தேடிக் கொண்டவன் இராவணன்; எனினும், சிறந்த சிவபக்தன். நந்தியம் பெருமானின் நல்லுரையை யும் இகழ்ந்து, சிவனும் உமையம்மையும் வீற்றிருக்கும் திருக்

1. கோபுர தரிசனம் *(திங்களிதழ்)*, நவம்பர், 1997, பக்.42.

கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்று, சாமகானம் பாடிச் சிவனருளால் மீள்கிறான்; இந்த நிகழ்ச்சியும் சிற்பப் படைப்பாகக் கருங்கற் சிலையிலும், உலோகச் சிலையிலும், சுதைச் சிற்பமாகக் கோபுரத்திலும் சிற்பியர் வனப்புடன் புலப்படுத்தித் தம் திறமையைக் காட்டியுள்ளனர்.

மக்கள் என்றும் நினைவிற் கொள்ளும் வகையில், சிவாலயங் களில் நடைபெறும் பெருந் திருவிழாவில் ஒரு நாள் கயிலாச வாகனக் காட்சி *(இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுக்க, அதன் மீது சிவனும் உமையும் அமர்ந்துள்ள காட்சி)* இடம் பெறுதலைக் காணலாம். சிவன் தொடர்பில் இது நிகழ்ந்தாலும், ஆணவத்தின் சித்திரிப்பாக இராவணன் அமைதலும், அதன் விளைவே இராம னுக்குப் பகைவனாக ஆகியதும் எனச் சிந்தித்தல் தகும்.

சிற்பக் கலை நோக்கில், சீதை இலக்குவன் பரதன் அனுமன் ஆகியோர் உடனிருக்க இராமன் பட்டாபிடேகக் காட்சி, அயோத்தி முதல் தென் குமரி வரையிலுள்ள பல திவ்ய தேசங்கள் பலவற்றில் சிற்பக் கலைப் படைப்பாக அமைந்துள்ளது. கோதண்ட ராமன் கற் சிலைகளை, ஆலயங்கள் சிலவற்றில் அமைந்துள்ள தசாவதார மண்டபங்களில் கண்டு கொள்ளலாம். இராமன் இலக்குவன் சீதை அனுமன் ஆகிய நால்வரும் அமைந்த சிலைகளே தமிழ்நாட்டு வைணவத் திருத்தலங்களிலும் பஜனை மடங்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

சரயு நதிக்கரையில் தோன்றிய இராமன், குகன் சுக்கிரீவன் வீடணன் ஆகியோரையும் உடன் பிறந்தவர்களாகக் கொண்டு, இலங்கை வரையில் சென்று திரும்பியவன்; எனினும், வடநாட்டையும் தமிழ் நாட்டையும் தன் சொற் சிற்பக் கலையால் இணைத்துப் பெருமை கொண்டவன் கம்பன்; அவன் பாடியருளிய இராமாயணமே, கற்சிற்பம் போன்ற பல சிற்பங்களை உருவாக்கச் சிற்பியர்களைத் தூண்டியது; மேலும், திருமால் கோயில்களிலெல்லாம் இராமன் சீதை இலக்குவன் அனுமன் சிலைகளையெல்லாம் வைத்து வழிபாடு செய்யத் தூண்டியது என்றும் கூறலாம்.

பெரும்பாலும் 108 திவ்ய தேசங்களில் இராமச்சந்திர மூர்த்தியைச் சிலைவடிவில் அடியவர்கள் வழிபாடு செய்ய வாய்ப்பு உண்டு. எனினும், வடுவூர் கோதண்டராமசுவாமி கோயிலில் காணலாகும் உற்சவமூர்த்திகள் *(இராமன் சீதை இலக்குவன் திருமேனிகள்)* பேரழகு கொண்டவை; கடலூர் மாவட்டம் திருவகீந்திரபுரம் தேவ

நாதசுவாமி ஆலயத்தில் அருள்மிகு இராமனுக்குத் தனிச் சன்னிதியே உள்ளது; அங்கே இராமன் சீதை இலக்குவன் ஆகியோர் திரு மேனிகள் அற்புதக் கலைப் படைப்புகள்; இந்தத் திவ்ய மங்கள விக்கிரகங்கள் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டவை என்பர். இராமநாதபுரம் அருகிலுள்ள திருப்புல்லாணி எனும் திவ்ய தேசத்தில் இராமன் தர்ப்ப சயன ராமனாகக் கிடந்த கோலத்திலும், மற்றும் சீதை இலக்குவனுடன் கோதண்ட ராமனாகவும் காணப்படு கின்றார். அங்குள்ள ஆதி ஜகந்நாதன் கோயிலில் இந்த இரு கோலங் களுக்கும் தனித்தனிச் சன்னிதி உண்டு. எல்லாத் திருமேனிகளும் அற்புதச் சிற்பக் கலைப் படைப்புகளாக உள்ளன.

இராம காதையில் அமைந்த காப்பியத் திருப்பு மையங்கள் (Pivotal points of the Epic) சிலவுள; அவற்றுள் வாலிவதையும் ஒன்று. இதனைச் சிற்பக் கலைப் படைப்பில் பொருத்தமுறக் காட்ட வேண்டுமென்று சிற்பியர் நினைத்தனர்; அவர்கள் தம் கலைக் கற்பனையின் விளைவாகத் தாரமங்கலம் திருக்கோயில் தூண்களில் காட்டியுள்ளனர். ஒரு தூணில் இராமன் மறைந்து நின்று அம்பெய் வதையும், மற்றொரு தூணில் அம்பெய்யப்படும் நிலையில் வாலியை யும் காணலாம்; வாலியின் சிலையருகே நின்று கொண்டு இராமனைக் காணவியலாதவாறும் சிற்பச் சிறப்பு அமைந்துள்ளது.

இராமாவதாரத்தில் திருமால், ''மானுடம் வென்றதம்மா'' எனும் வாக்கிற்கிணங்க நடந்து கொள்வது சிறப்புடையது; அஃதாவது, இராமன் நல்லற மானுடனாகவே உலகில் திருவிளையாடல் புரிகின்றான். எனவே, கோதண்டராமனாக வில்லும் அம்பும் தாங்கி இரு கைகளுடன் தான் இருத்தல் இயல்பு; ஆனால், தெய்வ நலக் கூறுகள் நிரம்பியவனாகவும் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது; அந்நிலையில் நான்கு கைகள் கொண்டவ னாகின்றான்.

திருக்கழுக்குன்றத்திற்கு அருகிலுள்ள பொன் விளைந்த களத்தூரிலும் இராமர் கோயில் உள்ளது; இங்குள்ள இராமன் திருவுருவில் நான்கு திருக் கரங்களைக் கண்டு களிக்கலாம்.

மேலும், தருமபுரி மாவட்டம் தட்டக்கல்கோட்டையில் சத்ரபதி சிவாஜி கட்டிய இராமர் கோயில் உள்ளது. இங்கு இராமன் சீதை இலக்குவன் ஆகியோர் நின்ற கோலத்திலும், அனுமன் மண்டியிட்ட கோலத்தில் இராமனின் திருவடி தொட்டு வணங்கும் நிலையிலும் காட்சியளிப்பதைக் காணலாம். இங்கு இராமனுக்கு நான்கு திருக்

கைகள் - மேற்கைகளில் சங்கும் சக்கரமும், வலப்பக்கக் கீழ்க்கையில் அபய முத்திரையும், இடப்பக்கக் கீழ்க்கை சீதா தேவியை அணைத் திருப்பதையும் - கண்டு களிக்கலாம்.

சீதையின் வலக்கை மலர் ஏந்தியும், இடக்கை கீழே தொங்க விட்டும் காட்சியளிக்கக் காணலாம்.

அனுமார், அந்தக் கோயில் வளாகத்தில் வேறோரிடத்தில் புடைப்புச் சிற்பமாகப் பத்து அடி உயரத்தில் காணப்படுகிறார்.

வடநாட்டு அயோத்தியை நினைவுபடுத்தும் வகையில், தமிழகத்தே சேலத்திலிருந்து கிழக்கே 10 கி.மீ.தொலைவில் அயோத்தியா பட்டணம் உள்ளது; அங்குள்ள 'கோதண்ட ராமசாமி', இராமர் கோயிலில் அழகுறக் காட்சியளிக்கிறார்; திருமலை நாயக்கர் காலக் கலைப்பணி இது. சிற்பக் கலைஞர்கள், இக்கோயிலின் அமைப்பில் கட்டப்பட்டவையே. தாரமங்கலம் சிவன் கோயிலும் தாடிக் கொம்பு பெருமாள் கோயிலும் என்பர்.

இக்கோயிலில் இராமர் பட்டாபிடேகக் காட்சி மிகச் சிறப் புடையது. சீதை பத்மாசன கோலத்தில் வலக்கையால் ஆசி வழங்கு வது போலவும் மற்றொரு கையில் தாமரைப் பூவைப் பிடித்தபடி யும் காணப்படுகிறாள். இலக்குவன் உடைவாளை ஏந்திய நிலை யிலும், பரதன் வெண்கொற்றக் குடையைப் பிடித்த நிலையிலும், சத்துருக்கனன் வெண்சாமரம் வீசுவது போலவும், அங்கதனும் சுக்கிரீவனும் பணிவுடன் நின்று கொண்டிருக்கும் நிலையிலும் சிற்பக் கலைப் படைப்புகள் மிக நேர்த்தியாக அமைந்துள்ளன.

இந்தக் கோயிலே சிற்பக் களஞ்சியமாக விளங்குவதால், திருமாலின் தசாவதாரக் காட்சியைச் சித்திரிக்கும் தூணும், சங்கீதத் தூண்களும், அருகே ஒரு தூணில் இராமன் இலக்குவன் சீதை ஆகியோர் காட்சியளிப்பதும் கண்டு வியக்கும் நிலையில் உள்ளன.

1.6.1 சிற்பப் படைப்பில் இராமன் இலக்குவன் சீதை அனுமன் - சிறப்புப் பார்வை

இதிகாசங்களுள் ஒன்றான இராமாயணத்தில் நாயகனான இராமன் வனவாசம் முடித்த நிலையில், முடிசூட்டு விழாவி லமைந்த காட்சியைச் சில கோயில்களில் சிற்ப வடிவில் கொணர்ந் துள்ளனர். விசய நகர மன்னர்களும் நாயக்க மன்னர்களும் சமயப் பொதுமையுணர்வு உடையவர்களே, எனினும், பிறப்பால் வைண

வர்களாதலின், இராமன் சீதை அனுமன் முதலியவர்களைத் தாம் கட்டிய கோயில் மண்டபங்களிலும் இடம் பெறச் செய்யத் தனி நாட்டஞ் செலுத்தியுள்ளனர்.

"ஸ்ரீவில்லிபுத்தூர் - ஆண்டாள்' கோயில், நாங்குனேரி, ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார் திருநகரி, தாடிக் கொம்பு, மன்னார் கோயில், திருமோகூர் ஆகிய கோயில் மண்டபங்களில் இராமனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதைத் தவிரத் திருமெய்யம், மற்றும் திருப்பேரைக் கோயில்களின் தூண்களில் இராமனது சிற்பம் இடம் பெற்றிருப்பினும் அது மண்டபச் சிற்பங்கள் எனும் அமைப்பில் இடம் பெறவில்லை.....

மேற்கண்ட கோயில்களில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் இராமன் தனித்துக் காட்டப்பட்டுள்ளான். இராமனது கைகளில் வில் அம்பு இடம் பெறுவதோடு முறுக்கிய மீசையுடன் காட்டப்பட்டுள்ளான். பொதுவாக இராமனது சிற்பம் மீசையின்றிக் காட்டப்படும். இங்கு இராமனது கைகளில் வில் அம்புடன் காட்டப்பட்டுள்ளதும், முறுக்கிய மீசை இடம் பெற்றிருப்பதும் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த இராமன் அசுர வதைக்காகப் போர்க் கோலம் பூண்டதைக் காட்டு கிறது"[1] என்று டாக்டர் எல். மணிவண்ணன் ஆராய்ச்சியடிப்படையில் எழுதியுள்ளமை சிந்திக்கத்தக்கது. ஒப்பீட்டு நோக்கில் சிந்திக்கையில், சென்னை - திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்தில் மூலவர் பார்த்தசாரதியின் திருவுருவம் நின்ற கோலத்தில் மீசையுடன் போர்க்களக் காட்சியாக அமைந்திருப்பதை மனத்திற் கொள்ளலாம்.

திவ்ய தேசங்கள் சிலவற்றில் இராமன் சீதையுடன் இடம் பெறுங் காட்சி சிற்பப் படைப்பாக உள்ளது. சிறப்பாகத் திரு மோகூரில் இராமன் சீதையுடன் நின்ற கோலத்தில் காட்சியளிப்பது நோக்கத்தக்கது. இராமனது இடக்கரத்தில் வில் இடம் பெற்ற நிலையில், வலக் கரத்தால் அருகிலுள்ள சீதையைத் தழுவிய வண்ணம் காட்டப்பட்டுள்ளான்; இராமனுக்குப் பின்புறத்தில் வழக்கமாக இடம்பெறும் அம்புறாத் தூணி இடம் பெறவில்லை. இராமன் என்பதை அடையாளம் காணும் வகையில் கையிலே வில்லேந்தியுள்ளான்; ஆனால், சீதையைத் தழுவிய கோலத்தி லிருப்பதால் அவன் அம்பறாத் தூணியும் அம்புமின்றிக் காணப்படு கிறான். இது பற்றி டாக்டர் எல். மணிவண்ணன் எழுதுகையில்,

1. பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக் கலையும், J.J. பப்ளிகேஷன்ஸ், மதுரை 20, பக். 109.

''இதில் இடம் பெறும் சீதையின் ஆடை அலங்காரமானது வட இந்தியப் பிராமணப் பெண்டிர் திருமணத்தின் போது கட்டிக் கொள்ளும் பாணியில் அமைந்திருப்பது இராமன் சீதையைத் திருமணம் முடித்து மகிழ்ச்சியோடு கூடுதற்கு அழைத்துச் செல்வதாகக் கருதலாம். இராமனது சிற்பத்திற்குமுன் இருபுறமும் உள்ள தூண் களில் மன்மதனும் இரதியும் மலரம்பினைத் தொடுப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கருத்திற்கு அணிசேர்ப்பதாக அமைகிறது''[1] என்று விவரிப்பது சிற்பியின் கலையனுபவத் திறனைப் போற்றும் வகையில் உள்ளது.

இலக்குவனைப் பொறுத்தவரையில் அவனது சிற்பம் தனித்தும் இராமனுடனுமாகப் பல நிலைகளில் காணப்படுகின்றன. ஸ்ரீவைகுண்டம், திருமோகூர், ஆழ்வார்திருநகரி, நாங்குனேரி, மன்னார் கோயில் முதலிய பல கோயில்களில் இலக்குவனது சிற்பம் இடம் பெற்றுள்ளது; எனினும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கொடி மண்டபத்தில் காணலாகும் இலக்குவனது சிற்பம், இராமாயணக் காப்பியத் திருப்புமைய நிகழ்ச்சியை நினைவுபடுத்துவதாக உள்ளது. அதாவது, இலக்குவன் சூர்ப்பநகையை இடக் காலால் மிதித்துக் கொண்டும் கையிலுள்ள நீண்ட வாளால் சூர்ப்பநகையின் மூக்கையும் மார்பகங்களையும் அறுப்பது போல் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கருதும் டாக்டர் எல். மணிவண்ணன் கருத்தைச் சிலர் மறுத்திடும் நிலையில், சூர்ப்பநகைக்குப் பதிலாக அயோமுகியே இவ்வாறு இலக்குவனால் மானபங்கப்படுகிறாள் என்பர். ஆனால், அதற்கு மறுப்புரையாகக், ''கம்பராமாயணத்தில் இலக்குவன் அயோமுகியின் மூக்கை மட்டுமே அறுப்பதாகவும், சூர்ப்பநகையின் மூக்கு மற்றும் மார்பகங்களை அறுப்பதாகவும் கூறப் பெற்றுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் இச்சிற்பம் சூர்ப்ப நகையின் உறுப்புக் குறைத்தல் காட்சி எனக் கொள்ளலாம்..... சங்கரன் கோயிலில் இருக்கும் சங்கர நாராயணன் கோயில் அர்த்த மண்டபத்திலும் சூர்ப்ப நகை உறுப்புக் குறைத்தல் காட்சி சிறு அளவில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்''[2] என்று அவர் தெளிவுறுத்துவது மனங் கொள்ளத் தக்கது.

'சிறிய திருவடி' என வைணவவுலகில் பெரிதும் போற்றப் படும் அனுமன் விசய நகர - நாயக்க மன்னர் காலச் சிற்பங்களில்

1. பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக் கலையும், பக். 110.
2. மேலது, பக். 111.

சிறப்பிடம் பெற்றுள்ளான். அனுமன் தனித்தும், இராமனைப் பணிந்த நிலையில் அவனுடனும் *(அனுமன்)* சிறப்பப் படைப்பில் இடங் கொண்டுள்ளதைப் பல ஆலயங்களில் காணலாம்.

சிறப்பாக ஸ்ரீவைகுண்டம் மற்றும் நாங்குனேரியில் இராமன் அனுமன் தோளில் கை வைத்தபடியும், அந்நிலையில் அனுமன் இராமனைத் தொழும் நிலையிலும் காணப்படுகின்றனர். தன் ஆன்ம நாயகனது திருக்கை தன் தோளின் மீது பட்ட நிலையில் அனுமன் பூரிப்போடு மெய் சிலிர்த்த வண்ணம் வணங்கி நிற்பதாகவே கொள்ளுதல் பொருத்தமாகும்.

கலைக் கருவூலமாகிய தாடிக் கொம்பில், இராமனை அனுமன் தன் தோள்மீது அமர்த்தித் தூக்கிச் செல்வது போலச் சிறப்பப் படைப்பு உளது. இக்காட்சி இராவணனுடன் இராமன் நேரிடையே போரிடுவதாக அமைந்துள்ளது. அனுமன் இராமனுடைய இரு திருவடிகளையும் தன் கையில் ஏந்தியுள்ளவாறு காணப்படுகிறான்.

இராமனுக்கு அனுமன் தன்னை அடிமையாக்கிக் கொண்டதால், அவன் திருவடிகளுக்கிடையே இடம் பிடித்துள்ளான்; இதனை மனத்துட் கொண்ட ஒரு சிற்பி, இராமன் தனியே ஒரு பீடத்தில் அமர்ந்திருப்பதாகவும், இரு கால்களுக்கு இடையேயுள்ள இடைவெளியில் அனுமன் கூனிக் குறுகி அமர்ந்து, இராமன் திருவடியைத் தாங்கிக் கொண்டிருப்பது போன்றும் சிலை வடித்துள்ளான்; இதனைத் திருவையாறு புத்தக்ரகாரத்தில் கண்டு போற்றிப் பரவி நிற்கலாம். மேலும், ஒப்பீட்டு நோக்கில், காரைக் காலம்மையார், ஆடல் வல்லானின் ஆடற் கோலத்தில் அவனது திருவடிக் கீழிருக்குமாறு வரம் பெற்றதையும், அந்தக் காட்சியைக் கங்கை கொண்ட சோழபுரத்தில் தென்பாலுள்ள தேவகோட்டத்தில் சிற்பமாக வடிக்கப் பெற்றுள்ளதையும் இயைபுடன் நினைவிற் கொண்டு சிந்திக்கலாம்.

இராமாவதாரத்தின் வாயிலாக மானுடத்தின் வெற்றியைப் புலப்படுத்திக் காட்ட வான்மீகியும் கம்பரும் முயல்வதையுணர்ந்தவர்கள் கலையனுபவ முதிர்ச்சி வாய்ந்த சிற்பிகள். தம் எண்ணங்களைச் சிற்ப வடிவங்களாக அமைத்துக் காட்டிய திறத்தினைப் பல திவ்ய தேசங்களில் காணலாம்.

திருப்புல்லாணியில் தருப்பைப் புல்லணையில் பள்ளிக் கொண்டுள்ள இராமனைக் காண்கையில், பரமபதத்தில் திருமால்

அரவணையில் பள்ளி (அறிதுயில்) கொண்டிருப்பதை நினைவூட்டு வதாகக் கொள்ளலாம்.

இராமனுக்குப் பட்டாபிடேகம் நடைபெறும் திருக்கோலத் துடன் அழகு நிறை சிற்பக் கலைப் படைப்புக்கள் தமிழகத்தில் சில உள; அவற்றில் கும்பகோணம் இராசாமி கோயிலில் காணலாகும் சிற்ப நேர்த்தி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

1.7 பரசுராம அவதாரமும் சிற்பச் சிறப்பும்

திருமாலின் இராமாவதாரக் காலத்திலேயே தோன்றிய பிறிதொரு சிறப்புடைய அவதாரமாகப் பரசுராம அவதாரம் உள்ளது. நரசிம்ம அவதாரம் போலவே பரசுராம அவதாரமும் வேக அவதாரம் ஆகும்; இராமர் எந்த அளவுக்குப் பொறுமையுடன் அறங்காக்க முயன்றாரோ, அந்த அளவுக்கு எதிர் மாறாக வெகுண்ட நிலையில் அறம் காக்க முயன்றவர் பரசுராமர். திருமாலின் பரசுராம அவதாரச் சிறப்பானது 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' எனும் பழமொழி.

இராமனும் தன் தந்தை சொல்லை மதித்துப் போற்றியவன்; அதனால் காடேகவும் முற்பட்டவன். பரசுராமனும் தம் தந்தை ஜமதக்கினி முனிவர் சொற்படி, தம் தாய் என்றும் பாராமல் இரேணுகா தேவியின் தலையை வெட்டி வீழ்த்தினார். பிறகு, தாயை மீண்டும் உயிர்ப்பித்தார் என்பது வேறொரு நிகழ்ச்சி.

இராமனைப் போலப் பரசுராமரும் திருமாலின் அவதாரமே; எனினும், இராமபிரானைப் போலப் பரசுராமரைச் சிற்ப வடிவில் வைத்துப் போற்றி வழிபடும் வழக்கம் தமிழ்நாட்டில் மிகுதியாக இல்லை; தமிழகத்தில் அவருக்கெனத் தனி ஆலயம் அமைத்து விழா எடுப்பதில்லை.

சிற்பத்தில் பரசுராமரை அமைக்கையில், அவர்தம் இரு கைகளுள் ஒன்றிலே பரசு எனும் கோடரிப் படையை ஏந்தி நிற்கும் ஒரு முனிவர் தோற்றத்திலே அமைத்து வருகின்றனர்.

''கருநாடக மாநிலத்தில் மைசூருக்கருகில் நஞ்சன்கூடு எனும் தலம் உள்ளது. அங்கிருக்கும் நஞ்சுண்டேசுவரர் ஆலயத்திற்கு அருகில் பரசுராமருக்கெனத் தனி ஆலயம் காணலாம்.

திருவரங்கம் தசாவதாரக் கோயிலில் பரசுராமருக்காகத் தனிச் சன்னிதியில் பரசு எனும் கோடரியைத் தன் தோள் மேல் சாத்திய

வண்ணம் நிமிர்ந்து நிற்கும் பரசுராமன் திருவுருவத்தைக் காணலாம். காஞ்சி வரதர் நூற்றுக்கால் மண்டபத்திலும், அரியலூர் தசாவதார மண்டபத்திலும் கோயில் தூண்களில் பரசுராமர் சிற்பங்கண்டு மகிழலாம். காஞ்சியில் 'பரசுராமேசம்' என்ற ஒரு தனிச் சிவன் கோயில் இருப்பது அறியத்தக்கது. மற்றும் திருப்பழுவூர் என்ற சிவத் தலத்தில் வடமூல நாதேசுவரர் ஆலயத்தின் முன் வாயிலிலும் பரசு ராமர் திருவுருவத்தைக் காணலாம்''[1] என்று இந்நூலாசிரியர் விளக்கியெழுதியிருப்பதை ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

1.8 கிருட்டிணாவதாரம் - சிற்பக் கலை நோக்கு

இராமவதாரமும் கிருட்டிணாவதாரமும் திருமால் எடுத்த அவதாரங்களுள் பூரணாவதராங்கள்; இராமன் தன் ஒரே மனைவி சீதையுடனேயே வாழ்ந்து இல்லறமாகிய நல்லறங் காத்தவன். கிருஷ்ணனாகிய கண்ணனோ உருக்குமணி சத்தியபாமா, மற்றும் கோகுலத்துக் கோபியர்கள் முதலியோரிடம் குலவிக் களித்தான். எனவே, ''இராமனைப் போல ஒரே மனைவியுடன் வாழ வேண்டும்; கண்ணனைப் போல மனைவியர் பலருடன் வாழாமல், அவன் உரைத்த கீதைக் கிணங்க வாழ வேண்டும்'' என்று மக்களிடையே நல்லறவுணர்வு உண்டாயிற்று.

சிற்பக் கலை நோக்கில் கண்ணனைக் காண்கையில், அவன் புரிந்த பல்வேறு திருவிளையாடல்களும், ஆலயங்களின் சூழலுக் கும் இடத்திற்கும், அடியவர்களின் ஈடுபாட்டிற்கு மேற்பப் பலவாக அமையலாயின.

கோபியர்களுடன் கண்ணன் ஆடிய ராசலீலையும், கோகுலத்தைக் காக்கக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த பெறலருங் காட்சியும், காளிங்க நர்த்தனமும், சத்தியபாமா, உருக்குமணியுடன் கூடிய அவனது எழிற்கோலமும், பலவகைச் சூழலில் குழலூதும் காட்சியும், மகாபாரதத் தொடர்புடன் திரௌபதியைத் துச்சாதனன் துகிலுரிகையில் அவளுக்குத் தொடர்ந்து ஆடை வழங்கிய கருணைக் காட்சியும், அவன் எடுத்த திருப்பேருருவமும், பாரதப் போரில் அருச்சுனனுக்குத் தேர்த்தட்டில் இருந்து கொண்டு பார்த்தசாரதி புரிந்த கீதோபதேசக் காட்சியும் பிறவும் சிற்ப எழிற் காட்சிகளாக இந்திய நாட்டின் பல பகுதிகளிலும், சிறப்பாகத் தமிழக ஆலயங் களிலும் கண்டுகளிக்கக் கூடிய நிலையில் சிற்பக் கலை வடிவங் களாக உள்ளன.

1. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - பாகம் 2, அ.ப. கழக வெளியீடு, பக். 719.

வரலாற்று நோக்கில் கால அடிப்படையில் சிந்திக்கையில், மாமல்லபுரத்துப் பாறையில், கோகுலத்தைக் காக்கக் கண்ணன் எடுத்த - கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்த - சிற்பத்தை நினைவிற் கொள்ளலாம்.

இதிகாசப் பின்னணியிலும் மக்களுக்கு நன்னெறி காட்டிடும் நோக்கிலும் முதன்மைச் சிறப்புடையது 'கண்ணன் காட்டிய வழி' யாகிய 'கீதோபதேசக் காட்சி' எனப் பலரும் கருதுவர்.

நாதத்தால் அண்ட சராசரங்களையும் தன் வயப்படுத்தலாம் என்ற உண்மையை நாடெங்கும் உணரும் வகையில் அமைந்தது 'வேய்ங்குழலூதும் கண்ணன் காட்சி'யாகும்.

1.8.1. சிற்பக் கலைக் காட்சியில் குழலூதும் கண்ணன்

இந்திய மொழிகள் பலவற்றிலும் தோன்றிய வைணவ இலக்கியங்களில் கிருட்டிணன் குழலூதும் நயமிகு காட்சியை மிகச் சிறப்பாக வருணிக்கும் காட்சி உள்ளது என்பர். தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையில் சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை, ஆழ்வார்கள் அருளிய திவ்யப் பிரபந்தம் முதலியவற்றை நினைவிற் கொண்டு சிந்திக்கலாம்.

வேணுகோபாலனின் குழலூதுங் காட்சியை ஆகமநூல்கள் சித்திரிப்பது கொண்டு, சிற்ப விதிகளைச் சிற்பியர் பின்பற்றிச் சிற்பங்களை உருவாக்கி வருகின்றனர். வேணுகோபாலன் இடக் காலை நிலத்தில் ஊன்றி நிற்பார். இடக் காலுக்கு முன்பாகவோ பின்பாகவோ தோன்றும் வலக்கால் குறுக்கு வாட்டாகக் காணப் படும். அவற்றின் விரல்கள் பூமியைத் தொட்டவாறு வடிக்கப்பட்டி ருக்கும். இரு கரங்கள் வேய்ங்குழலைப் பற்றியவாறு அமைக்கப் பட்டிருக்கும். குழலை வாயருகே வைத்து ஊதுவது போல அச் சிற்பங்கள் உள்ளன. உடல் மூன்று வளைவுகளுடன் காட்சி யளிக்கும்; ஆனால், காரமடை அரங்கநாதர் கோயிலில் கருவறைத் தெற்குச் சுவரிலுள்ள, தேவ கோட்டத்துக் குழலூதும் கண்ணனுக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன.

கண்ணனது உடலின் நிறம் மழைக்கால மேகத்தின் கருவண்ணம்; திருமுடியில் மயிலிறகு அழகூட்டும். குழலூதுவதால் உண்டாகும் குதூகலம் தெளிவாக வெளிப்படுமாறு வடிக்கப்படுவதால் இவ்வுரு வங்களின் எழில் கண்ணைக் கவரும். இத்தகைய திருவுருவங்களை வேணுகோபாலன் என்றும், கானகோபாலன் என்றும் குறிப்பிடுவர்.

இவையே வேணுகோபாலனின் உருவங்களுக்குரிய பொதுவான விதிமுறைகள். இவற்றில் காலம், இடம், சிற்பியின் கற்பனைத் திறன் ஆகியவற்றிற்கு ஏற்பச் சில மாறுதல்கள் ஏற்படுவது உண்டு என்று கலைத் திறனாய்வாளர் எம். ராஜகோபாலன் போன்றோர் எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

எழிலார்ந்த மார்பில் மாலையும், காதினில் பூங்கொத்தும், தலையில் மயிற்பீலியும் சூடிய வண்ணம் கண்ணன், மங்கையர் களுடன் குழலூதிய கோலத்தைக் குலசேகர ஆழ்வார் வருணிக்கையில்,

''மங்கல நல்வன மாலை மார்வில்
    இலங்க மயில் தழைப்பீலி சூடிப்
பொங்கிள வாடை யரையில் சாத்திப்
    பூங்கொத்துக் காதிற் புணரப் பெய்து
கொங்கு நறுங் குழலார்க ளோடு
    குழைந்து குழலினி லூதி வந்தாய்
எங்களுக்கே யொருநாள் வந்தூத
    உன்குழ லின்னிசை போதராதே''

- பெருமாள் திருமொழி *(தி.பி. எண். 706)*

எனப் பாடிச் செல்வதைக் காணலாம். இவ்வாறெல்லாம் பலரும் வருணிப்பதை மனத்திற் கொண்டே கண்ணனின் எழிலார் திருவுரு வத்தைச் சிற்பியர் கண்கவர் கலைப் படைப்பாக வழங்கியுள்ளனர்.

1.9 பலராம அவதாரச் சிறப்பும் சிற்ப வடிவமும்

துவாபர யுகத்தில் கண்ணனுக்கு மூத்தவனாக யதுகுலத்தில் அவதரித்தவர் பலராமர். ஆதிசேடனின் அவதாரமாகக் கருதப் பெறும் இவர், வாசுதேவருக்கும் உரோகிணிக்கும் பிறந்தவர். இவர் முதலில் தேவகி வயிற்றில் கருவாகி, உலக மாயையால் உரோகிணி யின் வயிற்றிலே சேர்ந்து, வளர்ச்சி பெற்றுக் குழந்தையாகப் பிறந்த அதிசயப் பிறவி.

திருமாலின் வெண்ணிற அமிசமாக அமைந்தவராதலின் வாலி யோன் என்றும், பலதேவன் என்றும் பலராமனைக் கூறுவர். ஒற்றைக் குண்டலமணிந்தவராகவும் பொன் மாலையணிந்தவராகவும் தோற்ற மளிப்பார்; இவருக்குப் பனைக் கொடி உண்டு.

பாரதப் போர் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நேராமல், சமாதானமாக வாழப் பலராமர் முயன்றும், அவரது எண்ணம்

நிறைவேறவில்லை. எனவே, போரில் கலந்து கொள்ள விருப்ப மின்றித் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். இந்நோக்கத்தில் நைமி சாரணியம் அடைந்த போது, அதனருகே முனிவர்களுக்கு இடர் விளைவித்துக் கொண்டிருந்த வத்கலன் என்ற அசுரனை அழித்தார். பாரதப் போர் முடிந்து சில காலம் கழித்து துவாரகையில் பிரபாசத் தீர்த்தக் கரையில் யோகத்தில் அமர்ந்து உயிர் துறந்தார்.

தமிழகத்தில் முற்காலத்தே பலராமர் வழிபாடு இருந்துள்ளது என்பது புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் அறியலாம். இவ்வாற்றான், புறநானூற்றில், நக்கீரனார்,

"வலியொத் தோயே வாலி யோனை" (56)

எனப் பாடிச் செல்வதையும், சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதையில், "வால்வளை மேனி வாலியோன் கோயிலும்" *(172)* என வருதலையும் காணலாம்.

இக்காலத்தில் பலராமருக்குக் கோயில் தனித்து இல்லா விடினும், கலப்பையை ஏந்திய சீற்றக் கோலத்தில் சில திவ்ய தேசங்களில் உருவச் சிலை உள்ளது; அதுவும் சிறப்பாகத் தசாவதார மண்டபங்களிலே அவரது திருமேனியைக் கண்டு மகிழலாம்.

சிற்பப் படைப்பில் பலராமன் இரு கைகளுடனும், சில இடங் களில் நான்கு கைகளுடனும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். "இரு கைகள் அமைந்தால் வலது கையில் சிறிய கதையும், இடது கையில் கலப்பையும் இடம் பெறும். மேலும், பிருகுத் சம்கிதாவில் பலராமன் ஒரு காதில் மட்டும் குண்டலம் அணிந்திருப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது"[1] என்ற குறிப்பு நோக்கத்தக்கது.

"ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் மட்டுமே பலராமன் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் பலராமன் அல்ல, விஷ்வ கர்மா என்பாரும் உண்டு. கோயிலில் பலராமன் சிற்பத்திற்கு அடியில் விஷ்வகர்மா என்று கோயில் நிர்வாகத்தால் எழுதப்பட்டுள்ளது. ஆனால், பலராமன் சிற்பம் என்பதற்கு அச்சிற்பத்திலேயே அக ஆதாரங்கள் உள்ளன. இச்சிற்பம் நான்கு கரங்களுடன் திகழ்கிறது. மேலிரு கரங்களில் சங்கு சக்கரமும், கீழிரண்டில் கலப்பையும் சிறு கதையும் இடம் பெற்றுள்ளன. இவை பலராமனுக்குரிய ஆயுதங் களே"[2] என்று டாக்டர் எல். மணிவண்ணன் கூறுவது சிந்திக்கத் தக்கது.

---

1. & 2. பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக் கலையும், பக். 124.

1.10 திருமால் எடுக்கவிருக்கும் கல்கியவதாரம்

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் முடியும் வரையில் திருமால் எடுத்துள்ள சிறப்பான அவதாரங்களாகச் சமய மரபுடன் கூறப்படுபவை ஒன்பது அவதாரங்களாகும். உலக உய்திக்காகக் கலியுகத்தில் எடுக்க வேண்டிய அவதாரமாகக் கல்கியவதாரத்தை வைணவர்கள் பெருநம்பிக்கையுடன் கூறி வருகின்றனர்.

கலியுக முடிவில் சம்பளம் எனும் சிற்றூரில் விஷ்ணு எச்சனுக்கும் சுமதிக்கும் குதிரை முகத்துடன் திருமால் கல்கி என அவதரித்து அறத்தைக் காக்கவும் கொடுஞ் செயல்களை நீக்கவும் முனைவார் என்பர். கல்கி வருங்காலத்தில் பரசுராமரிடத்தில் நான்மறைகளையும் வில் வித்தையையும் கற்றுக் கொள்வார் என்றும், சிவனிடம் தவம் புரிந்து குதிரையையும், எல்லாமறிந்த கிளியையும் பெறுவர் என்றும், இவருக்கு மனைவியாகிய பதுமாவதி வாயிலாக ஜயன் விஜயன் ஆகிய புதல்வர்களைப் பெறுவார் என்றும் புராணக் குறிப்புகள் உள்ளன.

''பகவானோ கலிபுருஷனை எதிர்க்கக் குதிரை மேல் ஏறிக் கொள்வார்; கண்டோர் வியக்கும் வண்ணம் படைகளுக்குள்ளே புகுவார்; பகைவர்களின் தலைகளைத் தான் பிடித்துள்ள கத்தியால் கண்ட துண்டமாக வெட்டிப் போடுவார். பகைவர்கள் பிரயோகிக்கும் ஆயுதங்களைப் பாழாகச் செய்வார்; எதிரிகளின் மாயையை இல்லாமல் செய்து விடுவார். கலிபுருஷனைப் பலவகையிலும் கதிகலங்கச் செய்வார். கலிபுருஷன் தன் வலிமையடங்கப் பெறுவான். அவன் தலை மயிரைப் பற்றி அவன் கழுத்தின் மேல் கத்தியை எறிந்து வெட்டப்புகுவார். ஆனால், கலிபுருஷனோ பகவானைப் பலவகையாகப் போற்றித் துதித்துத் தன்னை உயிரோடு விட்டு விடும்படி வேண்டிக் கொள்வான். கல்கியும் அவனுக்குக் கருணை காட்டுவார்''[1] என்று மாருதிதாசன் விளக்கிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

மேற்காணும் குறிப்புகளையெல்லாம் மனத்துட் கொண்டு, சிற்பியர் கல்கியவதாரத்தைச் சிற்பமாக்கியுள்ளனர். அவற்றைத் திருமால் தலங்களில் தசாவதார மண்டபங்களில் கண்டு போற்றலாம்.

---

1. திருமாலின் திருஅவதாரங்கள், பக். 175.

1.11 அவதாரத் தொடர்பில் சில சிறப்புக் குறிப்புகள்

திருமாலின் அவதாரங்கள் மேலே கூறப்பட்ட அவதாரங்கள் அளவில் அடங்கிவிடும் நிலையில் இல்லை. தீயோரை அழிக்கவும் நல்லோரைக் காக்கவும் அந்தப் பரப்பிரும்மம் பல அவதாரங்கள் எடுத்துள்ளது. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சிலவற்றை இங்கே காண்போம்.

அ) மோகினியவதாரம்

தாருகவன இருடியர்கள் இறைவனை மதிக்காமல் அபிசார வேள்வி புரிய முற்பட்டனர். அவர்களது செருக்கை அடக்குவதற்காகத் திருமால் மோகினியவதாரம் எடுத்தார் என்பது ஒரு புராணக் குறிப்பு.

திருப்பாற்கடலைக் கடைகின்ற நிலையில், அதனில் பல பொருள்கள் தோன்றின; அவற்றுள் அமிர்தமும் ஒன்று. அதனைத் தேவர்கள் உண்ணும் வகையிலும், அசுரர்கள் அதனைப் பெறாமல் ஏமாறும் வகையிலும் திருமால் மோகினியவதாரம் எடுத்தார் என்பது வைணவ புராணக் குறிப்பு. இதனை மக்கள் நினைவுகூர்ந்து கொண்டாடும் வண்ணம், திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசித் திருவிழா நடைபெறுகையில், ஒரு நாள் மோகினியவதாரக் காட்சி இடம் பெறும். அழகிய செப்புத் திருமேனியில் மோகினி நிறைந்த அலங்காரத்துடன் உலா வருதல் கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஆ) ஹயக்ரீவ அவதாரம்

கடலூருக்கு அருகில் திருவஹிந்திரபுரம் தேவநாத சுவாமி ஆலயத்தில் அமர்ந்தருளும் ஹயக்ரீவ மூர்த்தம், பேராற்றல் வாய்ந்த குதிரைத் திருமுகத்துடன் சங்கு சக்கரதாரியாக, நான்கு திருக்கைகளுடன் காட்சியருளுவது மனங்கொள்ளத்தக்கது; அந்தத் திருமேனி அற்புதச் சிற்ப எழில் கொண்டது. ஞானமும் செல்வமும் வழங்கும் பேராற்றல் வாய்ந்த அவதாரமாக இந்த அவதாரத்தினைப் போற்றி மகிழ்வர்.

இவ்வாறே கபிலர் வியாசர் போன்ற மேலும் சிலரைத் திருமாலின் அம்சாவதாரங்களாகப் போற்றும் வைணவ சமய மரபினை விரிக்கிற்பெருகும்.

திருமால் இவ்வாறெல்லாம் திவ்ய தேசங்களில் - திருப்பதி திருவரங்கம் முதலிய வைணவத் திருத்தலங்களில் விக்கிரக

வடிவில் காட்சி தருகின்ற நிலையில் பெரும்பயன் உண்டா என வினவலாம். அடியவர்கள் திருமாலின் பல்வேறு கலியாண குணங் களை மனத்துட் கொண்டு, அருச்சனை புரிந்து வழிபடுகின்ற திரு வடிவம் - அர்ச்சாவதாரம் - என மேம்பட்ட நிலையில் போற்றப்படும்.

திருமாலின் தசாவதாரங்கள் ஒரு குறிப்பிட்ட சிறப்பான வடி வத்துடன் காலம் - இடம் - சூழல் ஆகிய எல்லைக்குள்ளே தத்தம் ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கும், நிரூபிக்கும், அற்புதங்களை நிகழ்த்திய பிறகு, மூலவரான பரமபத நாயகனான மகாவிஷ்ணு விடம் ஒன்றிவிடும். ஆனால், அர்ச்சாவதாரத்தில் - முறையாக அமைந்துள்ள வழிபாட்டுச் சிலைகளிடத்தில் - மக்கள் எங்கெல் லாம் (திவ்ய தேசங்களில்) விரும்புகிறார்களோ அங்கெல்லாம் திருமால் கொலுவிருந்து அருள்பாலிப்பார்; இஃது ஆழ்வார்கள் வாழ்விலும், அவர்களுக்குப் பின்வந்த அருளாளர்கள் வாழ்விலும் பெரும்பயன் விளைவித்ததை நினைவிற் கொள்ளலாம்.

அர்ச்சையின் பெருமையை வைணவ ஆச்சாரிய பெருமக்கள் மிக விளக்கமாக எழுதியவற்றை உள்வாங்கிய நிலையில் நீதியரசர் எஸ். மகராசன் ''மெய்ப் பொருளோடு ஊடாடுவதற்கென்று ஒவ்வொரு சமயத்திலும் பல உத்திகளை வகுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், வைணவ ஞானிகள் வகுத்து வைத்திருக்கும் உத்திகள் தனிச் சிறப் புடையவை. மூர்த்திகளை வெறும் அடையாளப் பொருள்களாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மூர்த்தியும் இறைவன் எடுத்த அர்ச்சாவ தாரம் என்று கொண்டு, மெய்ப் பொருளோடு உறவாடும் போது, பக்திக் கடல் மடை திறக்கிறது, மெய்யுணர்வு பெருக்கெடுத்தோடு கிறது.

அர்ச்சாவதாரத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் வானவர்கள். ஆகவே வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள். 'இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அனுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணானுபவம் பண்ணுகைக்கு' என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகிறார் ஆசிரியர்.

எம்பெருமானுக்கு விண்ணுலகச் சூழ்நிலையில் அவ்வளவு அழகு இருப்பதில்லையாம். மண்ணுலகச் சூழ்நிலையிலேயே அவனுடைய அழகு சோபிக்கிறதாம், ஏன்? வானவர் நாடு ஞான ஒளி வீசும் நாடு. ஆகையால், அங்கிருக்கும் எம்பெருமான், பகல் விளக்குப் போல் ஒளி குன்றிக் காணப்படுகிறான். ஆனால், அஞ்ஞான இருள்

சூழ்ந்த நம் மண்ணுலகத்திலோ, அவன் இருட்டறை விளக்குப் போல, திவ்ய ஒளி வீசி மிளிர்கின்றானாம். ஆகவே, பேரொளியை அனுபவிப்பதற்கு மண்ணுலக இருட்டும் தேவைப்படுகிறது. இல்லையேல், 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று அப்பரடிகள் சொல்லியிருப்பாரா?''[1] என்று எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்க அருங்குறிப்பாகும்.

சிற்ப வளம் நிறைந்த சில திருமால் தலங்கள்

1.12 நாகை அருள்மிகு சௌந்தரராசப் பெருமாள்

திருமாலின் திவ்ய மங்கள விக்கிரகம் எனக் கூறுகையில், இயல்பாகவே 'சௌந்தரியம்' எனும் தெய்வ நலப் பேரழகு குடி கொண்டிருக்கும். சுந்தரப் பெருமாள் என்றும், சௌந்தரராசப் பெருமாள் என்றும் சில திவ்விய தேசங்களில் திருமால் வீற்றிருப் பினும், நாகப்பட்டினம் சௌந்தரராசப் பெருமாளுக்கெனத் தனிச் சிறப்பு உண்டு.

திருமாலுக்குரிய சங்கும், சக்கரமும், அபயமும் வரதமும் கொண்ட திருக்கைகளும் நெடுமுடியும் கொண்டு நின்ற கோலத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாளாகிய மூலவரையும், உற்சவரையும் அவர்தம் கம்பீரமான தோற்றங்களைக் காணக்கண் கோடி வேண்டுமென்பர். 'ஒருவர் அழகியவா' என்று திருமங்கை யாழ்வார் பாடும் வண்ணம் அவ்வழகர் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியார் களுடன் அருள் பாலிக்கிறார்; மேலும், தனியாகத் தாயார் சௌந்தர வல்லியும் அழகருக்கேற்ற அழகியாகக் காட்சியளிக்கிறார்.

சௌந்தராரண்யம் எனும் சிறப்புப் பெயருடன் கூடிய இத்திருத் தலத்தில், நேயத் தாயார் அருகிருக்கத் தாம் நாயகி எனும் பாவனை யில், அழகில் ஒப்பற்ற நாயகரைக் கண்டு அனுபவிக்கத் திருமங்கை யாழ்வார் அஞ்சுகிறாராம்! இதனைப்,

''பொன் இவர் மேனி மரகதத்தின் பொங்கிளஞ் சோதி
அகலத்தாரம்
மின்னிவர் வாயில் நல்வேத மோதும் வேதியர்
வானவ ராவர் தோழி

1. மலைநாட்டுத் திருப்பதிகள் *(ந. சுப்புரெட்டியார்)* - நூலுக்கு எழுதிய முன்னுரை, பக். 5,6.

என்னையும் நோக்கி என்அல்குலும் நோக்கி ஏந்திளங்
கொங்கையும் நோக்குகின்றார்
அன்னை என்நோக்குமென்று அஞ்சுகின்றேன் அச்சோ ஒருவா
அழகியவா''(9:2;1)

ஆன்மநல ஈடுபாடு இவ்வண்ணம் உண்டாகும் வகையில் அர்ச்சாவதாரம் - சிற்பக் கலைப் படைப்பாகிய சுந்தரச் சிலை புரிந்துள்ள மகிமையை என்னென்பது?

1.13. சிற்பத்தில் திருமாலின் பெருங்கருணைத்திறம்

அடியார்களுக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில், துன்பத்தினின்றும் விடுவித்து அருளும் திருமாலின் சிறப்புறு நிகழ்ச்சிகள் பலவுள. அவற்றுள் 'கஜேந்திர மோட்சம்' என்பதும் ஒன்றாகும்.

திருமாலின் திவ்ய தேசங்கள் பலவற்றில் கஜேந்திர மோட்சச் சிற்பப் படைப்புகள் காணப்படினும், திருவாரூருக்கு அருகிலுள்ள திருக்கண்ணமங்கை ஆலயத்தில் காணலாகும் சிற்பம் மிக நேர்த்தியாக அமைந்து பலரையும் கவர்ந்து வருகிறது. நான்கு அடி நீளம், ஒன்றரையடி கனமுள்ள ஒரே கருங்கல்லில் பெரிய யானையாகிய கஜேந்திரனையும், அந்த யானையின் காலைக் கவ்வியிழுத்திடும் முதலையையும், துன்புற்ற வேளையில் 'ஆதிமூலமே' என்று அழைத்திடும் யானையின் ஓலத்தைக் கேட்டுக் கருட வாகனத்தில் சங்கு சக்கரம் ஏந்திப் பறந்துவரும் பெருமாளின் திருக்கோலத்தையும் நேரே காண்பது போன்ற சிற்பப் படைப்பு உள்ளது. சிற்பியின் கைத்திறம் பெரிதும் பாராட்டுதற்குரியது.

1.13.1 திருமாற்பேறு எனும் தலத்தில் திருமால் 'சுதர்சனம்' பெற்ற சிறப்பு

திருமால் தாம் வைத்திருந்த சக்கரப் படையினை ரூபகனிடம் கொடுக்கவே, அதனை அவன் அதீதியின் மீது ஏவியதும் அழிந்து போயிற்று. மீண்டும் சக்கரப்படை பெறுவதற்காகச் சிவனை வழிபாடு செய்ய முற்பட்டார். திருமால், சலந்திராசுரனை வதைத்த சுதர்சன சக்கரம் சிவபெருமானிடம் இருந்தமையால், திருமால் நாளும் 1008 தாமரை மலர்கள் கொண்டு பூசித்து வந்தார். ஈசன் திருவிளையாடலால் ஒரு நாள், திருமால் கொணர்ந்த மலர்களுள் ஒன்றைக் குறையச் செய்ததும், பூசைக்கு முட்டுப்பாடில்லாமல் தம் தாமரைக் கண்ணையே பெயர்த்தெடுத்துப் பூசிக்கலானார்; சிவனருளும் கிட்டியது.

திருமாற்பேறு எனும் தலத்தில் மணிகண்டீசுவரரின் அழகிய சிலையும், அஷ்டலட்சுமி பீடத்தில் நின்ற கோலத்தில் அம்பாள் அஞ்சனாட்சி சிலையும் நந்திகேசுவரருக்கு முன்பு ஈசனை இரு கைகள் கூப்பி வணங்கி நிற்கும் திருமாலின் அற்புதக் கற்சிலையும் நேர்த்தியான சிற்பச் செல்வங்களாகும். புராண நிகழ்ச்சிக்குச் சான்றாக, உற்சவ மூர்த்திகளில், திருமால் ஒரு கையில் கண்ணும் மறு கையில் செந்தாமரை மலரும் வைத்துள்ள நேர்த்தியான சிலை வியத் தகு வண்ணம் போற்றற்குரியது. இந்தத் திருத்தலம் பல்லவர் காலச் சிறப்புடையது.

1.13.2 ஸ்ரீவைகுண்டம் - சிற்பச் செல்வங்கள்

சைவ சமயத்தவருக்குத் திருக்கயிலாயம் எப்படித் தம் பரம் பொருள் நிலை கொண்டிருக்கும் மூலத்திருத்தலம் என்று கருது கிறார்களோ, அப்படியே வைணவர்கள் பரமபதமெனும் வைகுண் டத்தை மூலத்திருத்தலமாகக் கொள்வர். அத்தகைய திருப்பெய ருடன் பூலோக வைகுண்டமாக விளங்கி வருகின்றது பாண்டி நாட்டிலுள்ள திவ்ய தேசமாகிய ஸ்ரீவைகுண்டம்.

திருமாலுக்குரிய நின்ற கோலச் சிறப்பைத் திருவேங்கடமும், பள்ளி கொண்டிருக்கும் - கிடந்த - திருக்கோலச் சிறப்பைத் திருவரங்கமும் கொண்டிருத்தலைச் சிலப்பதிகாரம் முதலிய இலக்கி யங்கள் கூறிக் காட்டும். பாண்டி நாட்டு வைணவத் திருத்தலங் களுள், திருப்புளியங்குடியில் பரந்தாமனின் கிடந்த திருக்கோலத் தினையும், வரகுணமங்கையில் இருந்த *(அமர்ந்த)* திருக்கோலத் தினையும், ஸ்ரீவைகுண்டத்தில் நின்ற திருக்கோலத்தினையும் கொண்டாடிச் சிறப்பாக வழிபடுவர்.

வைகுண்ட நாதன் எழுந்தருளிச் சேவை சாதிக்கும் ஸ்ரீவைகுண் டத்தில் சிற்பக் கலைப் படைப்புக்கள் தனித்தன்மையுடன் கூடிய எழில் வாய்ந்தவை; சிற்பியரின் கைவண்ணம் முத்திரையிட்டுச் சென்றுள்ளது. இங்குக் கோயிற் கோபுரத்தைக் கடந்து அர்த்த மண்டபத்தினை அடையலாம்.

அர்த்த மண்டபத்தையடுத்த கருவறையிலுள்ள மூலவர் வைகுண்டநாதனின் நின்ற கோலம், திருவரங்கம் அரங்கநாதரைப் போலவே தேவியர்களில்லாமல் தனியாகவே காட்சியளிக்கிறார். சிற்பியர் சாதித்த கருவறையமைப்பினால், சித்திரை ஐப்பசி ஆகிய மாதங்களில் ஆறாம் நாளன்று சூரியனின் கதிர்கள், கோபுர

வாயிலையும் மண்படங்களையும் கடந்து மூலவர் மீதுபடிந்து மூலவரை ஒளிமயமாக்குகின்றன. சிறிது தொலைவில் எதிரும் புதிருமாகத் தனித்தனிச் சன்னிதிகளில் தாயார்களாகிய வைகுண்ட நாயகியும் சோரநாத நாயகியும் அருள்பாலித்தலைக் காணலாம்.

தேவியர் சன்னிதிக்கு அருகே வைணவ ஆசாரியராகிய மணவாள மாமுனிகளுக்கென்று ஒரு சன்னிதியுண்டு. மேலும், திருமால் எடுத்த தசாவதாரங்களைப் போற்றும் வகையில் சிலை வடிவங்கள் அமைந்துள்ளன; யோக நரசிம்மரும் சிறந்த சிற்ப வடிவில் தனிக் கோயிலில் காட்சியளிக்கிறார்.

ஆலயத்துப் பெரிய மண்டபத்தில் காணலாகும் யானை யாளி சிங்கம் ஆகிய உருவங்கள் கொண்ட சிற்பத் தூண்கள் கலையழகு கொண்டவை. இத்தூண்களில் ஆஞ்சநேயர் பற்பல திருக்கோலங் களில் காண்பபடுகிறார்; மேலும், இத்தூண்களில் அகோர பத்திரர், ஆழ்வார் முதலியோர் சிற்பங்களும், சுக்கிரீவனை இராமபிரான் தழுவியருளும் காட்சிச் சிற்பமும், சீதாபிராட்டி இலக்குவன் ஆகி யோர் சிற்பங்களும் அணிசெய்வதைக் கண்டுகளிக்கலாம்.

சுருக்கமாக, இத்திருக்கோயிலைச் சிற்பக் களஞ்சியமென்றே கூறலாம்; சௌந்தரியமாம் கலியாண குணநாயகனுக்கேற்ற பரம பதமே பூலோகத்திற்கு வந்துள்ளதெனக் கொண்டாடி மகிழலாம்.

1.13.3 திருநீர்மலையில் திருமால் முதலிய திருவுருவச் சிலைகள்

பசுஞ்சோலைகள் நிறைந்த திவ்ய தேசமாகிய திருநீர்மலை பல்லாவரத்திலிருந்து *5* கி.மீ. தொலைவிலுள்ளது. இந்த மலைக் கோயில் பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற சிறப்புடையது.

வைணவப் பெருமக்கள், பரமபத நாயகனாகிய திருமாலைத் திருநறையூரிலே *(நாச்சியார் கோயிலிலே)* நின்ற திருக்கோலத் திலும், திருவாலியிலே *(சீர்காழிக்கு அருகிலுள்ளது)* சிங்கவடிவில் வீற்றிருந்த திருக்கோலத்திலும், திருவரங்கத்திலே பள்ளிகொண்ட திருக்கோலத்திலும், திருக்கோவலூரிலே திரிவிக்கிரமனாக உலகளந்த திருவடி வைத்து நடந்த திருக்கோலத்திலும் கண்டு கொண்டாடி மகிழ்வர். இத்தகைய நான்கு வகைத் திருக்கோலத்தினையும் திருநீர் மலையில் கண்டு களிக்கலாம்; இதனைத் திருமங்கையாழ்வார்,

"நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம்
மாமலை யாவது நீர்மலையே"

என்று பாடிச் சென்றுள்ளமையால் அறியலாம். இந்த அர்ச்சை நிலைகளை விளக்குகையில், திருநீர்மலைச் சுற்றுப்பிராகாரத்தில் பிரகலாதாழ்வாருக்குக் காட்சியருளிய நரசிம்ம மூர்த்தி இங்கே சாந்த மூர்த்தியாக அமர்ந்த கோலத்திலும், இந்தச் சன்னிதிக்கு அருகில் 'குறளாகி நிமிர்ந்த' உலகளந்த திரிவிக்கிர மூர்த்தியாக நடந்த கோலத்திலும், ஆலயத்தில் இருநூறடி உயரமுள்ள குன்றின்மேல் அருள்மிகு அரங்க நாதராகத் தென்திசை நோக்கிப் பள்ளிகொண்ட பெருமாளாகச் சயனக் கோலத்திலும் சேவை சாதிக்கிறார்; மேலும், வான்மீகி முனிவரின் பிரார்த்தனைப்படி மலையடிவாரத்தில் காட்சியருளிய திருமால், நீர்வண்ணப் பெருமானாக நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

ஆலயத்திலே அரங்கநாதராகக் காட்சியளிப்பதை 'மாணிக்க சயனம்' என்பர்; பக்கத்தில் கிழக்குத் திசையை நோக்கியவாறு தனிக் கோயிலில் அரங்க நாயகித் தாயாரின் திருவுருவச்சிலை அருள் பாலிப்பதைக் காணலாம்.

மலையடிவாரத்தில் நின்ற கோலத்திலிருக்கும் நீலமுகில் வண்ணன் அருகே தாயார் அணிமாமலர் மங்கையைக் கண்டு வழிபடலாம். மேலும், மலை யடிவாரத்தில் சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமபிரானுக்கும் தனிக் கோயில் உண்டு. அங்கும் சௌந்தரிய ஆராதனை புரியலாம்.

இவ்வாறாக, ஆன்மநலம் பயக்கும் அழகிய கடவுள் திருமேனிகள் பலவும் கொண்ட திருநீர்மலையை 'மாமலை' என ஆழ்வார் பாடியருளியது மிகப் பொருத்தமாகவே தோன்றும்.

1.13.4 திருக்கண்ணபுரம் - சிற்பச் செல்வங்கள்

தஞ்சை மாவட்டம் நன்னிலத்துக்கு அருகேயுள்ள திருக்கண்ணபுரம், கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரமென்றும், பூலோக வைகுண்டமென்றும், அஷ்டாட்சர மகாமந்திர சித்தி க்ஷேத்திரமென்றும் அழைக்கப்படும் தலப்பெருமை கொண்டுள்ளது; அதற்கேற்பச் சிற்பக் கலைச் செல்வங்களும் உண்டு. பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய அருளாளர்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற இத்திருத்தலத்தில் ஆழ்வார்கள் அனைவரின் திருவுருவங்களைக் கொண்ட ஆழ்வார் சன்னிதி உள்ளது.

கோயிற் கருவறையில், விலை மதிப்பரிய அணிகலன்கள் அணிந்த நீலமேகப் பெருமான் - திருக்கண்ணபுரப் பெருமாள் -

தங்க நீள்முடியும் பொன்னிறப் பொலிவும் கொண்டு கம்பீரமாகத் தோற்றமளிக்கிறார். அவர் திருக்கரத்தில் - ஒரு கையில் சங்கும் மறுகையில் பிரயோகச் சக்கரமும் ஏந்தியிருக்கக் காணலாம்; வரப் பிரசாதியான அவருக்கு இரு மருங்கிலும் இரு நாச்சியார்கள் கருணை தவழக் காட்சியளிக்கின்றனர். தண்டக மகரிஷியும் அஞ்சலி புரியும் கையினராய்க் கருடாழ்வாரும் அருகில் உள்ளனர்.

மூலவருக்கு முன்னர்க், காமனும் கண்டு *(அழகனுபவத்தால்)* காமுறும் அழகுடைய சௌரிராசப் பெருமாள் எனப் பெயரிய உற்சவர் உள்ளார். *(சூரர் எனும் வாசுதேவரின் மகனாகையால்* சௌரி ராசன் *எனப் பெயர் வந்திருக்கலாம்).* அவர் அருகே ஸ்ரீதேவி பூதேவி ஆண்டாள் ஆகியோருடன் மீனவர் குல மன்னனின் திருமகளாகிய பத்மினி நாச்சியாரும் சிலைவடிவில் சேவை சாதிக்கின்றார். இஃது ஒரு புறமிருக்கத் தனிக் கோயிலில் 'கண்ணபுர நாயகி' எனும் தாயார் அருளாட்சி புரிகின்றார். தாமோதரக் கண்ணன், சேனை முதலியார், இராமன், விபீடணன் ஆகியோருக்கும் தனியே சன்னிதிகள் உண்டு.

திருவருட் சிறப்பு மிக்க திருக்கண்ணபுரத்தில் அமைந்துள்ள விமானம் 'உத்பலாவதகம்' என அழைக்கப்படும்; கோயில் கட்டடச் சிற்பக்கலை நோக்கில், பிராகாரத்தை வலம்வருகையில் கண்க ளுக்குப் புலனாகாமல் இவ்விமானம் அமைக்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பு என்பர்.

1.13.5 ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலயம் - சிற்பக் கலைக் கருவூலங்கள்

பொதுவாகவே, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பட்ட திவ்ய தேசங்கள் அனைத்துமே வைணவப் பெருமையைப் புலப்படுத்தும் வகையில் புராணச் சிறப்புடன் பல சிற்பச் செல்வங் களைக் கொண்டு திகழ்கின்றன; எனினும், அனைத்தையும் மக்கள் பார்த்து வழிபாடியற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் சில திருத் தலங்களே சிற்ப நோக்கில் கூறப்படுகின்றன. அவற்றுள் ஸ்ரீவில்லி புத்தூர்ச் சிற்பங்களை ஈண்டுச் சிறிது காண்போம்.

இந்த ஆலய வளாகத்தில் வடகிழக்கே வடபத்ரசாயி கோயிலும் தென் மேற்கே நாச்சியார் கோயிலும் உள்ளன. தமிழ்நாட்டில் அரசின் சின்னமான கோபுரம் வடபத்ரசாயி ஆலய இராசகோபுரம்; எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் எத்தகைய சிறப்புடையது என்பது புலப்படும். இக்கோயில் பாண்டியர் காலந்தொட்டுப் பல்வேறு

மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட பெருமையுடையது; எனவே, சிற்பச் செல்வங்கள் இங்கே நிறைந்திருப்பதில் வியப் பில்லை.

விசயநகர - நாயக்க மன்னர்கள் காலத்தில் சிற்றரசர்கள் பலரும் திருப்பணிகள் புரிந்துள்ளனர். திருமண மண்டபம், கொடிமரம் இருக்கும் மண்டபம் ஆகியவற்றில் காணலாகும் சிற்பத் தூண்கள் நாயக்கர் பாணிச் சிற்பங்களாகும்.

ஆண்டாள் சன்னிதிக்கு முன்னேயுள்ள ஊஞ்சல் மேடை வருவாரை வரவேற்கும்; அங்குள்ள மண்டப முன்பக்கத்தின் இரு முனைகளிலுமுள்ள தூண்களில் சிலை வடிவிலுள்ள திருமலை நாயக்கரும், அவருடைய சகோதரரும் தம் அரசியர்களுடன் நின்ற வண்ணம் வரவேற்பர். அந்த உருவச் சிற்பங்களுக்குப் பித்தளைக் கவசம் போர்த்தப்பட்டுள்ளது.

ஏகாதசி மண்டபம், கண்ணாடி மாளிகைக்கு முன்னருள்ள மண்டபத்தில் வரிசைக்கு நான்கெனச் சிற்பத் தூண்கள் எட்டு உள்ளன. இவற்றில் நான்கு சிற்பங்கள் வீரர்களின் வில் வாள் முதலிய கருவிகளுடன் உருவச் சிற்பங்களாக உள்ளன; எஞ்சிய நான்கு சிற்பங்களுள் இரண்டில் பாரதச் சிறப்புடைய கர்ணன் அருச்சுனன் திருவுருவங்களைக் காணலாம்; நாக பாணத்துடன் தோன்றும் கர்ணனும், தவமிருந்து பெற்ற பாசுபத அத்திரத்துடன் தாடிக் கோலத்தில் அருச்சுனனும், அவர்களுடைய அலங்கார மகுடங் களும் சிற்பத் திறன் கொண்டு விளங்குவது காணத்தக்கது. மற்ற இரு தூண்களில், இயற்கையாகவே வனப்புடைய இரதி ஒரு தூணிலும் மன்மதன் மற்றொரு தூணிலும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளனர். இது பற்றிக் க. இலக்குமி நாராயணன் விளக்குகையில், ''மன்மதன் தன்தேரில் நிற்கும் வகையில் சித்தரிக்கப் பட்டிருக்கிறான். அவனது வலக்கை முல்லை மலரம்பை விரல்களில் பிடித்திருக்கிறது; இடக் கை நீண்ட கரும்பு வில்லைப் பற்றியிருக்கிறது. கரும்பு வில்லிற்கு மலர் நாண் பூட்டப் பட்டிருக்கிறது. மன்மதன் சிறந்த அணிமணி களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறான். புன்னகை தவழும் முகத்தின் அழகை நெளிந்த மீசையும் கூரான மூக்கும் மேலும் உயர்த்து கின்றன. நீண்ட அவனது கிரீடம் சிறந்த வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. மன்மதன் தூணுக்கு நேர் எதிரே உள்ள தூணில் இரதியின் சிற்பம் உள்ளது. இரதி அன்னவாகனத்தில் அமர்ந்த நிலையில் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. வலக்காலை மடக்கி

அன்னத்தின் மீது ஊன்றி, இடக்காலைச் சேணத்தில் வைத்த நிலையில் இரதியின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது''[1] எனக் கூறுவது சிற்பக் கலை நேர்த்தியைக் குறிக்கும்.

கொடி மரத்தை ஒட்டி அமைந்துள்ள சிற்பத் தூண்களாகப் பக்கத்துக்கு ஒன்பதாக மொத்தம் பதினெட்டு உள்ளன. இவற்றில் நான்கு தூண்களில் யாளியின் உருவங்களைக் காணலாம்; மற்றும் நான்கு தூண்களில் அழகிய கொடிக் கருக்கு வேலையும் மலர்ச்சித் திரிப்பு வேலைப்பாட்டையும் காணலாம். எஞ்சிய சிற்பத் தூண் களுள் இரண்டில் திருமாலின் இரு நிலைகளைக் காணலாம்; ஒன்று, குழலூதும் வேணுகோபாலன் திருவுருவம் கொண்டது. ஏனைய தூண் சிற்பங்கள் பற்றிக் க. இலக்குமி நாராயணன் எழுதுகையில் ''நரம்பிசைக் கருவியை மீட்டும் பெண்ணைச் சித்திரிக்கும் சிற்பம் குறிப்பிடத் தக்கதாகும். நின்ற நிலையில், இடக்கையில் இசைக் கருவியைப் பிடித்துக் கொண்டு வலக்கையால் மீட்டுவது போலச் சிற்பம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்பத்தில் காட்டியுள்ள நரம்பிசைக் கருவியாகிய வீணைக்கு இரு குடங்கள் இருப்பது கவனிக்கத் தக்கதாகும். இரண்டு குடம் அல்லது ஒரு குடத்துடன் அமைந்த வீணை வங்கப் பகுதியைச் சேர்ந்த பாலர் சிற்பங்களில் காணப்படுவதாக முனைவர். ஜி. எச். தர்லேகர் தமது 'மியூசிகல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் இன் இந்தியன் ஸ்கல் பர் ஸ்' என்ற நூலில் குறிப்பிடுவார். தமிழ்நாட்டில் திருவரங்கம் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள வேணுகோபாலர் சன்னிதியின் வெளிச் சுவரில் சித்திரித்துள்ள பெண்கள் சிற்பத்தில் ஒன்று திருவல்லிபுத்தூர் பெண் இசைக்கும் வீணையைப் போன்ற வீணையை வைத்துக் கின்னரி வீணையிலிருந்து வளர்ந்த இசைக் கருவி இவ்வீணை எனலாம்''[2] என்று ஆராய்ச்சி நோக்கில் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

1.14 திருமால் பெருமையை விளக்கும் அற்புத நிகழ்ச்சிச் சிற்பங்கள்

வைணவப் பெருமக்கள் திருமாலின் பேராற்றலையும் பேரருளையும் உணர்ந்து புலப்படுத்தும் வகையில், திவ்ய தேசங்களில் பெருமானின் அற்புத நிகழ்ச்சிச் சிற்பங்களை வடிக்கச்

1. விருதுநகர் மாவட்ட நாயக்கர் சிற்பங்கள், அரசு அருங்காட்சியகம், சென்னை-8, பக். 29.
2. விருதுநகர் மாவட்ட நாயக்கர் சிற்பங்கள், அரசு அருங்காட்சியகம், சென்னை-8, பக். 30.

செய்துள்ளனர். அத்தகைய பெருஞ்சிறப்புடைய சிற்பங்கள் முழு வடிவச் சிற்பங்களாகவும், புடைப்புச் சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகளாகவும் காணக் கிடைக்கின்றன. மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருத்தலங்களேயல்லாமல், அடியவர்கள் பக்தியார் வத்தால் இக்காலத்தில் எழுப்பிடும் ஆலயங்களில் அவை இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

1. காரமடை அரங்கநாதர் திருக்கோயிலில் சுயம்பு மூர்த்தியாகத் திருமால் இலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். பள்ளி கொண்ட திருக் கோலத்தில் பல ஆலயங்களில் காட்சியளிக்கும் அரங்கநாதர் *(மூலவர்)* இலிங்க வடிவில் தோன்றுவது இத்தலத்திற்கே உரிய தனிச் சிறப் பாகும். *(கோவையிலிருந்து 27 கி.மீ. தொலைவில் மேட்டுப் பாளையம் சாலையிலுள்ளது காரமடை).*

காரமடையிலுள்ள 'மூலவர் சிவனா திருமாலா' என்ற சர்ச்சை ஏற்பட்டபோது, பிச்சு மன்றாடியார் எனும் பாளையக்காரர் கனவில் இறைவன் தோன்றி, மறுநாள் சூரியன் எழுவதற்கு முன் சந்தனக் காப்பு இடுமாறு கட்டளையிட்டுள்ளார். அதனைச் செய்கையில் சங்கு சக்கரதாரியாகத் திருமால் தோன்றித் தெளிவுபடுத்தினார் என்பது அற்புத நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுகிறது.

1.14.1 சிற்பப் படைப்பில் குறிப்பிடத்தக்க திருமால் வடிவங்களுள் சில

1. தேசிங்குராசன் வழிபட்ட அரங்கநாதன் - மிகப் பெரிய சிலை

"வேலூர் செஞ்சிக் கோட்டைக்கு மூன்று மைல்களுக்கு அப்பால் ஒரு குன்றின் மீது பள்ளி கொண்ட மகாவிஷ்ணு சிலை இருக்கிறது. இந்தச் சிலையைப் போல் பெரிய *(திருமால்)* சிலை வேறு எங்குமே கிடையாது. இந்தச் சிலையின் நீளம் இருபது அடி; உயரம் ஒன்பது அடி. இச்சிலை மகாபலிபுரம் சிற்பக் கலையைச் சார்ந்தது. இந்த இடத்திற்குச் சிங்கவரம் என்று பெயர். இந்த ரெங்கநாதரைத்தான் தேசிங்கு மன்னன் வழிபட்டு வந்தான்"[1] என்று வசந்தா கோவிந்தன் எழுதியுள்ளார்.

2. திருமாலின் மூவகைத் திருக்கோலங்கள்

நின்ற கோலத்திலும் அனந்த சயனக் கோலத்திலும், அமர்ந் திருக்கும் கோலத்திலும் காட்சித் தந்தருளும் திருமாலின் எழிற்

1. அம்மன் தரிசனம், செப்டம்பர், 2002, பக். 20.

கோலத்தினைத் திருநெல்வேலி கரிய மாணிக்கம் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் காணலாம்.

3. சங்கு சக்கரம் மாறியிருக்கும் திருமால் திருக்கோலம்

வலத் திருக்கையில் சங்கும், இடத்திருக்கையில் சக்கரமுமாகத் திருமால் மாறுதலாகக் கொண்டு காட்சியருளும் ஆலயம் திருக்கோயிலூர்.

4. புஜங்க சயனத்தில் சிறிய வடிவமும் பெரிய வடிவமும்

''புஜங்க சயனத்திலேயே பள்ளி கொண்ட பெருமாள் மிகச் சிறிய உருவம் கொண்ட ஆலயம் திருச்சிறு புலியூர்; மிகப்பெரிய திருவுருவம் கொண்ட இடம் திருக் கண்ணமங்கை''[1] எனும் தகவலை வெளியிட்டவர் தேனி, பொன். கணேஷ்.

5. மரக்கால், ஓலை, எழுத்தாணி கொண்ட சயனக் கோலம்

''தலையின் கீழ் மரக்காலும், இடக்கையில் ஓலை எழுத்தாணியுடன் பள்ளி கொண்ட நிலையில் பெருமாள் காட்சியளிக்கும் ஆலயம் திரு ஆதனூர்''[2] என வருங்குறிப்பு மிகச் சிந்திக்கத்தக்கது.

6. ஆதிசேடன் திருமாலுக்குக் குடை பிடிக்கும் காட்சி

''ஆதிசேஷன் குடை பிடிக்கப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சியளிப்பதை ஸ்ரீவைகுண்டத்தில் காணலாம்''[3] என வருங் குறிப்பும் மனங்கொள்ளத்தக்கது.

7. தரையில் பள்ளி கொள்ளும் பெருமாள்

''மாமல்லபுரத்தில் ஆதிசேஷன் இல்லாமல் தரையிலேயே சயனத் திருக்கோலத்தில் ஸ்தல சயனப் பெருமாளைக் காணலாம்''[4] என வருங்குறிப்பும் சிந்திக்கத்தக்கது.

8. கூழம்பந்தல் பேசும் பெருமாள்

வைணவத்தில் அழகு *(சௌந்தரிய)* ஆராதனை மிகச் சிறப்பாக உண்டு. அர்ச்சாவதார நிலையில் திருமால் தம் கண்களாலும்

1. தெய்வம் *(திங்களிதழ்)*, ஏப்ரல், 2002, பக். 73.
2. மேலது. 3. மேலது. 4. மேலது.

திருமேனிப் பொலிவாலும், அடியார்களுக்கு ஆன்மநலக் கவர்ச்சி யூட்டுவது இயல்பே. ஆனால், திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டத்திலுள்ள கூழம்பந்தல் எனும் திருத்தலத்தில் பேசும் பெருமாளாகத் திருமால் அருள் பாலிக்கிறார்.

இரண்டு மீட்டர் உயரமுள்ள ஸ்ரீதேவி பூதேவி ஆகிய தாயார் களுடன், 2.25 மீ. உயரத்தில் திருமால் கம்பீரமாக நின்ற கோலத்தில் உள்ளார்; அவர் தம் நான்கு கைகளுள், இரு கைகளில் சங்கும் சக்கர மும் இயல்பாக அணிசெய்ய, மற்றொரு வலக்கை வரத முத்திரை யும் எஞ்சிய இடக்கை தொடையில் பதிந்த படியும் அமைந்திருக்கக் காணலாம். 44 செ.மீ. உயரமுள்ள நீண்ட முடியும், பல அணிகலன் களும் பெருமாளை அலங்கரிக்க, இரு தேவியரையும் தலை மகுடங் களும் பல அணிகலங்களும் அணிசெய்ய, அடியவர்களைத் தம்பால் ஈர்க்கும்.

இத்திருக்கோலம் பற்றித் தாமரைக் கண்ணன் எழுதுகையில், ''பெருமாள் முன்பு நின்று நோக்கினால், பெருமாள் கருணையுடன் நம்மை நோக்கிப் புன்முறுவலுடன் நம்மிடம் பேசுவது போலவே தோன்றுகிறது! அதனால், பேசும் பெருமாள் என்கின்றனர்.

கண் இமைக்காமல் நாளெல்லாம் பார்த்து வணங்கத்தக்க இத் திருமேனிகளின் அழகும், நிற்கும் பாங்கும் கண் கொள்ளாக் காட்சி. இவ்வளவு உயரமும் எழிலும் வாய்ந்த திருவுருவங்களை வேறு எங்கும் காண இயலாது. இத்திருமேனிகளின் காதுகளில் மிக மிகச் சிறிய ஊசி நுழைவதற்குரிய, கண்ணுக்குத் தெரியாத துவாரங்களை அமைத்துச் சிற்பிகள் தம் கலைத் திறனையும் கைவண்ணத்தையும் காட்டியுள்ளனர். இக்கோயிலின் தனிப் பெருஞ் சிறப்பு, தாயார் இருவருமே தங்கள் வலக்கையில் தாமரை மலரைப் பற்றியிருப்பது. இது மிக மிக அரிதான காட்சி. மற்றக் கோயில்களில் ஒரு தேவி வலக்கையிலும், இன்னொரு தேவி இடக்கையிலும் தாமரையை வைத்திருப்பர். இங்கு இதிலும் ஒரு புதுமை''[1] என்று விளக்கி யுள்ளமை காண்க.

---

1. *தினமலர் தீபாவளி மலர், 1998, பக். 432.*

சாக்த சமய நெறியில் தந்திர, யந்திர, மந்திரங்களால் தெய்வச் சிலைகளுக்கு மூர்த்திகரம் *(மகத்துவம்)* உண்டாகுதல்

பொதுவாக இந்து சமயத் தெய்வ மூர்த்தங்களை ஆலயத்தில் நிலைபெறுமாறு *(பிரதிட்டை)* செய்கையில் யந்திரத்தாலும் மந்திரத் தாலும் பக்தியார்வத்துடன் மகத்துவம் உண்டாக்க அருளனுபவச் சான்றோர்கள் ஈடுபடுவர். சில வேளைகளில், அப்படியும் பிரதிட்டையாக வில்லையெனின் சித்தர்களும் இப்புண்ணியச் செயலில் ஈடுபாடு கொள்வர். இதற்கும் வரலாறுகள் உண்டு. எடுத்துக் காட்டாகத் தஞ்சைப் பெரிய கோயிலில், கருவறைச் சிவலிங்கம் பிரதிட்டையாகாமலிருந்து கருவூர்ச் சித்தரால் பிரதிட்டை யாகியதை நினைவிற் கொள்ளலாம்.

சிவாலயங்களிலும் திருமால் திருத்தலங்களிலும் பொதுவாக யந்திர, மந்திரப் பயன்பாடுகள் உண்டு; ஆனால், சக்தித் திருத்தலங் களில் யந்திர மந்திரங்களுடன் தந்திரச் செயற்பாடும் உண்டு; இது காரணமாகத் தாந்திரிகச் செயல்முறைகள் வடநாட்டிலிருந்தும், சிறப்பாக ஆந்திர மாநிலத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டன என்பர். தாந்திரிகக் குறிப்புகளைச் சித்தர் திருமூலரும் அவரியற்றிய திரு மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். மக்கள் கூட்டம் மிகுந்து வழிபடும் நிலையில் ஜனாகர்ஷண யந்திரமும், ஆலயங்களில் பொருட்சுவை மிகும் வகையில் தனா கர்ஷண யந்திரமும், பொன் மிகுதியாக வரும் நோக்கத்தில் சொர்ணாகர்ஷண யந்திரமும் மூலவர் பீடத்தில் பிரதிட்டை செய்வர். இச்செய்திகளையும் இது தொடர்பான பல நுட்பக் குறிப்புகளையும் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் என்னிடம் நேரில் கூறக் கேட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் முதலிய பல திருக் கோயில்களில் கருவறையிலுள்ள இறைத்திரு மேனிகளுக்குப் பேராற்றலும் பெருங்கருணையும் உண்டாகும் நோக்கத்தில் ஆதி சங்கராச்சாரியார் ஸ்ரீசக்கரம் நிறுவியுள்ளதையும் ஈண்டு நினைவிற் கொள்ளலாம். இவ்வாறாகத் தெய்வச் சிலைகளுக்குப் பல ஆன்ம நல உத்திகள் கையாளப்படினும், அவற்றின் சீரிய செயற்பாட்டுக்கு ஆலயத்தில் ஆகம முறைப்படி புரிந்திடும் திருக்குடமுழுக்கும்

தவிர்க்க இயலாத தேவையாகும். தமிழகத்தில் தென் மாவட்டங் களில் நடைபெறும் 'தச்சுக் கழித்தல்' என்ற ஒருவகைச் சடங்கினைச் சிற்பியரால் நிகழ்த்தினால் பயன்கள் மிகக் கூடும்.

பொதுவாக இறைவனுக்கும் இறைவிக்கும் ஆன்மாக்களை உய்விக்கும் நோக்கமே முதன்மையாக இருப்பதால், உறக்கமென் பது தலைகாட்ட வழியில்லை. எனினும், பாதுகாப்புக் கடவுளாகிய திருமாலைச் சயனக் கோலத்திலும், ஐந்தொழில் புரிந்திடும் சிவனைச் சுருட்டப் பள்ளியில் சயனக் கோலத்திலும் காண்பதே போல் அகிலாண்ட நாயகியாகிய அன்னை சக்தி தேவியை ஆனைமலைத் திருக்கோயிலில் சயனக் கோலத்தில் காணலாம்; இது சிற்பவுலகில் பெரிதும் அபூர்வக் கலைப் படைப்பெனலாம்.

1.1 சக்தியின் புலப்பாடும் சப்த மாதர் சிலைகளும்

பண்டைக் காலத்திலிருந்து சக்தி வழிபாட்டின் ஒரு கூறாகக் கொற்றவை வழிபாடு பக்தியீடுபாட்டுடன் தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. எனினும் சிற்ப நூல் விதிப்படி சப்த மாதர் சிலைகள் பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டன என்பது தெரிய வருகிறது.

அறுவகைச் சமயங்களுள் ஒன்றர்கிய சாக்தக் கொள்கைப்படி, சக்தியின் வடிவமே உலகம்; உலகமோ உலகின் இயக்கமோ கோள் களின் சுழற்சியோ, இயற்கையின் வனப்போ, ஐம்பூத நிகழ்ச்சி களோ, உயிர்கள் உள்ளிட்ட உலகப் பொருள்களின் தோற்றமே சக்தி யின் ஆற்றலின்றி நிகழாது. அறிவுமயமான சக்தி மக்களின் இடம், காலம், மனம் முதலியவற்றுக்கு எட்டாத நிலையில் அகண்டா காரத்தில் விரிந்தும் நின்றும் ஒடுங்குகிறது. சிவமும் சக்தியும் ஒடுக்கம் என்பதும் உணர்தற்குரியது.

எங்கும் எதனிலும் எஞ்ஞான்றும் நீக்கமற்ற நிறை பொருளாக விளங்கும் ஆதிசக்தியாகிய பராசக்தி, பல்வகைச் சக்திக் கூறுகளைக் கொண்டருள்வதாலேயே அண்டங்களெல்லாம் தத்தம் நிலையில் ஒழுங்குக்கு உட்பட்டுள்ளன. எனினும், உலகுயிர்களின் உய்திக்காக ஆதிசக்தி, பராசக்தி என்றும், பூரணி என்றும், இராசராசேசுவரி என்றும், மூலப்பிரகிருதி என்றும் திருப்பெயர்கள் கொண்டருள் கின்றாள். இதே சக்திக் கூறுகளைச் சப்தமாதர் அடிப்படையில் சிந்திக்கையில், மும்மூர்த்திகள் முதலிய ஆற்றல்'மிகு தெய்வங் களின் தேவியர்களாக அமைந்து கடமையாற்றுகின்றனர்.

தேவர்		தேவியர்
பிரமன்	-	பிரம்மாணி *(பிராமி)*
மகேசுவரன்	-	மகேசுவரி
குமரன்	-	கௌமாரி
விஷ்ணு	-	வைஷ்ணவி
பூவராகன்	-	வராகி
சிவபெருமான்	-	சாமுண்டி
இந்திரன்	-	இந்திராணி

இவ்வாறான சப்தமாதர்களுக்கும் தனித்தனியே வாகனம் உண்டு. பிரம்மாணிக்கு அன்னமும், மகேசுவரிக்கு இடபமும், கௌமாரிக்கு மயிலும், வைஷ்ணவிக்கு கருடனும், வராகிக்கு எருமையும், சாமுண்டாவுக்குச் சிம்மமும், வாகனமாக அமையும்; எனினும், சிற்பக் கலைப் படைப்பில் வாகனமின்றியே பெரும்பாலும் அமைக்கின்றனர். தனிப்பட்ட நிலையில் விழாக் கொள்ளுங் காலத்து ஊர்தியுடனோ ஊர்தியில்லாமலோ ஆலய வசதிக்கேற்பச் சக்திப் புலப்பாடு அமைகின்றது.

முன்னொரு காலத்தில் ஏழு கன்னியர் எனும் நோக்கிலே பிராமி மகேசுவரி கௌமாரி வைணவி வராகி சாமுண்டி இந்திராணி ஆகிய சக்திகளுக்குப் பெருஞ்சிறப்பு அளிக்கப்பட்டமையால், அந்தச் சக்திகளுக்குத் தனித்தனியே சிறுகோயில்கள் கட்டப்பட்டு, அவை வழிபாட்டுச் சிறப்புடன் விளங்கின; காலப்போக்கில் அவை சிதைந்து போனமையால், அவற்றிலிருந்த கற்சிலைகள் ஒரு சேரத் திரட்டப் பட்டன; அவை பெரிய கோயில் பிராகாரத்தில் அட்ட பரிவார தேவதைகளுள் ஒரு பிரிவில் அடக்கி இந்த ஏழு மாதர்களுடன் யோகேசுவரி எனும் சக்தியையும் சேர்த்துக் கன்னியர் எண்மர் எனப் பெயரிட்டு வழிபடலாயினர் என்கின்றனர். இவர்களைக் கிராம தெய்வங்கள் எனும் நோக்கில் சக்தியின் ஆற்றல்களாகப் போற்றிப் பலரும் வழிபட்டு வந்துள்ளனர் எனவும் கூறுவர். அன்னையர் எழுவர் *(சப்த மாதர்),* கன்னியர் எழுவர் (சப்த கன்னியர்) என்றும் வழங்கப்படுவர்.

அன்னையர் எழுவர் சிலையமைப்பில் காணலாகும் சிற்பக் கலை நுண் கூறுகளாக நோக்கத்தக்க சில குறிப்புக்கள் வருமாறு:

பிராமி

நான்கு கை - வரதம், அபயம், கமண்டலம், அக்கமாலை *(உருத்திராக்க மாலை)* இருக்கும்; பொன் நிறம், அன்ன வாகனம்.

மகேஸ்வரி

நான்கு கை - சூலம், அபயம், வரதம், அக்கமாலை இருக்கும். வெண்மை நிறம், இடப வாகனம்.

கௌமாரி

நான்கு கை, அங்குசம், வேல், அபயம், வரதம் இருக்கும். குங்கும நிறம், மயில் வாகனம்.

வைஷ்ணவி

நான்கு கை, சங்கு, சக்கரம், அபயம், வரதம் இருக்கும். கரிய நிறம், கருட வாகனம்.

வாராகி

பன்றி முகம் உடையவள், நான்கு கை, கலப்பை, உலக்கை, அபயம், வரதம் இருக்கும். கரிய நிறம், கருட வாகனம்.

இந்திராணி

நான்கு கை, வரதம், அபயம், வச்சிரம் *(வச்ராயுதம்)* சக்தி *(வேல்)* இருக்கும். செம்மை நிறம் யானை வாகனம்.

சாமுண்டா

மண்டை யோட்டு மாலை, திரிசூலம், சின்னம் கொண்ட வளாய் விரித்த சடையுடன் கரிய நிறத்தில் காட்சியளிப்பாள்.

மேலே கூறப்பட்ட அன்னையர் எழுவரும் திருமணமான வர்கள் கணவன்மார்க்குரிய அனைத்து ஆற்றல்களும் இவர்களுக் கும் உண்டு.

புதிதாக நகரம் அமைக்கும் போது அன்னையர் எழுவருக்குக் கோயில் அமைப்பதுண்டு.

சப்த மாதர்களைப் போலச் சப்த கன்னியர்க்கும் ஒரு காலத்தில் சிலையெடுத்து வழிபட்டுள்ளனர்; அந்தச் சிலைகள் கிடைக்

கின்றனவா எனக் கள ஆய்வு புரிந்தால் தெளிவாகும். கன்னியர் எழுவராக, 1. முனி கன்னிகை, 2. தேவ கன்னிகை, 3. தாம்ரைக் கன்னிகை, 4. நீர்க் கன்னிகை, 5. மலைக் கன்னிகை, 6. வன கன்னிகை, 7. சுமதி கன்னிகை ஆகியோர் ஆவர். இவர்கள் திருமண மாகாத கன்னியர் ஆவர், எனச் சமயச் சான்றோர்கள் கருதுங் குறிப்பும் மனங்கொள்ளத்தக்கது.

புராணப் பின்னணியில், சிவபெருமான் அந்தகாசுரனுடன் போர் புரிய முற்பட்டபோது, அவன் குருதியினின்றும் ஆயிரக் கணக்கான அசுரர்கள் தோன்றினர் என்றும், அந்த இக்கட்டான சூழலில் திருமால் தம் சக்கரப் படையால் அசுரர்களைக் கொல்ல முற்பட்டார் என்றும், சிவபெருமான் தன் சூலத்தால் அந்தகா சுரனைச் சேர்த்துக் கொண்டு தாண்டவமாடத் தொடங்கினான் என்றும் கூறுவர். மேலும், அசுரனின் குருதி கீழே வீழாமலிருக்க யோகேசுவரியைத் தோற்றுவித்தான் என்றும், பிரமன் முதலிய தேவர்களும் தத்தம் தேவியராகிய சப்த மாதர்களை அனுப்பி உலக நன்மைக்கு ஒத்துழைத்தனர் என்றும் கூறுவர்.

சப்த மாதர் சிலைகள் தில்லைச் சிவகாமியம்மன் கோயிலிலும், தில்லை இளமையாக்கினார் கோயிலிலும், பிற தலங்களிலுள்ள பெரிய கோயில்களிலும் சிறப்புச் சிறப்புடன் காணப்படுகின்றன. எனினும், தில்லை விளங்கியம்மன் கோயிலில் காணலாகும் சப்த மாதர் சிலைகள் மிகப் பண்டைய *(பல்லவர்)* காலத்துச் சிலை களாகத் தோற்றமளிக்கின்றன.

தாண்டவமாடும் சிவபெருமானுடன் சப்த மாதர்களும் ஒத்துழைப்பு நல்கும் வகையில் நடனமிடுகின்றனர் எனும் கருத்துப் பரவலால், சிற்பியர் சப்த மாதர்கள்ள நடனக் கோலத்திலும் அமைக்கலாயினர். திருப்பரங்குன்றம் - குடைவரைக் கோயிலில் நடனக் கோலச் சப்த மாதர்களைச் சிற்பியர் அமைத்துக் காட்டினர்; எனினும், இச்சிற்பங்களைக் காண இயலாத நிலையில், பிற்காலத்தே எழுப்பப்பட்ட சுவர்ப் பகுதி மறைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், மேலைச் சளுக்கியர் *(கி.பி. ஆறாம் நூற்றாண்டு)* தம் கலைப் பாணியாக நடனமிடும் சப்த மாதர் சிற்பத்தை 'அய்ஹோலோ'யில் காணலாம். அலகாபாத் அருங்காட்சியகத்திலும், வட நாட்டில் பிற சில இடங்களிலும் இத்தகைய காட்சிச் சிற்பங்களைக் காணலாம்.

சிற்பக் கலை நோக்கில் திருமாணிகுழி, வாமனபுரீசுவரர் ஆலயத்தில், ஒரே கல்லில் அமைந்த சப்த கன்னியர் திருவுருவங்

களைக் கண்டு போற்றி வியந்து நிற்கலாம். இவ்வாறே நாடெங்கும் சிற்பக் கலைப்படைப்புகளைத் தேர்ந்து ஆராய முற்படின், சிற்ப நுணுக்கங்களும் விவரங்களும் கிடைக்க வாய்ப்பு உண்டாகும் என்பது உறுதி.

சுருங்கக் கூறின், சிற்பக் கலை வளாகத்தில் அமைந்திடும் எல்லாச் சக்தியுருவங்களும் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஆகிய முப்பெருஞ் சக்திகளின் பல்வகைக் கூறுகளேயாகும்.

1.2 காஞ்சி – காமாட்சியம்மன் திருக்கோயிற் சிற்பங்களும் பெருமையும்

காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி, தில்லைச் சிவகாமி, திருவாரூர் கமலாம்பிகை, நாகை நீலாயதாட்சி, திருக்கடவூர் அபிராமி, திருவண்ணாமலை உண்ணாமுலை முதலிய சக்திகள் ஆதி பராசக்தியின் திருவருட் கூறுகளாக அவ்வத் தலங்களிலும் அருள் பாலிப்பதைப் பலரும் அறிவர்; இத்தகைய தெய்வ நலப் பெரு நிலைக்கு அருள் வடிவப் பெருஞ்சிற்பங்களும் துணை புரிகின்றன. காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில் காணலாகும் சில சிறப்பு மிகு சிற்பங்களைக் காண்போம்.

காமாட்சியம்மன் ஆலயத்து முதல் பிராகாரத்தின் நடுவில் 24 தூண்களுடன் காயத்ரி மண்டபம் அமைந்துள்ளது. அந்த மண்டபத் தின் நடுவே காமகோடி பீடம் எனும் ஸ்ரீ சக்கரம் நிறுவப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் காமகோடி காமாட்சியின் திருவுருவம் நான்கு திருக்கைகளுடன் பத்மாசனத்தில் எழுந்தருளியுள்ளதைக் காணலாம். பெரும் வரப்பிரசாதியாகிய காமாட்சியை ஸ்ரீ சக்கர நாயகி, மகா தேவி, திரிபுர சுந்தரி, இராச ராசேசுவரி, காமேசுவரி முதலிய திருப் பெயர்களால் அழைப்பர்.

ஸ்ரீ சக்கர நாயகியாகிய காமாட்சியம்மையை, அட்ட இலக்குமியையும் அமைத்துள்ள சக்கர பீடத்தில் நிறுவியிருப்பதால் எல்லா நற்பேறுகளும் அவ்வம்மையின் அருளால் கிட்டும் என்பது மக்களின் பெரு நம்பிக்கை. அம்மையைத் தூல, சூக்குமம், காரண வடிவங்களில் காணும் அணுகுமுறை ஒரு பக்கமிருக்க, அந்தச் சக்தி. வளாகத்தில் காணலாகும் தெய்வ மூர்த்தங்கள் சிலவற்றைக் காண்போம்.

''இத்திருக்கோயிலில் கருவறை முன் மண்டபத் தென்புறத்தில் வராகியும் எழுந்தருளித் திகழ்கின்றாள். வராகியின் எதிரில் சந்தான ஸ்தம்பம் உள்ளது. இதனை வலம் வந்து வழிபடும் அன்பர்கட்கு

வமிச விருத்தியாகிய மக்கட் செல்வம் உண்டாகும் என்பது காமாட்சியம்மையின் அருள்வாக்கு.

காயத்ரி மண்டபத்தில் தேவிக்கு வலப்பக்கத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் அர்த்த நாரீசுவரர் திருச்சந்நிதி உள்ளது. கோயிலின் மூன்றாவது கிழக்குப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு காசி விசுவநாதர் திருச்சந்நிதியும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலின் முதல் பிராகாரத்தில், காயத்ரி மண்டபத் திற்குச் செல்லும் வழியில், தென் கிழக்கை நோக்கிய வண்ணம் அன்னபூரணி காட்சி தருகிறாள். மூன்றாவது பிரகாரத்தில் கீழ்க் கோபுரத்தின் உட்புறத்தில் தேவியை நோக்கிய வண்ணம் மகிடாசுர மர்த்தனி நின்ற திருக்கோலத்தில் விளங்குகின்றாள்.

இக் காமகோட்டத்தில் சாஸ்தா சந்நிதியும், அட்டபுய சரசுவதி சந்நிதியும், துருவாசர் சந்நிதியும், ஆதிசங்கரர் சந்நிதியும், கன்வர் பெருமாள் சந்நிதியும், உற்சவ காமாட்சி சந்நிதியும், கால பைரவர் சந்நிதியும், துர்க்கை சந்நிதியும், பூதநிக்கிருக பெருமாள் சந்நிதியும், ஆகப் பல சந்நிதிகளும் அமைந்து விளங்குகின்றன''[1] என்று ஸ்வப்ரகாஸ் விளக்கிச் செல்வது மனங் கொள்ளத்தக்க கலை நோக்கக் குறிப்புகளாகும். மேலும், இவ்வாலய வளாகத்திலுள்ள பிற சிற்பக் கலைப் படைப்புகளை விரிக்கிற் பெருகும்.

1.2.1. காமாட்சியம்மையின் சிலையமைப்பும் அருளாளர்கள் கருத்தும்

பராசக்தியான காமாட்சியின் திருமேனி மக்களின் மனோ விருத்தியும் இந்திரிய விகாரங்களும் அடங்குதற்கும் அவர்களை நன்னெறிப் படுத்துவதற்குமாகவே அமைந்தது என்பது அருளாளர் களின் கருத்தாகும்.

காமாட்சியின் நான்கு திருக் கைகளில் ஒன்றில் கரும்பு வில்லும், மற்றொன்றில் மலரம்புகளும், ஏந்தியிருப்பது பற்றிக் கூறுகையில், மதுரமான கரும்புவில் மனம் எனும் தத்துவக் குறியீடாகவும், ஐந்து மலரம்புகளும் மக்களின் ஐம்புலன்களைக் கவர்ந்து செயலற்றுப் போகும்படி செய்து இறைமையில் ஒன்றச் செய்வதன் தத்துவக் குறியீடாகவும் குறிப்பிடுவர். *(மன்மதன் தன் கையில் கரும்பு வில்லும் மலரம்புகளும் வைத்துள்ளான்; ஆனால் அவன் கருத்து உலக நோக்கில் உலகக் கலவியிலே தள்ளுவதாகும்.)*

---

1. ஜோதிட பூமி (திங்களிதழ்), ஜூலை, 2000, பக். 63.

காமாட்சி, தன் எஞ்சிய இரு கைகளில் வைத்திருக்கும் பாசமும் அங்குசமும் மக்களின் ஆசைகளை நீக்கி அவர்களை அம்மையுடன் பிணைக்கும் கயிறு என்றும், மக்களின் துவேசங்கள் போன்ற தீயன வற்றைக் குத்தியடக்கும் சக்திமிகு கருவி என்றும் தத்துவப் புலப் பாட்டினை எடுத்துரைப்பர்.

காமாட்சியின் வண்ணத்தை விளக்குகையில், நிறமே இல்லாத பிரம்மத்திலிருந்து செவேல் என்ற பரம கருணையுடன் உதய சூரியன் போலவும், மாதுளம்பூ போலவும், குங்குமப்பூப் போலவும், செம்பருத்தி மலர் போலவும் செம்மையுடன் திகழ்கிறாள் எனக் குறிப்பிடுவர்; செம்பொருள் என்பதன் புலப்பாடு எனவும் கூறுவர்.

காமாட்சியம்மன் திருவுருவம் இவ்வாறெல்லாம் சிந்தித்தற் குரிய நிலையில் அமைந்திடுவது ஒரு புறமிருக்க, அடியவர்களும் அருளாளர்களுமாகச் சிலர் சேர்ந்து, காமாட்சியை மகிடாசுர மர்த்தனி யுடன் தொடர்புபடுத்தி வழிபாடு செய்து வருகின்றனர். விசுவ கர்மாக்களாகிய கம்மாளர்கள் தம் குலதெய்வமாகக் காமாட்சி யம்மனை மூலவராகக் கொண்டு கோயில்கள் பல கட்டியுள்ளனர்; அக்கோயில்களில் சூரசம்மாரம் என்ற திருவிழாவை நவராத்திரித் தொடர்புடன் ஏற்படுத்தி, மகிடாசுரனை அம்மன் சம்மாரம் புரிதலை நடத்திக் காட்டுகின்றனர். எனவே, மகிடாசுரமர்த்தினியும் காமாட்சி யம்மையும் ஒன்றெனவே கொள்ளுதல் நெடுங்காலமாகவே வழக்கில் இருந்து வருகிறது.

இஃது ஒரு புறமிருக்கச், சென்னையிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள மாங்காடு எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள காமாட்சியம்மை தவக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். கருவறையில் பஞ்சலோகத்தில் அமைக்கப்பட்ட ஆதிகாமாட்சி ஒரு கையில் கிளியுடனும், மறுகையில் கரும்போடும் கூடிய சாந்தமான காமாட்சி அருளுவதையும், கோயிலின் இடப்புறத்தில் தவக் காமாட்சி தன் இடக்காலின் கட்டை விரலின் நுனியில் அக்கினி படும்படியும், வலக்காலை இடக்காலின் தொடைக்குச் சற்று மேற் புறத்தில் இருக்குமாறும், இடக்கையை நாபிக் கமலத்தில் சற்று மேற்புற மாயும், வலக்கையில் செபமணியுடன் தன் தலை மீதும், கடுந்தவக் கோலமாகக் காட்சியளிப்பதைக் காணலாம். இங்கும் எட்டு மூலிகைகளாலான ஸ்ரீ சக்கரம் அமைந்துள்ளது.

1.2.2 காளிதேவி

சிற்றூர்ப் புறத்தெய்வமாகவும், மூர்த்திகரத்தால் பெருந் தெய்வமாகவும் விளங்கும் காளி, பல ஊர்களில் ஊர்ப் பெயரைச்

சார்த்தியும், புராணக் கூறுகளைச் சார்த்தியும் பல திருப்பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். 'காளி' என்றதுமே கோரவுருவம், கோரப் பல் கபால மாலை, பல திருக்கைகள் நினைவிற்கு வரும்; ஆவேச உருவத்துடன், பல படைக் கருவிகளைத் தாங்கிய அச்சுறுத்தும் தெய்வம் என்றும் சிலர் நினைப்பர். ஆனால், உண்மையில் தீய வற்றை நீக்கி, நல்லோர்க்கு நன்மையளிக்கும் - ஞானம் வழங்கும் - தேவியே அவள்; எளிய நிலையிலுள்ள ஒருவன், காளியின் திருவருளால் காளிதாசனாக மாறி, மகாகவியாகத் திகழ்ந்துள்ளான் என்பதை ஈண்டு இயைபுடன் நினைவிற் கொண்டால், 'காளி நல்ல வளே' என்பது தெளிவாகும். புராணப் பின்னணியைச் சிறிது கண்டு கொண்டு, சில சிற்பப் படைப்புகளைக் காண்போம்.

தட்சன் பெரு வேள்வி நடத்துகையில், சிவபெருமானை மதிக் காமல், அழைப்பு விடுக்கவில்லை. பெருமானின் சொல்லைக் கேட் காமல் இறைவி தாட்சாயனி, தன் தந்தை தட்சன் புரிந்த வேள்விக் களத்திற்குச் சென்று, அவமதிக்கப்பட்டாள். சினங் கொண்ட இறைவியே காளி தேவியாக வடிவெடுத்தாள். ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் கொண்ட பேருருவத்துடன் தோன்றிய காளி, தனக்குத் துணையாக காளிகள் எண்மரையும் தோற்றுவித்தாள். ஆகக் காளியர் ஒன்பதின்மரும் வீரபத்திரருடன் சேர்ந்து தக்கனது வேள்வியையும் தக்கனையும் அழித்த செய்தியைப் புராணம் கூறும். மேலும், காலனையே வதைத்த காலசம்மாரர் போலக் காளிதேவியும் காலனை விரட்டும் ஆற்றலுடையவள் என்றும் புராணம் கூறும்.

பண்டைக் காலத்திலேயே தமிழ்ப் பெருமக்கள் தம் பாலை நிலத் தெய்வமாகக் 'கொற்றவை'யெனும் காளியை வழிபட்டு வந்துள்ளனர்; போரில் வெற்றி வழங்கும் தெய்வமாகவே கொற்றவையைப் போற்றிய மரபு தொடர்ந்து கொண்டே வந்துள்ளது. பிற்காலச் சோழர்கள் காலத்தில், சிறப்பாக முதலாம் இராசராசன் காலத்தில், திரிபுராந்தக மூர்த்தியையும் நிசும்ப சூதினியாகிய காளியையும் வீரமும் வெற்றியும் விளைவிக்கும் கண்கண்ட தெய் வங்களாகவே வழிபட்டு வந்துள்ளமை வரலாற்றால் அறியலாம்.

தஞ்சாவூரில் நிசும்பசூதினி ஆலயத்தைக் காளிகோயில் என்றே இன்றும் ஊர் மக்கள் அழைத்து வருகின்றனர்; ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் காளிக்குரிய 'இராகு காலப் பூசை' அங்கு நடைபெற்று வருகிறது.

இதற்கு காளியைப் பற்றி இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் மு. அருணாசலம், ''நிசும்ப சூதினி வடிவம் ஆறடி உயரமும் அதற்கேற்ற கனத்த ஆகுதியும் உடையது. கருவறை வாயிலில் துவார பாலகி யரும் உள்ளனர்; இவை சுதையால் அமைந்தவை நிசும்ப சூதினியின் உருவம் இருந்த *(அமர்ந்த)* கோலம்; இடக்கால் மடிந்துள்ளது; வலக் கால் கீழே படுத்துக் கிடக்கின்ற நிசும்பன் தலையில் மிதித்திருக் கிறது. அவனையன்றிப் பின்னும் சில அசுரர்களை ஓர் ஆசனம் போல் அமுக்கி வைத்து, அவ்வாகனத்தின் மீது தேவி அமர்ந்திருக் கிறாள். தேவிக்கு எட்டுக்கைகள் *(அட்ட புஜங்கள்)*, எட்டுக் கைகளிலும் சூலம், வாள், கேடயம், கபாலம், டமருகம் *(உடுக்கை)*, வில், அம்புகள் உள்ளன. ஒரு கை கஜ ஹஸ்தம்; வாகனம் இல்லை. தலை யில் சுடர் அமைந்த கிரீடம் உள்ளது. தேவியின் தலை இடப் பக்கம் சற்றுச் சாய்ந்தே உள்ளது''[1] என்று நன்கு விளக்கிச் சென்றுள்ளார்.

தொடர்ந்து சில ஊர்களில் அமைந்துள்ள மிகச்சிறப்பான காளி கோயில்களில் அமைந்துள்ள சிற்பக் கலைப் படைப்புகளைக் காண்போம்.

1.2.1 அம்பகரத்தூர் காளி

காரைக்காலிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளது அம்பகரத்தூர், வடக்குப் பார்த்த கோயிலின் கருவறையில் காளி, வர்ணம் தீட்டப் பட்ட சுதைத் திருமேனியளாகக் காட்சியளிக்கிறாள். அம்பர்மாகாளம் காளகண்டேசுவரர் திருக்கோயிலின் வெளிப் பிராகாரத்துத் தென் பாகத்தில் அருளாட்சி புரிந்திடும் பத்திரகாளியான இவ்வம்மையின் திருமேனியை எவரும் தீண்டுவதில்லை. பூசையின் போதும் அன்னையின் திருவுருவத்தைத் தீண்டாமல், சிறிது தூரத்திலிருந்து கொண்டு கோல் ஒன்றில் உதவியால் ஆடை முதலியவற்றைச் சாத்திய பிறகு வழிபாடு நடைபெறும். அம்பகரன் எனும் அசுரனைக் கொன்ற கோலத்துடன் காளி விளங்குவதால், மக்கள் பயபக்தி யுடனேயே சென்று வழிபட்டுப் பயன் கொள்கின்றனர்.

1.2.2.2 கவைய காளியம்மன்

கோவையிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ளது கோவில் பாளையம்; அங்குள்ள கவைய காளியம்மன் கோயில் முகப்பில் கொங்கு நாட்டுக் கோயில்களில் காணப்படும் கருங்கல்லால் ஆன

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, மார்ச்சு, 1980.

தீபத்தம்பம் சன்னிதியும் வலப்புறத்தில் முருகன் சன்னிதியும் உள்ளன. கருவறையில் அமர்ந்த திருக்கோலத்தில் கவைய காளியம்மன் நான்கு திருக் கைகளுடன், தன் இடக் காலை அசுரன்மீது வைத்தவாறு காட்சி தருகின்றாள். அவளுடைய பின் இரு கைகளில் திரிசூலமும் அக்கினியும் உள்ளன.

இக்கோயிலை வலம் வருகையில் காளியின் பெருஞ்சிறப்பு, அங்குள்ள தென் மேற்கு மூலையில் காணப்படும் வீரர் மூவரின் சிலையமைப்புகளால் புலனாகும். சிலைகளிலுள்ள வீரர்கள் தம் குறுவாளினால் தங்கள் கழுத்தைத் தாங்களே அறுத்துப் பலியிட்டுக் கொள்ளும் காட்சி தெரிய வரும்; 'நவகண்டம்' எனப்படும் ஒருவகை அவிப்பலி இதனால் புலனாகும்.

வீரன் ஒருவன் காளியிடம் வேண்டிக் கொண்டு, தியாக நோக்கில் தன் உடலிலிருந்து ஒன்பது உறுப்புகளை வாளால்அரிந்து பலியிடுகையில் - முதற்கண் எட்டு உறுப்புகளின் தசையை அரிந்து காளியின் பலிபீடத்தில் சமர்ப்பித்து விட்டுக் கடைசியாகத் தன் தலையையும் அரிந்து பலியாக்குகையில் - அந்நிகழ்ச்சியை நவ கண்டம் என்பர். இத்தகைய நவகண்டம் குறித்த கற்கள் கொங்கு நாட்டில் நிரம்பக் கிடக்கின்றன. இவ்வாற்றான், காளியின் சிலை தியாக வீரர்களை வீர சொர்க்கத்திற்கு அனுப்பும் ஆற்றலுடையது என்பர்.

1.2.2.3 உறையூர் வெக்காளியம்மன்

பேராற்றல் வாய்ந்த வெக்காளியம்மன், திருச்சி வட்டாரத்தில் மிகவும் போற்றப்படும் தெய்வமாகும். இந்த அம்மன் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறாள்; தன் தலையில் சூடியிருக்கும் கிரீடத்தில் நாகமும் உள்ளது. பொதுவாகக் காளிதேவியின் கண்கள் அச்ச மூட்டும் வகையில் விழித்த பார்வை கொண்டிருக்கும்; ஆனால், இந்தக் காளிக்கோ இரு விழிகளும் கருணையுடன் சுடர் விட்டு ஒளி வீசுகின்றன. கோரப் பற்களேயெனினும் கோபக் குறிகள் பொதிந்தில்லை; புன்னகைத் திருமுகமே பார்ப்பவர்க்குத் தோன்றும். அவளுக்குள்ள நான்கு கைகளுள், மேற்புற வலக்கையில் உடுக்கையும், இடக் கையில் கபாலமும், கீழ்ப்புற வலக்கையில் சூலமும், கீழ்ப்புற இடக்கையில் பொற் கிண்ணமும் ஏந்திக் காணப்படுகிறாள். வலக்காலை மடித்து வைத்தும் இடக்காலைக் கீழ் நோக்கித் தொங்க விட்டிருக்கிறாள்; அந்தக் கால் ஓர் அரக்கனை மிதித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு சுகாசனத்தில் அமைந்துள்ள திருவுருவம் பற்றித் துரை. நமசிவாயம் ''மாரியம்மன், துர்க்கையம்மன், பவானியம்மன், பகவதியம்மன், காளியம்மன் என்று பற்பல பெயர்களால் வழிபடப் படும்... அம்மனின் திருமேனிகள் வலது காலைத் தொங்க விடப் பட்ட நிலையில் தான் *(வீராசனத்தில்)* உருவாக்கப்பட்டு, திருக் கோயில்களில் நிலைப்படுத்தப்பட்டு வணங்கப்பட்டுக் கொண் டிருக்கும். ஆனால், திருச்சிராப்பள்ளி நகரத்தின் ஒரு பகுதியாகிய உறையூரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வெக்காளியம்மன் காட்சி வேறுபட்ட ஒன்றாகும்... சுகாசன தரிசனம் செய்வதன் மூலம் மங்கலப் பலன்கள் மிக அதிகம் என்பது ஆய்வாளர்களின் கருத் தாகும். யாரோ சிற்பி அம்மையின் அருள் பெற்று உலக நாயகியாகிய வெக்காளி அம்மன் சிலையைச் செதுக்கி இருக்க வேண்டும். இந்தச் சுகாசனத் திருமேனி வடிவமே சரியானது என்பது அமரர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆய்வுரையாகும்''[1] என எழுதிச் செல்லும் அரிய குறிப்பு மனங்கொள்ளத்தகும்.

அருள்மிகு வெக்காளியம்மன் வெட்ட வெளியில், 'கூரை யில்லாத அம்மன்' என்று மக்கள் எண்ணும் வகையில், மழைக்கும் வெயிலுக்கும் ஈடுகொடுத்த வண்ணம் அருள்பாலித்து வருவதும் வியப்பிற்குரியதே; இதற்கும் ஒரு பின்னணிக் காரணம் உண்டு.

திருச்சி - தாயுமானவ சுவாமிக்குச் செவ்வந்தி மலர்களால் வழி பாடு புரிந்து வந்தார் சாரமா முனிவர்; அவர் அமைத்திருந்த நந்த வனத்திலிருந்து மன்னன் பராந்தகன், செவ்வந்தி மலர்களை வணிக னொருவனைக் கொண்டு பறித்து வரச் செய்து, தன் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தி வந்தான். இதனையறிந்து கொண்ட முனிவர், மன்னனிடம் முறையிட்டுப் பயனில்லாமற் போகவே, தாயுமானவ சுவாமியிடம் முறையிட்டார்; ஈசன் மேற்கு முகமாகத் திரும்பி உறையூரில் மண்மாரி பெய்யச் செய்தான்; இந்தத் துயரிலிருந்து மக்களைக் காப்பாற்றி, வெக்காளியம்மன் வெட்டவெளியில் நின்று அருள் பாலித்த வண்ணம் அமர்ந்திருக்கிறாள் என்பர்.

1.2.2.4 தில்லைத் தலத்தில் சிவகாமியம்மையும் தில்லையம்மனும் – சிற்பச் சிறப்பு

வான்தலமாகிய தில்லையில் பொற் சபையிலே நடராசரும் சிவகாமியும் பஞ்சலோகத் திருமேனிச் சிறப்புடன் காணப்படு

1. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, ஏப்ரல், 2002, பக். 18.

கின்றனர். அதற்கு வடமேற்கில் அமைந்துள்ள வெளிப் பிராகாரத்தில் சிவகாமியம்மன், கோயில் தெய்வச் சிலைகளும் நடன சிற்பங் களும், அழகிய முன் மண்டபத் தூண்களிலுள்ள சிற்ப வேலைப் பாடுகளும் சிற்பக் களஞ்சியமாகக் காட்சியளிக்கத் துணை நிற் கின்றன. சிவகாமியம்மை நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக் கிறாள். அமைதி தவழ் புன்னகையுடன் விளங்கும் இந்த அம்மையே, தீயவர்களையொடுக்கும் நோக்கில் காளியாக மாறி விடுகிறாள் என்பர்.

சிவகாமியம்மன் கோயிலுக்கு வடபால் முன்பக்கத்தே - சிவ கங்கைக் குளத்திற்கு மேற்கே துர்க்கையம்மன் சக்திமிகு திருக்கைக ளுடன் அருள்பாலிக்கிறாள். சிற்ப எழில் வாய்ந்த இத்தெய்வம் அடியவர்களுக்கு சக்தி வாய்ந்த தெய்வமாக விளங்கி வருகிறது. வடக்குக் கோபுரத்திற்கு எதிரே வடக்கு முகமாக எழுந்தருளி யுள்ளமையால் இதற்கெனத் தனிச்சிறப்பு இருந்து வருகிறது.

நடராசர் ஆலயத்தின் வடக்கே சிறிது தொலைவில் தில்லைக் காளியம்மன் எட்டுத் திருக்கைகளுடன் அருள்பாலிக்கிறாள். இவ் வம்மையின் திருவுருவம் கண் மறைத்தும் திருமேனி முழுவதும் குங்குமத்தால் நிரப்பியும் காணப்படும்; நேரேயுள்ள சன்னிதியில் தில்லையம்மன் காட்சியளிக்கும்; அவளுக்கும் சூலம் வாள் சங்கு சக்தி முதலிய படைகள் தாங்கிய எட்டுத் திருக்கைகள் உண்டு; நின்ற கோலம். நான்கு கைகளுடன் கூடிய துர்க்கை, தேவகோட்டத்தில் உள்ளது.

கோயிலின் தேவகோட்டத்தில் பிரும்ம சொரூபிணி, நாக வைஷ்ணவ சொரூபிணி, தட்சண சொரூபிணி, சர்வ வித்தியாம் பிகை சிலைகள் காணப்படுகின்றன; கோமுகிக்கு மேல் பிரமனுக்கு பதிலாகப் பிரம்ம சொரூபிணி *(பிராமி)*யின் திருவுருவச் சிலை உளது. இவை யாவும் மிகப் பழமையான சிற்பப் படைப்புகள். இவ்வாலயத்தில் பைரவர் சன்னிதி *(தனிக்கோயில்)*, விநாயகர் கோயில், வள்ளி தேவயானையுடன் கூடிய சுப்பிரமணியர் கோயில்கள் உள்ளன; அவற்றிலுள்ள தெய்வக் கற்சிலைகளும் பழமையானவையே.

இக்கோயிலில் பெருந் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவ தால் மரத்தாலான வாகனங்கள் உண்டு; சிறந்த சிற்ப எழில் கொண்ட செப்புத் திருமேனிகளும் சக்தி தேவிக்கு உள்ளன.

1.2.2.5 பெருவலிமையுடன் கூடிய பிரத்தியங்கராதேவி

சரபேசுவர மூர்த்தியைப் பற்றிய விளக்கக் கூறுகள் முன்னே கூறப்பட்டன. அந்தத் திருமேனி எப்படிக் கலவையான தோற்ற முடையதோ அதே போன்று பிரத்தியங்கரா தேவியின் திருவுருவமு மாகும்.

கோரமும் பயங்கரமும் கொண்ட காளியுருவத்தை நினைவு படுத்தும் வகையில் பிரத்தியங்கராதேவி சிங்க முகமும் பெண்ணின் உடலமைப்பும் கொண்ட தெய்வம். சந்திரனுடன் கூடிய கிரீடமும், கபாலம், சூலம், தமருகம் *(உடுக்கை)*, அபயமுத்திரையுடன் கூடிய நான்கு திருக்கைகளும் பொருந்திய அந்தத் தெய்வத்தின் கண்கள் தீச்சுடர் தெறிக்கும் வண்ணம் அமைந்திருக்கும். சரபேசுவர மூர்த்திக்குப் பத்தினியர்களாகப் பிரத்தியங்கரா தேவியும் சூலினியும் விளங்குகின்றனர் என்பது புராணக் குறிப்பு. சுருங்கக் கூறின், இயற்கையிகந்த ஒரு தெய்வ நல ஆற்றலை இவ்வாறு புராணம் வழி காட்டிடச் சிற்பியரும் சிற்பக் கலைப்படைப்பில் பிரத்தியங்கரா தேவியை உருவாக்கியுள்ளனர் எனலாம்.

1.2.2.6 திருவக்கரை வக்கிர காளி - சிலையும் பெருமையும்

திண்டிவனம் - பாண்டிச்சேரி மார்க்கத்தில் பெரும்பாக்கத்தி லிருந்து ஏழு கி.மீ. தொலைவிலுள்ளது திருவக்கரை வக்கிரகாளி ஆலயம்.

பொதுவாகச் சிற்ப நூல் விதிப்படி இராஜ கோபுரம், கொடிக் கம்பம், நந்தி, மூலவர் ஒரே நேர் கோட்டில் அமைத்தல் மரபு. ஆனால், இங்கு ஒவ்வொன்றும் விலகி வக்கிர அமைப்பில் உள்ளது. சனி பகவானின் வாகனமாகிய காகம் வலப்புறத்திற்குப் பதிலாக இடப்புறத்தில் உள்ளது. இந்நிலையில் அன்னை வக்கிரகாளியும், மூன்று முகங்களுடன் கூடிய சிவலிங்கமும் சிற்ப நோக்கில் சிந்திக்கத்தக்க திருவுருவங்களாகும்.

புராணப் பின்னணியில், வக்கிரா சூரனின் தங்கை துன்முகி தன் அரக்கத் தனத்தால் நல்லோர் பலருக்கு இன்னல் தருகிறாள் என்பதும், அந்த அரக்கியைக் கொல்லச் சிவன் பார்வதியை அனுப்பவே, கருவுற்றிருந்த துன்முகியின் வயிற்றைக் கிழித்து அவளைக் கொன்ற துடன் அவள் கருவிலிருந்த குழந்தையைத் தன் காதில் அணிந்து கொண்டு காளியாக வீற்றிருக்கிறாள் என்பதும் புராணக் குறிப்பு.

வக்கிர காளியின் திருவுருவத்தில், சுடர் விடும் நெருப்புச் சுவாலையைப் பின்னணியாகக் கொண்ட தலை, மண்டையோடு அலங்கரிக்கும் மகுடம், வலக்காதில் பிரேத குண்டலம், எட்டுத் திருக்கைகளில் பாசம், சக்கரம், வாள், உடுக்கை, கேடயம் எனப் படைக் கருவிகள் உள்ளன. பகைவர்களின் தலைகளைக் கோத்த மாலை, இவ்வாறிருப்பினும் அமைதி தவழும் திருமுகம் காணலாம்.

பொதுவாகக் கோயில் கருவறையில் மூலவர்க்கே முதன்மைச் சிறப்பு இருக்கும்; திருவக்கரைக் காளி கோயில் கருவறையில் காளியின் வலப்புறம் யோகேசுவரலிங்கமும், இடப்புறம் வலம்புரி விநாயகரும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளமையால் காளியின் பெருமை இனிது புலனாகும்.

கிரகங்கள் ஒருவனுக்கு வக்கிரமடையும் போது ஏற்படும் துன்பங்கள் கொடுமையாய் அமைந்திடும்; அந்தச் சிரமங்களி னின்றும் விடுபட இங்கு வந்து வக்கிர காளியை வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர்.

வக்கிர காளிக்கு மிகுந்த சக்தி சேர்க்கும் வகையில், இவ் வாலயத்தில் சுற்றிலும் சப்த மாதர்கள் சிற்ப வடிவில் அமைந் துள்ளமையும் நோக்கத்தக்கது; மேலும், வரதராசப் பெருமாளும் இங்கு இடம் பெற்றுள்ளதும் கருதத்தக்கது.

1.2.2.7 பட்டீசுவரம் விஷ்ணு துர்க்கை

போர்த் தெய்வமாகிய துர்க்கை பல்வேறு உருவத் திருமேனி களுடன் மக்களுக்குப் பாதுகாப்பாளித்து வருகிறாள். திருமாலின் திருக்கைகளுள் சிறந்த அடையாளங்களான சங்கும், சக்கரமும், பட்டீசுவரம் துர்க்கைக்கு அமைந்திருப்பதால் இத்தெய்வத்தை விஷ்ணு துர்க்கை என்று வழங்கி மகிழ்கின்றனர். மேலும், திருமாலின் தொடர்புடன் இந்தத் துர்க்கையைப் போற்றி வழிபடுவதால் துர்க்க லட்சுமி என்றும் அழைக்கின்றனர்.

பட்டீசுவரம் தேனுபுரீசுவரர் ஆலயத்தில் ஆறடி உயரத்தில், எட்டுத் திருக்கைகளுடனும் புன்னகை தவழும் திருமுகத்துடனும் அருள் பாலிக்கும் விஷ்ணு துர்க்கையைச் சோழ மன்னர்கள் தம் குலதெய்வமாகவே போற்றி வழிபாடு புரிந்து வந்துள்ளனர்.

எட்டுத் திருக்கைகளுள் ஒரு கையில் கிளியை வைத்துக் கொண் டிருப்பதும் இங்குள்ள துர்க்கையின் சிறப்பாகும்; பாண்டியர்க்குக்

குலதெய்வமாக விளங்கும் மதுரை மீனாட்சியம்மையின் திருக் கையில் கிளியை வைத்துக் கொண்டிருப்பதும் ஒப்பியல் நோக்கில் சிந்திக்கத்தக்கது. மகிடாசுரன் தலை மேல் திருவடிகளை வைத்துச் சிம்ம வாகனத்தில் எழுந்தருள்பவளாக, எட்டுக் கைகளுடன் மகர குண்டலங்களுடனும் திரிபங்க ரூபியாய் மூன்று திருக்கண்களுடன் கம்பீரமாகத் தன்னை நாடி வருபவர்களுக்கு அருள்புரிந்து வருகிறாள்.

பட்டீசுவரம் துர்க்கைக்கு அமைந்துள்ள எட்டுக் கைகள் தொடர்பாக, வி.ஆர். கோபாலன் விளக்கம் எழுதுகையில், ''அபய ஹஸ்தம் காப்பதற்கும் சங்கு ஹஸ்தம் வழிகாட்டுதற்கும் ஆகும்; சக்கர ஹஸ்தம் எதிரிகளை அழிப்பது, தனுர் ஹஸ்தம் பாணஹஸ்தம் இரண்டும் வில் அம்பு போலச் சரியான திசையில் முயற்சி செய்வன, கடக ஹஸ்தம் கேடக ஹஸ்தம் இரண்டும் வாள் கேடயமாக விளங்கி வீரம் காட்டுவன, சுகர் ஹஸ்தம் *(கிளியிருக்கும் கரம்)* நடப்பதை எடுத்துக் கூறும்.

திருப்பதி ஸ்ரீவேங்கடேசப் பெருமாளுக்கும் அவருடைய சகோதரியான இந்தத் துர்க்கைக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இவருடைய தோற்றமும் இடப் பாதங்களைக் கொண்டு நடக்கப் புறப்படுவது போல அமைந்திருப்பது அவற்றில் ஒன்றாகும்''[1] என விளக்கிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

1.2.2.7.1 கதிராமங்கலம் துர்க்கை

கும்பகோணத்திற்கு அருகே கதிராமங்கலத்தில் வனதுர்க்கை அருளாட்சி புரிந்து வருகிறாள். திருவுருவச் சிலையில் முன்பக்கம் அம்பாளாகவும் பின்பக்கம் நாகமாகவும் அமைந்துள்ளமை காண்டற்குரியது. ''கண்ட துவாரம் கஷ்க துவாரம் இல்லாத சுயம்பு மூர்த்தம் இது. ஆகம விதிப்படி விநாயகர் சன்னிதியில்லாமல் ஆலயம் எதுவும் அமைவதில்லை. ஆனால், இங்கு விநாயகர் அம்பாளுடன் *(ஒன்றிக்)* கலந்திருப்பதாக ஐதீகம். பொதுவாக, துர்க்கை வடக்கு அல்லது மேற்குத் திசை நோக்கி இருப்பாள்; இங்குக் கிழக்குத் திசை நோக்கி அருள் பாலிக்கிறாள். துர்க்கை சிம்மாவாகினியாக/மகிடாசுரனை மிதித்த கோலத்தவளாகக் காட்சி தருகிறாள்; ஆனால், கதிரா மங்கலத்தில் வன துர்க்கை மகாலட்சுமி அம்சமாகத் தாமரைப் பூவில் தவ பாவனையில் காட்சி தருகிறாள்''[2] என வரும் அருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

---

1. கோபுர தரிசனம், செப்டம்பர், *2001*, பக். *4*.
2. தினபூமி (ஆன்மீக பூமி), *3.9.1999*.

1.2.2.8 சிற்ப எழில் கொஞ்சும் முட்டம் முத்து வாளியம்மன் கோயில்

வரலாற்று புகழ் கொண்ட கொங்கு நாட்டில் கோட்டைக் காடு எனும் பகுதி - சேரர் காலத்தில் நாகேச்சுரம் என வழங்கிய பகுதி - நொய்யலாற்றங்கரையிலுள்ள செம்மேடு எனும் ஊருக்கு அருகிலுள்ள முட்டம் ஆகும். மேற்கொண்டு செல்ல இயலாதவாறு அமைந்த முட்டான இடமே முட்டம் எனக் காரணப் பெயராயிற்று; கவனிப்பாரற்றுக் கிடந்த நாகேச்சுவரர் உடனாய முத்து வாளியம்மன் கோயில், புலவர் இராமசாமி அவர்களின் பெரு முயற்சியால் புதுப் பொலிவு கொண்டு, சிற்ப எழிற் கருவூலமாக விளங்குகிறது.

இக்கோயிலிலுள்ள தட்சணா மூர்த்தி விநாயகர் போன்ற தெய்வத் திருமேனிகள் காண்போர் வியக்கும் வகையில் அமைந்துள்ளன. தட்சணா மூர்த்தியின் திருவுருவத்தில், அம்மூர்த்தி மடித்து வைத்துள்ள இடக்காலை நந்தி நாவால் வருடிக் கொண்டிருப்பது போல வடிக்கப்பட்டுள்ளதையும், நான்கு திருக்கரங்களும் தலையின் அழகை மிகுதிப்படுத்தும் விரிந்தமைந்த சடாமகுட அமைப்பையும் சிற்பி நேர்த்தியாகப் படைத்துள்ளார். பழமைப் பொலிவுடன் கூடிய விநாயகர் சிலையும், எல்லாவற்றுக்கும் மேலாகச் சன்னிதிகளுக்கு முன்னர் அமைந்துள்ள மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்துள்ள இரு நந்தி சிலைகளும் சிற்ப எழில் முத்திரை கொண்டவை.

முத்து வாளியம்மன் சிலையழகை விஜயலட்சுமி சுப்பிரமணியம் எழுதுகையில், ''முத்துக்களாலான காதணிகள் அணிந்ததால் இப்பெயர் பெற்றுள்ள அம்மனின் திருவுருவம் மதுரை மீனாட்சியம்மன் சிலையை நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. இடது மூக்கில்மூக்குத்தி அணியத்தக்க சிறுதுளையைச் சிற்பி வடித்துள்ளார். இரண்டு கரங்களிலும் ஏராளமான அணிகலன்கள்! எல்லாவற்றுக்கும் மேலாக இடையில் 16 கோவை மணிகள் உள்ள கலாபம் *(மேகலை)* என்ற கண்ணைக் கவரும் அணிகலன், தோள்களில் வாகுமாலை, மணிக்கழுத்தில் சவடி, காரை, இடுப்பு வரையில் தொங்கும் வீரச் சங்கிலிகள் அனைத்தும் அம்மனின் திருவுருவத்தின் அழகிற்கு அழகு செய்கின்றன''[1] என்று விளக்கிச் செல்வது கொண்டு சிற்ப வேலைப்பாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

1. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, ஜூலை, 2000, பக். 27.

1.2.2.9 பைரவியர்

சிவபரம்பொருள் ஒன்றேயாயினும், உலகத்தில் நன்மை பரவவும், தீங்குகள் மறையவும் பல்வேறு தெய்வ நலத் தோற்றங் கள் சமயவுலகில் தேவையாகின்றன. இஃது இந்து மதத்தில் அருளாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபான கொள்கை யாகும்.

புராண அணுகுமுறையில், வரபலம் பெற்ற அந்தகாசுரன் முனிவர்க்கும் பலருக்கும் கொடுமைகள் புரிந்து வருகிறான்; அவனைச் சிவபெருமான் அழிக்க முற்படுஞ் சூழ்நிலை உண்டா கிறது; சூலப் படையின் நுனியால் அவனைக் குத்தித் தூக்கித் தன் தலைக்கு மேல் நிறுத்துகிறான் இறைவன். அவ்வாறு நிறுத்திய வேளையில் கொடிய அசுரன் தன் வச்சிரம் போன்ற கதாயுதத்தால் தாக்கினான்; சிவனது தலையினின்றும் அருவி போல் குருதி கொட்டவே அதனின்றும் சிவாம்சமுள்ள பைரவர்கள் எட்டுத் திக்குகளிலுமாகத் தோன்றலாயினர். இரத்த பீஜனை அடித்ததால், சிவனுக்கு எதிராகப் பல அவுணர்களும் தோன்றலாயினர். பைரவர்கள் அத்தனை அவுணர்களையும் கொன்றழித்தனர். அத்தகைய வீர மூர்த்திகளாகிய பைரவர்களுக்கும் தொடர்ந்து சக்தி வழங்கும் நோக்கில், பார்வதியின் அம்சங்களாகிய பைரவியர் தோன்றினர் என்பது புராணக் குறிப்பு.

இவ்வாறான புராண நிகழ்ச்சிகளும் குறிப்புகளும், சிற்பக் கலைப் படைப்பிற்கு அடிகோலின. பைரவர்கள் பலரும் பைரவியர் பலரும் பல்வகையமைப்புக்களில் சிற்பக் கலை வளாகத்தில் தேவைப்பட்டனர்; எனினும், அவற்றையெல்லாம் இந்திய நாட்டில், சிறப்பாகத் தென்னாட்டில் இனங்கண்டு கொள்வதென்பது எளிய செயலன்று.

பரமனின் ஆணைப்படி, சக்தியின் பிம்பங்களாகத் தோன்றிய பைரவியர் சிலரின் திருப்பெயர்கள் வருமாறு:

1. சம்பத் பிரதா பைரவி, 2. சைதன்ய பைரவி, 3. காலேசுவர பைரவி, 4. அசோக் பைரவி, 5. மகா பைரவி, 6. ரக்த நேத்திர பைரவி, 7. ஷட்கூடா பைரவி, 8. நித்தியா பைரவி, 9. மிருத சஞ்சீவினி பைரவி, 10. மிருத்யும் ஜயா பைரவி, 11. உக்கிரப் பிரஸ்தாரிணீ பைரவி, 12. கமலேசுவரி பைரவி, 13. புவனேசுவரி பைரவி, 14. சித்த கௌலேச பைரவி, 15. டாமர பைரவி, 16. காமினீ பைரவி.

இவ்வாறெல்லாம் சக்தி தேவியர் பலராகத் தோன்றியருளக் காரணம் எதுவென ஆராய்ந்தால், ('சாக்த சமயம்') என்பது புலப் படும்; தாந்தரிகக் கோட்பாடுகளால் சாக்த சமயம் விரிவடைந்து சக்தித் திருவுருவங்கள் பலவற்றைக் கண்டுள்ளது.

1.2.3. அருள்மிகு சர்வ சொரூபிணி அம்மன் - சிலைச் சிறப்புக் கூறுகள்

உலகில் பல மதத்தினரும், சிறப்பாகச் சமண - பௌத்த மதத்தினரும் தத்தம் வழிபாட்டிற்குரிய பேரருளாளர்களின் சிலை களை மிகப் பெரியனவாக அமைத்துள்ளனர்; இதனைக் கண்ட இந்து மதத்தினரும் தத்தம் தெய்வச் சிலைகளைப் பெரிய வடிவில் அமைக்கத் தொடங்கினர். அந்நிலையில், பெருமுடிவாக்கம் எனும் சிற்றூரில் *(சென்னையிலிருந்து வெங்கல் செல்லும் வழியிலுள்ள ஊரில்)* சர்வ சொரூபிணி அம்மன் கோயில் உள்ளது. ''இக்கோயிலில் 36 அடி உயரத்தில் பிரம்மாண்டமான சர்வ சொரூபிணி அம்மன் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அம்மன் சிலை 12 திருக்கரங் களுடன், 15 அடி உயரமுள்ள சிம்மத்துடன் மிக அற்புதமாகக் காட்சியளிக்கிறது. அம்மனின் பாதங்களில் நவக்கிரகப் படியும், அம்மனைச் சுற்றி இராகு, கேது, செவ்வாய் ஆகியவை இயந்திரப் பிரதிட்டையோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குத் தினமும் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளி மாநிலங் களிலிருந்தும் திரளான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர். செவ்வாய், இராகு, கேது தோஷமுள்ளவர்களும் திருமணத் தடை யுள்ளவர்களும் இங்கு வந்து வழிபட்டுத் தோஷ நிவர்த்தி பெற்றுப் பயன் அடைந்து வருகிறார்கள்''[1] என வருங்குறிப்பால் இச்சிலை பற்றித் தெரிந்து கொள்ளலாம். ('காமகோடி' *இதழில் வெளியாகி யுள்ள புகைப்படத்திலிருந்து, அம்மனின் மேலிருகைகளில் சக்கரமும் சங்கும், அடுத்துள்ள கீழ் இரு கைகளில் மழுவும் பாசமும், அடுத்துள்ள இருகைகளில் வாளும் குந்தமும், அதற்கு அடுத்த கீழ்க் கையில் சக்தி (சூலம்)* மணி ஆகியவையும், எல்லாவற்றுக்கும் கீழே யுள்ள கைகளுள் ஒன்றில் சிலம்புமாக காட்சியளிப்பது தெரிய வரும்).

இந்தத் திருக்கோலத்தைக் காண்கையில் எல்லாச் சக்திகளின் தொகுப்பான ஆற்றலுடைய அம்மனாகச் சமயக் கற்பனையுடன் சிற்பி இதனை வடித்திருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்று கிறது.

1. காமகோடி - தீபாவளி சிறப்பிதழ், நவம்பர், 2002, பக். 22.

1.2.4 மதுரை மீனாட்சியம்மன் பெருமை - சிற்பச் சிறப்பும் சூழலும்

ஆதிபராசக்தியின் திருமேனிப் பாகங்கள் இந்தியப் பெரு நாட்டின் பல பகுதிகளில் விழுந்து, அவையனைத்தும் சக்தி பீடங் களாகத் திகழ்கின்றன என்பர். அனைத்தும் மிகச் சிறப்புடைய வையே எனினும் சிலவற்றையேனும் சிற்ப நோக்கில் காண்பதற்கே இந்நூலில் இடம் தரும். ஏனையவற்றுள், சக்திக்குரிய தமிழ்நாட்டுத் தலங்கள் சிலவற்றிலே காணலாகும் சிற்பச் செய்திகள் இயைபுடன் கூறப்படும்.

இந்தியப் பெருநாட்டிலேயே சிற்ப வளம் நிறைந்ததாக மதுரை மீனாட்சியம்மன் கோயில் அமைய வேண்டுமென்ற கருத்தில், இக் கோயில் வளாகத்தில் *(3300)* சிற்பங்கள் பல நோக்கில் அமைக்கப் பட்டுள்ளன. சொக்கநாதருக்கு மிகுந்த பெருமையுண்டாகும் விதத்தில், சக்தியாக மீனாட்சியின் சிறப்பால் மதுரையை 'மந்திரிணி பீடம்' என்றும் போற்றுவர். சொக்கநாதரால் மதுரை மீனாட்சிக்குப் பெருந் தெய்வ நல ஆற்றல் மிகுந்துள்ளதே; எனினும், ஆலயத்தி லுள்ள பிற தெய்வத் திருவுருவச் சிலைகளும் மீனாட்சிக்குப் பெருமையைக் கூட்டுகின்றன.

மீனாட்சியம்மையின் திருமுன்னர்ச் செல்வதற்கு முன்னே அட்ட சக்தி மண்டபம் காணப்படும். அங்கே எட்டுச் சக்தி தேவி களின் திருவுருவங்கள் உள்ளன. தென்புறத்தே கௌமாரி, இரௌத்திரி, வைஷ்ணவி, திருமகள் திருவுருவங்களும், வடபுறத்தே எக்ஞரூரணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணியின் திருவுருவங்களும் தனித் தனித் தூண்களில் சிற்ப எழிலுடன் அமைந்துள்ளன. மீனாட்சிக்குச் சிறப்பளிக்கும் வகையில், இம்மண்டபத்தை அடுத்த வாயிலின் வலப்புறம் வல்லபை கணபதியும், இடப்புறம் ஆறுமுகனும் அருட் காட்சி வழங்குகின்றனர். இதனையடுத்து உள்ளே புகுந்தால் வடக்கில் வேடுவர் சிலையும், தெற்கில் வேடுவச்சி சிலையும் ஓர் அந்தணனுக்கு மாபாதகம் தீர்த்தருளிய அடையாளங்களாகும். இதனையடுத்துள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்தின் மேல் விட்டத்தில் பன்னிரண்டு இராசிகள் சதுர வடிவில் சிற்பமாக அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது.

இம்மண்டபத்தை அடுத்துள்ள முதலி மண்டபத்தில் பிட்சாடனர் முனிபத்தினியர், தாருகவன முனிவர்கள் ஆகியோர் சிலைகள் உள்ளன. இங்குக் கிளிக் கூண்டுகள் இருப்பதாலும் மீனாட்சி

யம்மனின் திருக்கரத்தில் கிளி இருப்பதாலும் இதனைக் கிளிக் கட்டு மண்டபம் எனும் பெயர் உண்டாயிற்று.

இவ்வாறான சூழலுடன் ஆலயக் கருவறையில் நடுநாயக மாகக் கருணைத் திருப் பார்வையுடன் நின்ற கோல மீனாட்சி யம்மன் திருவுருவத்தைக் காணலாம். இரண்டு திருக்கைகளுடன் திருக்காட்சியருளும் அன்னையின் திருவருட் சிறப்பைப் பண்டு தொட்டு அருளாளர்கள் பலர் உணர்ந்து பல்லாற்றானும் போற்றி யுள்ளனர். இவ்வளவு பெருமைக்குரிய மீனாட்சியம்மனின் திருவுருவச் சிலையை எக்காலத்தில் நிறுவினர் என்பது நன்கு புலப்பட வில்லை.

1.2.4.1 அன்னை மீனாட்சியம்மையின் அருள் திருமேனி - சிலையும் பெருமையும்

சக்தி பீடமாகிய மதுரை மீனாட்சியம்மன் கோயில், பாண்டி யர்களாலும், நாயக்க மன்னர்களாலும், சைவத் திருமடத்து அதிபர் களாலும், பிற செல்வர்களாலும் திருப்பணிகள் செய்யப் பெற்ற சிறப்புடையது; சைவ அருளாளர்கள் பலரால் பாடப் பெற்ற பெருஞ் சிறப்பு வாய்ந்தது.

மதுரைத் திருத்தலத்தில் அருள்மிகு மீனாட்சியம்மையால், இறைவன் சொக்க நாதனாக - மீனாட்சி சுந்தரேசுவராக - வீற்றிருந்து உயிர்களை அருள்பாலித்து வருகின்றார். திருவிளையாடல் புராணம் பாடியருளிய பரஞ்சோதி முனிவர், கடவுள் வாழ்த்தாகச்,

"சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்துநறும்
  கொன்றையந்தார் தணந்து, வேப்பம்
தொடை முடித்து, விடநாகக் கலனகற்றி
  மாணிக்கச் சுடர்பூண் ஏந்தி,
விடைநிறுத்திக் கயலெடுத்து, வழுதிமரு
  மகனாகி, மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
  சுந்தரனை வணக்கம் செய்வோம்"

எனப் பாடிச் செல்வது மிகவும் சிந்தக்கத்தக்கது. கோயிலில் சக்தியாம் மீனாட்சிக்கு முதன்மையளிப்பதால், அவளை வணங்கிய பிறகே சொக்கநாதரை வழிபடச் செல்கின்றனர். மீனாட்சி கோயிலுக்கு முன்னே அட்டசித்தி மண்டபம் அமைந்துள்ளமையால், மீனாட்சிக்குப் பெருமை கூடுகிறது என்பர். அட்ட சித்தி மண்டபத்தில் கௌமாரி,

ரௌத்திரி, வைணவி, மகாலட்சுமி, எக்ஞரூபிணி, சாமளை, மாகேசுவரி, மனோன்மணி ஆகியோரின் திருவுருவச் சிலைகளைத் தூண்களில் காணலாம். அடுத்து, மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம், கிளிக்கட்டு மண்டபம் உள்ளன. அன்னை மீனாட்சியின் திருக்கையில் கிளி இருப்பதால் கிளிக்கட்டு மண்டபம் சக்தி நோக்கில் மிகவும் பேர் பெற்றது; இம்மண்டபத் தூண்களில் யாளிகளின் சிற்பங்கள் காணப்படுவதால் இதனை யாளி மண்டபம் என்றும் அழைப்பர். ஓங்காரப் பிரணவப் பறவையாகிய கிளியைப் போல நாதமயமாக இருந்து அடியார்களுக்கு திருவருள் புரியும் மீனாட்சி, தீமையை ஒடுக்குவதிலே யாளியைப் போலவும் வலிமையுடன் காட்சியளிப்பாள் என்பது தத்துவ உட்கிடை. இம்மண்டபத்தில் பஞ்ச பாண்டவர் சிலைகளும் திரௌபதி சிலையும் அமைந்திருக்கக் காணலாம். சில உள் பிராகாரங்களைக் கடந்து மீனாட்சியம்மையின் சன்னிதியை அடைந்தால், கருவறையின் நடுநாயகமாக இரு திருக்கைகளுடன் அம்மை வீற்றிருந்தருளுவதைக் காணலாம்.

மீனாட்சியம்மையின் கண்கள் மலர்வதால் தோன்றும் இவ்வுலகம், அந்தக் கண்கள் சற்று இமைக்குமாயின், அழியக் கூடும்; ஆதலின், மீன் தன் முட்டைகளைத் தன் பார்வையாலேயே குஞ்சு பொறிக்கச் செய்வது போலவே, இந்த சக்தி தேவியும் அருள் கொழிக்கும் பார்வையாலேயே அடியவர்களைக் காத்து வருகிறாள்; எனவே, அங்கயற்கண்ணி என்ற திருப்பெயரும் பொருத்தமாக உள்ளது எனலாம். சிற்ப எழில் குலுங்க அமைந்துள்ள மீனாட்சியைக் கல்வெட்டில், "திருக் காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்' எனக் குறித்துள்ளனர். ஆலவாய்ச் சொக்கர், உலக நன்மைக்காகப் புரிந்துள்ள திருவிளையாடல்களெல்லாம், அன்னை மீனாட்சியின் அருள் வல்லபத் துணையினாலேயே என்று உணர்வது பொருத்தம்.

1.2.5 காத்தியாயணி

பழம் பெருந் தெய்வங்களுள் ஒன்றாக வழிபாடு பெற்ற சிறப்புடைய சக்தியே காத்தியாயனி. மார்கழி மாதத்தில் நல்ல மழை பொழியவும், நல்ல கணவரையடையவும் மகளிர் பக்தியார்வத்துடன், காலை நீராடிப் பாவை நோன்பினை நோற்பர் என்பது பலரும் அறிந்ததே. நல்ல கணவனை அடைய வேண்டுமென்ற நோக்கில் ஒவ்வொரு கன்னியும் நோற்கும் நோன்பிற்குக், 'காத்யாயணி விரதம்' எனக் கூறுவாராயினர். "அன்னை சீதாதேவியும்

காத்யாயனி விரதமிருந்தே இராமபிரானைக் கணவனாக அடைந்தாள் என்று துளசிதாசர் தம் இராமாயணத்தில் கூறியுள்ளார். ருக்மணியும் இந்த விரதமிருந்து கண்ணனைக் கரம் பிடித்தாள் என்று பாகவதம் கூறுகிறது.

அந்த அபூர்வமான தேவியின் சிலையைத் திருச்சியை அடுத்துள்ள திருமழபாடி என்ற திருத்தலத்தில் காணலாம். உட்பிராகாரத்தின் வடக்குப் பகுதியில் தற்போது உள்ளது அந்தச் சிலை வடிவம்.

அமர்ந்த திருக்கோலம், மயில் வாகனத்தின் மேல் அன்னை அமர்ந்தவாறு அருள்புரியும் அற்புதமான வடிவம் வலது கரம் வர மருளும் பாவனையிலும், இடது கரம் தாமரை மலரை ஏந்தியவாறு கம்பீரமாகக் காட்சி தருகிறாள் காத்யாயனி அன்னை''[1] என்று மயன் எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

காத்தியாயனி வழிபாடு வாழையடி வாழையாகத் தமிழ்ப் பெரு மக்களும் வழிபாடு செய்து வந்துள்ளனர். இக்காலத்தில் சிற்றூர் மக்களால் 'காத்தாயி' என அழைக்கப்படும் சிறுதெய்வமே, ஒரு காலத்தில் பெருந்தெய்வமாக வழிபாடு பெற்று வந்துள்ளது எனச் சிந்திக்கலாம். ஆனால் அறிஞர்கள் சிலர், வட இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தால் காத்தியாயனி நோன்பு தமிழகத்தில் ஏற்பட்டது. அதனால் விளைந்த விளைவே காத்தாயி வழிபாடாகத் தமிழகத்தில் காலூன்றியது என்பர்.

1.2.6 திருவாரூர்க் கோயிலில் கமலாம்பாள் திருமேனி - பெருமைக்குரிய சிற்பச் சூழல்

திருவாரூரில் சமயப் பெருமையை மிகுவிக்கும் வண்ணம் பலகவின் கலைச் சூழல்கள் உள்ளன; அவற்றுள் சிற்பச் சூழல் தொடர்பாக அருள்மிகு கமலாம்பாள் திருமேனியையும், சில சிற்பத் திருவுருவங்களையும் காணலாம்.

ஆலயத்தில் மூன்றாம் திருச்சுற்றில் வடமேற்கு மூலையில் வடகீழ்த் திசையை நோக்கிய வண்ணம், பெருஞ் சக்தியாகிய கமலாம்பாள் அருள்பாலிக்கிறாள். பராசக்தி பீடங்களில் ஒன்றாகத் திருவாரூரும் கருதப்படுவதால், அத்தலத்துத் தேவி மிகுந்த பெருமை கொண்டவள். எனவே, அவளது திருமேனியும் சிற்பப் படைப்பில் புதுமையாக அமைந்துள்ளது. கமலாம்பாளின் திருவுருவம் அமர்ந்த

1. குமுதம் பக்தி ஸ்பெஷல் *(திங்களிதழ்)*, ஆகஸ்டு, 2001, பக். 88-89.

நிலையில் கால்களை ஒன்றின் மேல் ஒன்றாக மடக்கிக் கொண்டு, தொங்கிய நிலையில் யோகாசனமாய், நான்கு திருக்கைகளில், முறையே பாசம் அக்கமாலை கமலம் ஆகியவற்றை ஏந்தியும் அபய முத்திரை கொண்டும் அருட்கோலமாக உள்ளது. புராணங்கள் இந்தத் தேவியைத் தவக்கோலமாகவே கூறுவது கொண்டு, இவள் திருப்பெயராலேயே ஆலயமும் திருக்குளமும் வழங்கப்படு கின்றன.

திருவாரூர் ஆலயத்தில் காணலாகும் சிற்பச் செல்வங்கள், சிறந்த கலைக் கூடமெனப் போற்றும்படி துணை நிற்கின்றன.

பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் அட்சர பீடமும் திருவாசியும் உள்ளன. திருவாசியில் ஐம்பத்தொரு அட்சரங்கள் எழுதப்பட்டுள்ளன. வள்ளி தெய்வானை உடனாய திருமுருகன், மற்றும் இளங்குமரன், சண்டேசுவரி முதலிய தெய்வத் திருமேனி களும் இந்தப் பிராகாரத்திலே இடம் பெற்றுள்ளன. மகாமண்ட பத்தில் உச்சிஷ்ட கணபதியின் சிலை இடங் கொண்டுள்ளது.

ஏனைய சிவாலயங்களைப் போலல்லாமல், திருவாரூர் ஆலயத்தில் இரண்டு அம்மன் கோயில்கள் உள்ளன; அவற்றில் பார்வதியின் திருவுருவங்கள் இரு வேறுபட்ட நிலைகளில் காணப்படுகின்றன.

அன்னை கமலாம்பிகையைத்தவிர, இக்கோயிலில் *(இரண்டாம் சுற்றின் வடபுறம்)* கொடி மரத்தின் எதிரே நீலோத்பலாம்பாள் எனப் பெயரிய அல்லியங் கோதையின் திருவுருவம் உளது; இஃது, அழகு தவழ் அரிய சிற்பக் கலைப் படைப்பாகும். இந்தஅம்மையின் திரு வுருவம் இரு திருக்கைகளுடன் பொலிவுறுகிறது. அவற்றுள் இடக் கை, தோழியொருத்தியின் தோளில் தூக்கி வைத்துள்ள குழந்தை முருகனின் உச்சந் தலையைத் தீண்டிக் கொண்டிருக்கிறது; இத்தகைய அமைப்பில் அழகுத் திருமேனியை வேறெங்கும் காண இயலாது. இந்தச் செப்புத் திருமேனியையொத்த கற்சிற்பம், காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலில் காணத்தக்கது.

திருவாரூர் ஆலயத்திலுள்ள சபாபதி மண்டபம், சந்திர சேகரர் மண்டபம், இராசேந்திர சோழன் மண்டபம், கமலாம்பாள் மண்டபம், திருப்பள்ளித்தாம மண்டபம், ஊஞ்சல் மண்டபம், தட்டஞ்சுற்றி மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், பக்தக் காட்சி மண்டபம் முதலியவற்றில் காணலாகும் சிற்பங்களெல்லாம் கமலாம்பிகை யின் பெருமையை மிகுதிப்படுத்துவன. கற்சிற்பங்களேயல்லால்

செப்புத் திருமேனிகளும் பலவாக உள்ளன. இவ்வாலயத்திலுள்ள துர்க்கையம்மனும் கமலாம்பாளின் சக்தியைப் புலப்படுத்தும் வகையிலேயே உள்ளது.

1.2.7 திருவண்ணாமலை உண்ணா முலையம்மையும் சிற்பச் சூழலம்

ஐம்பூதத் தலங்களுள் அனல் தலமாகப் போற்றப்படுவது திருவண்ணாமலை. சிவாலயங்களில் கருவறைக்குப் புறக் கோட்டத்தே நிறுவப்பட்டிருக்கும் இலிங்கோற்பவர், திருமாலும் அயனும் காணவியலாத சிவனது தீபத் தம்பத்தின் ஒரு வகைப் புலப் பாடு. இத்தலத்து அருணாசலேசுவரருக்கு வாய்த்த உண்ணாமுலை யம்மையும், அகச் செருக்கு புறச் செருக்கும் நெருங்கவொண்ணாத பராசக்தியாவாள்.

இலிங்கமாகிய அக்கினித் தம்பம் ஆவுடையாராகிய சக்தியில் தோன்றி நிலைத்து நிற்கிறது என்ற உண்மையுணர்த்தும் அடையாள மாகும். ஈண்டு உண்ணாமுலையே அண்ணாமலைநாதருக்கு அடிப் படைச் சக்தி. இங்குச் சிவசக்தியொருமையை யுணர்த்தும் அர்த்த நாரீசுவரரை நினைவிற் கொள்வர்; இதற்கேற்பவே மணிவாசகரும், ''பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்'' என்று திருவெம் பாவையில் குறித்துள்ளார்.

உண்ணாமுலையம்மன் கோயிலில் சன்னிதியின் முன்புள்ள மகாமண்டபத்தில் சிற்பச் சிறப்பும் சமயப் பெருமையும் கொண்ட அட்டலட்சுமிகள், உருத்திர துர்க்கை, மகாசக்தி, மகா சரசுவதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணாதரர், ஆகியோர் சிற்பத் திருவுருவங்களில் அமைந்து அருள்பாலிக்கின்றனர். உண்ணா முலையம்மைக்கு சக்தியாதாரத் துணைகளாக விளங்குகின்றனர்.

இந்தப் பெரிய ஆலயத்தில் காணலாகும் ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் ஆகியவற்றில் தூண்களின் அடிப்பகுதி யிலும் மேற்பகுதியிலும் வேலைப்பாடமைந்த தெய்வத் திருவுரு வங்களும் அலங்கார அமைப்பும் உண்ணாமுலையம்மையின் பெருமைக்குத் துணை நிற்கின்றன எனலாம்.

1.3. திருமகளின் எண்வகைத் திருவுருவங்கள் *(அஷ்ட லட்சுமிகள்)*

இறைவனுக்கு எண்குணங்கள், திருமாலுக்கு எட்டெழுத்து மந்திரம், அட்டமாசத்திகள், அட்டமாசித்திகள் எட்டுத் திக்குக் காவலர்கள், அட்டாங்க விமானம் என்பவை போலத் திருமகளும் இந்துமதக் கோட்பாட்டின்படி எண்வகைத் திருவுருவங்கள்

மேற்கொண்டு உலக உயிர்களைக் காத்தருள் புரிகின்றாள். வட மொழியில் அஷ்டலட்சுமிகள் என அழைக்கப்படுபவர்களாக, சித்திகள் அனைத்தும் அளிக்கும் ஆதிலட்சுமி, மகப்பேறளிக்கும் சந்தான லட்சுமி, அரச பதவியளிக்கும் கஜலட்சுமி, மிகுந்த செல்வ மளிக்கும் தனலட்சுமி, நெல் பருப்பு வகை முதலியவற்றைச் செழிக்கச் செய்யும் தானிய லட்சுமி, எடுத்த நற்செயலில் வெற்றி வழங்கும் விசயலட்சுமி, நற்பேறுகள் *(சௌபாக்கியம்)* அளிக்கும் மகாலட்சுமி, ஆகியோர் விளங்குகின்றனர்.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள மகாலட்சுமியைச் சௌபாக்கிய லட்சுமி எனவும், வீரலட்சுமியை வீரிய லட்சுமி எனவும் கூறுவர். இந்த லட்சுமிகளேயல்லாமல், தைரியலட்சுமி, கோலட்சுமி (காமதேனு என்ற பசுலட்சுமி), காருண்யலட்சுமி, அசுவ *(குதிரை)* லட்சுமி, ராஜலட்சுமி, தீபலட்சுமி ஆகிய இலட்சுமிகளையும் மக்கள் வழிபடு கின்றனர். வழிபாட்டிற்கேற்பச் சிற்பப் படைப்புகளையும் சிற்பியர் வடிவமைத்துத் தந்துள்ளனர்.

இவ்வாறு பல இலட்சுமிகளும் சமயவுலகில் கூறப்படினும், முதன்மைச் சிறப்புடையவர்களாக அஷ்டலட்சுமிகளே போற்றப் படுகின்றனர்.

திருமால் திருத்தலங்களில் அஷ்டலட்சுமிகள் பரவப் பெறினும் மிகச் சிறப்புடைய இலட்சுமிகள் சிலரே சிறப்பு வழிபாட்டிற் குரியவர்களாகப் போற்றப்படுகின்றனர். அவர்களுள்ளும் கஜ லட்சுமியும் மகாலட்சுமியும் மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடைய வர்கள்.

சங்க காலத்திலிருந்து கஜலட்சுமியின் திருவுருவம் மக்க ளிடையே பெருவழக்கில் இருந்தமையால், கோட்டை வாயிலிலும் அரண்மனை முகப்பிலும், மாளிகை வாயில் முகப்பிலும் அவ்வுருவத்தைச் சிற்ப எழிலுடன் பொருத்திப் போற்றியுள்ளனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இக்காலத்திலும் கோயில்களிலே மண்டப வாயிலின் மேற்பகுதியிலும், வளமனை களிலே நுழைவாயிலின் மேற்பகுதியிலும் கஜலட்சுமியின் திருவுருவம் அமைத்திருப்பதைக் காணலாம்.

இஃது ஒருபுறமிருக்க, வடநாட்டுச் சமயத் தாக்கம் தமிழகத்தில் ஏற்பட்ட நிலையில் திருமகளின் திருவுருவங்கள் 'அஷ்ட லட்சுமிகள்' என்ற அளவில் நில்லாமல், தாமரையில் வீற்றிருந்தருளும் 'வர லட்சுமி' எனும் அன்னையும் வழிபாட்டிற்கு உரியவளானாள்; இந்தத்

தேவியை அஷ்டலட்சுமிகளின் திரண்ட அருள் வடிவமாக ஆன்றோர்கள் கருதுகின்றனர். வரலட்சுமிக்கு அமைந்த நான்கு கைகளுள் மேலிரு கைகளில் தாமரை மலர்களும், ஏனைய இரு கைகளும் வரத அபய முத்திரைகளும் கொண்டு விளங்குகின்றன. தாமரை மலர்களாகிய பதுமத்தின் சிறப்பால் இவளே திரு மாலுக்குப் பெருந்தேவியாகப் - பதுமாவதியாக - அருள்பாலித்து வருகிறாள் என்பது சமய நம்பிக்கை. இனி, அஷ்டலட்சுமி ஆலயம் பற்றிச் சிறிது காண்போம்.

தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் அஷ்டலட்சுமி ஆலயம் உள்ளது. எல்லா வளங்களும் அமையப் பெற்றால் நாடு முழுமைக்குமே நலமும் வளமும் உண்டாகும் என்ற நல்ல எண்ணத் துடன் காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் அருளாசி வழங்கவே, முக்கூர் ஸ்ரீநிவாச வரதாச்சாரியார் சுவாமிகள் பெருமுயற்சியுடன், இவ்வாலயத்துக்குத் திட்டம் வகுக்க முற்பட்டனர்; கோவை தொழிலதிபர் ஜி.கே. நாயுடு குடும்பத்தினர், திண்டுக்கல் சௌந்திர ராசன் ஆகியோர் பெரும் பொருள் நல்கினர்; திரு. பாலசுப்பிர மணியம் ஆலயம் கட்ட மனை வழங்கியுள்ளார்.

திருவான்மியூரில் அஷ்டாங்க விமானத்துடன் அஷ்டலட்சுமி ஆலயம் அமைந்திருப்பதும், அந்த ஆலயத்தில் அஷ்ட லட்சுமிகள் சிற்பநூல் விதிப்படி நிறுவப் பெற்றிருப்பதும் தமிழ் நாட்டிற்கே பெருமை சேர்க்கும்.

இக்கோயிலில் தரைத் தளத்தில் திருமால் மகாலட்சுமி ஆலயங்கள் அமைந்துள்ளன. கிழக்கே திருமுக மண்டலம், தெற்குப் பகுதியில் ஆதிலட்சுமி, மேற்குப் பகுதியில் தானியலட்சுமி, வடக்குப் பகுதி யில் தைரியலட்சுமி அமைந்திருக்க, வலம் வருகையில் மகாலட்சுமி சன்னிதியை அடையலாம். கிழக்கு முகமாக அருள்பாலிக்கும் கஜ லட்சுமியைக் கண்டு வழிபாடு புரிந்தபின், தெற்குப் பகுதியில் சந்தான லட்சுமியையும், மேற்கில் விஜயலட்சுமியையும், வடக்கில் வித்யா லட்சுமியையும் வழிபட்டு அருள் பெறலாம். கஜலட்சுமி திருச்சன்னிதியிலிருந்து மூன்றாவது நிலைக்கு ஏறி வந்தால் தனலட்சுமியின் அருட்காட்சி கிட்டும். எனவே, அஷ்டலட்சுமி ஆலயத்தில் - அஷ்டாங்க விமானத்தில் - ஒன்பது கருவறைகள் *(சிறு கோயில்கள்)* உள்ளன; அஃதாவது, தரைத் தளத்தில் நான்கு, இரண்டாம் நிலையில் நான்கு, மூன்றாம் நிலையில் ஒன்று அமைந் துள்ளன. இக்கோயில் பற்றி முல்லை முத்தையா எழுதுகையில்,

(அஷ்டாங்க விமானத்தின்) முதல் நிலைக் கோஷ்டங்களில் அஷ்டலட்சுமியின் பதுமைகளும் சுதையில் அமைந்துள்ளன.

இரண்டாம் நிலையில் ஈசானியத்தில் *(வடகிழக்கில்)* தேவா சுரர்கள் திருப்பாற் கடலைக் கடைகிறார்கள்; இங்கே லட்சுமி அவதாரத்தைத் தரிசிக்கலாம்.

ஆக்நேயத்தில் *(தென்கிழக்கில்)* லட்சுமி கல்யாண வைபவத்தில் திளைக்கலாம்.

நைருதியில் *(தென்மேற்கில்)* ஸ்ரீவைகுண்டக் காட்சி.

வாயு பாகத்தில் *(வடமேற்கில்)* ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதாள், ஸ்ரீமத் இராமானுஜர், ஸ்ரீமத்வர் ஆகிய மதாசார்யர்களைத் தரிசிக்க லாம். அவர்களும் சீடர்களும் காட்சி தருகிறார்கள்.

மேலும், 108 கலசங்கள் உள்ளன.

மூன்றாவது நிலையில் தசாவதாரம், ஒருபுறம் வைஷ்ணவ சம்பிரதாயத்தையும், மற்றொரு புறம் சைவ சம்பிரதாயத்தையும் விளக்கும் படியான கனகதாரா ஸ்தோத்திர பிம்பத்தையும், ஸ்ரீநிக மாந்த மகாதேசிகன் பிம்பத்தையும் தரிசிக்கலாம்.

கோயிலின் முன்புறம், சங்கநிதி பதுமநிதி ஆலயங்கள் இரு புறமும் உள்ளன''[1] என்று விளக்கமாகக் கூறுகிறார்.

பொதுவாக, இலக்குமிகளின் திருவுருவங்களில் கைகளின் எண்ணிக்கை பற்றியும், படைக் கருவிகளின் விவரங்கள் பற்றியும் சிற்ப நோக்கில் தெரிந்து கொள்ள எண்ணலாம். எடுத்துக்காட்டாக, ஆதிலட்சுமிக்கு இரு கைகளும், தானியலட்சுமிக்கு ஆறு கைகளும், கஜலட்சுமிக்கு நான்கு கைகளும், வீரலட்சுமிக்கு எட்டுக் கைகளும், இவ்வாறே ஒவ்வொரு இலக்குமியின் திருவுருவத்திலும் மாற்றங்கள் பல நோக்கங்களில் அமையும்; படைக் கருவிகளின் அமைப்பிலும் தத்துவ அணுகுமுறை உண்டு; அது விரிக்கிற் பெருகும்.

1.3.1. திவ்ய தேசங்களில் தாயார் சன்னிதிகள்

வைணவ திவ்ய தேசங்களில் மூலவர் நின்ற, அமர்ந்த, கிடந்த, நடந்த திருக்கோலங்களில் காட்சியளித்தாலும், ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய தாயார்களோ ஆண்டாள் நாச்சியாரோ நின்ற, அமர்ந்த திருக் கோலங்களில் காட்சியளிப்பதுதான் மரபு. பெருமாளுடன் தேவியர்,

1.- அருள்மிகு திருமகள், மணிவாசகர் பதிப்பகம், 1984, பக். 67,68.

மூலத்தானக் கருவறையில் காட்சியளிப்பதேயல்லாமல், தனிச் சன்னிதியிலும் காணப்படுவர்; ஸ்ரீதேவியாகிய தாயார், திருச்சானூரில் பத்மாவதியாகவும், திருக்கூடலில் மயூரவல்லித் தாயாராகவும், திருவல்லிக்கேணியில் வேதவல்லித் தாயாராகவும் மயிலாப்பூரில் அலர்மேல் மங்கைத் தாயாராகவும், திருமுல்லை வாயிலில் வைஷ்ணவி தேவியாகவும், திருப்புட்குழியில் மரகதவல்லியாகவும், திருச்சி - உறையூரில் கமலவல்லித் தாயாராகவும், மதுராந்தகத்தில் ஜனகவல்லித் தாயாராகவும், திருவள்ளூரில் கனகவல்லியாகவும், திருநாராயணபுரத்தில் யதுகிரி நாச்சியாராகவும், திருநாங்கூரில் அலர்மேல் மங்கைத் தாயாராகவும், புருஷோத்தம நாயகியாகவும், புள்ளம் பூதங்குடியில் ஹேமாம்புஜ வல்லியாகவும், திருவரங்கத்தில் ரங்கநாயகியாகவும், திருச்சேறையில் சாரநாச்சியாராகவும் - இவ்வாறே பல பெயர்களில் திவ்ய தேசம் தோறும் வெவ்வேறு பெயர் கொண்டு அருள் பாலிக்கின்றனர்.

பூதேவியாகிய நிலமகளும் தனிச்சன்னிதி கொண்டு, மாமல்ல புரத்தில் நிலமங்கைத் தாயாராகவும், குடந்தைக்கு அருகிலுள்ள ஒப்பிலியப்பன் கோயிலில் பூதேவியாகவும், இவ்வாறே சில திவ்ய தேசங்களில் பூமிப்பிராட்டியே சிறப்பிடம் பெறுவது உண்டு.

திருவரங்கம் பெருமாள் கோயில், தில்லைக் கோவிந்தராசர் கோயில் போன்ற பல திவ்ய தேசங்களில் ஆண்டாளுக்குத் தனிச் சன்னிதிகள் உண்டு. திருமழிசைத் திருத்தலத்திலுள்ள ஆண்டாள் மிகச் சிறந்த பஞ்சலோகத் திருமேனியாகும்.

பொதுவாக, எல்லாத் திவ்ய தேசங்களிலும் கற்சிலைகளும், செப்புத் திருமேனிகளும் மிக நேர்த்தியுடன் அமைந்துள்ள சிற்பக் கலைப் படைப்புகளே; எனினும், அடியவர்கள் கொண்டுள்ள ஈடு பாட்டினாலும், அருள் வல்லபப் பேற்றாலும், திருமேனிகளுக்குப் பெரும் மகத்துவம் அமைந்து விடும்; அதற்கேற்ப மந்திரத் தகடு களும் மூலவர் பீடத்தில் பொருத்துவது உண்டு.

வைணவ மக்களிடையே பெருமாளிடம் பெறுகின்றன கருணை யெல்லாம், புருஷகாரத்துவம் கொண்டிலங்கும் தாயாரின் ஒத்துழைப் புடன் கூடிய உதவியாலேயே; இது சமய நம்பிக்கை. எனவே, தாயார் சன்னிதியில் அமர்ந்திருக்கும் திவ்ய மங்கள விக்கிரகத்துக்கு தனிச்சிறப்பு உண்டு.

பலவகைத் திருப்பெயர்களுடன் தேவியர்கள் திருமாலுக்கு உண்டென்பது கொண்டு, தேவியரின் சிலை வடிவங்களும் சிற்சில மாற்றங்கள் கொண்டிருப்பது இயல்பேயாகும்.

எனினும், திருச்சேறை எனும் திவ்ய தேசத்தில் சாரநாதரும் சார நாயகியும் கற்சிலை வடிவில் அருள்பாலித்து வருவது ஒருபுற மிருக்க, பஞ்சலோகத் திருமேனிகளாகச் சாரநாதர் நடுவேயிருக்க, ஸ்ரீதேவி, பூமிதேவி, நீளாதேவி, சாரநாயகி புடைசூழத் திருக்காட்சி யருளுவது பெருஞ் சிறப்புடையது. திருமால் திருமார்பிலேயே மகா லட்சுமி உறைவதால் அவளையும் சேர்த்து தேவியர் ஐவர் புடை சூழக் காட்சியருளுவதாக அருளாளர்கள் கூறுவர். சிற்ப நோக்கில் மிக அழகிய திருமேனிகள் என்பது நோக்கத்தக்கது.

1.4. சிற்பக் கலைப் படைப்பில் கலைமகள்

கலைமகள் எனும் கல்வித் தெய்வம், வடமொழியல் சரசுவதி எனம் பெயரில் வழிபாடு செய்யப் பெறுவதைப் பலரும் அறிவர். சரசுவதி நான்முகன் தேவி எனும் நோக்கில் நாமகள், நாவின் கிழத்தி, வாக்கு தேவி, சகலகலாவல்லி என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். மேலும், மாதங்கி, சியாமளா தேவி ஆகிய பெயர்களும் கலை மகளுக்கு உண்டு.

தமிழ் நாட்டில் பல ஆலயங்களில் கலைமகள் திருவுருவம் உண்டெனினும், திருமகளாகிய இலக்குமிக்குச் சிலைகள் அமைந்த அளவிற்குக் கலைமகள் சிலைகளைக் காணவியலாது. மேலும், கலைமகளையே, அஷ்டலட்சுமிகளுள் ஒருத்தியாகிய வித்தியா லட்சுமியாகக் கொள்கின்ற வழக்கமும் உள்ளது. எனினும், கலை மகளுக்கும் ஒருவகைத் தனிச்சிறப்பு உண்டாகும் வகையில் சில இடங்களில் கோயில்கள் அமைத்துக் கலைமகளின் தெய்வத் திரு மேனியையும் வைத்து வழிபடுவதைத் தமிழகத்தில் காணலாம்.

கலைமகளால் பெருஞ்சிறப்பெய்தி ஒட்டக்கூத்தர், விக்கிரமன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோரின் அவைக்களப் புலவராக இருந்தவர்; அவருக்கு வழங்கப்பட்ட அரிநாதேசுவரம், கூத்தனூராக மாறியது; அந்தக் கூத்தனூரில் ஆலயங் கட்டி, ஞான சொரூபியாக விளங்கும் கலைமகளைத் தவக் கோலத் துடன் நிறுவியுள்ளமை போற்றத்தக்கது.

சிற்ப நோக்கில் சிந்திக்கையில், வெண்டாமரை மலரில் கலை மகள் பதுமாசனத்தில் அமர்ந்துள்ளாள்; அந்தத் திருவுருவத்தின் நான்கு கைகளுள் பின் இரு கைகளில் செபமாலை *(அக்கமாலை)* கெண்டி *(கமண்டலம்)* விளங்கவும், முன் இரு கைகளில் ஓலைச் சுவடியும் சின்முத்திரையும் விளங்கவும் காட்சி தருகிறாள்.

கண்டியூரில் அருள்மிகு பிரமசிரக்கண்டீசுவரரின் மூலத்தானத்தின் பக்கத்தில் கிழக்கு நோக்கியவாறு, பிரமன் திருவுருவச் சிலையும், பிரமன் தேவியாகிய கலைமகளின் சிலையும் அருகில் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. வலப்புறம் சிறிய வடிவில் நான்கு திருக்கைகளுடன் காட்சியளிக்கிறாள் கலைமகள். இங்குள்ள பிரமன் சிலையைப் போன்றே தஞ்சை அருங்காட்சியகத்திலும் ஒன்று உள்ளது.

நாகர்கோயிலுக்கு அருகே பத்மநாபபுரத்தில் கலைமகள் சுகாசன கோலத்தில் காட்சியளிக்கிறாள். கலைமகளால் பெருஞ் சிறப்படைந்த கம்பர் தாம் வணங்கி வழிபட்ட கலைமகளின் திருவுருவச் சிலையை இங்குக் கொண்டு வந்ததாகவும், அந்தச் சிலையைப் பத்மநாபபுரம் கோட்டையில் அருளாளர்கள் நிறுவி யுள்ளனர் எனவும் கூறுவர். பதுமபீடத்தில் நான்கு திருக்கைகளுடன் கலைமகள் வீற்றிருக்கும் திருக்கோலம் காணத்தக்கது.

தஞ்சைப் பெரிய கோயிலிலும், கங்கை கொண்ட சோழ புரத்திலும் கலைமகளின் சிற்பப் படைப்புகள் சிறப்புடையவையாக அமைந்துள்ளன. தஞ்சாவூரில் தென்புற வாயிலில் மேற்கு நோக்கிய வண்ணம் இரு திருக்கைகளுடன் கலைமகள் காட்சியளிக்கிறாள்; அவளுக்கு அருகில் பின்னால் நின்றவாறு சாமரம் வீசும் பெண்கள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக் கூறாகும். கங்கை கொண்ட சோழபுரத்தில் கோயிலின் மூலத்தானத்திற்குச் செல்லும் வழியில் - வடக்கு வாயிலின் மாடத்தில் - மேற்கு நோக்கிய வண்ணம் நான்கு திருக்கைகளுடன் பதுமாசனத்தில் கலைமகள் வனப்புடன் சிலை யுருவத்தில் விளங்குவது காணத்தக்கது. ஞான சரசுவதியாகிய இத் திருவுருவம் சிற்பவுலகில் தனிச்சிறப்புடையது என்பர்.

ஆவுடையார் கோயிலாகிய திருப்பெருந்துறையில் கோயில் தூணில் பல அணிகலன்களுடன், திருக்கைகளில் யாழிசைக் கருவியை ஏந்தியவாறு கலைமகளின் திருவுருவத்தைக் காணலாம்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், திருமகளுக்கும் கலைமக ளுக்கும் தனித்தனியே சன்னிதிகள் உள்ளன. மேலும், இவ்வாலயத்தில் தனிச்சிறப்புடன் கலைமகளின் திருவுருவத்தைத் தூண் ஒன்றில் காணலாம்; இத்திருவுருவம் நின்ற நிலையில் வீணை வாசிக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறது; இந்த ஞானசக்தி இடக்காலை ஊன்றியும் வலக்காலைச் சற்று வளைத்த வண்ணமும் நளினமாகத் தோன்றுவது சிற்பியின் கலை ஞானத்தின் புலப்பாடு எனப் போற்றி நிற்கலாம்.

பொதுவாக, கலைமகளுக்கு நான்கு திருக்கைகளே இயல்பாக உள்ளன. ஆனால், சில இடங்களில் இதற்கு மாறாகவும் சிற்பப் படைப்பு அமைவது உண்டு. காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில் எட்டு திருக்கைகளுடன் கூடிய சரசுவதிக்குச் சன்னிதியும் உள்ளது. இந்தச் சரசுவதிக்கு ராஜசியாமளா என்ற பெயர் உள்ளது.

கலைவாணியாகிய சரசுவதி, வீணையுடனும் வீணையின்றியும் சிற்பங்களில் காணப்படுகிறாள். ஆனால், கூத்தனூர், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய தலங்களில் வீணையின்றிக் கலைமகள் காணப்படுவது போல, வேதாரணியம் கோயிலிலும் வீணையின்றிக் காணப்படுகிறாள்; காரணம், இங்கு அம்பிகையே 'யாழைப் பழித்த மொழியாள்' என அமைந்துள்ளமையால், கலைமகள் வீணையின்றித் தவக்கோலத்தில் இருக்கிறாள் என்பர். நன்கு ஆராய்ந்து பார்த்தால், சோழர் காலத்திற்குப் பிறகே பெரும்பாலும் கலைமகள் வீணையேந்தியவளாகச் சிற்பத்தில் இடங்கொண்டிருப்பது தெரியவரும்.

ஒப்பீட்டு நோக்கில் பிற மாநிலங்களிலுள்ள கலைமகளின் சிற்பத்தை நோக்குகையில் சில நுண்குறிப்புகள் கிடைக்கின்றன.

''வங்காளத்திலுள்ள பண்டைய விஷ்ணு மூர்த்தங்களைக் கவனித்தால் அங்குப் பூதேவிக்குப் பதிலாகச் சரசுவதி தேவி இடம் பெறுவது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது''[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

கலைமகளுக்கு வாகனமாக அமைந்திருப்பது பற்றிச் சிற்பவுலகில் நிகழ்ந்த சில மாற்றங்கள் சிந்திக்கத்தக்கவை. தஞ்சாவூர் வி.எஸ். ஸ்ரீநிவாசன் எழுதுகையில், ''தென்னாட்டைப் பொறுத்த வரை சரசுவதியின் வாகனம் மயிலே! வடநாட்டிலுள்ள சில இடங்களில் ஆடுகள் கூடச் சரசுவதிக்கு வாகனமாகக் காட்சியளிக்கின்றன''[2] என்றும், ''ஆதிகாலத்தில் அன்னம் ஒன்று மட்டுமே அவளது வாகனமாக அமைந்திருக்கவில்லை; சிங்கமும் சரசுவதிக்கு வாகனமாக இருந்தது. வடநாட்டிலுள்ள சிற்பக் கோலங்கள் சிலவற்றில் சிங்கமே வாகனமாகக் காணுகிறது''[3] என்றும் ஆராய்ந்து குறிப்பிடுகிறார். எனவே, சிற்பக் கலை ஆழ்கடலாகும்.

1. சப்தகிரி *(திங்கள் இதழ்)*, நவம்பர், 1992, பக். 21.
2. சப்தகிரி *(திங்களிதழ்)*, நவம்பர், 1992, பக். 20.
3. சப்தகிரி *(திங்களிதழ்)*, நவம்பர், 1992, பக். 20.

கருநாடக மாநிலத்தில் சிற்பக் களஞ்சியமாக விளங்கும் பேலூர் சென்னை கேசவர் ஆலயத்தில் காணலாகும் நளின நடனத் திருக்கோலத்துக் கலைமகள், சிற்பியரின் கலைத் திறத்திற்குச் சீரிய எடுத்துக் காட்டாகும். ஹோய்சலரின் கலையார்வத்தின் புலப்பாடாக அமைந்த கலைமகளின் கரத்திலே தெய்வம் நடனமாடுவதைக் காணக் கண் கோடி வேண்டும். அஃது ஒருபுறமிருக்க, ''மைசூர் மாநிலத்தில் நாகமங்கலம் தாலுக்காவிலுள்ள 'பஸ்ராலு' எனும் ஊரைச் சேர்ந்த மல்லிகார்ஜுனர் கோவிலில் காணும் ஞானசரசுவதியின் அருமை யான சிற்பம் காண்போர் உள்ளங்களையெல்லாம் கனிவூட்டுவதாக அமைந்துள்ளது''[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

இந்து மதத்தினர் மட்டுமே கலைவாணியைப் போற்று கின்றனர் என்பதில்லை. புறமதத்தினராகிய பௌத்தர் ஆலயங் களிலும், சமணர் ஆலயங்களிலும் சரசுவதியின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. வெவ்வேறு திருப்பெயர்களுடன் சரசுவதி, சிற்சில சிற்ப மாற்றங்களுடன் வழிபடப்படுகிறாள்.

1.5 பெருந்தெய்வ நோக்கில் - அருள்மிகு சமயபுரம் மாரியம்மன்

ஆதிபராசக்தியின் எல்லையற்ற ஆற்றலும், நிகரற்ற வல்லமை யும், இணையற்ற கருணைத் திருவிளையாடல்களும் பல்வகைத் திருவுருவங்களில் வெளிப்படும். அவற்றுள் மாரியம்மன் திருவுருவமும் ஒன்று. கண்கண்ட தெய்வமாக மக்களால் போற்றப்படும் சமய புரத்தாளாகிய அம்மன் சிலை பச்சிலை மூலிகைகளால் உருவாக்கப் பட்டமையால் மூலிகையம்மன் என்றும் அழைக்கப்படும். கருவறையில் பெரிய வடிவினளாகத் தோன்றும் இந்த அம்மனே யன்றி, அபிடேக அம்மனும் ஒரு தனிச் சன்னிதியில் அருள் பாலித்தலைக் காணலாம்.

மாரியம்மனுக்குரிய சிறப்புத் தலங்களாக இருக்கன்குடி, தாயமங்கலம், ஒழுக மங்கலம், வீரபாண்டி, நார்த்தா மலை, கொன்னை யூர், திருவப்பூர், இளஞ்சாவூர், பண்ணாரி, புன்னை நல்லூர், வலங்கை மான், திருவேற்காடு ஆகியவை குறிப்பிடத்தக்கவை; எனினும், சமயபுரம் மாரியம்மனுக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய பேரருள் திறம் உண்டு.

சமயபுரத்தாளின் வலப்பாதத்தின் கீழே அசுரர் மூவரின் தலைகள் காணப்படும்; அவை ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றின் உருவகங்களாக அமைந்துள்ளன. அம்மனின் இடப்பாதம்

1. சப்தகிரி *(திங்கள் இதழ்)*, நவம்பர், 1992, பக். 22.

மேலே மடித்த பாங்கினில் தோற்றமளிக்கிறது. செவ்வாடை பொலிவுறும் மூலிகையம்மன் திருமேனியில் மணிமாலைகள், கழுத்தட்டிகைகள், தோள் வளைகள், கைவளைகள், ஒட்டியாணம், மோதிரம், காற்சதங்கை முதலிய அணிகலன்கள் எழிலுடன் திகழும்.

அம்மனின் எட்டுக் கைகளில் வாள், சூலம், மலர், உடுக்கை, பாசம், வில், மணி, கபாலம் எனப் படையணிகள் அலங்கரிக்கும் அவற்றினூடே அடியவர்க்கு நலங்கூட்டும் அபயத் திருக்குறிப்பும் உண்டு. திருமுக மண்டலத்தில் மரகதப் புன்னகை தவழ வீற்றிருக்கும் அம்மனைக் காணக் கண் கோடி வேண்டும்.

1.5.1 இருக்கன்குடி மாரியம்மன் - பெருமையும் சிலைச் சிறப்பும்

சிற்றூர்ப்புறத் தெய்வங்களாகச் சில தெய்வங்கள், சிறு தெய்வங்கள் போல மக்களிடையே காணப்படினும், அவை தம் அருட் சக்தியால் பெருந் தெய்வங்களாக வழிபாட்டினைப் பெற்று வருகின்றன. அவற்றுள், சமயபுரம் மாரியம்மனைப் போன்ற பெருஞ் சிறப்பினைக் கொண்டு இருக்கன்குடி மாரியம்மனும் விளங்குவதை மக்கள் உணர்வர்.

இக்காலத்தில் அமைந்துள்ள மாரியம்மன் ஆலய வளாகத்தில் பல்லாண்டுகளுக்கு முன், சாணம் பொறுக்கும் கன்னியொருத்தியின் அருள் வாக்கினால் பூமியைத் தோண்டிய நிலையில் கிடைத்த அற்புதச் சிலையே, கருவறையிலுள்ள விக்கிரகம் ஆகும். மாரியம்ம னுக்குகந்த அனைத்து இலக்கணங்களுடன் கூடிய இந்தச் சிலையை நிறுவிக் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கொடிமர மண்டபம், கொடி மரத்தின் அருகில் நந்தி, பலிபீடம் அமைந் துள்ளன. இதன் பெருமையை உணரும் வகையில், தெற்குப் பிராகார நடுவே அரசமரத்து அடியில் விநாயகர் அருள் பாலிக்கிறார்.

மேலும், "இங்கு வாழவந்தம்மன், இராக் காச்சி அம்மன், பேச்சி அம்மன், முப்பிடாரி, வீரபத்திரர், வயிரவ மூர்த்தி, காத்தவ ராய சுவாமி மற்றும் கருப்ப சுவாமி சன்னிதிகள் உள்ளன.

இக்கோயில் அமைந்துள்ள இருக்கன்குடி மாரியம்மன் திருத் தலம், புராணச் சிறப்பு பெற்றது. இது புராணக் காலத்திலிருந்தே வழிபாடு செய்திருப்பார்கள் எனத் தோன்றுகிறது"[1] என்று பி.எஸ்.ஆர். குறிப்பிட்டு விட்டுப் புராண நுண்கூறுகளை இந்த மாரியம்மன் சிலைப் பெருமைக்கு அரண் கோலுமாறு எழுதிச் சென்றுள்ளார்.

1. கடவுள் *(திங்களிதழ்)*, மே, 2000, பக். 20.

ஆலய வளர்ச்சியுடன் கூடிய சிற்பக்கலை வளர்ச்சி

சங்க காலத்திலேயே சமயப் பண்பாடு மலர்ந்தமையால் திணைக்குரிய தெய்வங்களுக்குக் கோயில்கள் *(கோட்டங்கள்)* அமையலாயின. பிறகு, பக்தியியக்கக் காலமாகிய பல்லவர்கள் காலத்தில் கட்டடக்கலை நோக்கில் குடைவரைக் கோயில்கள், இரதக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் எனப் பலவகைகளில் படிநிலை வளர்ச்சியுண்டாகவே, சிற்பக்கலை வளர்ச்சியும் உயர்ந் தோங்கியது எனக் கண்டு வருகிறோம். இது தொடர்பான சில நுணுக்கங்கள் அறியத்தக்கவை.

பல்லவர் காலத்தில் கருவறையை உருவாக்கினாலும், அங்குப் பிரதிட்டை பண்ணுவதற்குரிய தெய்வச் சிலையைக் கல்லினால் செய்யாமல் மரத்தினாலோ சுதையினாலோ செய்தமைத்தமையால் திருமஞ்சனம் *(அபிடேகம்)* நடைபெறவில்லை; இது தொடக்கக் கால நிலை. இந்தக் கோயில்களில் வழிபடுவதற்கேற்பச் சுவாமி சிலை இல்லாதிருப்பதை மாமல்லபுரத்தில் தெரிந்து கொள்ளலாம். ஆனால், கட்டுமானக் கோயில்களாகவுள்ள மாமல்லபுரம் தல சயனப் பெருமாள் கோயில், காஞ்சிக் கயிலாசநாதர் கோயில் முதலியவற்றில் கருவறைக்கண் தெய்வச் சிலைகள் அமைக்கப் பட்டமை படிநிலை வளர்ச்சியாகும்.

காலப்போக்கில் கருவறைச் சுவரைச் சுற்றியும், ஒட்டியும் அர்த்த மண்டபம் மகா மண்டபம் முதலிய மண்டபங்கள், பிராகாரங்கள், கோபுரங்கள் அமையலாயின; அவற்றிலெல்லாம் சிற்பக்கலை இடம் பெற்றது.

மக்கள் இறை வழிபாடு புரியும் நோக்கத்தில் கருவறையைச் சுற்றி வரும் போதும் இறைத் திருவுருவங்களைக் காண வேண்டும் என்ற நோக்கத்தில் தேவகோட்டங்கள் அமைக்கப்படடன; மகா மண்டபச் சுவர்களின் வெளியேயும் தேவகோட்டங்கள் அமைக்கப் பட்டன. இந்நிலையில் சிற்ப வளர்ச்சியாகக் கோட்டப் பஞ்சரம் *(சுவர்ப் பகுதியில் இடம் பெறும் ஓர் அலங்கார வேலைப்பாடு)* அமையலாயிற்று. இது பற்றி ஆராய்ந்து டாக்டர் எல். மணிவண்ணன் எழுதுகையில், ''ஆரம்ப காலப் பல்லவரது கோயில்களில்,

தேவகோட்டத்தின் இருமருங்கிலும் கோட்டப் பஞ்சரம் இடம் பெறாமல், இறையுருவங்கள் மட்டும் இடம் பெற்றன. சோழர் காலத்தில் கோட்டப் பஞ்சரங்கள் அமைக்கப்பட்டு அதனுள் இறையுருவங்களும் இடம் பெற்றன. ஆனால், பாண்டிய நாட்டில் இறையுருவங்கள் இன்றியே கோட்டப் பஞ்சரங்கள் இடம் பெறு கின்றன. மேலும், இறையுரு வைப்பதற்கான பள்ளம் இன்றியே கோட்டப் பஞ்சரம் அமைந்துள்ளது''[1] எனக் கூறிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

ஆலயம் என்பது மானுட உடலமைப்பைப் போன்று பல அங்கங்களுடன் கூடிய அமைப்பினைக் கொண்டது; பல பாகங் களுள் - அங்கங்களுள் - அதிட்டானம் என்பது 'பாதம்' எனும் பெயர் பெறும்.

கட்டடக் கலை நூலாகிய மயமதம் மானசாரம் முதலியவற்றில் பாத பந்த அதிட்டானம் உரகபந்த அதிட்டானம் முதலிய 18 வகை அதிட்டானங்கள் கூறப்பட்டுள்ளன.

விமானத்தின் பல பாகங்களையும் *(ஆறு பகுதிகளையும்)* மனிதனுடைய உடலுறுப்புகளுடன் ஒப்பிட்டுக் காண்பர். அஃதாவது, அதிட்டானம் - பாதம்; பித்தி - கால்; பிரஸ்தரம் - தோள்; கிரீவம் - கழுத்து; சிகரம் - தலை; கலசம் - முடி என ஒப்பிட்டுக் காண்பர்.

விமானச் சிற்பங்கள், கோபுரச் சிற்பங்கள், மண்டபச் சிற்பங்கள், விதானச் சிற்பங்கள், சுவர்ச் சிற்பங்கள், தூண் சிற்பங்கள் முதலிய பலவகைச் சிற்பங்களையும் கலையனுபவத்துடனும் சுவையுணர் வுடனும் அனுபவிக்கச் சிற்பக்கலை நுணுக்கங்களையும் ஓரள வேனும் புரிந்து கொண்டால் நல்லது. தெய்வச் சிலைகளையும், இயற்கையிகந்த உருவங்களின் சிலைகளையும், மானுடச் சிலை களையும், விலங்கு பறவை முதலிய உயிரினச் சிலைகளையும் தெரிந்து கொண்டு அனுபவிக்கும் நாட்டம் தேவை.

ஆலயங்களில் பிரஸ்தரம் எனும் கூரைப் பகுதியையும், மண்டபமெனின் விதானப்பகுதியையும் தாங்கிக் காப்பாற்றுவதைச் சுவர்களும் தூண்களுமே ஏற்றுக் கொள்ளும். தூண்களை அமைக்குங் கால், தொடக்கக் காலத்தே எளிமையாக இருந்து, பல்லவர்

---

1. பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக் கலையும், பக். 64.

பாண்டியர் அதியர் சோழர் விசய நகர - நாயக்க மன்னர் காலங்களில் படிப்படியே அலங்கார நோக்கிலும், சமயச் சிறப்புப் புலப்பாட்டு நோக்கிலும் சிற்பக் கலைக் கூறுகள் இடம் பெறலாயின.

ஆராய்ச்சி அடிப்படையில் குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதுகையில், ''எழில் கொஞ்சும் விஜய நகர நாயக்கர் கால மண்டபத் தூண்களில் பல்வேறு கலைப் பாணிகளைக் காண இயலு கிறது. காஞ்சி ஏகாம்பரநாதர் மண்டபம், திருவண்ணாமலை மண்டபம், திருவரங்கம் சேஷராயர் மண்டபம், மதுரை மண்டபங்கள் இவ்வகையில் முதலிடம் வகிக்கின்றன. பாயும் குதிரைகளின் மேல் வாளேந்திய வீரர்கள், பாயும் புலிகள், தெய்வத் திருவுருவங்கள், காமச் சிற்பங்கள், நடன மாதர்கள், கலை நயம் மிகுந்த போதிகை கள் எனப் பல்வேறு கூறுகளை இவற்றில் காண முடிகிறது''[1] என எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

மேலும், அவர், ''மதுரை நாயக்கர்களின் மண்டபங்கள் சில வற்றில் பாயும் குதிரை, யாளிகள், சிம்மங்கள் இருப்பதுபோன்று சில மண்டபங்களில் மிகப் பெரிய அளவில் தெய்வத் திரு வுருவங்கள் திகழ்கின்றன. கம்பத்தடி மண்டபத்தில் உள்ள காளி, வீரபத்திரர் போன்ற தூண் சிற்பங்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. விசுவநாத நாயக்கரிலிருந்து அனைத்து நாயக்க மன்னர்களின் உருவங்களையும் இங்குத் தூண்களில் காண முடிகிறது. இது போன்றே திருவரங்கம் கருட மண்டபத்திலும் மதுரை நாயக்கர்கள் பலரது உருவங்கள் இடம் பெற்றுள்ளன. திருவரங்கத்து மண்டபத்து உருவச் சிலைகளில் போசளர்களின் கலைப் பாங்கு காணப் பெறும்''[2] என்று கூறும் குறிப்புகளும் தூண் சிற்பச் சிறப்பைப் புலப்படுத்தக் கூடியவை.

வரலாற்று நோக்கில் சிந்திக்கையில், பல்லவர் காலத்தே பெரும்பாலும் சுவரில் புடைப்புச் சிற்பங்களே அமைக்கப்பட்டன; உலோகத்தில் வார்த்தெடுக்கப்பட்ட திருவுருவங்களே முழுச் சிற்பங் களாக அமைந்தன. விசயநகர - நாயக்க மன்னர் காலத்தே புடைப்புச் சிற்பங்களை அமைப்பதில் ஈடுபடாமல், தூண்களுடன் இணைந்த நிலையில் உருவச் சிற்பங்கள் *(தூண் சிற்பங்கள்)* அமைக்கும் வழக்கம் பெருகியது.

---

1. தமிழகக் கோயிற் கலை மரபு, தஞ்சைச் சரசுவதி மகால் நூலக வெளியீடு, பக். 16.
2. மேலது, பக். 16-17.

2. சிற்பக் கலையில் விநாயகரும் அவரின் பல்வகை உருவங்களும்

தமிழகத்தைப் பொறுத்த வரையில் விநாயகர் எனும் கணபதியைச் சங்ககால மக்களுக்குத் தெரியாது. சங்கம் மருவிய காலத்தில் கணபதி வழிபாடு தமிழர்களிடையே அறிமுகமாகி யிருத்தல் கூடும் என்பர்.

பல்லவன் நரசிம்மன் காலத்தில், சாளுக்கியருடன் போர் நிகழ்ந்தது; நரசிம்மனுக்குப படைத் தளபதியாக விளங்கிய பரஞ் சோதி, வாதாபியிலிருந்து கணபதியுருவத்தைக் கொணர்ந்து திருச் செங்கட்டான்குடியில் பிரதிட்டை செய்தார் என்பர்; அவர் அவ்வாறு செய்வதற்கு முன்னரே, புராண அடிப்படையில் கணபதி சிவனை வழிபட்ட காரணத்தால் எழுந்த கணபதீச்சுரம் இருந்தது என்றும் கூறுவர்; மேலும், இராமநாதபுரம் மாவட்டம் பிள்ளையார்ப்பட்டி விநாயகர் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்ற கருத்தும் ஆராய்தற்குரியது. எப்படியோ தமிழ்நாட்டில் பிரணவ சொரூபியாக விநாயகர் வழிபாடு செய்யப் பெறுகின்றார். இதற்கேற்பப் புராணப் பின்னணியாகச் சிவபெருமான் உமையம்மைக்குக் கணநாத தத்து வத்தை உபதேசித்தார் என்பதும், திருமாலும் இந்திரனும் சந்திரனும் கணநாதரின் திருவருள் பெற்றே தத்தம் கடமைகளைப் புரிகின்றனர் என்றும் கூறலாயினர்.

முத்கல மகரிஷி, தக்ஷகருக்குக் கணபதியின் பதினாறு அவ தாரங்களை உபதேசித்துள்ளார். அதற்கிணங்கச் சிற்ப வடிவில் பல வகைக் கணபதி திருமேனிகளை வடிக்க முற்பட்டனர்; அந் நிலையில் அமைந்த தியான சுலோகங்களின் சுருக்கம் வருமாறு:

1. பால கணபதி

''வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகிய வற்றைத் தம் கரங்களில் தரித்துக் கொண்டிருக்கிறார்; அவருடைய ஐந்தாவது திருக்கரம் துதிக்கை; அதில் மோதகத்தை வைத்துக் கொண்டிருப்பவர். இளஞ்சூரியனுக்கு நிகரான திருமேனியுடைய வர்; எங்கும் ஒளியுடன் விளங்குகிறவர். அவ்வாறான பால கணபதியைச் செந்நிறத்துடன் கூடியவராகத் தியானிக்கிறேன்.''

2. தருண கணபதி

''கயிறு, மரவெட்டி, அப்பம், விளாம்பழம், நாவற்பழம், தம் ஒற்றைக் கொம்பு, நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைத் தம் எட்டுக்

கைகளிலும் தரித்துக் கொண்டிருக்கின்றவர்; தருண சூரியனுக்கு ஒப்பான ஒளியுடன் விளங்குபவர். ஒப்பற்ற பெருமை வாய்ந்த இவரைச் செம்மை வாய்ந்தவராகத் துதிப்போம் *(ஜெபிப்போம்)*; அவர் நம்மைக் காப்பாற்றட்டும்.''

3. பக்த கணபதி

''தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வெல்லப் பாயசம் நிறைந்த பாத்திரம் ஆகியவற்றைத் தம் நான்கு கரங்களிலும் தரித்துக் கொண்டு, சரத்கால முழுச் சந்திரனைப் போன்ற திருமேனியைக் கொண்டவர் பக்த கணபதி; அவர் வெண்ணிறம் கொண்டவர். அப்பேர்ப்பட்ட கணேசரை நான் பஜனை புரிகிறேன்.''

4. வீர கணபதி

''வேதாளம், வேல், பாணம், வில், சக்கரப்படை, கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, மரவெட்டி, நாகம், கயிறு, சூலம், குந்தப்படை, கோடரி, கொடி ஆகியவற்றைத் தம் பதினாறு பக்கங் களில் தரித்திருக்கிறார்; செந்நிறம் வாய்ந்தவர் வீரகணபதி. அப்படிப் பட்ட கணேசரை எப்போதும் நான் செபிக்கிறேன்.''

5. சக்தி கணபதி

''பச்சை நிறத் திருமேனியுடைய தேவியைத் தழுவியிருப்பவர்; அவ்விருவரும் ஒருவரின் கை மற்றொருவரின் கையைத் தழுவிய படி யுள்ளனர். அவருடைய செந்நிறம் சந்தியா காலத்தைப் போன்றது. கயிறு, மரவெட்டி ஆகியவற்றை அவர் இரண்டு கைகளிலும் தரித் திருக்கிறார். அச்சத்தைப் போக்குபவர் சக்தி கணேசர். சிந்தூர வண்ணமுள்ளவரான அந்தக் கணேசரைச் செபிக்கிறேன்.''

6. துவிஜ கணபதி

''புத்தகம், உருத்திராக்க மாலை, தண்டம், கமண்டலம் இவற்றின் சோபையானது, கணேசனின் திருக்கைகளை அலங்கரிக் கின்றன. நான்கு யானை முகங்களைக் கொண்டவர். அவ்வாறான அவரைச் செபம் செய்கிறவனே புண்ணியசாலியாவான்.''

7. சித்தி கணபதி

''பழுத்த மாம்பழம், பூங்கொத்துகள், கருப்பங்கழி, எள்ளுக் கொழுக்கட்டை, பரசு ஆகியவை அவருடைய கரங்களில் உள்ளன.

சம்ருத்தி என்ற தேவியுடன் அவர் வீற்றிருக்கிறார். கணேசரே! உம் நிறம் பொன்னான பசுமை; உம்மை இந்த நிறத்துடன் தியானித்து வணங்குகிறேன்.'' *(தம்மைப் பூசிப்பவருக்கு எல்லா விக்கினங் களையும் விலக்கி, எல்லா நலன்களையும் நிறைவேற்றி வைப்பவர்).*

8. உச்சிட்ட கணபதி

''குவளை மலர், மாதுளம் பழம், வீணை, நெற்கதிர், கயிறு, உருத்திராக்க மாலை ஆகியவை கணபதியின் ஆறு கரங்களிலும் உள்ளன. அவர் பச்சை மேனியுடன் விளங்குகிறார். உச்சிட்டரான இவர் நீலநிறமுடையவர். அப்படி இவரைத் தியானிக்கிற என்னை நன்கு காப்பாற்றட்டும்.''

9. விக்கின கணபதி

''சங்கு, கரும்பு, வில், மலர், பாணம், கோடரி, கயிறு, சக்கரம், தம் ஒற்றைக் கொம்பு, மரவெட்டி, நெற்கதிர், சரம் ஆகியவற்றாலும் தம் பன்னிரண்டு கரங்களிலும், அவர் வைத்திருக்கும் படைகளி னாலும் அலங்காரங்களினாலும் மிக்க சோபை சொர்ண நிறங் கொண்ட திருமேனியோடு விளங்குகிறார். அப்படிப்பட்ட விக்கின கணபதியை நான் தியானித்து வணங்குகிறேன்.''

10. க்ஷிப்ர கணபதி

''கொம்பு, கற்பகக் கொடி, கயிறு, மரவெட்டி ஆகியவை கணபதியின் நான்கு கரங்களில் உள்ளன. ஐந்தாவது கரமான துதிக் கையில் இரத்தினம் பதிக்கப்பட்ட தங்கக் குடம்; செம்பருத்தி மலர் போன்ற காந்தியுள்ளவர். அவ்வாறான க்ஷிப்ர கணபதியைச் செபம் புரிகிறேன்.''

11. ஹேரம்ப கணபதி

''அபய முத்திரையும் வரத முத்திரையும் இரண்டு கரங்களில் கொண்டு, எஞ்சிய எட்டுக் கரங்களில் கயிறு, தந்தம், உருத்திராக்க மாலை, மரவெட்டி, கோடரி, இரும்பு உலக்கை, மோதகம், பழம் ஆகியவை உள்ளன. சிங்கத்தின் மீது அமர்ந்துள்ள ஹேரம்ப கணபதி, ஐந்து யானை முகங்களுடன் கூடியவர்; வெண்ணிற மானவர்; இவரை இப்படியாகத் தியானிக்கிறேன்.''

12. லட்சுமி கணபதி

''கிளி, மாதுளம் பழம், மாணிக்க மயமான குடம், மரவெட்டி, கற்பகக் கொடி, கத்தி ஆகியவற்றை ஏந்திய லட்சுமி கணபதி வெண்மை நிறமுடையவர். நீல வண்ண ஆம்பல் மலரையும் கரத்தில் வைத் துள்ளார். அருகில் அவருடைய தேவியர் இருவரையும் அமர்த்திக் கொண்டிருப்பவர். அத்தகைய பெருமையுடையவர் நம்மைக் காப்பாற்றட்டும்.''

13. மகா கணபதி

''யானை முகமுடையவராகப் பிறையைச் சூடியவர்; செந்நிற மானவர், முக்கண்ணர்; தாமரை மலருடன் கூடிய நாயகியைத் தம் மடியில் அமர்த்திக் கொண்டு காட்சியளிப்பவர். மாதுளை, கதை, கரும்பு, வில், சுடர்விடு சக்கரம், தாமரை மலர், கயிறு, நெய்தல், நெற்கதிர், தம் ஒற்றைக் கொம்பு ஆகியவற்றைத் தம் பத்துக் கைகளிலும் தரித்திருப்பவர். பதினோராவது கையாகிய துதிக்கையில் இரத்தின கலசத்தை வைத்திருப்பவர். அவ்வாறான கணபதியைத் தியானிக் கிறேன்.''

14. விஜய கணபதி

''கயிறு, மரவெட்டி, தம் ஒற்றைக் கொம்பு, மாம்பழம் ஆகிய வற்றைக் கைகளில் கொண்டவர். மூஷிக வாகனத்தையுடைய அவர் செந்நிறம் கொண்டவர். இந்த விஜய விநாயகர் இடையூறுகள் அனைத்தையும் அழிப்பாராக! இவரை இவ்வாறு செபிக்கிறேன்.''

15. நிருத்த கணபதி

''பாசம், அங்குசம், அப்பம், உலக்கை, தந்தம் ஆகியவை நிருத்த கணபதியின் திருக்கைகளில் உள்ளன. துதிக்கை அவரது ஆறாவது திருக்கையாக விளங்கும். இதனால் இவர் மோதிரம் போல் வளைந்த நிலையிலிருப்பதாகக் கொள்வர். மஞ்சள் நிறப் பொலிவுடன் இவருடைய திருமேனியுள்ளது. நிருத்த நிலையி லுள்ள கணபதிக்கு என் வணக்கம்.

16. ஊர்த்துவ கணபதி

''நீலோத்பல மலர், நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு, வில், பாணம், நீண்ட தந்தம், கதை ஆகியவை ஊர்த்துவ கணபதியின் எட்டுக் கைகளிலும் இருக்கின்றன. பச்சை நிறத் திருமேனியுள்ள

இவர் தேவியைத் தழுவுவதற்குத் தம் கையை அவர் உயர்த்தியதால் அவருக்கு ஊர்த்துவ கணபதி என்ற திருப்பெயர் உண்டாயிற்று. அவர் பொன்னிறம் வாய்ந்தவர்; அப்படிப்பட்ட கணபதியைச் செபிக்கின்றேன்; அவர் நமக்கு நன் மங்கலங்களைச் செய்வாராக.''

இவ்வாறான விநாயகர் சிற்பங்களைக் காஞ்சிக் காமகோடி பீடாதிபதி அவர்களால் நிறுவப்பட்ட இராமேசுவரம் மண்டபத்தில் கண்டு களிக்கலாம்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்கச் சிலை வடிவம் அமைத்தற் குரிய மூலப் பொருள்களாலும் சில அங்கச் சிறப்புக் கூறுகளாலும் சில தலங்களில் விநாயகர் பெருமை மக்களால் போற்றப்படுகிறது. மூலப்பொருள்களைப் பொறுத்தவரையில் 'வெள்ளெருக்கு வேர்' விநாயகர் திருவுருவம் அமைக்க மிகச் சிறப்புடையது என்பர்.

அ) மரகத விநாயகர்

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே 1 1/2 கி.மீ. தொலைவிலுள்ளது மரகத விநாயகர் கோயில். இங்கு விநாயகர் திருவுருவம் பச்சை நிறத்தில் வியத்தகுவண்ணம் அமைந்துள்ளது. சக்தி வாய்ந்த தெய்வமாகப் போற்றப்படுவதால் மக்கள் பலராக வந்து வழிபடுகின்றனர். சங்கடக்ர சதுர்த்தி. விநாயகர் சதுர்த்தி போன்ற நாள்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இந்த விநாயகர் சிலை எப்போது வடிவமைக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆ) நிறம் மாறும் விநாயகர்

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாப புரத்திற்கு அருகேயுள்ள கேரளபுரத்தில், ஓர் ஆலமரத்தின் கீழ் ஒரு வியத்தகு விநாயகர் திரு வுருவச் சிலை உள்ளது. இது சந்திர காந்தக் கல்லால் ஆக்கப்பட்டது எனச் சிற்பியர் கூறுகின்றனர். ஆவணி மாதத்திலிருந்து ஆறுமாதம் வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து ஆறுமாதம் கரிய நிறமாகவும் இந்தச் சிலை இவ்வாறு நிறம் மாறுவது ஒரு வகைப் புதிராக உள்ளது.

இ) வலம்புரி விநாயகர்

தமிழகத்தில் பெரும்பாலும் துதிக்கையை இடப்பக்கமாகக் கொண்ட விநாயகர் சிலைகளே மிகுதியாகும். வலம்புரி விநாயகர் சிலைகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் உள்ளன.

பாண்டி நாட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குடைவரைக் கோயிலாகிய பிள்ளையார்பட்டிக் கோயில் மிகச் சிறப்புடையது; அங்குக் கருவறையில் அமர்ந்த கோலத்தில் வலம்புரி விநாயகராக இரு திருக்கைகளுடன் *(வலக்கையில் மோதகம், இடக்கை வயிற்றுக் கச்சையைத் தொட்ட நிலை)* விளங்குகிறார். ஆயிரம் இடம்புரி விநாயகர்கள் சில ஊர்களில் தனித்தனியே அமையலாம்; அவர்களுக்கிடையே இவ்வாறு அமைந்திடும் வலம்புரி விநாயகருக்கு தனிச்சிறப்பு உண்டு. இங்கு இவரைக் 'கற்பக விநாயகர்' என்று போற்றி வணங்குவர். *(விநாயகர் சிலை உயரம் ஆறு அடி, அகலம் ஐந்து அடி).*

திருநாரையூரில் பொள்ளாப் பிள்ளையாராக எழுந்தருளியுள்ள சுயம்புவான திருவுருவம், நம்பியாண்டார் நம்பியை ஆட்கொண்ட சீர்த்தி மிகக் கொண்டது. இந்த விநாயகரும் வலம்புரி விநாயகராக இரு திருக்கைகளைக் கொண்டு விளங்கி அருள் பாலிக்கிறது. சிற்பியின் உளியால் செதுக்கப்படாத 'சுயம்பு' ஆதலின் பொள்ளாப் பிள்ளையார் என்பது காரணப் பெயராயிற்று.

ஈ) நாக யக்ஞோபவீத கணபதி

மீனம் பாக்கத்திற்கும் பல்லாவரத்திற்கும் இடைப்பட்ட திரிசூலம் *(திருகரம்)* எனும் தலத்தில் பிரும்மபுரீசுவரர் கோயிலில், நாகப் பாம்பைப் பூணூலாக அணிந்திருக்கும் கணபதியைக் கண்டு வழிபடலாம்.

உ) ஓங்கார ஒலி விநாயகர்

காஞ்சிபுரம் திருவோணகாந்தன்தளி எனும் ஆலயத்துக் கருவறை மண்டபத்தின் நுழைவாயிலில் - சுவரின் முகப்பில் - ஒரு கணபதியுருவம் உள்ளது. ''அவர்தம் அருகே சென்று, நம் செவியை அணுக வைத்து நிற்பின், ஒரு வகை ஓங்கார ஒலி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். இத்திருவுருவை அமைத்த சிற்பக் கலைஞர் யாரோ? சிலையில் அமைந்த திருவுருவில் எங்ஙனம் இவ்வகை ஒலி எழுகின்றது என்பது வியப்பாக உள்ளது! எத்தனையோ நெடுங்காலமாக, எத்தனையோ பல்லாயிரக்கணக்கான மக்கள், இவ்வொலியைக் கேட்டு, மகிழ்ந்து வியந்து வணங்கிச் செல்கின்றனர்''[1] என வருங் குறிப்பு, இத்திருவுருவத்தின் சிறப்பை விளக்கி நிற்கும்.

1. திருக்கோயில் *(திங்களிதழ்)*, அக்டோபர், 1969.

ஊ) சாளிக்கிராமப் பிள்ளையார்

சனீசுவர பகவானது பெருஞ்சிறப்புடன் கூடிய திருநள்ளாறு எனும் தலத்தில், சாளிக்கிராமத்தாலான சிலை வடிவத்தில் விநாயகர் பூசிக்கப் பெறுகிறார். சிற்பக் கலைநோக்கில் இந்தத் திருவுருவம் போற்றத்தக்கது; இஃது ஆன்மநல அருமைப்பாடுடையது.

எ) யோக கணபதி

திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில், யோக பட்டம் தரித்த வராய், இளஞாயிறே போல இந்திர நீல ஆடையணிந்து கொண்டு, பாசம், உருத்திராக்க மாலை, யோக தண்டம், கரும்பு ஆகியவற்றை ஏந்திய நான்கு கைகளுடையவராய் யோக கணபதியாய் - மூலதார கணபதியாய் - விளங்குவதைக் காணலாம்.

எ) முக்குறுணி விநாயகர்

மதுரை மீனாட்சியம்மன் .ஆலயத்தில் வழிபடப் பெறும் சிற்பச் சிறப்புமிகு விநாயகர், முக்குறுணி விநாயகர் எனப் போற்றப் படுகிறார். ஒரே கல்லினால் அமைந்த அற்புதச் சிற்பமாகும். இந்தச் சிலையின் ஆன்ம நலச் சிறப்பினைப் புலப்படுத்தும் வகையில், இச்சன்னிதி முன்னுள்ள நிலை விளக்கின் கீழ்ப்பகுதியில் திருமலை நாயக்க மன்னரும் அவருடைய குடும்பத்தினரும் உலோக வார்ப்புச் சிற்பவுருவில் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஏ) கற்பக விநாயகர்

தில்லைச் சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் முக்குறுணி (அரிசி)ப் பிள்ளையார் பெரிய திருவுருவத்தில் அருள்பாலிக்கின்றார்; அங்கே மேற்குக் கோபுர வாயிலருகேயுள்ள கற்பக விநாயகர் மிகச் சக்தியுடையவராக வழிபாட்டில் உள்ளார்.

சிதம்பரம் தெற்குவீதியில், மானுடமுகத்துடன் ஒரு பிள்ளை யார் கோயில் உள்ளது; அங்கே நரமுக விநாயகரைக் கண்டு வழி படலாம். திருச்செங்காட்டங் குடியிலும் மனிதமுக விநாயகர் அருள் பாலிப்பதைக் காணலாம்.

ஐ) பிரளயம் காத்த விநாயகர்

கும்பகோணத்திற்கு அருகேயுள்ள, மண்ணியாற்றின் வடகரை யிலுள்ள திருப்புறம்பயம் சிவன் கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டது. அங்கே பிரளயம் காத்த விநாயகர் வரலாற்றுப் புகழ்

பெற்றவர். இவருக்கு அபிடேகம் செய்வதில்லை. விநாயக சதுர்த்தி யன்று மிக நயமாகத் தேனைப் பஞ்சினால் தொட்டு ஒத்தியெடுக்கும் 'தேனபிடேகம்' புரிவர். தேனை உடனே அந்தத் திருமேனி உறிஞ்சிக் காண்போரை வியப்பில் ஆழ்த்தும். அத்தகைய தேனபிடேகத்தின் போது விநாயகர் திருமேனி சந்தன வண்ணமாகத் தோன்றும்; பிறகு, செம்பவள நிறத்துடன் காட்சியளிக்கும்.

ஓ) நவசித்தி சுயம்பு விநாயகர்

வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டத்திலுள்ள ஒட்டனேரி நவசித்தி சுயம்பு விநாயகர் கோயிலில், விநாயகர் மூன்று உருவங் களில் காட்சியளிக்கிறார். சுயம்புத் திருமேனியாம் விநாயகரை நேர் முகமாக நோக்கினால் இலிங்கமாகவும், நடுப்பகுதியைப் பார்க்கின் விநாயகராகவும், மேற்பகுதியைக் காண்கையில் பாம்பு படமெடுப் பதே போன்ற காட்சியாகவும் இருத்தல் வியப்பிற்குரியது; இவ் விநாயகர் இராகு கேதுவுடன் காட்சியளிப்பது வியத்தற்குரியது.

ஓ) அதிசய விநாயகர்

நெல்லை மாவட்டம் வி.கே. புரத்தில், பஞ்ச பாஷாணத்துடன் 205 மூலிகைகளையும் கலந்து அதிசய விநாயகர் சிலையை உருவாக்கி நிறுவியுள்ளனர்.

"கஸ்தூரி மஞ்சள், ஏலக்காய், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், நறுக்கு மூலம், சந்தனக் கட்டை போன்ற வாசனைத் திரவியங்களும், ஆல், அரசு, அத்தி, வேம்பு போன்றவற்றின் மரப்பட்டைகள் விழுதுகளும், ஆவாரை, ஆடாதொடை, நீர்முள்ளி, நிலவேம்பு, கோடக சாலை போன்ற செடி வகைகளும், அறுகம்புல், ஓரிதழ்த் தாமரை, செருப் படை, கரிப்பாண், கொடுப்பை போன்ற பூண்டு வகைகளும், ரோஜா வெண்தாமரை, தாமரை, அல்லிக் கொழுந்து போன்ற பூக்களின் வகைகளும், ஐந்து பாஷாணங்களும் கொண்டு கலந்து அரைத்து இந்த விநாயகர் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையை உருவாக்க ஒரு வருட காலத்திற்கு மேல் ஆகி யுள்ளது. மூலிகை விநாயகர் சிலையின் உயரம் 21 செ.மீ. சுற்றளவு 30 செ.மீ. எடை 250 கிராம் இருக்கிறது..... விநாயகருக்கு அபிடேகம் செய்து அதைச் சாப்பிட்டால் பலநோய்கள் குணமாகும்"[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

1. கதிரவன், தீபாவளி மலர், 1997, பக். 1.

ஔ) திருமறைக்காடு வீரஹத்தி விநாயகர்

திருமறைக்காடு ஆலயத்தின் மேற்குக் கோபுர வாயிலில் ஒற்றைக் காலைத் தூக்கியபடி விநாயக மூர்த்தி காட்சி தருகிறார்; இராமாயணத் தொடர்புடைய மூர்த்தியாக இவர் சிறப்புடன் போற்றப் படுகிறார்.

இராவணனைக் கொன்று வென்ற நிலையில் இராமன் பிரமஹத்தி நீங்க இராமேசுவரத்தில் சேதுவில் சிவலிங்க வழிபாடு புரிந்தார்; அந்தப் பிரமஹத்தி நீங்கியபிறகு, அவரைப் பெண் ணுருவில் வீரஹத்தி தொடர்ந்தது. வேதாரணியத்திற்கு இராமபிரான் வந்து, சிவலிங்கப் பிரதிட்டை புரிந்த நிலையில் வீரஹத்தி நீங்கியது; அவ்வேளையில் வீரஹத்தியை விரட்டத் துணை புரிந்த கணபதியே காலைத் தூக்கி நின்றார். இராமனுக்கே தோசம் நீங்கத் துணை புரிந்த இந்த விநாயகரை வழிபட எந்தத் தோசமும் நீங்குமென்பது சமய நம்பிக்கை.

க) பத்துக் கரங்களுடன் கணபதி

கொல்லூர் மூகாம்பிகை கோயில் பிராகாரத்தில் இருக்கும் விநாயகர் 'ஹஸ்த கணபதி' என்ற திருநாமத்துடன் இருந்து அருள் பாலிக்கிறார். இது 'பஞ்ச கணபதி'யாகும். வெள்ளை நிறத்தில் பத்துக் கரங்களுடன் காட்சி தருகிறார். இது போன்று வேறு எந்தத் தலத் திலும் காணக் கிடைக்காத காட்சியாகும்''[1] என்பர் டி. பூபதிராவ்.

ங) சர்ப்ப விநாயகர்

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் ஐந்துமுக நாகப் பாம்புடன் கூடிய விநாயகர், கோயில் கொண்டுள்ளார். இங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு சர்ப்ப விநாயகருக்குப் பத்துக் கைகள் உள்ளன; இவரது சன்னிதிக்கு இருபுறத்திலும் இராகு பகவானுக்கு ஒரு சன்னிதியும், கேது பகவானுக்கு ஒரு சன்னிதியுமாக அமைந்துள்ளன. திருமணத் தோடம், கால சர்ப்ப தோடம், புத்திர தோடம் ஆகிய குறைபாடுகள் நீங்கி நலவாழ்வு பெற மக்கள் நாடி வந்து இங்கு அருச்சனை புரிந்து பயனடைகின்றனர்.

ஐந்து தலை நாகம் விநாயகருக்குக் குடை பிடிப்பது, இயற்கை யில் அமைந்த ஐம்பூதங்களும் விநாயகருக்குப் பணிந்து செயற் படுவதைக் குறிக்கும் என்று தத்துவ விளக்கம் கூறுவர்.

---

1. *அம்மன் தரிசனம் (திங்களிதழ்)*, செப்டம்பர், 2000, பக். 22.

ச) மூஞ்சூறு மேல் நர்த்தனமாடும் விநாயகர்

பல திருத்தலங்களில் 'கூத்தாடும் பிள்ளையார்' என்றும் 'நர்த்தன விநாயகர்' என்றும் அழைக்கப் பெறும் விநாயகர் சிலைகள் உண்டு. ஆனால், ஊத்துக்குளி கயிலாசநாதர் கோயிலில் மூஞ்சூறு மேல் நடனமாடும் விநாயகர் சிலையைக் கண்டு வழிபடலாம்.

பொதுவாகவே, வயலில் விளைந்திடும் நெற்பயிர் முதலிய வற்றை அழிக்கும் எலிகளை அடக்கும் நோக்கிலே, பெருச்சாளியை வாகனமாகக் கொண்டு விநாயகர் விளங்குகிறார் என்பர். அதனால் பல ஊர்களில் அவரை அறுவடைத் தெய்வமென்றே போற்றிக் கொண்டாடுவர். அந்நிலையில் மூஞ்சூறு மீது நடமிடும் விநாயகர் அதிசயிக்கத்தக்க காடசியருளுவது சிந்திக்கத்தக்கது.

ஞ) புதுச்சேரி மணக்குள விநாயகர்

புதுவை வட்டாரத்தில் கடல் காக்கும் விநாயகராகப் போற்றி வணங்கப்படும் மணக்குள விநாயகர் அற்புத ஆற்றல் படைத்தவர். இந்தத் தெய்வச் சிலையை வெளிநாட்டவர்கள் - வெள்ளையர்கள் - மதிக்காமல் கடலில் மும்முறை எறிந்து விட்டார்களாம்! ஒவ்வொரு முறையும் இக்கோயிலில் திரும்பி வந்து தம் பீடத்தில் அமர்ந் திருப்பது கண்டு எல்லோரும் வியந்து, சிறந்த முறையில் ஆலயம் கட்டி வணங்கி வருகின்றனர். இத்திருத்தலத்தில் தங்க ரதமும், யானை யும் இருப்பது கொண்டு மகத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

ட) புதுச்சேரி புற்றுமண் விநாயகர்

புதுவை அண்ணாசாலையில் வியத்தகு ஆற்றலுடன் 'அக்கர் சுவாமிகள் பிள்ளையார்' என்ற திருப்பெயருடன் சுயம்புவாகக் காட்சியளிக்கிறார். புற்றுமண்ணாலேயே உருவெடுத்த இந்த விநாய கரின் உயரம் ஆறு அடி, அகலம் ஐந்து அடி. பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியிலும் நோய் தீர்க்கும் தெய்வமாக இவர் போற்றப்பட்டதை மக்கள் அறிவர்.

ண) திருக்கோவலூர் பெரியானைக் கணபதி

வீரட்டானேசுவரர் ஆலயத்தில் வலப்பக்கம் நுழைவாயிலில் ஆறு அடி உயரமுள்ள விநாயகர் மிகச் சக்தி வாய்ந்தவர். இந்த அற்புத மூர்த்தியே விசுவரூபமெடுத்துத் தம் துதிக்கையால் ஔவைப் பிராட்டியைத் தூக்கியெடுத்துத் திருக்கயிலையில் சேர்த்தவர் என்று

புராணக் குறிப்பு உள்ளது. ஆகம விதிப்படி வழிபாடு புரிந்து பெரும் பயன் கொள்ளும் மக்கள் இந்தத் தெய்வச் சிலையைப் போற்றிக் கொண்டாடுகின்றனர்.

த) வேலூரில் குழந்தை விநாயகர்

வேலூர் ஜலகண்டேசுவரர் திருக்கோயிலில் விநாயகர் குழந்தை வடிவத்தில் - தவழும் உருவினராய்க் - காட்சியளிப்பது சிற்பியரின் கற்பனைப் புலப்பாடாகும்; இவர் சிறந்த சக்தியும் கொண்டவர்.

ந) சிக்கில் அதிசய விநாயகர் தோற்றம்

நாகை அருகே சிக்கல் பத்து என்ற தலத்தில் ஓர் அரசமரம் உள்ளது; இம்மரத்தின் அடிப்பாகம் இயற்கையின் விந்தையாக பிள்ளையார் வடிவத்தில் அமைந்துள்ளது. ஆகம விதிப்படி பக்தர்கள் வழிபாடு புரிந்து வருகின்றனர்.

ப) திருவண்ணாமலை - செந்தூரப் பிள்ளையார்

அருள்மிகு அருணாசலேசுவரர் ஆலயச் சன்னிதி நுழைவாயி லில் இடப்பக்கம் செந்தூர நிறத்தில் விநாயகர், ஆறு அடி உயரமும் ஐந்து அடி அகலமும் கொண்டவராய், அமர்ந்து அருள்காட்சி வழங்குகிறார். இந்தத் தெய்வச் சிலை ஆண்டுதோறும் வளர்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

ம) நடனமாடும் விநாயகர்

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் கோயிலில், அம்மன் சன்னிதி வெளி மண்டபத்திலுள்ள தூணில், படமெடுத்தாடும் நாகப் பாம்பின் தலைமீது காலையூன்றியவாறு விநாயகர் நடனமாடுங் கோலத்தில் காட்சியளிப்பது அபூர்வமான சிற்பப் படைப்பாகும்.

ய) வெள்ளை நிற விநாயகர்

திருவலஞ்சுழியில், கடல் நுரையிலான வெள்ளை நிற விநாயகர் பெரும்புகழ் பெற்ற சிறப்புடையது. இத்தகைய விநாயகரை எங்கும் காண இயலாது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மேற்காணும் விநாயகர் வடிவங்களைக் கொண்டு, அவற்றை வரையறுத்துத் தெரிந்து கொண்டதாக நினைப்பது தவறு. எண்ணில

வாகிய திருப்பெயர்களுடன் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகிறது.

முன்னரே, தியான சுலோகக் குறிப்புக்களால் புலப்படுத்தப் பட்ட விநாயகர் திருமேனிகளேயல்லாமல், அவற்றையும் பெருமள வில் உள்ளடக்கிய நிலையில் விநாயகருக்கு 32 திருவுருவங்கள் பற்றிச் சிற்ப நூல்கள் கூறுகின்றன; திருப்பெயர்ப் பட்டியலைத் தெரிந்து கொள்வதால், யாரும் ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு ஊக்கம் கொள்ளலாம். விநாயகருக்கமைந்த திருவுருவங்களாகப் 1. பால கணபதி, 2. தருண கணபதி, 3. பக்த கணபதி, 4. வீர கணபதி, 5. சக்தி கணபதி, 6. துவச கணபதி, 7. சித்தி கணபதி, 8. உச்சிஷ்ட கணபதி, 9. விக்கின ராஜ கணபதி, 10. க்ஷிப்ர கணபதி, 11. ஹேரம்ப கணபதி, 12. லட்சுமி கணபதி, 13. மகா கணபதி, 14. விஜய கணபதி, 15. நிருத்த கணபதி, 16. ஊர்த்துவ கணபதி, 17. ஏகாட்சர கணபதி, 18. வர கணபதி, 19. திரியட்சர கணபதி, 20. க்ஷிப்ரப் பிரசாத கணபதி, 21. ஹரித்திரா கணபதி, 22. ஏகதந்த கணபதி, 23. சிருட்டி கணபதி, 24. உத்தண்ட கணபதி, 25. ரிணமொச்சக கணபதி, 26. துண்டி கணபதி, 27. துவிமுக கணபதி, 28. திரிமுக கணபதி, 29. சிம்ம கணபதி, 30. யோக கணபதி, 31. துர்க்கா கணபதி, 32. சங்கடஹர கணபதி.

குறிப்பு

(ஆலயங்கள் பலவற்றையும் ஆராய்ந்தால் இந்தப் பிள்ளையார் சிலைகளை இனங்கண்டு கொள்ளலாம். பூம்புகாரில் பஞ்சலோகத்தி லான கணேசரின் 32 திருமேனிகளையும் சிற்பநூல் விதிப்படி, காட்சிக்கு வைத்திருந்தனர் என்பதைப் பலரும் கேள்விப்பட்டிருக்க லாம். ஆதரவு கிடைத்துக் கொண்டே இருப்பின் அற்புதச் சிலைகள் உருவாகிக் கொண்டே இருக்கும்).

இவையேயல்லாமல் இதிகாசச் சிறப்புடைய விநாயகர் திருவுருவங்களும் உண்டு.

வியாச முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் கூறி நிற்க, விநாயகப் பெருமானே தம் தந்தத்தில் ஒன்றை ஒடித்துக் கைக் கொண்டு மேருமலையில் மகாபாரதத்தை எழுதியருளினார்; அந் நிலையில் ஒருவகைக் கணபதியுருவம் உண்டு.

சிவபெருமானிடம் இராவணன் தன் தவப்பயனாகப் பெற்ற சிவலிங்கத்தை எடுத்து வரும்போது, அவசரமாகக் கைகால் சுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கினார் விநாயகர். சுத்தி

செய்து கொள்ளச் சென்ற இராவணனை மூன்று தரம் கூப்பிட்டும் வாராமற் போகவே, தம் கையில் கொடுத்த சிவலிங்கத்தைப் பூமியில் வைத்து விட்டார். இந்தத் திருவிளையாடல் நடந்த இடம் திருக்கோகர்ணம் என்பர். திருச்சி உச்சிப் பிள்ளையார் கோயில் தொடர்பாகவும் இந்தத் திருவிளையாடலைக் கூறுவர். எப்படியோ இதிகாசத் தொடர்பிலும் விநாயகர் குறிப்பிடப்படுகிறார்.

2.1. கணேசாயினி - திருவுருவச் சிறப்புக் கூறுகள்

காணாபத்ய சமயக் கோட்பாட்டின்படி கணபதியே மேலான முழுமுதற் கடவுள் - பரம்பொருள் - என்பதாகும். அதற்கேற்பச் சிற்ப வடிவில் கொணர்கையில், கணபதிக்குப் பல்வகை வடிவங்கள் அமையலாயின. சிலர் விநாயகரைப் பிரம்மச்சாரி எனக் கூறினாலும், சிலர் அவருக்குச் சித்தி, புத்தி எனப் பெயரிட்ட தேவியர் உண்டு என்பர்; அதற்கேற்பச் சிற்ப வடிவங்களையும் கண் டுள்ளனர் என முன்னரே கண்டோம்.

மேலும், பிரணவ சொரூபியாகிய அவரைப் போலவே கணேசா யினி என்ற திருப்பெயரில் சிற்ப வடிவங்கள் தோன்றலாயின ஆலயங்களிலே தனித்தும், தூண் சிற்பத்திலும் கணேசரைப் போலவே நான்கு திருக்கைகளில் பாச அங்குசத்துடனும் அபய வரத முத்திரையுடனும் அமைத்துப் பெண்ணுக்குரிய மார்பகங்களையும் அமைத்துச் சிற்பத்தில் காட்டியுள்ளனர். விநாயகர் ஆலயத்திலும் விநாயகியை அம்மனாக நிறுவி ஆகம விதிப்படி வழிபாடு புரிகின்றனர்.

இஃது ஒரு புறமிருக்க, ஆனைமுகி எனும் திருப்பெயரில் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில், உண்ணாமுலை யம்மை சன்னிதியில், அம்மனுக்கு இடப்புறமுள்ள தூண் ஒன்றில் பெண்ணுக்குரிய மார்பகம், இரு திருக்கைகள், யாளியின் கால், வால் கொண்ட அபூர்வ உருவமாகச் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய புராணப் பின்னணி சரியாகப் புரியவில்லை.

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்துத் தூண் ஒன்றில் விநாயகி - சிற்பம் உள்ளது. ''இது 17-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த சிற்பமாகும். அமர்ந்த கோலத்தில் வலக்காலை மடித்து, இடக்காலைத் தொங்க வைத்த நிலையில் உள்ளது. தலையில் வேலைப்பாடுகள் நிரம்பிய மகுடம் விளங்குகிறது. மேல் கைகளில் அங்குசமும் பாசமும் விளங்கிடக், கீழ்க் கைகளில் அபய வரத ஹஸ்தங்களானவை விளங்குகின்றன. கழுத்துக்குக் கீழே பெண்

னுருவம் - அதில் கழுத்தணியும், பூணூலும் விளங்குகின்றன. கால்களில் சிலம்பும், அழகாகக் கட்டப்பட்ட ஆடையும் மேகலையும் அழகையூட்டுகின்றன. இடப்புறம் திரும்பிப் பாசத்தைத் தொடுமளவிற்குத் துதிக்கை நீண்டு விளங்குகிறது.

இதே போல மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலும், சிதம்பரம் ஸ்ரீ தில்லை நடராஜர் ஆலயத்திலும் விநாயகி சிற்பங்கள் உண்டு''[1] என்று டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் ஆராய்ச்சியுடன் கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

3. சிற்பக் கலையில் திருமுருகன்

தமிழ்த் தெய்வம் எனப் போற்றப்படும் முருகனே பண்டைக் காலத்து வேலன் என்பவன்; காலப்போக்கில், வேதத் தொடர்பாலும் புராணத் தொடர்பாலும் அவனுக்கு உருவ வழிபாடு பலவகைக் கோணங்களில் கிளைத்தெழுந்தது. அந்நிலையில், ஆறு படை வீடுகளும் பிற முருகன் திருத்தலங்களும், அவற்றில் பிரதிட்டை செய்ய வேண்டிய திருவுருவச் சிலைகளும் தோன்றலாயின. வழிபாடுகளும் திருவிழாக்களும் திருவுருவச் சிலைகளும் இன்றியமையாத தேவைகளாயின.

திருமுருகனுக்கு வாகனங்களும் பலவாகிய காரணத்தால் அவன் திருப்பெயர்களும் பலவாயின. இந்திரனுக்கு மட்டும்தான் யானை வாகனம் என்றில்லாமல், திருமுருகனுக்கும் யானை வாகனம் அமையலாயிற்று; சிற்பக் கலையும் தன்னளவில் கைகொடுத்து உதவியது.

1. கஜவாகனன் (ஆனை வாகனப் பெருமான்)

முருகப் பெருமானைக் கஜாரூடர் என்றும் கூறுவர். மிகச் சிறப்பாக 'மயில் வாகனன்' எனத் திருப்பெயரும் கொண்ட முருகன், புராணப் பின்னணி விரிவாகிய காரணத்தால், சிற்பக் கலையுலகில் பலவகைத் தோற்ற அமைப்புக்களும் உளவாயின. அவற்றுள், ஒன்றே கஜவாகன அமைப்பாகும்.

இந்திரனிடம் உள்ள ஐராவதம், தெய்வயானை திருமணத்திற்குப் பிறகு சுப்பிரமணியரிடம் வாகனமாக அமையலாயிற்று எனக் கந்தபுராணம் கூறுகிறது. இதனால், இந்திரன் தன் ஐராவதத்தைக்

1. கருணை - கடவுள், விநாயகர் சதுர்த்தி இதழ், ஆகஸ்டு, 2001, பக். 12.

கந்தப் பெருமானுக்கு வழங்கினான் என்பது தெரியவரும். குமார தந்திரத்தின்படி ஆண் யானை மீது முருகவேள் ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு எழுந்தருளியுள்ளார்; குக்குடமாகிய சேவலும், சக்தியாகிய வேலும், அபய வரத முத்திரைகளுடன் கூடியவையாக அமைந்த திருக்கைகள் கஜவாகனருக்கு உண்டென்பதும் தெரிய வரும்.

சிதம்பரம், இரத்தினகிரி, மாகறல், வேலூர், திருத்தணி, திருப்பரங்குன்றம், பிரான்மலை, செட்டிக்குளம் ஆகிய தலங்களில் யானை வாகனத்துடன் முருகன் திருவுருவம் காணலாம்.

2. ஆட்டுவாகனர்

'அஜாரூடர்' என்ற வடமொழிப் பெயர் 'ஆட்டுவாகனர்' எனப் பொருள்படும். நாரதர் புரிந்த பெரிய வேள்வியில் தோன்றி வடவைக் கனல் போன்ற ஆடு சீறிப் பாய்ந்தது; தேவர்கள் அஞ்சிய வாறு திருமுருகனை வேண்டவே, அவன் வீரபாகுவை அனுப்பி அந்த ஆட்டைப் பிடித்து வரச்செய்து தனக்கு வாகனமாக்கிக் கொண்டான்.

ஆட்டுவாகனர் திருவடிவைச் சிறப்ப நேர்த்தியுடன் திருப் போரூரில் கண்டு களிக்கலாம். சிக்கல் திருச்செந்தூர் போன்ற சில ஊர்களில் கந்தர் சஷ்டியுடன் தொடர்பான சூரசம்மார விழாக் காலத்திலும் ஆட்டுவாகனரைக் கண்டு வழிபடலாம். மருங்கூர் எனும் தலத்திலும் முருகன் ஆட்டுவாகனராகக் காட்சியளிக்கிறார்.

3. மயில் வாகனர்

யானை வாகனமும் ஆட்டு வாகனமும் கொண்ட திருமுருகன் சிலைகள் எண்ணிக்கையில் மிகக் குறைவே. மயில் வாகனமே முருகப் பெருமானின் வாகனமாகப் பல திருத்தலங்களில் காணலாம். சூரபதுமனே மயிலாக வடிவெடுத்து ஊர்தியானமையால், மயில் வாகனன் எனின் முருகனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் குறிக்காது.

முருகனது மயிலின் தொடர்பாகவே 'மயிலம்' என்றே முருகன் திருத்தலம் ஒன்று உள்ளது. அவ்வாறே திருமயிலாடி என்ற முருகன் திருத்தலமும் உள்ளது. இவ்விரு தலங்களிலும் மயில் வாகனனாக அமைந்த முருகன் திருவுருவச் சிலைகளைக் காணலாம்.

முருகன் மயிலின் மீது அமர்ந்த கோலத்தில் தனியாகவும், வள்ளி தெய்வானையுடன் சேர்ந்து *(மயிலின் மீது)* அமர்ந்த கோலத்திலும், வள்ளிக்குத் தனிமயில் தெய்வயானைக்குத் தனிமயில் முருகனுக்குத் தனிமயில் என்னும் நிலையில் அமர்ந்த கோலத்திலும் சிற்பக் கலைப் படைப்புக்கள் உள்ளன. இவ்வாறில்லாமல், மயில் அருகிருக்க முருகன் நின்ற கோலத்திலும் சிலையமைப்புக்கள் உள்ளன. சிற்பியரின் கற்பனைக்கேற்பப் பல வடிவமைப்புக்கள் முருகனுக்கு அமைந்திருத்தலை ஆலயங்களில் காணலாம்.

தொடர்ந்து, திருமுருகன் தொடர்பாக அமைந்துள்ள சிறப்பான ஆகமச் சிறப்புடன் கூடிய கோயில்களையும், அபூர்வச் சிலை விவரங்களையும் காண்போம்.

திருமுருகன் தொடர்பாக 'ஆறுபடை வீடுகள்' (ஆறாதாரம்) கூறப்படுவது சிறப்புடையது; ஆதலின், அதனைக் காண்போம்.

3.1. திருமுருகனின் ஆறுபடை வீடுகளில் சிற்பச் செல்வங்களுள் சில

செவ்வேள், சரவணபவன், ஆறுமுகன், குமரன் முதலிய பல திருப்பெயர்கள் கொண்ட தமிழ்த் தெய்வமாகிய திருமுருகன் குன்றுதோறாடும் இயல்பினன்; எனினும், அவனுக்குப் படை வீடுகளாக ஆறு தலங்கள் சிறப்பாகக் கூறப்படும். அந்தப் படை வீடுகளில், ஒவ்வொரு முதன்மைக் கருவறையிலும் மூலவராக விளங்கும் திருமேனியே யல்லாமல் செப்புத் திருமேனிகளும் பரிவார தெய்வங்களின் சிலைகளும் சிற்ப வேலைப்பாடமைந்த வாகனங்களுமாகப் பலவுள; அவற்றை விரிக்கிற் பெருகும். எனவே, தேர்ந்த சில குறிப்புகளை மட்டும் காண்போம்.

திருப்பரங்குன்றத்து முருகன்

உல்லாசம், நிராகுலம், யோகம், இதம், சல்லாபம், விநோதம் ஆகிய ஆறுவித நிலைகளுள் உல்லாச மூர்த்தியாக எழுந்தருளும் திருத்தலம் திருப்பரங்குன்றம்; இங்குத் தெய்வயானையை மணம் புரிந்து கொண்ட திருக்கோலத்தில் முருகன் காட்சியளிக்கிறான்.

மலையிலே குடைந்தெடுக்கப் பெற்ற அழகிய திருவுருவத்தில் காட்சியளிக்கும் முருகனுக்கு ஒரு திருமுகமும் நான்கு திருக்கைகளும் உண்டு; அமர்ந்த திருக்கோலத்தில் பரங்கிரிப் பெருமான் இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்கவிட்ட நிலையில்,

இடப்பக்கம் தெய்வயானையும் வலப்பக்கம் நாரதரும் துணையாக உள்ளனர்.

சிற்பக் கலை நோக்கில், பரங்குன்றத்தில் முருகன் அமர்ந்த கோலத்திலும், ஏனைய படை வீடுகளில் நின்ற கோலத்திலும் காட்சியளிப்பது மனங்கொள்ளத்தக்கது.

திருச்செந்தூர் வேலவன்

திருச்சீரலைவாயில் - மணலும் கல்லும் கலந்த நுரை மணற் கல்லால் ஆன மலைக் குன்றில் - கருவறையிலே தண்டாயுதம் தாங்கிய வேலவன், தன் நான்கு திருக்கைகளில் அபயம், வரதம், பூ, செப மாலை கொண்டவனாய், வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறான். குகைக்குப் பின்புறமுள்ள பிராகாரத்தில் பஞ்சலிங்க சுயம்பு மூர்த்திகள் காணப்படுகின்றனர்; சூர சம்மாரத்திற்குப் பிறகு, முருகன் சிவபூசை பண்ணுவதாக ஐதீகம் உள்ளது. இந்த ஆலயத்திற்குச் செல்லும் வழியில் முருகனின் திருக் கோலத்தை அடியவர்களுக்குக் காட்டும் வகையில் 'தூண்டி விநாயகர்' அமர்ந்துள்ளார்.

சூரசம்மாரம் குறித்து எழுந்தருளும் செப்புத் திருமேனி முருகனும் சிறந்த சிற்பக் கலைப் படைப்பாகும்.

பழநி தண்டாயுதபாணி

பழநித் திருத்தலம் உலகப் புகழ் பெற்ற முருகன் கோயில். நவபாஷணத்தால் போகர் *(சித்தர்)* உருவாக்கிய தண்டாயுதபாணி திருவுருவம் ஆன்ம நலமும் மருத்துவப் பயனும் விளைவிக்கக் கூடிய பேராற்றல் கொண்டது. யோக நிலையில் நின்ற திருக்கோலம் காரணமாக, மக்களைக் கவர்ந்திழுக்கும் தண்டாயுதபாணி மலை மேலிருந்து அருள் புரிகின்றார்; மலையடிவாரத்தில் திருவாவினன்குடி முருகன் அருள் பொழிகின்றார். இங்குள்ள இடும்பன் சிலையும் சிற்பக் கலைப் படைப்பு நோக்கில் காணத்தக்கது. பொதுவாக, அவ் வளாகத்தில் மூலவர்களும் பரிவார தெய்வங்களும், தங்க இரதமும், செப்புத் திருமேனிகளும் கலைநுட்ப நேர்த்தியும் அருட்சிறப்பும் கொண்டவை.

சுவாமி மலை சுவாமிநாதன்

'திருவேரகம்' என்ற பெயருடனும் பரவப்படும் சுவாமி மலை, கும்பகோணத்திற்கு அருகிலுள்ள முருகன் படை வீடாகும்.

கோயில் முகப்பின் மேல்பகுதியில், தந்தை சிவனுக்குப் பிரணவ உபதேசம் செய்யும் திருக்கோலத்தில் திருமுருகன் காட்சியளிப்பதைச் சுதைச் சிற்பமாகக் காணலாம்.

செய்குன்றாகிய சுவாமி மலை ஆலயத்தில் படிகள் வழியாக ஏறியவுடன் நேத்திர விநாயகர் *(கண் கொடுத்த கணபதி)* தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். அவருக்கு இடப்புறமாகவுள்ள கருவறையில் ஆறடி உயரமுள்ள சுவாமிநாதக் கடவுள் நின்ற கோலத்தில் கோவணம், தண்டு ஆகியவற்றுடன் காட்சியளிக்கிறார். அந்த அழகுச் சிலைக்கு வியாழக்கிழமை தோறும் வைரவேல் சாத்தும் போதும், தங்க இரதத்தில் எழுந்தருளி அவர் உலா வரும் போதும் மிகச்சிறந்த அழகு ஆராதனையே நடைபெறுகிறது.

திருத்தணிகை முருகன்

திருமுருகனின் ஐந்தாம் படைவீடாகிய குன்று தோறாடலில் மிகச் சிறப்பு வாய்ந்த திருத்தலம் திருத்தணிகையாகும். இச்சா சக்தியாகிய வள்ளியம்மையை மணந்து, திருமணக் கோலத்துடன் எழுந்தருளிய திருமுருகன் திருமேனியை இங்குக் கண்டு வழிபடலாம்.

திருத்தணிகை முருகன் தன் இரு திருக்கைகளுள், ஒரு கையில் வேல் ஏந்தி, மற்றொரு கையைத் தன் தொடைமீது அமைத்துக் கொண்டு ஞான சக்திதரனாகக் காட்சியளிக்கின்றான்.

''மூலத்தானத்தில் எம்பெருமான் ஞானசக்திதரரின் இரு பக்கத்திலும் போக சக்திகளாகிய தெய்வயானை வள்ளியம்மை இருவரும் எழுந்தருளியுள்ளனர். திருமுருகனையும் வள்ளி தெய்வயானையம்மையையும் வணங்கிக் கொண்டு, 'வெளியே வந்ததும் உள்ள கிழக்கு உட்பிராகாரத்தில், வடக்கே தெய்வயானை சந்நிதியையும், தெற்கே வள்ளியம்மை சந்நிதியையும் கண்டு வழிபடலாம். தெய்வயானையின் வலக்கரத்தில் நீலோற்பல மலர் உருவமும், வள்ளியம்மையின் இடக்கரத்தில் தாமரை மலரின் உருவமும் காணப்படுகின்றன''[1] என்று புலவர் செந்துறைமுத்து எழுதியுள்ள குறிப்பினைக் காணலாம். முருகனின் வாகனமாகிய மயிலுக்குப் பதில் யானை வாகனமாக அமைந்திருப்பது இங்குள்ள சிறப்பாகும்.

1. திருத்தணி, மணிவாசகர் பதிப்பகம், 1984, பக். 36.

பழமுதிர் சோலை முருகன்

மதுரைக்கு அருகிலுள்ள பழமுதிர் சோலை இயற்கையெழில் வளம் மிக்கது. நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் மொழிந்ததற் கிணங்கச் சிறந்த முருகன் தலமாக இங்குள்ளது; இது பற்றிக் கி.வா. ஜகந்நாதன், ''இங்கே சரவணப் பொய்கை என்ற பெயரோடு ஒரு குளம் இருந்ததாகவும், அதைப் புண்ணிய சரவணம் என்று வழங்கினர் என்றும் தெரிய வருகிறது. திருமுருகாற்றுப்படை, இங்கே விழும் அருவியின் அழகை வருணிக்கிறது. இப்போது அழகர்மலைமேல் ஓரிடத்தில் முருகனுடைய திருக்கோயிலை எழுப்பியிருக்கின்றனர்''[1] என எழுதிச் செல்வது அருங்குறிப்பாகும்.

அழகர் மலையில் வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருந்த அழகன் முருகன், இக்காலத்தில் ஒரு பகுதியில் அமைந்திட, வைணவப் பெருந்தெய்வமாகிய கள்ளழகர் - சௌந்தரராசப் பெருமாள் - சிறப்புடன் வீற்றிருக்கும் கள்ளழகர் கோயிலாக வியாபித்துளது; திருமாலிருஞ்சோலையாகப் பழமுதிர்ச் சோலை வழக்கத்தில் வந்துள்ளது. சிற்பக் கலைச் செல்வங்கள் நிறைந்த கலைக் கூடமாக அஃது இருந்து வருவது போற்றற்குரியது; அது விரிக்கிற் பெருகும்.

'குன்று தோறாடல்' எனும் நோக்கில் திருத்தணிகையைப் போற்றினாலும், 'மருதமலை' என்பதனையும் குன்று தோறாடலில் சேர்த்தும், அதனையே தனிப்படைவீடாக 'ஏழாம் படைவீடு' என்றும் போற்றிக் கொண்டாடுவர்.

3.2. திருமுருகனின் பலவகைத் திருக்கோலங்கள்

குமார தந்திரமும், திருத்தணிகைப் புராணமும் குறிப்பிடும் பதினாறு திருவுருவங்களும், முருகவேளின் புராணத் தொடர்பான நிகழ்ச்சிகளை நினைவிற் கொள்ளும் வகையில், சிற்பக் கலையுலகில் புரிந்த சாதனைகள் எனலாம். அவ்வாறான பதினாறு திருவுருவங்களும் வருமாறு:

1. ஞான சக்தி தரன், 2. கந்தசாமி, 3. தேவ சேனாபதி, 4. சுப்பிரமணியர், 5. களிற்றூர்திப் பெருமான் (கஜவாகனர்), 6. சரவணபவன், 7. கார்த்திகேயன், 8. குமரன், 9. ஆறுமுகன், 10. தாரகாந்தகர், 11. சேனாதிபதி, 12. பிரமசாத்தன், 13. வள்ளி கலியாண சுந்தரர், 14. பால சுப்பிரமணியர், 15. கிரவுஞ்சபேதனர், 16. சிகிவாகனர் (மயில் வாகனர்)

---

1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிடேக மலர், 1970, பக். 160.

சிறப்புக் குறிப்பு

களிற்றூர்திப் பெருமான், மயில் வாகனர் பற்றிய சில செய்திகள் முன்னரே கூறப்பட்டன. பொதுவாக, முருகவேள் ஆறு முகனாகவும் பன்னிருகைப் பெருமாளாகவும் திருக்கோலங் கொண்டு காட்சியருளுவது பல திருத்தலங்களில் காணலாம்; மயில் வாகனத்துடன் இத்தகைய சிறப்பான எழிற்கோலத்தினைச் சிக்கல் திருத்தலத்தில் அருகேயுள்ள பொருள் வைத்த சேரி *(பொரவாச் சேரி)*யில் கண்டு களிக்கலாம். புராணச் சிறப்புடன், ஒரு திருமுகத் துடனும் நான்கு திருக்கைகளுடனும் காட்சியளிக்கும் 'பிரமசாத்தன்' திருவுருவம் அபூர்வமானது; சிற்பக் கலை மாட்சியின் உச்சி அது.

நான்முகனாகிய பிரமனது செருக்கையடக்கிய முருகவேள், கொண்டுள்ள நான்கு திருக்கைகளுள், ஒன்று அபயமுத்திரையுட னும், மற்றொன்று இடுப்பிலுமாக அமைந்திருக்கும்; அவர்தம் பின் இரண்டு கைகளிலும் உருத்திராக்க மாலையும் கமண்டலமும் கொண்டிருப்பர்; குமார தந்திரத்தில் இவ்வாறு தியான சுலோகம் போல் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

பிரமசாத்தன் வடிவத்தை வழிபடுபவர்கள் எல்லாக் கலை களிலும் வல்லவராகத் திகழ்வர் என்பது சமய நம்பிக்கை.

சென்னை வளசரவாக்கத்தில் எட்டடி பிரமசாத்தன் திருவுரு வத்தைக் கண்டு வழிபடலாம்; அவ்வுருவம் சிறந்த சிற்பக் கலைப் படைப்பு என்பர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆண்டார் குப்பம் - பாலசுப்பிரமணியர் கோயிலில் சில அற்புதச் சிலைகள் காணப்படுகின்றன; கோயிலில் பதினாறு கால் மண்டபத்தின் வடகோடியில் காணலாகும் முதல் தூணில் பிரமன் சிறைப்படுகின்ற காட்சி உள்ளது. ''முருகன் மலைமீது அமர்ந்திருக்கிறான்; இவன் ஒருமுகம் இரு கைகளை யுடையவன். இவனுக்குப் பின்னால் படைக்கலத்துடன் நிற்பவன் வீரவாகுவாக இருக்கலாம். பிரமன் நின்று கொண்டு விழிக்கிறான். இவனது தலையில் இடக்கையால் குட்டுகிறான் முருகன்.

மேற்கண்ட காட்சிக்குக் கீழே பிரமன் சிறைப்படுகின்ற காட்சி *(சிற்பமாக)* புனையப்பட்டுள்ளது.

முருகன் பிரமனிடம் பிரணவப் பொருளை வினவும் காட்சி பதினாறுகால் மண்டபத்தின் வடகிழக்குக் கோடியிலுள்ள முதல் தூணிலும் சிவபெருமானிடம் பிரணவப் பொருளை விளக்கும்

காட்சி அதே மண்டபத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ள கடைசித் தூணிலும் வடிக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமே''[1] என்று டாக்டர் டி. செல்வராஜ் விளக்கிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

கால வரிசைப்படி திருமுருகன் சிலைகளை, ஐயத்திற்கு இட மின்றிப் பிரித்துக் காண்பது எளிய செயலன்று. சேயோன் மேய மைவரையுலகத்தினனாகவும், குன்றுதோறாடும் குமரவேள் என்றும் பலர் புகழ் நிலையில் திருமுருகன் இருப்பினும், அவனுக்கென எழுந்த வேல் கோட்டமோ, முருகன் திருமேனி பிரதிட்டை செய்யப்பட்ட சங்க கால ஆலயமோ சிதைவுறாமல் கிட்டவில்லை.

தொன்மைச் சிறப்பினவாக அமைந்த பல்லவர் காலக் கோயில் களையே ஆராய்ச்சி நோக்கில் அறிஞர்கள் சிந்திக்க வேண்டியவர் களாக உள்ளனர். அந்நிலையில், புதுக்கோட்டையிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள 'திருவேங்கை வாயில்' தலத்திலுள்ள திருமுருகன் திருமேனி மிகவும் போற்றத்தக்கது.

குடவாயில் பாலசுப்பிரமணியன், 'வேங்கை வாயில் எனும் வியாக்ரபுரி' எனும் கட்டுரையில், ''தென்புறப் பிராகாரத்தில் மேற்கு நோக்கிய வண்ணம் அமர்ந்த ஒரு அறையில் 5 அடி உயர முடைய பிரம்மாண்டமான அமர்ந்த கோல முருகப் பெருமானின் திருமேனி உள்ளது. பல்லவப் பேரரசர்கள் காலத்தில் உருவாக்கப் பட்ட இந்தக் கற்சிற்பம் ஈடு இணையற்ற சிறப்புகள் பல பெற்ற தாகும். தமிழகத் திருக்கோயில்களில் உள்ள முருகப் பெருமான் திருமேனிகளை எல்லாம் வரிசைப்படுத்தி அவற்றில் தலையாய சிறப்புடையவை எனப் பத்துத் திருமேனிகளைத் தேர்வு செய்வோ மாயின், அவற்றில் இச்சிற்பம் ஒன்று என்பதனை எந்தக் கால இயல் வல்லுநரும் மறுக்க முடியாது. தலையில் மகுடத்துடன் கண்ணி மாலை, காதுகளில் பத்ர குண்டலம், கழுத்தணி, மார்பில் சன்ன வீரம், வயிற்றுப் பகுதியில் உதரபந்தம் ஆகிய அணிகலன்களுடன் சுகாசன மூர்த்தியாக ஒரு காலை மடித்தும், மறுகாலைத் தொங்க விட்ட நிலையிலும் தாமரை மலர்பீடத்தின் மீது வைத்த வண்ணம் காணப்படுகிறார். அவரது மேலிரு கரங்கள் வஜ்ஜிரம் அக்கமாலை ஆகியவற்றை ஏந்த, வலக் கீழ்க்கரம் அபயம் காட்ட, இடக்கரம் தொடைமீது உள்ளது. செம்மாந்த கோலத்துடன் அமர்ந்து அருள் நல்கும் கந்தவேளின் இப்படிமத்தைக் காணக் கண்கோடி வேண்டும்

1. *அம்மன் தரிசனம் (திங்களிதழ்)*, நவம்பர், 2000, பக். 69.

என்பது உண்மை. கி.பி. 7-8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவச் சிற்பிகள் படைத்த பாங்குடைய சிற்பம் இது''[1] என்று எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

திருமுருகனுக்குச் சிறப்பான ஆறுபடை வீடுகள் கூறப் பெறினும், மூர்த்தி கரம் விளங்கும் முருகத் தலங்களெல்லாம் அருள் வழங்கும் படைவீடுகளே.

இவையேயல்லாமல், இன்னும் பல சிற்ப வடிவங்களில் திருமுருகன் காட்சியளிக்கின்றான்; அத்தகைய வியத்தகு சிற்ப வடிவங்களில் சில வருமாறு:

அ) மானாமதுரையில் நாக சுப்பிரமணியர் சிலை

மானாமதுரையில் அமைந்துள்ள சிவாலயத்தில் இறைவன் பல பரிவார தெய்வங்களுடன் எழுந்தருளியுள்ளான். அங்குள்ள திருமுருகனுக்குக் குடை விரித்துப் பிடித்தாற் போன்று ஐந்து தலை நாகம் காட்சியளிக்கிறது. நாகதோசம் *(புத்திர தோசம்)* நீங்க நாக சுப்பிரமணியரை வழிபடுகின்றனர்.

சமயவுலகில் பள்ளிகொண்ட பெருமாளாகிய திருமாலுக்கு ஆதிசேடன் அணையாகவும் இருந்து கொண்டு படமெடுத்த தலைகளுடன் குடைபிடிப்பது போன்று தோன்றுவது கலை மரபு; அமர்ந்த கோலத்திலுள்ள மாரியம்மன் சிலைகளில் ஐந்தலை நாகம் படமெடுத்துக் குடைபிடிப்பது போன்று அமைவதும் சமயக் கலை மரபு. ஆனால், திருமுருகனுக்கு நாகம் குடைபிடிப்பது போன்ற சிற்பவுருவில் அமைவது வியக்கத்தக்கதே; இதுவும் தத்துவமே.

ஆ) வேலுடையான் பட்டி (வேல்ராம்பட்டு) முருகன்

முருகனுக்கு மிகச் சிறப்பான படைக்கருவி 'வேல்' ஆகும்; அவனை 'வேலாயுதன்' என்றே அழைப்பர். அத்தகைய வேலவன், கடலூர் மாவட்டம் நெய்வேலிக்கு அருகிலுள்ள வில்லுடையான் பட்டி எனும் முருகன் திருத்தலத்தில் வில்லும் அம்பும் தாங்கிய வனாய்க் காட்சியளிக்கிறான்; எனவே, 'வில்லுடையான் பட்டி' என்பது மருவி 'வேலுடையான்பட்டி', 'வேல்ராம்பட்டு' என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

---

1. *கோபுர தரிசனம் - தீபாவளி மலர், 2002, பக். 112.*

இங்குள்ள திருமுருகன் தன் திருக்கரங்களில் வில்லும் அம்பும் தாங்கியவனாகவும், இடுப்பில் சல்லடத்துடன் வேடர் கோலத்தின னாகவும் எழிற் காட்சியளிக்கின்றான். வள்ளி தெய்வயானையாகிய இருதேவியரும் இருமருங்கில் திகழ முருகன் ஒரே கல்லில் நின்ற கோலத்தில் காட்சியளிப்பது சிற்பக் கலை புரிந்துள்ள பெருஞ் சாதனையாகும். வள்ளியை மணக்க வேலவன் - வில்லவன் - இவ்வாறு வேடர் கோலத்தில் வந்துள்ளதை நினைவிற் கொள்வர் அடியவர்கள். இந்தச் சிலையைச் சுயம்பு என்று ஊரார் கூறுவர்.

இ) வில்லேந்திய முருகன் சிலைகள்

வேலுடையான் பட்டியேயல்லாமல் வேறு சில திருத் தலங்களிலும் வில்லேந்திய முருகன் சிலைகள் உள்ளன.

''சென்னிமலை முருகன் சிங்க வாகனத்துடனும் கையில் வில்லுடனும் கொண்டையுடனும் கருவறையின் பின்புறமுள்ள சுவரில் காட்சி தருகிறார்; இது போன்ற திருமுருகன் திருமேனியைத் திருப்போரூர் ஆலயத்திலும் காணலாம்'' என்றும்,

''காவிரிப் பூம்பட்டினத்தில் சாய்க்காடு சாயாவனேசுவரர் ஆலயத்தில் இருக்கும் முருகன் வில்லும் அம்பும் தாங்கும் கோலத்தில் காட்சி தருகிறார்'' என்றும்,

''தஞ்சாவூர் சாம்பவன் ஓடை கிராமத்திலும் இத்தகு அமைப்பு முறை கொண்ட முருகன் சிலை கிடைத்துள்ளது; தற்பொழுது எழும்பூர் (சென்னை) அருங்காட்சியகத்தில் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது''[1] என்றும் சில செய்திகளை முனைவர் ஆ. வேலுசுவாமி சுதந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஈ) உத்திரமேரூர்க் கோயில்

உத்திரமேரூர்க் கோயிலில், பல்லவர் காலத்துச் சிலையெனக் கருதும் நிலையில், பாலசுப்பிரமணியர் சிலை ஆறு அடி உயரத்தில் உருத்திராக்கம் அணிந்து கையில் நாகாபரணம் பூண்டு, சடைமுடிக் கோலத்திலே செவிகளில் குண்டலம் அணிந்து ஓரளவு சாய்ந்த வண்ணம் அமைந்துள்ளது; அதுவும் சிவபூசை புரிந்திடும் கோலத் தில் அமைந்துள்ளது காணத்தக்கது.

1. நுண்கலைகள், முனைவர் ஆ. வேலுசுவாமி சுதந்திரன் வெளியீடு, 2001, பக். 52.

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள செம்பொனார் கோயிலில், நான்கு திருக்கைகளுடன் *(பின் வலக்கை அபயமுத்திரை, பின் இடக்கையில் உருத்திராட்ச மாலை)* பிரம்ம சாத்தாவும், சிறு வேறுபாட்டுடன் காணப்படும் உத்திரமேரூர் பாலசுப்பிரமணியரும் சிற்ப நோக்கில் ஒருவகையமைப்பு என்பர்.

உ) சிக்கல் சிங்காரவேலன் சிலை

இச்சிலை வியப்பிற்குரியது. சூரபதுமனைச் சம்மாரம் செய்வ தற்கு - கந்தர் சஷ்டியில் 'சூரசம்மாரம்' தொடர்பாகச் - சிங்கார வேலன் சக்தி வச்சிரம் தாங்கிய நிலையில் போர் புரிந்து வெற்றி கொள்கிறான். அந்நிலையில் போர் புரிந்த சினத்தால் வேலவன் திருமேனியில் வியர்வை துளிர்க்கக் காணலாம். உற்சவர் திருமேனியில் வியர்ப்பது கொண்டு அவ்வுற்சவரை 'வியர்வை சிந்து வேலவன்' என்றே அழைப்பர். இத்தகைய அதிசயம் வாய்ந்த சிலை பிற தலங்களில் இல்லை.

ஊ) அழகார்புத்தூர் சொர்ணபுரீசுவரர் கோயில்

கும்பகோணம் சட்டம் அழகார்புத்தூர் சொர்ணபுரீசுவரர் கோயிலில், சங்கு சக்கரம் ஏந்திய திருமால் போல ஆறுமுகன் சங்கு சக்கர தாரியாக எழுந்தருளிக் காட்சியளிப்பதைக் கண்டு வழிபடலாம்.

எ) கழுகுமலை

பாண்டி நாட்டில் கோவில் பட்டியருகே உள்ளது கழுகுமலை; அங்கே தொன்மையவான பல சிற்பக் கலைப் படைப்புகளைக் காணலாம்; அவற்றுள், கழுகுமலை முருகன் கோயிலில் காண லாகும் திருமுருகன் ஆறு திருக்கைகளுடன் காணும் திருவுருவமும் ஒன்று. தமிழகத்துப் பல கோயில்களிலும் முருகனின் ஊர்தியான மயில் வலப்பக்கத்தே இருக்கும்; ஆனால், இங்குள்ள மயில் முருகனின் இடப்பக்கத்தே அமைந்திருக்கிறது.

வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரையில் அமிர்தகடேசு வரர் கோயில் பிராகாரத்தில் அமிர்த கலசமேந்திய முருகன் சன்னிதியில் அவன் ஒரு திருமுகமும் ஆறு திருக்கைகளும் கொண்டு அருள்பாலிக்கிறான்.

ஏ) பன்னிரு கைப் பெருமாள்

காரணப் பெயரமைப்பால் - திருமுருகன் ஆறு திருமுகங்கள் கொண்டு விளங்குவதால் - ஆறுமுகன் அல்லது சண்முகன் என்றும்,

சி.19.

பன்னிரு திருக்கைகள் கொண்டு விளங்குவதால் பன்னிருகைப் பெருமாள் என்றும் வழங்குவர். ஆனால் பழநித் திருப்பதியில் தண்டாயுதபாணியாக விளங்குகையில் இருகரங்கள் கொண்டு விளங்குகின்றான். யோக நிலையில் முருகன் ஆண்டிக் கோலத்தில் விளங்குவதால் பகைவரைச் சாய்க்கும் படைக் கலன்களின்றிக் காணப்படுகின்றான்.

ஐ) கார்த்திகேயப் பெருமான்

கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் ஆலயம் மேற்குப் பிராகாரத்தி லுள்ள கார்த்திகேயப் பெருமான் ஆறே கரங்கள் கொண்டு வீறுடன் விளங்குவது வியப்பாகவுள்ளது; சிற்ப எழில் கொண்ட மூர்த்தி இவர்.

ஒ) நான்முக முருகன்

திண்டுக்கல் சின்னாளப்பட்டியில், நான்முக முருகன், சதுர்முக முருகன், பிரணவ முருகன் எனும் திருப்பெயர்களில் காட்சி யளிப்பது காணத்தக்கது. பிரமனாகப் பொறுப்பேற்றுப் படைத்தல் தொழிலையும் ஒரு காலத்தில் புரிந்தமையால் 'நான்முக முருக னாக'க் காட்சியளிக்கிறானோ என்னவோ!

ஓ) மயில் வாகனன்

பொதுவ்hக 'மயில் வாகனன்' என்றாலே முருகப் பெரு மானைத் தான் குறிக்கும்; வலப்பக்கம் வள்ளியையும் இடப்பக்கம் தெய்வயானையையும் அணைத்த நிலையில் ஒரே மயிலில் அமர்ந்த வண்ணம் அவன் காட்சியளிப்பதைப் பல திருத்தலங்களிலும் காணலாம். இதற்கு மாறாகத் தனித்தனி மயிலிலே முருகனும் தேவிமாரும் காட்சியளிப்பதைச் சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி குடைவரைக் கோயிலிலும், திருச்சி மாவட்டம் திண்ணியம் எனும் திருத்தலத்திலும் கண்டு களிக்கலாம். சிற்பக் கலையில் இவ்வாறு அமைந்திருப்பதன் காரணம் சரிவர உணர்ந்து கொள்ள இயல வில்லை.

ஔ) புனுகுச் சட்டத்துடன் முருகன்

திருப்போரூர் எனும் திருத்தலத்தில் ஆறு அடி உயரமுள்ள திருமுருகன் தன் தேவியராகிய வள்ளி தெய்வயானையுடன் நின்ற

திருக்கோலத்தில் ஒரு திருமுகம் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறான்; இந்த சிற்பக் கலைப் படைப்பு, பெண்பனை மரத்தாலானது; எனவே, இம்மூவருக்கும் அபிடேகம் கிடையாது; புனுகுச் சட்டமே சார்த்தப்பட்டுப் பிற முறையான வழிபாடு நடைபெற்று வருகிறது.

முருகன் சிலைகளுள் மேலும் சில

க) பொன்னேரிக்கு அருகே பெரும்பேடு எனும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள திருமுருகன் சிலை ஆறரையடி உயரமுள்ளது; அதன் இடப்புறமுள்ள தேவி தெய்வயானை திருமுடி *(மகுடம்)* கொண்டு விளங்குவதையும், வலப்புறமுள்ள தேவி வள்ளி நாச்சியார் குறத்திக் கொண்டையுடனும் விளங்குவதையும் காணலாம். உலகத்தில் வேறு எங்குமே இதுபோன்ற சிற்பக் கலையமைப்புடன் முருகனைக் காணவியலாது என்பர்.

ங) பொன்னேரிக்கு அருகிலுள்ள தாச்சூர் எனும் தலத்தில் திருமுருகன் வேலும் மயிலும் இன்றிக் காட்சியளிக்கிறார். வேலும் மயிலும் பெறுவதற்கு முன், பிரமனிடம் பிரணவத்திற்குப் பொருள் என்ன என்று கேட்ட நிலையில் அமைந்த முருகப் பெருமானாக இத்திருமேனியை மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

ச) சரவணபவர்

''ஸ்ரீதத்துவநிதியில் ஒரு திருமுகம், ஆறு திருக்கரங்களில் முறையே கரும்புவில், கேடயம், வச்சிராயுதம், கோழிக்கொடி, அணிகலன்கள் அணிந்தவராகச் சிங்கவாகனம், மூன்றுகண் விபூதி பூசிய திருமேனியுடன் சரவணபவர் காட்சி தருகிறார். சிங்கத்துடன் நிற்கும் நிலையில் வேறுபட்ட திருவுருவங்களில் கொல்லி மலையில் காட்சி தருகிறார்''[1] என நெ. இராமன் எழுதியுள்ள குறிப்பினைக் காணலாம்.

ஞ) ஆறுபடை வீடுகளில் 'குன்றுதோறாடல்' என்பதன் கீழ் ஒரு சிறந்த முருகன் திருத்தலமாகப் போற்றத்தக்கது மயூராசலம் எனும் மயிலம் ஆகும். அங்கு மயில் வாகனனாகிய முருகன் வள்ளி தெய்வயானை ஆகியோருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றான். அழகிய சிலைவடிவில் வலமேல் கையில் சக்தி ஆயுதமும், இடமேல் கையில் சூலாயுதமும், கீழ் வலக்கையில் அபய முத்திரையும், கீழ் இடக்கையில் வரத முத்திரையும் முருகன் தாங்கியிருப்பதைக் காணலாம். முருகனின் இடப்புறம் வேலும், சேவல்

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, ஏப்பிரல், 2000.

கொடியும் காணப்படுகின்றன. வள்ளி தன் வலக்கையில் தாமரை மலர் ஏந்திய நிலையில் முருகனின் வலப்பக்கத்திலும், தெய்வ யானை தன் இடக்கையில் நீலோற்பல மலர் ஏந்திய நிலையில் முருகனின் இடப்பக்கத்திலும் உள்ளனர்; தேவியர் இருவரின் மற்ற இருகைகள் கத்ய வலம்பித முத்திரையில் காணப்படுகின்றன; இருவருமே திரிபங்க நிலையில் நின்றபடி காட்சியளிக்கின்றனர்.

ட) ஈரோடு மாவட்டம் - பச்சைமலையின் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது பாலதண்டாயுதசாமி கோயில்; மலை மீது அழகிய மணிமுடி தரித்து, நான்கு திருக்கைகளுடன் *(பின் வலக்கையில் வச்சிரப் படை, பின் இடக்கையில் உருத்திராக்க மாலை, முன் வலக்கையில் மலர், முன் இடக்கையில் அமர்த்திய முத்திரை)*, வேலாயுதத்தைத் தன் திருமேனியில் சாத்திய வண்ணம் திருமுருகன் காட்சியளிக்கும் (36 அடி உயரச்) சிலையைக் கண்டு வழிபாடு புரியலாம். *(சிலை 26 அடி, அதன் பீடம் 10 அடி; ஆக, 36 அடி உயரச் சிலை உள்ளது).*

ண) திருமுருகன் சரவணப் பொய்கையில் தாமரை மலரிலே அவதரித்தவன்; ஆதலினால், தாமரை மலரின் மீது திருமுருகன் நின்ற கோலத்தில் காட்சியளிக்குமாறு சிற்பப் படைப்பு உள்ளது; இப்படித் தாமரை மீது திருமுருகன் காட்சியளிப்பதைக் கடலூர் அருகே சந்திரநாயகபுரத்தில் கண்டு களிக்கலாம்.

த) மயில்வாகனன் எனின் திருமுருகனையே குறிக்கும்; எனினும், மயிலேயல்லாமல் யானையும் அவனுக்குச் சிறந்த வாகனமாக அமைந்துள்ளமை சங்க நூல்களாலும் அறியப்படும். திருத்தணிகை, வேலூருக்கு அருகிலுள்ள இரத்தினகிரி, பெரம்பலூருக்கு அருகி லுள்ள செட்டிகுளம், சிதம்பரம் கிழக்குக் கோபுர வாயில் முதலிய பல இடங்களில் முருகனுக்கு யானை வாகனம் அமைந்திருப்பினும், ஒவ்வொரு இடத்து முருகனும் சிற்ப அமைப்பில் மாற்றங் கொண்டுள்ளது காணத்தக்கது.

செங்கற்பட்டு மாவட்டம், ''திருக்கழுக்குன்றத்துக்கு அருகி லுள்ள ஆனூர் என்ற தலத்திலுள்ள முருகன் கையில் ஓர் தாமரைப்பூ ஏந்திக் கொண்டு நின்றிருப்பார். இவருக்கு யானைதான் வாகன மாகும்''[1] எனவரும் குறிப்பு சிந்திக்கத்தக்கது. வேல் தாங்கி நிற்கும் வேலவனுக்குக் கையில் தாமரை மலர் இருப்பது கொண்டு,

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, மே, 2001, பக். 38.

தாமரையில் தவழ்ந்தவன் என்பதை நினைவூட்டும் வகையில் உள்ளது. இவ்வாறே ஒவ்வொரு தலத்து முருகன் அமைப்பிலும் சிற்சில மாற்றங்கள் உள்ளன.

ந) மயிலேறும் பெருமாளாகிய முருகன், வள்ளி தெய்வ யானையுடன் மயிலில் அமர்ந்து காட்சியளிப்பதே பெரும்பான்மை; ஆனால், மயிலாப்பூரிலுள்ள கபாலீசுவரர் கோயிலிலுள்ள சிங்கார வேலவன் மயில் மேலமர்ந்து மேற்கு நோக்கியும், அவருக்கு அருகி லுள்ள இரு தேவியர்களான வள்ளியும் தெய்வயானையும் தனித் தனியே யானை மீதமர்ந்து காட்சியளிப்பது அதிசயமாகவுள்ளது.

ப) மயில் சிங்கம் யானை ஆகிய வாகனங்களேயன்றி ஆட்டுக் கடா வாகனத்திலும் முருகன் காட்சியளிப்பது உண்டு. சுசீந்திரத்திற்கு வடகிழக்கேயுள்ள மருங்கூர் திருத்தலத்தில் சுப்பிரமணியசாமி ஆலயத்தில் ஆட்டுக் கடா வாகனத்துடன் காட்சியளிக்கும் முருகன் திருக்கோலம் அற்புதமானது. தேவர்கள் செய்த வேள்வியில் குற்ற மிருந்தமையால், அங்குத் தோன்றிய அச்சமிகு ஆட்டுக்கடாவையே தனக்கு வாகனமாக முருகன் கொண்டருளினான் என்பர்.

ம) நாகத்தை வாகனமாகக் கொள்ளாவிடினும், நாகத்தின் மீது நடனம் புரியும் முருகனது காட்சி உண்டு. ''சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள, ஐந்து தலைகளைக் கொண்ட நாகத்தின் மீது நடனம் செய்யும் கண்ணனைப் போல உள்ள, கந்தனைக் கண்டு சேவிக்கலாம்; இது எங்குமே இல்லாத ஓர் அற்புதத் தோற்றமாகும்.

பெங்களூரிலிருந்து 50-ஆவது மைலில் உள்ள 'சுப்ரமணியா' என்ற திருத்தலத்தில் நுழைவாயிலில் கோபுரத்தில் ஏழுதலை நாகத்தில் அமர்ந்துள்ள முருகனைக் கண்டு சேவிக்கலாம்''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

3.3. பன்னிருகைப்பெருமானின் படைக் கருவிகள் - சிற்ப நோக்கு

சிவபரம்பொருளின் ஒருவகைத் தோற்றமாகவே போற்றப் படும் திருமுருகன், பகைமைகளையும் எதிரிகளையும் நினைத்த மாத்திரத்திலேயே அடக்கி வைக்கும் பேராற்றலுடையவன்; எனினும் வேற்படையை வழங்கி வேலவன் என்றனர். படிப்படியாகத் திருக் கைகளும் அவற்றுக்கான படைகளும் பொருத்திப் பார்க்க முற் பட்டனர்; ஆகமங்களும் வழிகாட்டின.

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, ஏப்ரல் 2000, பக். 39.

ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் கொண்ட திருமுருகனின் படைக் கலங்கள் பன்னிரண்டுக்கும் மேற்பட்டவை.

1. வேல் - ஞானத்தைக் குறிப்பது

2. கோழிக் கொடி - அறியாமையிருளைப் போக்கி மெய்யொளி தருவது.

3. அங்குசம் - வளைந்த மூக்கும், குத்தியடக்கக்கூடிய நேரான பகுதியும் கொண்ட இக்கருவி, மதச் செருக்கை அடக்கும்.

4. பாசம் - பகைவர்களின் கையையும் காலையும் கட்டப் பயன்படும் கயிறு.

5. வில்லும் அம்பும் - வேட்டுவர் கோலத்திலுள்ள முக்கியப் படைக் கருவி. வள்ளியை மணம்புரிய வந்த போது முருகன் வில்லும் அம்பும் கொண்டு வந்ததை நினைவிற் கொள்ளலாம்; இவற்றைத் தனித்தனிக் கையில் பொருத்தி அமைப்பர்.

6. கத்தி - பகைவரைக் குத்தவும் அடிக்கவும் பயன்படும் கருவி.

7. கிடுகு *(கேடயம்)* - கத்தி, அம்பு முதலியவற்றைப் பகைவர்கள் எறியும் போது தடுக்கும் தற்காப்புக் கருவி.

8. வாள் - கட்டுவாங்கம் எனும் நீளமான கத்தி, போரில் பகைவரை வெட்டப் பயன்படுங் கருவி; இதில் ஒரு முனையுடையதும் இருமுனையுடையதுமாகிய இருவகை உண்டு.

9. கோடரி - மரத்தைப் பிளக்கும் கருவி போன்ற இது பகைவரின் உடலைப் பிளக்கப் பயன்படும். காம்பில் செருகியிருக்கும் இரும்பாலாகிய கோடரி, வாய் கூர்மையாகவும், பின்பு கனமாகவும் அமைந்திருக்கும். இதனைப் போன்றே, சற்று வளைந்து கூர்மையாக இருக்கும் 'பரசு' காங்கேய சுப்பிரமணியர் வடிவில் கையிற் கொண்டதாகக் காட்டப்படும்.

10. சூலம் - சிவனுக்கும் காளிக்கும் சிறப்பாக அமைந்த சூலம் முருகனுக்கும் உரியது; இது மூன்று நுனிகளையுடையது. சுரை வரையிலும் எஃகால் செய்யப்பெற்ற நீளமான மரக்காம்பில் செருகியிருக்கும்.

11. கதை - வீமனுக்கும் ஆஞ்சநேயருக்கும் சிறப்பாக அமைந்த கதையெனும் படைக்கருவியைத் 'திகிரி' என்றும் 'குண்டாந்தடி' என்றும் அழைப்பர்; பகைவரை அடித்து நொறுக்கப் பயன்படும்.

12. சங்கு - திருமாலுக்குரிய சிறப்பான படையாகிய சங்கு, வெற்றியைக் குறிக்கும், பகைவர்கள் இதன் ஒலியைக் கேட்டதும் அடங்கி ஒடுங்குவர். இதனிலும் பல வடிவங்கள் உண்டு.

13. சக்கரம் - திருமாலுக்குரிய சக்கரப் படையை முருகனும் ஏந்துவது உண்டு. கும்பகோணம் அருகிலுள்ள அரிசிற் கரைப்புத்தூர் *(அழகாபுத்தூர்)*-திருத்தலத்தில் முருகன் சங்கு சக்கரதாரியாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

14. வச்சிரம் - முருகனுக்குரிய சிறப்பான படைக் கருவிகளுள் வச்சிராயுதமும் ஒன்று; உறுதியான பொருள் எதுவாயினும் அதனை உடைக்கும் வல்லமையுடைய இதற்கு ஆயிரம் நுனிகள் உண்டென் பர். எனினும், சிற்பியர் தம் கற்பனைக் கேற்ப நுனிகளின் எண்ணிக்கையைக் கொள்வர்.

15. தண்டம் - நீண்ட கைத்தடியாகிய இது மரத்தாலானது; 'கந்து' எனும் சொல்லும் இதனைக் குறிக்கும். பழநி தண்டாயுத பாணியின் திருக்கையில் இதனைக் காணலாம்.

16. உளி - சூரபதுமன் எனும் மாமரத்தை ஒரு வகையில் மாற்றி மயிலும் சேவலுமாகக் கண்ட முருகன் கையில் 'உளி' *(டங்கம்)* என்பதும் உண்டு. குமார தந்திரத்தில் குறிப்பிடப்பெறும் 'சரவண பவன்' எனும் வடிவத்தில் பன்னிரு கைகளுள் ஒன்றில் 'உளி' வைத்துள்ளமை குறிக்கப் பெற்றுள்ளது.

17. தோமரம் *(உலக்கை)* - பகைவர்களைச் சாடப் பயன்படும் தோமரம் 'குமார தந்திரத்தில்' குறிப்பிடப்படும் 'தாரகர்ரி' *(தாரகா சுரனை வதைத்தவன்)* என்ற வடிவத்தில் உலக்கையை ஒரு கையில் ஏந்தியுள்ளான் முருகன்.

18. கரும்புவில் - மன்மதனுக்குரிய வில், பராசக்திக்குரிய தாகவும் குறிப்பிடப்படும் ஸ்ரீதத்துவ நிதியில், குறிப்பிடப்படும் சௌரபேய சுப்பிரமணியரின் திருக்கைகளுள் ஒன்றில் கரும்பு வில்லும் மற்றொன்றில் மலரம்பும் கொண்டதாகவும் சிற்பியர் காட்டுவர்.

19. மலரம்பு *(வல்லி)* - தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐவகைப் பூக்களால் ஆகிய பாணம், காமனுக்குரியதே போல முருகன் கையிலும் உண்டு.

20. மணி - ஒலியெழுப்பும் மணி, ஞானப் படையாக விளங்கி, உயிர்களின் ஆணவ மலத்தை நீக்கி ஞானம் நல்கும்; நக்கீரர் அருளிய

திருமுருகாற்றுப் படையில் 'பாடின் படுமணிமிணை இரட்ட ஒருகை' என வருதலும் சிற்பியர்க்கு ஆதாரமாகும்.

21. ஜெபமாலை - உருத்திராக்க மாலை படைப்புத் தெய்வ மாகிய நான்முகனுக்கும் உரியது. பிரணவத்திற்குப் பொருள் கேட்ட நிலையில் நான்முகன் பொருள்கூற இயலாத நிலையில், அவனது படைப்புத் தொழிலையும் முருகன் ஏற்றுக்கொள்ளும் போது ஜெபமாலையையும் கமண்டலத்தையும் கைக்கொண்டான் என்பர்.

22. கமண்டலம் - இல்லறக் கோலத்தில் வள்ளியையும் தெய்வ யானையையும் மணந்த முருகவேளே, துறவறக் கோலத்திற்கும் உரியவனாகச் செபமாலையும் கமண்டலமும் கைக்கொண்டுள்ளான். உலக வழக்கில் 'கெண்டி' எனும் கமண்டலத்தை *(ஒருவகை மரத்தின் காயால் ஆகியது)* முருகன் ஏந்திப் 'பிரம்ம சாஸ்தா'-திருக்கோலத்தில் திகழ்கிறான். செபமாலையும் கமண்டலமும் பெருமானின் திரு வுருவத்தைக் கண்டு கொள்ளத் துணை நிற்குமேயல்லாமல், அவை படைக்கலங்களல்ல என்பதும் உணரத்தக்கது.

23. தாமரை - அழகும் மணமும் இளமையும் கொண்டு திகழும் திருமுருகன் வலக்கையில் தாமரை மலரினை ஏந்திருயிருப்பார். இச்சா சக்தியாகிய வள்ளி நாச்சியார் தம் கையில் தாமரை மலரை ஏந்திக் காட்சியளிப்பாள்; திருச்செந்தூர் சுப்பிரமணியரும் தம் வலக்கையில் தாமரை மலரை ஏந்தியிருப்பது நோக்கத்தக்கது.

24. சுருவம் - வேள்வித்தீ வளர்ப்பதற்கு நெய்யை எடுத்து வார்ப்பதற்குப் பயன்படும் கரண்டி போன்ற ஒரு வகைக் கருவி. ''ஒரு முகம் அந்தணர் வேள்வி ஓர்க்குமே,'' எனத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் குறிப்பிடுதற்கேற்ப 'அக்னிஞாத சுப்பிரமணியர்' என்ற திருக்கோலத்தில் தெய்வ நலவேள்வித் தீ வளர்ப்பதற்கேற்ப ஒரு கையில் சுருவமும் மற்றொரு கையில் நெய் *(ஆஜ்ய)* பாத்திர மும் கொண்டுள்ளார். இவ்வடிவம் இரு திருமுகங்களும் எட்டுக் கைகளும் கொண்டுள்ள ஓர் அபூர்வ அமைப்பாகும்.[1]

சிறப்புக் குறிப்பு

''காங்கேய சுப்பிரமணியர் என்ற வடிவில் ஒரு கரத்தில் பூரண கும்பம் ஏந்திய அமைப்பில் உள்ளார். வேதாரண்யம் அருகிலுள்ள

1. டாக்டர் சேக்கிழார் தாசன், ஆர். ராமசேஷன், வலையப் பேட்டை ரா. கிருஷ்ணன் ஆகியோர் எழுதியுள்ள 'முழுதும் அழகிய குமரன்' என்ற நூலின் உதவியுடன் 'அம்மன் தரிசனம்' *(நவம்பர், 2000)* இதழிலுள்ள கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.

கோடியக்கரை என்ற தலத்திலுள்ள 'அமிர்தகர சுப்பிரமணியன்' என்ற கோலத்தில் ஒரு கரத்தில் அமிர்தகலசம் ஏந்தியுள்ளது ஓர் அற்புதமான வடிவமாகும். அப்பெருமானை வழிபட்டு அமுத கலசத்திலுள்ள ஞானத் தேனமுதைப் பெறலாம்''[1] என்று வலையப் பேட்டை ரா.கிருஷ்ணன் எழுதிச் செல்வது மிகவும் போற்றத்தக்க குறிப்பாகும். மேலும் திருப்பாற்கடலில், தேவர்களும் அசுரர்களும் கடைந்ததன் விளைவாகத் தோன்றிய அமிர்தகலசம் கோடியக் கரையில் விழுந்ததும் அது சிவலிங்கமாகிய நிலையில் அமிர்தகடேசர் ஆயிற்று என்றும், அந்த அமிர்தகடேசர் ஆலயத்தின் பிராகாரத்தில் திருமுருகன் அமிர்த கலசத்தின் ஒரு கூற்றினையே தன் கையில் கொண்டுள்ளான் என்றும் புராணக் குறிப்பு உள்ளது. அத்தகைய முருகன் ஒரு திருமுகமும் ஆறு திருக்கைகளும் கொண்டு அருள்பாலித்து வருகிறான் என்பது மனங்கொள்ளத்தக்கது.

4. பிரமன் - சிற்பக் கலைப் படைப்பும் பெருமையும்

அயன், நான்முகன், சதுர்முகன் முதலிய பெயர்களால் அழைக்கப்படும் பிரமன், இந்துமத வழிபாட்டில் முதன்மை பெற்றிருக்கும் திரிமூர்த்திகளுள் ஒருவன்; படைப்புத் தொழில் பூண்ட அம்மூர்த்தி நான்மறைகளிலும் மறைகளை விளக்கும் நூல் களிலும் பரம்பொருளாகக் கருதப்படுகிறான். தேவதைகளுள் - தேவர்களுள் - முதன்மைச் சிறப்புடைய பிரமனைப் பற்றிப் புராணங்கள் பலபடக் கூறுகின்றன.

சிவபரம்பொருளின் அடிமுடி காணத் திருமாலும் நான்முகனும் புறப்பட்ட நிலையில், பிரமன் அன்னப்பறவை வடிவங்கொண்டு சிவனது முடிகாண முயன்று, இயலாமற் போகும் நிலையில் சிவன் விண்ணுக்கும் மண்ணுக்குமாக ஒளிப்பிழம்பாகி நின்றான் என்பது புராணக் குறிப்பு. இதனால், இலிங்கோத்பவ மூர்த்தியுருவத்தில், இலிங்கத்தின் மேற்பகுதியில் பிரமன் அன்னப் பறவையாகவும் *(சில இலிங்கோத்பவரில் அன்னப்பறவைக்குப் பதிலாக நான்முகனாக வும்)* காட்சியளித்தலைக் காணலாம்.

திருமுருகன் பிரமசாஸ்தாவாக அமையுங்கால், அவனால் குட்டுப்படும் பிரமனையும் சிற்பப் படைப்பில் காணலாம்.

பிரமன் ஐந்து தலைகளுடன் விளங்கிய நிலையில், சிவனை இகழ்ந்தமையால், சிவன் வைரவரை ஏவிப், பிரமனது உச்சித்

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, நவம்பர், 2000, பக். 42.

தலையைக் கிள்ளி எறிந்தான் என்பது புராணம்; இந்த நிகழ்ச்சி நடந்ததாகக் கருதப்படும் திருத்தலம் திருக்கண்டியூர் என்பர். இந்த நிகழ்ச்சி சிற்பப் படைப்பாக அமைகையில் பிரமனது உருவத்தைக் காணலாம்.

ஆகமங்களில் பிரமனை நின்ற நிலையிலோ அமர்ந்த நிலையிலோ அமைக்கலாம் என்று விதிமுறை உள்ளது. பொது வாகச் சைவ வைணவ ஆலயங்களில் வடக்குச் சுவரின் வெளிப் புரையில் பிரமனுடைய அமர்ந்த கோலத்தைக் காணலாம்.

திருக்கண்டியூரில் பிரமன் திருவுருவத்தில் நான்கு தலைகளும், தலைகளில் கரண்ட மகுடங்களும், மார்பில் ஆரங்களும் பூணூலும், நான்கு கைகளுள் முன் வலக்கையில் தாமரையும், பின் இடக் கையில் உருத்திராக்க மாலையும், முன் இடக்கை வணக்கத்தைப் புலப்படுத்தும் நிலையில் தொடைமீதும், பின் வலக்கை பணிவைப் புலப்படுத்தும் பாங்கிலும் காணப்படும். வயிரவர், பிரமனது உச்சித் தலையைக் கிள்ளிய நிலையில் உயிர்ப்பித்த காரணத்தால், அவருக்குத் தன் பணிவைப் புலப்படுத்தும் நோக்கத் தில் இவ்வாறு சிலை அமைந்துள்ளது. ஆனால் பொதுவாகப் பிரமன் தாமரை மலர்மீது அமர்ந்தவனாய், நான்கு தலைகளில் சடா மகுடமும், செவிகளில் குண்டலமும், மார்பில் முப்புரி நூலும், ஆரங்களும், இடுப்பில் கடி பந்தமும், மான் தோலாடையும், மேல் இரு கைகளில் அக்கமாலை அல்லது நீர்க்கரகம் அல்லது நெய்க் கரண்டி அல்லது தருப்பைக் கட்டும், கீழே இரு கைகளுள் இடக்கை இடுப்பிலும், வலக்கை அபயம் அல்லது வரதமுத்திரையிலுமாகத் தோற்றமளிப்பான்.

பிரமனின் அழகிய கற்சிலைகள் திருவொற்றியூர், திருவை யாறு, கும்பகோணம் முதலிய சில தலங்களில் காணலாம். சிறப் பாகக் கும்பகோணம் பிரமன் கோயில் தெருவில் பிரமன் கோயிலில் காணலாகும்; பிரமன் சிலை காணத்தக்கது.

5. சண்டீசர் சிறப்பும் அட்ட பரிவார ஆலயங்களும்

எல்லாச் சிவன் கோயில்களிலும் சண்டீசருக்கெனத் தனிச் சிறப்பு உண்டு. சேய்ஞலூரில் அவதரித்த விசாரசருமனார் இறைவ னுக்கு முறையாகப் பூசை புரிவதில் நாட்டமுடையவர்; இறைவனது திருமஞ்சனத்துக்கென வைத்திருந்த பாற்குடத்தை, அவர் தந்தை சினமுற்று உதைத்துத் தள்ளவே, அருகிலிருந்த கோலை எடுத்தார்.

அது மழுவாக மாறிடவே, அதனைத் தம் தந்தை எச்சதத்தன் மீது எறிந்து அவரது தாளைத் தடிந்தார்; தொடர்ந்து பூசையிலும் ஈடு பட்டார். இது கண்ட இறைவன் அவரைத் தன் மகனாகவே ஏற்றுக் கொண்டு சண்டீசப் பெரும்பதம் அளிந்தருளினார். எனவே, சிவாலயங்களில் பூசைக்குரிய பொருள்களுக்குக் கணக்கு வைத் திருப்பவராகவே அவர் போற்றப்படலானார்.

அத்தகைய சண்டீசர், நாயன்மார்களுள் ஒருவராகவே போற்றப் படுகிறார்; அவருக்கெனவே சிவன் கோயிற் கருவறைக்கு இடப் புறம் கோமுகத்திற்கருகே சிறுகோயில் அமைத்து, அமர்ந்த நிலையில் அவரை நிறுவி மக்கள் வழிபாடு புரிந்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் தஞ்சைப் பெரிய கோயில் எடுப்பித்த முதலாம் இராசராசன் காலம் வரையில், சிவாலயங்களில் எண்வகைக் காவற் படை ஆலயங்கள் *(அட்ட பரிவாரக் கோயில்கள்)* கட்டப்பெற்றன. அவை விநாயகர், திருமுருகன், சூரியன், சந்திரன், சப்த மாதர்கள், சேட்டைத் தேவி, பைரவர், சண்டிகேசுவரர் என்பவர்களுக்காக அமைந்த சிறு கோயில்கள். இப்பட்டியலில் சண்டிகேசுவரரைத் தவிர ஏனையோர் தெய்வ நிலையினர்; இவர் ஒருவர் மட்டுமே மானுடப் பிறவியெடுத்து உயர்ந்தவர் என்பது சிந்தித்தற்குரியது. சில சிவாலயங்களில் சமயாசாரியர் நால்வரின் திருவுருவங்கள் கூட இடம் பெறாமற் போகலாம்; ஆனால், சண்டிகேசுவரருக்கெனச் சன்னிதியில்லாத சிவாலயத்தைக் காண முடியாது.

மேலும், இவர் காரணமாகவே அருள்புரியும் சிவமூர்த்தம் ஒன்றைச் சண்டேச அனுக்கிரக மூர்த்தி என்ற பெயரில் சிற்பமாக வடிக்கச் செய்துள்ளனர். சோழன் முதலாம் இராசேந்திரன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரத்தில் நாடெலாம் புகழும் அந்த அற்புத மூர்த்தியைக் கண்டு மகிழலாம்.

சிவபெருமானுக்குத் தம் பெயர்த் தொடர்புடன் 'சண்டேச அனுக்கிரக மூர்த்தி' என உலகினர் அழைக்குமாறு செய்தவர் சண்டீசர்; சிவபூசைப் பெருமையை எல்லோர்க்கும் உணர்த்தும் வகையில், அவர் சிவலாயங்களில் பரிவாரத் தெய்வமாகவே போற்றப்படு கிறார்.

6. ஐயப்பன் - சிற்பப் படைப்புகளும் பெருமையும்

பண்டைய தமிழகத்தில் சாத்தன் *(சாஸ்தா)* வழிபாடு மக்களிடையே பரவலாக இருந்துள்ளது. அத்தகைய 'சாத்தன்'

வளர்ச்சியே கிராமக காவல் தெய்வமாகிய ஐயனராக வழி பாட்டினைப் பெற்று வந்துள்ளது.

புராண நோக்கில் சிவனும், திருமாலும் *(மோகினி நிலையில்)* சேர்ந்து தோற்றுவித்து அரிஅரசுதனாக - ஐயப்பனாகத் - திருவடிவம் கொண்டது. பிறகு, பந்தள நாட்டு மன்னன் தொடர்பாக எழுந்த வரலாற்றின்படி, மணிகண்டனே ஐயப்பன் ஆயினான் என்ற எண்ணம் வலுப்பெற்றது. எப்படியோ இக்காலத்தில் சக்தி மிகுந்த தெய்வமாகக் கேரள நாட்டுச் சபரி மலையில், பதினெட்டுப் படி யுடன் கூடிய திருக்கோயிலில் ஐயப்பன் அமர்ந்துள்ளான். இதனால், சாத்தன் என்றும் ஐயனார் என்றும் அழைக்கப்பட்ட சிறு தெய்வம் தன் பேராற்றலால் பெருந்தெய்வமாக - ஐயப்பனாக - அருளாட்சி புரிந்து வருதலை உணர்ந்து கொள்ளலாம்.

சிலை வடிவில் ஐயப்பனை உருவாக்கிய நிலையில், அந்தத் திருமேனி முடிசூடிய நிலையிலும், யோக பட்டம் சுற்றியவாறும் குத்துக் காலிட்டவாறு அமர்ந்திருக்கும்; இரு திருக்கைகளுள் வலக் கை வரத முத்திரையும் இடக்கை இடமுழங்காலை யொட்டித் தொங்கவிட்டபடியும் அமைந்திருக்கும்; மார்பில் பல அணிகள் பூண்டு தோற்றமளிக்கும்.

அடுத்ததாகச் சிலை வடிவில், புலி வாகனத்தின் மீதேறி இடக்கையில் வில்லும் வலக்கையில் அம்பும், வலப்பக்க முதுகில் அம்பறாத் தூணியும் கொண்டு, அணிகள் பல பூண்டு ஐயப்பன் தோற்ற மளிக்கும். சபரி மலையிலுள்ள ஐயப்பன் திருமேனி தமிழகச் சிற்பியரால் வடிக்கப்பட்டது.

சத்தியமே படைக்கலனாதலின் யோக நிலையிலுள்ள ஐயப்ப சுவாமிக்குப் பிற படைக்கலன் அமைக்கும் மரபில்லை.

ஐயப்பனின் ஐவகைத் திருக்கோலம் பற்றி நெ. இராமன் எழுதுகையில், ''ஐயப்பன் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு ஐந்துவிதத் திருக்கோலங்களில் தரிசனம் தருகிறார். எரிமேலியில் கிராதரூபனாய் *(உக்கிர வடிவம்)* மகரிஷியை வதம் செய்து முடித்த நிலையிலும், குளத்தூர்ப் புழையில் குழந்தை வடிவத்தில் குருவாயூ ரப்பனைப் போல் நின்றும், அச்சங்கோயிலில் உடைவாளுடன் அரசனாக நின்றும், ஆரியங்காவில் நம்மைப் பெற்ற தந்தையாக நின்றும், சபரி மலையில் முத்திரையுடன் அமர்ந்த கோலத்திலும் அருள்

புரிகின்றார் ஐயப்பன்''[1] என்று விளக்கம் தருவது மனங்கொள்ளத் தக்கது. இந்த ஐவகைக் கோலமும் சிற்ப நேர்த்தி கொண்டவை.

கல்லாலும் சுதையாலும் உலோகத்தாலும் ஆன ஐயப்பன் சிலைகள் தென்னகத்தில் எண்ணிக்கையிலே பல உண்டு. கடந்த 50, 60 ஆண்டுகளாக ஐயப்பன் சீர்த்தியும் இருமுடி கட்டிச் சபரிமலைப் பயணம் புரியும் நோன்பு நெறியும் பயனும் மக்களிடையே மிகுதி யாகப் பரவியுள்ளன. எனவே, ஐயப்பன் கோயில்களும் சிலைகளும் வழிபாடும் தமிழகத்தில் பக்தியியக்கத்தை வளர்த்து வருவது போற்றுதற்குரியது. ஐயப்ப பக்தர்கள் வெறுஞ் சடங்குகளுடன் நின்றுவிடாமல்,சில அடிப்படைச் சிறப்புச் செய்திகளையும் தெரிந்து கொள்வது நல்லது.

(சபரிமலை அருள்மிகு ஐயப்பன் ஆலயத்தில் நடைபெறும் பெரிய திருவிழாத் தொடர்பில் மகரஜோதிக் காட்சியைப் பலரும் அறிவர். மகர ஜோதி தெரியும் பொன்னம்பல மேட்டில் - பாறையின் நடுவில் - ஸ்ரீ ஐயப்பனின் யந்திரம் கல்லில் வடிக்கப் பட்டுள்ளது என்பதனை நினைவிற் கொள்வது உகந்தது.)

பொதுவாக ஆலயங்களில் காணலாகும் கட்டட அமைப்பும் சிற்பப் படைப்புகளும், மக்களின் பக்தியார்வத்திற்கு வழிபாட்டுப் பயன் நோக்கத்திற்கு அருளாளர்களால் அமைக்கப்பட்டவை என்பது தான் நினைவிற்கு வரும். வழிபாட்டுப் பயன் நோக்கில் மெய்ப் பொருளியலும் தத்துவமும் - அடங்கும்; ஐயப்பன் தொடர் பாகச் சில தத்துவச் சிந்தனையைக் கண்டு கொண்டு, பிறகு மேலும் சில செய்திகளைக் காண்போம்.

ஐயப்பனது திருவடித் தத்துவம் எனும் தலைப்பில், ''பரமேசு வரனின் அருட்சக்தியும், பரந்தாமனின் கிரியாசக்தியும் இணைந்த சங்கமத்தால் உருவாகி ஒளிர்வதே ஐயப்பன் எனும் ஞானசக்தி. முடி முதல் அடிவரை நேரான நிலையில் நிறுத்தி, இரு கால்களையும் முழந்தாளிட்டு அமர்ந்து, வல முழங்காலின் மேலே வலக்கரத்தி னால் சின்முத்திரையைக் காட்டி, இட முழங்காலின் மேல் இடக் கரத்தினால் பேரானந்த நிலையைக் காட்டிப் பிரணவ வடிவத்தில் ஆனந்த ரூபனாக ஞானபீடத்தில் வீற்றிருக்கும் அழகுத் திருக் கோலமே ஐயப்ப சுவாமியின் திருவடிவ தரிசனக் கோலம். சாந்தம், வைராக்கியம், தீரம், தியாகம், அருள் தன்மை ஆகிய குணங்கள்

1. அம்மன் தரிசனம் *(திங்களிதழ்)*, டிசம்பர், 2001, பக். 30.

ஒருங்கே சேர்ந்து முழு உருப்பெற்றவர் ஐயன் ஐயப்பன்,''[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

பதினெட்டுப் படிகளையும் வழிபாட்டிற்குரிய சிறப்புடன் காண்பது மரபு. அந்தப் பூசை பற்றிச், ''சபரிமலை, பொன்னம்பல மேடு, சவுண்டல் மலை, நாகமலை, சுந்தரமலை, சிற்றம்பலமேடு, கல்கிமலை, மாதாங்கமலை, மயிலாடும் மேடு, ஸ்ரீபாதமலை, தேவர்மலை, நிலய்க்கல் மலை, தலப்பாறை மலை, நீளமலை, கரி மலை, புதுசேரி, காளகெட்டி, இஞ்சிப் பாறை என்னும் பதினெட்டு மலைகளின் தெய்வங்களைச் சாந்திப்படுத்தவே பதினெட்டுப் படிகள் பூஜை இங்கு நடத்தப்படுகிறது,'[2] என்பதும், ஜோதிச்சுடர் காணும் காட்சியால் உணர வேண்டிய செய்திகளாகச், ''சபரிமலை ஐயப்பன் மகர சங்கராந்தியன்று மட்டும் பொன்னம்பல மேட்டிலே ஜோதிச் சுடராகவும், மற்ற எல்லா நாள்களிலும் அச்சன் கோயிலில் பூர்ணா, புஷ்கலை என்னும் இரு துணைவியரோடும், ஆரியங் காவிலே பிரபை என்ற ஒரே துணையோடும்; குளத்துப்புழைக் கோவிலிலே குழந்தை வடிவாகவும், சபரிமலையில் பட்ட பந்தனம் பூண்ட சின்மய மூர்த்தியான ஸ்ரீ ஐயப்பனாகவும் பகவான் அருள் புரிவதாக ஐதீகம்'[3] என்பதும் மனங்கொள்ளத்தக்க செய்திகளாகும்; அஃதாவது, எல்லாமாகி நிற்கின்ற ஐயன், உருவத் திருமேனியில் தொடங்கி அருட்பெருஞ்சோதியமைப்பில் நிறைவு காட்டற்கு உரியவன் என்பது திரண்ட கருத்து.

சிதம்பரம் நடராசர் கோயிலில் 'ஐயப்பன் சிலை' உள்ளது என்றால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாருக்கும் வியப்பாக இருந் திருக்கும்; ஆனால், கோயிலில் வெளிச்சுற்றுக்கு உள்ளே, கோயிலின் உள் பெரிய பிராகாரத்தில் வடகிழக்குப் பகுதியில் வடக்கு நோக்கிய சுவரில் தேவகோட்டம் போன்றுள்ள இடத்தில் ஐயப்பன் தனிச் சன்னிதி கொண்டு அமர்ந்திருப்பதைக் காணலாம். இவ்வாறே சில பெரிய கோயில்களில் ஐயப்பன் திருவுருவம் காணலாம்.

இஃது ஒரு புறமிருக்கச் சில ஊர்களில் அண்மைக் காலங்களில் ஐயப்பன் ஆலயங்களும், ஐயப்பன் பஜனை மடங்களும் தோன்றி யுள்ளன. அந்த இடங்களில் ஐயப்பன் சிலைகளை வைத்து வழிபாடு புரிந்து வருகின்றனர்.

---

1. தெய்வம் *(திங்களிதழ்)*, டிசம்பர், 2002, பக். 34.
2. பெண்மணி *(திங்களிதழ்)*, டிசம்பர், 2002, பக். 24
3. பெண்மணி *(திங்களிதழ்)*, டிசம்பர், 2002, பக். 24

செட்டிநாட்டரசர் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பெயரரும், செட்டிநாட்டரசர் வள்ளல் முத்தையா செட்டியார் அவர்களின் குமாரரும் ஆகிய அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களின் பெருமுயற்சியால், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் ஒரு ஐயப்பன் கோயிலும், அண்ணாமலைநகரில் மற்றுமோர் ஐயப்பன் கோயிலும் ஆகம விதிப்படி மிகச்சிறப்பாகக் கட்டப்பட்டு, மக்களின் வழிபாட்டில் உள்ளன. இவ்விரு ஆலயங்களிலும் ஐயப்பன் திருமேனிகளும், பெரிய கருப்பன், சின்ன கருப்பன், சின்னகருப்பாயி, கன்னிமூலை கணபதி முதலிய பரிவார தெய்வங்களின் திருவுருவங் களும் சிற்ப நேர்த்தியுடன் அமைந்துள்ளன.

7. நவக் கிரகங்கள் - பெருமையும் சிற்பக் கலைப் படைப்பும்

சூரியனை மையமாகக் கொண்டு இயங்கும் பிற கிரகங்கள் எட்டினையும் சேர்த்து நவக்கிரகங்கள் என்பர். விண்ணில் இயங்கும் நவக்கிரகங்கள் மண்ணில் பிறப்பெடுத்த உயிர்களைச், சிறப்பாக மக்களை இயக்கி வருகின்றன என்பது சமய நம்பிக்கை. எனவே, அவற்றைச் சிற்பக் கலைப் படைப்பில் அமைத்து வழிபடலாயினர்; அதனால், தாம் நலமும் வளமும் எய்தியும், இடையூறுகளைத் தவிர்த்தும் வாழ்கின்றனர். பல சிவாலயங்களிலும், பிற சில கோயில்களிலும் நவக்கிரகங்களை நிறுவி மக்கள் வழிபடினும், மிகச் சிறப்பான பயன்களை நல்கும் நவக்கிரகத் திருத்தலங்கள் உண்டு; அவற்றில், கிரகச் சிலைகளும் நன்கு அமைந்து, தம்மை நாடுவோர்க்கு வினைக்கேற்பப் பயன் நல்குகின்றன. சிறப்புமிகு நவக்கிரகத் தலங்கள் வருமாறு:

கிரகம்		சிறப்புத்தலம்
சூரியன்	-	சூரியனார் கோயில்
சந்திரன்	-	திருவேங்கடம் *(திருவக்கரை, திருக்கருகாவூர், திருவிடை மருதூர் முதலியவையும் சந்திரனுக் குரியவை என்பர்.)*
செவ்வாய்	-	பழநி, வைத்தீசுவரன் கோயில்
புதன்	-	மதுரை
வியாழன்	-	திருச்செந்தூர், ஆலங்குடி

வெள்ளி	-	திருவரங்கம் , திருவேற்காடு, திருவாடானை, கஞ்சனூர்
சனி	-	திருநள்ளாறு
இராகு	-	திருக்காளத்தி
கேது	-	திருக்காளத்தி

எல்லாம் வல்ல பரம்பொருளின் கட்டளைக் கிணங்க, உயிர்களை ஊழ்வழியே இயக்கும் ஆற்றல் படைத்தவை நவக் கிரகங்கள்; எனினும், அவற்றுள், சூரியனும் சந்திரனுமே மக்கள் நேரில் காணும் கண்கண்ட தெய்வங்களாக உள்ளன; அவற்றுள்ளும் சூரியனே நாளும் காணக்கூடிய நிலையில் பயன் மிகப் பயக்கக் கூடியது. இந்த இயற்கைச் சிறப்பை நன்குணர்ந்த முன்னோர்கள், புராண அனுகுமுறையையும் ஆகமச் சிறப்பையும் உளப்படுத்திச் சோழ வளநாட்டில் சூரியனார் கோயில் எனும் திருத்தலத்தை அமைத்துள்ளனர். அங்கே, சூரியமூர்த்தி முதன்மைச் சிறப்பினைக் கொண்டு நடு நாயகமாக நின்ற கோலத்திலிருப்பதையும், அவரைச் சுற்றி ஏனைய கிரகங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே கோயில் கொண்டு, தனிச் சன்னிதிகளில் அமைந்து அருள் பாலித்து வருதலை யும் காணலாம். எல்லாத் திருமேனிகளும் கற்சிற்பப் படைப்புகளே யாகும்; கோயிலில் சிற்ப நேர்த்தியுடன் செப்புத் திருமேனிகளும் உள்ளன.

இந்து சமயங்களுள் வைணவம் மட்டும் திவ்ய தேசங்களில் நவக்கிரகங்களை நிறுவி வழிபடும் முறையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எனினும், வைணவக் கோயிலான மதுரைக் கூடலழகர் கோயிலில் நவக்கிரகப் பிரதிட்டை காணப்படுவது சிறப்பிற்குரியது. அடுத்துத் திருக்கண்ணபுரம் கோயிலின் நுழை வாயிலில் வடபாலுள்ள கோபுரச் சுவர் மேற்குப் பார்த்த நிலையில் நவக்கிரகங்கள் இராசி மண்டலத்துடன் பிரதிட்டை செய்யப்பட் டுள்ளதும் சிறப்பிற்குரியது.

கோயில் வளர்ச்சியும், கோயில்களில் நிறுவப்படும் தெய்வங் களின் எண்ணிக்கை வளர்ச்சியும் மக்களின் சமயத் தேவைகளைப் பொறுத்து அமைவது இயற்கையே. அந்நிலையில், ஞாயிறு உள்ளிட்ட நவக்கிரகங்களே ஊழ்வினைக்கு ஆட்பட்டு இடருறு வதும் அவ்விடர்களினின்றும் மீள்வதற்குப் பரம்பொருளை வழி படுவதுமாகிய செய்திகள் புராணங்களில் காணப்படுபவை. அந்த

நோக்கிலே நவக்கிரகங்கள் வழிபட்ட திருத்தலங்கள் உண்டாயின; அந்த ஆலயங்களில் தெய்வக் கற்சிலைகளும், செப்புத் திருமேனி களும் அவை தொடர்பான விழாக்களும் அமைந்தன. கிரகங்கள் வழிபாடு புரிந்த திருத்தலங்கள் விவரம் வருமாறு:

கிரகம் வழிபாடு புரிந்த தலம்

1. சூரியன்

1. கும்பகோணம் - நாகேசுவரன் கோயில், 2. திருத்தாள முடையார் கோயில், 3. திருவெண்காடு, 4. திருச்சாய்க்காடு, 5. கருங்குயில் நாதபுரம், 6. திருத்துருத்தி *(குத்தாலம்)*, 7. திரு வாஞ்சியம், 8. திருநாகேசுவரம், 9. தேர்த்தகையூர், 10. திருமீயச்சூர், 11. திருவாவடுதுறை, 12. திருக்கேதாரம் *(வட இந்தியாவிலுள்ளது)*

2. சந்திரன்

தமிழ்நாட்டில் ஐந்து: 1. கஞ்சனூர், 2. அச்சுதமங்கலம், 3. கும்ப கோணம் - சோமநாதர் சோயில், 4. மானா மதுரை, 5. திருவெண் காடு.

3. செவ்வாய்

தமிழ்நாட்டில் நான்கு: 1. வைத்தீசுவரன் கோயில், 2. அத்திப் புலியூர், 3. இலந்துறை, 4. திருமங்கலக்குடி.

4. புதன்

தமிழ்நாட்டில் ஒன்று: 1. திருவெண்காடு

5. வியாழன்

தமிழ்நாட்டில் மூன்று: 1. திருக்கொண்டீச்சுரம், 2. பெருஞ்சேரி, 3. மாக்குடி *(கொல்லுமாங்குடிக்கு மேற்புறமுள்ள மாங்குடி)*

6. வெள்ளி *(சுக்கிரன்)*

தமிழ்நாட்டில் நான்கு: 1. ஸ்ரீ வாஞ்சியம், 2. சிதம்பரம், 3. திருக் கோடி கா, 4. காஞ்சிபுரம்

7. சனி *(சனீசுவரன்)*

தமிழ்நாட்டில் ஐந்து: 1. வழுவூர், 2. திருநள்ளாறு, 3. வேதாரணியம், 4. திருவாரூர், 5. குச்சனூர்

8. இராகு

தமிழ்நாட்டில் இல்லை; வடநாட்டில் ஒன்று 1. கேதாரம்

9. கேது

தமிழ்நாட்டில் இல்லை; இலங்கையில் ஒன்று, 1. திருக்கேதீச்சுரம்

தமிழகத்தின் குமரி மாவட்டம் - சுசீந்திரம் கோயில் பல வகைகளில் சிற்பக் கலைமாட்சி உள்ளதெனக் கண்டு வருகிறோம்; அந்நிலையில் சுசீந்திரத்தில் காணலாகும் நவக்கிரகக் கோயில் தனிச் சிறப்புடன் கூடிய கலைமாட்சி கொண்டது; வேறெங்கும் இத்தகைய சிறப்புடன் காண்பதரிது.

அது பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்பதால் சிறப்பு நன்கு புலனாகும். பொதுவாக தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் நவக்கிர கங்கள் மண்டபத்திலே பீடத்தின் மீதே இருக்கும். ஆனால், சுசீந்திரம் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் சூரியன் சந்திரன் முதலிய ஒன்பது கிரகங்களும், மேடம் இடபம் முதலிய பன்னிரு இராசிகளும் ஒரு பெரிய கருங்கற் பலகையில் பொறிக்கப்பட்டு, மண்டபத்தின் மேல் விதானத்தில் பொருத்தப்பட்டுத் தலையை நோக்கிக் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, நவக்கிரகங்களுள் சூரியனை நடுவே வைத்து, ஏனைய கிரகங்களை அதனைச் சுற்றி மூன்று வரிசைகளில் அமைப் பது பெரும்பாலான சிவாலயங்களிலும் பிற ஆலயங்களிலும் காணலாம். ஆனால், வைத்தீசுவரன் கோயிலிலும், கீழ்வேளூரிலும் திருவாரூர் தியாகராசர் கோயிலிலும் ஒரே வரிசையில் அவற்றைக் காணலாம்.

சோழ மன்னர்கள் சூரிய குலத்தவர்கள்; ஆதலின் அவர்கள் கட்டிய சில கோயில்களில் சூரியனுக்கு ஏற்றந்தந்து சூரியச் சிலைகள் பலவற்றையும் நிறுவியுள்ளனர். கங்கை கொண்ட சோழபுரத்தில், ஒரு காலத்தில் சூரியச் சிலைகள் பல நிறுவப்பட்டு, ஏதோ ஒரு காரணத்தால் சில சிலைகள் அகற்றப்பட்டுள்ளன; அந்தச் சிலைகள் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் சில ஆண்டுகளுக்கு முன் கண்டெடுக்கப்பட்டுள்ன என்பது தெரிய வருகிறது.

நவக்கிரகங்கள் தத்தம் தேவியருடன் சேர்ந்து அருள்புரியும் தலங்களாக கருங்குளம் *(திருநெல்வேலி - ஸ்ரீவைகுண்டம் சாலையில்*

உள்ளது). பனவூர் *(திருச்சிக்கும் திருவரங்கத்திற்கும் இடையில் உள்ளது).* ஆகிய திருத்தலங்களில் காணலாம்.[1]

''ஆவுடையார் கோயிலில் மூன்று தூண்களில் நவக்கிரகங்கள் இருக்கிறார்கள். மூன்று தூண்களிலுள்ள 12 பக்கங்களில் ஒன்பதில் நவக்கிரகங்களும், மற்ற மூன்றில் வேறு தெய்வங்களும் காணப் படுகின்றனர்.''[2]

திருக்கண்ணபுரம் எனும் வைணவ திவ்ய தேசத்தில் நவக்கிரகச் சக்கரம் மிகச் சக்தி வாய்ந்தது. அறிஞர் ஏ.எம்.ஆர், ''இத்திருக்கோயில் கோபுரத்தின் இடப்பக்கத்தில் .கோபுரச் சுவரில் மேற்குத் திசை நோக்கி நவக்கிரகச் சக்கரம் அந்தந்தக் கிரக ராசியுடன் கல்வெட்டில் பொறித்துப் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளது. இந்த நவக்கிரகச் சக்கரத்திற்குத் தினமும் காலை மாலையாகிய இரு வேளைகளிலும் விசேஷ பூஜை *(திருவாராதனம்)* உண்டு.....

தேவேந்திரன் நவக்கிரகப் பிரதிட்டை செய்து பூஜித்து அசுவமேத யாகம் செய்த திருத்தலம் இது எனப் பத்மபுராணம் புகழ்ந்து பேசுகிறது. சகல கிரக தோஷங்களுக்கும் உடனடியாக நிவர்த்தியளிக்கும் திவ்ய திருத்தலம் இது. ராஜகோபுரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நவக்கிரகச் சக்கரம் அபூர்வ அமைப்பைக் கொண்டதாகும்,''[3] என்று கூறியுள்ளமை சிந்தித்துப் போற்றற்குரிய குறிப்பு.

தஞ்சை மாவட்டம் காவிரியாற்று வடபாலுள்ள கொட்டையூர் அருள்மிகு கோடீசுவரர் ஆலயத்தில் நவக்கிரகங்கள் தத்தமக்குரிய வாகனங்களின் மீது அமர்ந்திருக்கும் கோலம் சிற்பப் படைப்பாகப் புதுமை நோக்கில் வியப்பளிக்கும் காட்சியாக உள்ளது.

சிவாலயங்களில் நவக்கிரகப் பிரதிட்டை காண்பது போல, வைணவத் திருத்தலங்களில் காணவியலாது. வைணவர்கள் தம் ஆலயத்தில் நவக்கிரகங்களை அபூர்வமாகவே நிறுவுவர்.

நவக்கிரகங்களை ஒரு சேரப் பீடத்தில் அமைத்து வழிபாடியற்றும் வழக்கம் சங்க காலத்தில் இருந்ததாக இலக்கியச் சான்றுகள் இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஆலயங்களில் நவக்கிரகம் பிரதிட்டை சங்க மருவிய காலத்தில் தோன்றியிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

1. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் *(திங்களிதழ்)*, செப்டம்பர், 2000, பக். 29.
2. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் *(திங்களிதழ்)*, செப்டம்பர், 2000, பக். 29.
3. குமுதம் ஜோதிடம் *(வார இதழ்)*, 13.12.2002, பக். 16.

8. அருள்மிகு புத்திர காமேட்டீசுவரர் - சிற்பப் படைப்பும் சூழலும்

இதிகாசங்களாகிய இராமாயணமும் மகாபாரதமும் தமிழ் நாட்டில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியதன் பயனாக, ஆலயங் களும் பல்வகைச் சிற்பப் படைப்புகளும் தோன்றலாயின என்பது வரலாறு காட்டும் உண்மை.

திருமால் திருத்தலங்களேயல்லாமல் சிவாலயங்களிலும் இதிகாசக் கதை மாந்தர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு வழிபாட்டிற்கு வந்துள்ளன. அவை தொடர்பான விவரங்கள் இந்நூலில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. இங்கு, வட ஆற்காடு மாவட்டம் ஆரணியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ள புத்திர காமேட்டீசுவரர் கோயிலில், தனிச் சன்னிதியில் தசரதர் சிலை வழிபாட்டிலுள்ளதைக் காணலாம். மாமன்னர் தசரதர் ஒரு பீடத்தில் அழகிய முடியணிந்த கோலத்தில் சிலை உள்ளது.

இராமாயணத்தில் வசிட்ட முனிவரின் அறிவுரைப்படி, புத்திர காமேஷ்டி வேள்வியைக் கலைக் கோட்டு முனிவரின் உதவியோடு இத்தலத்தில் நடத்திவிட்டு, அயோத்திக்குத் திரும்பியதாகக் கூறுவர்.

வேள்வி நடத்தியதன் பயனாக மகேசுவரன் திருவருளினால் தசரதனுக்குப் புத்திரர்கள் நால்வர் பிறந்தனர்; நன்றிக்கு அறிகுறி யாக, ஜமதக்கினி மாமுனிவரின் கமண்டலத்திலிருந்து வழிந் தோடிய நீர் பெருகிக் கமண்டல நாக நதிக்கரையில் சிவாலயம் எழுப்பப்பட்டது என்றும், அவ்வாலயத்துச் சிவனார் புத்திர காமேட்டீசுவரராகக் காட்சியளிக்கிறார்; சிலை பச்சைக் கல்லால் ஆன மூர்த்தி.

இந்த ஆலயத்தின் இராசகோபுரமும் மூலவர் விமானமும் சிற்பங்கள் பலவற்றைக் கொண்டது. கோயிலின் இடப்பக்கம் வலம்புரி விநாயகர் சிலை உள்ளது; பல்லவர் காலத் திருப்பணியாக ஆலயம் உள்ளது.

பிராகார வரிசையில் மூலவரைச் சுற்றிலும் நர்த்தன விநாயகர், ஆலமர் செல்வன், திருமால், பிரமன் ஆகியோரும், தனிச் சன்னிதியில் சண்டேசுவரும், துர்க்கையும் காட்சியளிக்கின்றனர். எதிர் வரிசையில், மூலவருக்குப் பின்புறத்தே லிங்க கோஷ்டங்கள், வீரபத்திரர், காளிதேவி, வள்ளி தெய்வானை, உடனாய ஆறுமுகர் அமைந்துள்ளதைக் காணலாம்; அதே வரிசையில் கிருஷ்ணர்,

சகசிரலிங்கேசுவரர், இரேணுகாதேவி ஆகிய திருமேனிகள் காணத் தக்கவை. பைரவர், சனீசுவரர், சூரியர்களுக்குத் தனிச் சன்னிதி களும், நவக்கிரகங்களும் உள்ளன.

9. ஜுரஹரேசுவரர் திருவுருவம் - சிற்பச் சிறப்பு

பெரிய சிவாலயங்கள் பலவற்றில் சிவன் திருமேனியாகவே போற்றப்பட வேண்டிய ஜுவரஹரேசுவரர் எனும் வியத்தகு திரு வுருவம் பரிவார தெய்வமாக அமைந்திருப்பதைக் காணலாம். வைத்தீசுவரன் கோயிலில் கிழக்குக் கோபுர வாயிலாக உள்ளே செல்லுங்கால், எதிர்ப்புறத்தில் பெரிய பிராகாரத்தின் நடுப் பகுதியில் கிழக்கு நோக்கிய வண்ணம் ஜுவரஹரேசுவரரைக் கண்டு வழிபடலாம். அண்மைக் காலம் வரையில், நச்சுக் காய்ச்சல் கண்டவர்கள் இந்தத் திருமேனியைக் கண்டு வழிபாடு புரிந்து குணங்கண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேய மருத்துவம் தலை தூக்கிய நிலையில் இந்தத் தெய்வத்தைக் கொண்டாடுபவர்கள் அருகி விட்டனர்.

ஜுரஹரேசுவரர் திருவுருவத்தில் மூன்று தலைகளும் மூன்று கால்களும் இருத்தலைக் காணலாம்; புராணப் பின்னணிகள் சிலவுள.

கண்ணபிரானுடன் போர்புரிய வேண்டிய சூழலில் சிவ பெருமான் மிகவும் சக்தி வாய்ந்த, மூன்று தலைகளும் மூன்று கண்களும் மூன்று கால்களுமாக விளங்கிய அத்திரத்தைப் படைத்து ஏவினார். ஆனால், கண்ணன் எதிர்த்து விடுத்த 'ராராயண ஜீவரம்' என்ற அத்திரம் சிவன் ஏவிய 'சிவஜுவரம்' எனும் அத்திரத்தைச் செயலிழக்கச் செய்தது. பிறகு, அந்தச் 'சிவஜுவரம்' எனும் அத்திரத்தைப் பாணாசுரன் கண்ணன் மீது தொடுத்தான்; ஆனால், அந்த அத்திரம் கண்ணனைத் துதித்து நின்றது என்று கூறுவர். அந்த அம்பின் அமிசமே, உலக உயிர்களின் நச்சுக் காய்ச்சலைத் தீர்த்துக் குணமடையச் செய்யவல்லது என்றும் கூறுவர்.

வேறொரு புராணக் கூற்றும் உள்ளது. ''தாருகவன முனிவர்கள் வளர்த்த *(அபிசார வேள்வியில்)* யாக வேதியிலிருந்து ஜுவரம் என்ற வெப்ப வடிவான ஓர் உருவம் வெளிப்பட்டது. மூன்று கால்களும் மூன்று தலைகளும் கொண்டு திகழ்ந்த அந்த வடிவினைக் கண்டு, உலகமெல்லாம் வெப்புற்று நடுங்கியது. வெப்பமே வடிவான சிவபெருமானோ அந்த ஜுவரத்தை அழித்து உலகைக் காப்பாற்றி

னார். ஜ÷ுவரத்தை அழித்த வடிவாகத் திகழும் மூர்த்தியே ஜுவரஹரேசுவரர் என்று கூறப்படுகிறார்''[1] என்று விஜயலட்சுமி சுப்பிரமணியன் எழுதிச் செல்வதைக் காணலாம்.

வைத்தீசுவரன் கோயிலிலுள்ள மூர்த்தி கரத்துடன், பவானி சங்கமேசுவரர் ஆலயத்திலும் ஜுரஹரேசுவரர் திருவுருவத்தைக் கற்சிற்பமாகக் காணலாம்.

10. பூவிருந்தவல்லி வைத்தீசுவரன் ஆலயம் - தெய்வ நலச் சிற்பச் சிறப்பு

சீர்காழிக்கு அருகிலுள்ள 'புள்ளிருக்கு வேளூர்' எனும் வைத்தீசுவரன் கோயிலில் புராணச் சிறப்பும் சமய மேம்பாடும் கலைச் சிறப்பும் மருத்துவப் பயன்பாடும் கொண்ட திருத்தல மாகும்; இத்தகைய பெருமைபெறும் நோக்கில், ஸ்ரீலங்கா - யாழ்ப் பாணத்திலும் வைத்தீசுவரன் கோயில் ஒன்று அமைந்துள்ளது; சென்னைக்கு அருகேயுள்ள பூவிருந்தவல்லி *(பூந்தண்மலி - பூந்த மல்லி)* எனும் நவலிங்கத் தலத்திலும் வைத்தீசுவரன் கோயில் உள்ளது.

பூவிருந்தவல்லி மூர்த்தி தலம் தீர்த்தச் சிறப்பினைக் கொண்டும், சிற்பச் சிறப்பினைக் கொண்டும் விளங்குகின்றது. வைணவப் பெரியார் திருக்கச்சிநம்பிகளின் அவதாரத் தலமாகிய இதனை 'உத்தரஜகந் நாதம்' எனவும் அழைப்பர். இங்குள்ள கொடிமரம் பலிபீடம் நந்தி மண்டபம் கடந்து சென்றால் அழகிய திருமண மண்டபத்தைக் காணலாம். வாயிலின் இருபுறத்திலும் விநாயகரையும் திருமுரு கனையும் காணலாம். இடப்புறம் நவக்கிரக சன்னிதியும், நேரெதிரே கிழக்கு நோக்கிய நிலையில் வைத்தியநாதர் சன்னிதியும் அமைந் துள்ளன. *(புள்ளிருக்கு வேளூரில் மேற்கு நோக்கியவாறு வைத்திய நாதர் சன்னிதி உள்ளதை ஒப்பீட்டு நோக்கில் சிந்திக்கலாம்.)*

சிற்பச் சிறப்புடன் ஆலயப் பெருமையை விளக்கும் சி.டி.கே. மூர்த்தி, ''கருவறை வாசலின் வெளியே தாளிப் பனையின் உருவம் கல்லில் செதுக்கப் பெற்றுக் காட்சி தருகிறது. முருகன் தாளிப் பனையின் அடியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்ததாகப் புராணம், கருவறைக்கு அருகிலேயே தெற்குப் பார்த்த நிலையில் இறைவி தையல் நாயகி.....

உட்பிராகாரத்தில் செல்வமுத்துக்குமரன் வள்ளி தெய்வானை யுடன் சேர்ந்து காட்சி தரும் சந்நிதி, உற்சவ மூர்த்திகளும் உண்டு.

1. ஞான ஆலயம் *(திங்களிதழ்)*, டிசம்பர், 2000, பக். 76.

'புள்ளிருக்கும் வேளூர்' என்று புகழ்பெற்ற வைத்தீஸ்வரன் கோயிலின் சாயலை வெளிப்படுத்துகிறது ஆலயம். ஆதிசங்கரர் இங்குக் காட்சி தருகிறார்.

மகாமண்டபத்தின் மேல் தளவரிசை நடுவில் ஒரு கமலம்; அதற்கு மேல் நவகோணம்; அந்தக் கோணத்திற்கு மேல் உள்ள வட்டத்தில் ஈசனின் இருபத்தைந்து மூர்த்தங்கள் என மிக அழகுடன் செதுக்கப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சி. மற்றும் அஷ்டதிக் பாலகர்களை எட்டு இடங்களில் சதுரத்தின் நான்கு மூலைகள் இடைப் பட்ட நான்கு இடங்கள் எனச் செதுக்கி இருக்கிறார்கள்''[1] என்று எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் மாசித் திங்கள் 21-ஆம் நாள் முதல் 25-ஆம் நாள்வரையில் சூரியனொளி இலிங்கத் திருமேனியில் படுவதைக் காணலாம். புள்ளிருக்கு வேளூரிலும் இலிங்கத் திரு மேனியில் சில நாள்கள் மேற்கிலிருந்து சூரியனொளி படுவதை ஒப்பீட்டு நோக்கில் சிந்திக்கலாம்.

11. நந்தியும் நந்திகேசுவரரும் - சிற்பக் கலைப் பார்வை

சிவன் கோயில்கள் பலவற்றிலும் கொடி மரம் முன்பாக மகா மண்டபம் அர்த்த மண்டபம் ஆகியவற்றில் சிறிய வடிவத்திலும் பெரிய வடிவத்திலும் நந்தி *(காளை)* அமர்ந்திருக்கக் காணலாம். மேலும், 'சிவாலயங்கள்') இவை எனப் புறத்தேயுள்ள பலரும் தெரிந்து கொள்ளும் வகையில், மதிற் சுவரின் மேலேயும் நந்திகள் அமர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருத்தலும் உண்டு.

சில ஆலயங்களில் மிகப்பெரிய நந்திகள் கற்சிலை வடிவிலும் சுதைச் சிற்ப வடிவிலும் சுவாமிக்கு எதிரே அமைந்திருக்கக் காணலாம். கற்சிற்பமாகத் தஞ்சாவூர் பெரிய கோயில் நந்தி, திருப்புன்கூரில் சிவலோகநாதர் சன்னிதியில் *(நந்தனாருக்காக)* ஒரு புறமாக விலகியிருக்கும் நந்தி ஆகியவற்றைக் காணலாம்.

இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலயத்தில் சுதையமைப் பில் பெரிய நந்தியும், திருவிடை மருதூரில் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் சுதையமைப்பில் பெரிய நந்தியும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

---

1. சரவணா ஸ்டோர்ஸ் தீபம் *(திங்களிதழ்)*, ஜூன், 2001, பக். 9.

பல கோயில்களில் நந்தியுருவங்கள் சிறியனவாகக் காணப்படு கின்றன; அவற்றுள்ளும் சில சிறப்புகள் உள்ளன.

சன்னிதியின் இறைவனைப் பார்த்தவாறே புறத்தே அமர்ந்த நிலையில் நந்திகளை அமைப்பதுதான் ஆலய மரபு. ஆனால், அமர்ந்தவாறு இறைவனுக்கு எதிரில் முதுகுப்புறம் காட்டியவாறு நந்தி இருப்பதைப் பெண்ணாகடம் எனும் திருத்தலத்தில் காணலாம்.

வெள்ளை நிறத்தில் நந்தி அமையப் பெறின் சிறப்புண்டு என்ற நம்பிக்கையால், குமரி மாவட்டம் சுசீந்திரம் ஆலயத்தில் வெள்ளைக் கல்லினாலான நந்தி அமைக்கப்பட்டுள்ளது.

நந்தியே வாகனமாக *(இடப வாகனமாக)* இறைவனுக்கு அமைவதால், சிவாலயத் திருவிழாக்களில் வீதியுலா வருவதற் கேற்ப மரத்தால் செய்யப்பட்டு வர்ணம் பூசிய நிலையில் நந்தியும், மரத்தால் செய்யப்பட்டு வெள்ளித் தகடு போர்த்திய வெள்ளி நந்தியும், மரத்தால் செய்யப்பட்டுப் பொன் முலாம் பூசிய பொன் நந்தியுமாகக் கோயிலின் வசதிக்கேற்ப நந்திகள் அமைக்கப்பட் டுள்ளன.

இவ்வாறெல்லாம் நந்திகள் பல இருப்பினும், அவற்றையும் சில வகைகளாகக் - கைலாச நந்தி, அதிகார நந்தி, சாமானிய நந்தி, மகாநந்தி என வகைமைப் பெயர்களுடன் - காணுமாறு ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

நந்திகளைப் பற்றிய சில சிறப்புக் கூறுகளைக் கண்டு கொண்டு, மிகச் சிறப்பிற்குரிய நந்திதேவர் - அதிகார நந்தி - பற்றிக் காண்போம்.

சிவபெருமானுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் நந்திகள் பற்றிய புராணக் குறிப்புகள் பலவாக உள்ளன; அவற்றுள் சிலவற்றைக் காண்பதற்கு முன், தஞ்சைப் பெரிய கோயில் எடுத்த முதலாம் இராசராசன் எப்படி நந்தியின் திருவுருவத்தைப் போற்றினான் என்பதைக் காண்போம்.

பெரிய கோயில் விமானத்தின் மேல் வைக்கப்பட்ட பிரமரந் திரக் கல்லின் நான்கு மூலைகளிலும் இரண்டிரண்டு நந்திகள் அமைக்கப்பட்டுள்ளன; அவை ஆறரையடி நீளமும் ஐந்தரையடி நீளமுமாக அமைந்தவை. இதனால், விமான உச்சியில் நந்திகளை வைத்துக் கோயிலுக்குக் கோயில் வனப்பையும் சமயப் பெருமையை யும் கூட்டியுள்ளான் என்பது தெரியவரும்.

சைவ சமயத்தில் காளையுடன் தொடர்புபடுத்திச் சிவனையே சிவனுக்குப் பெருமை கூட்டுவதும் உண்டு. இறைவனையே 'காளை யார்' என்றும் அழைப்பதாலும், சிவாலயங்களில் பிரதோச காலத்தில், பலிபீடத்திற்கருகேயுள்ள நந்தியின் கொம்புகளுக்கிடையே பார்வையைச் செலுத்தி இறைவனைக் காண்பது மிகுபயன் விளைவிக்கும் என்பதாலும் இதனை உணரலாம்.

சிற்பியர் தாம் படைக்கும் தெய்வநல வடிவங்களை உருவாக்கு கையில், அவை சில வேளைகளில் அற்புதங்கள் நிகழ்த்துவது உண்டு. சிற்ப நூல் விதிப்படி, இறைவனுக்குத் தேரை முழுவடிவில் - சிறிதும் குறையில்லாமல் - செதுக்கி உருவாக்கினால், அது பறந்து போய்விடும்; அல்லது எரிந்து போய்விடும் என்ற நம்பிக்கையுண்டு. அதுபோலவே, நந்தியை அமைக்கும் போதும் சாத்திரப்படி, சிற்பி ஒன்றிய நிலையில் *(சிறுகுறையுமின்றி)* முழுவடிவம் உருவாக்கினால், ஓடிவிடும் அல்லது உடைந்து விடும் என்பது ஒருவகை நம்பிக்கை.

ஓட முயன்ற அபூர்வ நந்தி

நெல்லை மாவட்டத்திலுள்ள சிவசைலம் கோயிலில் பலிபீடம் கொடிமரம் ஆகியவற்றை அடுத்து இடம் பெற்றுள்ள நந்தி ஒரு பெரும் வனப்புமிக்க படைப்பாகும். சிற்பி இந்த நந்தியை உருவாக்கிக் கொண்டிருந்த போது உயிர்பெற்று ஓட முயன்றதாம்! உடனே சிற்பி தனது உளியால் அதன் இரு கொம்புகளுக்கு இடையே தட்டினாராம்! இதனால்தான் பிற கோயில்களிலுள்ள நந்தி போலில்லாமல், இந்த நந்தி வித்தியாசமாக முன்னங்கால்களைத் தூக்கி நிற்கும் நிலையில் உள்ளது. இதன் தலையில் சிற்பி உண் டாக்கிய காயத்தின் தழும்பு இன்னும் காட்சியளிக்கிறது''[1] எனவுள்ள குறிப்பினைக் காணலாம்.

அதிகார நந்தி பற்றிச் சில செய்திகளைச் சிற்பப் படைப்பிற்கு அடிப்படையாகக் காண்போம்.

சிவபெருமானைப் போலவே அதிகார நந்திக்குச் சடை முடியும் முக்கண்களும், நான்கு கைகளுள், பின் இரு கைகளில் மானும் மழுவும் ஏந்திய நிலையுண்டு; ஆனால் அவர் கூப்பிய முன் இரு கைகளும் கொண்டு, தம் தேவியுடன் காட்சியளிக்கக் கூடியவர்.

---

1. ஞானவழி *(திங்களிதழ்)*, ஜூலை, 1987, பக்.15.

இத்தகைய அதிகார நந்தியின் பின்னணியாகப் புராண - ஆகமச் செய்திகள் பலவுள; விரிக்கிற் பெருகுமாதலின் ஒரு குறிப்பினை ஈண்டுக் காண்போம்.

சிலாத முனிவரும் சித்திரவதியும் ஸ்ரீசைல மலையில் புத்திர காமேஷ்டி வேள்வி செய்ய முற்பட்டு, யாக பூமியை உழுதபொழுது தங்கப் பெட்டியில் ஒரு குழந்தை கிடைத்தது; அந்தக் குழந்தை யிடம் சிவன் கூறுகளாகச் சடைமுடி, முக்கண், நான்கு தோள்கள், சூலம், பரசு, கதை, வச்சிரப் படை ஆகிய படைக்கலன்களைத் தாங்கியவாறு வியத்தகு தெய்வ நல ஒளி காணப்பட்டது. அதற்குச் செபேசுவரர் என்ற திருப்பெயருடன் நந்தி *(மகிழ்ச்சி எனும் பொருள்)* என்று பெயரிட்டனர். அந்தக் குழந்தையை பெருந் தவமியற்றிச் சிவனால் அதிகார நந்தியாகப் பெயர் பெற்றது. சிவன் ஆடல் புரிகையில் அதிகார நந்தி மத்தளமோ குடமுழவோ *(பஞ்சமுக வாத்தியம்)* வாசித்துப் பெருமை கூட்டி வருகிறார் என்பது புராணக் குறிப்பு.

திருமால் சன்னிதியில் விசுவக்சேனர் போன்று, சிவபெருமான் சன்னிதியில் அதிகார நந்திக்குப் பெருஞ்சிறப்பு உண்டு.

இவையெல்லாம் சிற்பக் கலைப்படைப்பில் கண்டு கொள்ளலாம்.

12. சிற்பக் கலையில் எமதர்மனும் சித்திரகுப்தனும்

பொதுவாகக் காலசம்மாரமூர்த்தி முழு அளவில் சிற்பமாக வடிக்கையில், மார்க்கண்டேயர் சிவலிங்கத்தை அணைத்துக் கொண் டிருக்கும் நிலையில், எமன் பாசக் கயிற்றை வீசுவதும், சிவ லிங்கத்தினின்றும் சிவன் தோற்றங் கொண்டு எமனை உதைப்பதுமான காட்சியமைப்பைப் புலப்படுத்திக் காட்டுவர். இத்தகைய காட்சியைச் சில சிவாலயங்களில் காணலாம்.

தில்லைப் பொற் சபையில் கீழ்ப்புறமாகப் படிக்கட்டின் அருகேயுள்ள தூண் தண்டியத்தின் மேற்புறத்தே கண்ணப்பர் தம் கண்ணைத் தோண்டிச் சிவலிங்கத்தில் அப்பும் காட்சியையும், மார்க்கண்டேயருக்காக எமனை உதைக்குங் காட்சியையும் கற்சிற்ப வடிவில் காணலாம்.

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள சிவாலயம் ஸ்ரீவாஞ்சியத்தில் எமதர்மனுக்குத் தனிச் சன்னிதியே உள்ளது. எங்குமில்லாச்

சிறப்புடன் எமவாகனமே சிவனுக்கு அமைந்துள்ளது. அஃது ஒரு புறமிருக்கத் திருக்கடவூர் எனும் திருத்தலத்தில் காலசம்மார மூர்த்திக்கு எதிர்ப்புறத்தில் எமதர்மனுக்குத் தனிச் சன்னிதி உள்ளது. ஐம்பொன்னாலாகிய காலசம்மார மூர்த்தியின் சிலையும், கற்சிலை வடிவிலான எமதர்மன் சிலையும் மிகவும் மூர்த்திகரம் வாய்ந்தவை.

காலனுக்கு எழுத்தராக விளங்கும் சித்திரகுப்தனும் சிற்பக் கலையில் இடங் கொண்டுள்ளமை வியப்பிற்குரியது.

தமிழ்நாட்டில் வேறெங்கும் காணவியலாத வண்ணம், காஞ்சி புரத்தில் உள்ள சித்திரகுப்தன் கோயில் காணத்தக்கது. இக்கோயில் சைவ - வைணவப் பெருஞ்சிறப்புடைய காஞ்சியிலிருப்பதாலும், காமாட்சியம்மன் அருள் வளாகத்தில் அவளது மேற்பார்வையி லிருப்பதாலும், மக்கள் தம் கால எல்லையில் அறநெறியுடன் இயங்க ஒருவகை ஆன்மிகத் தூண்டுதலைப் பெற்று வருகின்றனர். காஞ்சியிலுள்ள சித்திரகுப்தர் சிலையில், அவர் இடக்கரத்தில் ஓலைச்சுவடியும், வலக்கரத்தில் எழுத்தாணியும் ஏந்தி நிற்பதைக் காணலாம். மேலும், சிற்ப வடிவமாகச் சித்திரகுப்தன் அருகில் அம்பிகை ஸ்ரீ கர்ணகி தேவி வீற்றிருக்கிறாள் என்பது காணத்தக்கது.

13. சிற்ப வடிவில் வீமனும் புருஷாமிருகமும்

சோழர்கள் காலத்தில் இராமாயணம் மக்களால் நிரம்பப் பயிலப்பட்டமையால் இராமாயணக் காட்சிகள் பெரிய சிற்பப் படைப்புகளாகவும், கோயில் கட்டமைப்பில் அதிட்டானச் சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன; பெரியபுராண நிகழ்ச்சிச் சிற்பங்களும் ஓரளவு ஆலயங்களில் இடங் கொண்டன. ஆனால், விசயநகர நாயக்க மன்னர் காலத்தில் பாரதம் நிரம்பப் பயிலப் பட்டமையால் பாரத நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் பல சிற்பங்கள் படைக்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்க நிலையில், வீமனும் புருடாமிருகமும், மற்றும் இரு மகாபாரத நாயக்கர்களாகக் கர்ணனும் அருச்சுனனும் நாயக்கர் காலக் கோயில்கள் சிலவற்றின் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

புருஷாமிருகம் தனித்த நிலையிலே அமர்ந்த கோலத்திலும் கோயில் வளாகங்களில் அமைப்பது உண்டு. எடுத்துக் காட்டாகத் தில்லை பெருங்கோயிலில், கோபுரங் கடந்த முதல் வாயிலின் உட்புறத்தே இடப்பக்க பீடத்தில் புருஷாமிருகச் சிலையைக் காணலாம்.

புருஷ முகமும் விலங்கு உடலமைப்பும் கொண்ட புருஷா மிருகத்தைச் சிலை வடிவில் சிற்பியர் ஆக்கியுள்ளனர். ஒப்புமை நோக்கில் திருவிடை மருதூரிலுள்ள பிரம்மஹத்தி சிலையுடன் ஓரளவு ஒப்புமை காணலாம்; இரண்டும் அச்சுறுத்தும் நோக்கில் அமைந்தவை; இரண்டும் இயற்கையிகந்த சக்தியுடையவை.

14. துவாரபாலகர், துவாரபாலகியர் சிலைகள்

துவாரபாலகரும், துவ்ாரபாலகியரும் கோயிற்கருவறையின் முன் இருபுறங்களிலும் நின்று கொண்டு, காவற் பொறுப்புடன் திகழக் கூடிய தெய்வநலச் சிறப்புடையவர்கள். இவர்களுக்குப் புராணப் பின்னணி உண்டு.

சிவாலயங்களிலும் வைணவத் திருக்கோயில்களிலும் பிற கோயில்களிலும் காணலாகும் துவார பாலகர், துவார பாலகியர் திருவுருவ அமைப்புக்களை விளங்க உரைப்பதென்பது எளிதில் இயலாது. எவ்வளவோ வரலாற்றுப் பின்னணியையும், புராண அடிப் படையையும், சிற்பியரின் கலைக் கற்பனையையும் தம்மகத்தே கொண்டு விளங்கக்கூடியவை அந்தத் திருவுருவங்களாகும்; எனவே, சுருக்கமாக அவை பற்றிய சில செய்திகளைக் காண்போம்.

கருவறையின் முன் இரு புறங்களிலும் துவாரபாலகர்களை முதற்கண் அமைத்த பெருமை பல்லவ மன்னன் மகேந்திர வர்மனைச் சாரும். டாக்டர் மா. இராசமாணிக்கனார், ''அக்காவலர் பாகை உடையவர். அவர்தம் வலக்கை இடக்கை மீது இருக்கும். இடக்கை ஒரு தடியைப் பிடித்திருக்கும். அக்காவலர் தடி மீது முன்புறம் சிறிது சாய்ந்தபடி, பார்ப்பவரை அடிக்க முயல்பவரைப் போலக் காணப்படுவர்''[1] எனக் கூறிச் செல்கிறார்.

பல்லவர் காலச் சிற்பக் கலையை ஆராய்ந்துள்ள அறிஞர் டாக்டர் ஆர். வெங்கட்ராமன், ''பல்லவர் குடைவரைத் துவார பாலகர்கள் இரண்டு கரங்களுடனும், துவக்கக் காலத்தில் முன் நோக்கிய முகத்துடனும், காலப்போக்கில் பக்கவாட்டில் தலை யினைத் திருப்பிய நிலையிலும் (Profile) காட்சியளிக்கின்றனர். இவ் விருவருள் ஒருவருக்குத் தலையில் இரு கொம்புகள் உள்ளன. இவர் நந்தியாக இருக்கலாம். *(இத்தகைய துவார பாலகரைப் பாண்டியர், முத்தரையர், சாளுக்கியர், இராஷ்டிரகூடர் குகைகளிலும்*

1. பல்லவர் வரலாறு *(கழகப் பதிப்பு)*, பக். 96-97.

காணலாம்''[1] *என்று கூறியுள்ளமை மிகச் சிந்திக்கத்தக்கது. சிவாலயங்களில் நந்திகேசுவரரே, துவார பாலகர்களுள் ஒருவராகப் பணிபுரிகிறார் எனக் கொள்வதில் பொருத்தமுண்டு என்று சமயப் புலமையாளர்களும் கருதுகின்றனர் என்பதை இயைபுடன் ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.*

சோழ மாமன்னர்களின் கலைத் தொண்டுகள் படிப்படியே மேலோங்கி வளர்ந்த காலத்தில் சில குறிப்பிடத்தக்க கலைப் பாணிகள் (Art-Styles) உண்டாயின. *அந்நிலையில்,* ''*அர்த்த* மண்டபத் துவார பாலகர் *(5 அடி உயரம்)* சடாமகுடத்துடனும் ஒரு கையில் தடி *(கதை),* மற்றொரு கையில் 'விஸ்மய' முத்திரை யுடனும், தலையில் கொம்புகளுடனும் உள்ளனர்,''[2] என வருங் குறிப்பினையும் நினைவிற் கொண்டு ஒப்பியல் நோக்கில் சிந்திக்கலாம்.

''மகேந்திரன் காலத்துக் குடைவரைகளில் உள்ள வாயிற் காப்போர் *(துவார பாலகர்கள்)* இரண்டு கைகளையுடையவர் களாகவும், குண்டாந்தடி *(கதாயுதம்)* ஒன்றைத் தரையில் ஊன்றி அதன்மீது கையை வைத்துச் சிறிது சாய்ந்து நின்றுள்ளார்கள். சில கதாயுதத்தில் பாம்பு சுற்றிக் கொண்டுள்ளது. வாயிற் காப்போர் சிலர் தலையில் அணிந்துள்ள மகுடத்தின் பின்புறத்தில் வளைந்த இரு மாட்டுக் கொம்புகள் காணப்படுகின்றன. அவர்களின் கையிலுள்ள கதாயுதத்தில் பாம்பு சுற்றிக் கொண்டுள்ளது. மார்பிலுள்ள பூணூலே பாம்பின் வடிவில் உள்ளது. எடுத்துக் காட்டாகக் குரங்கணில் முட்டத்து வாயிற் காப்போரைக் கூறலாம். பொதுவாக இவ்வாறு தலையில் கொம்புகளுடனும் மார்பிலும் கதாயுதத்திலும் பாம்புகள் சுற்றிக் கொண்டும் காணப்படும் வாயிற் காப்போரையுடைய குடை வரைகளின் மூலவர் சிவனாக இருக்க வேண்டும் எனக் கருது கின்றனர். அவ்வாறு பார்க்கும்போது மகேந்திரன் காலத்திலும் மாமல்லன் காலத்திலும் சிவனுக்குப் படைக்கப்பட்ட குடை வரைகள் பல உள்ளதை அறிகிறோம். இதைப் போலவே விஷ்ணு வுக்கும் பிரமனுக்கும் துர்க்கைக்கும் அருகக் கடவுளுக்கும் மும் மூர்த்திக்குமாகப் படைக்கப்பட்ட குடைவரைகளையும், அவற்றில் நிற்கும் வாயிற் காப்போரைக் கொண்டு அறியலாம்''[3] என்று

1. இந்தியக் கோயில் கட்டிடக்கலை வரலாறு, பக். 39.
2. மேலது, பக். 93.
3. இந்தியக் கலை வரலாறு - இரண்டாம் புத்தகம், தமிழ்ப் பாடநூல் நிறுவனம்.

கோ. தங்கவேலு தரும் குறிப்பு மிகவும் மனங்கொண்டு சிந்திக்கத் தக்கது.

பல்லவர்களுக்குப் பிறகே துவார பாலகர் சிலைகளில் சிற்சில மாற்றங்கள் உண்டாயின என்பது வரலாற்றால் அறிந்து கொள்ள லாம்.

பொதுவாகக் கோயிலில் இடத்தின் சிறப்பிற்கேற்ப மண்டபம் அல்லது கருவறை நுழைவாயில்களில் துவாரபாலகர் சிலைகளைக் காணலாம்; துவார பாலகர்கள் கதாயுதம் தாங்கி ஒரு காலை மடக்கிக் கதாயுதத்தில் பொருத்திய நிலையில் காணப்படுவர். சில இடங் களில் இத்தகைய அமைப்பினைக் காண முடிவதில்லை.

கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில் துவாரபாலக மண்டபத்திற்கு அருகே, துவார பாலகர்கள் நேர்பார்வையில் கதையை வலக்கையிலும் இடக்கையிலுமாக ஊன்றிய வண்ணம் *(காலை மடிக்காமல்)* நான்கு கைகளுடன் காணப்படுகின்றனர். ஒவ்வொரு துவார பாலகரின் மேலிரு கைகளில் சங்கு சக்கரம் பொருந்தியும், ஒரு கை ஒரு விரல் நிமிர்த்தியும் *(இறைவன் ஒருவனே எனச்சுட்டியும்)* மற்ற விரல்களை மடக்கியும் மற்றொரு கையை முத்திரையிட்டும் அமைத்திருப்பதைக் காணலாம். இந்தத் துவார பாலகர்கள் எந்தக் காலத்தில் அமைக்கப்பட்டனர் என்பது சரியாகத் தெரியவில்லை.

தஞ்சைப் பெரிய கோயிலில் கோபுர வாயில்களிலும் கருவறைக்கு முன்பகுதியிலுமாகத் துவார பாலகர்கள் மிக மிடுக்குடனும் சிற்ப நேர்த்தியுடன் இருப்பதைக் காணலாம். இரண்டாம் கோபுர வாயிற் கண் அமைந்துள்ள துவார பாலகர்களின் உயரம் பதினெட்டு அடி; தமிழகத்துத் துவார பாலகர்களில் இவை பெரியவை என்பர்.

அரக்கோணம் வட்டம் தக்கோலம் திருவூறலுடையார் கோயிலின் உள்ளே நுழைவாயிலில் காணப்படும் துவார பாலகர் சிலைகள், மார்பழகும் வலிய கால்களும் கம்பீரமான தோற்றமும் கொண்டு, அதே வேளையில் புன்முறுவலுடன் காட்சியளிக்கும் சிறப்பினையுடையவை. நான்கு கைகளுள் ஒரு கை *(முழங்கை)* நீண்ட கதாயுதத்தில் படிந்திருக்கும் நிலையில், இறைவன் ஒருவனே என்ற ஞானக் குறிப்புடன் மற்றொரு கை காட்டி நிற்கும்; மேலேயுள்ள இரு கைகளும் இறைவனது பெரும் புகழை உணர்த்து வனவாக மேலே விரிந்து காணப்படும்; கால்களுள் ஒன்றை மடக்கி

மற்றொன்றின் மேல் சார்த்தியிருக்கும். இத்தகைய திருக்கோலத்தில் துவார பாலகர்களைக் காண்பது அரிதெனலாம்.

இத்தலத்தில் பல்லவர்களும் சோழர்களும் திருப்பணி புரிந் துள்ளமையால் துவார பாலகர்கள் எக்காலத்தவையெனத் தெளி வாகக் கூற இயலவில்லை.

மன்னர்கள் பலர் தம் ஆட்சிக் காலத்தில் கோயில்களை அமைத்தும் புதுப்பித்தும் வந்துள்ளனர் என்பது வரலாறு. அத்தகைய வரலாற்றுத் தொடர்புடையது வைணவர்களுக்குக் 'கோயில்' என விளங்கும் திருவரங்கம். அத்தலத்தில் கல்லாலான துவார பாலகர்களேயல்லாமல், உலோகத்தாலான துவார பாலகர்களும் உண்டு. திருவரங்கப் பெருமான் பள்ளி கொண்டுள்ள கருவறை முகப்பில் பித்தளையாலான துவாரபாலகர் சிலைகள் காலை மடக் காமல் ஜய விஜயன் எனும் திருப்பெயர்களுடன் காணப்படு கின்றனர். இவர்களின் தொன்மையைக் காட்டும் வகையில் புராணப் பின்னணி உள்ளது; அது வருமாறு: ஸ்ரீவைகுண்டத்தில் ஜயன், விஜயன் எனப் பெயரிட்ட துவார பாலகர்கள் பணிபுரிந்து வந்தனர். சனகர் முதலிய இருடியர்கள் திருமாலைக் கண்டு வழிபட வந்த வேளையில், அவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்தி விட்டனர் ஜயனும் விஜயனும்; எனவே, அவர்களை இரணிய கசிபு, இரணியாட்சன் என்ற பெயரில் அரக்கர்களாகுமாறு சபித்து விட்டனர் இருடியர். அவர்கள் சாபத்தை ஒருவகையில் திருமால் மாற்றி, மூன்று பிறவிகளெடுத்து *(முதற்பிறவியில்* இரணிய கசிபு, இரணியாட்சன்; *இரண்டாவது பிறவியில்* சிசுபாலன் கும்ப கர்ணன்; *மூன்றாவது பிறவியில்* சிசுபாலன் தந்தவக்கிரன் *எனும் பெயரிலும் வாழ்ந்து)* மீண்டும் வைகுண்டம் அடைந்தனர் என்பர். இதனையே வேறு வகையில், துவாரகையில் இலக்குமியின் வரவைத்தடுத்து இந்தச் சாபம் அடைந்தனர் எனவும் கூறுவர்.

தஞ்சாவூர் கலைக் கூட்டத்திலுள்ள துவார பாலகர் சிலை வரலாற்றுப் பின்னணி கொண்டது. சோழ மன்னன் விசய ராசேந்திரன் எனும் முதலாம் இராசாதி ராசன் *(கி.பி. 1018-1054)* வடநாடு சென்று, மேலைச் சாளுக்கிய மன்னன் சோமேசுவர ஆகவமல்லனைக் கிருலுணா நதிக்கரையில் - பூண்டி எனுமிடத்தில் - போரிலே வென்றான்; அவனது தலைநகர் கலியாணபுரியை எரித்து வெற்றிக்கு அறிகுறியாகத் துவார பாலகர் சிலையைக் கைப்பற்றிக் கொணர்ந்தான். அந்தச் சிலை தாராசுரம் கோயிலில் வைக்கப்பட்டது; சிலையின் அடியில், "ஸ்வஸ்தி ஸ்ரீஉடையார்

ஸ்ரீவிஜய ராஜேந்திர தேவர் கல்யாணபுரம் எரித்துக் கொடு வந்த துவார பாலகர்'' என்று அக்காலத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது.

நேர்த்தியான அச்சிலையின் கீழ்ப்பகுதியில் ஒரு கரடி தன் குட்டியுடன் விளையாடுகிறது; ஒரு பாம்பு எலியை விழுங்குகிறது. அந்தத் துவார பாலகர் ஒரு அடிமரத்தின் மீது முழங்கையை ஊன்றிக் கொண்டு அந்த மரத்தின் பொந்து வழியே நுழைந்து வரும் பாம்பு ஒன்றின் தலைமீது கையை வைத்துள்ளார். அடிமரத்தில் சில சுண்டெலிகள், உடும்பு ஆகியவை ஏறுகின்றன. மரத்தின் பொந்தி லிருந்து ஓர் ஆந்தை எட்டிப் பார்க்கிறது. இவ்வளவு இடையூறுகளுக் கிடையேயும் வாயில் காக்கும் துவார பாலகரின் நாட்டம் சிதற வில்லை என்பது இச்சிலையால் தெரிய வேண்டிய செய்தியாகும். கம்பீரமான தோற்றத்துடன் இரு கைகளையுடைய இந்தச் சிலை மேலைச் சளுக்கியரின் கலைத் திறனைக் காட்டுகிறது.

முறுக்கிய மீசையுடனும் மீசையில்லாமலும், தலையில் நீண்ட மகுடமும் உதரபந்தமும், செவிகளில் வேலைப்பாடுடைய வளை யங்களும், மார்புக் கவசமும், தோள் வளையங்களும், கைகளில் காப்பணிகளும், கால்களில் சிலம்புகளும் காப்பணிகளும், கைகளில் படைக் கருவிகளும், கதாயுதம் தவிரக் கருவிகளில்லாமலும், நான்கு கைகளுடனும் இரு கைகளுடனுமாகத் தெய்வங்களுக்குப் பாது காவலர்களாக விளங்கும் துவார பாலகர்களின் கற்சிலைகளும், சுதைச் சிற்பப் படைப்புகளும், செப்புத் திருமேனிகளுமாகக் காணப் படுபவை பலநூறுகள் உள்ளன; எல்லாம் சிற்பியரின் கைவண்ணப் புலப்பாடுகளே.

சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய துவார பாலகர்கள், முறுக்கிய மீசையுடனும் இரு கைகளுடனும் *(ஒரு கையை கதாயுதத்தைப் பிடித்த வண்ணமும் மற்றொரு கையை மடக்கிப் பக்தர்களை இங்கே வாருங்கள் என்று அழைக்கும் குறிப்பிடனும்).* ஒரு காலை ஊன்றியும் மற்றொரு காலைக் கதாயுதத்தில் பொருத்தி யும் காணப்படும் சிறப்பினைக் கன்னியாகுமரி மாவட்டம் - கேரளபுரம் மகாதேவர் திருக்கோயிலில் காணலாம்.

14.1. துவார பாலிகைகளும் கொடிப் பெண்களும்

துவார பாலிகைகளின் சிலைகள் அம்மன் கோயில்களின் முகப் பிலும் அர்த்த மண்டப முகப்பிலும் அமைவது கோயிலமைப்பின் மரபு.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் அம்மை சன்னிதியின் முகப்பில் அமைந்துள்ள துவார பாலிகைகள் நல்ல சிற்ப எழில் வாய்ந்தவை.

மாமல்லபுரம் பஞ்சபாண்டவர் இரதங்களுள் துரௌபதி இரத முகப்பில் இருகைகளுடன் கூடிய துவார பாலிகைகள் சிற்ப அழகுடன் காணப்படுகின்றனர். அம்மன் கோயில்கள் பலவற்றில் துவார பாலிகைகள் மகுடத்துடனும், இருகைகளுள் ஒன்றில் வாள் ஏந்தியும் மற்றொரு கையைத் தொங்க விட்டவாறும், இரு கால் களையும் சாதாரண நிலையில் ஊன்றியவாறும் அமைக்கப்பட் டிருத்தலைக் காணலாம்; இது உயர் பண்பாட்டின் தாக்கம்.

துவார பாலகர்களாகிய ஆடவர்களிடம் காணப்படும் அச்சுறுத் தும் கடிய பார்வையில்லாமல் நேருக்கு நேர் எளிய பார்வையுடன் துவார பாலிகையர் காணப்படுவதே சிற்பப் படைப்பில் பெரும் பான்மையாகும்.

திருவக்கரை வக்கிர காளியம்மன் கோயில் சன்னிதி முகப்பில் காணலாகும் துவார பாலிகைகள் எழிலுடன் அமைந்துள்ளனர். இந்தத் துவார பாலிகைகளின் வரலாறு மிக வியப்பிற்குரியது. பெண்கள் நால்வர் பால் தயிறு விற்று வாழ்ந்து வருகையில், கலப் படம் செய்து மக்களை ஏமாற்றி வந்தனர் என்றும், அவர்களைப் பற்றி மன்னன் கேள்விப்பட்டதும், அவர்களுக்கு மொட்டை யடித்துச் சிரச்சேதம் பண்ணுமாறு உத்தர விட்டான் என்றும், அவர்கள் தாம் செய்த குற்றத்தையுணர்ந்து காளியிடம் மனமுருகி வேண்டினர் என்றும், அவர்களைத் தண்டனையினின்றும் காளி காப்பாற்றித் தன் கோயிலில் துவார பாலிகைகளாக இருக்குமாறு அருள்புரிந்தாள் என்றும் கூறுவர்.

வாயிற் காவலர் பொறுப்பில் துவார பாலிகையர் ஒரு புறமிருக்க, ஆலய நுழைவாயிலில், பொதுவாக நேருக்கு நேர் பார்ப்பது போன்ற அமைப்பில் வாயிற்படியருகே கொடிப் பெண் களாகக் கங்கையும் யமுனையும் அமைந்திருப்பது, சிற்ப நோக்கில் சிந்திக்கத்தகும். எடுத்துக் காட்டாகச் சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் கொடிப் பெண்களின் சிற்ப நேர்த்தியைக் கண்டு களிக்கலாம். சிவனுக்குரிய கங்கையையும் கண்ணனுக்குரிய யமுனையையும் கொடிப் பெண்களாகச் சிற்பத்தில் இவ்வாறு அமைப்பதால், சைவ வைணவ ஒருமைப்பாட்டுணர்வினைப் புலப்படுத்துவதாகவும் கொள்ளலாம்.

சி.வ.

15. தஞ்சைப் பெரிய கோயிலில் - விமானத்தில் விமானச் சுவர்களில் கோஷ்ட தெய்வங்களும் பிற தெய்வங்களும் - சிறப்புக் குறிப்பு

மாமேருவை நினைவு கூரும் வகையில், மேருவின் சிகரங்களி லிருந்து - இடைப் பகுதிகளிலிருந்து - புண்ணியத் தடாகங்கள் *(துரோணிகள் - நீர் ஏந்தும் கும்பங்கள்)* நீர் வருவதைப் பெரிய கோயில் விமானத்தில் கலை வண்ணமாக்கியுள்ளனர்; கலைச் சித்திரமாக்கிக் கர்ண கூடங்களுக்கும் சாலைகளுக்கும் இடையில் 'கும்ப பஞ்சரம்' என்னும் அமைப்புகள் விமானத்தில் பொருத்தி யுள்ளனர். கூடம் சாலைகளின் இடையில் கொடுங்கையில் உள்ள இடைவெளி வழியாகப் பெருமழை பெய்யுங்கால் மழைநீர் ஓடி இக் கும்பங்களை நிறைத்து வழிந்து ஓடும்; இது கங்கைநீராகப் பாவிக்கப்படும்; இந்தச் சிந்தனைக்குச் சிறப்பப் படைப்பு உள்ளது.

வரலாற்று அறிஞர்கள் கருதியுள்ள செய்திகளைத் தெளிவு படுத்தும் நோக்கில் தொல்லியல் அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி, கலையுலகில் பலவற்றை எழுதியுள்ளார். அந்நிலையில், ''விமானச் சுவர்களின் மேல் கோஷ்டங்களில் வில்லும் அம்பும் சூலமும் பாசமும் *(தண்டத்தில் சுற்றிய கயிறு)* ஏந்திய 24 உருவங்கள் ஒன்று போலவே உள்ளன. இவற்றைத் திரிபுராந்தகர் என் இதுகாறும் கூறிவந்தனர். ஆனால் உண்மையில் எட்டு வித்யேசுவரர்கள், எட்டு மூர்த்திசுவரர்கள், ருத்ரர்கள் ஆவர். விண்ணிலிருந்து சிவபரம் பொருள் நிலவுலகுக்குத் தோன்றும் முதல் உருவகங்கள் இவை''[1] என்று கூறியபின், 'பஞ்சாவரணங்கள்' என்ற தலைப்பில், ''கீழ் கோஷ்டங்களில் சிவபெருமானின் பல தோற்றங்கள் பிக்ஷாடனர், சக்ரதானமூர்த்தி, ஆடவல்லார் முதலிய உருவங்கள் உள்ளன. இவற்றில் பஞ்ச பிரும்மங்கள் என்றழைக்கப்படும் தத்புருஷர், அகோரர், சத்யோஜாதர், வாமதேவர், ஈசானர் என்னும் ஐந்து மூர்த்தி களும் சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளதை இக்கோயிலில் தான் காணலாம். நான்கு திசைகளிலும் விமானத்தில் வாயில்கள் உள்ளதைக் காண்கிறோம். இவ்வமைப்புக்குச் 'சர்வதோபத்ரம்' என்று கூறுவர். மேரு என்னும் விமானத்தை அமைக்கும் போது இவ்வாறு நான்கு புறமும் வாயில்கள் உள்ளதாக அமைக்க வேண்டும் என வாஸ்து நூல்கள் கூறுகின்றன. இவ்வாயில்களைத் துவார பாலகர்கள் காத்து நிற்கின்றனர். இவர்களைச் சற்று உற்று நோக்கினால், இவர்கள் ஆயுத புருஷர்கள் என்பது விளங்கும். சிவ வழிடிபாட்டில் பல சுற்று

1. தஞ்சை இராசராச்சுரம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர், 1997, பக். 10.

வழிபாடுகள் உண்டு; அவற்றை ஆவரணம் என்பர். இவ்வாறு ஐந்து சுற்று வழிபாடு இன்றியமையாதது (பஞ்சாவரணம்). இதில் ஒரு சுற்றில் பத்து ஆயுதங்கள் வழிபடப்படும். இவற்றைத் 'தசாயுதங்கள்' என்பர். வஜ்ரம், சக்தி, தண்டம், கொடி, சூலம், அங்குசம், கதை, பாசம், கத்தி, சக்கரம் என்பவை இவை''[1] என விளக்குவது மிகவும் போற்றத்தக்க பெறலருங் குறிப்பாகும்.

16. நந்திகள் – சிவாலயங்களில் கொள்ளும் சிறப்பிடம்

நந்திகேசுவரர் என்பவர் புராணச் சிறப்புடன் போற்றப் படுபவர்; திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கும் பார்வதியம்மைக்கும் பாதுகாவலராக விளங்குபவர்; ஆடல் வல்லானாகச் சிவன் தாண்டவ மாடுங்கால், ஆடலுக்கேற்ற தாள மியக்கும் மத்தளம் *(முழவு)* வாசிப்பவர். அத்தகைய பெருஞ்சிறப் புடைய நந்திகேசுவரர் மானுடவுடலும் நந்தித் தலையும் கொண்டு சிற்பத்தில் விளங்குதலை ஆலயச் சிற்பங்களில் காணலாம். அஃது ஒரு புறமிருக்கச், சிவாலயத்தில் பலிபீடத்திற்கு அருகில் அமர்ந் திருக்கும் சிற்ப வடிவிலுள்ள காளையாகிய நந்தியைப் பற்றிச் சிறிது ஈண்டு இயைபுடன் சிலவற்றைக் காண்போம்.

தஞ்சைப் பெரிய கோயில் நந்தி, கங்கை கொண்ட சோழ புரத்தில் உள்ள நந்தி, திருப்புன்கூர் நந்தி முதலிய சில நந்திகள் சிற்பச் சிறப்புடன் பெரியவையாக உள்ளன. சுதையமைப்பில் உள்ள திருவிடை மருதூர் நந்தி, இராமேசுவரம் இராமநாத சுவாமி கோயில் நந்தி ஆகியவை மிகப்பெரிய அளவில் அமைந்துள்ளவை.

சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட நந்தியெம்பெருமானின் சிலை, புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன்பட்டி நகரச் சிவன் கோயிலில் வீற்றிருந்தருள் புரிகிறார். இந்த நந்தீசுவரர் கொடும் பாளூலிருந்து கொணரப்பட்ட சிலையாகும்; கருங்கல்லில் செதுக்கப்பட்டிருப்பினும் நெடுங்காலமாக நல்ல பசுநெய் அபிடேகமே செய்யப்பட்ட காரணத்தால் *(நித்தியப்படி நெய்யபி டேகம் நடைபெறுஞ் சிறப்புடையது)*, வெள்ளைக்கல் (White-stone) கொண்டு வடிவமைக்கப்பட்டது போன்று தூய வெண்மையாகவும் வழுவழுப்பாகவும் காணப்பெறுவது சிறப்பாக மனங்கொள்ளத் தக்கது.

1. தஞ்சை இராசராசேச்சுரம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர், 1997, பக். 10.

ஒரு சிறப்புக் குறிப்பு

திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் ஆலயம் - மகா மண்டபத்தில் அமைந்திருக்கும் பெரிய நந்தியின் முதுகில் பல துவாரங்கள் காணப்படுவது வியப்பிற்குரிய புராணப் பின்னணி கொண்டது. மருத்துவன் என்ற அசுரனைக் கொல்வதற்குச் சிவன் நந்தியை அனுப்புகிறான்; மருத்துவன் எய்த படைக் கருவியால் நந்தியின் முதுகில் பல துளைகள் ஏற்பட்டன. இதனைச் சிற்பி கற்சிற்பத்தில் காட்டியுள்ளான்; ஆகமவிதிகளுக்கும் அப்பாற்பட்ட கலைக் கற்பனை சிற்பவுலகில் உண்டு என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

நந்தியாகிய காளையை வாகனமாகக் கொண்ட சிவன் 'காளையார்' என்றே அழைக்கப்படுவதால் நந்தியின் சிறப்பு இனிது புலப்படும். சிவன் கோயில் மதிற் சுவர்களிலும், அம்மன் கோயில் மதிற் சுவர்கள் சிலவற்றிலும் பலிபீடத்தருகிலும் நந்தி இடங் கொண் டிருப்பதும் நந்தியின் சிறப்பை நன்கு புலப்படுத்தும்.

17. திருமால் தலங்களில் பரிவாரத் தெய்வங்கள்

அ) கருடாழ்வார் - சிற்பக் கலைப் படைப்புக் கூறுகள்

வைணவ சமயத்தில் கருடாழ்வார் வாகனத்தில் எழுந்தருள்வது மிகச் சிறப்பாகும்; இத்தகைய தொடர்பில் பல வைணவ திவ்ய தேசங்களில் 'கருட சேவை' கொண்டாடப்படுகின்றது.

மரத்தால் சிற்ப எழிலுடன் கருடாழ்வாரைச் செய்து வர்ணம் பூசி, வாகனமாகக் கொள்வதும் உண்டு. மரத்தாலான கருடாழ்வார் மீது வெள்ளித்தகடு போர்த்தி வெள்ளி வாகனமாகவும், தங்கத்தகடு போர்த்தித் தங்க வாகனமாகவும் அமைப்பர். கல்லாலான கருடாழ் வாரும் சுதையாலான கருடாழ்வாரும் ஆலய வளாகத்தில் அமைப்பது உண்டு.

திருவரங்கத்தில் தெற்குக் கோபுர வாயில் வழியாக நுழையும் போது கருட மண்டபத்தில் மிகப்பெரிய - சுதையாலான - கருடாழ் வாரைக் காணலாம். பல திவ்ய தேசங்களில் கருடாழ்வார் சிலையைக் காணலாம். பல திவ்ய தேசங்களில் கருடாழ்வார் சன்னிதிகள் உண்டு; அங்குக் கல்லாலான கருடாழ்வாரைப் பிரதிட்டை செய்திருப்பர்; செப்புத் திருமேனிகளும் உண்டு. கல்லாலான கருடாழ்வாரை வலம் வரச்செய்ய எழுந்தருளப் பண்ணுவது நாச்சியார் கோயிலில் மட்டும்தான்.

இரு திருக்கைகளை முன்னே மடக்கி முன்நீட்டியும், அமரும் நிலையில் ஒரு காலை முன்மடக்கியும் மற்றொரு காலை முழங் காலால் ஊன்றியும், திரு மகுடம் தரித்தும், அணிகலனின் ஒப்பனை யோடும் இறக்கைகளுடனும் காட்சியளிக்கும் கருடாழ்வார்களைப் பல திவ்ய தேசங்களிலும் காணலாம். ஆனால், திருநாங்கூர் வேங்கடநாதன் ஆலயத்தில், கருடாழ்வார் இறக்கையில்லாமல் கைமடித்து இருக்கும் நிலையில், பின் வலக்கையில் சக்கரமும், பின் இடக்கையில் சங்கும் பொருந்திக் கருட அலகு போன்றில்லாமல் எழில் தவழும் திருமாலின் நாசியைப் போல அமைந்து, அழகு வடிவம் கொண்டு தோற்றமளிக்கிறார். இதனால், திருமாலுக்கு வழங்கிடும் பல சிறப்புக் கூறுகளும் கருடாழ்வாருக்கு வழங்கிச் சிற்பத் திருவுருவில் வழிபாடு செய்வது வைணவச் சமய மரபாக அமைந்துள்ளமை தெளிவாகும்.

17.1 அனுமார் - சிற்பப் படைப்பில் வகைகளும் பெருமையும்

கம்ப நாட்டாழ்வாரால் 'சொல்லின் செல்வன்' என்றும், 'சுந்தரன்' என்றும் அழைக்கப்படும் அனுமார், இந்தியாவில் வடகோடியி லிருந்து தென்குமரி வரையில் வழிபடப்படும் சிறப்புமிகு தெய்வ மாகப் போற்றப்படுகின்றார். சிறப்பாகத் திருமால் எழுந்தருளி யுள்ள திவ்ய தேசங்களில் அனுமாருக்குத் தனிச்சிறப்பான வழிபாடு உண்டு. ஆஞ்சநேயர் என்றும் அழைக்கப்படும் இவர், பெரும் பாலும் பல தலங்களில் ஒரு திருமுகத்துடன் காட்சியருள்வார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சுசீந்திரம் எனும் திருத்தலத்திலும், நாமக்கல் எனும் திருத்தலத்திலும் பெரிய திருவுருவத்தில் மக்களைத் தம் மூர்த்தி கரத்தால் கவர்ந்திழுக்கும் வண்ணம் காட்சியளிக்கிறார். *(சுசீந்திரம் ஆஞ்சநேயர் சிலை 18 அடி உயரம்).*

பொதுவாக, இராமருக்கு முடிசூட்டு விழாவில் - பட்டாபி டேகக் கோலத்தில், இராமர் இலக்குவன் சீதை பரதன் சத்துருக் கணன் ஆகியோருடன், கூப்பிய கரங்களோடு மண்டியிட்ட கோலத்தில் அனுமார் காட்சி தருதலைப் பல வைணவத் திருத்தலங்களில் தொகுப்புச் சிற்பமாக அமைத்துள்ளனர். அனுமாரைச் 'சிறிய திருவடி' என வைணவ சமயம் அழைத்து மகிழும்.

அ) முக்கண்களும் பத்துக் கைகளுமுடைய அனுமார் சிலை

தெய்வாமிசம் மிகும் வகையில், மூன்று கண்களும் பத்துக் கைகளும் கொண்ட அபூர்வமான சிலைகளும் உள்ளன. மயிலாடு

துறை - தரங்கம்பாடி வழியில், திருக்கடவூருக்கு அருகிலுள்ள அனந்த மங்கலம் எனும் வைணவத் தலம் உள்ளது; அங்குச் செப்புப் படிமத்தில், 'திரிநேத்திர - தசபுய அனுமான்' எனும் திருப்பெயருடன் அனுமார் சிலை வழிபாட்டில் உள்ளது; இந்த வியத்தகு திருமேனியைக் கண்டு நலம்பெறப் பலராகத் திரள்கின்றனர்.

இவ்வாறு முக்கண்ணும் பத்துக் கையுமுடைய அனுமார், சிவவிஷ்ணு வடிவமாகப் பேராற்றலும் பெருங்கருணையுமுடையவர் என்பது சமய நம்பிக்கை. இந்தத் திருமேனியமைப்பில் சிவபிரான் கூறுகளாக நெற்றிக்கண், மான், மழு ஆகியவற்றையும், திருமால் அமிசமாகச் சங்கு சக்கரம் வில் வாள் ஆகியவற்றையும் கண்டு வழிபடலாம். அனுமாரின் பேராற்றலைப் புலப்படுத்தும் வகையில், இந்திரனின் வச்சிரப்படை, காலனுடைய பாசம், சூலம் ஆகியவற்றையும் காணலாம். அனுமாரிடம் தெய்வங்கள் பலவற்றின் வியத்தகு பேராற்றல்களும் பொருந்தியுள்ளன என்பதை இக்காட்சி புலப்படுத்தும்.

அயோத்தியிலுள்ள பரதனை முன்கூட்டிக் காப்பாற்ற, இராமன் ஆணைப்படி தகவல் கொடுக்க அனுமார் புறப்படச் சித்தமான நிலையில் இவ்வாறு திருக்கோலம் கொள்ள வேண்டியவரானார் என்று ஆசார்ய பெருமக்கள் விளக்கம் கூறுவர்.

ஆ) பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலைகள்

ஆஞ்சநேயரின் சிறப்புத் திருவுருவமாக ஐந்து திருமுகங்களுடன் கூடிய ஆஞ்சநேயர் விளங்குகிறார். பாதுகாப்புக் கடவுளாகிய திருமாலுக்கேற்ற வகையில், அடியவர்கள் பலருக்கும் பாதுகாப்பாக அமைந்து திருவருள் வழங்கும் கோலமே இஃதென்பர்.

அனுமாருக்கு அமைந்த திருமுகங்களாக, 1. வராகமுகம், 2. நரசிம்ம முகம், 3. ஆஞ்சநேயர் முகமாகிய இயற்கை முகம், 4. கருட முகம், 5. ஹயக்ரீவரின் குதிரை முகம் அமைந்திருக்கும். பாதாளத்தில் ஆண்டுகொண்டிருந்த மயில் ராவணன் ஐந்து வண்டுகளிடம் உயிர்நிலை கொண்டிருந்த கொடியவன்; பிரம நியதிப்படி அவனை அழிக்க இவ்வாறு ஐந்து முகங்களும் பத்துக் கைகளும் பதினைந்து கண்களுமுடைய பஞ்சமுக ஆஞ்சநேயர் கோலம் தோற்றங் கொண்டது என்று புராணம் கூறும். ஐம்பூதத் தத்துவங்களைப் பிரதிபலிப்பதாகத் தத்துவம் கூறுவர்.

சிலை வடிவத்தை உருவாக்குகையில், ஆஞ்சநேயர் கிழக்கு முகம், வராக முகம் வடக்கு முகம், கருடாழ்வார் முகம் மேற்கு முகம், நரசிம்மர் முகம் தெற்கு முகம், ஹயக்கிரீவர் முகம் விண்நோக்கிய மேல் முகம் என அமைக்க வேண்டுவது சிற்ப நூல் விதியாகும். மேலும், சாந்த வடிவினராகிய ஆஞ்சநேயர் நெற்றிக் கண்ணுடன் உருத்திராம்சமாக விளங்கிக் கொண்டிருப்பார் என்பதும் மனங் கொள்ளத்தக்க குறிப்பாகும்.

பஞ்ச முக ஆஞ்சநேயர் திருவுருவத்தைத் திருப்பத்தூர், சுசீந்திரம், நாமக்கல், தூத்துக்குடி, ஈரோடு, திருக்கடவூர் முதலிய ஊர்க் கோயில் களில் காணலாம்; மக்கள் தம் பக்தியார்வத்திற்கேற்ப வழிபாடு புரிகின்றனர். மேலும், கும்பகோணம் - சக்கரபாணி திருக் கோயில் பிராகாரம், சேலம் கந்தாசிரமம், காஞ்சிபுரம் - ஏகாம்பரநாதர் ஆலய முன்மண்டபத் தூண், நங்கநல்லூர் இராஜராஜேசுவரி ஆலயம், பரமக் குடி சௌராஷ்டிர மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள கோயில், வடகுடி பஞ்சமுகி - மந்திராலயம் *(அருகில்)*, பஞ்சமுக ஆஞ்சநேயர் திருவுருவங் காணலாம்.

இவ்வாறு சில திருத்தலங்களில் பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலைகள் காணப்படினும், "திருவள்ளூர் பெரியகுப்பம் சிற்றூர் ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்நேய நகரில் *(தேவி மீனாட்சி நகர் என்பது பழைய பெயர்)* காணப்படும் ஆஞ்சநேயர் மிகச் சிறப்பு வாய்ந்தது; இது சுமார் 32 அடி உயரத்தில், பச்சைக் கல்லில் இந்த விசுவரூப பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலை..."[1] என வருங்குறிப்பு நோக்கத் தக்கது.

கோவை - மருதமலை செல்லும் வழியில் உள்ளது பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில்; அங்கும் இந்த வியத்தகு சிலையைக் கண்டு வழிபடலாம். சிற்பக் கலை நோக்கில் மேற்கண்ட ஆஞ்சநேயர் சிலைகளுக்குள் - சிற்சில நுணுக்கங்களில் - மாற்றங்கள் உள்ளன.

இ) அனுமார் சிலைகளில், சிற்பியரின் கலைத்திறன் - சிறப்புப் பார்வை

சிற்பம் உருவாக்குகையில் அனுமாருக்கு ஒரு முகம், இரு கைகள், இரு கால்கள், ஒரு வால் என அமைத்திடுவது சிரமமான செயலன்று. முக்கண்களும் பத்துக் கைகளும் கொண்ட அனுமார் சிலைகளையும், பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலைகளையும் உருவாக்கு வது, கலையனுபவமிக்க சிற்பியரால்தான் இயலும். கற்பனை வளத்துடனும் ஆன்மநல ஈடுபாட்டுடனும் தம்மை ஈடுபடுத்திக்

1. ஒளிவிடும் ஞானச்சுடர் *(திங்களிதழ்)*, டிசம்பர், 1998, பக். 33.

கொண்டால் தான் இயலும். பஞ்சமுக ஆஞ்சநேயரை உருவாக்கு கையில், ஐந்து வெவ்வேறான திருமுகங்களையும், வெவ்வேறு படைகள் கொண்ட திருக்கரங்களையும் அமைப்பது மிக மிகக் கடினம்; வெளிநாட்டவர்கள் இத்தகைய சிலைகளைக் கண்டு தென்னிந்தியச் சிற்பக் கலைத் திறனை வியந்து போற்றுகின்றனர்.

இவ்வாறான வியத்தகு சிலைகளுடன், வீணை ஏந்திய அனுமார் சிலையையும் சிற்பியர் அமைத்துள்ளனர் என்பதையும் நினைத்து மேலும் வியப்படையலாம். மகேந்திரன் கற்சிலைகளை யும் உற்சவர்களையும் காண வேண்டுமெனில், கும்பகோணம் இராமசாமி திருக்கோயிலில் நிதானமாகக் கண்டுகளிக்கலாம். இங்குக் கைங்கரியத்திற்கு எடுத்துக்காட்டான அனுமாரின் கைகளில் வீணையும், இராமாயண பாராயணச் சித்தமும் பொருந்தியுள்ள பக்தித் திருவுரு வத்தினைக் காணலாம்.

இராமாயணக் காப்பியத்தில், சஞ்சீவி மலையைக் கொணர்ந்து, இறந்து கிடந்த இலக்குவன் உள்ளிட்ட பலரைப் போர்க் களத்தில் உயிர்ப்பித்த நிகழ்ச்சி மிகச் சிறப்புடையது. இதனை நினைவிற் கொள்ளும் வகையில், வலக்கையில் சஞ்சீவி மலையைக் கொண் டுள்ள நிலையில் இடக்காலை முன்வைத்தும் வலக்காலைப் பின்னே ஊன்றி நடக்கும் திருக்கோலத்தில் 'சிரஞ்சீவி' அனுமன் - செப்புத் திருமேனி உள்ளது; இதனைச் சென்னை மேற்கு மாம்பலம் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலில், கோதண்டராமர் சன்னிதிக்கு எதிர்ப்புறத்தே சஞ்சீவி பர்வத ஆஞ்சநேயர் சந்நிதியில் கண்டு களிக்கலாம்.

சென்னைக்கு அருகே நங்கநல்லூரில் 32 அடி உயரமுள்ள விசுவரூப ஆஞ்சநேயர் சிலை மிக வியக்கத்தக்க சிற்பப் படைப் பாகும். ஆழ்வார்ப் பேட்டையில் அமைந்துள்ள சிறப்புமிகு ஆஞ்ச நேயரும், திருவள்ளூர் - காக்களூரிலுள்ள ஆஞ்சநேயர் சிலையும், திருப்பதியில் தனிவழிபாட்டுச் சிறப்புடன் அமைந்துள்ள ஆஞ்ச நேயர் சிலையும் வரப்பிரசாதிகளாகத் திகழ்கின்றனர்.

சிற்பப் படைப்பில், இந்திய நாட்டிலேயேயல்லாமல் வெளி நாடுகளிலும் அனுமார் வணங்கப்படுகிறார். ''எகிப்திய தெய்வங் களுள் 'தோத்' என்றழைக்கப்படும் தெய்வம், மனிதக் குரங்கும் இவ்வநும வடிவிலேயே திகழ்வதும் ஒப்பு நோக்கத்தக்கதாகும்''[1] எனப் ப. கோபாலன் எழுதியுள்ள குறிப்பு நோக்கத்தக்கது.

1. இ.ப.த. மன்றம், பதினேழாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை - 3, (1985), பக். 223.

ஈ) பாஸ்கர க்ஷேத்திர ஆஞ்சநேயர் எனும் பெருஞ்சிறப்பு அனுமார் கோயில், கும்பகோணம் மேலக்காவேரிப் பகுதியில் காவேரித் தென் கரையில் உள்ளது. சனீசுவர பகவான் பேராற்றல் உடையவர் என்பது பலரும் அறிந்த செய்தி. ''சனிபகவான் தன்னைத் துன்புறுத்திய வாயு பகவானின் செயல்களால் கோபம் கொண்டு தனது கைநகத்தால் அக்கினி பாணம் விட்டு அழிக்க முயன்றார். அப்போது கோபம் கொண்ட (வாயு புத்திரனாகிய) அனுமான் சனீசுவர பகவானை இழுத்துத் தம் இடக்காலின் அடியில் மிதித்துக் கொண்டார். மிதித்த மறுகணமே பாதாள லோகம் வரை சென்று விட்டார்.

இந்தக் கோலத்திலேயே தற்போதும் ஆஞ்சநேயர் சனீசுவர பகவானைத் தம் இடக்காலால் மிதித்தபடியே வலக்கையை உயர்த்தி இடக்கையை இடத் தொடையில் வைத்துப் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். சிவ, வைணவக் கோயில்கள் அனைத்திலும் சுவாமி அம்பாளுக்கு உலோகத்தாலான திருவாசிகளை மட்டுமே காணலாம். ஆனால், இத்தலத்தில் கருங்கல்லால் ஆன திருவாசியையே காண முடிகிறது''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

உ) சோளிங்கபுரம் ஆஞ்சநேயர்

108 திவ்ய தேசங்களுள் ஒன்றான திருக்கடிகை எனவும் வழங்கும் இத்தலத்தில், சிறிய மலையில் ஆஞ்சநேயர் யோக நிலையில் காட்சியளிக்கிறார். இரு திருக்கைகளில் சங்கு சக்கரம் ஆகியவையும், மற்ற இரு திருக்கைகளுள் ஒன்றில் செப மாலையும் மற்றொன்றில் எண்ணிக்கைப் பாவனையும் கொண்டு காட்சியளிப்பது அற்புதப் படைப்பு.

18. சக்கரத்தாழ்வார் சிலை

திருமாலின் திருக்கைகளுள் ஏந்தியுள்ள படைக்கலங்களுள் சிறப்பானவை சங்கும் சக்கரமும் ஆகும்; அவற்றுள்ளும் மிகச் சிறப்புடைய அங்கமாகவும் ஆழ்வாராகவும் போற்றப்படும் நிலையிலுள்ளது சுதர்சனம் எனும் சக்கரமாகும். மேலும், திருமாலின் பஞ்சாயுதங்களாகிய சங்கு சக்கரம் வில் வாள் கதை என்பவற்றுள் சக்கராயுதமே முதன்மைச் சிறப்புடையது; இதனைக் குறிக்கும் வகையில் நம்மாழ்வார், திருவாய் மொழியில்,

1. கோபுர தரிசனம், ஜூலை, 2000, பக். 63.

"ஆழிஎழச் சங்கும் வில்லும் எழத்திசை
வாழிஎழத் தண்டும் வாளும் எழஅண்டம்
மோழை எழ முடிபாதம்எழ - அப்பன்
ஊழி எழஉலகம் கொண்ட வாறே"

எனப் பாடிச் சென்றுள்ளார். திருமாலின் திருவுருவ அமைப்பில், பாஞ்சசன்னியம் என்னும் சங்கினை மேல் இடத்திருக்கையிலும், ஸ்ரீசுதர்சன சக்கரம் என்னும் ஆழியை மேல் வடத்திருக்கையிலும், சார்ங்கம் என்னும் வில்லினைக் கீழ் இடத் திருக்கையிலும், கௌமோதகி என்னும் கதாயுதத்தினை வலக் கீழ்த் திருக்கையிலும், நந்தகம் என்னும் வாளினைத் திருவரையிலும் அமைந்திருக்கக் காணலாம். எனினும், சக்கராயுதமே திருமாலுருவத்தில் நெடுக்கிலும் பிரயோக நிலையிலுமாகத் தந்துள்ளதைச் சிற்பங்களில் காணலாம். அத்தகைய சக்கரத்தை ஆழ்வாராகப் போற்றிச் சிலை வடிவில் கொணர்கையில், பிரயோக அமைப்பில் கொள்ளாமல் நின்ற கோலத்தில் அமைப்பதே முறையாகும். பல திருமால் திவ்ய தேசங்களில் தனிச் சன்னிதியே அமைக்கப்பட்டுள்ளது.

எல்லாம் வல்ல எம்பெருமானின் திருக்கையிலே அமர்ந்து, அவரது திருக்குறிப்பிற்கிணங்க அடியார்களைக் காக்கும் பொறுப்பில் செயற்படும் சுதர்சனம், ஆழ்வார்களுள் ஒருவராகவே போற்றப் படுவது மிகவும் சிந்திக்கத்தக்கது.

அடியார்களின் எதிரிகளை வதைப்பது ஒருபுறமிருக்க, அவர் களைச் சங்கடங்களிலிருந்து பாதுகாக்கச் சுதர்சனம் பயன்படுவதை, 'நீர்நிலையில் முதலையிடமிருந்து கசேந்திர ஆழ்வாரைக் காத்தது' எனும் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

திருமாலிடமிருந்து பிரிப்பின்றி ஒன்றிய சக்கரத்தாழ்வாரைப் போற்றும் வகையில், நரசிம்மாவதாரத் திருமாலை ஒரு பக்கத்திலும் சக்கரத்தாழ்வாரை மறுபக்கத்திலுமாகச் சிலை வடித்துள்ளனர்; இத்தகைய அழகுச் சிலையைத் திருவரங்கம் கோயில் ஐந்தாவது சுற்றில் எழுந்தருளியிருக்கக் காணலாம்.

கும்பகோணம் சக்கரபாணி கோயிலில் பல அழகிய சிற்பங்கள் உள்ளன; அவற்றுள் சக்கரத்தாழ்வாரும் ஒரு சிலை வடிவில் அருள் பாலிக்கிறார்; அவரை வருணிக்கையில், "வட்டமான சக்கரத்தின் நடுவில் அறுகோணத்தில் சாய்ந்து கொண்டு கீழே பதும பீடத்தின் மேல், எட்டுக் கரங்கள் கொண்டு சேவை சாதிக்கிறார்..... எட்டுக்

கரங்களும் திகிரி, உலக்கை, அங்குசம், தாமரை, சங்கு, வில், அம்பு, பாசம், கதை ஆகிய ஆயுதங்களை ஏந்திக் கொண்டிருக்கின்றன. கோரைப் பற்கள் இருபுறமும், ஜுவாலை வீசும் திருமுடியும், மூன்று கண்களும் கொண்டு உக்கிர மூர்த்தியாய் விளங்குகிறார்..... பக்கத்தில் அபய வரத முத்திரைகளுடன் காட்சியளிக்கிறாள் சுதர்சன வல்லி. கருப்பக் கிருகத்திலே சூரியன், பிரமன், அக்கினி முதலி யோர் எழுந்தருளியுள்ளனர். சுவாமிக்கு வில்வ அர்ச்சனை செய் வார்கள்'' என்று ராதா கிருஷ்ணப் பிள்ளை என எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது. சிற்பக் கலைக்கு இடங்கொடுக்கும் வகையில் புராணப் பின்னணியாகச் சக்கரத்தை ஆழ்வாராக ஆக்கியதோடன்றி, அவருக்குத் தேவியாகச் சுதர்சன வல்லியையும் சேர்த்துள்ளது ஸ்ரீ வைஷ்ணவ உலகம்.

பாஞ்சசன்யம் எனும் சங்கும் ஆழ்வாராகப் போற்றப்படினும் சக்கரத்தாழ்வார் போன்ற மிகுந்த சிறப்பினை வைணவர்கள் வழங்குவதில்லை.

சுதர்சன ஆழ்வாருக்கு முகம் கை கால் முதலியவற்றைப் பொருத்திப் பார்க்கையில், எட்டுக் கைகளும் படைக் கலங்களும் அமைப்பது ஒருவகைச் சிற்ப மரபாகக் கொள்வர்; பரிணாமவுலகில் தெய்வ நலக் கற்பனை விரியவே, அவருக்குச் சிலையமைப்பில் பதினாறு கைகளும் ஒவ்வொரு கரத்திலும் படையை அமைப்பதும் உண்டு. அந்நிலையில் சோடசப் படைக்கலங்களாகத் - 1. திகிரி, 2. மழு, ஈட்டி, 4. தண்டு, 5. அங்குசம், 6. அக்கினி *(ரூபாயுதம்)*, 7. வாள், 8. வேல், 9. சங்கம், 10. வில், 11. பாசம், 12. கலப்பை, 13. வச்சிராயுதம், 14. சுதை, 15. உலக்கை, 16. திரிசூலம் - அமைக்கப் படும்.

மிக அபூர்வமாகச் சில திருத்தலங்களில் பாஞ்சசன்யம் எனும் சங்கமாகிய ஆழ்வாருக்கு தனிச்சிலைகள் அமைப்பது உண்டு. எடுத்துக்காட்டாகத் தில்லைக் கோவிந்தராசர் ஆலயத்தில், தென் கிழக்கே வடக்கு நோக்கிய சன்னிதியில் சக்கரத்தாழ்வார் அருகே பாஞ்சசன்ய ஆழ்வாரையும் சிலை வடிவில் கண்டு வழிபடலாம். மேலும், வைணவ திருமோகூரில், கருவறையில் காணலாகும் பெரிய பிராட்டி, பூதேவி உடனாய காளமேகப் பெருமாள் திரு வுருவமும், கோவிலை வலம் வருகையில் காணலாகும் சக்கரத் தாழ்வார் மூலவர் கல்திருமேனியும், உற்சவர் செப்புத் திருமேனியும் *(16 படைகளுடன் கூடிய 16 திருக்கைகள் கொண்ட உருவம்)* சமய

நோக்கிலும் சிற்பக் கலைத் திறனிலும் அற்புதமானவை. சக்கரத் தாழ்வாரின் பின்புறம் யோக நரசிம்மரையும் கண்டு வழிபடலாம்.

19. கருடாழ்வார் - சிறப்புக் குறிப்பு

வைணவ திவ்ய தேசங்களில் பெரிய திருவடியாகிய கருடாழ் வாருக்கெனத் தனிச் சிறப்பு உண்டு. வைணவத் திருவிழாக்களுள் கருடசேவைக்கென மரத்தாலும், வெள்ளியாலும், சுதையாலும், பொன் தகடு போர்த்திய அமைப்பாலும் கருடாழ்வார் சிலைகள் அமைக்கப் பெறும்; சுதைக் கருடாழ்வாரைத் தவிர ஏனையவை வாகனங்களாகப் பயன்படுவதைப் பலரும் அறிவர். நாச்சியார் கோயிலில் கல் கருடனும் திருவிழாவிற்கு வியப்பைத் தரும் வகையில் அலங்காரத்துடன் புறப்பாடு புரிவது உண்டு. ஆனால் எல்லாச் சிலைகளிலும் கருடாழ்வார் இரு திருக்கைகளுடன் காட்சியளிப்பார்.

வாகன நோக்கின்றித் திவ்ய தேசங்களில் காணலாகும் கருடாழ்வார் சிலைகளுக்குள், திருவெள்ளியங்குடி எனும் திவ்ய தேசத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட கருடாழ்வார் கற்சிலை நான்கு திருக்கைகளுடன் காணப்படுவது வியப்பிற்குரியது. ''இத்தலத்தில் கருடாழ்வார் நான்கு திருக்கரங்களுடன் கையில் சங்கு சக்கரத்துடன் காட்சியளிப்பது வேறு எத்திருத்தலத்திலும் காணக் கிடைக்காத காட்சி. சங்கு சக்கரங்களைக் கொண்டவராய்த் திகழும் கருடாழ் வாரும் திருமாலின் சக்தியே தன்னிடம் அமைந்த வரப்பிரசாதியாகத் திகழ்கிறார்''[1] என்று சிம்ம கிருபா குறிப்பிடுவது மனங்கொள்ளத் தக்கது.

20. ஆழ்வார்களின் சிலைகளும் சிறப்பும்

சுவாமித்துவம், ஞானம், திரு, சௌசீல்யம், சௌந்தர்ம், சௌலப்யம் முதலிய திருமாலின் கலியாண குணங்களில் ஆழ்ந்து கைங்கரியம் புரியும் அடியவர்களே ஆழ்வார்கள். வைணவ உலகத்தில் திருமாலின் அமிசங்களாக அவதரித்தவர்களே ஆழ்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆதலால், திருமால் திருத்தலங்களாகிய திவ்ய தேசங்களில் நிலைபெறச் செய்துள்ள ஆழ்வார் சிலை களுக்குப் பெருமதிப்பும் வழிபாடும் அமைந்துள்ளதில் வியப் பில்லை. அப்படியான சிறப்பிற்கு, ஆழ்வார்கள் திருமாலின் கூறுகளாக எப்படிப் போற்றப்படுகிறார்கள் எனின்,

---

1. தெய்வம் பேசுகிறது *(திங்களிதழ்)*, செப். 2002, பக். 73.

1. ஆண்டாள்	-	பூமிதேவியின் அமிசம்
2. பெரியாழ்வார்	-	கருடாழ்வாரின் அமிசம்
3. நம்மாழ்வார்	-	விஷ்வக்சேனரின் அமிசம்
4. பேயாழ்வார்	-	'நந்தகம்' எனும் *(திருமாலின் திருக்கையிலுள்ள)* வாளின் அமிசம்
5. பூதத்தாழ்வார்	-	'கௌமோதகீ' எனும் *(திருமாலின் திருக்கையிலுள்ள)* கதாயுதத்தின் அமிசம்
6. குலசேகராழ்வார்	-	திருமாலின் 'கௌஸ்துபம்' அமிசம்
7. மதுரகவியாழ்வார்	-	திருமாலின் குமுதரி அமிசம்
8. திருப்பாணாழ்வார்	-	திருமாலின் 'ஸ்ரீவத்சம்' எனும் மச்சத்தின் அமிசம்
9. தொண்டரடிப் பொடியாழ்வார்	-	திருமாலின் 'வனமாலை'யின் அமிசம்
10. பொய்கையாழ்வார்	-	திருமாலின் 'பாஞ்ச சன்னியம்' என்பதன் அமிசம்
11. திருமங்கையாழ்வார்	-	திருமாலின் 'சார்ங்கம்' எனும் வில்லின் அமிசம்
12. திருமழிசையாழ்வார்	-	சுதர்சனம் எனும் சக்கரத்தாழ்வாரின் அம்சம்

இத்தகைய அணுகுமுறை ஒருபுறமிருக்க, இராமாவதாரத் தொடர்பில் இலக்குவனும் ஓர் அவதாரமாக அவன் 'ஆதிசேட அவதாரம்' என்பர்; உடன் பிறப்புக்களுள் எஞ்சிய பரதனையும் சத்துருக்கனையும் கூடப் பரதாழ்வார் சத்துருக்கன ஆழ்வார் எனவும் கூறுவர். பகைப்புலத்திலிருந்து - இராவணனிடமிருந்து - நல்லறம் காக்கும் நோக்கில் இராமனிடம் அடைக்கலமாக வந்த வீடணனை யும் 'விபீஷ்ணாழ்வார்' என்றும் போற்றிக் கொண்டாடுவர்.

இராமாயணத்தைப் பக்திக் கைங்கரியமாக எழுதியருளிய கம்பரும் 'கம்ப நாட்டாழ்வார்' எனப் போற்றப்படுகிறார். இத்தகைய ஆழ்வார்களுக்கெல்லாம் சிலைகள் எடுக்கப்பட்டுத் தக்கவண்ணம் வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

திருமாலின் 'சுதர்சனம்' எனும் ஆழிக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஆதலின் சக்கரத்தாழ்வார்' என்ற தலைப்பில் தனிச் சிறப்புடன் கட்டுரைக்கப்படும்.

தமிழகத்தில் சிறு தெய்வக் கோயில்களும் வழிபாட்டிலுள்ள சிலைகளும்

தமிழ் நாட்டில் முல்லை நில மாகிய காடுறை உலகத்தில் திருமாலும், குறிஞ்சி நிலமாகிய மலையும் மலை சார்ந்த நிலப் பகுதியில் சேயோனாகிய முருகனும், பாலை நிலத்தில் கொற்றவை யும், வயல் சார்ந்த மருத நிலத்தில் இந்திரனும், கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் வருணனும் சிறப்பாக வழிபடப் பெற்றனர்; நுதல் விழி நாட்டத்துச் சிவனும் கண்ணனின் அண்ணனாகிய பலராமனும் தனிப் பட்ட கோயில்களில் வழிபடப் பெற்றனர். ஆனால், காலப் போக்கில் இந்திரனுக்கோ, வருணனுக்கோ, பலராமனுக்கோ தனிப்பட்ட சிறப்புடன் சிலைகளோ கோயில்களோ எடுக்கும் வழக்கம் குறைந்து கொண்டே வந்துள்ளது. அதற்குப் பதிலாகச் சிறு தெய்வங்கள் - கிராம தேவதைகள் - எண்ணிலவாகத் தோன்றலாயின. ஊர்க் காவல் தெய்வம், குல தெய்வம், வீட்டுத் தெய்வம் முதலிய பல நோக்கங்களில் சிறு தெய்வங்கள் வழிபாட்டிற்குத் தேவையாயின; வழிபாட்டு முறைகளும் வேறுபட்டன.

போரிலோ, தியாக வீரத்தாலோ உயிர் நீத்தவர்கள், இள வயதில் இறந்து பட்டவர்கள் ஆகியோரின் ஆன்மாக்கள் நற்கதியுறுவதற்காக உயிர்ப் பலி கொடுக்கும் வழக்கம் தோன்றியது. கிராம தேவதை களின் சீற்றத்தாலேயே அம்மை, சீதபேதி, கால்கை வலிப்பு, நச்சுக் காய்ச்சல் முதலிய தொற்று நோய்கள் ஏற்பட்டன என மக்கள் கருதிய தால் அந்நோய்களைத் தடுப்பதற்காகக் கிராம தேவதைகளுக்கு உயிர்ப் பலியிடும் வழக்கம் தலை தூக்கியது. ஆடு, கோழி முதலிய வற்றைப் பலியிடுவதால் ஊர் நலம் பெறுவதாக நம்பினர் எனினும், சிற்றூர்த் தெய்வங்களுள் சிலவற்றிற்கு உயிர்ப்பலி கூடாது என்பதை யும் உணர்ந்து வழிபாடு செய்து வந்துள்ளனர்.

தொன்மைக் காலச் சப்த மாதர்களுள் பிடாரியும் ஒரு தெய்வம். இந்தப் பிடாரியே பிற்காலத்தில் பல்வேறு பெயர்களில் கிராம மக்க ளால் வழிபாட்டினைப் பெற்று வந்தாள். சிறந்த வரலாற்று ஆசிரியர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், ''சப்த மாதர்களில் ஒருத்தியான இவளே (பிடாரியே) சிற்சில வேறுபாடுகளுடன் காளி, அங்கா ளம்மன், செல்லியம்மன், மாரியம்மன், திரௌபதி என்ற பல பெயர்

களுடன் வழங்கப்படுகிறாள். தென்னாட்டுப் பிடாரி என்கின்ற பட்டாரிக்கு இணையாக வடநாட்டில் துர்க்கை, காளி என்ற பெயர்களையுடைய பெண் தெய்வ வழிபாடு சிறப்புற்று விளங்கிற்று. துர்க்கை வழிபாடு தமிழகத்தில் கொற்றவை வழிபாடு என்று குறிப்பிடப்படுகிறது. கொற்றவைக்கு வீரர்கள் தலைப்பலி கொடுக்கும் வழக்கம் பல்லவர் காலச் சிற்பங்களால் அறியப்படுகிறது''[1] என்று எழுதியுள்ள குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

அறிஞர்கள் பலர் புரிந்த ஆராய்ச்சிப் புலப்பாடாகத் துர்க்கை என்பவள் போர்த் தெய்வம் என்றும், காளி அச்சமுறுத்தும் தோற்றத்தில் தீயவர்களையும் தீமையையும் நீக்க வல்ல பலிகொள் தெய்வம் என்றும் கூறுவர். ''பிற்காலக் கோயில்களில் காணப்படும் துவாரபாலகர் நிலையில், முற்காலத்தில் முன்னடியான், மதுரை வீரன் என்ற தெய்வங்கள் வழங்கப்பட்டன. கறுப்பன் என்ற தெய்வமும் ஊர்க்காவல் தெய்வங்களுள் ஒன்றாகக் கொள்ளப் பட்டது. மதுரைக்கு அருகிலுள்ள அழகர் கோயிலிலும் சபரி மலையிலுள்ள ஐயப்பன் கோயிலிலும் காணப்படும் கறுப்பன் சிலைகளே அவ்வக் கோயில்களின் கருவூலக் காவலுக்குப் பொறுப்புடையனவாக இன்றும் கருதப்படுகின்றன.

கிராம தேவதைகளின் சிலைகளைச் சிறந்த கலைச் செல்வங்கள் என்று கூற முடியாது. அவை அதிக வேலைப்பாடுகள் உடையன வல்ல. பண்டைச் சோழர் காலத்தனவாகிய கிராம தேவதைகள் சிலவற்றின் செப்புத் திருமேனிகள் கிடைத்துள்ளன. பண்டைய தமிழ் மக்கள் நடப்பட்ட கற்களையும் சூலங்களையும் கூடத் தெய்வங்களாகக் கருதினர். கிராம எல்லைக் கற்களும், மலையும், மரனும், காடும், பாம்பும், கருவிகளும் தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டன. தொழில்களிலும், நுண்கலைகளிலும் பண்டைத் தமிழர் தெய்வத் தன்மையைக் கண்டனர்''[2] என எஸ்.ஆர். பால சுப்பிரமணியம் எழுதிச் செல்வதன் அடிப்படையில் மேலும் சிறப்பான செய்திகளைக் காண்போம்.

கிராமங்களில் மாரியம்மன் கோயில்கள் கேந்திரச் சிறப்புடையவை. தமிழகத்தில் மாரியம்மன் கோயில்கள் ஊர்ப் பெயரைச் சார்த்தியும், தெருப் பெயரைச் சார்த்தியும், எப்படியோ சில காரணங்களைச் சார்த்தியும் பல பெயர்களில் பல்லாயிரக்கணக்கில்

1. சோழர் கலைப் பாணி, பாரி நிலையம், சென்னை, 1966, பக்.10
2. சோழர் கலைப்பாணி, 1966, பக். 10-11

தோன்றியுள்ளன; மக்களின் பக்தியையும் பூசைச் சடங்குகளையும் திருவிழாக்களையும் அவை பெற்று வாழ்வியல் நம்பிக்கையின் திருவிடங்களாக விளங்கி வருகின்றன. ஆனால், மாரியம்மனைக் கண்ணகியின் திருவுருவம் என்பாரும், சமதக்கினி முனிவரின் மனைவியும் பரசுராமனின் தாயுமாகிய இரேணுகா தேவியின் திருவுருவம் என்பாரும், மழைத் தெய்வமாகிய கார்த்தியாயினி *(காத்த்ாயி)* அம்மனுடைய ஒரு வகைத் திருவுருவம் என்பாருமாகப் பலர் தம் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். இஃது ஒருபுறமிருக்கச் சிற்றூர்ப்புற மக்கள் தம் அழுத்தமான நம்பிக்கையுடன் தம் முன்னோர்களின் வழியைப் பின்பற்றிக் கோயில்களில் மூலவரையும் உற்சவ மூர்த்தியையும் தம்மாலியன்ற வழக்கப்படி வழிபாடு செய்து வருகின்றனர்.

தெய்வங்களையெல்லாம் தொகுத்துச் சிந்தித்தால், மூர்த்திகரம் காரணமாகச் சிறு தெய்வங்களே மேம்பாடு கொண்டு பெருந்தெய்வங்களாகப் போற்றப்படும் நிலையினை எய்துகின்றன எனக் கூறலாம். இது பற்றிய சில விளக்கங்கள் இந்நூலில் வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளன.

எண்ணிக்கை நோக்கில் சிந்தித்தால், சிறு தெய்வங்களுள் ஆண் தெய்வங்களைவிடப் பெண் தெய்வங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

1.1 பகவதி கோயிலும் கண்ணகி கோயிலும் பற்றிய ஆய்வு

சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தில் ஆறிய *(அடக்கமான)* கற்புடையவளாக விளங்கிய கண்ணகி, மதுரைக் காண்டத்தில் சீறிய *(வீர எழுச்சியுடைய)* கற்பினளாக மாறினாள்; வழக்குரை காதையில் பாண்டியனது அவைக்குச் செல்கையில் துர்க்கையோ என வாயிற் காவலன் நினைக்குந் தோற்றத்தில் அவள் காட்சியளித்தாள்; படிப் படியே உயர்ந்து வஞ்சிக் காண்டத்தில் தெய்வக் கற்பினளாகப் - பத்தினித் தெய்வமாக மாறிய நிலையில் சேரன் செங்குட்டுவன் சேர நாட்டில் பத்தினிக் கோட்டம் அமைத்தான்; அதனில் கண்ணகிக்குச் சிலை நிறுவப்பட்டது; அந்தச் சிலை எங்கே?

கேரள நாட்டில் பகவதி கோயில்கள் பல உள்ளன. அவை தொடர்பாகப் பல செய்திகள் தெரிய வருகின்றன; அவற்றின் வாயிலாகக் கண்ணகியின் சிலை எதுவென இனங்கண்டு கொள்வது கடினம்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரியாறு புலிச் சரணாலயத்தின் அருகே மலையுச்சியில் வனப் பகுதியின் நடுவே பாழடைந்த ஒரு கோயில் மட்டுமே உள்ளது. அக் கோயிற் கருவறையில் ஒரு பீடம் மட்டுமே உள்ளது; மங்கல தேவி என்ற பெயரில் பக்தர்கள் அதனை வணங்கி வழிபடுகின்றனர்; அந்த மங்கல தேவியே கண்ணகி என்பர்.

''கேரளத்தில் தேக்கடி மலைப் பகுதியில்தான் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்ற மங்கல மடந்தைக் கோட்டம் என்று கருதுவதற்குரிய சான்றுகள் கிடைக்கின்றன. அங்கு அமைந்துள்ள கோயில் இன்று எந்தவிதப் பராமரிப்பும் இல்லாமல் பாழடைந்த நிலையில் காணப்படுகிறது''[1] என டாக்டர் எஸ். பத்மநாபன் கூறுவது சிந்திக்கத் தக்கது. மேலும், அவர், ''சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு எழுப்பப்பட்ட கோயில்தான் கொடுங்கலூர் பகவதி கோயில் என்று கூறப்படுகிறது... இன்று குறும்ப பகவதி என்று அழைக்கப்படும் கொடுங்கலூர் கோயில் சங்க காலத்திலே சேரன் செங்குட்டுவனால் எழுப்பப்பட்ட கண்ணகி கோயில்தான் என்று ஸ்ரீதரமேனன் எழுதிய திருச்சூர் மாவட்ட விவரச் சுவடி (Trichur Dist. Gazetteer) தெரிவித்திருக்கின்றது''[2] என்று கூறுவதும் ஆய்வு நோக்கில் மனங்கொள்ளத் தக்கது.

கோழிக்கோட்டிலிருந்து 45 கி.மீ. வடக்கே கோயிலாண்டி எனும் ஊர் உள்ளது. இங்குள்ள விஷாரிக் காவு கண்ணகிக்காக எழுப்பப்பட்ட கோயில் என்பர். அங்கு மலையாளம் பேசும் செட்டியார் இனத்தவர் காணப்படுகின்றனர். அவர்கள் பூம்புகாரிலிருந்து அங்குச் சென்று குடியேறியவர்கள் என்று தெரிய வருவதால் அவர்கள் நகரத்தாரின மக்கள் என்பது தெரிய வரும். இஃது ஒரு புறமிருக்க ஆற்றுக்கால் பகவதி கோயில் கண்ணகி கோயில் என்றும் கூறுகின்றனர்.

சோட்டாணிக்கரை பகவதி பற்றி 'லட்சுமி' எழுதுகையில், ''சந்நிதியில் இராஜராஜேசுவரியாக அன்னை கொலுவிருக்கிறாள். கிழக்கு நோக்கி அமர்ந்துள்ள தேவியின் விக்கிரகம் செம்பாறையால் ஆனது. சுமார் மூன்றரை அடி உயரமுள்ள தேவியின் உருவம் சுயம்புவாக எழுந்தது. காலையில் நிர்மால்ய தரிசனம் கிடைக்கும்போது முதல் நாள் அணிவித்த புஷ்ப மாலைகளை எடுத்து விடும்போது, பூரண தரிசனம் கிடைக்கும். மற்ற வேளைகளில் தங்கக் கவசத்துடன்தான் தரிசனம் கிடைக்கும்.

1,2 ஓம் சக்தி (திங்களிதழ்) பிப்ரவரி, 20-02 பக்.34,37

தேவிக்கு நான்கு கரங்கள் உள்ளன. மேல் இரண்டு கரங்களில் சங்கும் சக்கரமும் ஏந்த, மற்ற இரண்டும் வரதஹஸ்தம் அபயஹஸ்த மாக விளங்கி அருள் பாலிக்கின்றன. மாலைகளும் அணி அலங் காரங்குளும் புஷ்பங்களின் அழகுமாக அன்னை சுடர் விடுகிறாள்.

தேவியைக் காலை நேரத்தில் சரசுவதியாக வெள்ளைக் கலை உடுத்தி அலங்காரம் செய்வித்துப் பூஜிக்கிறார்கள். நண்பகல் நேரத்தில் குங்குமச் சிவப்பான ஆடையுடன் பத்திர காளியாக வழிபடு கிறார்கள். மாலையில் நீலநிற உடையுடன் தேவி துர்க்கையாகத் தரிசனம் தருகிறாள். அன்னையை இராஜராஜேசுவரியாக வணங்கி வரம் வேண்டுகிறார்கள்.

தேவியின் வலப்புறம் விஷ்ணு விக்கிரகம் கருங்கல்லால் அமைந்துள்ளது. சுமார் இரண்டடி உயரமுள்ள இந்த விக்கிரகம் அதே பீடத்தில் அமைந்துள்ளது. இரு உருவங்களையும் சேர்த்து வழிபடுகிறார்கள். 'லட்சுமி நாராயணா' என்று அழைத்துப் பூரிப் படைகிறார்கள்''[1] என்று விளக்கி எழுதியுள்ளார். இதனால், பகவதி யம்மன் விஷ்ணு துர்க்கை என்று கண்டு கொள்ள இயலும்; இந் நிலையில் பகவதியைக் கண்ணகியுடன் பொருத்திப் பார்ப்பது தெளிவாக உணரக் கூடிய நிலையில் இல்லை.

டாக்டர் எஸ். பத்மநாபன் எழுதுகையில், ''திருவனந்தபுரம் மாநகரில் மணக்காடு பகுதியிலுள்ள ஆற்றுக்கால் பகவதி கோயிலில் கண்ணகி கோயிலாகக் கருதப்படுகிறது. இக்கோயிலில் சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகள் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

..... தமிழர்களின் பத்தினித் தெய்வமான கண்ணகி வழிபாட்டி லிருந்துதான் கேரளத்தில் பகவதி வழிபாடு தோன்றியது. கண்ணகி வழிபாட்டில் பழந்தமிழர்களின் கொற்றவை வழிபாடு, இந்து சமயத் தாரின் காளி வழிபாடு, சமணர்களின் பத்மாவதி வழிபாடு, பௌத்தர் களின் தாராதேவி வழிபாடு ஆகியவை அனைத்தும் இணைந்து பகவதி வழிபாடாக உருவாயிற்று என்று தமிழ் இலக்கியத்தில் 'தாய்த் தெய்வ வழிபாடு' என்ற ஆய்வு நூலில் பி.எல். சாமி அவர்கள் குறிப்பிடுகிறார்''[2] என்று கூறும் ஆய்வுக் கருத்து மிகப் பொருத்த மாகத் தோன்றுகிறது.

---

1. தெய்வம் பேசுகிறது *(திங்களிதழ்)* நவம்பர், 2002, பக். 52
2. ஓம் சக்தி *(திங்களிதழ்)*, பிப்ரவரி, 2002, பக். 37.

மேலும், தமிழ்நாட்டின் மாரியம்மன் வழிபாடு, துர்க்கை அம்மன் வழிபாடு எல்லாம் கண்ணகி வழிபாட்டின் பின்னரே தோன்றியது என்பர் டாக்டர் மு. வரதராசனார்.

சென்னையை அடுத்த திருவொற்றியூர் சிவன் கோயிலில் வட்டப்பாறையம்மன் சன்னிதி உள்ளது. அந்த அம்மன், கண்ணகி யுடன் சார்த்திப் போற்றப்படுதலை அவ்வூர் மக்கள் கூற்றால் அறிந்து கொள்ளலாம்.

சிலை நோக்கில் ஆராய முற்படின், மானுடப் பெண்ணாகத் தோன்றிய கண்ணகி, இரு கைகளுடன்தான் வாழ்ந்து, பிறகு விண்ணவர் அழைக்க விண்ணுலகு சென்றுள்ளாள். அப்படியிருக்கப் படைக் கலன்கள் தாங்கிய எட்டு கைகளுடன் முடியணிந்த திருக்கோலத்தில் கொடுங்கல்லூர் பகவதியாகிய தெய்வமே கண்ணகி என்பது எப்படிப் பொருந்தும் என்று யாரும் வினவலாம்; ஆராய்தற்குரியது.

2. சிற்பக் கலைப் படைப்பில் சங்க நிதியும் பதுமநிதியும்

தமிழர் வாழ்வியலில் சங்கு, குழந்தைப் பருவத்தில் பாலூட்டப் பயன்படும் கருவியாகவும், மன்னர்களுக்கு வெற்றியறிவிக்கும் ஒலிக்கருவியாகவும் இருப்பதேயல்லாமல், வாழ்வின் இறுதியில் பிறர்க்கு அறிவிக்கும் கருவியாகவும் பயன்பட்டு வருகிறது. நகரத்தார் சமூகத்தில் திருமணக் காலத்திலும் மங்கலவொலியாகச் சங்கு முழங்குவர்.

பதுமம் என்பது தாமரை; அயனும், கலைமகளும், திரு மகளும் வீற்றிருக்கும் ஆசனமாகப் பயன்படுவது தாமரை மலராகும். எனவே, சங்கினைப் போலத் தாமரைக்கும் தெய்வ நல ஏற்றம் உண்டு.

பொருள் வளம் மிகுக்கின்ற நிதியங்களாகச் சங்கநிதியும் பதும நிதியும் இந்து மதப் புராணத்தில் போற்றப்படுகின்றன. அவற்றிற் கும் சிற்பத்தில் இடந்தந்து திருவுருவங்கள் செய்து தெய்வங்களாகச் சில இடங்களில் நிறுவியுள்ளனர்.

சந்தானாசாரியருள் ஒருவராகப் போற்றப்ப்டும் மறைஞான சம்பந்தர் வாழ்விலே தொடர்புடைய திருக்களாஞ் செடியுடையார் கோயில், சிதம்பரத்தின் மேற்கெல்லையில் உள்ளது. நீண்ட நெடிய பழமையுடைய இக்கோயிலில், கஜலட்சுமி, இரத்தின கணபதி, தட்சணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன், துர்க்கை, பிரம்ம

சண்டேசுவரர், பிருஹன் நாயகி, நாகர், வில்லேந்திய வேலன், போக சக்தி, துவார பாலகர் முதலிய திருவுருவங்கள் சூழ்ந்த தெய்வ நலச் சூழல் உள்ளது. இங்கு உள்ளே செல்கின்ற போது நிதித் தெய்வங்களாகிய சங்கநிதி, பதுமநிதி இரண்டு பக்கங்களிலும் எழுந் தருளச் செய்துள்ளனர்.

தத்துவ நோக்கில் சிந்திக்கையில், சங்கு ஒலியெழுப்பும் கருவி யாக நாத சக்தியின் அடையாளமென்றும், பதுமமாகிய தாமரை ஒளி நலச்சிறப்புடன் விந்து சக்தியின் அடையாளமென்றும், ஆகவே நாத - விந்து ஆற்றலே பெருநிதியம் என்று நினைவிற் கொள்ளுமாறு சங்க நிதியையும் பதுமநிதியையும் அருளாளர்கள் புராண அணுகுமுறையில் படைத்துள்ளனரோ என நினைக்கத் தோன்றும்.

3. ஊர்க் காவல் தெய்வங்கள் - சிற்பப் படைப்புகள்

மக்களின் நம்பிக்கைக்கேற்ப ஊர்க்காவல் தெய்வங்கள் ஊரின் எல்லைகளில் கோயிலுக்குள் வைத்து வழிபடப்படுகின்றன. அவ் வாறான தெய்வங்கள் கருங்கற் சிலைகளாகவும் சுதை வடிவங் களாகவும், திருவிழா நோக்கில் செப்புத் திருமேனிகளாகவும் மரச் சிலைகளாகவும் அமைந்திருக்கக் காணலாம்.

சிதம்பரத்தைப் பொறுத்த வரையில் தெய்வங்கள் - பிரமராயர், தில்லைக் காளி காவல் தெய்வங்களாகவும், பட்டுக் கோட்டையில் நாட்டியம்மனும் ஐயனாரும் காவல் தெய்வங்களாகவும் வழிபாட்டில் உள்ளன.

இவ்வாறே பல திருத்தலங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்கள் உள்ளன. எனினும், பொதுவாக எல்லையம்மன், அங்காளம்மன், மாரியம்மன், ஐயனார், கருப்பன், சுடலை மாடன், முனீசுவரன் போன்ற தெய்வங்கள் கிராம தேவதைகளாகவும், அதே வேளையில் ஊர்க்காவல் தெய்வங்களாகவும் வழிபடப்படுகின்றன. சில தெய்வங்களுக்குப் புராணப் பின்னணியும் உண்டு. எடுத்துக் காட்டாகச் சில செய்திகளைக் காணலாம்.

பொதுவாக ஊர்களின் எல்லைப் புறத்தில்தான் மயானங்கள் அமைந்திருக்கும். குமரி மாவட்டத்தில் பெரும்பாலான ஊர்களில் காணலாகும் சிறு கோயில்கள் சுடலை மாடன் எனும் தெய்வத் திற்குக் கட்டுப்பட்டவையாகக் கூறுவர். இத்தெய்வம் பற்றி டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன், ''இறந்தவர்களின் உடலை எரிக்கும் சுடலையில் ஆடும் சிவனது ஓர் அமிசமே இத்தெய்வம் எனக் கருதப்படுகிறது.

சுடலை மாடனுக்குக் கட்டப்பட்ட கோயில்கள் மிக்கவாறும் நீள்சதுர வடிவமான பீடத்தையும், அதன் மேல் முக்கோணமாக கட்டட அமைப்பினையும் கொண்டவையாகும். சில இடங்களில் தூண் போன்ற அமைப்புடைய கருங்கல்லில் இறைவனது வடிவத் தினைச் செதுக்கி, அதனைத் தனியாகவோ பீடமொன்றிலோ நிறுவி வழிபாடு நடத்தப்படுகிறது. இவையன்றிச் சில தனிக் கோயில் களில் சுடலை மாடனது கல் திருவுருவங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் கையினில் வாளினைக் கொண்ட வீரனைப் போன்ற ஓர் உருவம் இடம் பெற்றுள்ளதேயன்றிச் சிவனது திருவுருவ அமைப்புகள் எதுவும் காணப்படவில்லை. பெரும்பாலான கோயில்களில் இக் கிராமத் தெய்வத்திற்கு ஈட்டி அல்லது அரிவாள் ஆயுதமாக வைக்கப் பட்டுள்ளது''[1] என எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

3.1. ஐயனார் கோயிலில் காணலாகும் சிலைகள்

சிற்றூர்ப் புறங்களில் காவல் தெய்வமாகப் போற்றப்படும் ஐயனார் கோயில்கள், தமிழ் நாடெங்கும் பல இடங்களில் காணப்படு கின்றன; எனினும், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பலவாகக் காணப்படுகின்றன. நகரத்தார் உள்ளிட்ட பல இனத்தவரும் ஐயனார் கோயில்களைக் கட்டவும், திருவிழாக்களை நடத்தவும் பல உதவிகள் செய்து வருகின்றனர்.

கோயிற் கருவறையில் பெரும்பாலும் சுதைச் சிற்பமாகவே ஐயனார் சிலைகள் உள்ளன; சில இடங்களில் கல்லாலான சிலை களும் உள்ளன. ஐயனார் திருவுருவத்திற்கும் முன்னர், பெரிய அளவிலான யானைகளும் குதிரைகளும் வீரர்களுமாகச் சுதை யமைப்பில் செய்யப்பட்ட நிறம் பூசப்பட்ட நிலையில் காட்சியளிப் பதைக் காணலாம். அவற்றுக்கு அருகே, கோயில் வளாகத்தில், சுட்ட செம்மண் குதிரைச் சிலைகளும் பலவாக வைக்கப்பட் டுள்ளதைக் காணலாம்.

ஐயனார் கோயில்களில் 'புரவி எடுப்பது' எனும் நேர்த்திக் கடன் மக்கள் பலரால் செய்யப்படுதலை இன்றும் காணலாம். புரவி யெடுப்பது எப்படியெனின், களிமண்ணில் பெரியவும் சிறியவு மான குதிரை உருவங்களைச் செய்து, சூளையிலிட்டு, அவ்வுருவங் களை அலங்கரித்துக் கிராமத்தின் பெருஞ்சிறப்புமிகு கோயிலில் தொடங்கிக் கிராமத்து எல்லையில் வீற்றிருக்கும் ஐயனார் கோவில்

1. கோயிலும் இறை வழிபாடும், கழகப் பதிப்பு, பக். 84-85.

வரைக் கிராமத் தெருக்கள் வழியே ஊர்வலமாக எடுத்துச் சென்று, ஐயனார் கோயிலில் பக்தியார்வத்துடன் குதிரைச் சிலையை ஒப்படைப் பதாகும். இந்தச் சமயங்களில் ஆடு பலியிடுவதும் உண்டு.

ஐயனார் கோயில்களில் ஐயனார் அமைப்பும் சூழலும் பல கோணங்களில் காட்டப்பட்டுள்ளன. ஒருவகைச் சிறப்புக் குறிப் பாகக் கோவி. இராஜேந்திரன் எழுதுகையில், ''மதுரை - வாடிப்பட்டி தாலுக்கா அய்யன் கோட்டை கிராமத்திலுள்ள அய்யனார் கோயிலில் மட்டும்தான், வேறு எங்குமில்லாத வழக்கமாக அய்யனார்தம் மனைவிகளான பூர்ணாதேவி, புஷ்களாதேவி ஆகியோருடன் அருள் புரியும் விதத்தில் அமைந்துள்ளது. இதில் மற்றொரு சிறப்பு, கோவிலைச் சுற்றிலும் உள்பகுதியிலும் சோனை, சின்ன கருப்பு, பெரிய கருப்பு, லாட சன்னாசி, பேச்சி, சந்தனக் கருப்பு, சிவன், வீரியப் பெருமாள், மதயானைக் கருப்பு, ராக்காயி, பத்ரகாளி உட்பட இருபத்தொரு தெய்வங்கள் உள்ளன.

பொதுவாக எல்லா ஊர்களிலும் உள்ள கோவில்களில் அய்யனார் சாட்டைக் கம்புடன் அமர்ந்திருந்து அருள்புரிவார். இங்கு அய்யனார் குதிரைச் சிலையிலிருந்து அருள் புரிகிறார்''[1] என விளக்குவது சிந்திக்கத்தக்கது.

பண்டைக் காலந் தொட்டுத் தமிழ் நாட்டில் சிறு தெய்வங் களுள் மிகவும் சிறப்புடையதும் காவல் தெய்வமாகப் பயபக்தி யுடன் மக்கள் வழிபடக் கூடியதுமாகிய எல்லைத் தெய்வம் அய்ய னார் ஆகும். மரத்துஅடியிலுள்ள பீடத்தில் சிலையாக அய்யனார் விளங்குவார். பெரும்பாலும் மண்சிலையாகச் சுதைச் சிற்பமாக - விளங்கும் இத்தெய்வம் அழகிய வண்ணம் தீட்டப்பட்டுக் காணப் படும். குதிரை, நாய், வீரர்கள் போன்ற சிலைகள் ஐயனார் பக்கத்தில் அமைந்திருக்கும். பலகைக் கல்லில் ஐயனார் திருவுருவம் புடைப்புச் சிற்பமாக இருப்பதும் உண்டு; ஆனால், அது மிகக் குறைவு.

சிற்றூர்ப் புறங்களில் ஐயனாருக்குத் துணையாகக் கருப்பசாமி எனும் கருப்பண்ண சாமியும் அமைந்திருக்கக் காணலாம்.

ஐயனார் தம் கைகளில் வாள் கேடயம் ஆகியவற்றை ஏந்திய வாறு, ஒரு கால் தொங்கவிட்டும், மறுகால் மடித்தும் உட்கார்ந்து கொண்டும் புட்கலை என்னும் மனைவியை அருகில் கொண்டு சில ஊர்களில் காணப்படுகின்றார்.

---

1. ஆலயங்களும் அபூர்வ தவகல்களும், பக். 43.

அய்யனார் ஊர்மக்களைக் காப்பாற்றுவதற்காக, அஃதாவது தீய சக்திகளிலிருந்து காப்பாற்றும் நோக்கில் எப்போதும் இரவில், அதுவும் சிறப்பாக நள்ளிரவில் குதிரை மீது சவாரி செய்து வருவதாக மக்கள் நம்புவர். அய்யனாருக்குப் பூசை போடுவதால் மழை பொழியுமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது; எனவே, பூசை போடும் நாளில் மேகமெலாம் கழட்டிக்கிட்டு மழை பொழிவதால் கழட்டி அய்யனார் என்ற பெயரும் அவருக்கு உண்டு; இது மக்களின் ஆழமான நம்பிக்கையைப் பொறுத்தது.

தமிழ் நாட்டில் பல நோக்கங்களில் வீர ஐயனார், காட்டு ஐயனார், கருப்பன் ஐயனார், சங்கிலி ஐயனார், பாதாள ஐயனார், கலிராயன் ஐயனார் முதலிய பல பெயர்களில் ஐயனார் மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கி அருள்பாலிக்கிறார். சிற்ப அமைப்பில் வடிவங்களில் சிற்சில மாற்றங்களைக் கொண்டு ஐயனார் சிலைகள் தோற்றமளிக்கின்றன.

4. மகாமுனீசுவரர் - வியத்தகு சிற்பப் படைப்பு

நாட்டுப்புறத் தெய்வங்களுள் பெண் தெய்வங்களே மிகுதி; எனினும், ஆண் தெய்வங்களாக ஐயனார், மதுரை வீரன், சுடலை மாடன், முனீசுவரர், கருப்பண்ண சாமி, மாடசாமி, சங்கிலி கருப்பன், இடும்பன் முதலிய ஆண் தெய்வங்களும் மக்களிடையே கண்கண்ட தெய்வங்களாக விளங்கி வருதலைப் பலரும் அறிவர். மகாமுனீசு வரர் பற்றிச் சிறிது காண்போம்.

பல சிற்றூர்களில் முனீசுவரர் அச்சுறுத்தும் தெய்வமாக விளங் கினாலும், அவர்களுள், நாமக்கல் மாவட்டம் *(பரமத்தி வேலூர் வட்டத்திலுள்ள)* சேடர் பாளையத்திற்கு அருகில் மகா முனீசுவரர் ஆலயத்திலுள்ள முனீசுவரர் பெருஞ் சிறப்பினைக் கொண்டவர்; வரப்பிரசாதி.

1964-ஆம் ஆண்டில் வந்த பெருவெள்ளம் காரணமாக ஆலய மும் முனீசுவரர் சிலையும் சேதமடைந்த நிலையில், முனீசுவரர் பக்தர் மாணிக்க முதலியாருடைய கனவில் தோன்றிக் கோயிலைப் புதுப் பிக்குமாறு கூறியதால், அடியவர்கள் பலரும் சேர்ந்து கோயிலும் கட்டி, மகாமுனீசுவரர் சிலையையும் நிறுவியுள்ளனர்.

இவ்வாலயச் சிறப்பைப் பற்றி ஆ. சுகந்தரன் கூறுகையில், ''சிறிய அளவில் கட்டலாமென்று ஆரம்பித்த முனீசுவரர் சிலை 64 அடி உயரத்தில் வந்து முடிந்தது. கோபமாகவும் இல்லாமல்

சிரித்தவாறும் இல்லாமல் சரியான நடுத்தரமான நிலையில் முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டியபடி அருள்பாலிக்கிறார். முனீசுவரர் கத்தியின் உயரம் 27 அடி; மீசை மட்டும் 10 அடி நீளம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! 27 அடி உயரக் கத்தியின் எடை ஒரு டன் ஆகும். இந்தச் சிலையின் மொத்த எடை சுமாராக 150 டன் இருக்குமெனக் கூறுகின்றனர். கை விரல்கள், கண், காது, கால், மீசை என ஒவ்வொன்றையும் மிக நுணுக்கமாக அமைத்துள்ளனர். ஒவ்வொரு பகுதி வேலையின் போதும் பைனாகுலர் வைத்துப் பார்த்துத் திருத்துவது கட்டுவது என்று மிகவும் பாடுபட்டோம்; அதனால் தான் இந்தியாவிலேயே இதுபோல முனீசுவரருக்கு இவ்வளவு உயரச் சிலை இல்லையென்று சொல்வதோடு இல்லாமல் மிகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கிறது.

இந்த 64 அடி உயரச் சிலை செய்ய 12 ஆண்டுகள் பிடித்தன. 1999-இல் கண்திறப்பு செய்யப்பட்டது. இன்றளவும் மாலை ஆறு அல்லது ஏழு மணிக்கு மேல் முனீசுவரர் ஆலயம் செல்வதென்றால் அனைவரும் நடுங்குகின்றனர்''[1] என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறியிருப்பினும், மூலிகைத் தாவரங்களுடன் இயற்கைச் சூழலில் அமைந்துள்ள முனீசுவரர் வளாகத்தில் பல பிணிகளும் தீர்கின்றன; மக்களின் பல குறைகளைத் தீர்க்கும் கண்கண்ட பெருந்தெய்வமாக விளங்கி வருகிறார் முனீசுவரர்.

4.1 மகா முனீசுவரர் - சிறப்புக் குறிப்பு

சிறு தெய்வ நோக்கில் சுடலை முத்து, சுடலைச் சாமி, சுடலையாண்டி, மாடசாமி, பெரியாண்டவர் என்றெல்லாம் சிற்றூர்ப்புற மக்களால் பயபக்தியுடன் வழிபடப் பெறும் தெய்வங்களெல்லாம் பரமேசுவரனையே மூலதாரமாகக் கொண்டு விளங்குவதை அறிஞர்கள் புலப்படுத்தியுள்ளனர். பேய்க் கணங்களும் பூத கணங்களும் அரண்மனை வாசிகள் அல்ல என்பது தெரியவரும். அதற்கேற்பவே தெய்வங்களும் உக்கிர வடிவெடுக்கலாயின.

தமிழகத்திற்கு வடக்கேயிருந்த காளாமுகர்கள் காபாலிகர்கள் ஆகியோருக்குப் பயங்கரத் தோற்றம் உண்டு; பலி நாடி உலவுபவர்கள். அவர்களுக்கேற்ற நிலையில் ஈசுவரனே இறங்கி வந்து சிறு தெய்வம் போலவே நாடகமாடியுள்ளான்.

---

1. ஓம் சரவணபவ *(வார இதழ்)*, நவம்பர் 2-6, பக். 27.

அமைதி தவழும் சாந்த வடிவமெல்லாம் சிற்றூர்ப் புறங்களில் எடுபடாது; எனவே, சமுதாயத்திலேயே சிலர், இறைவனை உக்கிர மான தோற்றத்திலே வடிவமைப்புச் செய்து சுடலைச் சாமி மகா முனீசுவரன் என்றெல்லாம் அழைக்கலாயினர்; இதனால், தவறு செய்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற உணர்வு மக்களிடையே தோன்றியது.

ஆலமர் கடவுளாகிய தட்சணாமூர்த்திக்கு உரிய செபமாலை, புத்தகம், வீணை, அழகிய சடா மகுடமெல்லாம் ஒதுங்கி நிற்க, அவரது இடத்தை மகாமுனீசுவரர் பிடித்துக் கொண்டார். இவ் வுண்மையைத் தியான சுலோகத்தாலும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

தியான சுலோகத்தின் பொருள் வருமாறு: மதர்த்த வடிவம், மூன்று கண்கள், கோடி இளஞ்சூரியர்களைப் போன்ற பேரொளி, கையில் புத்தகம், ஜபமாலை, உக்கிரமான தேகக் கதிர்கள், வீணை, தண்டம் ஏந்தியவர்; மகுடமாகத் தலைமுடி, பட்டாடை, அருள் தன்மை, அச்சத்தைப் போக்கும் வீரம், தஞ்சம் அளிக்கும் தயை - இப்படிப்பட்ட மகாமுனீசுவரரை வணங்குகிறேன்.

இதனைக் காண்கையில், முனீசுவரர் பரமேசுவரரின் வேறு அல்லர் என்பது தெளிவாகும்.

5. எல்லையம்மனும் எல்லை பிரித்த அம்மனும்

உலகத்தில் அவரவர்களும் தத்தம் எல்லைக்குட்பட்டு இயங் கினால் துன்பமோ துயரமோ இன்றி வாழலாம் என்பது உலக நியதி. ஊரமைப்பும், நகர அமைப்பும் ஏற்பட்ட நிலையில் ஒவ்வொன் றுக்கும் எல்லை வரையறுக்கப்பட்டது. அந்நிலையில் அந்த எல்லை களையும் கண்காணிக்கும் உத்தியாக எல்லையம்மன் கோயிலைக் கட்டி, எல்லையம்மனையே காவல் தெய்வமாக ஆக்கியுள்ளனர் ஊர் மக்கள். கிராம தேவதையாக இருப்பினும் எல்லையம்மனுக்கு முறையாகப் பூசை வழிபாடுகளைப் புரிந்து மிகுந்த சக்தியுள்ள தெய்வமாக ஆக்கியுள்ளனர்; இந்நோக்கில் சிறப்புறு திருவிழாக் களும் கொண்டாடப்பட்டமையைப் பல ஊர்களில் இன்றும் காணலாம்.

இஃது ஒரு புறமிருக்க, மாமன்னர்களுக்கும் எல்லைகளைப் பிரித்துத் தந்து பூசலும் பொறாமையுமின்றி வாழச் செய்தவளும் எல்லையம்மனே என்று நம்புமாறு ஆலயச் சான்று உள்ளது.

கரூர் மாவட்டம் மாயனூர் *(திருக்காம்புலியூர்)* காவிரிக் கரையில் அமர்ந்து மக்களுக்கு அருள் வழங்கிக் கொண்டிருப்பது மதுக்கரை அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயில். இதன் மகிமையை விளக்கும் வண்ணம், ''இக்கோயில் அமைவதற்குக் காரணம், 2500 ஆண்டுகளுக்கு முன்னர், சேரர், சோழர், பாண்டிய மன்னர்களுக்கிடையே நாட்டைப் பிரித்திடச் சண்டை ஏற்பட்டது. அனைவரும் காவிரி ஆற்றின் கரையில் உள்ள கைலயங்கிரி மலையில் விரதம் இருந்த அம்மனிடம் விவரம் கூறினர்.

அம்மனும் காவிரியின் எதிர்க் கரையில் வந்து அமர்ந்து, மன்னர் மூவர்க்கும் முறைப்படி எல்லையைப் பிரித்துக் கொடுத்து அருளாசி வழங்கினார்.

எல்லை பிரிந்த நேரத்தில் சோழ மன்னன், ''எனது பகுதி மிகவும் வறட்சி மிகுந்து காணப்படுகிறது'' என அம்மனிடம் முறை யிட்டான். ''காவிரி உன்னை நோக்கி வரும்; உன் பகுதியை நான் எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பேன்'' என்று கூறினாள் அம்பிகை. அதன்படி அம்மன் தலைப் பகுதி இன்றும் சோழ நாட்டைப் பார்ப்பதுபோலச் சாய்ந்து இருக்கிறது''[1] வேலூர் விஜய லட்சுமி எழுதும் குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

6. அன்புப் புலப்பாட்டுச் சிற்பங்கள்

ஆலய வளாகத்திலும் மரத்தாலான தேர்களிலும் உயிர்களின் அன்புப் புலப்பாட்டைப் பல நோக்கங்களில் சிற்பங்களாக வடித் துள்ளதைக் காணலாம்.

உலகத்தில் தாயன்பிற்கு ஈடு இணையில்லை. வேலூர் ஜல கண்டேசுவரர் ஆலயத்தில், குழந்தையுடன் கொஞ்சும் தாயைச் சிற்ப வடிவில் நேர்த்தியாகக் காட்டியிருப்பதைக் காணலாம். இந்த உலகியலைப் புராண நிகழ்ச்சியிலும் கற்பனை புரிந்து சிற்பியர் சிற்பங்களை அமைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, அருச்சுனன் பாசுபதம் பெற்ற வரலாற்று தொடர்பாக டாக்டர் இரா. கலைக் கோவன், எழுதுகையில், ''அப்பாவும் அம்மாவும் அருச்சுனனைக் காப்பாற்ற வேட்டுவக் கோலத்தில் சென்றபோது முருகனும் குழந்தையாக உமை இடுப்பில் அமர்ந்து சென்ற குறிப்பு வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

1. *இதய தீபம், ஆகஸ்டு 2000, பக். 49*

மகாபாரதத்தில் எந்த இடத்திலும் வேட்டுவக் கோலத்தில் சென்ற பெற்றோருடன் முருகன் இருந்த தகவல் இல்லை. 'கிராதார்ச் சுனீயம்' என்னும் அழியாக் காவியம் படைத்த 'பாரவி'யும் இந்தத் தகவலைத் தரவில்லை.

பதினான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகக் கருதப்படும் வில்லி பாரதம் இந்தத் தகவலைத் தருகிறது. *(தஞ்சை பெரிய கோயிலில்)* ராஜராஜன் திருவாயில் சிற்பங்களைப் பார்த்துப் பாடியது போல் வில்லியின் பாசுபத வரலாறு அமைந்துள்ளது'' எனக் குறிப்பிடும் அரிய செய்தி மிகவும் போற்றத் தக்கது.

விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் தாய்ப் பாசத்தைப் புலப்படுத்தும் சிற்பங்களை மதுரையிலும் திருவாரூரிலும் பிற சில தலங்களிலும் காணலாம். தன் மாய்ந்த கன்றுக்காகப் பசு, ஆராய்ச்சி மணி அடித்தலைத் திருவாரூர்க் கோயிலில் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

சூலுற்ற தாயொருத்தி நலிவுறாமல் மகளிர் அருகிருந்து துணை நிற்பதைத் தில்லை நடராசர் கோயில் தேரின் சிற்பத்தில் காணலாம்; ஒரு பெண் யானை நிறை சூலில் கருவுயிர்க்க நிற்கையில் ஆண் யானை அதன் வயிற்றைத் தாங்கி உதவுவதைத் தில்லை நடராசர் கோயிலில் நிருத்த சபைப் படிக்கட்டுக் கைச்சுவர்ப் பகுதியில் கண்டு வியப்பெய்தலாம். இவ்வாறே ஆராய்ச்சி நோக்கில் திருத்தலங்களி லுள்ள சிற்பங்களைக் கண்டு சிந்திக்க முற்பட்டால் எவ்வளவோ சிற்ப நுட்பச் செய்திகள் கிட்டும்.

7. கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தர் சிலை

உலகில் பிறந்து வளர்ந்து பொதுநலத்துக்காகவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பெரும்புகழ் ஈட்டிய கலைப் புரவலர்கள், ஞானியர், அரசியல் தலைவர்கள், இலக்கிய விற்பன்னர்கள், தியாகிகள் முதலிய பலரின் சிலைகள், அவரவரின் தகுதிக்கேற்ப ஆலயங்களிலும் திருமடங்களிலும், நினைவிடங்களிலும், கல்வி தொழில் நிறுவனங்களிலும், வீதியின் நடுவிலும் ஓரங்களிலுமாக வைக்கப் பட்டுள்ளன. தமிழ் நாட்டில் இவ்வாறமைந்த சிலைகளைவிட வட நாட்டி லும் எண்ணிக்கையில் இந்த அளவிற்குக் காண இயலாது; உலகில் எந்தப் பிராந்தியத்திலும் இந்த அளவிற்கு இருக்குமோ என்பது ஐயப்பாடே.

இதனை மனத்துள் கொண்டு, கன்னியாகுமரித் திருக் கோயிலுக்குத் தென் கிழக்கில் 1600 அடி தூரத்தில், கடல் சூழ்ந்த நான்கு ஏக்கர் பரப்பளவுள்ள கற்பாறையில், 73155 கன அடியும், 6000 டன் எடை கொண்ட கருங்கல் கொண்டு, *2081* நாள்கள் *900* ஆட்கள் நாள்தோறும் வேலை செய்து, ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாய் செலவிட்டு, இந்திய நாடு ஒருங்கிணைந்து உருவாக்கியுள்ள விவேகானந்தர் பாறை நினைவாலயத்தின் பிரம்மாண்டத் தன்மை யாரையும் வியப்பில் ஆழ்த்தும். இந்தச் செயற்கரிய செயலுக்குச் சீரிய சிந்தனையும் திட்டமும் வகுத்தவர் மதிப்பிற்குரிய ஏக்நாத் ரானடே என்பவர்; அவருக்குத் துணையாகப் பணியாற்றியவர்கள் கே. மகாதேவன், பி. தங்கசாமி ஆகிய பெரு மக்களாவர்; இராமநாதபுரம் சேதுபதியும் பேராதரவு அளித்தவர்.

ஸ்ரீபாத மண்டபத்தின் எதிரே பிரம்மாண்டமாக அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் - சபா மண்டபத்தில் - உள்ள நான்கு அடி எட்டு அங்குலப் பீடத்தில், ஆன்மிகப் பெருவலிமை உந்துதலால் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் சுவாமி விவேகானந்தர் சிலை தமிழ் நாட்டு வரலாற்றில் பொறிக்கத் தக்க அருமையான கலைப் படைப்பாகும்.

8. இசைக் கருவிகள் தொடர்பான சிற்பங்கள்

தமிழகத்தில் பல்வேறு மன்னர்கள் ஆண்ட காலத்தில் வழக்கிலிருந்த இசைக் கருவிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் சிற்பியர், ஆலய வளாகங்களில் சிற்பங்களை அமைத் துள்ளனர். இசைக் கருவிகளின் வகைகளாகத் தோற்கருவிகளாகப் பறை, முழவு, முரசு, உடுக்கை முதலிய கருவிகளையும், துளைக் கருவிகளாகப் புல்லாங்குழல் முதலியவற்றையும், நரப்புக் கருவி களாகப் பல வகை யாழ்களையும், கஞ்சக் கருவிகளாகத் கைத்தாளம் முதலியவற்றையும் தெய்வ உருவங்களிலும் இசைவாணர் உருவங் களிலும் கற்சிற்பமாகவும் சுதைச் சிற்பமாகவும் செப்புத் திருமேனி யாகவும் காட்டியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை மட்டும் காண்போம்.

ஆலயத் திருச்சுற்று மாளிகைகளின் அதிட்டானங்களில் புராண நிகழ்ச்சிச் சிற்பங்களேயல்லாமல், நடனச் சிற்பங்களும் பல அமைந்துள்ளன; நடனமாடுவோர் ஆடுகையில், ஆட்டங்களுக் கேற்ப இசைக் கருவிகளை இசைப்போர் கையில் பல்வகை இசைக் கருவிகள் அமைந்திருப்பதையும், கருவிகளை இசைக்கும்போதும்

ஆடிக் கொண்டே தம் திறமையைக் காட்டுவதையும் கண்டு களிக்கலாம். எடுத்துக்காட்டாக, தில்லைச் சிவகாமியம்மன் கோயிலில் இத்தகைய சிற்பக் காட்சிகள் பலவாக உள்ளன.

சிற்பக் கலைப் படைப்பில் ஆடல்வல்லான் கையில் உடுக்கையும், நந்தியம்பெருமான் கையில் முழவும் *(மத்தளமும்)* ஆடல் வல்லானுக்கு அருகே குடமுழா எனும் பஞ்சமுக வாத்தியமும், திருமால் கையில் சங்கும், வேணுகோபாலன் கையில் குழலும், சிவ பெருமான் கையில் வீணையும், கலைமகள் கையில் வீணையும், சக்தியின் திருவுருவங்கள் சிலவற்றில் *(சர்வ வித்தியாம்பிகை போன்ற உருவங்களில்)* வீணையும், திருஞான சம்பந்தர் கையில் தாளமும் சிற்ப நூல் விதிப்படி அமைந்திருப்பதைக் காணலாம்.

9. சிற்பக் கலைப் படைப்பில் கற்பனைப் புலப்பாடு

நாகை மாவட்டம் செம்பொனார் கோயிலுக்கு அருகிலுள்ள புஞ்சை *(புன் + செய்)* எனும் சிற்றூரில் நற்றுணை ஈசுவரர் கோயில் உள்ளது. அங்குக் கருவறை வெளிப்புறத்தில் மேற்குச் சுவரிலுள்ள ஒரு சிலையின் காதில் நூலை விட்டால் மூக்கின் வழியாக வெளிவரும் நுட்பம் அமைந்துள்ளது; சிற்பியின் திறமை இது.

காளை மாட்டையும் யானையையும் தலைப் பகுதிகளைப் பிணைத்துச் சிற்பப் படைப்புகள் *(புடைப்புச் சிற்பங்கள்)* சிதம்பரம் முதலிய திருத்தலங்களில் காணலாம். காளையின் தலையில் ஒரு பகுதியை மறைத்து விட்டுப் பார்த்தால் யானை உருவம் தெரியும்; யானைத் தலையில் ஒரு பகுதியை மறைத்து விட்டுப் பார்த்தால் காளை உருவம் தெரியும்.

உடற்பயிற்சிச் சிற்பங்களைச் சில தலங்களில் காணலாம். எடுத்துக் காட்டாகக் குடந்தை சாரங்பாணி கோயில் அச்சுத பூபால *(நவராத்திரி)* மண்டபத்தில், ஒரு பெண் இரு கைகளை ஊன்றியவாறு, பக்கத்தே இரு புறங்களிலும், மேலே தூக்கியும் பயிற்சி புரிகிறாள்; சிற்பத்தில் *(விதானத்தே)* காண்பது சிற்பியின் கற்பனைத் திறத்தை நினைவூட்டும்.

இவ்வாறே பல கோணங்களில் நோக்கினால், தமிழன்னையின் முடிமணியாகச் 'சிற்பக்கலை மாட்சி' அயுமைந்திருப்பதைப் போற்றி நிற்கலாம்.

பார்வை நூற் பட்டியல்

I. செய்யுள் நூல்கள்: சங்க இலக்கியங்கள், பன்னிரு திருமுறை நூல்கள், நாலாயிர திவ்யப் பிரபந்தம், பிற பக்தி இலக்கியங்கள்.

II. உரைநடை நூல்கள்

1. அண்ணா, சௌந்தரிய லகரி - பாஷ்யம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை *(1984)*.

2. அறிவொளி, அ. காஞ்சி காமாட்சி மணிவாசகர் பதிப்பம், சிதம்பரம் *(1984)*.

3. இராசமாணிக்கனார், டாக்டர் மா., தமிழகக் கலைகள், பாரி நிலையம், சென்னை *(1985)*.

4. இராசமாணிக்கம் தி., எண்பெரும் வீரட்டத் தலங்கள், சை.சி.நூ. கழகம், சென்னை *(1985)*.

5. இராமன், கே.வி., பாண்டியர் வரலாறு (சென்னை *(1977)*.

6. ஏகாரம்பரநாதன், டாக்டர் ஏ., தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள், சை.சி.நூ.கழகம் சென்னை *(1983)*.

7. கந்தசாமி வி, தமிழ்நாட்டின் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை *(1983)*.

8. குடவாயில் பாலசுபபிரமணியன், திருவாரூர்த் திருக்கோயில், தேவஸ்தான வெளியீடு, திருவாரூர் *(1988)*.

9. குருசாமி தேசிகர், வி.சா., & பாசுபதீஸ்வர சிவாச்சாரியார் சிவமூர்த்தங்கள், தருமபுரம்.

10. கோதண்டராமன் பி., இந்தியக் கலைகள், NCBH, *(1987)*.

11. சுப்பு ரெட்டியார், டாக்டர் ந., தொண்டை நாட்டுத் திருப்பதிகள், வெளியீடு: சுப்பிரமணியப் பிள்ளை, எஸ்.ஆர். திருநெல்வேலி சென்னை *(1973)*.

12. சுவாமி சித்பவானந்தர், கடவுளின் வடிவங்கள் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை *(1977)*.

13. செந்துறை முத்து புலவர், சக்தித் தலங்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் *(1995)*.

14. சோமசுந்தரம் பிள்ளை ஜே.எம்., சோழர் கோயிற் பணிகள், பாரி நிலையம், சென்னை *(1962)*.

15. நாகசாமி டாக்டர் இரா., தமிழகக் கோயிற் கலைகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை *(1973)*.

16. வேங்கட சாமி, மயிலை சீனி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் முதலிய பல நூல்களும், தமிழ்ப் பல்கலைக் கழக 'வாழ்வியற் களஞ்சியம்' தொகுதிகளும், வார இதழ்களும், பல ஆலயக் குடமுழுக்கு விழா மலர்களும், பிற விழா மலர்களும்; நன்றி.

மெய்யப்பன் பதிப்பக களஞ்சிய வரிசை

முனைவர் சு. அமிர்தலிங்கம்

சங்க இலக்கியக் களஞ்சியம்

முனைவர் கரு. முத்தையா & சபா. அருணாசலம்

நகரத்தார் கலைக்களஞ்சியம்

பேராசிரியர் வே. அண்ணாமலை

சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்

பதினெண்கீழ்க்கணக்கு தொன்மக் களஞ்சியம்

முனைவர் சோ.ந. கந்தசாமி

இந்தியத் தத்துவக் களஞ்சியம் (3 தொகுதிகள்)

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

தமிழ்விடுகதைக் களஞ்சியம்

வீ.ஜே. செல்வராசு

தமிழ்ச் சொற்றொடர் களஞ்சியம்

கலைக் களஞ்சியங்கள்

முனைவர் ஆறு. இராமநாதன்

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம் (15 தொகுதிகள்)

நாட்டுப்புறக்கதைக் களஞ்சியம் (15 தொகுதிகள்)

டாக்டர் கே.இ. சேதுராமன்

மூலிகைக் களஞ்சியம்



நூலாசிரியர் பெயர்	–	செ. வைத்தியலிங்கன்
பிறந்த ஊர்	–	பரங்கிப்பேட்டை (கடலூர் மாவட்டம்)
பிறந்த நாள்	–	20.9.1926
பெற்றோர்கள்	–	தந்தை – செல்லமுத்து ஆச்சாரியார் தாய் – கோவிந்தம்மாள்
உயர்பள்ளிக் கல்வி	–	போர்டு உயர்நிலைப்பள்ளி, பரங்கிப்பேட்டை
கல்லூரிக் கல்வி	–	அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், இளங்கலைப் பட்டம் (1949) – தமிழில் முதல் வகுப்பு; முதுகலைப் பட்டம் (1952) – தமிழ் – முதன்மைத்தரம் (I Class with I Rank)
பணிபுரிந்த இடம்	–	1. தமிழ் பயிற்றுநர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1952–1957) 2. தமிழ் விரிவுரையாளர், அ.ப. கழகம் (1957–1980) 3. தமிழ்ப் பேருரையாளர் (Reader in Tamil) அ.ப.கழகம், 1980–1987 4. பதிப்பாசிரியர் – பெருஞ்சொல்லகராதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (1.7.1987 – 30.11.1989) 5. ஆராய்ச்சி இணைஞர் (Research Associate), அ.ப.கழகம், 2.12.1989 – 1.12.1999)
எழுதிய நூல்களும் கட்டுரைகளும் (பரிசு பெற்றவை):		1. அ.ப. கழகம் வெளியிட்ட தமிழ்ப்பண்பாட்டு வரலாறு (முதல்பாகம்) (1992) – தமிழ்நாடு அரசின் முதற் பரிசு 2. தமிழ்ப்பண்பாட்டு வரலாறு (இரண்டாம் பாகம்) (1998) – தமிழ்நாடு அரசின் முதற் பரிசு 3. இந்து மிஷன் நடத்திய இலக்கியக் கட்டுரைப் போட்டியில் மூன்றாம் பரிசு (ரூ. 5000/–) 1999. 4. இந்து மிஷன் நடத்திய இலக்கியக் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு (ரூ 10,000/–)
எழுதிய நூல்களும் கட்டுரைகளும் :		1. அழகுக் கலைத்திறன் (1964) 2. Fine arts and crafts in Pattuppattu & Ettu-t-tokai (1977). 3. அருள்வாக்கு (வானொலிச் சொற்பொழிவுகள்), 1981 4. தமிழகக் கவின்கலைமாட்சி, 1980 5. வள்ளலார் வாழ்வியல், 1986 6. தமிழ்ப்பண்பாட்டு வரலாறு – அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு) – நான்கு பாகங்கள் (100க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள்)
சிறப்பு விருது	:	'பண்பாட்டுச் செல்வர்' – பெரம்பலூரில் கம்பன் கழகம், இறைநெறிக்கழகம், சன்மார்க்க சங்கம் ஆகியவை சேர்ந்து அளித்தமை – 1993.